
சுவாசமெனக்
கலந்தாயே
சத்யா இராஜ்குமார்
சுவாசமெனக்
கலந்தாயே
சத்யா இராஜ்குமார்

# சுவாசமெனக் கலந்தாயே

## 1

''ஸ்வேதா.''

''சொல்லுங்க டாடி.''

''என்னடாம்மா பண்ணிட்டிருக்க?''

''டிபன் எடுத்து வைக்கறேன் டாடி.''

''எனக்கு வேண்டாம்மா.''

''ஏன்?''

''நான் ஆச்சு.''

''நிஜமாவா?''

''ஆமாம்மா, சித்தார்த் வீட்டுக்குப் போனா சாப்புடாம எங்க விட்றாங்க. வேண்டாம்னு எவ்வளவு சொன்னாலும் கேக்கறதுமில்ல...''

''சிம்பிளா அன்புத் தொல்லைன்னு சொல்லுங்க'' என்றவள் தனக்கு மட்டும் ப்ளேட்டில் டிபனை எடுத்து

வைத்துக் கொண்டு ஹாலுக்கு வந்து தந்தைக்கு எதிரே இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

''அப்புறம் ஸ்வேதா...''

''சொல்லுங்க டாடி.''

''நான் ஒண்ணு சொல்லலாமா?''

''இதென்ன கேள்வி, சொல்லுங்க.''

''அப்புறம் என்ன தப்பு சொல்லக் கூடாது. முக்கியமா காரணமே இல்லாம மறுக்கக் கூடாது.''

தந்தை எதைப் பற்றிச் சொல்ல வருகிறாரென்பது ஓரளவு புரிவதைப் போலத்தான் இருந்தது.

''என்னமா?''

''அப்ப வேண்டாம் டாடி, சொல்லாதீங்க.''

''இப்பவே இப்படி சொல்ற பாத்தியா?''

''அப்ப சொல்லுங்க.''

''சித்தார்த்துக்கு தூரத்து சொந்தமாம்.''

''சரி...''

''ஒரு பிரமாதமான பையன் இருக்கானாம்... என்னமா ஒண்ணும் பேச மாட்டேங்கற?''

''சொல்லுங்க டாடி.''

''உனக்கு அந்தத் தம்பியப் பாக்கலாம்னு சித்தார்த் சொல்றான். இன்னைக்கு நேத்து இல்லமா அவனும் ஆறு மாசமா சொல்லிட்டுதான் இருக்கான்.''

..........

''என்ன கண்ணம்மா, ஏதாவது பேசு.''

''உங்க இஷ்டம் தான டாடி, எனக்கென்ன தெரியும்?''

''ஓ. அப்ப நான் என்ன சொன்னாலும் உனக்கு ஓ.கே. அப்படித்தான?''



''இல்ல டாடி.''

அப்படிச் சொன்ன மகளைக் கவலையுடன் பார்த்தார் பாலகிருஷ்ணன்.

''என்னமா?''

''எனக்கின்னும் ஒரு வருஷத்துக்கு கல்யாணம் வேண் டாம் டாடி.''

''இதே பாட்டத்தான் நீயும் ரெண்டு வருஷமா சொல் லிட்டிருக்க...''

''பின்ன, நீங்க ஏன் பத்தொன்பது வயசுலிருந்தே கல்யாணப் பேச்ச எடுத்தீங்களாம்...''

''ஆனாலும் இப்ப இருபத்தி ரெண்டு ஆச்சே கண் ணம்மா.''

''இப்பதான இருபத்திரெண்டு தொடக்கம்.''

''போதும் ஸ்வேதா. நான் நல்லா ஓடியாடி வேல செஞ்சுட்டிருக்கும்போதே உன் கல்யாணம் நடந்தா தான எனக்கும் சந்தோஷம், நிம்மதி எல்லாம். உங்கம்மா இருந்திருந்தாக் கூடப் பரவாயில்ல, நமக்கு அதுக்கும் குடுத்து வைக்கல...''

''ஏன் டாடி, உங்களுக்கு உடம்புக்கு ஏதாவது...''

கவலையுடன் கேட்ட மகளைப் புன்னகையுடன் பார்த்தவர் ''பைத்தியம்'' என்று செல்லமாகத் திட்டினார்.

''இனி அப்படி ஏதாவது ஆனாதான் நீயும் கல்யாணத் துக்கு ஓ.கே. சொல்லுவியோ என்னவோன்னு சொல் றேன்...''

''போதும் டாடி.''

''அடடா அதுக்குள்ள என் செல்ல மகளுக்குக் கோபம் வந்துடுச்சா, சரி விடு இனிமேல் நானா எதையும் கேக்க மாட்டேன்.''

அப்படிச் சொன்ன தந்தையின் குரலில் தெரிந்த விரக்தி ஸ்வேதாவை என்னவோ செய்திருக்க ''சரிதான் உங்க இஷ்டப்படி செய்யுங்க, நீங்க என்ன செஞ்சாலும் இனிமேல் நான் அதுக்கு மறுப்பு சொல்ல மாட்டேன்'' என்று விட்டிருந்தாள்.

''வேண்டாம்மா, எனக்காக நீ சிரமப்படாத...''

''இல்ல டாடி, எனக்கு நீங்க நல்லதுதான் செய்வீங்கன்ற நம்பிக்கை நிறையவே இருக்கு. அதனால உங்க மனசுக்கு என்ன படுதோ செய்யுங்க.''

அப்படிச் சொன்ன மகளைப் பார்த்த பாலகிருஷ்ணன், ''ரொம்ப சந்தோஷம்மா'' என்றார்.

## 2

ஸ்வேதா பாலகிருஷ்ணனுக்கு ஒரே மகள்.

பிரமாதமான அழகி, நல்ல குணவதி, பல கோடி சொத்துக்களுக்கு ஒரே வாரிசு... ஏன் இப்படி இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்.

மொத்தத்தில் பாலகிருஷ்ணனின் செல்ல மகள்.

அவளுக்காக எதையும் யோசிக்காமல் செய்து தரக் கூடியவர் பாலகிருஷ்ணன்.

ஆனால் அதெல்லாம் தொழில் என்று வராதவரை மட்டும் தான்.

அப்படி வந்துவிட்டால் அவருக்கு மகளென்ன, உலகமே மறந்து போகும்.

இப்பொழுது கூடப் புது ப்ராஜக்ட் ஒன்றைத் தொடங்க வேண்டியிருந்தது பாலகிருஷ்ணனுக்கு.



என்னதான் வேலைக்காரர்கள், செக்யூரிட்டிகள் என எத்தனையோ பேர் மகள் விரல் சொடக்கினால் வேலை செய்வதற்கு அவளைச் சுற்றிலும் தயாராக இருந்தாலும், அவளுக்குத் திருமணமென்று ஒன்று ஆகி விட்டால் நன்றாக இருக்குமென்று தோன்றியது.

முக்கியமாகத் தொழிலுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு விடலாமென்றும் அதற்காக அவருக்கு மகளின் மேல் அக்கறையில்லையென்று சொல்லி விட முடியாது.

அவர் இந்த அளவிற்கு திட்டமிட்டு உழைப்பது, சம்பாதிப்பது என அனைத்தும் யாருக்காக, அவருடைய செல்ல மகளான ஸ்வேதாவுக்காக மட்டுமே அல்லவா.

அப்படி தொழிலே கதியென்று அவர் இருந்ததால் தான் மகளுக்கென்று அத்தனை சொத்துக்களையும் அவரால் சேர்க்க முடிந்திருந்தது.

என்னதான் அப்படி நிறைய சம்பாதித்திருந்தாலும் பாலகிருஷ்ணனோ அல்லது அவருடைய மகள் ஸ்வேதாவோ பணத்தை எப்பொழுதும் பெரிதாக மதித்தவர்கள் கிடையாது.

முக்கியமாக நல்ல மனிதர்களைப் பெரிதாக மதித்தார்கள்.

அதனாலேயே தனது பால்ய நண்பன் சித்தார்த் தனது மகளுக்கு சொன்ன சம்பந்தம் வசதியில் அவ்வளவு ஒன்றும் பெரிதாக இல்லா விட்டாலும் கூட பாலகிருஷ்ணனுக்கு அந்த இடம் பிடித்துப் போனது.

முக்கியமாக அந்த ஜெயவர்த்தனை.

தந்தை தனக்கெனப் பார்த்த மாப்பிள்ளை, வசதியில் தங்களுக்கு அருகில் கூட நிற்க முடியாது என்பதைப்

பேச்சுவாக்கில் தெரிந்து கொண்ட ஸ்வேதா, அதைப் பற்றித் தனது தந்தையிடமே கேட்டாள்.

வசதியைப் பற்றியெல்லாம் அவளுக்கு ஒன்றும் இல்லையென்றாலும் கூட, தனது தந்தை எப்படி இப்படியொரு சம்பந்தத்திற்கு ஒத்துக் கொண்டாரென்று அவளுக்கு மிகுந்த ஆச்சரியம்.

மகள் கேட்க, ''இதென்னமா இப்படிக் கேள்வியக் கேக்கற? மாப்ள ரொம்பப் பிரமாதமான டைப். நல்ல உழைப்பாளி, முக்கியமா மத்தவங்க பணத்துக்குப் பைசா ஆசப்பட மாட்டார். ரொம்பவும் தன்மானம் பாக்கறவர் வேற...''

தந்தை இப்படி இன்னும் இன்னுமென்று சொல்லிக் கொண்டே போக, எதற்குக் கேட்டோமென்றாகி விட்டிருந்தது ஸ்வேதாவுக்கு.

''என்ன மேடம்க்கு இங்க இருக்கறதெல்லாம் பத்தலையோ?''

''அச்சோ என்ன டாடி நீங்க ஏதோ மனசுக்குத் தோணுச்சு கேட்டேன். சரி விடுங்க இனிமேல் நான் எதையும் கேக்கல...''

ரோஷத்துடன் சொன்ன மகளின் மூக்கைப் பிடித்து செல்லமாக ஆட்டிய பாலகிருஷ்ணன், ''விளையாட்டுக்கு சொன்னாக்கூடக் கோபத்தப் பாரு மாப்ள மாதிரியே'' என்று சிரித்தார்.

............

''என்ன மாப்ள மாதிரியேன்னு கேக்க மாட்டியா?''

''ஒண்ணும் வேண்டாம்.''

''ஏனோ?''

''முக்கியம்னா நீங்களே சொல்லுவீங்க தான, நானெதுக்குக் கேக்கணும்?''



''அது சரி, அவங்க வீட்ல யாரோ பரவாயில்ல உங்க வருங்கால மனைவி நல்ல வசதியான இடம் இனி நீங்க கஷ்டப்பட்டு சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லன்னு சொல்லிட்டாங்களாம்...''

''அதுக்கு அவரு என்ன சொன்னார்னு தெரியுமா?''

தந்தை கேட்க, அதிலொன்றும் சுவாரஸ்யம் இருக்கவில்லை ஸ்வேதாவுக்கு. சாதாரணமாகப் பார்த்தாள்.

''சரிதான் அதையும் நானே சொல்லிட்றேன்'' என்ற பாலகிருஷ்ணன் ''கட்டின சேலையோட தான் என் மனைவி வரணுங்கறதுல நான் உறுதியா இருக்கேன். அவங்க பிறந்த வீட்ல இருக்கறத விடவும் ஒரு மடங்கு அதிகமாவே என் மனைவிக்கு நான் சம்பாதிச்சுக் குடுப்பேன்னு சொன்னாராம். எப்படிமா மாப்ள பாத்தியா?'' என்றார்.

பெருமை பொங்கக் கேட்ட தந்தையை ஏளனத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டபடி பார்த்தாள் ஸ்வேதா.

''என்னமா, ஏன்...''

''அப்ப நிறைய சட்ட திட்டம் எல்லாம் போடப் போறார்னு சொல்லுங்க.''

''அப்படின்னு சொல்றத விடவும், தப்பாப் பேசினவங்களுக்கு நல்ல நோஸ் கட் குடுத்திருக்கார்னு சொல்லலாமே.''

''ஏன், அவங்க வீட்ல ஒருத்தர் தான அவர அப்படிக் கேட்டிருக்காங்க. ஒரு வேள உங்க அருமை மாப்பிள்ளையோட குணம் தெரிஞ்சுதான் அவங்க அப்படிக் கேட்டாங்களோ என்னவோ.''

''உனக்கு மாப்பிள்ளையப் பிடிக்கலையாம்மா?''

தந்தை திடீரென்று இப்படிக் கேட்பாரென்று ஸ்வேதா சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"என்ன டாடி நீங்க, அவரப் பாராட்டற மாதிரியே நீங்க பேசவும் அந்த மாதிரியில்லாம இப்படியும் கூட இருக்கலாமேன்னு அதுவும் விளையாட்டுக்கு தான் சொன்னேன்..."

"சரிதான் கண்ணம்மா" என்றவர் "ஒருவேள அவசரப் பட்டுட்டமோன்னு நாந்தான் கொஞ்சம் பயந்துட்டேன் வேறொன்னுமில்ல" என்றார்.

ஒரு விதத்தில் அப்படித்தான் என்று மனதிற்குள் தோன்றியதைத் தந்தையிடம் சொல்ல முடியாமல் தவித்தாள் ஸ்வேதா.

"மாப்ளய உனக்குப் பிடிச்சிருக்கு தானம்மா?"

இன்னுமொரு வாரத்தில் திருமண நிச்சயமே நடக்கவிருக்க, பாலகிருஷ்ணனுக்கே அந்தக் கேள்வி சற்று அபத்தமாகத் தான் தோன்றியது.

பிடிக்கவில்லையென்று சொல்லிவிடத் தான் ஸ்வேதாவின் மனம் துடித்தது.

ஆனால் தந்தை மனமுடைந்து போய் விடுவாரே என்ற எண்ணம் அதைச் சொல்ல விடாமல் தடுத்தது.

ஒரேயடியாகப் பிடிக்கவில்லையென்று சொல்லி விடுவதற்கும் இல்லையென்றாலும், ஏனோ பிடித்திருக்கிறதென்றும் சொல்ல முடிந்திருக்கவில்லை.

தான் ஏன் இப்படியிருக்கிறோமென்று அவளுக்கே கூட விசித்திரமாகத்தான் இருந்தது.

## 3

ஏற்கனவே முடிவு செய்தது போல நிச்சயதார்த்தமும் இனிதே நடந்து முடிந்தது.



திருமணத்திற்கு இன்னும் இரண்டு மாதங்களே இருக்க, தொழிலைக் கூட மறந்து தந்தை திருமண வேலைகளில் மும்முரமாகி விட்டிருந்ததை செய்வதறியாது பார்த்துக் கொண்டிருக்கத் தான் ஸ்வேதாவால் முடிந்தது.

தனது வருங்காலக் கணவனைப் பற்றி இப்பொழுதெல்லாம் அடிக்கடி நினைக்கத் தோன்றியது.

அந்த அளவிற்கு வருகிறவர்கள் போகிறவர்கள் என அனைவரும் திருமணத்தை நினைவு படுத்திக் கொண்டே இருந்தார்கள்.

"அம்மா."

வேலைக்காரம்மா அமிர்தம் அழைக்க, "என்ன அமிர்தாம்மா?" என்று கேட்டாள் ஸ்வேதா.

"நீங்க இன்னும் சாப்புட்லயே."

"பசியில்ல, அப்புறமா சாப்பிட்டுக்கறேன்."

"ஏம்மா டல்லா இருக்கீங்க?"

"அப்படியா?"

"உங்களுக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் தானம்மா?"

அமிர்தம் கேட்க, 'இல்லை அப்பாவுக்காகத்தான் வேறு வழியில்லாமல் சம்மதித்தேன்' என்று நினைத்ததை ஸ்வேதாவால் அப்படியே சொல்ல முடியவில்லை.

"மாப்ள ராஜாவாட்டம் உயரமா, கம்பீரமா மொத்தத்துல பிரமாதமா இருக்கார்மா. நீங்க ரொம்பக் குடுத்து வெச்சிருக்கீங்கமா."

"சரி, அப்புறம்?"

"ஆனா என்ன அவரப் பாக்கத் தான் கொஞ்சம் பயமா இருந்தது. அந்த அளவுக்கு முகத்தக் கடுமையா வைச்சுட

டிருந்தார். ஒருவேள ரொம்பக் கோபக்காரரா இருப்பா ரோம்மா.''

''இருக்கலாம்.''

''உங்களுக்கு எதுவும் தோணலயா?''

''எனக்கும் அப்படித்தான் தோணுச்சு அதோட...''

''என்னமா சொல்லுங்க?''

''அவரோட அம்மா...''

''அத்தைன்னு சொல்லுங்கமா.''

''ம், அவங்களே கூட அவங்க மகன்கிட்ட கொஞ்சம் பயத்தோட பேசின மாதிரிதான் தெரிஞ்சது.''

''எல்லாருமே ரொம்ப நல்ல விதமாத்தான் தெரிஞ் சாங்க இல்லையாம்மா?''

ஒரு புன்னகையுடன் ''சரிதான்'' என்ற ஸ்வேதாவுக்கு ஏனோ அவளுடைய வருங்காலக் கணவனின் சொந்தங் களை சுத்தமாகப் பிடித்திருக்கவில்லை.

அவள் அப்படி நினைப்பதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

தனது அத்தையைத் தவிர திருமண நிச்சயத்திற்கு வந்திருந்த பெண்கள் அனைவரும் தன்னை ஏதோ அவர் களுடைய எதிரியைப் போல குரோதத்துடன் பார்த்ததும், அவர்களுக்குள் இரகசியமாக ஏதேதோ பேசிக் கொண் டதும் தான் அவளை அப்படி எண்ண வைத்திருந்தன.

அப்படியென்ன பிரமாதமான மாப்பிள்ளையென்று தந்தை இந்தச் சம்பந்தத்தைப் பிடித்தாரோ என்றிருந்தது.

அதற்காக ஸ்வேதாவும் ஒன்றும் அவளைத் தலையில் தூக்கி வைத்து அனைவரும் கொண்டாட வேண்டுமென் றெல்லாம் சொல்லவில்லை, ஆனால் யாரும் தன்னை



உதாசீனப் படுத்துவதை மட்டும் அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

இதை எப்படி மற்றவர்களுக்கு முக்கியமாகத் தந்தைக்கு சொல்லிப் புரிய வைப்பதென்று அவளுக்குப் புரியவும் இல்லை.

தொடர்ந்து அதே பாணியில் யோசித்துக் கொண்டிருந் தவள் பிறகு நாம்தான் ஒன்றுமில்லாததைப் பெரிதாக்கிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம் போலிருக்கிற தென்று மனதை வேறு பக்கம் திருப்பினாள்.

மற்றது எப்படியோ, ஆனால் அவளுடைய வருங்காலக் கணவன் ஜெயவர்த்தனைப் பற்றி நினைக்க நேர்ந்தாலே உடலும் உள்ளமும் ஒரு சேரப் பரபரத்துப் போவதை என்ன முயன்றும் அவளால் தடுக்க முடிந்திருக்கவில்லை.

அது மட்டுமா,

ஏனோ அவனை மீண்டும் பார்க்க வேண்டும்,

மனம் விட்டுப் பேச வேண்டும் என்றெல்லாம் தீவிர மாகத் தோன்றிக் கொண்டே இருந்ததில் என்ன இதென்று மனதிற்குள் சற்றுப் பயந்து கூடப் போனாள்.

ஸ்வேதாவைப் பொறுத்தவரை அவள் மிகவும் நல்ல பெண்,

எப்பொழுதும், யாருடைய மனதையும் புண்படுத்திப் பழக்கப்படாதவள்,

ஏன், மற்றவர்களுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து அனைவரிடமும் மென்மையாக நடந்து கொள் பவள்,

''என்ன ஸ்வேதாம்மா?''

அமிர்தத்தின் கேள்வியில் தான் அவள் இன்னும் அங்கே தான் இருக்கிறாள் என்பதையே உணர்ந்தாள் ஸ்வேதா.

"நான் நல்ல பொண்ணா, மோசமான பொண்ணா?"

ஸ்வேதா கேட்க, "என்னமா இப்படிக் கேட்டுட்டிங்க உங்கள மாதிரி ஒரு நல்ல பிரமாதமான பொண்ணு இந்த உலகத்துலயே இருக்க மாட்டாங்கன்னு நான் அடிச்சு சொல்லுவேன்" என்றாள் அமிர்தம்.

"அச்சச்சோ, நான் ஏதாவது தப்பாக் கேட்டிருந்தா என்ன மன்னிச்சுடுங்க அமிர்தாம்மா" என்று புன்னகையுடன் சொன்ன தனது முதலாளியம்மாவைப் பெருமை பொங்கப் பார்த்தாள் அமிர்தம்.

எவ்வளவு பிரமாதமான பெண் இவள்.

மற்றவர்களுக்கு ஒரு சிரமமென்றால் அதைத் தன்னுடையதாகவே எடுத்துக் கொண்டு, தங்களுக்குக் கீழே வேலை செய்பவர்கள் தானே என்று பார்க்காமல் அவர்களுடைய உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுத்து,

முக்கியமாக யாருடைய மனதையும் புண்படுத்தாமல் நடந்து கொள்வது,

ஏன் இப்படி இன்னும் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாமே,

"என்னமா திடீர்னு உங்களுக்கு இப்படியொரு சந்தேகம்?"

அமிர்தம் கேட்க, சமாளித்து வைத்தாள்.

"இல்ல அவ்வளவு பெரிய குடும்பத்துக்குள்ள போய் எல்லாரையும் அட்ஜஸ்ட் பண்ணி, நல்ல விதமா நடந்துக்க முடியுமான்னு கொஞ்சம் தயக்கமாயிடுச்சு அதான்."

"உங்க கூடவே நல்லவிதமா, விட்டுக் குடுத்து யாரால போக முடியலையோ நிச்சயம் அவங்க மோசமானவங்களாதான் இருப்பாங்க ஸ்வேதாம்மா."



என்னதான் தன் மீதிருக்கும் அபரிதமான நம்பிக்கையால் அமிர்தம் அப்படிச் சொல்லியிருந்தாலும் கூட, ஸ்வேதாவுக்கே அது சற்று அதிகப்படியாகத்தான் தோன்றியது.

இந்த அளவு அனைவரும் தன்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்காகவாவது மற்றவர்களின் மீதே தவறு இருந்தாலும் கூட தான் முடிந்த அளவு விட்டுக் கொடுத்து நல்ல விதமாக நடந்து கொள்ளத்தான் வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள் ஸ்வேதா.

என்னதான் தான் நல்ல விதமாகவே நடந்து கொண்டாலும் அது பிடிக்காமல் குறை சொல்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள், அதனால் வரும் பிரச்சனைகளையும் தான் சந்தித்துத் தான் ஆக வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் பாவம் மருந்திற்கும் மற்றவர்களைப் புண்படுத்திப் பழக்கப்பட்டிராத ஸ்வேதா அப்பொழுது அறிந்திருக்கவில்லை.

## 4

காஞ்சனா ராஜேந்திரன் தம்பதிக்கு மொத்தம் நான்கு பிள்ளைகள்.

அதில் முதல் இரண்டு பிள்ளைகளான சுதர்சனுக்கும், மதியழகனுக்கும் ஏற்கனவே திருமணம் முடிந்திருக்க அவர்களுக்கு அடுத்ததாக இருக்கும் ஜெயவர்த்தனுக்குத் தான் ஸ்வேதாவை முடிவு செய்திருந்தார்கள்.

முதல் மூவரும் ஆண்களாகி விட்டிருக்க, அவர்கள் அனைவருக்கும் இளையவளான பெண் லாவண்யா

இப்பொழுது தான் கல்லூரி இறுதியாண்டில் அடி யெடுத்து வைத்திருந்தாள்.

வீட்டிலிருக்கும் மற்ற அனைவரையும் விடத் தனது அண்ணனுக்குத் திருமணம் என்பதில் லாவண்யாவிற்குத் தான் அளவு கடந்த சந்தோஷம்.

அதிலும் தனக்கு அண்ணியாக வரப் போகும் ஸ்வேதாவின் அழகில் மயங்கியே போய் விட்டிருந்தாள் லாவண்யா.

அது மட்டுமா,

எவ்வளவு வசதி,

ஆனாலும் பந்தாவோ, பகட்டோ துளி கூட இல்லையே.

நிலைமை இப்படியிருக்க, அவர்கள் தன்னைப் போய் அழகாக இருக்கிறாயென்று சொன்னதைத்தான் லாவண் யாவால் நம்பக் கூட முடியவில்லை.

இப்பொழுது நினைத்தாலும் வெட்கமாக இருந்தது.

அந்த சிட்டியிலேயே இருக்கும் மிகப்பெரிய மண்டபத் தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடக்கவிருக்க, முதலில் திருமணத்திற்கு ஒருவர் விடாமல் அனைவரை யும் அழைக்க வேண்டுமென்று மனதிற்குள் பெரிய திட்டமே போட்டு வைத்திருந்தாள்.

திருமணத்திற்கு வரும் தோழிகளிடமெல்லாம் பந்தா வாகத் தனது அண்ணியை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும்,

என்னதான் இந்த அண்ணனுக்கு முன்பே இரண்டு அண்ணன்களுக்குத் திருமணம் நடந்திருந்தாலும், அப்பொழுதெல்லாம் தனக்கு இவ்வளவு சந்தோஷமாக இருக்கவில்லையே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.



சந்தோஷமென்று ஒற்றை வார்த்தையில் முடித்துவிட வழியில்லாமல் வானத்துக்கும் பூமிக்குமாகத் துள்ளிக் குதித்தாள் என்று தான் சொல்ல வேண்டும்.

அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

மற்ற இரு அண்ணன்களைப் போல அல்லாமல் ஜெயவர்த்தன் அண்ணனை அவளுக்கு எப்பொழுதுமே மிகவும் பிடிக்கும்.

அந்த அளவிற்கு நகைச்சுவை உணர்வுடன் பேசு வதில் தொடங்கி, சிறுசிறு உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுத்து, அவனுக்கென்று எவ்வளவோ வேலைப்பளு இருந்தாலும் அதையெல்லாம் மற்றவர்களின் மேல் சுமத்தாமல் எப்பொழுதும் இனிமையாகப் பேசும் குண முடையவன் ஜெயவர்த்தன்.

அதற்காக எப்பொழுதுமே இனிமையாக நடந்து கொள் வான், கோபப்படவே மாட்டான் என்றும் ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாது.

குணமிருக்கும் இடத்தில் கோபமும் இருக்கும் என்பதைப் போல அவன் எப்பொழுதுமே தவறுகளை சகித்துக் கொள்பவனோ, பொறுத்துப் போகிறவனோ கிடையாது.

எனக்கு இது இப்படித்தான் இருக்க வேண்டும் மற்றது பற்றி கவலையில்லையென்று அது யாராக இருந்தாலும் ஒரே முடிவாகச் சொல்லி விடக் கூடியவன்.

அதிலும் லாவண்யா என்றால் ஜெயவர்த்தனுக்கும் எப்பொழுதும் ஒரு படி மேல்தான்.

தங்கைக்கென்று அனைத்தையும் செலவைப் பொருட் படுத்தாமல் பார்த்துப் பார்த்துச் செய்வான்.

அதனாலோ என்னவோ ஏதாவது தேவையென்றால் தன்னைப் பெற்றவர்களை விடவும் தனது மூன்றாவது

அண்ணன் ஜெயவர்த்தனிடம் முதலில் போய் நிற்பாள் லாவண்யா.

ஆனால் மற்ற இரு அண்ணன்களிடமிருந்தும் அப்படி அவளுக்கு எந்தச் சலுகையுமே கிடைத்ததில்லை.

இப்பொழுதுதான் என்றில்லை, திருமணத்திற்கு முன்பிருந்தே அப்படித்தான்.

சரிதான் முதல் இரு அண்ணன்களுக்கும் குடும்பம் குழந்தை எனப் பலவும் இருப்பதால் அவளுமே எதையும் எதிர்பார்ப்பது கிடையாது.

அப்படியே எதிர்பார்த்தாலும் அண்ணிகளைக் கடந்து தன்னை எதுவும் வந்து சேராது என்பதையும் எப்பொழுதோ லாவண்யாவும் உணர்ந்து கொண்டு விட்டிருந்தாள்.

தங்கைக்குத் தங்களால் உதவ முடியவில்லையே என்ற குற்ற மனப்பான்மை அவர்களுக்கு வந்து விடக் கூடாது என்பதற்காகவே, தனது தேவைகளை அவள் எப்பொழுதும் அவர்களுக்கு முன்பாகக் காட்டிக் கொண்டதில்லை.

ஆனால் தேவையென்று அவர்களிடமே போய் நின்றால் கூட அந்த இரண்டு அண்ணன்களுக்கும் அப்படியெல்லாம் எதுவும் வந்து விடாது என்பதைப் பாவம் லாவண்யா அறிந்திருக்கவில்லை.

''லாவண்யா.''

தனது மூன்றாவது அண்ணன் ஜெயவர்த்தன் அழைக்க ''இதோ வர்றேண்ணா'' என்று எழுந்து ஓடினாள் லாவண்யா.

''என்னண்ணா கூப்புட்டிங்களா?''

''என்னமா பண்ணிட்டிருக்க?''



''சும்மாதாண்ணா இருக்கேன், என்ன சொல்லுங்க?''

''சைக்கிள எடுத்துட்டு கொஞ்சம் நம்ம தோட்டம் வரைக்கும் போயிட்டு வர முடியுமா?''

''போய்ட்டு வர்றேண்ணா, சொல்லுங்க என்ன விஷயம்?''

''ஆளுங்க வேல செஞ்சுட்டிருக்காங்க, அவங்களுக்குக் கூலி குடுக்கணும்னு அப்பா இப்பதான் போன் பண்ணினார். நான் குடுக்கற பணத்தக் கொண்டு போய் அப்பா கிட்டக் குடுத்துட்டு வந்துடு.''

''சரிண்ணா'' என்றவள் அண்ணன் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டாள்.

''அண்ணா.''

''என்னமா சொல்லு?''

''அண்ணிகூட...''

''ம்.''

''அண்ணி கூடப் பேசலாமா?''

அப்படிக் கேட்ட தங்கையை எதுவும் பேசாமல் பார்த்தான் ஜெயவர்த்தன்.

அண்ணனின் பார்வையிலேயே அவனுடைய கேள்வியைப் புரிந்து கொண்ட லாவண்யா, ''இல்லண்ணா அன்னைக்கு முதன் முறையாப் பார்த்தப்பவே ரொம்ப நல்லாப் பேசினாங்க. திரும்பவும் கூப்புடுன்னு சொன்னாங்க அதான்...'' என்று தயக்கத்துடன் சொன்னாள்.

''சரிதான், துணி நகையெல்லாம் பர்ச்சேஸ் பண்றதப் பத்தி அம்மா ஏதோ கேக்கணும்னு சொல்லிட்டிருந்தாங்க. அப்ப நீயும் பேசு.''

''தேங்க்யூண்ணா.''

தங்கையின் சந்தோஷம் ஜெயவர்த்தனுக்கு அவனை யறியாமலேயே புன்னகையை வரவழைத்திருந்தது.

''ஜெய்வர்தா.''

மகனை அழைத்துக் கொண்டே ஜெயவர்த்தனின் தாய் காஞ்சனா வர ''என்னமா?'' என்றான்.

''கல்யாண வேலைகளெல்லாம் தலைக்கு மேல கிடக்கு. நீ தொழில் தொழில்னு அதையே பாத்துட்டிருந்தா எப்பிடிப்பா?''

''தொழிலும் முக்கியம்தானம்மா, என்ன வீட்ல யாரை யும் காணோம்?

''சுதர்சனும் மதியும் அவங்க குடும்பத்தோட பக்கத் துத் தோட்டத்து வேலுச்சாமி அண்ணன் வீட்டு விசேஷத் துக்குப் போயிருக்காங்கப்பா, நைட் தான் வருவாங்க.''

''நீங்களும் போகணுமில்லையா?''

''நானும், உங்கப்பாவும் காலைல போகலாம்னு இருக் கோம்.''

''சரிதான், இந்தாங்கமா இதுல பணமிருக்கு. லாவண்யா ஏதோ நக வேணும்னு கேட்டான்னு சொல்லிட் டிருந்தீங்களே நாளைக்குப் போகும்போது அவளையும் அழைச்சுட்டுப் போய் அவளுக்குப் பிடிச்சத எடுத்துக் குடுங்க. என்னமா...''

''இல்ல ஏற்கனவே உனக்குக் கல்யாண செலவுகள் எவ்வளவோ இருக்கும். இந்த நேரத்துல எதுக்குப்பா?''

''என்னமா நீங்க, இப்படி எங்கிட்ட சொன்ன மாதிரி ஏதாவது லாவண்யா கிட்ட சொல்லி அவள முகம் வாட வெச்சுடாதீங்க. ஆசையாக் கேட்டிருக்கா பேசாம எடுத் துக் குடுங்க.''



''சரிதான்பா.''

''இந்த வாரம் ஸ்வேதாவுக்கும், லாவண்யாவுக்கும் மட்டும் நகையும் துணியும் எடுக்க வேண்டிய வேலை களை முடிச்சுடுங்க.''

''அடுத்த வாரம் எல்லாருக்கும் போய் கல்யாணத் துணிகள எடுத்துடலாம்.''

சரியென்பதைப் போலத் தலையை ஆட்டியவருக்கு, மகனுக்கும் தான் எத்தனை செலவுகள் அதுவும் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறதே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இளைய மகனுக்குத் திருமணம் முடிவானதிலிருந்தே என்ன ஏதென்று ஒரு வார்த்தை கூடக் கேட்காத அவ னுடைய அண்ணன்களின் மேல் ஆதங்கம் தான் வந்தது காஞ்சனாவிற்கு.

பணமொன்றும் கொடுக்க வேண்டாம், அப்படியே கொடுத்தாலும் அதை வாங்கிக் கொள்பவன் ஜெய வர்த்தன் கிடையாதென்பது வேறு விஷயம்.

மனைவிமார்களை விட்டு ஒன்றுமில்லாததைக் கூடப் பெரிதாக்கிப் பேச மட்டும் தெரிகிறதல்லவா,

அப்படிப்பட்டவர்களுக்கு இது நம் வீட்டுத் திரு மணம், வேலைகளை நாமும் பகிர்ந்து கொள்ளத் தான் வேண்டுமென்பதெல்லாம் எப்படித் தெரியாமல் போயிற்று.

ஏன் அவர்கள் இருவரின் திருமணத்திற்கும் இதே ஜெயவர்த்தன் எப்படி, எந்த அளவிற்கு ஒவ்வொன்றை யும் அக்கறையுடன் பார்த்துப் பார்த்துச் செய்தான் என்ப தெல்லாம் கூடவே அவர்களுக்கு மறந்து போயிற்று.

அதெப்படி மறந்து போகும்.

தலையணை மந்திரமல்லவா அவர்கள் இருவருக்கும் இப்பொழுது வேலை செய்து கொண்டிருக்கிறது.

எல்லாம் சரிதான் நாளைக்கு அவர்களுக்கொரு வேலை ஆக வேண்டுமென்றால் எப்படி எந்த முகத்தை வைத்துக் கொண்டு தம்பியிடம் வந்து நிற்பார்களாம்.

ம்கூம், பெரிய மகன்களுக்கு தான் நிச்சயம் இதை அவர்களுடைய மண்டையில் உறைக்கிற மாதிரி புரிய வைத்துதான் ஆக வேண்டும்.

மருமகள்களே கூட அதற்காகத் திருப்பிக் கொண் டாலும் சரிதான்.

ஆனால் மறைமுகமாக எப்படியிருந்தாலும் வெளிப் படையாக அவர்கள் நல்ல விதமாகத்தானே நடந்து கொள்கிறார்களென்று சற்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டார்.

மற்றது எப்படியோ, ஆனால் மூன்றாம் மனிதர்களைப் போலப் பட்டும் படாமல் பேசுவது. அதற்கு மேல் பேசி னாலும் அவசியமே இல்லாத சிறு விஷயங்களைப் பெரி தாக்கிப் பேசுவது. மிகவும் முக்கியமான தருணங்களில் தனக்கென்னவென்று பேசாமல் சென்று விடுவது.

உள்ளிருந்து பார்க்கும் தாய் மனதிற்கு இந்த வித்தி யாசமெல்லாம் நன்றாகவே தெரிந்தது.

ஆனால் வெளியிலிருந்து பார்க்கும் மூன்றாவது மனிதர்களுக்கோ அண்ணன் தம்பிகள் மூவரும் ஒரு வருக்கொருவர் விட்டுக் கொடுத்து நல்ல விதமாக நடந்து கொள்வதைப் போலத்தான் தோன்றியது.

அந்த அளவிற்குப் பெரிய மகன்கள் இருவரையும் அவர்களுடைய மனைவிமார்கள் ஆட்டி வைத்திருக் கிறார்கள் என்பதும்.



அதைக் கூடப் பேச்சு வாக்கில் மிகவும் சாதாரணம் போலக் காட்டி சிறிய மகனிடம் சொன்னார் காஞ்சனா.

''பரவாயில்லமா, எல்லாரும் ஒரே மாதிரி இருக்க முடியுமா? அவங்களுக்கும் குடும்பம்னு ஆயிடுச்சே. முதல்ல கம்பேர் பண்ணிப் பேச வேண்டாம்'' என்று அந்தப் பேச்சுக்கு அப்பொழுதே முற்றுப்புள்ளி வைத்து விட்டிருந்தான் ஜெயவர்த்தன்.

அப்படிச் சொன்ன சிறிய மகனை எவ்வளவு பெருந் தன்மையுடன் பேசுகிறான் என்பதைப் போலப் பார்த்தார் காஞ்சனா.

இதுவே இவனுடைய அண்ணன்கள் என்றால், ஏன் இப்பொழுதுமேகூட பெரிய மகன்கள் இருவரும் முகத் திற்கு நேராக இல்லாவிட்டாலும் சிறியவனை ஏதோ ஒன்று சொல்லிக் கொண்டே தானே இருக்கிறார்கள்.

ஏற்கனவே ஜெயவர்த்தனின் திறமைக்கும், பெருந் தன்மைக்கும் ஒன்றுமில்லாததையெல்லாம் குறை கூறிக் கொண்டிருப்பவர்கள். இனி சிறிய மருமகளும் வந்து விட்டால் என்று நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

ஸ்வேதாவை நினைக்கையில் இன்னதென்று சொல்ல முடியாத வண்ணம் மனதிற்குள் இதமாக உணர்ந்தார் காஞ்சனா.

மூத்த இரு மருமகள்களைப் போலல்லாமல், இவள் சற்று வெகுளியாகத் தான் இருப்பாள் போலிருக்கிற தென்று நினைக்கத் தோன்றியது.

அதே போக்கில் சிறிது நேரம் யோசித்தவர் பிறகு தனது எண்ணத்தின் போக்கை மாற்றிக் கொண்டார்.

சிறிய மகனே சொல்வதைப் போல அனைவரும் ஒரே மாதிரி இருக்க மாட்டார்கள். சிறு சிறு குறைகள் எவ்வளவோ இருந்தாலும் தான் அதைக் கண்டும் காணாதது போல நடந்து கொள்ளத்தான் வேண்டுமென்று நினைத்துக் கொண்டார்.

## 5

ஒரு மாதம் சென்றிருந்தது.

திருமண ஏற்பாடுகள் அனைத்தும் வெகு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

பெரிய மகன்களோடு மருமகள்களும் சேர்ந்து அழைப்பு முதல் அனைத்து வேலைகளையும் பார்த்துக் கொண்டது, காஞ்சனாவிற்கு மிகுந்த மன நிம்மதியைக் கொடுத்திருந்தது.

சரிதான்,

நாளை தங்களுக்கு ஒரு வேலையென்றால் சிறியவனின் முகத்தில் எப்படிச் சென்று விழிப்பதென்பதற்காகவாவது அனைத்தையும் முன்னின்று நன்றாகச் செய்வார்களென்ற அவருடைய யூகம் சரியாகத்தான் போயிற்று.

''ஸ்வேதா.''

''சொல்லுங்க டாடி.''

''மாப்ள பேசினார்மா, அவங்க சைட்ல அழைப்பெல்லாம் முடிஞ்சதாம்.''

''ஓ...''

''நம்ம சைட்ல நீ உன் ஃப்ரண்ட்ஸ இன்வைட் பண்றது மட்டும் தான் மீதி.''



''சரிதான் டாடி, நானும் அத ரெண்டு நாள்ல முடிச்சுக்கறேன்.''

''அதுக்காக நீ சிரமப்பட்டுட்டிருக்காத, முடிஞ்ச அளவுக்கு நேர்ல குடுத்துட்டு மத்ததக் குரியர்ல அனுப்பி விடு.''

''சரிதான் டாடி, முடியாதத அப்படியும் பண்ணிக்கறேன்.''

''அப்புறம் ஸ்வேதா.''

''சொல்லுங்க டாடி.''

''மாப்ள வீட்ல இருந்து கவர் ஒன்று கொண்டு வந்து குடுப்பாங்க, வாங்கி வெச்சுக்கோ.''

''சரி டாடி.''

''சரிமா அப்ப நான் கிளம்பறேன், திரும்ப லேட் நைட் ஆனாலும் ஆகும். எனக்காகப் பாக்காம நீ நேரத்துல சாப்டுட்டுத் தூங்கப் போயிடு'' என்று சொல்லிக் கொண்டே பாலகிருஷ்ணன் கிளம்பியிருக்க, தானும் அவருடன் வெளியே வந்த ஸ்வேதா தந்தையின் கார் புறப்படும் வரை நின்று பார்த்துக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகே உள்ளே வந்தாள்.

வந்தவள், தானும் சென்று குளித்து முடித்து வெளியே கிளம்பத் தயாராகி வந்தாள்.

''ஸ்வேதாம்மா'' என்று அழைத்துக் கொண்டே அமிர்தம் வர, என்ன என்பதைப் போலப் பார்த்தாள்.

''குடிக்க ஜூஸ் ஏதாவது கொண்டு வரட்டுங்களாம்மா?''

''இல்லமா வேண்டாம், நான் வெளிய கிளம்பறேன் வர மதியத்துக்கு மேல ஆகும்.''

''சரிமா போய்ட்டு வாங்க.''

''எனக்கு லஞ்ச் வேண்டாம், எனக்காகக் காத்துட்டிருக்கவும் வேண்டாம்'' என்றவள் ''ஆஷா வீட்டுக்குப்

போறேன். அவ லஞ்ச்சுக்கு வரச் சொல்லியிருக்கா அதான்'' என்றாள்.

''சரிங்கமா போய்ட்டு வாங்க. ரொம்ப அலைய மட்டும் வேண்டாம்'' என்ற அமிர்தம் ''அப்புறம் டிரைவர் இல்லமா ஐயா ஒரு வேலையா வெளிய அனுப்பியிருக்கார்னு நினைக்கறேன்'' என்றாள்.

''பரவாயில்ல நான் மட்டும் தான் போகப் போறேன்'' என்ற ஸ்வேதா அமிர்தம்மாவிடம் சொல்லிவிட்டு வந்து காரை எடுத்துக் கொண்டு கிளம்பியே விட்டிருந்தாள்.

மீண்டும் அவள் வீடு திரும்ப மதியத்திற்கு மேலேயே ஆகி விட்டிருந்தது.

வந்தவள், தங்களுடைய வீட்டிற்கு வெளியே நின்றிருந்த அந்தக் காரை உள்ளம் படபடக்கப் பார்த்தாள்.

விறைப்பாக சல்யூட் ஒன்றை வைத்த செக்யூரிட்டியிடம் கேட்டால் என்னவென்று நினைத்தவள், பிறகு வேண்டாமென்று உள்ளே காரை விட்டிருந்தாள்.

ஏனோ மனம் அலைபாய, நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

. அதற்குள் ''நான் ஸ்டேண்ட்ல போட்டுக்கறேன் குடுங்க மேடம்'' என்று பணிவுடன் டிரைவர் வந்து காரை வாங்கிக் கொள்ள, ஹேண்ட் பேக்குடன் உள்ளே வந்தாள்.

அவள் நினைத்தது போலவே வந்திருப்பது ஜெயவர்த்தன் தான்,

தயக்கத்தை முடிந்த அளவு மறைத்துக் கொண்டு அவள் ஹாலுக்குள் அடியெடுத்து வைக்கவும், அங்கு சோபாவில் அமர்ந்திருந்த ஜெயவர்த்தன் அவளைப் பார்க்கவும் சரியாக இருந்தது.



''வாங்க'' என்றவளுக்கு என்ன முயன்றும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் சத்தம் வெளியே வந்திருக்கவில்லை.

''வீட்ல எல்லாரும் நல்லார்க்காங்களா?'' என்றவளால் துளியும் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

''அதெல்லாம், நீ எப்படியிருக்க?''

''நல்லார்க்கேன்.''

''மாமா?''

''வெளிய போயிருக்கார்.''

திருமண நிச்சயத்திற்குப் பிறகு அன்று தான் மீண்டும் இருவரும் பார்த்துக் கொண்டனர், அதாவது இரண்டாவது முறையாக,

ஏனோ அவளையறியாமலேயே ஜெயவர்த்தனிடம் அவளுடைய பார்வை சென்றிருந்தது.

அனைவரும் சொல்வதைப் போல ஆறரை அடி உயரமே கூட இருப்பான் போலல்லவா தெரிகிறது.

அது மட்டுமா செதுக்கினாற் போன்ற முக அமைப்பு.

அந்த முகத்திற்கு இயற்கையிலேயே கச்சிதமாகப் பொருந்தும் அந்தக் கடினம்.

முக்கியமாக அவனுடைய கண்களில் தெரியும் ஒருவித அலட்சியம்,

எல்லாவற்றிற்கும் மேலாக எவ்வளவு இயல்பாக இருக்கிறான், ஆனால் தன்னால் ஏன் அப்படி இருக்க முடியவில்லை.

''உன் கணிப்புப்படி எனக்கு எவ்வளவு மார்க்ஸ் குடுக்கலாம்?''

ஜெயவர்த்தனின் குரலில் துள்ளி விழுந்து நடப்பிற்கு வந்திருந்தாள் ஸ்வேதா.

கடவுளே இப்படி மாட்டிக் கொண்டு விட்டோமே என்றிருந்தது.

''ம். ஒரு நைன்ட்டி மார்க்ஸ் குடுக்கலாமா இல்ல ஹன்ரடேவா?''

லேசாகக் கண்களும் சிரிக்க அவன் கேட்ட கேள்வியில் செய்வதறியாது திகைத்தாள்.

''ஹன்ட்ரட் மார்க்ஸ் தான் இல்லையா?''

அப்படிக் கேட்ட ஜெயவர்த்தனின் பார்வையில் ஸ்வேதாவின் முகம் இரத்தமென சிவந்து போய் விட்டிருந்தது.

தொடர்ந்து அங்கே நிற்க முடியாமல் போயிருக்க, ''இதோ வர்றேன்'' என்று உள்ளே ஓடியே வந்திருந்தாள்.

உள்ளே வந்து சில வினாடிகளில் தன்னை சமனப் படுத்திக் கொண்டவள், அமிர்தம் ப்ளேட்டில் எடுத்து வைத்திருந்த டிபனை சற்றும் நகர மாட்டேனென்று அடம் பிடித்த கால்களால் பிரம்மப் பிரயத்தனப்பட்டு எடுத்து வந்தாள்.

ஸ்வேதாவின் அப்போதைய நிலை அமிர்தத்திற்கும் புரியவே செய்தது.

சில விநாடிகளில் டிபன் ப்ளேட்டுடன் திரும்பி வந்த ஸ்வேதா, அதை ஜெயவர்த்தனுக்கு முன்பாக வைத்து சாப்பிடச் சொல்லி உபசரித்தாள்.

''நான் சாப்பிடணும்னா நீ எங்கூட உக்காந்து பேசிட்டிருக்கணும்.''

ஜெயவர்த்தன் சொல்ல, செய்வதறியாது பார்த்தாள் ஸ்வேதா.



ஸ்வேதாவைப் பொறுத்தவரை அவளை யாரும் கட்டளையிட்டோ அல்லது கட்டாயப்படுத்தியோ எதையும் செய்ய வைத்து விட முடியாது.

அந்த மாதிரியான சூழ்நிலையில் அவள் வளர்ந்ததில்லை என்பதே உண்மை.

ஆனால் ஜெயவர்த்தனின் அந்த வார்த்தையில் தேனில் விழுந்த வண்டுபோல அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள்.

அமர்ந்தவள் மடியிலிருந்த தன்னுடைய கை விரல்களையே பார்க்க, ''உன் சந்தன நிறத்துக்கு அந்தக் கலர் நெயில் பாலிஷ் விடவும் பிங்க் ரொம்ப எடுப்பா இருக்கும்'' என்றான்.

அவனுடைய அந்த வார்த்தைகளில் மீண்டும் துள்ளி விழுந்து நிமிர்ந்தாள் ஸ்வேதா.

''எப்படி என் டேஸ்ட் ஓ.கே.வா. இல்ல...''

''டிபன் எடுத்துக்கோங்க.''

மீண்டும் ஒரு முறையும் உபசரித்தாள்.

''நான் ஒன்று சொல்லலாமா?''

அப்படிக் கேட்டவனை ஸ்வேதா என்னவென்பதைப் போலப் பார்க்க,

''நீ ரொம்ப அழகா இருக்க பசி தூக்கம் எல்லாம் மறந்து உன்ன அப்படியே பாத்துட்டே இருந்துடலாம் போலிருக்கு'' என்றான் ஜெயவர்த்தன்.

அவனுடைய அந்த வார்த்தைகளில் இப்பொழுது முகம் இரத்த நிறமே கொண்டு விட்டிருக்க, என்ன முயன்றும் ஸ்வேதாவால், அவனை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியாது போயிற்று.

ஸ்வேதாவின் நிலை புரிய, ஜெயவர்த்தனாலும் அவளிடமிருந்து பார்வையைத் திருப்பிக் கொள்ள முடியாது போயிற்று.

சரியாக அதே நேரம் ஜெயவர்த்தனின் மொபைல் ஒலிக்க, அந்த ஒலியில் தான் இருவரும் நடப்பிற்கு வந்திருந்தார்களென்று சொல்ல வேண்டும்.

முக்கியமாக ஸ்வேதா.

ஜெயவர்த்தனைப் போலத் தன்னால் ஏன் இயல்பாக இருக்க முடியவில்லையென்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் அதே நேரத்தில் கிளம்ப வேண்டுமென்று அவனுடைய இருக்கையை விட்டே எழுந்திருந்தான் ஜெயவர்த்தன்.

''எதுவும் சாப்பிடாமக் கூடப் போறீங்களே.''

தயக்கத்துடன் என்றாலும் ஒரு வழியாகக் கேட்டே விட்டிருந்தாள் ஸ்வேதா.

அவளுடைய வார்த்தைக்காக நின்று கொண்டே ஒரு ஸ்வீட்டை எடுத்துக் கொண்ட ஜெயவர்த்தன், கொஞ்சம் தண்ணீரையும் குடித்து விட்டு மீண்டுமொரு முறையும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பியே விட்டிருந்தான்.

அப்படித்தான் இன்னும் கொஞ்சம் நேரம் இருந்து விட்டுப் போனால் என்னவாம் என்று ஆதங்கத்துடன் நினைத்துக் கொள்வதைத் தவிர ஸ்வேதாவால் வேறு எதையும் செய்ய முடிந்திருக்கவில்லை.

## 6

திருமணத்திற்கு இன்னும் ஒரு வாரமே இருக்கிறதென்ற நிலை வந்து, பிறகு அதுவும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறுகி கடைசியில் திருமண நாளும் இனிதே விடிந்தது.



அவளுடைய அழகிற்கும் அலங்காரத்திற்கும் பொற்பாவையென கண்டவர்கள் வியக்கும் வண்ணம் ஜொலித்தாள் ஸ்வேதா,

முன் எப்படியோ, ஆனால் இப்பொழுது ஜெயவர்த்தனின் மீது அவளுக்கிருக்கும் காதலில் மணப்பெண்ணுக்கே உரித்தான நாணமும் சேர்ந்து அழகுக்கு மேலும் அழகு சேர்ந்திருந்ததென்று தான் சொல்ல வேண்டும்.

மணமகள் வீட்டார் வசதியில் மிகப்பெரிய இடமென்றால், மணமகன் வீட்டினர் செல்வாக்கில் மணமகள் வீட்டினரை விடப் பல மடங்கு பெரிய ஆட்களாக இருந்தனர்.

அதனால் திருமணத்திற்கு வந்திருந்தவர்களின் கூட்டமும், அனைவருடைய எதிர்பார்ப்புகளையும் மிஞ்சியதாகவே இருந்தது.

கம்பீரமான ஆண் மகனாகத் தனது கரம் பிடித்திருந்த ஜெயவர்த்தின் அருகில் தேவதையென ஜொலித்தாள் ஸ்வேதா,

எவ்வளவு பொருத்தமான ஜோடியென்று அனைவரும் வாயார வாழ்த்தி விட்டுச் சென்றார்கள்.

ஏற்கனவே தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்த ஸ்வேதாவால், அவர்களுடைய வெளிப்படையான வாழ்த்திற்கு நன்றியைக் கூடச் சொல்ல முடிந்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு அவளுடைய மனம் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

மற்றவர்களைவிடக் கூட அவளுடைய புகுந்த வீட்டு சொந்தங்களை எதிர்கொள்ளத் தான் மிகவும் தவித்துப் போனாள் எனலாம்.

அந்த அளவிற்கு ஆளாளுக்கு ஒவ்வொரு கேள்வியை, அதிலும் தன் மேல் ஏதோ தவறு இருப்பதைப் போலவே அவர்கள் கேட்ட விதத்தை அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று.

அதுவரை தனக்குத் தெரிந்த அளவிலும், நேரில் பார்த்த அளவிலும் மாமனாரும் மாமியாரும் மிகவும் நல்ல மாதிரியாகத் தான் தெரிந்தார்கள்.

சரிதான் அதற்கு மேல் என்ன, சமாளித்துக் கொண்டு போய்விட வேண்டியது தானே என்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அதுதான் மிகவும் கடினம் என்பதைப் பாவம் அப்பொழுது அவள் உணர்ந்திருக்கவில்லை.

ஒரு வழியாகத் திருமணத்திற்கு வந்திருந்த சொந்தங்களில் பெரும்பான்மையோர், விடைபெற்றுக் கொண்டு கிளம்ப, கணவனுடன் தான் மட்டும் தனித்து நின்றாள் ஸ்வேதா.

ஏனோ அவளையறியாமலேயே ஒருவிதப் படபடப்பு வந்து சூழ்ந்து கொள்ள செய்வதறியாது திகைத்தாள்.

மனைவியின் நிலை புரிய என்னவென்று கேட்டான் ஜெயவர்த்தன்.

''என்னமா?''

''இன்னும் எவ்வளவு நேரம் நாம மண்டபத்துல இருக்கணும்?''

''ஏன் நிக்க முடியலையா?''

''ம்கூம், சும்மா தான் கேட்டேன்.''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே ஸ்வேதாவின் தோழிகள் வர அவர்களைப் பார்த்த சந்தோஷத்தில் மற்றது மறந்து போனாள்.



வந்திருந்த தோழிகளில் ஒருத்தி சற்று விரசமாக அவள் சாதாரணமாகத் தான் அப்படிச் சொன்னாள் என்றாலும் மற்றவர்களைப் போல ஸ்வேதாவால் அதை இயல்பாக எடுத்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அதிலும் ஏற்கனவே இருந்த மனநிலைக்கு யாரையும் நிமிர்ந்து கூடப் பார்க்க முடியாத அளவிற்கு ஒரு மாதிரியாகிப் போனாள்.

ஒரு வழியாக அவர்களும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பியிருக்க, திரும்பி மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

மனைவியின் நிலை புரிய சிரிப்பு தான் வந்தது.

கூடவே மனமும் உருகிப் போனது.

ஏதேதோ பேசத் துடித்த மனதை அப்போதைக்கு வேண்டாமென்று முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான்.

அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை,

ஏனென்றால் அப்பொழுது தங்களை நோக்கி பாலகிருஷ்ணன் அதாவது அவனுடைய மாமனார் வந்து கொண்டிருப்பதைக் கண்டான், கூடவே அவனது பெற்றோரும்.

அதற்குள் அவர்கள் அருகிலேயே வந்திருக்க, முயன்று தன்னை இயல்பாக்கிக் கொண்டாள் ஸ்வேதா.

அதாவது அப்படிக் காட்டிக் கொண்டாள் அவ்வளவே.

''என்னடாம்மா, ஏன் டல்லாத் தெரியற?''

தந்தை கேட்க, ''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே டாடி'' என்று சிரித்து வைத்தாள்.

ஆனால் அதற்குள் ''இருக்காதா பின்ன, எவ்வளவு நேரமா நிக்கறாங்க. அதுவும் வந்து பேசறவங்க கிட்டெல்லாம் சிரிச்ச மாதிரி பதில் சொல்லிப் பேசி முடிக்கறதுக்குள்ளயே டயர்ட் ஆகியிருக்குமே'' என்ற தனது அத்தை

காஞ்சனாவை மனதிற்குள் நன்றியுடன் அதே சமயம் புன்னகையுடன் பார்த்தாள் ஸ்வேதா,

ஸ்வேதாவை விடக் கூட அவருடைய சம்பந்தி யம்மாவின் பதிலில் பாலகிருஷ்ணன் மிகுந்த மன நிம் மதியடைந்திருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்,

அதைவிட 'பரவாயில்லை தன் மகள் கொடுத்து வைத்தவள் தான்' என்ற சந்தோஷமும்.

அந்த அளவிற்குக் காஞ்சனாவும் மிகவும் உணர்ந்து அக்கறையுடன் தான் சொல்லியிருந்தார்.

''சரிதான் மருமக மறுக்காததிலிருந்தே நீ சொன்னது சரிதான்னு தெரியுது.'' என்று ராஜேந்திரன் அதாவது ஸ்வேதாவின் மாமனாரும் சொல்ல, ''உன்னால முடிய லாம். ஆனா என் மருமகளப் பத்தியும் கொஞ்சம் நீ யோசிக்க வேண்டாமா?'' என்று புன்னகையுடன் மகனையும், மருமகளையும் பார்த்த காஞ்சனா, மணவறைக்குக் கீழே அழைத்து வந்து அங்கிருந்த இருக்கைகளில் அவர்களை அமர வைத்திருந்தார்.

முன்னைக்கு இப்பொழுது சற்று பரவாயில்லையென் றாலும் இங்கிருந்து கிளம்ப முடிந்தால் இன்னும் நன்றாக இருக்குமே என்று ஸ்வேதாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவர்களைத் தொடர்ந்து இப்பொழுது புகுந்த வீட்டுச் சொந்தங்கள் அனைவரும் வந்து சூழ்ந்து கொள்ள, மீண் டும் திணறிப் போனாள் என்று தான் சொல்ல வேண்டும்.

லாவண்யாவைத் தவிர சற்றும் சுவாரஸ்யமே இல் லாத மற்றவர்களின் பேச்சை அவளால் என்ன முயன்றும் ரசிக்க முடிந்திருக்கவில்லை.

லாவண்யாவிடமுமே கூட மிகவும் முயன்றுதான் இயல்பாகப் பேசினாள்.



மனைவியின் நிலை புரிய மேலும் அவளைச் சிரமப் படுத்த மனமில்லாமல் அங்கிருந்து முடிந்த அளவு விரை வாகக் கிளம்பிக் கொள்ள முடிவு செய்திருந்தான் ஜெய வர்த்தன்.

முடிவு செய்தது போலவே மதிய உணவுடன் மேலும் சில முக்கியமான சம்பிரதாய சடங்குகளையும் முடித்துக் கொண்டு மணமக்கள் இருவரும் அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தனர்.

அங்கிருந்து கிளம்பியவர்கள் நேராகச் சென்ற இடம் ஜெயவர்த்தனின் வீடு.

அங்கும் வீடு முழுக்க நிறைந்திருந்த சொந்தங்கள் ஆலம் சுற்றி புது மணமக்களை வீட்டிற்குள் அழைத்துக் கொண்டனர்.

மண்டபமே பரவாயில்லை போலிருக்கிறதே என்று நினைக்குமளவிற்கு அங்கேயும் அனைவரும் வந்து சென்றனர். புது மணமக்களை, முக்கியமாகப் பார்ப்பவர் கள் எல்லாம் வந்து வியந்து சொல்லிவிட்டுப் போகும் அந்த அழகான பணக்கார வீட்டு மணமகளைப் பார்க்க வென்றே தொடர்ந்து மாலை வரை அனைவரும் வந்து சென்ற வண்ணம் இருந்தார்கள்.

## 7

என்னதான் இயல்பாகப் பேச முடியாவிட்டாலும், முக்கியமாகத் தனது தோழிகளில் ஒருத்தி வந்து விசே மாக சொல்லி விட்டுப் போனதிலிருந்து கணவனுடைய முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாத அளவிற்கு ஒரு

மாதிரியாக விட்டிருந்தாலும் கூட மண்டபத்தில் கணவன் அருகிலிருந்தது ஒருவித ஆறுதலையாவது கொடுத்திருந்தது ஸ்வேதாவிற்கு.

ஆனால் வீட்டில் அதற்கும் வழியில்லாமல் மேலும் அதிகமாகத் தவித்துப் போனாள்.

மண்டபத்திலிருந்து இருவரும் ஒன்றாக வீட்டிற்குள் வந்தது தான், அதற்குப் பிறகு கணவனை பார்க்கக் கூட முடிந்திருக்கவில்லை.

''என்ன அண்ணி யாரத் தேட்றீங்க?'' என்ற குரலில் திரும்பினாள் ஸ்வேதா.

அங்கு லாவண்யா நின்று கொண்டிருக்க ''உன்னைத் தான்'' என்று புன்னகையுடன் சொன்னாள்.

''சரிதான் நம்பிக்கறேன்'' என்றவள் ''எழுந்து வாங்க அண்ணி'' என்றாள்.

..........

''என்ன பார்க்கறீங்க? நீங்களும் அண்ணாவும் உங்க வீட்டுக்குக் கிளம்பணுமாம்'' என்று லாவண்யா சொன்னது தனது காதுகளுக்குள் தேன் மாரி பொழிந்தாற் போலிருந்தது ஸ்வேதாவிற்கு.

ஆனாலும் அதை அவளால் அப்படியே நம்ப முடிந்திருக்கவில்லை.

லாவண்யாவைத் தொடர்ந்து தனது அத்தை காஞ்சனாவும் வந்து அதையே சொல்ல, இப்பொழுது துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது.

அந்த அளவிற்கு ஏதோ அவளுடைய வீட்டை விட்டு வெளியே வந்து பல காலம் ஆகி விட்டாற் போன்றதொரு உணர்வு தோன்றியிருந்தது ஸ்வேதாவிற்கு.



அதற்குப் பிறகு சிறிது நேரத்திலேயே சில முக்கியமான சம்பிரதாய சடங்குகளை மட்டும் முடித்துக் கொண்டு கணவனுடன் தனது வீட்டிற்குக் கிளம்பியிருந்தாள் ஸ்வேதா.

புகுந்த வீட்டைப் போல அங்கே ஸ்வேதாவின் வீட்டில் அவ்வளவாக சொந்தங்கள் யாரும் இருக்கவில்லை.

அதற்காக யாரும் இல்லையென்றும் சொல்லி விடுவதற்கில்லை.

பாலகிருஷ்ணனின் தங்கை குடும்பம், ஸ்வேதாவின் தாயுடன் பிறந்த அக்கா அதாவது அவளுடைய பெரியம்மா குடும்பத்தினர் என ஏழெட்டுப் பேர் மட்டுமே இருக்க, புது மணமக்களை அவர்கள் ஆலம் சுற்றி உள்ளே அழைத்துக் கொண்டனர்.

முன்னைக்கு இப்பொழுது எவ்வளவோ இறுக்கம் தளர்ந்தாற் போலிருக்க, ஏன் ஏதோ ஒரு வகையில் இன்னதென்று செல்ல முடியாத அளவிற்கு மனதிற்குள் மிகவும் இதமாக உணர்ந்தாள் என்று கூடச் சொல்லலாம்,

ஆனால் அதெல்லாம் புகுந்த வீட்டைப் போலவே மற்றவர்கள் சொன்னதையெல்லாம் ஒரு பொம்மை போல செய்ய நேரும் வரை மட்டுமே,

சிறிது நேரத்தில் இரவு உணவும் முடிய அடுத்ததாக வரப் போகும் சடங்கை, அதாவது தனது அத்தையும், பெரியம்மாவும் தன்னைத் தயார் செய்ததை என்ன முயன்றும் ஸ்வேதாவால் இயல்பாக எடுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

''என்ன ஸ்வேதா, ஏன் இப்படி இறுக்கமா இருக்க?''

''அதெல்லாம் இல்லையே பெரியம்மா.''

''ப்ரீயா இரு கண்ணம்மா, பணம் முன்ன பின்ன இருக்கட்டும் ஆனா இந்த மாதிரி தங்கமான மாப்ள

கிடைக்க நீ குடுத்து வெச்சிருக்கணும். அவ்வளவு திறமையாம், உங்க பெரியப்பா தான் வாய்க்கு வாய் அத சொல்லிக்கிட்டே இருக்கார்.''

''அதுவும் இன்னும் சில வருஷங்கள்ல பாரு, நம்மள விடவும் ஏன் பாலுவ விடவுமே பெரிய ஆளாயிடுவார். அதுவும் தொழில்ல சூரப்புலியான பாலு அவரே ஸ்வேதாவுக்கு ஜெயவர்த்தன செலக்ட் பண்ணியிருக்கார்னா அதுக்கு மேல சொல்ல இனி என்ன இருக்குன்னு உங்க மாமாவும் எந்நேரமும் அதே பாட்டுதான்'' என்று தனது அத்தையும் அதையே சொல்ல, இருவரையும் பார்த்தாள் ஸ்வேதா.

ஒருவேளை வசதியில் ஏணி வைத்தாலும் எட்டாதவனுக்குப் போய் நம் வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்து விட்டோமோ என்னும் ஆதங்கத்தில் இருவரும் பேசுகிறார்களோ என்று ஸ்வேதாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சரிதான் அது எப்படி இல்லாமல் போகும்,

திருமணப் பேச்சு எடுத்ததிலிருந்தே அதைத் தான் ஜாடை மாடையாக எத்தனையோ முறை சொல்லியும் காட்டி விட்டார்களே.

சில வினாடிகள் தான்,

உடனே தனது எண்ணத்தின் போக்கை மாற்றிக் கொண்டாள்.

தான் நல்லபடியாக வாழ வேண்டுமென்று அக்கறையுடன் பேசுபவர்களைப் போய்த் தான் என்னவெல்லாம் நினைத்து விட்டோமென்று தன்னையே நொந்து கொண்டாள்.

அதற்குப் பிறகு முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாள் ஸ்வேதா.



''நீ மாப்ள மனசு கோணாம நடக்கணும்னு தாம்மா இதையெல்லாம் சொல்றோம். அதோட இதையெல்லாம் உனக்குப் புரியும்படியா எடுத்துச் சொல்ல உங்கம்மா வேற இல்ல பாரு.''

சரிதான் என்ன இருந்து என்ன, அதற்கு நாம் கொடுத்து வைக்காமல் போய் விட்டோமே என்று ஸ்வேதாவிற்கும் அந்த நேரத்தில் தாயின் நினைவு தான் வந்தது.

சரியாக அதே நேரம் தனது தந்தையும் வர, கண்களும் கூட லேசாகக் கலங்கி விட்டிருந்தன.

''அச்சச்சோ தப்பு எம்மேல தான் நாந்தான் யோசிக்காம ஸ்வேதா அம்மாவ ஞாபகப்படுத்திட்டேன்'' என்று அவளுடைய பெரியம்மா ஆதங்கத்துடன் சொல்ல,

''அதனால என்னமா நீயே ஞாபகப்படுத்தலேன்னாலும் அது மறக்கக் கூடிய ஒன்னா'' என்றார் பாலகிருஷ்ணன்.

''என்ன கண்ணம்மா, ஏன் காலைலிருந்தே ஒரு மாதிரியிருக்க?'' என்ற தந்தையைப் பார்த்த ஸ்வேதா,

''அப்படியெல்லாம் ஒன்னுமில்லையே டாடி'' என்றாள்.

''ஏன், மாப்ள ஏதாவது சொல்லிட்டாரா?''

''அச்சச்சோ என்ன டாடி...''

''ஏன் சொல்றேன்னா மாப்ள மட்டுமில்லமா அவங்க வீட்டுப் பெரியவங்க கூட ரொம்ப நல்ல விதமாத்தான் தெரியறாங்க. ஆனாலும் சின்னச் சின்னக் குறைகள் நிறைய வரலாம். நீ அத அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போயிடணும்.''

தந்தை சொல்ல சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் ஸ்வேதா.

தொடர்ந்து வந்த பதினைந்து நிமிடங்களில் படபடத்த மனதுடன் கணவனை எதிர்கொண்டாள் ஸ்வேதா.

இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித இறுக்கத்தில் நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள, எங்கே அது கணவனுக்கே கூடக் கேட்டு விடுமோ என்று பயந்து போனாள்.

மனைவியின் நிலை ஜெயவர்த்தனுக்கு புரியவே செய்தது.

அப்படியே சிலை போல நின்று விட்டிருந்த மனைவியின் அருகில் வந்தவன் அவளது கையிலிருந்த பால் ஃப்ளாஸ்க்கை வாங்கி அங்கிருந்த டேபிளின் மீது வைத்தான்.

அப்படியே மனைவியை உடன் அழைத்து வந்தவன் அவளைக் கட்டிலில் அமர வைத்துத் தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

பொற்சிலையாகக் குனிந்த தலையுடன் அமர்ந்திருந்த மனைவியைப் பார்த்தவனுக்கு அப்படியே அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல எல்லையற்ற ஆசை தோன்றி அவனை உள்ளம் பரபரக்கச் செய்திருந்தது.

ஆனாலும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''ம், அப்புறம்?'' என்ற கணவனை மெல்ல நிமிர்ந்து பார்த்தாள் ஸ்வேதா,

''உன் சேல நல்லாத்தான் இருக்கு, அதுல எனக்கும் ஆட்சேபணையில்ல. அப்படியே அது எங்க, எந்தக் கடைல வாங்கினது, என்ன விலைன்னு எல்லாத்தையும் விளக்கமா சொன்னாக் கேட்டுக்குவேன்.''

விளையாட்டாகக் கணவன் கேட்பது புரிய, எதுவும் பேசாமல் பார்த்தாள் ஸ்வேதா.



தான் ஏதாவது பேச வேண்டுமோ என்று நினைத்தவளுக்கு, என்ன பேசுவது, முதலில் வாயைத் திறந்தால் குரல் வெளியே வருமா என்றெல்லாம் மிகவும் சந்தேகமாகி விட்டிருந்தது.

''என்னமா, ஏன் டல்லா இருக்க?''

கணவனும் அதே கேள்வியைக் கேட்டதில் முழுமையாக நடப்பிற்கு வந்திருந்தவள்,

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே'' என்று அவசரமாக மறுத்தாள்.

''உண்மையாவா, நம்பலாமா?''

கணவன் கேட்க, ஆமாம் என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

''சாப்டியா?''

''ம்.''

''என்ன சாப்ட?''

இதென்ன இப்படியொரு கேள்வி என்று நினைத்தவளுக்கு தன்னை இயல்பாகப் பேச வைப்பதற்காகத் தான் இப்படியெல்லாம் கேட்கிறான் என்பது புரியாமலில்லை.

''இட்லி, சப்பாத்தி...''

''ஆனா நான் சாப்பிடவே இல்ல தெரியுமா?'' என்றவனை அதிர்ச்சியுடன் பார்த்தாள் ஸ்வேதா.

ம்கூம், அதெப்படி இருக்கவே இருக்காது.

சும்மா விளையாட்டுக்குத் தான் அப்படிச் சொல்கிறான்.

''என்ன நம்ப மாட்டியா?'' என்றவன் மனைவியின் மடியிலிருந்த அவளுடைய கைகளைத் தனது கைகளுக்குள் எடுத்துக் கொண்டான்.

"நீ வந்து பரிமாறுவேன்னு ரொம்ப எதிர்பார்த்தேன், அதனாலயோ என்னவோ வழக்கம் போல சாப்பிடக் கூட முடியல."

கடவுளே இதற்குத் தான் என்ன பதில் சொல்வது.

அதிலும் வயிறு நிறைய சாப்பிடவில்லையென்று வேறு சொல்கிறானே...

"என்ன ஒரு ஸ்வீட்; ரெண்டு இட்லி ரெண்டு சப்பாத்தி, தயிர் சாதம் இப்படிக் கொஞ்சம் மட்டும் தான் சாப்பிட்டேனாக்கும்."

கணவன் விளையாட்டாகப் பேசுவது புரிய, லேசாக சிரித்து மட்டும் வைத்தாள் ஸ்வேதா.

தனது மனைவியைப் பார்த்த ஜெயவர்த்தனுக்கு மனதிற்குள் ஆசை மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே சென்றது என்று தான் சொல்ல வேண்டும்,

நன்கு படித்த, அழகான அதிலும் பணக்காரப் பெண் வேறு,

மிகவும் மெத்தனமாக, ஏன் யாரையும் மதிக்காமல் கூட நடந்து கொள்ளலாம்.

ஆனால் தன்னுடைய மனைவி அப்படியெல்லாம் இல்லையென்பதோடு, மற்றவர்களுடைய சிறுசிறு உணர்ச்சிகளுக்கும் கூட மதிப்பளித்து நடந்து கொள்கிறாளே என்று பெருமையாக இருந்தது ஜெயவர்த்தனுக்கு.

முக்கியமாகத் தனக்கு மனைவியாக வரப் போகிறவள் இப்படியிருந்தால் நன்றாக இருக்குமென்று அவன் மனதிற்குள் எதிர்பார்த்திருந்தது போலவே அவனுடைய மனைவி அமைந்து விட்டிருந்தது அவனுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்திருந்தது.

"ம், என்ன சொல்லு?"



"உங்களுக்குப் பால்..."

"அதிருக்கட்டும், நீ ஏதாவது பேசினா நல்லாக்கும்."

அப்படிச் சொன்ன கணவனை என்ன பேசுவது என்பதைப் போலப் பார்த்தாள் ஸ்வேதா.

அவனுடைய பார்வை தன்னை என்னவோ செய்ய, சிவக்கத் தொடங்கிய முகத்தை உதட்டைக் கடித்துக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"ஸ்வேதா..."

கணவனின் அந்த அழைப்பும் பார்வையும் மேலும் என்னவோ செய்திருக்க, இப்பொழுது அவளுடைய முகம் இரத்த நிறமே கொண்டு விட்டிருந்தது.

"அடடா இந்த வெட்கமே ஆயிரமாயிரம் வார்த்தைகளுக்கு சமம்" என்ற கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

"ஆமா, காலைல உன் ஃப்ரண்ட்ஸ் வந்தப்ப நீ ஏன் ரொம்ப ஒரு மாதிரியாயிட்ட?"

ஒன்றுமே தெரியாதது போலக் கணவன் கேட்ட விதத்தில், அவளால் என்ன முயன்றும் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அதிலும் தோழி பேசிய வார்த்தைகள்...

அனைத்தும் தெரிந்திருந்தும் எப்படிக் கணவனால் இப்படியொரு கேள்வியைக் கேட்க முடிகிறது.

மனைவியின் நிலை புரிய அவளைத் தன்னருகில் இழுத்திருந்தான் ஜெயவர்த்தன்.

"என்னடா என்னாச்சு உனக்கு?" என்று மனைவியின் முகம் நோக்கிக் குனிந்திருந்தவன், அவளை மேலும் தன்னருகில் இழுத்து அணைத்திருந்தான்.

கணவனின் அந்த அணைப்பில் லேசாக உடல் நடுங்க, அப்படியே கண்கள் சொக்கி அவன் மேலேயே சாய்ந்தாள்.

மனைவியின் மனம் புரிய, அதற்கு மேல் ஜெயவர்த்தனின் நிலை பற்றிக் கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

# 8

''குட்மார்னிங் டாடி.''

''குட்மார்னிங் ஸ்வேதா குட்டி, மாப்ள எங்க அவர் ரூம்ல இருக்காரா?''

''ஆமா டாடி, நீங்க காபி குடிச்சீங்களா?''

''எங்க, நீ வந்தா குடிக்கலாம்னு பழக்க தோஷத்துல அப்படியே உக்காந்துட்டேன்.''

''அச்சச்சோ என்ன டாடி நீங்க'' என்ற ஸ்வேதா, அங்கு டீபாயின் மேல் ட்ரேயில் வைக்கப்பட்டிருந்த ஃப்ளாஸ்கிலிருந்து தனக்கும் தந்தைக்குமாக இரண்டு கப்களில் காபியை ஊற்றினாள்.

''இந்தாங்க டாடி'' என்று ஒன்றைத் தந்தையின் கையில் கொடுத்தவள் மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

''மாப்ளைக்குமா...''

பாலகிருஷ்ணன் கேட்டுக் கொண்டிருக்கும்போதே ''இதோ நானே வந்துட்டேன் மாமா'' என்று வந்திருந்தான் ஜெயவர்த்தன்,

''வாங்க மாப்ள, குட்மார்னிங்.''

''வெரி குட்மார்னிங் மாமா, என்ன நீங்களும் இப்பதான் காபி எடுத்துக்கறீங்க போலிருக்கு?''

''சரிதான், வாங்க மாப்ள நீங்களும் உக்காந்து காபி எடுத்துக்கோங்க'' என்றவர் ''மாப்பிள்ளைக்கும் ஒரு கப் காபி ஊத்திக் குடுமா'' என்றார்.



தந்தையுடன் அமர்ந்து காபி குடிக்க நினைத்தவள், கணவனின் வரவில் அந்த எண்ணத்தைக் கை விட்டாள்.

கணவனுக்கும் ஒரு கப் காபியை ஊற்றிக் கொடுத்தவள், அப்படியே லாவகமாக அங்கிருந்து நழுவி விட்டிருந்தாள்.

ஏனோ கணவனின் முகத்தை நேருக்கு நேர் பார்க்க முடியுமென்று தோன்றவில்லை.

தந்தை மீண்டும் அழைத்தால் என்ன செய்வதென்று அடுத்த அறையிலேயே அமர்ந்து கையிலிருந்த காபியைக் குடிக்கத் தொடங்கினாள்.

ஏனோ நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, மனம் நிலை கொள்ளாமல் தவித்தது.

தந்தையிடம் கணவன் வெகு இயல்பாகப் பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

அதுவும் அவனுடைய கம்பீரமான குரல் மேலும் என்னென்னவோ செய்ய, உதட்டைக் கடித்துத் தன்னை இயல்பாக்கிக் கொண்டாள்.

கணவனால் மட்டும் எப்படி இவ்வளவு இயல்பாக நடந்து கொள்ள முடிகிறது.

தந்தை அழைப்பது கேட்க, எழுந்து வந்தாள்.

''என்ன டாடி?'' என்றாள் மெதுவாக,

''காணமேன்னு கேட்டேம்மா.''

''காபி சாப்டுட்டிருந்தேன் டாடி.''

''அப்புறம் கண்ணம்மா...''

''சொல்லுங்க டாடி.''

''மாப்பிள்ளைக்கு நம்ம வீடு, கெஸ்ட் ஹவுஸ் எல்லாத்தையும் சுத்திக் காட்டு. அப்படியே குளிச்சுட்டு டிபன்

சாப்புடுங்க. எனக்கு வெளிய ஒரு சின்ன வேல போய்ட்டு வந்துட்றேன்.''

''சரி டாடி.''

கலகலவெனப் பேசும் மகள் மாப்பிள்ளையின் முன் பாகப் பெட்டிப் பாம்பாக அடங்கியிருந்தது பாலகிருஷ்ணனுக்குப் புன்னகையை வரவழைத்திருந்தது.

''என்ன மாப்ள, நான் கிளம்பட்டுங்களா?''

''சரிதான் மாமா, உங்க ஃப்ரண்ட் வெயிட் பண்ணிட்டிருப்பாருனு சொன்னீங்க நீங்க போய்ட்டு வந்துடுங்க.''

மீண்டுமொரு முறையும் மகள் மருமகன் இருவரிடமும் சொல்லி விட்டுக் கிளம்பியிருந்தார் பாலகிருஷ்ணன்.

வழக்கம் போல நான்கு மணிக்கே தந்தை எழுந்து விட்டிருப்பார் போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டே திரும்பியவள், கணவன் பேப்பர் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

சரிதான், நாம் போய் ஏதாவது வேலையைப் பார்க்கலாமென்று நகர்ந்தவள் கணவனின் அழைப்பில் நின்று திரும்பினாள்.

''நான் குளிக்கணும்மா, சோப் டவல் எல்லாம் எடுத்து வைக்க முடியுமா?''

''இதோ...'' என்று மேலே தங்களுடைய அறையை நோக்கித் திரும்பிய மனைவியை ''ஒரு நிமிஷம்'' என்று நிறுத்தினான் ஜெயவர்த்தன்.

''இப்பவே எடுத்து வைக்கணும்னு கிடையாது உனக்கு ஏதாவது வேலையிருந்தாலும் பாத்துட்டு அப்புறமே எடுத்து வை. எப்பிடியும் நான் குளிக்கப் போக இன்னும் கொஞ்ச நேரமாகும்.''



''சரிதான், நான் எல்லாத்தையும் இப்பவே போய் எடுத்து வெச்சுட்டு வேணும்னா வந்துட்றேன்...''

என்ன முயன்றும் ஒரு அளவிற்கு மேல் ஸ்வேதாவின் குரல் வெளியே வந்திருக்கவில்லை.

உடனே தங்களுடைய அறைக்கு வந்திருந்த ஸ்வேதா, கணவன் குளிப்பதற்கு வேண்டிய அனைத்தையும் தயாராக எடுத்து வைத்துவிட்டு வெளியே வந்தாள்.

சில வினாடிகள் சென்றிருக்கும்,

ஏதோ அரவம் கேட்கத் திரும்பியவள், கணவன் அறைக்குள் வந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

கணவனின் வரவில் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, எதையும் செய்யத் தோன்றாது அப்படியே நின்று விட்டிருந்தாள்.

அதற்குள் மனைவியின் அருகிலேயே வந்திருந்த ஜெயவர்த்தன், ''என்ன பண்ணிட்டிருக்க?'' என்று கேட்டான்.

''உங்களுக்கு... எல்லாத்தையும் தயாரா எடுத்து வெச்சுட்டேன்.''

''ஓ. ஆமா ஏன் ஒரு மாதிரியா இருக்க?''

''இல்லையே...''

''என்னடா...'' என்று மேலும் மனைவியை நெருங்கியிருந்தவன் ''ம் என்ன?'' என்று கேட்டான்.

...............

அதற்குள் லேசாக நடுங்கிய மனைவியைத் தனது கைகளுக்குள் கொண்டு வந்திருந்தவன், அப்படியே அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.

ஒரு சில வினாடிகளுக்கு மேல் கணவனின் பார்வையை எதிர்கொள்ள முடியாது போய்க் கண்கள் சொக்கி நின்றவளை இறுக அணைத்திருந்தான் ஜெயவர்த்தன்.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ கணவனிடமிருந்து விலக வேண்டுமென்று ஸ்வேதாவுக்கோ, மனைவியை விடுவிக்க வேண்டுமென்று ஜெயவர்த்தனுக்கோ தோன்றியிருக்கவில்லை.

ஏன் அவனுடைய அணைப்பு மேலும் இறுகியது என்று தான் சொல்ல வேண்டும்.

வெகு நேரத்திற்குப் பிறகு அதுவும் மனமே இல்லாமல் மனைவியை விடுவித்திருந்தவன் நிற்க முடியாமல் லேசாகத் தள்ளாடியவளைப் பிடித்து நிறுத்தினான்.

''என்னடா?''

................

''நாம எங்காவது வெளிய போய்ட்டு வரலாமா?''

கணவன் கேட்க, சரி என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

''ம்கூம் நீ இப்படிப் பார்த்தா அப்புறம் என்ன சொல்லிக் குத்தமில்ல'' என்று மீண்டும் நெருங்கிய கணவனிடமிருந்து சற்று நன்றாகவே விலகியிருந்தவள், ''கிளம்பலாமே'' என்று திக்கித் திணறினாள்.

''சரிதான், காலம் இன்னும் நீண்டு விரிஞ்சிருக்கே'' என்று புன்னகையுடன் குளியலறைக்குச் சென்றான்.

கணவனின் அந்த வார்த்தைகளும், புன்னகையும் ஸ்வேதாவை மீண்டும் மனம் தடுமாறச் செய்திருந்தாலும் அதை முயன்று மறைத்துக் கொண்டு வேலையில் கவனத்தைச் செலுத்தினாள்.

செலுத்தினாள் என்பதை விட செலுத்த முயன்றாள் என்று சொல்வது சரியாக இருக்கும்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் கணவன் மனைவி இருவரும் கிளம்பிக் கீழே இறங்கி வரவும், வெளியே



சென்றிருந்த பாலகிருஷ்ணான் வீடு திரும்பவும் சரியாக இருந்தது.

''வாங்க மாமா.''

''என்ன மாப்ள, வெளிய கிளம்பத் தயாரா இருக்கீங்க போலிருக்கு?''

''ஆமாம் மாமா, நாங்க ரெண்டு பேரும் கொஞ்சம் வெளிய போய்ட்டு வரலாம்னு இருக்கோம்.''

''சரிதான் முதல்ல சாப்டுடலாமா?'' என்ற பாலகிருஷ்ணன், மகளிடம் ''டிபன் ரெடியான்னு பாருமா'' என்றார்.

''எல்லாம் ரெடியாயிடுச்சு டாடி, சாப்பிட உக்காரலாம்.''

தந்தையும் கணவனும் உணவருந்த வர, பரிமாறினாள் ஸ்வேதா.

''நீயும் உக்காந்துக்கோ'' என்ற கணவனிடம் ''இல்ல உங்களுக்குப் பரிமாறிட்டு அப்புறமா உக்காந்துக்கறேன்'' என்றாள்.

''அம்மா.''

''என்ன அமிர்தம்மா?''

''நீங்களும் உக்காந்துக்கோங்கமா, நான் வேணும்னா பரிமாற...''

மெதுவாகச் சொன்ன அமிர்தம்மாவிடம் ''இல்ல பரவாயில்ல'' என்று மறுத்து விட்டிருந்தவள் ''எனக்கு ஒரு கப் ஆரஞ்சு ஜூஸ் மட்டும் எடுத்துட்டு வாங்க'' என்றாள்.

மீண்டுமொரு முறையும் இருவருக்கும் பரிமாறி விட்டு, பிறகு தானும் அமர்ந்து கொண்டாள் ஸ்வேதா.

''உனக்கு நான் பரிமாறட்டுமா?'' என்று கேட்ட கணவனிடம் புன்னகையுடன் மறுத்து விட்டிருந்தவள், ''நானே எடுத்து வெச்சுக்கறேன் நீங்களும் அப்பாவும் எழுந்துக்கோங்க'' என்றாள்.

"நோ ஃபார்மாலிட்டிஸ் இனிமேல் எல்லாரும் ஒன்ணாவே உக்காந்துக்கலாம்" என்ற ஜெயவர்த்தன் "மெதுவா சாப்டுட்டு வா" என்று பாலகிருஷ்ணனுடன் எழுந்து கொண்டான்.

"எங்க மாமா ஸ்வேதாவோட பெரியம்மா, அத்தை யாரையும் காணல?"

"தங்கை பேமிலி நேத்து நைட் பத்து மணி ட்ரெய்னுக்குக் கிளம்பிட்டாங்க மாப்ள, அப்புறம் ஸ்வேதாவோட பெரியம்மாவும் காலைல நாலு மணிக்குக் கிளம்பிட்டாங்க."

"உங்ககிட்ட சொல்லிட்டுப் போறதா தான் இருந்தாங்க, நாந்தான் நான் சொல்லிக்கறேன்னு கிளம்பிக்கச் சொன்னேன்."

"சரிதான், ஸ்வேதாவோட அத்தை நைட்டே சொல்லிட்டிருந்தாங்க" என்று ஜெயவர்த்தன் சொல்ல, "நான் உங்ககிட்ட ஸ்வேதா சொல்லியிருப்பான்னு நினைச்சேன்" என்றார் பாலகிருஷ்ணன்.

எங்கே அவளைத் தான் பேச விட்டிருந்தால் அல்லவா.

அப்படியே சகஜமாகப் பேச்சுக் கொடுத்திருந்தாலும் அந்த அளவிற்கு மனைவி பேசியிருக்க மாட்டாளென்பது வேறு விஷயம்.

"எங்க மாப்ள எல்லாரும் கல்யாணத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்னாடியே வந்துட்டதாயிடுச்சுங்களே, விட்டிருந்தா நேத்து மண்டபத்துலிருந்து அப்படியே கூடக் கிளம்பியிருப்பாங்க. அந்த அளவுக்குக் குடும்பம், தொழில்னு எல்லாத்தையும் போட்டுட்டு வந்ததாச்சே."

"சரிதான் மாமா."

"ஸ்வேதா..."



"என்ன மாமா சொல்லுங்க?"

"இல்ல ஸ்வேதாவ அவங்க அம்மா இருந்து வளர்க்கல, அவளுக்கு நாலு வயசிருக்கும்போதே ஒரு விபத்துல என் மனைவி, அவளோட அம்மா தவறிட்டாங்க."

"மனசறிஞ்சு எந்தத் தப்பையும் ஸ்வேதா பண்ண மாட்டா, அந்த அளவுக்கு நல்ல விவரமான பொண்ணு, ஆனா தெரியாம ஏதாவது சின்னச்சின்ன..."

"நீங்க கவலையே படாதீங்க மாமா, உங்க பொண்ணுங்கறத விடவும் ஸ்வேதா என் மனைவி. அவளக் கண் கலங்காம ஏன் உங்ககிட்ட இருந்தத விடவும் கூட சந்தோஷமா வெச்சுட்டிருக்க வேண்டியது என் கடமை."

"ரொம்ப சந்தோஷம் மாப்ள, நீங்க நல்லா பார்த்துக்குவீங்கன்றதுல எனக்குத் துளியும் ஆட்சேபனையே கிடையாது. என்ன பெரிய குடும்பத்துக்குள்ள வந்து இருக்கப் போறா, எல்லாரையும் அட்ஜஸ்ட் பண்ணி நிறைய விட்டுக் குடுத்துப் போக வேண்டியதிருக்கும். போகப் போக ஸ்வேதாவுக்கே எல்லாம் தெரிஞ்சுடுன்னாலும் ஆரம்பத்துல ஏதாவது கருத்து வேறுபாடுகள் வரலாம். அதான்..."

"புரியுது மாமா ஸ்வேதா நல்ல பொண்ணுங்கறதால உங்க பயம் அவசியமில்லாதது. எல்லாத்துக்கும் மேல அங்க நம்ம வீட்லயும் அப்பிடிக் குறை சொல்லித் தப்புக் கண்டுபிடிக்கறவங்க யாருமில்ல பாருங்க."

"அது சரிதான் அது எனக்கே தெரியுமே மாப்ள. அப்புறம் அங்க நம்ம வீட்டுக்கு நாளைக்கு வந்து உங்க ரெண்டு பேரையும் மறுவீடு அழைச்சுட்டுப் போறதா, அங்க வீட்லிருந்து கொஞ்சம் முன்னாடி தான் கூப்புட்டு சொன்னாங்க."

''எங்கிட்டயும் பேசினாங்க மாமா. இந்தக் காலத்துல அப்படி நல்ல நேரம்னு சம்பிரதாயமெல்லாம் பாக்க வேண்டிய அவசியமில்ல தான்.''

''ஒரு விதத்துல நீங்க சொல்றது சரிதான், எல்லாத்தையும் பாத்துப் பாத்துப் பண்ணிட்டு அது மட்டும் ஏன் ஒரு குறையா இருக்கணும்னுதான் பாக்க வேண்டியிருக்கு மாப்ள.''

அதற்குப் பிறகு இருவரும் தொழிலைப் பற்றி சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

பாலகிருஷ்ணனின் அனுபவத்திற்கும், வயதிற்கும் ஜெயவர்த்தனின் தொழிலறிவைக் கண்டு அவரே வியந்து போனார் என்று தான் சொல்ல வேண்டும்.

அந்த அளவிற்கு அவர் சிரமப்பட்டு அனுபவத்தால் பயின்ற பாடங்களனைத்தையும் வெகு யதார்த்தமாகப் பேசியிருந்தான் ஜெயவர்த்தன்.

அந்தப் பேச்சிற்குப் பிறகு பாலகிருஷ்ணனுக்கு அவருடைய மாப்பிள்ளையின் மேலிருந்த நம்பிக்கையும், மரியாதையும் மேலும் பல மடங்கு அதிகமாயிருந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

# 9

சிறிது நேரத்தில் கம்பெனிக்கு செல்வதாக பாலகிருஷ்ணன் கிளம்பியிருக்க, கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

''என்னமா?''

''எங்கயோ வெளிய போய்ட்டு வரலாம்னு சொன்னிங்களே.''



''நீ சாப்டாச்சா?''

''ம்.''

சரியாக அதே நேரம் உள்ளே வந்த அந்த வீட்டின் கார் டிரைவர் ''மேடம்'' என்று அழைத்தான்.

அவனுடைய அழைப்பில் திரும்பி என்ன என்பதைப் போலப் பார்த்தாள்.

''நீங்க எந்தக் கார் எடுத்துட்டுப் போறீங்கன்னு தெரிஞ்சா அதத் தயாரா வைப்பேன்'' என்று ஸ்வேதா, ஜெயவர்த்தன் இருவரையும் பார்த்துக் கேட்டான்.

அவனுடைய கேள்வியில் திரும்பிக் கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

பிறகு உடனே ஏதோ தோன்றியவளாய் மீண்டும் திரும்பி டிரைவரைப் பார்த்தவள், ''வழக்கமா நான் எடுத்துட்டுப் போற காரையே ரெடி பண்ணிடுங்க'' என்றாள்.

முதல்நாள் மணமகள் வீட்டுக் காரிலேயே மணமகன் ஜெயவர்த்தனும் வந்திருக்க, அவனுடைய கார் அங்கே இருக்கவில்லை,

டிரைவர் கேட்ட உடனேயே ஏதாவது பதிலை சொல்லியிருக்கலாம் தான் என்றாலும், கணவனைக் கலந்து கொள்ளா விட்டால் அவன் ஏதாவது தவறாக எடுத்துக் கொள்வானோ என்னும் நோக்கில் தான் ஸ்வேதா அவனைப் பார்த்ததும்,

''சரிதான் மேடம், அப்படியே செஞ்சுடறேன்'' என்றுவிட்டு டிரைவர் அங்கிருந்து நகர, ''உன் கார்னு தனியா வேற ஒன்னு இருக்கா?'' என்று புன்னகையுடன் மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல, டாடியோட காரத் தவிர மத்த எல்லாக் காரையும் என்னோடதுன்னே

சொல்லலாம்'' என்று ஸ்வேதா இயல்பாகப் பேச, ''அதான் நானும் கேட்டேன்'' என்றான் ஜெயவர்த்தன்.

''ஆனா லேட்டஸ்டா வாங்கின கார் எப்பவுமே என்னோட காராயிடும். அந்த அர்த்தத்துல தான் நான் என் கார்னு சொன்னேன்'' என்று சிரித்தவளிடம்,

''மொத்தம் எத்தன கார் இருக்கு?'' என்று கேட்டான்.

''டாடியோட கார், கம்பெனி கார்னு எல்லாத்தையும் சேர்த்தா மொத்தம் பத்துக் காருக்கு மேல தான் வரும். ஆனா என்ன நாலஞ்சு கார் எப்பவும் கம்பெனிலயே தான் இருக்கும். கம்பெனி டிரைவர்ஸ் தான் ஓட்டிக்கிட்டும் இருப்பாங்க.''

''நீ கம்பெனிக்குப் போவியா?'' என்ற கணவனின் கேள்வி புரியாமல் ஸ்வேதா பார்க்க ''நீயும் பிஸினஸ் பாத்துக்குவியான்னு கேக்கறேன்'' என்றான்.

''டாடி விட்டாப் பாக்கலாம் தான். ஆனா எங்க...''

''ஏன் மாமா வேண்டாம்னு சொல்லிட்டாரா?''

''ம்கூம், அவரெல்லாம் கம்பெனிக்கு வந்து எல்லாத்தையும் பாத்துக்கோன்னு தான் எப்பவும் சொல்லுவார், ஆனா நாந்தான் போறதில்ல.''

''ஏன்?''

''டாடி பாக்க தான் ஸாஃப்ட் ஆனா ஏதாவது தப்பாயிருச்சுன்னா அவருக்கு ரொம்பக் கோபம் வந்துடும். அதோட அவர் டெஸிஸன் தான் முடிவா இருக்கணும்னு நினைப்பார். அதான் நான் கம்பெனிக்குப் போறதயே விட்டுட்டேன்.''

''ஏன் உனக்கு உன் டெஷிஸன் தான் எப்பவும் முடிவா இருக்கணுமா?''



''அச்சச்சோ அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல. பாராட்டலேன்னாலும் பரவாயில்ல பெரிய அட்வைஸ் மழை தான் கிடைக்கும்னா கட் பண்ணிக்கறது தானே மரியாதை.'' என்று தயக்கத்துடன் என்றாலும் பாவனையுடன் சொன்ன மனைவியின் பதிலில் சிரித்து விட்டிருந்தான் ஜெயவர்த்தன்.

''ஓ, அப்ப உனக்கு நல்லது சொல்லக் கூடாது. அதுலயும் அட்வைஸ் பண்ணினாப் புடிக்காது அப்படித்தானே?''

''அச்சச்சோ அப்படின்னு நான் சொன்னேனா?''

''மாமாவுக்குப் பிரமாதமான பிஸினஸ் மைண்ட்மா, அவருகிட்டக் கத்துக்க வேண்டியது நிறைய இருக்கு. அது சரி அப்படியில்லாம இந்த மாதிரி ஒரு நிலைக்கு வர முடியுமா என்ன?''

''இனி நீங்களுமா? சும்மாவே டாடி கூடப் பேச முடியாது இனி நீங்க இப்படியும் வேற சொல்லிட்டிங்கன்னா அப்புறம் அவ்வளவுதான்...''

''பரவாயில்லையே நீ இந்தளவுக்குப் பேசுவியா?'' என்ற கணவனின் ஆச்சரியமான கேள்வியில் ஸ்வேதாவிற்கு கூச்சமாகி விட்டிருந்தது.

''அடடா தெரியாமக் கேட்டுட்டேன், திரும்பவும் உங்களுக்குள்ள சுருட்டிக்காதீங்க மேடம்'' என்று சிரித்த ஜெயவர்த்தன், ''எப்பிடியோ எனக்கு பிஸினஸப் பாக்கறதுக்கு ஒரு ஸ்டாஃப் வேணும்னு நினைச்சேன் அழகான பிரமாதமான ஸ்டாஃப் கிடைச்சாச்சு'' என்றான்.

''அது யாரு?'' என்று கேட்ட ஸ்வேதாவுக்கு அதற்குப் பிறகுதான் கணவன் சொல்வது தன்னைத் தான் என்பது புரிந்தது.

''என்ன ஒண்ணும் பேச மாட்டேங்கற?''

''இதுல பேச என்ன இருக்கு? என்ன எடுக்க நீங்களே பயப்படாத போது எனக்கென்ன வந்ததாம்...''

''ஆனா ஒண்ணு. நானெல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டேன். எல்லா டெஷிஸனையும் நீயே எடுக்கலா மாக்கும்.''

''பாக்கலாம்.''

''எத?''

''சொல்ற மாதிரி செய்யறீங்களான்னு...''

''ஐயாவெல்லாம் சொல்றத அப்படியே செய்வே னாக்கும்.''

''அதத்தான் நானும் சொல்றேன். ஏதோ ஒரு ஆர்வத் துல சொல்லிட்டு அப்புறம் யோசிக்காதீங்க.''

மனைவியின் கேலியில் இப்பொழுது நன்றாகவே சிரித்து விட்டிருந்தவன் ''நீ எப்பவும் இப்படியே பேசினா எவ்வளவு நல்லாக்கும்!'' என்றான்.

''சரிதான், நீங்க நிச்சயம் பின்னாடி யோசிக்கத் தான் போறீங்க.''

என்னதான் ஒரு வேகத்தில் பேசி விட்டிருந்தாலும் அதற்குப் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டாள் ஸ்வேதா.

மீண்டும் யாரோ வருவதைப் போலிருக்கத் திரும்பிப் பார்த்தாள்.

அமிர்தம் வர என்ன என்பதைப் போலப் பார்த்தாள் ஸ்வேதா.

''உங்களுக்குக் குடிக்க ஏதாவது...''



''எனக்கு வேண்டாம்'' என்றவள் கணவனிடம் கேட் டுக் கொண்டு ''ஒரு கப் டீ மட்டும் கொண்டு வாங்க'' என்று அனுப்பினாள்.

மனைவியின் ஏவலுக்காக எண்ணற்ற வேலையாட்கள் தயாராக நின்றிருப்பதை மனதிற்குள் ஒரு வியப்புடன் கண்டான் ஜெயவர்த்தன்.

அதை மனைவியிடமே கேட்கவும் செய்தான்.

அதாவது மனைவியைப் பற்றிய அனைத்தையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன்.

ஒரு நல்ல தோழனாக சுவாரஸ்யமாகப் பேசிய கண வனிடம், தானும் தன்னை மறந்து இயல்பாகப் பேசத் தொடங்கி விட்டிருந்தாள் ஸ்வேதா.

தன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பிய கணவனின் ஆர்வமும் புரிந்தது.

அதே போலக் கணவனைப் பற்றிய அனைத்தையும் அறிந்து கொள்ளத் தானும் பெரும் ஆவல் கொண்டாள் ஸ்வேதா.

நமக்கே இவ்வளவு இருக்கும்போது பெரிய குடும்பத் திலிருந்து வந்த அவனுக்கு சுவாரஸ்யமாகச் சொல்ல எத்தனை விஷயங்களிருக்கும் என்றிருந்தது.

''என்ன சொல்லு?''

''என்னப் பத்தி மட்டும் எல்லாமே கேக்கறீங்க உங்களப் பத்தி ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறீங்க.''

''என்னப் பத்தி என்ன தெரிஞ்சுக்கணும் உனக்கு?''

''எல்லாமே தான்.''

''எல்லாமேன்னா?''

''உங்க ஸ்கூல் காலேஜ் டேஸ், அதுக்கப்புறம் எல் லாம் தான்.''

மனைவியின் வார்த்தைக்காக அனைத்தையும் சொன்னான் ஜெயவர்த்தன்.

அவன் சாதாரணமாகத்தான் சொன்னான் என்றாலும் ஸ்வேதாவுக்கு அதில் மிகுந்த சுவாரஸ்யம் ஏற்பட்டு விட்டிருந்தது.

மேலும் மேலும் அனைத்தையும் விளக்கமாகக் கேட்டுக் கொண்டாள்.

அதிலும் தன்னைப் போல ஒற்றையாளாக நின்று விடாததால், கணவனின் இளம் பிராயத்து நாட்கள் மிகவும் சந்தோஷம் நிறைந்ததாக இருந்ததையும் தெரிந்து கொண்டாள்.

அனைத்திற்கும் மேலாக சிறு வயது முதல் இன்று வரை எப்பொழுதும் கணவனின் வார்த்தைகளே மேலோங்கியிருப்பதையும் அவன் சொல்லாமலே உணர்ந்து கொள்ள முடிந்தது.

அது சரிதான்.

யாரையும், எதற்காகவும் அவ்வளவு விரைவில் பாராட்டி விடாத தந்தையே கணவனுக்குப் புகழாரம் சூட்டும் பொழுது பிறகு அதிலென்ன சந்தேகமிருக்க முடியுமென்று நினைக்கத் தோன்றியது.

அந்தப் பேச்சிற்குப் பிறகு கணவனிடம் சற்று இயல்பாகப் பேசத் தொடங்கி விட்டிருந்தாள் ஸ்வேதா,

அதாவது முன்னைக்கு சற்றுப் பரவாயில்லையென்று சொல்லலாம்.

அதே நேரம் பாலகிருஷ்ணனிடமிருந்து தனது மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினான் ஜெயவர்த்தன்.



சில வினாடிகள் பேசிவிட்டு மொபைலை வைத்திருந்தவன், ''கம்பெனிக்குப் போய்ட்டு வரலாமா?'' என்று கேட்டான்.

மனைவி யோசிப்பதைப் பார்த்தவன், ''நான் இருக்கேன் தைரியமா வா'' என்றான்.

கணவனின் கேலி புரிய, ''சரிதான் அந்த தைரியத்துல வேணும்னா வரலாம்'' என்றாள் ஸ்வேதா,

பணக்காரப் பெண்ணாயிற்றே விட்டுக் கொடுத்து நடந்து கொள்வாளா என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு, இப்பொழுது அந்த பயம் முற்றிலும் காணாமல் போயிருந்தது.

வேலைக்காரர்கள் முதல் அனைவரையும் மனைவி மிகவும் மரியாதையுடன் நடத்தியதே அதைப் புரிந்து கொள்ளப் போதுமானதாயிற்றே.

அது மட்டுமல்லாது இளகிய சுபாவம் கொண்ட தனது மனைவியால் அவ்வளவு எளிதாக யாரையும் புண் படுத்திவிட முடியாது என்பதிலும் அவனுக்குத் துளியும் சந்தேகமிருக்கவில்லை.

கணவனுடன் தங்களுடைய கம்பெனிக்கு சென்ற ஸ்வேதாவுக்கு அந்த அனுபவம் மிகவும் இனிமையானதாகவும் பிடித்தும் இருந்தது.

அந்த அளவிற்குத் தங்களுடைய கம்பெனியையும், தொழிலையும் கணவனுக்கு அறிமுகப் படுத்துவதைப் பெருமையாக உணர்ந்தாள்.

மதியம் வரை கம்பெனியிலேயே இனிமையாகப் பொழுது கழிய, அதற்குப் பிறகு புது மணமக்கள் இருவரும் அப்படியே வெளியே சென்று விட்டு இரவு தான் வீடு திரும்பினர்.

# 10

ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது போல மறு நாள் காலையிலேயே கணவனுடன் தனது புகுந்த வீட்டிற்குப் பயணமானாள் ஸ்வேதா.

ஏதோ அனைத்துமே கை விட்டுப் போவது போல ஒரு உணர்வு தோன்றி அவளைக் கண்கள் கலங்கச் செய்திருந்தன.

அந்த நிலையில் மகளைப் பார்த்த பாலகிருஷ்ணனுக்கும் கண்ணோரம் கரித்துக்கொண்டு வர, மற்றவர்கள் அறியாமல் அதை நாசூக்காகத் துடைத்துக் கொண்டார்.

தந்தை மற்றும் மகளின் மனம் புரிய, இருவரையும் முக்கியமாக பாலகிருஷ்ணனை சமாதானப்படுத்தினான் ஜெயவர்த்தன்.

''முடிஞ்ச அளவு வாரா வாரம் வந்துட்டுப் போங்க மாப்ள.''

''நிச்சயம் முயற்சி பண்றோம் மாமா, நினைச்சா நீங்களும் வரலாம். அதோட நீங்களே இப்படி வருத்தப்பட்டா அப்புறம் ஸ்வேதாவுக்கு எப்படியிருக்கும் சொல்லுங்க.''

''அது சரிதான்'' என்றவர், மகளுக்கு சமாதானம் சொல்லிச் சிரித்த முகத்துடன் சகல சம்பிரதாயங்களுடனும் அவளது கணவனோடு புகுந்த வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.



ஸ்வேதாவும் ஜெயவர்த்தனும் அவர்களுடைய வீட்டை வந்தடைந்தபோது மதிய நேரமாகி விட்டிருந்தது.

வீட்டு உறுப்பினர்கள் மட்டுமே இருந்தாலும் அதுவே பார்க்க ஜேஜே வென்றிருப்பதைக் கண்டாள்.

''வாடாம்மா, அப்பா நல்லார்க்காரா?''

புன்னகையுடன் முன்னே வந்து மருமகளை வரவேற்றார் காஞ்சனா.

''நல்லார்க்கார் அத்தெ, நீங்க எல்லாரும் நல்லார்க்கீங்களா?''

''எல்லாரும் நலம்மா'' என்று ஸ்வேதாவைத் தன்னுடன் வீட்டிற்குள் அழைத்து வந்தவர், ''வாம்மா உக்காரு'' என்றார்.

''பரவாயில்ல அத்தெ'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ''என்ன மேடம் எங்ககிட்டெல்லாம் பேச மாட்டீங்களாக்கும்'' என்று வந்தாள் அந்த வீட்டின் பெரிய மருமகள் பத்மினி.

''நல்லார்க்கீங்களா?''

''ஏதோ இருக்கோம், அப்புறம் உங்க வீட்ல இருந்து கிளம்பி வர மனசு வரலையாக்கும்?''

''அப்படியெல்லாம் இல்லையே, இன்னைக்கு தான் நல்ல நேரம்னு பெரியவங்க எல்லாரும் சொன்னதா அப்பா சொன்னார்.''

''அதெல்லாம் சரிதான், ஆனா நாங்க எல்லாரும் வந்து உங்கள அழைச்சுட்டு வரலாம்னு இருந்தோம். அதுக்கும் வேண்டாம்னு சொல்லிட்ட, ஏன் நாங்கெல்லாம் உங்க வீட்டுக்கு வரக் கூடாதா?''

''அச்சச்சோ அப்படியெல்லாமில்லையே...''

''இல்ல நீதான் எங்களையெல்லாம் வரவேண்டாம்னு சொல்லிட்டயா?''

''ம்கூம், அவரு தான் எதுக்கு எல்லாருக்கும் சிரமம் நாமளே கிளம்...''

''சரிதான் உன் வீட்டுக்காரர் ஒண்ணு சொல்லிட்டா அத இங்கயே மீற மாட்டாங்க. இனி நீ சொல்றதா நடந்துடப் போகுது?''

''வாவ் அண்ணி!''

''வா லாவண்யா, எப்படியிருக்க?''

''நான் நல்லார்க்கேன் அண்ணி, நீங்க எப்படி இருக்கீங்க? முதல்ல எப்ப வந்தீங்க? நின்னுட்டிருக்கறதப் பாத்தா இப்பதான் வந்திருப்பீங்கன்னு நினைக்கறேன் வாங்க முதல்ல வந்து உக்காருங்க.''

''ஒவ்வொன்னாக் கேளு, பாவம் அவளே புது இடத்துல ஸ்டன்னாகி நின்னுட்டிருக்கா'' என்று வந்தாள் அந்த வீட்டின் இரண்டாவது மருமகள் இந்துமதி.

''சரிதான், அண்ணிங்க சொல்ற மாதிரி ஏன் நின்னுட்டே இருக்கீங்க முதல்ல வந்து உக்காருங்க அண்ணி'' என்று ஸ்வேதாவின் கைப்பிடித்து அழைத்து வந்து சோபாவில் அமர வைத்தவள், பிறகு தானும் அருகில் அமர்ந்து கொண்டாள்.

''நான் உங்க வீட்டுக்குக் கிளம்பி வரலாம்னு எவ்வளவு ஆசையா இருந்தேன் தெரியுமா அண்ணி?''

''பரவாயில்ல விடுங்க அண்ணி, அண்ணா வேம்டானு சொல்லிட்டதுக்கு நீங்க என்ன பண்ணுவீங்க'' என்றாள்.

''அப்படின்னு தெரியுமா உனக்கு? ஒருவேள வேண்டாம்னு சொன்னது நானா இருந்தா?''

''ம்கூம், சான்ஸே இல்ல. யாரு எப்படின்னு தெரியாதா அண்ணி?''



இந்த சிறு பெண்ணிற்குத் தெரிந்தது கூட மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லையே என்று ஸ்வேதாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தெரியவில்லையா அல்லது தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லையா.

சிறிது நேரத்தில் வந்த லாவண்யாவின் தந்தையும், மற்ற இரு அண்ணன்களும் ஸ்வேதாவிடம் அவர்களாகவே வந்து பேசினர்.

பதிலுக்குத் தானும் புன்னகையுடன் நன்றாகப் பேசினாள் ஸ்வேதா.

''இது உன் வீடுமா, நீ அங்க அப்பா வீட்ல எப்படி இருந்தியோ அதவிடக்கூட உரிமையோட சந்தோஷமா இங்க இருக்கலாம். அங்க இருக்கற வசதிகள் எல்லாமே இங்கயும் இருக்கும்னு சொல்லிட முடியாதுன்னாலும், மத்தபடி ஏதாவது குறைகள் இருந்தா தயங்காமக் கேளு.''

''சரிதான் மாமா.''

மூத்த மருமகள்கள் இருவரையும் விடக் கூட ஸ்வேதா சொந்தம் வைத்து அழைத்தது, ராஜேந்திரனுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்திருந்தது.

''எவ்வளவு யதார்த்தம், இப்பிடித்தான் இருக்கணும்மா'' என்று மனதாரப் பாராட்டி விட்டுப் போனார்.

அவர் அங்கிருந்து நகரவும், அவ்வளவு நேரமும் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்த பத்மினியும் இந்துமதியும் ''பரவாயில்லையே எல்லார்கிட்டயும் நல்ல பேர் வாங்கிடுவ போலத்தான் தெரியுது'' என்றனர்.

அதனால் பத்மினியே மீண்டும் ''அவ நல்ல பேர் வாங்கினாத் தப்பில்ல ஆனா நாம ரொம்ப மோசமாயிடுவோமே'' என்று சொல்ல, ''சரிதான் விடுங்கக்கா

இன்னைக்கு தான பாவம் வந்திருக்கா'' என்றாள் இந்துமதி.

அவர்கள் பேசுவது மிகவும் புதுமையாக இருந்தது ஸ்வேதாவுக்கு.

அதெப்படி தன்னைப் பற்றி, அதுவும் தனக்கு எதிரிலேயே நின்று கொண்டு, இப்படிக் கருத்து பரிமாறிக் கொள்ளவும், சிரித்துக் கொள்ளவும் அவர்களால் முடிகிறதென்று ஆச்சரியமாகவும்,

''ஸ்வேதா.''

தன்னை அத்தை அழைக்க எழுந்து சென்று ''சொல்லுங்க அத்தை'' என்றாள்.

''சாப்பாடு ரெடிமா, எல்லாரையும் கூப்புட்றியா? அதுக்கு முன்னாடி பத்மினிய வரச் சொல்லிடேன்.''

''இதோ சொல்லிட்றேன் அத்தை'' என்றவள் நேராக பத்மினியிடம் வந்தாள்.

''என்ன விட்டா எங்களையெல்லாம் மிஞ்சிடுவ போலிருக்கு?''

அப்படிக் கேட்ட பத்மினியை புரியாமல் பார்த்தாள் ஸ்வேதா,

''உன்ன விட்டு என்னக் கூப்புடச் சொல்ற அளவுக்கு வந்துட்டாங்க போல?''

இதில் என்ன இருக்கிறது,

இதுவே இவர்களை முதலில் அழைத்திருந்தால் இவர்களிடம் தன்னை அழைத்து வரச் சொல்லி அனுப்பியிருப்பார்களாய் இருக்கும்.

பெரியவர்கள் ஒரு வேலை சொன்னால் அதைச் செய்ய வேண்டியது தானே, அதில் நீ நான் என்ற பாரபட்சமெல்லாம் எதற்கு,



பத்மினி பேசும் விதம் மனதிற்கு சரியாகப் படாவிட்டாலும் கூட, ஸ்வேதா அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

சிறிது நேரத்தில் அனைவரும் மதிய உணவிற்கு வந்து அமர, என்ன மறுத்தும் விடாமல் ஸ்வேதாவை அவளுடைய கணவன் ஜெயவர்த்தனுடன் அமர வைத்து விட்டிருந்தார்கள்.

அதற்கான முக்கிய பங்கு வகித்தது லாவண்யா என்று தான் சொல்ல வேண்டும்.

தாய் ஒரு வார்த்தை சொல்லியிருக்க அதையே பிடித்துக் கொண்டு, வலுக்கட்டாயமாக ஸ்வேதாவைத் தனது அண்ணனுடன் அமர வைத்து அருகில் தானும் அமர்ந்து கொண்டாள்.

முதலில் எப்படியோ, ஆனால் லாவண்யாவும் அருகில் அமர்ந்து கொண்டதற்குப் பிறகு ஸ்வேதாவுக்கு எதுவும் வித்யாசமாகத் தெரியவில்லை.

உணவின் ருசி பிரமாதமாக இருந்தாலும் ஏனோ ரசித்து உண்ண முடிந்திருக்கவில்லை.

சுற்றியிருப்பவர்கள் அனைவரும் தன்னையே பார்க்கிறார்களோ எனும் எண்ணத்தில் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடியாமல் தவித்தாள்.

சிறிது நேரத்தில் மதிய உணவு முடிய, தனது அத்தையுடன் சேர்ந்து ஒதுக்கி வைப்பதில் உதவினாள்.

''அண்ணி.''

''என்ன லாவண்யா?''

''என்ன பண்ணிட்டிருக்கீங்க?''

''சும்மாதான் இருக்கேன் என்ன சொல்லு?''

''தோட்டத்துக்குப் போய்ட்டு வரலாம் வர்றீங்களா?''

''ஓ. தாராளமா'' என்ற ஸ்வேதா சில நிமிடங்களில் லாவண்யாவுடன் தோட்டத்திற்குக் கிளம்பி விட்டிருந்தாள்.

''வாவ் உங்க தோட்டம் பிரமாதம் லாவண்யா, அதுல யும் வீட்ல இருந்து ரொம்பவும் பக்கம் போல?''

''ம், டென் மினிட்ஸ் வாக் அவ்வளவுதான்.''

''நீங்க எல்லாரும் தினமும் தோட்டத்துக்கு வந்துடு வீங்க இல்ல?''

''ம்கூம். அம்மா அப்பா தினமும் வருவாங்க. அதுக் கடுத்து நான், பெரியண்ணா அண்ணிங்க எல்லாரும் எப்பவாவது. உங்க வீட்ல ம்கூம்.''

''ஏன்?''

''அவருக்கெங்க அண்ணி பிஸினஸ் அது இதுன்னு நேரமே இருக்காது. கட்டாயம் போக வேண்டிய இடங்களுக் கும். மத்தவங்க எதிர்பாக்கற இடங்களுக்கும் ஒரு நாளும் போகாம இருக்க மாட்டார். ஆனா மத்தபடி ம்கூம்...''

''ஏன் வீட்லயே கூட ஒண்ணு நேரத்துல எழுந்தா சின்ன அண்ணாவப் பாக்கலாம், இல்ல லேட் நைட் முழிச் சிருந்தாப் பாக்கலாம். எப்பவும், எந்நேரமும் அவருக்கு பிஸினஸ் தான் ஃபர்ஸ்ட்.''

''அப்படின்னு உங்கிட்ட சொன்னாரா?''

''ஏன் சொன்னா தானா? சரிதான் நீங்க இப்பதான வந் திருக்கீங்க, போகப் போகத்தான் உங்களுக்கும் எல்லாம் புரியும்.''

பயப்படுத்துகிற பாவனையில் லாவண்யா சொன்னது ஸ்வேதாவிற்குப் புன்னகையை வரவழைத்திருந்தது.

தனது தந்தையை விடவுமா என்றிருந்தது.



எத்தனை எத்தனையோ நாட்கள் எண்ணிடலங்கா விசேஷங்களுக்குத் தந்தை உடன் வருவாரென்று நம்பியிருந்து கடைசியில் ஏமாற்றத்துடன் முடிந்த அந்த நிமிடங்களை அவ்வளவு விரைவில் மறந்து விட முடியுமா என்ன?

ஆனால் தந்தையோ அதற்குப் பிறகும் வந்து கூலாக ஸாரி ஒன்றைக் கேட்டு முடித்துக் கொண்டு விடுவாரே.

அதுவும் கூட சம்பிரதாயத்துக்குத்தான்.

அதில் வருத்தமோ, ஏன் லேசான குற்ற உணர்வும் கூட இருக்காதே.

அதற்கு மேலும் இந்த மாதிரி ஒன்றுமில்லாததற் கெல்லாம் என்னை எதிர்பார்த்தால் அப்புறம் இதுதான் கதி என்பதைப் போலத் தான் அவருடைய பேச்சு இருக்கும்.

என்னதான் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் கணவன் தந்தையைப் போலக் கிடையாது என்றே தோன்றியது.

தந்தையைப் போல இருக்கக் கூடாது என்பதில் உறுதி யாகவும் இருந்தாள்.

சகல சவுகர்யங்களோடு வீடு நிறைய ஆட்களிருந்தும் உண்மையான அக்கறையுடன் பேச ஒரு சொந்தமில்லா மல் தான் பட்ட சிரமம் தனக்குத் தானே தெரியும்.

தங்கக் கம்பிகள் என்றாலும் சிறை சிறை தானே.

தந்தையைப் பொறுத்தவரை அவர் ஓய்வாக இருக்கும் நேரத்தில் வேண்டுமானால் மேலும் சில நிமிடங்கள் பேசலாம், அதில் ஒன்றும் தவறில்லையென்று நினைப் பவராயிற்றே.

அதற்கு மேல் வேண்டுமானால் ஏதாவது வேண்டுமா சொல் என்பார்.

பணம் எவ்வளவு வேண்டுமென்று கேட்டு அதிலொரு அதிகாரத்தைக் காட்டுவார்.

தொழில் தொழிலென்று அதிலேயே குறியாக இருந்து விடாமல் உனக்காக எவ்வளவு செய்கிறேன் பார் என் பதைப் போலத்தான் அவருடைய பேச்சு இருக்கும்.

தந்தையின் அந்த அணுகு முறையில் இருக்கும் நல்ல மனநிலையும் கெட்டுப் போவதோடு, தேவையும் மறந்து போய்க் கடைசியில் விரக்தியே மிஞ்சி நிற்கும்.

மகளின் மனதைத் தான் இவ்வளவு சிரமப்படுத்து கிறோமா என்பது மட்டும் தெரிந்தால் ஒருவேளை இப்படி யெல்லாம் நடந்து கொள்ள மாட்டாரோ என்று எத் தனையோ முறை மனதிற்குள் நினைத்து வருத்தப்பட் டிருக்கிறாள் ஸ்வேதா.

தானும் தான் எத்தனை வருடங்கள் தனிமையில் கழித்திருக்கிறோம், எத்தனை எத்தனை நாட்கள் கண் ணீரால் தலையணையை நனைத்திருக்கிறோம் என்பதை நினைத்துப் பார்த்த ஸ்வேதாவுக்கு ஆச்சரியமாகக் கூட இருந்தது.

இந்த வாழ்க்கை தான் இப்படி, திருமணத்திற்குப் பிற காவது இந்தத் தனிமை தவம் மாற வேண்டும், கணவன் தன்னுடைய சிறு சிறு உணர்ச்சிகளுக்கும் மதிப்புக் கொடுத்துத் தன்னை உயிராய் நேசிக்க வேண்டுமென் றெல்லாம் ஏங்கியதும்,

ஏன் அப்படி மட்டும் இல்லாமல் போய் விட்டால் என்ற எண்ணமே கூட தன்னை எந்த அளவிற்கு மனதளவில் நடுங்க வைத்திருக்கிறது என்பதும்,

ஏனோ தனது கணவனை நினைத்த ஸ்வேதா மனதிற் குள் பெருமையாக உணர்ந்தாள்.



சிறுசிறு விஷயங்களிலும் கூட அனைவரிடமுமே எவ்வளவு அக்கறையுடன் நடந்து கொள்கிறான்.

''என்ன அண்ணி யோசனை பலமா இருக்கு?''

''முழுக்கவே தென்னந் தோப்பு போல?''

''சரிதான் அண்ணி, ஊடு பயிரா முருங்கை பயிரிட்டிருக் கலாம். ஆமா உங்களுக்கு விவசாயத்தப் பத்தியெல் லாம் கூடத் தெரியுமா?''

''ம், ஓரளவு தெரியும். அப்பாவுக்கும் தோட்டம் இருக்கு லாவண்யா, எப்பவாவது போவோம்.''

''அடடா, அப்ப நான் உங்ககிட்டே எதயும் சொல்லி பந்தா விட முடியாது.''

''ம்கூம், நீ நினைக்கற அளவுக்கெல்லாம் எனக்கு ஒண்ணும் தெரியாதுமா.''

லாவண்யாவைப் போலவே அவளுடன் பேசுவதும் மிகவும் பிடித்திருந்தது ஸ்வேதாவுக்கு.

சிறுபிள்ளையைப் போல வெகுளித்தனமாக இருந்த அவளுடைய பேச்சு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத் திருந்தது.

மரம் செடி கொடிகளின் பசுமையும், தென்றல் காற்றின் இதமும் மனதை மிகவும் லேசாக்கியிருக்க தன்னை மறந்து அவற்றில் லயித்துப் போனாள்.

''சரி அண்ணி நான் கிளம்பட்டுமா?''

''எங்க?''

''வீட்டுக்கு தான்.''

''அப்ப நான்?''

''ஜெய் அண்ணா வர்றாராம்.''

''எதுக்கு?''

''தெரியலையே அண்ணி.''

''ஏன் கிளம்பற லாவண்யா இரேன்.''

''டவுனுக்குக் கிளம்பணுமாம் அண்ணி, ஏதோ வேலையாம்.''

''ஓ, ஆமாம் லாவண்யா, அத்தைகூட சொன்னாங்க ஏதோ இந்த வருஷத்துக்குத் தேவையான பருப்பு மளிகையெல்லாம் போய் எடுத்துட்டு வரணும்னு...''

''ஆமாம் அண்ணி அதே தான், அவங்களும் ஃப்ரஷ்ஷா எல்லாத்தையும் எடுத்து வெச்சுட்டு ஒரு வாரமாக் கூப்டுட்டிருக்காங்க. கல்யாண பிஸில தான் போக முடியல அண்ணி.''

''ஓ.''

''ஏன் அண்ணி, அண்ணா இப்ப வந்துடுவார் என்று லாவண்யா சொல்லிக் கொண்டிருக்கும் போதே வெளியே பைக் சத்தம் கேட்டது.

''இதோ அண்ணாவே வந்துட்டார் அண்ணி நான் கிளம்பறேன்'' என்று அவள் இரண்டு அடிகள் எடுத்து வைத்திருக்க, அதே நேரம், உள்ளே வந்திருந்த ஜெயவர்த்தன் ''வா நான் கொண்டு வந்து விட்டுட்டு வர்றேன்'' என்று தங்கையை அழைத்தான்.

''இல்லண்ணா நானே போய்க்கறேன்.'' என்ற லாவண்யா ''வர்றேண்ணா, பை அண்ணி'' என்று கிளம்பியே விட்டிருந்தாள்.

தங்கை கிளம்பியதும் தன்னைப் பார்த்த கணவனைத் தானும் பார்த்தாள் ஸ்வேதா.

''என்ன பண்ணிட்டிருக்க?''

''சும்மாதான் இருக்கேன்.''



''தோட்டம் பிடிச்சிருக்கா?''

''ம்.''

''நான் இப்ப வந்தது தான் பிடிக்கல, அப்பிடித்தானே?''

''ம்கூம் இல்லையே...''

''பின்ன?''

............

''என்னடா?'' என்றவன் மனைவியின் கையைப் பிடித்து அருகில் இழுத்திருந்தான்.

அதை எதிர்பார்த்திருக்காத ஸ்வேதா கணவனின் மேலேயே வந்து விழுந்தாள்.

விழுந்தவள் சுற்றுப் புறம் உணர்ந்து அடுத்த விநாடியே கணவனிடமிருந்து விலகியும் இருந்தாள்.

''என்னாச்சு?''

''யாராவது பார்த்தா...''

''பாக்கட்டுமே.''

என்ன இது, வேண்டுமென்றே சொல்கிறானோ.

''என்னடா...?''

............

''வா இங்க வந்து உக்காரு'' என்ற கணவனின் அழைப்பில் அங்கிருந்த மரத்தடி திண்ணையில் கணவனுக்கு சற்றுத் தள்ளியே அமர்ந்தாள்.

''எதுக்கு இந்த டிஸ்டன்ஸ்?''

''யாராவது...''

வெட்கத்தில் மனைவியின் முகம் இரத்தமென சிவந்து விட்டிருக்க, சிரிப்பு தான் வந்தது ஜெயவர்த்தனுக்கு.

''என்ன நீ'' என்று அவன் மனைவியை நெருங்கி அமர்ந்திருக்க, உடனே எழுந்து விட்டிருந்த ஸ்வேதா

''இங்க மொத்தம் எத்தன ஏக்கர் இருக்கு?'' என்று அதுதான் மிகவும் முக்கியம் போல. அக்கறையுடன் கேட்டாள்.

மனைவி பேச்சை மாற்றிய விதத்தில் சிரிப்பு வந்திருக்க, ''ஏன் எதுக்குக் கேக்கற?'' என்று கேட்டான்.

''சும்மா தான் கேக்கறேன்.''

''பத்து ஏக்கர்.''

''ஓ. ஆனா பாக்க இன்னும் நிறைய இருக்கற மாதிரி தெரியுதே.''

''சரிதான், கண்ணுக்குத் தெரியற தூரம் வரைக்கும் இருக்கு. ஆனா பக்கத்துத் தோட்டத்துக்காரங்களுடையது.''

கணவனின் கேலியில் சிரித்தாள் ஸ்வேதா.

''ஆமா நீயும், லாவண்யாவும் என்ன பேசிட்டிருந்தீங்க? அதுவும் லாவண்யா பேச ஆள் கிடைச்சா அறுத்துத் தள்ளிடுவாளே.''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே.''

''சரிதான், அப்ப நீங்க என்ன பேசிக்கிட்டிங்கன்னு நான் தெரிஞ்சுக்கக் கூடாது அப்படித்தான?''

''முதல்ல உக்காரலாமே'' என்ற கணவனின் அருகில் லேசான தயக்கத்துடன் வந்து அமர்ந்தாள் ஸ்வேதா.

''இங்க நம்ம வீடு பிடிச்சிருக்கா?''

''ம்.''

''எவ்வளவு பிடிச்சிருக்கு?''

''ரொம்ப.''

''என்னப் பிடிக்கற அளவுக்கா?''

.........

''என்னமா?''



.........

''உங்கூடப் பேசலாம்னு எவ்வளவு ஆசையா வந்தேன் தெரியுமா?''

கணவனின் ஆதங்கம் கலந்த அந்த வார்த்தைகளில் ''சும்மா பொதுவான விஷயங்களைப் பத்திதான் பேசிட்டிருந்தோம்'' என்று விவரம் உறைத்தாள் ஸ்வேதா.

''ம், அப்புறம்?''

கணவனின் அன்பான அணுகு முறையில் தன்னை மறந்து அனைத்தையும் சொன்னாள்.

சிறு வயது முதலே தான் தனிமையில் வாடியது. அன்புக்காக ஏங்கியது என இன்னும் அனைத்தையும் நீண்ட காலமாகத் தனது மனப் பெட்டகத்தில் பூட்டி வைத்திருந்தவற்றையெல்லாம் கொட்ட ஒரு வடிகால் தேவைப்பட்டதோ என்னவோ ஒன்று விடாமல் அனைத்தையும் சொல்லித் தீர்த்தாள்.

# 11

வெளியிலிருந்து பார்க்கும் பொழுது செல்வச் செழிப்பில் திளைத்துக் கொண்டிருப்பதாக அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கும் மனைவி, உள்ளுக்குள் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கிறாளென்பதை நினைக்கும்பொழுது நெஞ்சு உருகிப் போய் விட்டிருந்தது, ஜெயவர்த்தனுக்கு.

அது மட்டுமா.

அதனாலேயே அவளுக்குள் சுருட்டிக் கொண்டு விட்டாள் போலல்லவுமா தெரிகிறது.

தொடர்ந்து அதே போக்கில் யோசித்தவனுக்கு அதுவும் இடித்தது.

அப்படித் தானென்று ஒரேயடியாகவும் சொல்லி விடுவதற்கில்லையே.

தன்னைத் தவிர மற்ற அனைவரிடமுமே இயல்பாகத் தானே நடந்து கொள்கிறாள்.

தன்னிடம் மட்டும் ஏன்...

திரும்பி மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

அவள் எங்கோ பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அதாவது சுற்றுப் புறத்தை ரசித்துக் கொண்டிருந்தாள்.

இனி அவளை மீண்டும் பேச வைக்கத் தான் முயன்றாக வேண்டும்.

ஏதோ தோன்ற "கிளம்பலாமா?" என்றான்.

கணவனின் கேள்வியில் ஏமாற்றத்துடன் அவனைத் திரும்பிப் பார்த்தாள் ஸ்வேதா.

"என்ன?"

"இன்னும் கொஞ்ச நேரம் இங்கயே இருக்கலாமே ப்ளீஸ்."

"சரிதான், ஆனா எனக்கு மரம் செடி கொடிகள் கூடவெல்லாம் பேசத் தெரியாது."

"ஏன் நான் இருக்கேனே" என்று சொல்லி விட்ட பிறகு தான் அப்படி சொன்னதையே உணர்ந்தாள்.

"அடடா, என் காதுல ஏதோ தேன் மழை பொழிஞ்ச மாதிரி இருந்ததே என்ன அது?"

மேலும் சிறிது நேரம் பொதுவான விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கணவன் மனைவி இருவரும் கிளம்பியிருந்தனர்.



அவளாகவும் ஒன்றும் பேசாமல், தன்னுடைய கேள்விகளுக்கும் பட்டும் படாமல் பதில் சொன்ன மனைவியிடம் அதற்கு மேல் பேச ஜெயவர்த்தனுக்கு ஒன்றும் இருக்கவில்லை.

அவனைப் பொறுத்தவரை மனைவியிடம் நிறைய எதிர்பார்த்தான்.

தன் அளவிற்கு இல்லா விட்டாலும் அதில் பாதியேனும்,

ஆனால் எங்கே...

திடீரென்று கிளம்பலாமென்று எழுந்து விட்டிருந்த கணவனின் செய்கை புரியாமல், மீண்டும் கேட்கவும் மனம் வராமல் தானும் எழுந்து விட்டிருந்தாள் ஸ்வேதா.

அவர்கள் வீடு வந்து சேர்ந்த போது மாலை மணி நான்காகி இருந்தது.

லாவண்யா அத்தை மாமாவுடன் வெளியே கிளம்பிச் சென்றிருக்க, மற்றவர்களும் எங்கே சென்றார்களோ வீடு வெறுமையாக இருந்தது.

என்ன செய்வதென்று தெரியாமல் சிறிது நேரம் அங்கிருந்த நாளிதழை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்த ஸ்வேதா பிறகு சென்று கைகால் முகம் சுத்தம் செய்து கொண்டு வந்து பூஜையறையில் விளக்கேற்றி வைத்தாள்.

தனது தந்தையிடமிருந்து மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினாள்.

பேசிவிட்டு வைக்கவும், அத்தையிடமிருந்து அழைப்பு வரவும் சரியாக இருக்க மீண்டும் அட்டெண்ட் செய்து பேசினாள்.

டேபிளின் மீது அனைத்து டிபன்களையும் செய்து எடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அத்தை சொல்ல, அதற்குப் பிறகு தான் அதைக் கவனித்தாள்.

டிபனுக்கு என்ன செய்வது, எதை செய்வது என்றெல்லாம் தயங்கிக் கொண்டிருந்தவளுக்கு அத்தை சொன்னது மிகுந்த நிம்மதியைக் கொடுத்திருந்தது.

தொடர்ந்து வந்த இரண்டு மணி நேரங்களில் ''சாப்பிடலாமா?'' என்று வந்த கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

''என்னமா?''

''இல்ல யாரையும் காணல?''

''எல்லாரும் வெளிய போயிருக்காங்க. வர லேட்டாகுமாம், நாம சாப்புட்லாம்.''

''நீங்க சாப்...''

''உக்காரு.''

கணவனின் அதட்டலில் உடனே அமர்ந்திருந்தாள் ஸ்வேதா.

பொம்மையைப் போல ஆட்டுவிக்கிறானே என்று நினைத்தவளுக்கு அவளையறியாமலேயே சிரிப்பு வந்திருந்தது.

சாப்பிடும் போதும் சரி, அதற்குப் பிறகும் சரி அவசியமின்றி ஏன் அவசியத்திற்குக் கூட ஒரு வார்த்தை பேசாத கணவனின் செய்கையில் இருந்த வித்யாசம் வெளிப்படையாகவே தெரிந்தது.

சாப்பிட்ட இடத்தைச் சுத்தம் செய்து, அனைத்தையும் டேபிளின் மீது ஒதுக்கி வைத்தாள்.

மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்த மனைவியைப் பார்த்தவனுக்கு அவளுடைய வீடுதான் நினைவிற்கு வந்தது.

மனைவியின் ஏவலுக்காக வேலைக்காரர்கள் தயாராகக் காத்திருப்பதும் அதற்கு மேல் மனைவி ஒரு வேலையைச்



சொல்லி விட்டால் அவர்கள் அதைத் தலையால் ஏந்திச் செய்வதும்,

ஏதோ சொல்ல வந்த மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''என்னமா?''

''எல்லாம் டேபிள் மேலயே இருக்கட்டுமா?''

''பின்ன, வேற என்ன பண்ண முடியும்?''

''இல்ல அவங்க வர லேட்டாயிடுச்சின்னா...''

''இப்பதான் போன் பண்ணினாங்க. மேக்ஸிமம் இன்னும் ஒரு மணி நேரத்துல எல்லாரும் வந்துடுவாங்க. ம் என்ன சொல்லு?''

''தோட்டத்துக்குப் போலாமா?''

''எதுக்கு?''

''அங்க இருக்கறது நல்லார்க்கு அதான்...''

''சரிதான் நாளைக்குப் பகல்ல லாவண்யாவக் கூட்டிட்டுப் போ அவளுக்கு ஒரு வாரம் காலேஜ் லீவு தான்.''

.............

''என்ன ஸ்வேதா?''

''இல்ல...''

''ம்.''

''இப்பப் போலாமே...''

இன்னும் கொஞ்சம் உரிமையுடன் மனம் விட்டுப் பேசினால் குறைந்து போய் விடுவாளாமா என்று ஜெயவர்த்தனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''ம், என்ன?''

''ப்ளீஸ்...''

''சரி கிளம்பு.''

"தேங்க்யூ."

சந்தோஷத்துடன் சொன்ன மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

"உங்களுக்கு பால்..."

"எடுத்துக்கோ. அங்கயே அடுப்பிருக்கு. குடிக்கும்போது சூடு பண்ணிக்கலாம்."

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் கணவன் மனைவி இருவரும் மீண்டும் தோட்டத்தை வந்தடைந்திருந்தனர்.

சாதாரணமாகவே நன்றாகப் பேசும் கணவன் அன்று தோட்டத்திற்கு வந்து சேர்ந்து வெகு நேரமாகி விட்ட பின்னரும் கூடத் தன்னைக் கண்டு கொள்ளாதது வேதனையைக் கொடுத்திருந்தது.

கணவனின் அன்பான வார்த்தைகளுக்காக மனம் ஏங்கியது.

சரிதானென்று வெளியே வந்தவள் அங்கு வாசலில் வைக்கப்பட்டிருந்த பூச்செடிகளை மின்சார விளக்குகளின் வெளிச்சத்தில் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள்.

அதுவும் சிறிது நேரத்தில் போரடித்து விட்டிருக்க மீண்டும் வீட்டிற்குள் வந்தாள்.

கணவன் டி.வி.யில் மும்முரமாகி விட்டிருக்க அல்லது தனக்குத் தான் அப்படித் தோன்றியதோ,

தானும் சென்று கணவன் அமர்ந்திருந்த சோபாவில் அமர்ந்தாள்.

அருகில் அமர மனம் விரும்பினாலும் அதை செயல் படுத்தும் துணிவு அவளுக்கு இருக்கவில்லை.

தான் இந்த ஓரத்தில் அமர்ந்திருக்க மனைவி அந்த ஓரத்தில் அமர்ந்தது ஜெயவர்த்தன் ஏற்கனவே இருந்த



மனநிலையில் அவனுடைய எரிச்சலை இன்னும் அதிகம் தான் செய்திருந்தது.

"உங்களுக்குப் பால் எடுத்துட்டு வரட்டுமா?"

..........

தான் கேட்டது காதில் விழவில்லையோ என்ற சந்தேகம் தோன்றி விட்டிருக்க மீண்டும் ஒரு முறையும் கேட்டாள்.

"கொஞ்சம் டிஸ்டர்ப் பண்ணாம இருக்கறியா?"

அதுவரை அவள் அறிந்திராத வண்ணம் கணவன் எரிந்து விழுந்தது ஸ்வேதாவுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்திருந்தது.

அதற்குப் பிறகும் தான் அப்படி சொல்லியிருக்கக் கூடாதோ என்னும் குற்ற மனப்பான்மை சிறிதும் இல் லாமல் அவன் பாட்டிற்கு மீண்டும் டி.வி.யில் மூழ்கி விட் டிருந்தது அழுகையையும் சேர்த்து வரவழைத்திருந்தது.

சிறு வயது முதலே தனிமையில் கிடந்து தவித்ததோடு அன்பிற்காகவும் ஏங்கியிருந்தவள் என்பதால் அந்த உதா சீனத்தை அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடி யாது போயிற்று.

ஆனால் அதை எதையும் புரிந்து கொள்ளும் மனநிலை யில் அப்பொழுது ஜெயவர்த்தனும் இருக்கவில்லை.

ஸ்வேதா அப்படி நினைத்துக் கொண்டிருக்க, மனைவி யிடம் ஜெயவர்த்தனின் எதிர்பார்ப்போ அதையும் மிஞ்சுவ தாக இருந்தது.

ஆனால் தன் எதிர்பார்ப்பில் பத்தில் ஏன் நூறில் ஒரு பங்குகூட இல்லாத மனைவியின் மேல் அவனுக்குக் கோபமும், ஆதங்கமுமே மிஞ்சியது.

மற்ற யார் உதாசீனப்படுத்தியிருந்தாலும் எப்படியோ, அதுவும் காரணமே இல்லாமல் கோபம் கொண்ட

கணவனின் செய்கையை ஸ்வேதாவால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று.

ஆனாலும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு எழுந்து உள்ளே வந்திருந்தாள்.

சிறிது நேரத்தில் படுக்கைக்கு வந்த கணவனிடம் அவனுக்குப் பிடித்த பதத்தில் பாலை எடுத்து வந்து நீட்டினாள்.

''உனக்கு ஒரு தடவ சொன்னாப் புரியாதா?''

கணவனின் வார்த்தைகளில் தெரிந்த எரிச்சல் இப்பொழுது இன்னும் வெளிப்படையாகவே தெரிய, அப்படியே செய்வதறியாது திகைத்துப் போனாள்.

அப்படித் தான் செய்த தவறுதான் என்னவென்று அவளுக்கும் புரிந்திருக்கவில்லை.

''கொஞ்சம் தள்ளிக்கிட்டா எனக்கு தூங்க சவுகர்யமா இருக்கும்.''

''எம்மேல என்ன கோபம் உங்களுக்கு?''

மெல்லிய குரலில் என்றாலும் முயன்று ஒரு வழியாகக் கேட்டே விட்டாள் ஸ்வேதா.

..............

''உங்களதான்...''

''என்ன கேட்ட?''

கணவனின் கேள்வியில் மீண்டும் கேட்டாள்.

''கோபமா? அதுவும் உம் மேலயா. அதுக்கு என்ன உரிமையிருக்கு எனக்கு?''

''ஏன் இப்படிப் பேசறீங்க?''

''பின்ன எப்படிப் பேசணும்?''

''ஏன், நான் ஏதாவது தப்புப் பண்ணிட்டேனா?''



.............

''தயவு செஞ்சு பேசுங்க...''

...........

''ப்ளீஸ் ஜெய், நீங்க இப்படி நடந்துக்கறத என்னால தாங்கிக்கவே முடியல...''

மனைவி அப்படி அழைத்தது மனதை லேசாக்கியிருந்தாலும் அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

தொடர்ந்து சில வினாடிகள் மௌனம் நிலவியது.

''தூங்கணும், லைட் ஆஃப் பண்ணு.''

''ம்கூம் முடியாது.''

மனைவி அப்படிச் செய்வாளென்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் அதுவும் காதில் விழாதது போல அவன் படுக்கைக்கு வரத் திரும்ப, அதற்கு விடாமல் கணவனுக்கு முன்பாக வந்து நின்றிருந்தாள்.

''சொல்லுங்க, எம்மேல என்ன கோபம்?''

.............

''தயவு செஞ்சு சொல்லுங்களேன்.''

மூச்சுக்காற்று மேலே படுமளவிற்கு வந்து நின்று கேட்ட மனைவியைப் பார்த்தவன், ''அது உனக்கு இன்னும் புரியலையா?'' என்று கேட்டான்.

''இல்லையே...''

...............

''என்ன ஜெய்?''

''நான் சொல்ல மாட்டேன். நீயே புரிஞ்சுக்கோ.''

இப்படிச் சொன்னால் என்ன செய்வதாம்.

"ஏன் ஜெய்..." என்று மும்முரமாகக் கணவனிடம் ஏதோ கேட்க வாயைத் திறந்தவள் அதற்குப் பிறகு தான் அவனுடைய முகத்தையே நன்றாக கவனித்தாள்.

கணவனின் பார்வையும், அந்தக் கண்களில் தெரிந்த ஏக்கமும் புரிய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ளத் தொடங்கி விட்டிருந்தது.

புரிந்தும் புரியாதது போலக் காட்டிக் கொண்ட மனைவியின் செய்கை புரிய மீண்டும் படுக்கையை நோக்கித் திரும்பியிருந்தான் ஜெயவர்த்தன்.

ஆனால் அதற்கு அவனுடைய மனைவி விட்டிருக்கவில்லை.

தன்னிடம் கணவனுக்கிருக்கும் அளவற்ற எதிர்பார்ப்பு புரிய, எல்லையற்ற ஆசையுடன் அவனுடைய கையைப் பிடித்திருந்தாள்.

மீண்டும் கணவனுக்கு முன்பாக வந்திருந்தவள் அவனுடைய முகத்தைத் தனது கைகளில் ஏந்தியிருந்தாள்.

"ஜெய்..." என்று அழைத்தவளுக்கு தொடர்ந்து வாயிலிருந்து வார்த்தைகள் வந்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு எல்லையற்ற ஆனந்தமும் ஆதங்கமும் சேர்ந்ததில் அழுகையில் உதடுகள் துடிக்கத் தொடங்கி விட்டிருந்தன.

"அப்ப என் மனச இன்னும் உங்களால புரிஞ்சுக்க முடியல இல்ல? எம் மேல அவ்வளவு தான் நம்பிக்க இல்ல...."

உரிமையும் ஆதங்கமும் சேர்ந்து அழுகையுடன் மனைவி கேட்ட விதம் நெஞ்சை உருக்கியிருக்க "இல்லமா வேண்டாம்..." என்று மனைவியை அருகில் இழுத்து இப்பொழுது அவனுடைய முகத்தைத் தனது கைகளில் ஏந்தியிருந்தான்.



"என்னடா?"

"ஜெய்..."

"ம்."

"எம்மேல கோபமா?"

"ஆமாம்..."

"ஏன்."

"நீ டிஸ்டன்ஸ் மெயின்டெய்ன் பண்றது எனக்குப் புடிக்கல."

"..........."

கணவனின் அந்த வார்த்தைகளில் அவனை இறுக அணைத்து அவனுடைய இதழ்களில் தனது இதழ்களைப் பதித்திருந்தாள் ஸ்வேதா.

ஸ்வேதா அவளறிந்து செய்தது அதுவரை மட்டுமே.

அடுத்த வினாடி முதல் அவள் தனது கணவனின் கைகளில் பச்சை மண்ணாகிப் போயிருந்தாள்.

மனைவியின் முகத்தைத் தனது கைகளில் ஏந்தியிருந்தவன் அவளுடைய முகமெங்கும் முத்தமழை பொழிந்திருந்தான்.

முற்றிலும் தன்னிலை மறந்து தன்மேல் படர்ந்திருந்த மனைவியை "ஸ்வேதா..." என்று மென்மையாக அழைத்தான் ஜெயவர்த்தன்.

ஆனால் அதற்கு பதிலெதுவும் வராது போயிருக்க அதாவது தனது அழைப்பை உணர்ந்து பதில் சொல்லும் மனநிலையில் மனைவி இல்லையென்பது தெரிந்திருந்தாலும் மீண்டுமொரு முறையும் அழைத்தான்.

கணவனின் அழைப்பில் மனமே இல்லாமல் லேசாகக் கண்களைத் திறந்து பார்த்தாள் ஸ்வேதா.

ஏற்கனவே மிகவும் கிரங்கிப் போயிருந்தவள் "யாருமில்லாத தனிமைல நமக்குள்ள இருக்கற அதிகபட்ச இடைவெளியே இதுவா தான் இருக்கணும்" என்ற கணவனின் அருகாமையிலும் பார்வையிலும் மேலும் முகம் சிவந்து கன்றிப் போனாள்.

மனைவியின் அந்த நிலை அவனையும் இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத ஒரு வித அவஸ்தைக்கு ஆளாக்கி விட்டிருக்க மீண்டும் அவளை இறுக அணைத்து அவளுடைய கழுத்து வளைவில் தனது சூடான இதழ்களைப் பதித்திருந்தான் ஜெயவர்த்தன்.

## 12

"வாடாம்மா."

"குட்மார்னிங் அத்தை."

"குட்மார்னிங் ஸ்வேதாம்மா. நைட் தோட்டத்துக்குப் போயிட்டிங்க போல?"

"ஆமா அத்தை. நீங்க எத்தனை மணிக்கு வீடு வந்து சேர்ந்தீங்க?"

"நாங்க எட்டு மணிக்கெல்லாம் வந்துட்டோம். எட்டரைக்கு அவங்களும் வந்துட்டாங்கமா."

"அப்பாடா. இப்பதான் நிம்மதி."

"ஏன்?"

"எங்க டிபன் ஆறி ஒரு மாதிரி ஆயிடுமோன்னு பயந்துட்டேன். அதுவும் நீங்க நேரத்துலயே வேற செஞ்சு வெச்சுட்டுப் போனதாச்சே."

"சரிதான், காலைல என்ன குடிக்கறது வழக்கம் காபியா..."



"ஆமா அத்தை, கொஞ்சம் ஸ்ட்ராங்கா..."

"அட, உங்க வீட்டுக்காரர் மாதிரியே வாக்கும்."

"ம்கூம் அவர் குடிக்கறது ஓவர் ஸ்ட்ராங். எனக்கு அதவிடக் கொஞ்சம் லைட்டா இருக்கணும்."

"சரிதான், ஆமா எங்க அந்த தடியன்?"

தனது கணவனைக் குறிப்பிட்டு அத்தை கேட்டது புன்னகையை வரவழைத்திருந்தது.

"ஹால்ல இருந்தார் அத்தை. ஏன் அவர் மேல என்ன கோபம்?"

"பின்ன நைட்டு உன்னத் தோட்டத்துக்குக் கூட்டிட்டுப் போயிருக்கான் பாரு, அங்க எதுவும் வசதியாவே இருக்காதுமா, எப்படி சமாளிச்ச?"

ஒரேயடியாக நின்று கணவனைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றதே தானல்லவா.

"இந்தாடாம்மா காபி எடுத்துக்கோ என்று அத்தை நீட்டிய காபி கப்பை "தேங்க்ஸ்" என்று வாங்கிக் கொண்டாள் ஸ்வேதா.

"அவருக்கு அத்தை?"

"நான் கொண்டு போய்க் குடுத்துட்டு வர்றேம்மா நீ உக்காந்து குடி" என்று அவர் சொல்வதற்கும் அவருடைய சிறிய மகன் ஜெயவர்த்தன் உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது.

"காபி கிடைக்குமா?"

"முடியாதுன்னா சொல்ல முடியும், தர்றேன்."

"என்னமா கோபமா இருப்பீங்க போல?"

"உம்மேல அவ்வளவு சீக்கிரம் கோபப் பட்டுட முடியுமா என்ன? ஆமா நைட் அதுக்குள்ள தோட்டத்துக்குக் கிளம்பிப் போகலேன்னா என்ன?"

''ஏம்மா, அதுலென்ன இருக்கு?''

''ஆமாம்பா, கல்யாணத்துக்கு எல்லாரும் புழங்கின தாச்சே சுத்தம் கூடப் பண்ணல...''

''ஓ அதுதான் பிரச்சனையா? அதெல்லாம் நேத்தே தோட்டத்து ஆளுங்கல விட்டு சுத்தம் பண்ணியாச்சு. அதோட தோட்டத்துக்கு வந்தவங்க யாரும் அங்கிருந்த அறைகளையெல்லாம் பயன்படுத்தவே இல்ல, எல்லாம் பூட்டிக் கிடந்ததாச்சே.''

''சரிதான் ஏற்கனவே புது இடம். அதுலயும் வசதிக் குறைவால ஸ்வேதா சிரமப்பட்டாளோங்கற ஆதங்கம் தான் வேறென்ன?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல அத்தை. அங்க போலாம்னு அவரக் கட்டாயப்படுத்தினதே நாந்தான்'' என்று கணவனைப் பார்த்தபடி சொன்னாள் ஸ்வேதா.

அந்த நேரத்தில் கணவனின் பார்வையில் என்ன இருந்தது.

நிச்சயம் அது இயல்பான பார்வையல்ல,

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள இரத்த மென சிவந்து விட்டிருந்த முகத்தைக் குனிந்து மறைத்துக் கொண்டாள்.

நல்லவேளையாக அத்தை திரும்பி நின்று அடுப்பு வேலையில் மும்முரமாக இருக்கிறாரென்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.

சில வினாடிகளில் ''இந்தா கண்ணா எடுத்துக்கோ'' என்று தாய் நீட்டிய காபியை வாங்கிக் கொண்டான் ஜெய வர்த்தன்.

''உக்காருப்பா ஏன் நின்னுட்டே இருக்க?''

''அதுசரி, அப்புறம் இந்தா கொஞ்சம்.. இந்தக் காயக் கட் பண்ணிக் குடுன்னு கேட்டுட்டிங்கன்னா?''



''நீயும் உடனே செஞ்சுடுவ...''

''அட என்ன நீங்க இன்னைக்கு என்ன வம்புக்கு இழுத் துட்டே இருக்கீங்க.''

''என்ன பண்றதுப்பா ரொம்ப நாளைக்கப்புறம் இன் னைக்கு தான நீ இந்த மாதிரி சவுகர்யமா நின்னு பேசற'' என்ற காஞ்சனா திரும்பி ''எல்லாம் என் மருமக வந்த நேரம்'' என்று ஸ்வேதாவைப் பார்த்தவர் ''எப்படியோ நீ சந்தோஷமா இருக்கணும் கண்ணம்மா அது தான் எனக்கு வேணும்'' என்றார்.

தனது தந்தையைப் போலவே அத்தையும் அழைத்த தோடல்லாமல், மிகவும் உணர்ந்து அவர் சொன்ன வார்த் தைகள் ஸ்வேதாவிற்கு மனதிற்குள் அவரைத் தாயாகவே எண்ண வைத்திருந்தன.

அதிலும் தாயன்பு துளியும் கிடைக்கப் பெறாதவள் என்பதால், அதன் அருமை அவளுக்கு முழுமையாகப் புரிந்ததெனலாம்.

என்னதான் மிகவும் வசதி படைத்த குடும்பத்திலிருந்து வந்திருந்தாலும் அந்தப் பகட்டோ பந்தாவோ துளியும் இல்லாமல், இனிமையுடன் கூடிய ஸ்வேதாவின் அணுகு முறை அத்தகையதாக இருந்தது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல ஸ்வேதா அங்கு வந்து சேர்ந்த ஒரு நாளிலேயே மனதறிந்து அவளால் யாரையும் புண்படுத்தவோ, வேண்டு மென்றே குறை கூறவோ முடியாது என்பதையும் காஞ்ச னாவால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

முக்கியமாக மூத்த மருமகள்கள் இருவரிடமும் வினை யாட்டுப் பேச்சே இருக்காதென்பதோடு, மற்றவர்கள் பேசினாலும் அது அவர்களுக்குப் பிடிக்காது.

அதற்கு மேல் அவர்கள் பேசினாலும் அதில் நல்லதென்று ஒன்றும் இருக்காது.

அப்படியே இருந்தாலும் அதில் உட்கருத்து ஏதாவது இருக்கும்.

அது பெரும்பாலும் மற்றவர்களைக் குறை கூறுவதாகவே அமையும்.

ஆனால் அந்த மாதிரி எந்த மூலக்கூறுகளும் இல்லாத சிறிய மருமகளிடம் அவருக்கு அன்போடு அக்கறையும் சேர்ந்திருந்தது.

அதிலும் சிறு வயதிலிருந்த தாயில்லாமல் வளர்ந்த பெண்ணாயிற்றே.

தந்தையே என்றாலும் ஒரு ஆணிடம் எப்படிப் பாவம் ஒரு பெண்ணாகத் தன்னுடைய பிரச்சனைகளைப் பகிர்ந்து கொண்டிருப்பாள்.

''என்ன அத்தை நீங்க மட்டும் தனியா வேலை செஞ்சுட்டிருக்கீங்க?''

''பின்ன?''

''எனக்கும் ஏதாவது வேலை குடுங்க.''

''உனக்கென்ன வேலை தெரியும்?''

''எதுன்னாலும்...''

''சரி அப்ப மதியத்துக்கு எல்லாருக்கும் சமைச்சுடு.''

''அச்சச்சோ...''

''என்ன?''

''நான் சந்தோஷமா செய்வேன் அத்தை. ஆனா அது மத்தவங்களுக்குப் பிடிக்கணுமே'' என்று உண்மையான அக்கறையுடன் கேட்டாள் ஸ்வேதா.

''ஏன், நீ நல்லா தான செய்வ?''



''அதுல என்னமா உங்களுக்கு சந்தேகம்?'' என்று லாவண்யா வர, ''குட்மார்னிங் லாவண்யா'' என்றாள் ஸ்வேதா.

''வெரி குட்மார்னிங் அண்ணி'' என்றவள் அங்கிருந்த தனது சிறிய அண்ணனுக்கும் சந்தோஷமாகக் காலை வணக்கம் சொன்னாள்.

''நானும் உங்களுக்கு ஹெல்ப் பண்றேன் அண்ணி, யோசிக்காம அம்மாகிட்ட சரின்னு சொல்லுங்க.''

லாவண்யா சொல்ல ''ஒன்னே தாங்காது. இன்னொரு கத்துக்குட்டியா?'' என்றான் ஜெயவர்த்தன்.

''நானொன்னும் கத்துக்குட்டி கிடையாதாக்கும், வேணும்னா அண்ணியக் கூட சொல்லுங்...''

''அடடா இப்படிக் கால வாரி விட்டுட்டயே லாவண்யா...''

''பின்ன என்ன அண்ணி அங்க உங்க வீட்ல ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியா வேலைக்காரங்க இருக்காங்க, அதனால உங்களுக்கு சமைக்கத் தெரியாமப் போனாக்கூட அதுல தப்போ, ஆச்சரியமோ எதுவுமில்ல.''

''ஆனா இங்க நிலம அப்படியில்ல அண்ணி, அம்மா எப்பப் பாத்தாலும் தோட்டத்துல ஆளுங்க வேலை செய்யறாங்கன்னு காலைல நேரத்துலயே டிபனுக்கு மட்டும் எதையாவது செஞ்சு வெச்சுட்டுக் கிளம்பிடுவாங்க. அதுவும் போய்ட்டு சாயங்காலம் தான் வருவாங்க. அப்படி எத்தனை நாள் மதிய சாப்பாட நான் ரெடி பண்ணியிருக்கேன் தெரியுமா?'' என்று ஆதங்கத்துடன் கேட்டாள் லாவண்யா.

''அடடா என் செல்லக் குட்டிக்குக் கோபம் போல?''

தனது அண்ணன் கேட்க, ''அச்சச்சோ சும்மா சொன்னேண்ணா'' என்றாள்.

"அப்ப நல்லா சமைப்பேன்னு சொல்றியா?"

அண்ணன் கேட்க, "பின்ன அதுலென்ன அண்ணா உங்களுக்கு சந்தேகம்?" என்றாள்.

அண்ணன் தங்கை இருவரையும் ஒருசேரப் பார்த்த ஸ்வேதா, "அப்ப லாவண்யா அளவுக்குக் கூட நான் செய்ய மாட்டேன்னு முடிவு பண்ணிட்டிங்க இல்ல?" என்று ஆதங்கத்துடன் கேட்டாள்.

"அப்ப உங்களுக்கும் நல்லா சமைக்கத் தெரியுமா அண்ணி?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் லாவண்யா.

"என்னப்பத்தி எல்லாரும் இப்படியா நினைச்சுட்டிருக்கீங்க?"

"அப்ப அம்மா சொன்ன மாதிரி மதியத்துக்கு நீயே எல்லாருக்கும் லஞ்ச் ரெடி பண்ணிடு. அப்பதான் தெரியும்..." என்று ஜெயவர்த்தன் மனைவியிடம் ஏதோ சொல்ல வருவதற்குள் "ம் அதுதான் கரெக்ட்" என்று வந்தாள் அந்த வீட்டின் பெரிய மருமகள் பத்மினி.

ஜெயவர்த்தனைப் போலவே ஸ்வேதாவுக்கும் பத்மினி சொன்னதில் தவறாக ஒன்றும் பட்டிருக்கவில்லை, ஏன் வித்யாசமாகவும். ஆனால் அது அவர்களுக்கு மட்டும் தான், மற்ற இரு பெண்களுக்கும் அந்த நேரத்தில் பத்மினியின் வரவு சற்று பயத்தையே கொடுத்திருந்தது.

ஆனாலும் அதை அவர்கள் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அடுத்த சில நிமிடங்களில் அங்கு வந்த தந்தையுடன் பேசிக் கொண்டே ஜெயவர்த்தன் அங்கிருந்து நகர, "என்ன வசமா மாட்டிக்கிட்ட இல்ல?" என்று ஸ்வேதாவிடம் கேட்டாள் பத்மினி.



"நானா? நான் செய்யற லஞ்ச சாப்பிடப் போறவங்க இல்ல இன்னைக்கு எங்கிட்ட மாட்டிக்கிட்டாங்க?" என்று புன்னகையுடன் ஸ்வேதா கேட்க, "ம் அப்படி சொல்லுங்க அண்ணி" என்றாள் லாவண்யா.

"அப்ப உன் லஞ்ச் கேவலமா இருக்கும்னு நீயே ஒத்துக்கற அப்படித்தான?"

ஒரு விதத் திருப்தியுடன் பத்மினி கேட்க, "என்னைக் கேக்கறத விடவும் நீங்களே சாப்புட்டுப் பாத்துட்டு சொல்லுங்களேன்" என்றாள் ஸ்வேதா.

"சரிதான்."

பெருந்தன்மையுடன் ஏதோ போனால் போகிறது என்பதைப் போல பத்மினி, ஒப்புக் கொண்ட விதத்தில், "எப்படியோ உங்ககிட்ட மாட்டிக்கறதுல பெரிய அண்ணியும் உறுதியா தான் இருக்காங்க அண்ணி" என்று சிரித்தாள் லாவண்யா.

"அது சரிதான்" என்று அவளைத் தொடர்ந்து ஸ்வேதாவும் சிரிக்க, அதை விளையாட்டாக எடுத்துக் கொள்ள பத்மினிக்குத் தெரிந்திருக்கவில்லை.

தெரிந்திருக்கவில்லை என்பதைவிட விரும்பவில்லை என்று சொல்வது சரியாக இருக்கும்.

## 13

என்னதான் பேச்சு விளையாட்டாகத் தொடங்கியிருந்தாலும், அன்று மதியத்திற்கு ஸ்வேதாவே அனைவருக்கும் சமைத்திருந்தாள்.

எதிர்பார்த்ததை விடவும் கூட சுவை நன்றாக வந்திருக்க, அனைவரும் வாய் விட்டே புகழ்ந்தார்கள்.

குறிப்பிட்டு இதைத் தான் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்காததால் ஸ்வேதாவும் அவளுக்கு நன்கு சமைக்கத் தெரிந்த பதார்த்தங்களையே தேர்ந்தெடுத்திருந் தாள்.

ஆனாலும் கூட மனதிற்குள் பயம் இருக்கவே செய்தது.

ஆனால் அந்தத் தயக்கத்தையெல்லாம் உடைத்தெறி வதைப் போல, சுவை நன்றாக வந்திருக்க தொடர்ந்து தானும் அவ்வப்பொழுது எதையாவது சமைக்கலாமென்ற தன்னம்பிக்கையும் கூடத் துளிர் விடலாயிற்று.

''ம், ரொம்ப நல்லா சமைச்சுட்டாங்கற பெருமையாக் கும்'' என்ற குரலில் திரும்பிய ஸ்வேதாவுக்கு அங்கு அந்த வீட்டின் இரண்டாவது மருமகள் இந்துமதி நின்று கொண்டிருந்தது தெரிந்தது.

''ஓ. அப்ப என் சமையல் நல்லார்க்குன்னு சொல்றீங் களா?''

எப்படிப் பேசினாலும் மடக்கி விடுகிறாளே.

''சரிதான் ஏதோ குருட்டு வாக்குல நல்லா வந்துடுச் சுங்கற...''

''சரிதான்'' என்று அதற்கும் துளியும் கோபப்படாமல் சிரித்தவளிடம் ''என்ன அக்கான்னு கூடக் கூப்புடலாம் இல்ல உனக்கு அதெல்லாம் புடிக்காதா?'' என்று கேட் டாள் இந்துமதி.

''எனக்கு அதுல எந்த ஆட்சேபணையும் இல்லக்கா, எப்படிப் பாத்தாலும் உங்கள விடவும் வயசுல நான் சின்னப் பொண்ணு தான.''

ஏதோ ஒரு விதத்தில் குத்தி விடுகிறாளே,

''எல்லாரும் சாப்புட்டு முடிச்சுட்டாங்க தான?''

''ஆமாம், எல்லாரும் சாப்டாச்சு.''



''நீ?''

''நானும் ஆச்சுக்கா.''

''நாளைக்கு எங்கயோ கோவிலுக்குப் போகணுமாம், வீடெல்லாம் கூட்டித் துடைக்கணும்.''

''சரிதான் நானும் ஹெல்ப் பண்றேன்.''

''ஹெல்ப் மட்டுமில்ல, இன்னைக்கு நீதான் செய்யணும். வாரத்துக்கு மூணு தடவ ஒரு நாள் விட்டு ஒரு நாள் வீடு துடைச்சுட்டிருக்கோம், இந்த வாரத்துல நாங்க ரெண்டு பேரும் முடிச்சுட்டோம் இன்னைக்கு உன் டர்ன்.''

''எப்பவுமே இப்படித்தான் இருக்குமோன்னு பயந்துக் காத, வேலைக்கு ரெகுலரா வர்ற ஆள் திடீர்னு நின்னுட் டாங்க. இன்னும் சில மாசங்கள்ல எல்லாம் பழையபடி ஆயிடும் அதுவரைக்கும் தான்.''

''சரிதான், நான் தாராளமா செய்யறேன்.''

என்னதான் உடனே ஒப்புக் கொண்டு விட்டிருந்தாலும் அதை செய்து முடிப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டிருந்தது ஸ்வேதாவிற்கு.

அந்த அளவிற்கு முதலில் பார்த்த அளவில் சிறிய வீடாகத் தெரிந்தாலும், போகப் போகத்தான் உள்ளே இருக்கும் அறைகள் அனைத்தையும் சேர்த்தால் வீடு மிகவும் பெரியது என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது.

அப்பாவின் வீட்டளவிற்கு இல்லா விட்டாலும் அதில் பாதியளவிற்கு மேலேயே இருந்ததும்,

ஒரு வழியாக வீடு முழுக்கத் துடைத்து முடித்தபோது மாலை ஐந்து மணிக்கு மேலேயே ஆகியிருந்தது.

தானும் உதவி செய்வதாக அத்தை எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் தானே அனைத்து வேலைகளை

யும் செய்து முடித்தவளுக்கு, அடித்துப் போட்டாற் போல உடலெங்கும் வலிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

லாவண்யா இருந்திருந்தாலும் நிச்சயம் உதவிக்கு வந்திருப்பாளென்று தோன்றியது.

ஆனால் அவள் கல்லூரியில் ஒரு வேலையென்று மதியமே கிளம்பிச் சென்றிருந்தாள்.

சென்று ஹீட்டரைப் போட்டு நன்றாகக் குளித்து முடித்து விட்டு வந்தவள், அத்தை சொன்னது போல வந்து விளக்கேற்றி வைத்தாள்.

பிறகு மதிய உணவை முடித்துக் கொண்டு வினாடி கூட நிற்காமல் அவசர வேலையென்று கிளம்பி விட்டிருந்த கணவனின் வரவுக்காகக் காத்திருக்கலானாள்.

சிறிது நேரத்தில் வந்து சேர்ந்த கணவனுக்கு சாப்பிட டிபன் கொண்டு போய்க் கொடுத்து உபசரித்தாள்.

''வேண்டாம்னு சொல்ல நினைச்சேன். அதுக்குள்ள எடுத்துட்டு வந்துட்டியா'' என்றவன், மனைவிக்காகக் கொஞ்சம் எடுத்துச் சாப்பிட்டான்.

''உங்களுக்கு டீ...''

''இல்லமா வேண்டாம், கொஞ்சம் மேல வர முடியுமா?''

''இதோ வர்றேன்'' என்று சொல்லிக் கொண்டே கணவனைப் பின் தொடர்ந்து தங்களுடைய அறைக்கு வந்திருந்தாள் ஸ்வேதா.

''என்ன ஜெய் சொல்லுங்க?''

''என்ன ரொம்ப வேலையா?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே.''

''பின்ன ஏன் இப்படிக் களைச்சுப் போயிருக்க?''

''கிச்சன்ல நின்னேனில்லையா, அதனால இருக்கும். அப்புறம் எதுக்குக் கூப்புட்டிங்க?''



''உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும், அத எப்படிச் சொல்றதுன்னு தான்...''

கணவனின் தயக்கம் மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்திருந்தது ஸ்வேதாவிற்கு.

''என்னங்க ஏதாவது பிரச்சனையா?''

''ம்கூம்.''

''பின்ன பழைய காதலி யாராவது வந்து...''

''என்னது?''

புன்னகை கலந்த ஆச்சரியத்துடன் கேட்ட கணவனை ''அதுவும் இல்லையா பின்ன என்னதான் விஷயம்?'' என்று கேட்டாள்.

..........

''போரடிக்காதீங்க ஜெய் சீக்கிரம் சொல்லுங்க.''

''நான் ஒரு வாரம் வெளியூர் போகணும்மா.''

''எதுக்கு?''

''புது ஆர்டர் ஒண்ணு வந்திருக்கு. நான் ரொம்ப நாளா எதிர்பார்த்துட்டிருந்ததும் கூட.''

''ரொம்ப சந்தோஷம் ஜெய், போய்ட்டு வாங்க.''

மனைவி உடனே இப்படி சம்மதம் சொல்லி விடுவாளென்று ஜெயவர்த்தன் எதிர்பார்க்கவில்லை.

அதை மனைவியிடமே கேட்கவும் செய்தான்.

''ரொம்ப முக்கியமானதுங்கறதால தான நீங்களே கேக்கறீங்க.''

''நிச்சயமா, ஆனா நீ மட்டும் எப்படி நானில்லாம தனியா...''

''ஏன் இத்தனை வருஷங்களா இல்லையாக்கும்?''

''அப்ப நான் வெளியூர் கிளம்பறதுல உனக்கு எந்த ஆட்சேபணையும் இல்ல?''

கணவன் இல்லாமல் புகுந்த வீட்டுச் சொந்தங்களுடன் தான் மட்டும் எப்படித் தனியாக இருப்பதென்று நினைத்தவளுக்கு ஏனோ இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித உணர்வில் மனம் கலங்கி விட்டிருந்தது.

''என்னடா?''

...............

''ஸ்வேதா...''

''வெளியூர் கதையெல்லாம் நிஜம்தானா?''

''ஆமாம்மா.''

''நான் நம்ப மாட்டேன்.''

''உண்மையா தான்...'' என்று தொடர்ந்து ஏதோ சொல்ல வந்த கணவனை இறுக அணைத்துக் கொண்டாள் ஸ்வேதா.

மனைவியின் செய்கையில் உடலோடு, மனமும் நெகிழ்ந்து போய் விட்டிருக்க, தானும் அவ்ளை இதமாக அணைத்துக் கொண்டான் ஜெயவர்த்தன்.

திடீரென்று ஏதோ தோன்றியவளாக நிமிர்ந்த ஸ்வேதா ''ஒரு வாரம் மட்டும் தான?'' என்று கேட்டாள்.

''ம்.''

''நானும் கூட வரட்டுமா?''

ஜெயவர்த்தனும் முதலில் அப்படித்தான் எண்ணியிருந்தான்.

ஆனால் தொடர்ந்து யோசித்தவனுக்கு, அதற்குப் பிறகு தான் அது சரிப்பட்டு வராதென்பது புரிந்தது.

இரவு பகல் பாராமல் தான் வேலையைப் பார்க்க வேண்டியதிருக்கும்.



அதற்கிடையில் மனைவி பாவம் மொட்டு மொட்டென்று அறையில் தனியாக அமர்ந்திருக்க நேரிடுமே என்றிருந்தது.

''என்ன ஜெய்?''

''இல்லடா வேண்டாம், நேரம் காலம் பாக்காம நான் வேலயப் பாக்க வேண்டியதிருக்கும். புது இடத்துல உன்ன மட்டும் தனியா விட்டுட்டுப் போக முடியுமா சொல்லு?''

அப்படிப் பார்த்தால் இந்த வீடு கூடத் தனக்கு இப்பொழுது புது இடம் தானே என்று நினைத்தவளால் அதை அப்படியே வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

ஆனால் அதைக் கணவனே கேட்க, சமாளித்து வைத்தாள்.

''அப்பிடிப்பாத்தா உனக்கு இந்த வீடு, சொந்தங்கள் எல்லாமே கூடப் புதுசு தான் இல்லையா?''

''அதெப்பிடி உங்க வீட்டு சொந்தங்கள் எனக்குப் புதுசாக முடியும்?''

''சரிதான் நம்பிக்கறேன்.''

''நிஜம் ஜெய், அப்புறம் எப்பக் கிளம்பணும்?''

இன்னைக்கு நைட்டு பதினோரு மணிக்கு என்ற கணவனை லேசான அதிர்ச்சியுடன் பார்த்தாள் ஸ்வேதா.

''அப்ப இன்னும் நாலு மணி நேரம் தான் இருக்கு.''

''ஆமாம்மா.''

சில வினாடிகள் தான்.

உடனே சமாளித்துக் கொண்டு சிரித்தாள்.

''சரிதான், போய்ட்டு வாங்க.''

ஏனோ மனைவியைப் பிரிய வேண்டுமென்ற எண்ணமே ஜெயவர்த்தனின் மனதைக் கசக்கிப் பிழிவதாய் இருந்தது.

வேலையென்று வந்து விட்டால் அனைத்தையும் மறந்து போகும் தனக்கே இப்படியென்றால் பாவம் மனைவிக்கு எப்படியிருக்குமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதிலும் புது இடம்,

புது சொந்தங்கள்.

என்ன ஜெய்?

ரொம்ப வேலையாடா?

அப்படியெல்லாம் இல்லையே என்று சொல்லி விடத் தான் மனம் துடித்தது.

ஆனாலும் வாயிலிருந்து வார்த்தைகள் வந்திருக்கவில்லை.

காலையிலிருந்து செய்ய நேர்ந்த வேலைகள் தான் நினைவிற்கு வந்தன.

என்னதான் பாதி சுமையைத் தானே விருப்பப்பட்டு ஏற்றுக் கொண்டிருந்தாலும் கூட அன்று தான் செய்த வேலைகள் மிகவும் அதிகப்படி தானே.

ஏன் தன் வீட்டு வேலைக்காரி கூட இத்தனை வேலைகளையும் ஒரே நாளில் செய்ய மாட்டாளே,

ஒரு நாளே இப்படியென்றால்

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பார்களே.

அப்படியானால் இந்த வீட்டில் தன் எதிர்காலம்...

''என்னடா?''

''ஜெய்...''

''ம்.''

''நான் வேணும்னா, அதுவும் தேவப்பட்டாதான் அப்பா வீட்டுக்குப் போய்ட்டு வரட்டுமா?''



''இதுல என்ன தயக்கம்? தாராளமாப் போய்ட்டு வா.''

''உங்களுக்கு ஒண்ணும் வருத்தமில்லையே...''

''என்னமா நீ...''

''சரிதான் அப்பக் காலைலயே கிளம்பிட்றேன்.''

''உன் இஷ்டம்.''

''நீங்க வேணும்னா இருங்களேன். காலைல என்னைக் கொண்டு வந்து அங்க வீட்ல விட்டுட்டு...''

''இல்லடா, நான் இன்னைக்கு நைட் கிளம்பியே ஆகணும். அப்படியில்லாம இப்ப ஒரு நாள் லேட் பண்ணினா அப்புறம் அங்கிருந்து திரும்ப திரும்பவும் ஒரு வாரமே கூட தள்ளிப் போகலாம்.

''பதினஞ்சு நாளா?''

''ஆமாம்.''

''அப்ப வேண்டாம் நீங்க கிளம்பிக்கோங்க.''

''நான் கிளம்பிக்கறேன். ஆனா...''

கணவனின் பார்வை மாறியதில், ஸ்வேதாவின் முகம் இரத்தமென சிவந்து போனது.

மனைவியின் நிலை புரிய, அவளுடைய முகத்தை அப்படியே கைகளில் ஏந்தி இதழ்களில் தனது இதழ்களைப் பதித்தான்.

அப்படியே அணைப்பு இறுக, கணவனின் கைகளில் தன்னை மறந்து போனாள் ஸ்வேதா.

## 14

அன்று இரவே ஜெயவர்த்தன் வெளியூர் கிளம்பிச் சென்றிருக்க, மிகவும் முயன்று சில நாட்களை அங்கே கழித்தாள் ஸ்வேதா.

அதற்கே அவள் மிகவும் சிரமப்பட்டுப் போனாள் என்று தான் சொல்ல வேண்டும்.

''அத்தை.''

''வாடாம்மா, என்ன தூங்கலையா?''

''இல்ல அத்தை.''

''என்னமா சொல்லு?''

''நான் அங்க அப்பா வீட்டுக்குப் போய்ட்டு வரட்டுமா?''

''அட, அதுக்குள்ள அப்பா ஞாபகம் வந்துடுச்சா?''

புன்னகையுடன் அத்தை காஞ்சனா கேட்க, ''ம்கூம் சும்மா போய்ட்டு வரலாமேன்னு தான் அத்தை'' என்றாள்.

''சரிதான்மா போய்ட்டு வா, உன் வீட்டுக்காரரும் வெளியூர் போகும்போதே சொல்லிட்டுத் தான் போனார். உடனே கிளம்புவேன்னு எதிர்பார்த்தேன், பரவாயில்லை.''

''கட்டாயம் போய் தான் ஆகணும்னு ஒண்ணும் கிடையாது அத்...''

''இல்லடாம்மா, ஒரு மாறுதலுக்காகவாவது ரெண்டு நாள் போய் இருந்துட்டு வாயேன்.''

''தேங்க்யூ அத்தை.''

''அப்புறம் ஸ்வேதா.''

''சொல்லுங்க அத்தை?''

''ஒண்ணும் இல்லடாம்மா, என் தம்பி மகன் கல்யாணம் வுருது. அதுக்கு தான் நாம எல்லாரும் குடும்பத்தோட போகணும், அதுக்குள்ள ஜெயவர்த்தனும் வந்துடுவான் நீயும் வந்துடேன்.''

''நிச்சயம் அத்தை.''

''அதுக்கின்னும் அஞ்சாறு நாள் இருக்கு ஒண்ணும் அவசரமில்ல, சரிடாம்மா நீ எப்பக் கிளம்பற?''



''இன்னைக்கு சாயங்காலம் கிளம்பிக்கட்டுமா அத்தை?''

''சரிதான் போய்ட்டு வா.''

அத்தையின் சம்மதம் கிடைத்த உடனேயே சென்று கிளம்பும் வேலைகளில் ஆயத்தமானாள் ஸ்வேதா.

''அண்ணி.''

''வா லாவண்யா.''

''ஊருக்குக் கிளம்பப் போறீங்களா?''

''ஆமா, ஏன்?''

''போங்க அண்ணி.''

''அட என்னாச்சு?''

''நீங்க எங்கூடப் பேசாதீங்க.''

''சந்தோஷம், லொடலொடன்னு பேசற உங்கிட்டிருந்து பெரிய விடுதலை.''

''அப்ப...''

''ம், என்ன?''

..............

''அடடா லாவண்யா குட்டிக்கு என்னாச்சு?'' என்று ஸ்வேதா அவளுடைய கைகளைப் பிடித்திருக்க, ''நானும் உங்ககூட ஊருக்கு வரட்டுமா அண்ணி?'' என்று கேட்டாள் லாவண்யா.

''வாவ், நிஜமாவா கேக்கற?''

''ம்.''

''வாயேன் போகலாம்.''

''ஆனா...''

''என்ன?''

''அம்மாகிட்ட தான் பர்மிஷன் வாங்கணும்.''

ஒருவழியாக சம்மதம் கிடைத்து விட்டிருக்க அன்று மாலையே ஸ்வேதாவுடன் அவளுடைய வீட்டிற்குப் பயணமானாள் லாவண்யா.

தனது அண்ணியுடன் அவர்களுடைய வீட்டிற்கு வந்து சேர்ந்திருந்த லாவண்யா சொர்க்க லோகம் போல உணர்ந்தாள்.

விலையுயர்ந்த அனைத்தையும் ஏன் அங்கிருந்த அனைத்துமே, விலையுயர்ந்ததாயும் பார்த்து வியக்கும் படியாகவும் தான் இருந்தன.

ஒவ்வொன்றைப் பற்றித் தெரிந்து கொள்வதிலும் லாவண்யா மிகுந்த ஆர்வம் காட்ட, தானும் ஆசையுடன் அனைத்தையும் சொல்லிக் கொடுத்தாள் ஸ்வேதா.

மறுநாள் முழுக்க இருவரும் காரை எடுத்துக் கொண்டு பர்ச்சேஸ் செய்யக் கிளம்பி விட்டிருந்தனர்.

அப்படிச் சென்றவர்கள் சிறுசிறு நகைகள், துணிகள் மேக்கப் சாமான்கள் எனக் கண்களில் பட்டவற்றையெல்லாம் வாங்கிக் குவித்தனர்.

முக்கியமாக ஸ்வேதா.

அண்ணி தனக்காகத் தான் இப்படியெல்லாம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மனதிற்குள் சரியாக யூகித்து விட்டிருந்த லாவண்யா போதுமென்று எவ்வளவோ மறுத்துப் பார்த்தாள்.

ஆனால் அந்த வார்த்தைகளை ஸ்வேதா காதில் கூட வாங்கிக் கொண்டிருக்கவில்லை.

அதோடு எந்த இடத்திலும் லாவண்யாவை விலைப் பட்டியலைப் பார்க்கவும் அவள் விட்டிருக்கவில்லை.

ஆனாலும் யூகத்தில் புரிந்த அளவிலேயே மலைத்துப் போனாள் லாவண்யா.



''என்ன அண்ணி இதெல்லாம்?''

''எது?''

''ஏன் இப்படி வாங்கிக்கிட்டே இருக்கீங்க?''

''எதுக்கு வாங்குவாங்க, தேவைக்கு தான்.''

''சரிதான். ஆனா இதெல்லாம் தான் ஏற்கனவே உங்களுக்கு இருக்கே.''

''ம், அப்புறம்?''

''என்ன அண்ணி...''

''அடி அசடு. நான் வாங்கிட்டிருக்கறதெல்லாம் உனக்கு தான்.''

''எனக்கா?''

''ம்.''

''எதுக்கு?''

''என்ன இப்படிக் கேக்கற. இதெல்லாம் உங்கிட்ட இருக்கற மாதிரி தெரியல. அதனால வாங்கினேன். ஒருவேள உங்கிட்ட எல்லாமே இருக்கக் கூட செய்யலாம், ஆனாலும் நான் ஆசையா வாங்கினதெல்லாத்தையும் நீ ஏத்துக்கத் தான் வேணும்.''

..........

''என்ன லாவண்யா?''

''போங்க அண்ணி.''

''சரிதான் உன் முகத்தப் பாத்துட்டுப் போதும் இதோட முடிச்சுக்கலாமான்னு பாத்தேன், வேண்டாம் இன்னும்...''

''பேசாம வாங்க அண்ணி...''

லாவண்யா சலித்துக் கொள்ள, சிரிப்பு தான் வந்தது ஸ்வேதாவிற்கு.

''ஏன் நீ மட்டும் தான் யூஸ் பண்ணப் போறியாக்கும், நானும் தான் தேவைப்படும் போது எடுத்துக்கப் போறேன்.''

இது தனக்காகத் தன் வாயை அடைப்பதற்காக அண்ணி சொல்லும் சமாதானம் என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத பேதை அல்லவே லாவண்யா.

கடவுளே அண்ணனிடம் எப்படிச் சொல்வது, முதலில் அவர் என்ன நினைப்பார்.

''இது எனக்கு ரொம்ப ஓவராத் தெரியுது அண்ணி.''

''எது?''

''நீங்க இவ்வளவு செலவு பண்ணி எல்லாத்தையும் வாங்கினது.''

''நான் ஒண்ணு சொல்லட்டுமா?''

அப்படிக் கேட்ட அண்ணியைப் பார்த்தாள் லாவண்யா.

''கள்ளம் கபடமில்லாத உன் அன்புக்கு இது நான் குடுக்கற சின்ன, ம்கூம் ரொம்ப ரொம்பச் சின்ன அன்பளிப்பு அவ்வளவு தான். அதோட...''

.............

''நான் இப்ப செஞ்ச செலவெல்லாம் நான் எப்பவும் பர்ச்சேஸ் வரும்போது செய்யற செலவுல பத்துல ஒரு பங்கு தான், ஏன் அதுகூட இல்லன்னே சொல்லலாம்.''

''சரிதான்.''

துணிகளுக்கு மேட்சாக நகைகளை வாங்கும் அண்ணியைப் பொறுத்தவரை அது உண்மையாகத் தான் இருக்க முடியும்.

''அட கூல் லாவண்யா குட்டி, எங்க கொஞ்சம் சந்தோஷமா உன் ஸ்டைல்ல சிரிச்சுப் பேசு பாக்கலாம்.''

அண்ணனைப் போலக் குட்டி என்ற அழைப்பும், சிரிப்புனூடே அதட்டிப் பணிய வைத்த விதமும் தனது அண்ணியின் மேல் மிகுந்த மரியாதையையும் நட்புணர்வையும் கொண்டு வந்திருந்தது லாவண்யாவிற்கு.



மாலை நேரமாகி விட்டிருக்க ஒரு நல்ல ஹோட்டலுக்குச் சென்று சிம்பிளாக மாலை டிபனை முடித்தவர்கள் அப்படியே மேட்னி ஷோவுக்குச் சென்று விட்டிருந்தனர்.

படம் பிரமாதமாக இருந்ததோடு, பேசி சிரித்தபடியே படத்தைப் பார்க்க நேர்ந்தது. இருவருக்குமே மிகவும் பிடித்திருந்தது.

மற்றவர்களிடம் காட்டும் அக்கறை, ஆண்கள் முதல் அது யாராக இருந்தாலும் அனைவரையும் தூர நில் என்பதைப் போல அதே சமயம் மரியதையாக நடத்தும் விதம், தெரியாமல் கூட யாரையும் புண்படுத்தி விடாமல் வெகு யதார்த்தமாக நடந்து கொள்ளும் பாங்கு, எல்லாவற்றிற்கும் மேலாக எவ்வளவோ வசதியிருந்தும் அவசியத்திற்குக் கூட அதை வெளிப்படுத்தி விடாமல், முக்கியமாகத் துளியும் பந்தா இல்லாமல் நட்புணர்வுடன் பேசுவது,

இப்படி இன்னும் இன்னுமென்று யோசித்துக் கொண்டே போன லாவண்யா மனதிற்குள் மிகவும் பெருமையாகக் கூட உணர்ந்தாள்.

எல்லாவற்றிற்கும் மேலாக அத்தனை கூட்ட நெரிசலிலும் லாவகமாகக் காரை செலுத்திய தனது அண்ணியிடம் பைத்தியமாகிப் போனாள்.

வீட்டில் இன்னும்,

அண்ணியின் ஏவலுக்காக வேலைக்காரர்கள் அனைவரும் அவருடைய முகம் பார்த்துத் தயாராக நின்ற விதமும், அதற்கு மேல் அண்ணி சொன்ன வேலைகளை அவர்கள் தலையால் ஏந்திச் செய்ததையும் மிகுந்த ஆச்சரியத்துடன் கண்டாள்.

அப்படி இருந்தும் கூட அண்ணி அனைவரையும் மிகுந்த மரியாதையுடன் நடத்தியது அவளுடைய கண்களில் படத் தவறவில்லை.

சிறிது நேரத்தில் அண்ணியின் அப்பாவும் வர, மூவரும் இரவு உணவு எடுத்துக் கொண்டனர்.

அண்ணியைப் போலவே அவருடைய அப்பா பாலகிருஷ்ணனும் மிகவும் நன்றாகப் பேசியதில் வேற்றிடம் என்பதையே மறந்து போனாள்.

இரண்டாம் நாள் வீட்டிலேயே விதம் விதமாக சமையல் செய்து அனைவருக்கும் கொடுத்து அவர்களும் சாப்பிட்டார்கள். பிறகு பின் மாலைப் பொழுதில் நீச்சல் கற்றுக் கொடுக்கச் சொல்லி லாவண்யா ஒரேயடியாக நின்று விட்டதில் இரவு வரை நேரம் போனதே தெரியவில்லை.

அதற்குப் பிறகு மீண்டும் சுடுநீரில் குளித்துவிட்டு வந்து ருசியாக சமைக்கப்பட்டிருந்த சிக்கன் வகைகளை ஒரு பிடி பிடித்தார்கள்.

அன்று பாலகிருஷ்ணன் பிஸினஸ் மீட்டிங் டின்னருக்கு வர மாட்டேன் என்று சொல்லி விட்டிருக்க, பெண்கள் இருவருக்கும் ஒரே குதூகலமாகிப் போயிற்று.

கேலி, கிண்டல் என கலகலத்துக் கொண்டே சாப்பிட்டு முடித்தவர்கள், பிறகு சென்று இருவரும் பார்த்திராத ஒரு நல்ல படத்தை டி.வி.டி. ப்ளேயரில் போட்டுக் கொண்டு பார்க்கத் தொடங்கி விட்டிருந்தனர்.

மிகப்பெரிய எல்.இ.டி. டி.வி.யுடன் கூடிய ஹோம் தியேட்டரில் தான் இருப்பது வீடு என்பதையே மறந்து போயிருந்தாள் லாவண்யா.

முதல் நாள் தியேட்டரில் சென்று பார்த்தது எந்த விதத்திலும் இதைவிடப் பிரமாதமாக இருக்கவில்லையென்பதும்.

ஸ்வேதாவைப் பெருமை பொங்கப் பார்த்தாள் லாவண்யா.



பெரிய அண்ணிகள் இருவரும் எதற்கெடுத்தாலும் தங்களுடைய பிறந்த வீட்டையும், பிறந்த வீட்டின் வசதிகளையும், பெருமையாகப் பீற்றிக் கொள்வது தான் நினைவிற்கு வந்தது.

அவர்களுடைய வீட்டின் வசதி இந்த அண்ணியின் வீட்டு வசதியில் பத்தில் ஒரு பங்கு இருக்குமா, ம்கூம் நூறில் சில பங்கு.

இப்படியெல்லாம் நினைப்பதே தவறு தானென்றாலும் அப்படி நினைக்க வைத்தவர்களே அவர்கள் தானல்லவா.

ஆனால் இந்தச் சிறிய அண்ணி,

இத்தனை பெரிய வீட்டில் எத்தனையோ வசதிகளுடன் பிறந்து செல்வச் செழிப்புடன் வளர்ந்திருந்தாலும் அங்கு தங்களுடைய வீட்டில் யார் என்ன வேலைகளைச் சொன்னாலும் சற்றும் முகம் சுளிக்காமல் ஏன் சிரித்த முகத்துடனேயே சந்தோஷமாகச் செய்தார்களே.

அந்தப் பெருந்தன்மை யாருக்கு வரும்.

உண்மையிலேயே தனது அண்ணன் ஜெயவர்த்தன் கொடுத்து வைத்தவர் தான்.

சரிதான் அவருக்கு ஏற்ற மனைவி.

ஏன் அண்ணியோடு ஒப்பிடும்போது தனது அண்ணனும் எந்த விதத்திலும் சளைத்தவரல்லவே.

''என்ன லாவண்யா ஏதோ தீவிரமான யோசனைல இருக்க போலிருக்கு?''

''அப்படியெல்லாம் இல்ல அண்ணி, ஆனா...''

''ம், என்ன சொல்லு?''

''இங்க இவ்வளவு வசதியில இருந்துட்டு அங்க வந்து எப்படி அண்ணி எல்லாரையும் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு, சிரிச்ச முகத்தோட பேசறீங்க?''

தனது பெரிய இரண்டு அண்ணிகளையும் மனதிற்குள் வைத்துக் கொண்டு தான் லாவண்யா கேட்டாள் என்றாலும், அதை அப்படியே வெளியே சொல்ல அவளால் முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் அது ஸ்வேதாவிற்குப் புரியவே செய்தது.

''ரொம்ப சிம்பிள் லாவண்யா.''

புன்னகையுடன் தொடங்கிய அண்ணியை என்ன சொல்ல வருகிறார் என்பதைப் போலப் பார்த்தாள்.

''ஆரம்பத்துல நான் நடந்துக்கற விதத்த வெச்சு தான் என் குணத்த மதிப்பிடுவாங்க, அதனால தான் அப்படி நடந்துகிட்டேன். ஏன் இனியும் கூட. அதோட யாரையும் அவமதிச்சுப் பேசிப் பழக்கமில்லேங்கறதும் இன்னொரு காரணம்.''

''அதுக்காக எப்பவுமே அப்படியே இருந்துடுவேன்னு சொல்லிட முடியாது. அது யாரா இருந்தாலும் அவங்க நடந்துக்கற விதம் தப்பா இருந்தா அதப் புரிய வைக்க முயற்சி செய்வேன், ஒருவேள அது சிரமம்னா நாம மாறிக்க வேண்டியது தான்.''

''நீங்க கிரேட் அண்ணி.''

''அட, அப்புறம் என்ன திடீர்னு இப்படியொரு கேள்வி?''

''அது, அங்கிருக்கும் போது எனக்குமே அவ்வளவா பெரிசாத் தெரியாதது, இங்க வந்து பாத்ததுக்கப்புறம் ரொம்ப ஒரு மாதிரி...''

''வீடுன்னா எல்லா வேலைகளையும் நாமளும் பகிர்ந்து செய்யலாம் லாவண்யா. அதுல எனக்கு எந்த ஆட்சேபணையுமில்ல, ஆனா அவசியமில்லாம மத்தவங்கள டாமினேட் பண்ண நினைக்கறதுதான் தப்பு அத



ஒத்துக்கவே முடியாது'' என்று புன்னகையுடன் முடித்தாள்.

''அண்ணா...''

''ம், என்னமா?''

''இல்ல அண்ணாவப் புடிச்சதால தானா அண்ணி நீங்க இந்த அளவுக்கு எல்லாத்தையும் சகிச்சுக்கிட்டு விட்டுக் குடுத்துப் போறீங்க...''

''ஒரு விதத்துல அப்பிடிதான். அதோட பத்மினி, இந்து மதி ரெண்டு பேரையும் தவிர அங்க வீட்ல மத்த எல்லாரையுமே எனக்குப் பிடிச்சு தான் இருக்கு.''

''அதுக்காக அவங்க ரெண்டு பேரையும் சுத்தமாவே பிடிக்கலன்னு சொல்லிட முடியாது. அவங்க நடந்துக்கற விதத்தக் கொஞ்சம் மாத்திக்கிட்டாப் போதும்.''

சரிதான், ஆனால் அது நடக்கக் கூடிய ஒன்றல்லவே என்று நினைத்துக் கொண்ட லாவண்யா அதை வெளியே சொல்லவில்லை.

மற்றது எப்படியோ இந்தச் சின்ன அண்ணியின் வீட்டையும் வசதிகளையும் பெரிய அண்ணிகள் இருவரும் பார்க்க நேர்ந்தால் அதற்குப் பிறகாவது கொஞ்சம் தங்களை மாற்றிக் கொள்வார்களோ என்ற எண்ணம் மட்டும் லாவண்யாவின் மனதின் ஒரு மூலையில் இருக்கவே செய்தது.

''திரும்பவும் என்ன யோசன?''

தான் நினைத்ததை லேசான தயக்கத்துடன் லாவண்யா சொல்ல, ''அசடு'' என்று சிரித்தாள் ஸ்வேதா.

''வசதியப் பாத்து உடனே பயத்துல மாறிடுவாங்களாக்கும், அதோட உன் பாயின்ட் ஆஃப் வியூலயே பாத்தாக் கூட என்கேஜ்மென்ட்டுக்கு அவங்க இங்க வாந்தான செஞ்சாங்க.''

ஸ்வேதா கேட்க, இப்பொழுது உண்மையாகவே அசடு வழிந்தாள் லாவண்யா.

''ஆனாலும்...''

''ம்.''

''அப்ப சும்மா ஒரு பத்து நிமிஷம், சரி வேண்டாம் ஒரு மணி நேரமே இருந்திருக்கட்டும், அதுல அவங்களுக்கு என்ன அண்ணி புரிஞ்சிருக்கும்...''

''உன் பேச்சுலயே நீ சின்னப் பொண்ணுங்கறது தெரியுதுடாம்மா. அப்ப வசதியில்லாதவங்கள மதிக்க வேண்டாமா, இல்ல மதிக்க வேண்டிய அவசியம் இல்லேங்கறியா?''

''பணம் வரலாம், போகலாம். மனுஷங்கள தான் முதல்ல பாக்கணும், மதிக்கணும்.''

மேலும் சிறிது நேரமும் கூட தனது அண்ணி ஸ்வேதாவிடம் பேசிக் கொண்டிருந்த லாவண்யாவிற்கு அவளின் மீது பெருமதிப்பு ஏற்பட்டிருந்தது.

## 15

சென்றதே தெரியாத அளவிற்கு இரண்டு நாட்கள் சென்று விட்டிருக்க மூன்றாம் நாளோ அதை விட இனிமையாகக் கழிந்தது.

மூன்றாம் நாள் காலையிலேயே ஃப்ரஷ்ஷாகக் குளித்து முடித்து காலை டிபனை முடித்தவர்கள் டிரைவரைக் காரை எடுக்கச் சொல்லி பிக்னிக் கிளம்பி விட்டிருந்தனர்.

தனக்கு மிகவும் பிடித்த இடங்களுக்கெல்லாம் லாவண் ... சுற்றிக் காட்டினாள் ஸ்வேதா.



கண் மூடித் திறப்பதற்குள் அந்த நாளும் கழிந்து விட்டதைப் போலிருந்தது.

பிக்னிக் முடிந்து மாலை வீடு திரும்பிக் கொண்டிருந்த பொழுது, ''அண்ணி நான் இன்னைக்கு ஊருக்குக் கிளம்பட்டுமா?'' என்று கேட்டாள் லாவண்யா.

''ஏன் லாவண்யா?''

''என்ன அண்ணி இப்படிக் கேக்கறீங்க, வந்து மூணு நாள் போனதே தெரியல. இனி ரெண்டு நாள்ல மாமா பையனுக்குக் கல்யாணம் வருது. அதுக்கடுத்த நாள் காலேஜ் ரீ ஓப்பன்.''

''சரிதான், ஆனா நாளைக்குக் காலைல கிளம்பிக் கோயேன்.''

''இல்ல அண்ணி போய் ரொம்ப வேலையிருக்கு. அம்மாகூட ரெண்டு தடவ கூப்டுட்டாங்க.''

''சரிதான் வீட்ல போய் டிபன் முடிச்சுட்டுக் கிளம்பிக் கலாம்.''

''டிபனெல்லாம் வேண்டாம் அண்ணி, பசியே இல்ல. அங்க வீட்டுக்குப் போய்ப் பார்த்துக்கறேன்.''

அடுத்த அரை மணி நேரத்தில் இருவரும் வீடு வந்து சேர்ந்திருக்க லாவண்யாவுக்கென வாங்கித் தயாராக பேக் செய்து வைக்கப் பட்டிருந்த அனைத்தையும் டிரைவரிடம் சொல்லி காருக்குள் எடுத்து வைக்கச் சொன்னாள் ஸ்வேதா, முக்கியமாக லாவண்யாவின் கருத்தை உருத்தாத வண்ணம்,

''நீங்க எப்ப வர்றீங்க அண்ணி?''

''நான் ரெண்டு நாள் கழிச்சு வர்றேம்மா.''

''அண்ணன் வந்ததுக்கப்புறம் தான் வருவீங்கன்னு சொல்லுங்க.''

''இல்லமா, வேற வேலையும் சிலது இருக்கு.''

''அப்படியென்ன அந்த வேற வேல?''

கடந்த சில நாட்களாகத் தோழிகள் போலப் பழகிய விதத்தில் இப்படி சகஜமாகப் பேசும் அளவிற்கு இருவருமே வந்திருந்தனர்.

''என்ன அண்ணி, அப்படி எந்த வேலையும் இல்ல...''

''அட, நான் சொல்றத இன்னும் கூட நீ நம்பலையா! என் டியர் மோஸ்ட் ஃப்ரண்ட் ஆஷாவுக்கு நாளைக்கு மறுநாள் கல்யாணம்மா...''

''அடடா ஸாரி அண்ணி அங்க ஊர்ல இருந்து கிளம்பும் போதே கூட சொன்னீங்க தான அண்ணி, நாந்தான் மறந்தே போயிட்டேன்.''

''ஆமா லாவண்யா'' என்றவள் முக்கியமாக தான் ஊருக்குக் கிளம்பி வந்ததே கூட அதற்காகத்தான் என்பதை மட்டும் வெளியே சொல்லவில்லை.

அதைச் சொன்னால் பாவம் சில நாட்களாகத் தன்னால் அண்ணிக்கு சிரமமென்று எண்ணி விடுவாளோ என்று அதை மறைத்து விட்டாள்.

லாவண்யா என்ன சொல்லியும் கேட்காமல் அவளுக்கு சூடாக இருந்த முந்திரி பக்கோடாவையும், பாதாம் அல்வாவையும் கொடுத்து சாப்பிட வைத்த பின்னரே கிளம்ப அனுமதித்தாள்.

அதே சமயம் அவையிரண்டும் இரு பெரிய எவர் சில்வர் சம்படங்களில் நிரப்பப்பட்டு, காருக்குள்ளும் வைக்கப்பட்டிருந்தன.

''சரி அண்ணி நான் கிளம்பறேன்.''

''சரிடாம்மா, அங்க எல்லாரையும் கேட்டதா சொல்லு.''

''சரி அண்ணி சொல்றேன்.''



''அத்தைக்கு நைட்டோ இல்ல நாளைக்குக் காலையோ பேசறேன்னு சொல்லிடு.'' என்ற ஸ்வேதா கார் கிளம்பும் வரை அங்கேயே இருந்து விட்டுக் கார் கண்ணை விட்டு மறைந்த பிறகே வீட்டிற்குள் வந்தாள்.

மனமே இல்லாமல் தான் தனது அண்ணியின் வீட்டிலிருந்து கிளம்பியிருந்தாள் லாவண்யா.

அது ஸ்வேதாவிற்கும் புரியவே செய்தது.

எவ்வளவு அன்பான பெண்ணென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

முக்கியமாக அந்த வெகுளித்தனம்,

அதுதான் லாவண்யாவிடம் ஸ்வேதாவிற்கு மிகவும் பிடித்த குணங்களில் ஒன்றாக இருந்தது.

ஸ்வேதா இப்படி நினைத்துக் கொண்டிருக்க, அதே சமயம் லாவண்யாவும் அதைத் தான் எண்ணிக் கொண்டிருந்தாள்.

யாருடைய மனதையும் புண்படுத்தாமல் அதே சமயம் யார் யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது தெரிந்து, ஒவ்வொருவரையும் வைக்க வேண்டிய இடத்தில் வைத்து...

இப்படி இன்னும் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாமே என்றிருந்தது.

அதிலும் அதி புத்திசாலித்தனமான வெகுளி தனது அண்ணி.

அது மட்டுமா,

அறிவான, அழகான ஏன் அடக்கமான...

தனது கற்பனை போகும் விதத்தில் சிரிப்பு கூட வந்திருந்தது லாவண்யாவிற்கு.

ஏற்கனவே ஸ்வேதா அண்ணியிடம் தான் தலை சுற்றிப் போயிருப்பதாகக் கூறும் பெரிய அண்ணிகள் இருவரும் இனி தன்னை ஏளனத்துடன் தான் பார்க்கப் போகிறார்கள்.

தன்னை ஏதாவது சொன்னாலும் கூடப் பரவா யில்லை. ஆனால் ஸ்வேதா அண்ணியை அவர்கள் ஏளனமாகப் பேசுவதற்குத் தான் எக்காரணம் கொண்டும் இடம் கொடுத்து விடவே கூடாதென்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அது தன்னால் முடியுமா.

முடியுமென்ற நம்பிக்கை துளியும் இருக்கவில்லை.

சரிதான். இயன்ற அளவு முயன்று பார்க்கலாம்.

அப்படிப் பார்த்தால் பெரிய அண்ணிகள் இருவரும் யாரிடம்தான் மனதார மரியாதை கொடுத்து நடந்து கொள்கிறார்கள்.

முக்கியமாக அவர்களைத் தவிர வேறு யாரையும் நல்ல விதமாகப் பேசினால் அவர்களுக்குப் பிடிக்காதே.

அவர்களுக்குப் பிடிக்கும் விதமாக நடந்து கொள்ள வேண்டுமென்றால் இனி ஜால்ரா தான் போட்டாக வேண்டும்.

அப்பொழுதும் கூட என்னைவிட அவளுக்கு அதிக மாகப் போட்டு விட்டாயென்று குறை கூறவும் தயங் காதவர்களாயிற்றே.

லாவண்யா காரில் வந்து இறங்கியபோது அவளுடைய சின்ன அண்ணன் தவிர மற்ற அனைவருமே வீட்டில் தான் இருந்தார்கள்.

அதுவரை இருந்த நல்ல மனநிலை உடனேயே மறைந்து போயிருந்ததோடு யார் என்ன சொல்லி



விடுவார்களோ என்று பயந்து கொண்டே தான் இறங்கி வீட்டிற்குள் வந்தாள்.

அதற்குக் காரணமும் அவளுடைய அண்ணிகள் தான் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லையே.

சும்மாவே தான் கொண்டு வந்தவற்றையெல்லாம் பார்த் துத் தாயும், தந்தையும் என்ன சொல்லி விடுவார்களோ என்று பயந்து கொண்டிருந்தவளுக்கு, அண்ணிகளின் குறுக்குக் கேள்விகளும் ஏளனப் பேச்சுகளும் இன்னும் அந்தப் பயத்தை மிகைப்படுத்தி விட்டிருந்தன.

ஆனாலும் அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டாள்.

அனைத்தையும் வீட்டிற்குள் கொண்டு வந்து வைத்து விட்டு டிரைவர் கிளம்புவதற்கு அனுமதி கேட்க, சாப்பிடச் சொல்லி உபசரித்து அனுப்பினார் காஞ்சனா.

டிரைவர் கிளம்பிய பிறகு தான் லாவண்யாவால் இயல் பாக மூச்சுகூட விட முடிந்ததெனலாம்.

அந்த அளவிற்கு எங்கே டிரைவருக்கு முன்பாக அண்ணிகள் இருவரும் ஏளனமாக எதையும் கேட்டு விடுவார்களோ என்று பயந்து போயிருந்தாள்.

''என்னமா இதெல்லாம்?''

டிரைவர் கிளம்பியதும் தாய் கேட்க ''எதுமா?'' என்று கேட்டாள் லாவண்யா.

''என்ன ஒண்ணுமே புரியாதவ மாதிரி கேக்கற?''

''ஓ இந்த ஸ்வீட் காரமா? அது அண்ணி எனக்குத் தெரியாமயே எடுத்துக் காருக்குள்ள வெச்சுட்டாங்கமா. இப்பக் கொஞ்சம் முன்னாடி கார்ல வந்துட்டிருக்கும் போது தான் போன்ல சொன்னாங்க.''

..........

''நான் போய் எல்லாருக்கும் அத எடுத்துக் குடுக்கட்டுமா?''

''அதிருக்கட்டும், நைட் டிபன் சாப்புட்ற நேரமே ஆயிடுச்சு அப்பவே பரிமாறிக்கலாம்.''

''சரிமா.''

''இதெல்லாம் என்ன?''

மற்ற கவர்கள் அனைத்தையும் பார்த்துத் தாய் கேட்பது புரிந்தது.

''அது...''

''என்ன அவ யூஸ் பண்ணிட்டுத் தூக்கி வீசறதக் குடுத்திருப்பா, இவளும் தூக்கிட்டு வந்திருப்பா.''

''அதுதான, நம்ம குடும்ப மானத்தப் போய்க் கப்பலேத்திட்டு வந்திருக்கா.''

அண்ணிகள் சொன்னது காதில் விழாதது போல தாயைப் பார்த்தவள், நடந்ததை மேலோட்டமாகச் சொன்னாள்.

''மேக்ஸிமம் எல்லாம் அண்ணியோடது தாம்மா, அவங்க ரூம்ல கொண்டு போய் வைக்கணும்'' என்றும்,

''அங்கு ஊரில் அனைவரும் நலமா என்று மேலோட்டமாக சில கேள்விகளைக் கேட்டு விட்டுத் தந்தை அங்கிருந்து நகர, ''சரிதான்மா எல்லாத்தையும் எடுத்து வெச்சுட்டு வா டிபன் எடுத்து வைக்கலாம்'' என்று தாயும் அங்கிருந்து நகர்வதை சற்று நிம்மதியுடன் கண்டாள்.

இப்பொழுது அண்ணன்கள் இருவரும் அண்ணிகளிடம் முழுமையாக மாட்டிக் கொண்டு விட்டிருக்க, பொதுவான பாவனையில் பார்த்தாள் லாவண்யா.

''எங்க நீ கொண்டு வந்ததையெல்லாம் நாங்களும் பாக்கலாமா?'' என்று அண்ணிகள் இருவரும் வர,



''ஒயெஸ்'' என்று பெருமையுடன் அனைத்தையும் எடுத்துக் காட்டினாள்.

''என்னங்க நீங்களும் வாங்க.''

என்று அண்ணிகள் இருவரும் அண்ணன்களை அழைக்க, ''ஆமாம் எங்களுக்கெல்லாம் வேற வேலையில்ல, பாருங்க'' என்று தங்களுடைய மனைவிகளிடமிருந்து அண்ணன்கள் இருவரும் நழுவுவதை ஒருவிதத் திருப்தியுடன் கண்டாள் லாவண்யா.

அண்ணிகள் ஒவ்வொன்றையும் பார்த்துக் கொண்டே வர, தானும் ஆவலுடன் அனைத்தையும் எடுத்துக் காட்டினாள்.

அது மட்டுமல்லாமல் எதெது எங்கே வாங்கியதென்று கூட ஆசையுடன் சொல்லிக் கொண்டே வந்தாள்.

''எல்லாம் பயங்கரமான விலையிருக்கும் போலிருக்கே?''

பெரிய அண்ணி கேட்க ''பின் அவகிட்ட நிறையப் பணமிருக்குன்னு காட்ட வேண்டாமா, அதுவும் சின்னப் பொண்ணுங்கறதால பந்தாவா வாங்கிக் குடுத்திருப்பா'' என்றாள் சின்ன அண்ணி.

''சரிதான், அதுல என்ன சந்தேகம்?''

பெரிய அண்ணிகள் இருவரும் சின்ன அண்ணியை இன்னும் ஏளனமாக ஏதேதோ சொல்லிக் கொண்டே போக, லாவண்யாவால் அதைச் சுத்தமாக ஜீரணித்துக் கொள்ள முடியாது போயிற்று.

''சரிதான், பின்ன அவ வீட்டு வசதியக் காட்றதுக்காகத்தான் இவள வலியக் கூட்டிட்டுப் போயிருக்கா, அதுக்கு மேல சொல்ல இனி என்ன இருக்கு?''

இல்லையே,

ஸ்வேதா அண்ணி தன்னை அழைக்கவே இல்லையே,

தானாக வருவதாகச் சொன்ன பிறகு தானே அவர்கள் அழைத்துப் போகவே செய்தார்கள்.

ஆனால் அதை இவர்களிடம் சொல்ல முடியுமா?

சொன்னால் அதற்கு வேறு உருவம் கொடுத்து இன்னும் கேவலமாகப் பேச மாட்டார்களா என்ன,

பாவம் ஸ்வேதா அண்ணி,

அவர்கள் முக்கியமாகக் கிளம்பியதே அவர்களுடைய தோழியின் திருமணத்திற்கு முன்னின்று அனைத்தையும் செய்யத்தான் இல்லையா.

அதற்குள் தான் வேறு சும்மா இருக்காமல் உடன் வருவதாகச் சென்று வந்ததுமில்லாமல், இவர்களெல்லாம் இப்படிப் பேசுவதற்கும் இடம் கொடுத்து விட்டோமே பாவம் ஸ்வேதா அண்ணி என்று ஒரு மாதிரியாகி விட்டிருந்தது லாவண்யாவிற்கு.

அதற்காக இப்படியெல்லாம் கூடப் பேசுவதாமா.

அதிலும் வசதியைக் காட்டவென்று செலவு செய்ததாகச் சொல்கிறார்களே,

ஒரு இடத்திலாவது அண்ணி பணத்தைப் பற்றிப் பேசியிருப்பார்களா,

அல்லது தான் பார்க்கத்தான் பணத்தை எடுத்துக் கொடுத்திருப்பார்களா.

இரண்டுமே இல்லையே,

அதிலும் அண்ணியின் செல்வ நிலைக்கு இதெல்லாம் ஒன்றுமே இல்லையே.

ஆனால் அதை இவர்களிடம் சொன்னால் ஒத்துக் கொள்வார்களா என்ன,



ஏன் காதில் கூட வாங்கிக் கொள்ள மாட்டார்களே,

அதற்கு மேல் வாங்கினாலும், சரிதான் நீ இப்படியெல்லாம் பேச வேண்டுமென்று தானே அவளும் இதையெல்லாம் செய்திருக்கிறாளென்று வாய் கூசாமல் சொல்வார்கள்.

அதனால் தான் வாயைத் திறக்காமல் இருப்பது தான் அனைத்திலும் உத்தமம் என்று தோன்றி விட்டிருக்க, பேசாமல் இருந்து விட்டிருந்தாள்.

ஆனால் அந்த மௌனமே அவளுடைய பெரிய அண்ணிகளை மேலும் அதிகமாகப் பேச வைத்திருந்ததென்று கூடச் சொல்லலாம்.

அனைத்திற்கும் மேலாக என்னதான் ஸ்வேதா வாங்கிக் கொடுத்திருந்தவையனைத்துமே மிகவும் விலையுயர்ந்தவையே என்றாலும் அதில் ஒன்றில் கூட ப்ரைஸ் டேக் இருக்கவில்லை.

காரணத்தோடுதான் அண்ணி தானாக அதை அகற்றியிருக்க வேண்டுமென்று நினைத்தவளுக்கு, ஸ்வேதாவின் மேலிருந்த மரியாதை இன்னும் கூடச் சற்று அதிகமாகியிருந்தது.

அப்படிப்பட்டவர்களைப் போய் இந்த அண்ணிகள் இருவரும் என்னவெல்லாம் சொல்லி விட்டார்களென்று மனதிற்கு மிகவும் வேதனையாகவும்.

## 16

''ஸ்வேதா.''

''டாடி.''

''சாப்பிடலாமா?''

"ஆமாம் டாடி. எனக்கும் ஒரே பசி நானும் உங்களுக்காக தான் வெயிட்டிங்."

"லாவண்யா?"

"அவ கிளம்பிட்டா டாடி, இப்ப தான் ரெண்டு மணி நேரமாச்சு."

"அப்படியா?"

"ம்."

"ஏன் இந்த நேரத்துக்கு. காலைல போயிருக்கலாமே."

"சொன்னேன், ஒரேயடியா நின்னுட்டா. அதோட அவங்க மாமா மகனோட கல்யாணமும் நெருங்கிடுச்சே..."

"சரிதான்."

"அவ இல்லாம வீடே வெறிச்சோடிக் கிடக்கு இல்ல டாடி?"

"சரிதான் கண்ணம்மா."

மகளே கேட்கா விட்டாலும் கூடக் கடந்த சில நாட்களாக அவள் எவ்வளவு சந்தோஷமாக இருந்தாளென்பது பாலகிருஷ்ணன் அறியாததல்லவே.

கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பதைப் போல மகளைத் திருமணம் செய்து கொடுத்த பிறகு தான் தனிமையின் கொடுமையை அவரும் முழுமையாக உணர்ந்தார் எனலாம்.

மகளுக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து தனிமையில் மகள் தானும் எவ்வளவு சிரமப்பட்டிருப்பாள் என்பதையும், மகளைப் பார்க்காமல் அவளுடன் சில வார்த்தைகள் பேசாமல், அந்த நாளே முற்றுப் பெறாதது போல மிகவும் தவித்துப் போனார்.



அந்த வேதனை சற்றும் குறையாமல் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே செல்ல, செய்வதறியாது திகைத்தார்.

ஒருவேளை மகளிடம் பேசினால் சற்று ஆறுதலாக இருக்குமோ என்று தோன்றியதில் காலை, மாலை என இரண்டு வேளைகளிலும் தொலைபேசியில் மகளை அழைத்துப் பேசுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

அதற்கு ஓரளவு பலன் கிடைக்கவே செய்தது.

ஆனால் போகப்போக அதற்கும் தயக்கமாகி விட்டிருந்தது.

எங்கே மகளையும் சேர்த்துக் கலங்க வைத்து விடுவோமோ என்று பயம் வந்திருந்ததோடு, மற்றவர்களும் என்ன நினைத்து விடுவார்களோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அப்படி பாலகிருஷ்ணன் கலங்கிக் கொண்டிருந்த வேளையில் தான் கணவன் வெளியூர் சென்று விட்டதாக ஸ்வேதா தனது தந்தையின் வீட்டிற்கு வந்ததும்,

"அப்புறம் கண்ணம்மா."

"என்ன டாடி."

"மாப்ள போன் பண்ணியிருந்தார்மா."

"அப்படியா?"

"ம், கமிங் சன்டே அவரோட மாமா மகனுக்குக் கல்யாணமாம்."

"ஆமாம் டாடி சொல்லுங்க."

"அதுக்கு நீயும், மாப்பிள்ளையும் தம்பதி சமேதராய் போகணுமாம். அதனால அதுக்குள்ள உன்ன அங்க ஊருக்குக் கிளம்பிடச் சொன்னார். அவரும் அதுக்குள்ள எப்படியாவது வேலைய முடிச்சுட்டு வந்துட்றதா சொன்னார்."

''ஆமா டாடி, என்கிட்டயும் அப்படி தான் சொல்லி யிருக்கார். நீங்களும் கட்டாயம் வரணும்னு சொல்லிட் டிருந்தாரே.''

''ஆமாம்மா அதுவும் சொன்னார், அதோட மாப்பிள்ள வீட்டுக்காரங்களும் வந்து குடும்பத்தோட அழைச்சுட்டுப் போயிருக்காங்களே. அதனால நானும் கட்டாயம் வரத் தான் வேணும்.''

''சரிதான் டாடி அப்ப சன்டே ஈவினிங் ரெண்டு பேரும் கிளம்பலாம் சரியா இருக்கும்.''

''நான் அப்ப வந்தாலே போதும் தான், ஆனா நீ...''

''ஆஷாவோட கல்யாணம் சன்டே மார்னிங் டாடி எப்படி யும் அங்க இருந்து எல்லாத்தையும் முடிச்சுட்டு வரவே எனக்கு மதியமாயிடுமே.''

எதுவோ மனதிற்கு சரியாகப் படவில்லை பாலகிருஷ்ண னுக்கு.

ஆனாலும் மகளிடம் சரியென்று தலையாட்டி வைத் தார்.

அப்படியே பேசிக் கொண்டே இரவு உணவு முடிய, அதற்குப் பிறகும் எதையெதைப் பற்றியோ பேசிக் கொண்டிருந்த தந்தையும் மகளும் வெகு நேரம் கழித்தே தூங்கச் சென்றனர்.

பாலகிருஷ்ணன் முதலில் ''சரிமா நான் தூங்கப் போறேன் குட்நைட்'' என்று எழுந்து சென்றிருக்க, இன் றைக்கென்ன தந்தை அதிசயமாக இப்படிப் பேசப் பிடித்துக் கொண்டு விட்டாரென்று ஆச்சரியமாகக் கூட இருந்தது ஸ்வேதாவிற்கு.

புகுந்த வீட்டிற்கு நாளொன்றுக்கு இரண்டு முறை தந்தை தன்னை அழைத்துப் பேசியது அவளுக்கொன்றும் வித்யாசமாகப் பட்டிருக்கவில்லை.



புது இடம், புது மனிதர்கள் என அனைத்தும் பழக்க மாகும் வரை மகள் சற்று ஆறுதலாக உணரட்டும் என்று அழைத்துப் பேசியிருப்பாராக இருக்குமென்று நினைத்துக் கொண்டாள்.

தந்தையின் குணத்திற்கு அப்படித்தான் எண்ண முடிந்தது.

ஆனால் இப்பொழுது,

தந்தையிடம் எதுவோ வித்யாசமாகத் தெரியவில்லை.

சற்றே யோசித்தவளுக்கு சிரிப்புக் கூட வந்திருந்தது.

பாவம் மகளென்று தந்தை தனது தூக்கத்தையும் கெடுத்துக் கொண்டு அமர்ந்து பேசினால் தான் இப்படியா எண்ணுவது,

எல்லாம் இந்த ஜெயவர்த்தனால் வந்தது.

கடந்த சில நாட்களாக கணவனிடம் மனம் விட்டுப் பேசாததும், எங்கே தான் தன்னறைக்கு செல்வதற்குள் அழைத்து விடுவானோ என்ற எண்ணமுமே அவளை அந்த அளவிற்குக் கிளர்ச்சியுறச் செய்திருந்ததெனலாம்.

அவள் எண்ணியது சரியே என்பதைப் போல ஸ்வேதா தன்னுடைய அறையை வந்து அடைவதற்கும், அவ ளுடைய கணவன் ஜெயவர்த்தனிடமிருந்து அழைப்பு வருவதற்கும் சரியாக இருந்தது.

மனம் படபடக்க, அட்டெண்ட் செய்துக் காதில் வைத் தாள்.

தன்னை விடவும் கணவன் மிகவும் ஏங்கிப் போயிருக் கிறான் என்பது அவனுடன் பேசத் தொடங்கிய பிறகு தான் புரிந்தது.

வெகுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு மனமே இல்லாமல் தான் அழைப்பை துண்டித்தாள்.

கணவனின் வார்த்தைகள் தந்த வெட்கம் முகத்தை இரத்தமெனச் சிவக்கச் செய்து விட்டிருக்க, உதட்டைக் கடித்துத் தன்னை சமனப்படுத்திக் கொண்டாள்.

ஏதேதோ எண்ண ஓட்டங்கள் மனதைச் சிறகடிக்கச் செய்திருக்க, கணவனைப் பிரிந்த வேதனையை அன்று தான் முழுமையாக உணர்ந்தாள் எனலாம்.

## 17

''குட்மார்னிங் டாடி.''

''வெரி குட்மார்னிங் ஸ்வேதா குட்டி.''

''காபி குடிச்சீங்களா?''

''ம்கூம், இன்னுமில்ல.''

''வர்றேன்'' என்றவள் அங்கு வராந்தா ட்ரேயில் தயாராக வைக்கப்பட்டிருந்த அந்த விலையுயர்ந்த ப்ளாஸ்கி லிருந்த காபியை எடுத்து இரண்டு கப்களில் ஊற்றி ஒன்றைத் தந்தையிடம் கொடுத்துவிட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

''நேரத்துலயே எழுந்துட்டிங்களா டாடி?''

''வழக்கம்போல நாலு மணிக்கு தான்.''

''இப்ப மணி ஏழாச்சு இவ்வளவு நேரமா நீங்க ஏன் காபி எடுத்துக்கல?''

''எக்ஸர்ஸைஸ் முடிச்சுட்டுக் கொஞ்சம் முன்னாடி தாம்மா வந்தேன், அப்புறம் வந்து பேப்பர் படிச்சுட்டு அப்படியே நேரம் போயிடுச்சு.''

அப்படியானால் சாப்பிடுவது முதல் அனைத்துமே இப்படிதானா, இந்த மாதிரி சென்றால் பிறகு உடல்நிலை என்ன ஆவது.



அப்படி நினைத்துக் கொண்ட ஸ்வேதாவால் அதை அப்படியே தந்தையிடம் கேட்க முடிந்திருக்கவில்லை.

பாவம் தன்னுடன் சேர்ந்து குடிக்கலாமென்று தனக் காகக் காத்துக் கொண்டிருப்பாராக இருக்கும், அதைப் புரிந்து கொள்ளாமல் ஏன் மேலும் அவரைக் காயப் படுத்த வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

''அப்புறம் கண்ணம்மா.''

''சொல்லுங்க டாடி.''

''நீ எப்பக் கிளம்பணும்?''

''இப்பவே டாடி, டிபன் கூட ஆஷா வீட்லயே போய் சாப்புட்டுக்கறேன்.''

''என்ன அவ்வளவு அவசரம்?''

''ஆமாம் டாடி, பாவம் எதுவுமே தெரியாம முழுச்சுட் டிருப்பா. போய்ப் பாத்தா தான் தெரியும்.''

''பெரிய மனுஷி உனக்கு மட்டும் எல்லாம் தெரியு மாக்கும்?''

தந்தையின் கேள்வியில் அவளையறியாமலேயே சிரித்து விட்டிருந்தவள், ''அவ அளவுக்கு மோசம் கிடையா தாக்கும்'' என்று அசடு வழிந்தாள்.

பிறகு ''சரிதான் விடுங்க எனக்கும் ஒண்ணும் தெரியாது, போதுமா?'' என்றாள்.

மகளின் பாவனையில் இப்பொழுது பாலகிருஷ்ண னுக்கும் சிரிப்பு வந்து விட்டிருந்தது.

அடுத்த ஒரு மணி நேரத்தில் ஆஷாவின் வீட்டை அடைந்திருந்தாள் ஸ்வேதா.

ஆஷா ஸ்வேதாவின் உயிர்த் தோழி.

கல்லூரிக் காலத்தில் தொடங்கிய நட்பு நாளுக்கு நாள் இறுகி இனிதே தொடர்ந்தது.

ஆஷாவின் நிலையும் கிட்டத்தட்ட ஸ்வேதாவின் நிலையைப் போன்றது தான்.

ஸ்வேதாவிற்கு தாய் இல்லை.

ஆஷாவிற்கு இருந்தும் இல்லாதது போலத்தான்.

ஆஷா பிறந்த உடனேயே பிரசவத்தில் அவளுடைய தாய் மறைந்து விட்டிருக்க, அடுத்த சில மாதங்களி லேயே அவளுடைய தந்தை வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

தொடர்ந்து வந்த சில வருடங்களிலேயே வேலை மாற்றல் வந்ததில் பிறகு மனைவியுடன் டெல்லிக்கு சென்று செட்டி லாகி விட்டிருந்தார்.

பிறகு அங்கே அவருக்குக் குழந்தை குடும்பம் என தனி ராஜ்ஜியம் உண்டானதில் இங்கிருந்த முதல் மனைவி யின் குழந்தையான ஆஷாவை விட்டுக் கொஞ்சம் கொஞ்ச மாகப் பிரிந்து போய் விட்டிருந்தார்.

எப்படியோ இங்கு ஆஷாவிற்கு அவளுடைய தாய் வழிப்பாட்டி தாத்தா இருவரும் இருந்தனர்.

நல்ல ஆரோக்கியத்துடனும் கூட.

அதனால் தாயில்லாப் பேத்தியை அவர்கள் கண் களாகப் போற்றி வளர்த்தார்கள்.

வசதியென்று பிரமாதமாக எதுவும் இல்லா விட்டாலும் கூட தேவைகளுக்கு அதிகமாவே இருந்ததில், மற்றபடி எந்தப் பிரச்சனையும் இல்லாது வாழ்க்கை போயிற்று.

ஆஷாவின் தந்தையும் வருடத்திற்கு ஒருமுறை அதுவும் அவர் மட்டும் வந்து மகளைப் பார்த்து விட்டுக் கடமையே என்று எதையாவது செய்து விட்டுப் போவார்.

அதையும் வேண்டாமென்று மறுத்து விட மனம் துடித் தாலும் தாத்தா பாட்டிக்காகத் தன்னைக் கட்டுப்படுத்திக்



சரிதான் தந்தையாக அவருக்கும் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது தானே செய்யட்டுமென்று விருப்பு, வெறுப்பு என்று எதையும் காட்டாமல் மனதைக் கல்லாக் கிக் கொள்வாள்.

அந்த நிலையில் தான் இப்பொழுது ஆஷாவிற்குத் திருமணம் முடிவாகி, அந்தத் திருமணத்திற்கும் இன்னும் இரண்டு நாட்களே உள்ளன என்னும் நிலை வந்திருந்தது.

''வாவ் ஸ்வேதா, வா வா வா!''

வீட்டிற்குள் வந்த தோழியை சந்தோஷமாக வரவேற் றாள் ஆஷா.

''நான் வர்றதுல என்ன உனக்கு இவ்வளவு ஆச்சரியம?''

''நீ வருவேன்னு தெரியும், ஆனா இவ்வளவு நேரத்து லயே எதிர்பாக்கல.''

''சரிதான், அப்புறம் வீடு இன்னும் கல்யாணக் களையே கட்டலையே.''

''ம் கேளு, நீயே இப்படி வந்தா இனி மத்தவங்களை யெல்லாம் கேக்கவா முடியும்?''

''ஸாரிமா.''

''அச்சச்சோ சும்மாதான் ஸ்வேதா அப்படி சொன்னேன், ஆமாம் உன் நாத்தனார் லாவண்யா எங்க அவங்களையும் அழைச்சுட்டு வந்திருக்கலாமில்லையா?''

''அவ நேத்தே ஊருக்குக் கிளம்பிட்டா...''

''அதுக்குள்ள எதுக்கு கிளம்ப விட்ட...''

''அது சரி, அவங்க மாமா பையனுக்கு சன்டே ஈவினிங் கல்யாணம். பின்ன கிளம்ப வேண்டாமா?''

''ஓ, சரிதான். அப்படின்னா...''

''என்ன ஆஷா, சொல்லு?''

''இல்ல நீயும் தான அந்தக் கல்யாணத்துக்குப் போக வேண்டியிருக்கும்?''

''நிச்சயமா. இங்க உன் மேரேஜ முடிச்சுட்டுக் கிளம்பினா சரியா இருக்கும்.''

தோழிகள் இருவரும் பேசிக் கொண்டே காலை உணவை எடுத்துக் கொண்டனர்.

கோவிலுக்குச் சென்றுவிட்டு தாத்தா, பாட்டி வர அவர்களிடம் பேசிக் கொண்டிருந்ததில் சற்று நேரம் போனது.

அனைத்தையும் எடுத்துச் செய்யவோ, முன்னின்று பார்க்கவோ அவ்வளவாக யாரும் இல்லாததால் அனைத்து வேலைகளையும் மாப்பிள்ளை வீட்டினர் அவர்களே பார்த்துக் கொள்வதாகப் பெருந்தன்மையுடன் சொல்லி விட்டிருந்தனர்.

உனக்கு என்னென்ன வேண்டுமோ நீயே பார்த்துக் கொள்ளென்று கல்யாணச் செலவுகளுக்கு ஆஷாவின் தந்தை ஒரு பெருந்தொகையைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போய் விட்டதால் பணப் பிரச்சனையும் தீர்ந்து போனது.

தான் எதையும் கேட்டு தோழியின் மனதைப் புண்படுத்த வேண்டாமே என்று ஸ்வேதா நினைத்துக் கொண்டிருக்கும்போதே தந்தையின் குடும்பத்தினர் மறுநாள் காலையில் வந்து சேர்ந்து விடுவார்களென்று அறிவித்தாள் ஆஷா.

எப்படியோ திருமணத்திற்கு ஒரு நாள் முன்பாவது வருகிறார்களே என்று ஸ்வேதா நிம்மதியுடன் நினைத்துக் கொண்டிருக்க, ''இதற்கு அவர்கள் வராமலே இருக்கலாம்'' என்றாள் ஆஷா.

இதென்ன இப்படிச் சொல்கிறாளென்று ஸ்வேதா நினைத்துக் கொண்டிருக்கும் போதே, அப்படிச் சொன்ன



பேத்தியை யோசிக்காமல் ''சிறு பெண் போலப் பேசகிறாயே'' என்று பெரியவர்களும் கடிந்து கொண்டார்கள்.

பேத்தியின் திருமணத்திற்குக் கூட வருவார்களோ மாட்டார்களோ என்று மனதிற்குள் அஞ்சிக் கொண்டிருந்த ஆஷாவின் தாத்தா பாட்டிக்கு, மகளின் திருமணத்திற்கென்று மருமகன் நன்றாக செலவு செய்ததோடு ஒருநாள் முன்னரே திருமணத்திற்கும் வந்து விடுவதாகச் சொன்னது மிகுந்த சந்தோஷத்தையும் ஆறுதலையும் கொடுத்திருந்தது.

அதைப் பேத்தியிடமும் வெளிப்படுத்தினார்கள்.

பதிலுக்கு ரோஷத்துடன் ஏதோ சொல்ல வந்த தோழியை வேண்டாமே என்பதைப் போலக் கண்களால் அடக்கினாள் ஸ்வேதா.

இவள் எப்பொழுதுமே இப்படித்தான் என்று ஆதங்கத்துடன் நினைத்துக் கொண்டாலும் தோழிக்காகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் ஆஷா.

உயிர்த் தோழிக்குத் திருமணப் பரிசாக வெள்ளைக் கற்களுடன் கூடிய அழகிய தங்க நகை ஸெட்டைப் பரிசளித்தாள் ஸ்வேதா.

நெற்றிச் சுட்டி, காதணிகள், நெக்லஸ், வளையல்கள், மோதிரம் எனப் பார்க்கவே பளபளவெனக் கண்களைப் பறித்த தோழின் அன்பளிப்பை ஆசையுடன் ஏற்றுக் கொண்ட ஆஷா, இவ்வளவு உயர்ந்த விலையில் என்ன அவசியமென்று ஸ்வேதாவை உரிமையுடன் கடிந்து கொண்டாள்.

தோழியின் கேள்வியில், 'உன் உண்மையான நட்பிற்கு முன்னிலையில் இதெல்லாம் நிற்கக் கூட முடியாதென்று' பெருமையுடன் சொன்னாள் ஸ்வேதா.

"ஆனாலும் இது ரொம்பவும் அதிகம் ஸ்வேதா."

"போதும் ஆஷா, இந்த விஷயத்துல தயவு செஞ்சு எந்தக் கருத்தும் சொல்லாத."

ஸ்வேதாவைப் பொறுத்தவரை அவசியத்திற்கு பணம் செலவழிப்பதை அது எவ்வளவு என்றாலும் துளியும் யோசிக்க மாட்டாள் என்றால் அவளுடைய தோழி ஆஷாவோ அந்த விஷயத்தில் ஸ்வேதாவையும் மிஞ்சு பவளாக இருந்தாள்.

யார் அவளுக்கு என்ன செய்தாலும் அதைவிட சற்றேனும் அவர்களுக்கு அதிகமாகச் செய்து விட்டுத் தான் மறு வேலை பார்ப்பாள்.

என்னதான் உயிர்த்தோழி என்றாலும் ஸ்வேதாவிடமும் அப்படித்தான்.

இந்த ஒரு விஷயத்தில் மட்டும் தோழிகள் இருவருக்கும் சரிக்கு சரி போட்டி இருந்து கொண்டேதான் இருக்கும்.

அதுபோல நட்பைக் காட்டுவதிலும் இருவரும் சளைத்தவர்களல்ல.

## 18

ஏற்கனவே சொன்னது போல திருமணத்திற்கு முதல் நாள் காலையில் ஆஷாவின் தந்தை அவருடைய இரண்டாவது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வந்து சேர்ந்திருந்தார்.

அதற்குப் பிறகு அவர்களும் திருமண வேலைகளில் பங்கெடுத்துக் கொள்ள வீடு திருமணக் களை கட்டத் தொடங்கி விட்டிருந்தது.



தானும் முடிந்த அளவு தோழியுடன் இருந்து அனைத்தையும் பார்த்துக் கொண்டாள் ஸ்வேதா.

திருமண நாளும் இனிதே விடிந்து, பிறகு திருமணமும் இனிதே முடிந்தது.

வந்திருந்தவர்கள் அனைவரும் மணமக்களை மனதார வாழ்த்தினார்கள்.

வெளியூரில் வேலையை முடித்துக் கொண்டு கணவனையும் இங்கேயே வரச்சொல்லிக் கேட்டிருக்கலாமோ என்று நினைக்கத் தோன்றியது ஸ்வேதாவிற்கு.

பிறகு அந்தத் திருமணத்திற்கு இங்கிருந்து மூவருமே சென்றிருக்கலாம் என்றும்.

"நீங்க தான் ஸ்வேதாவா?"

யாரோ அழைக்கும் குரலில் திரும்பிய ஸ்வேதா "ம், என்ன சொல்லுங்க?" என்று கேட்டாள்.

"ஒரு நிமிஷம் வாங்க."

ஏன், எங்கே அழைக்கிறாள் என்று எண்ணிக்கொண்டே அந்தப் பெண்ணைப் பின் தொடர்ந்தாள் ஸ்வேதா.

"என்னாச்சு?"

"இல்ல பாட்டிக்கு..."

"ம், பாட்டிக்கு என்ன?"

"திடீர்னு பிரஸ்ஸர் அதிகமாகிக் கீழ விழுந்துட்டாங்கமா, பேச்சு மூச்சே இல்ல..."

"காட், ஆஷாவுக்குத் தெரியுமா?" என்று பதட்டத்துடன் கேட்டுக் கொண்டே வேகமாக அந்தப் பெண்ணைப் பின் தொடர்ந்தாள் ஸ்வேதா.

"தெரியும்மா, மணமக்கள வாழ்த்தப் போற நேரத்துல தான் இப்படியாயிடுச்சு. ஆஷா தான் உங்கள கூட்டிட்டு வரச் சொன்னாங்க."

பதற்றத்துடன் அங்கு சென்று பார்த்தபோது, ஆஷா கண்கள் கலங்க நின்று கொண்டிருப்பதும், கீழே தரையில் கிடத்தப்பட்டிருந்த பாட்டியின் முகத்தில் சுற்றியிருந்தவர்கள் அனைவரும் தண்ணீரைத் தெளித்து எழுப்ப முயன்று கொண்டிருந்ததும் கண்களில் பட்டது.

தன்னைப் பார்த்ததும் அழத் தொடங்கி விட்டிருந்த தோழிக்கு ஆறுதல் சொன்ன ஸ்வேதா, பாட்டியைத் தான் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உடனிருந்து பார்த்துக் கெள்வதாக உறுதிமொழியும் கொடுத்தாள்.

சொன்னது போலவே மருத்துவமனைக்கும் அடுத்த பத்து நிமிடங்களுக்குள் அழைத்து வந்திருந்தவள், பாட்டியை அட்மிட் செய்தது முதல் அனைத்து உதவிகளையும் தானே உடனிருந்து பார்த்துக் கொண்டாள்.

நேரம் தான் சென்று கொண்டே இருந்ததே தவிர, எந்தத் தகவலும் மருத்துவர்களிடமிருந்து வராததில் அவளுமே பயந்து தான் போனாள்.

இடையில் தோழிக்கு இரண்டு முறை அழைத்துப் பேசினாள்.

நல்லது தான் நடக்குமென்ற நம்பிக்கையில் 'பயப்பட ஒன்றுமில்லையென்று தான் மருத்துவர்கள் சொல்கிறார்கள், பாட்டியை நடக்க வைத்து வீட்டிற்கு அழைத்து வருகிறேன் பாரென்று' தோழிக்கு ஆறுதல் வார்த்தைகளையே தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் தானும் மருத்துவமனையை வந்தடைந்திருந்த தாத்தாவிடமும் அதையே சொன்னாள்.

வெகுநேரம் அனைவரையும் நடுங்க வைத்திருந்த பாட்டி ஒரு வழியாகக் கண் விழிக்க, அனைவரும் சந்தோஷத்தின் எல்லையை அடைந்தார்கள்.



சரியாக அதே நேரம் மணமக்களும் மருத்துவமனைக்கு வந்திருக்க, தனது பேத்தியிடம் பேசவே செய்தார் பாட்டி.

பயப்பட ஒன்றுமில்லை, இரத்த அழுத்தம் தான் கொஞ்சம் அதிகமாகி விட்டது. எதற்கும் இன்று ஒருநாள் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருந்துவிட்டு நாளை டிஸ்சார்ஜ் செய்து கொள்ளுங்களென்று மருத்துவர்கள் சொல்லி விட்டிருந்தனர்.

எப்படியோ இந்த அளவிலாவது முடிந்ததே என்ற நிம்மதியுடன் தாத்தாவைப் பாட்டியின் பக்கத்தில் இருக்கச் செய்துவிட்டு, மற்ற அனைவரும் அங்கிருந்து கிளம்ப மேலும் ஒரு மணி நேரமும் கூட ஆகிவிட்டிருந்தது.

தோழியின் முகத்தில் சிரிப்பைப் பார்த்த பிறகுதான் ஸ்வேதாவிற்கும் நிம்மதியாயிற்று.

அதே சிரித்த முகத்துடன் எனக்கொன்றும் பிரச்சனையில்லை நீ கிளம்பென்று தோழியை புதுமணப் பெண்ணாக அனுப்பி வைத்து விட்டுத் தனது கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

ஏழு மணி ஆகியிருக்க, வெளியே எட்டிப் பார்த்தாள்.

நன்கு இருட்டி விட்டிருந்தது.

மொபைல் கைப்பையுடன் காரில் இருப்பது நினைவிற்கு வந்தது.

கடவுளே, இனி கணவனும் தந்தையும் எத்தனை முறை அழைத்திருப்பார்களோ,

ஏனோ நெஞ்சுக்குள் குறுகுறுவென்றது.

தோழி ஏற்பாடு செய்துவிட்டுப் போயிருந்த கால் டேக்ஸியில் மண்டபத்தை அடைந்தவள், சென்று காரைத் திறந்து கைப்பையிலிருந்த மொபைலை எடுத்துப் பார்த்தாள்.

தந்தை ஐந்து முறையும், கணவன் இரண்டு முறையும் அழைத்திருந்தது தெரிந்தது.

உடனே தந்தைக்கு அழைத்தாள்.

ஏற்கனவே அதாவது ஹாஸ்பிடலுக்குப் பாட்டியை அழைத்துக் கொண்டு செல்வதற்கு முன்னரே தந்தையிடம் விஷயத்தை சொல்லியிருந்தாள் ஸ்வேதா.

ஆனாலும் இவ்வளவு நேரமாகி விட்டிருக்கிறதே இனி என்ன சொல்லப் போகிறாரோ என்று நினைத்துக் கொண்டே, ''டாடி நான் ஸ்வேதா'' என்றாள்.

சில வினாடிகள் பேசிவிட்டு மொபைலை வைத்திருந்தவளுக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

தந்தை சொன்னது இதுதான்.

'நான் மண்டபத்தில் இருக்கிறேன், உன்னை இந்த அளவிற்கு அனைவரும் கேட்பார்களென்று நானே எதிர்பார்க்கவில்லை, மாப்பிள்ளையும் மாலையே வந்து விட்டார். இங்கு திருமண மண்டபத்தில் தான் இருக்கிறார். உன்னைப் பற்றிக் கேட்பவர்களுக்குத் தான் பதிலே சொல்ல முடியவில்லை. மாப்பிள்ளை உன் மீது மிகவும் கோபமாக இருக்கிறார். எதனாலோ வர முடியவில்லை சரிதான். ஆனால் அதைத் தெரியப் படுத்தக் கூடவா முடியாது என்ற ஆதங்கம் போலிருக்கிறது அவருக்கு. இனி இதற்கு மேல் நீ வீட்டிற்குப் போய் குளித்துக் கிளம்பி இங்கு வந்து சேர்வதற்குள் அனைவரும் இங்கிருந்து கிளம்பி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதனால் நீ ஒன்று செய், காலையிலிருந்து பாவம் அலைந்து ஓய்ந்து போயிருப்பாய் பேசாமல் வீட்டிற்குப் போய் ஓய்வெடு' என்று முடித்து விட்டிருந்தார்.

அப்பாடா எப்படியோ இப்போதைக்குத் தொல்லை தீர்ந்து விட்டது என்று நினைத்துக் கொண்டே காரை



ஸ்டார்ட் செய்து செலுத்தத் தொடங்கியிருந்தவளுக்குக் கணவனுடன் பேசுவதைப் பற்றித்தான் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

அத்தையும் வேறு அத்தனை முறை சொன்னார்களே என்றிருந்தது.

கூட்ட நெரிசலில் சிக்கித் தவித்து ஒரு வழியாக வீடு வந்து சேர்வதற்குள் மேலும் ஒரு மணி நேரமும் கூட கடந்து விட்டிருந்தது.

டிரைவர் காரை வாங்கிக் கொள்ள, கைப்பையுடன் நேராகத் தன்னுடைய அறைக்கு வந்து விட்டிருந்தாள்.

படுக்கையைப் பார்த்ததும் உடல் தூக்கத்திற்காக ஏங்கியது.

அந்த அளவிற்குக் கடந்த இரண்டு மூன்று நாட்களாகவே தூக்கமின்றி அலைந்திருந்தாள்.

நேராகச் சென்று குளித்து முடித்து விட்டு இரவு உடையுடன் வெளியே வந்தவள், இன்டர்காமில் அமிர்தத்தை அழைத்து டிபனை மேலே கொண்டு வந்து வைத்து விடச் சொல்லி விட்டிருந்தாள்.

பசி வயிற்றைக் கிள்ள, ஓரளவு உலர்ந்திருந்த ஈரக் கூந்தலை இன்னும் நன்கு காயட்டுமென்று விரித்துப் போட்டுக் கொண்டே தன்னுடைய அறையைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

ஹாட் பாக்ஸ்களில் டிபன் கொண்டு வந்து தயாராக வைக்கப்பட்டிருக்க, முதலில் சாப்பிட்டு முடித்தாள்.

அலைச்சலில் வந்து குளித்ததற்கும் வயிறு நிறைந்ததற்கும் தூக்கம் கண்களை சொக்க தந்தையிடம் மட்டும் மொபைலில் சில வார்த்தைகள் பேசிவிட்டு பேசாமல்

படுத்தவள் தான், உடனே ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்று விட்டிருந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படித் தூங்கினாளோ திடீரென்று கண் விழித்தவள் ஏதோ தோன்றியவளாய்க் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

கீழே கணவனின் பேச்சுக் குரல் கேட்க, அப்படியே சுவற்றைப் பிடித்துச் சமாளித்தபடி நின்றாள்.

கணவன் மிகவும் கோபமாக இருப்பதாகத் தந்தை சொன்னது தான் நினைவிற்கு வந்தது.

ஏனோ உடலும் மனமும் படபடவென்று அடித்துக் கொள்வதைப் போலிருந்தது.

கணவனின் கோபத்தை எதிர்கொள்ள முடியும் போலத் தோன்றவில்லை.

இதற்கு முன் இந்த மாதிரியொரு நிலையை எதிர் கொண்டாள் இல்லை என்பதால் செய்வதறியாது திகைத்து நின்றாள்.

கணவனின் பேச்சுக்குரல் நெருங்கி வருவதைப் போலிருக்க மீண்டும் உள்ளே வந்து விட்டிருந்தாள்.

வேண்டுமென்றே தவறு செய்தவர்கள் கூட இந்த அளவிற்கு பயப்பட மாட்டார்களோ என்று நினைத்தவளுக்கு, அந்த நிலையிலும் சிரிப்பு வந்துவிட்டிருந்தது.

ஆனால் அதெல்லாம் ஒரு சில வினாடிகள் தான்.

மீண்டும் பயம் வந்து விட்டிருக்க, முயன்று தன்னை இயல்பாக வைத்துக் கொண்டாள்.

யாரோ உள்ளே வரும் அரவம் கேட்க நிமிர்ந்து பார்த்தாள்.

கணவன் உள்ளே வந்து கொண்டிருப்பது தெரிந்தது.



அவனுடைய நெடிய கம்பீரமான உருவமும், திருமணத்திற்கு சென்று வந்திருந்த அந்த மாப்பிள்ளையைப் போன்றதொரு உடையும் தன்னை என்னவோ செய்ததை அவளால் நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிந்தது. கூடவே ஒரு வாரப் பிரிவும்.

அதற்குள் கணவன் உள்ளேயே வந்திருக்க "வாங்க" என்றாள்.

என்னதான் வாயைத் திறந்து பேசியிருந்தாலும், அந்த சத்தம் அவளுக்கே கேட்டிருக்கவில்லை.

கணவன் தன்னையே பார்ப்பது தெரிய, நடுங்கிய உதடுகளைப் பற்களால் கடித்தபடி கீழே பார்த்தாள்.

அப்படியே சில வினாடிகள் கழிய மீண்டும் நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

அப்பொழுதும் ஜெயவர்த்தனின் பார்வை மனைவியின் முகத்தில் தான் நிலைத்திருந்தது.

"ஸாரி... என்னால கல்யாண..."

கணவனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகம் தொடர்ந்து பேச முடியாமல் செய்திருக்க, கண்களும் லேசாகக் கலங்கி விட்டிருந்தன.

ஜெயவர்த்தனுக்கு மனைவியின் மேல் கோபம் இருந்தது உண்மைதான்.

ஆனால் பாலகிகிருஷ்ணன் மகள் வர முடியாமல் போனதற்கான காரணத்தைச் சொன்ன பிறகு, அந்தக் கோபம் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போயிருந்தது.

ஏற்கனவே மிகவும் முயன்று கோபத்தை இழுத்துப் பிடித்து வைத்துக் கொண்டிருந்தவனுக்கு கலங்கி விட்டிருந்த மனைவியின் கண்கள் எங்கோ மூலையில்

ஒட்டிக் கொண்டிருந்த சிறு கோபத்தையும் கூட அழித்து விட்டிருந்தது.

சென்று கதவைத் தாளிட்டு விட்டு மனைவியின் அருகில் வந்திருந்தான் ஜெயவர்த்தன்.

அருகில் வந்தவன் தனது வலது கரத்தால் மனைவியின் முகவாயைப் பிடித்து நிமிர்த்தினான்.

மிகவும் மென்மையாகத் தான்.

''நான்...''

''ம்கூம், நீ ஒன்னும் சொல்ல வேண்டாம்.''

அப்படிச் சொன்ன கணவனை மேலும் சற்றுப் பயத்துடன் பார்த்தாள் ஸ்வேதா.

தனது ஸ்பரிசம் பட்டு நடுங்கத் தொடங்கியிருந்த மனைவியைத் தன்னருகில் இழுத்திருந்தவன், ''வேண்டாம்மா'' என்றான்.

..................

''எம்மேல... எம்மேல உங்களுக்குக் கோபந்தான?''

''எதுக்கு?''

''கல்யாணத்துக்கு வராததுக்கு.''

''அப்ப வேணும்னே தான் வராம இருந்தியா?''

''அச்சச்சோ இல்ல'' என்று அதற்கான காரணத்தைச் சொன்னாள் ஸ்வேதா.

''இப்ப அவங்களுக்குப் பரவாயில்லையா?''

''ம், பேசக்கூட செஞ்சாங்க.''

''சந்தோஷம்.''

''அப்ப எம்மேல உங்களுக்கு இப்ப எந்தக் கோபமும் இல்ல தான?''

''என் கோபம் அப்படியே தான் இருக்கு?''



''ஏன்?''

''ஏன் போன் அட்டெண்ட் பண்ணல?''

கணவனின் கேள்வியில் லேசாக அசடு வழிந்தவள் அதற்கான காரணத்தையும் சொன்னாள்.

''சரி எப்படியோ ஹாஸ்பிட்டலுக்குப் போற டென்ஷன்ல போன விட்டுட்டுப் போயிட்ட சரிதான், என் போன் நம்பர் தெரியாதா உனக்கு, இல்ல நான் கூப்புடுவேன்னு தான் தெரியாதா? வெளிய போன்ல இருந்தாவது எனக்குக் கூப்புட்டிருக்கலாம் இல்லையா?''

''சரிதான். ஆனா...''

''ம் என்ன, மறந்துட்டியா?''

''ம்கூம் இருந்த டென்ஷன்ல நேரம் போனதே தெரியல. மத்த எதுவுமே ஞாபகத்துக்கும் வரல...''

மற்றவர்களின் துன்பத்தையும் தன்னுடையதாக நினைத்து மருகும் மனைவியைப் பார்த்தவனுக்கு மனம் உருகி விட்டிருந்தது.

ஆனாலும் அப்பொழுது அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

''நீ என்ன வேணும்னாலும் சொல்லு, ஆனா நீ செஞ்சது தப்பு தான், இனிமேல் இந்த மாதிரி செய்யக்கூடாது.''

மென்மையாக என்றாலும் அழுத்தத்துடன் கணவனிடமிருந்து வந்த வார்த்தைகளில் அவளையறியாமலேயே தலையை ஆட்டி விட்டிருந்தாள் ஸ்வேதா.

''எல்லாரும் என்னக் கேட்டிருப்பாங்க இல்லையா? பதில் சொல்றதுக்குள்ள உங்களுக்குப் போதும் போதும்னு ஆகியிருக்கும்...''

''எங்கிட்ட யாரும் கேக்கல.''

யதார்த்தமாகக் கணவனிடமிருந்து வந்த பதிலில் புரியாத பாவனையுடன் பார்த்தாள்.

''நான்தான் அங்க உன்ன ரொம்ப எதிர்பார்த்துட்டிருந் தேன்.''

...............

''என்ன பாக்கற?''

''ஏன் நீங்க...''

''சரிதான் உனக்கு எப்பப் புரிஞ்சிருக்கு. இப்பப் புரியற துக்கு? ஒரு...''

அதே நேரம் தனது மொபைல் ஒலிக்க அட்டெண்ட் செய்து பேசினான் ஜெயவர்த்தன்.

''சொல்லுங்க மாமா?''

.............

''ஒண்ணும் பிரச்சனையில்ல வர்றேன்'' என்றவன் போனை வைத்துவிட்டு மனைவியைப் பார்த்தான்.

''என்னங்க?''

''மாமா கொஞ்சம் கீழ வர முடியுமான்னு கேட்டார்...''

''எதுக்கு?''

''போய்ப் பார்த்தா தெரியுது'' என்றவன், மனைவியை அருகில் இழுத்துத் தனது மார்போடு அணைத்தபடி நின் றிருந்தவன் மேலும் சில நிமிடங்கள் கழித்தே விடுவித் தான், அதுவும் மனமே இல்லாமல்.

வெளியே தோட்டத்து லானில் இருக்கும் குடை சேரில் பாலகிருஷ்ணன் அமர்ந்திருக்க, இவர்கள் இருவரும் அங்கே சென்றனர்.

''வாங்க மாப்ள'' என்ற பாலகிருஷ்ணன் ''தூங்கப் போறவர டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?'' என்று கேட்டார்.



''அதெல்லாம் இல்ல மாமா'' என்று ஜெயவர்த்தன் சொல்ல, அதற்குப் பிறகு தான் பின்னால் வந்த மகளையே பார்த்தார் பாலகிருஷ்ணன்.

''அட, நீ தூங்கப் போறதா சொன்னியே ஸ்வேதா...''

''ஆமா டாடி தூங்கப் போய் ஒரு குட்டித் தூக்கமும் கூடப் போட்டாச்சு. அதான் ஃப்ரஷ்ஷா இருக்கேன்.''

''அப்படியா'' என்றவர் ''நீ ஹாஸ்பிட்டல்ல இருக்கும் போது அதுவும் போன்ல எதுவும் பேச வேண்டாம்னு பாத்தேன். என்னதான் இருந்தாலும் நீ செஞ்சது பெரிய தப்புதாம்மா...''

''இல்ல மாமா, ஸ்வேதா இடத்துல நாம இருந்திருந் தாலும் அதத்தான் செஞ்சிருப்போம். பாவம் அவளுக்கு மட்டும் விசேஷத்துக்கு வராம ஹாஸ்பிட்டல்ல தனியா இருந்து வாடணும்னு வேண்டுதலா என்ன?''

அப்படிச் சொன்ன ஜெயவர்த்தனை நிம்மதியுடன் பார்த்தார் பாலகிருஷ்ணன்.

''அப்ப உங்களுக்குக் கோப...''

''எனக்கு ஸ்வேதா மேல எந்தக் கோபமும் இல்ல மாமா, மத்தவங்களுக்கு ஒரு கஷ்டம்னா அதத் தன்னுடைய தாப் பாக்கற குணம் எத்தன பேருக்கு வரும். அதுக்காகப் பாராட்ட வேணும்னா செய்யலாம்'' என்று மனதார உணர்ந்து சொன்ன கணவனை உணர்ச்சி பொங்கப் பார்த்தாள் ஸ்வேதா.

''என்ன மாமா ஏதோ பேசணும்னு சொன்னீங்க.''

''ஆமாம் மாப்ள, இப்ப நாம இருக்கற இந்த வீட்டக் கட்டி பத்து வருஷங்களுக்கு மேல ஆச்சு. அதாவது ஸ்வேதாவுக்குப் பதினோரு வயசிருக்கும் போது கட் டினது...''

பாலகிருஷ்ணன் ஏதோ சொல்ல வருவது தெரிய அவரைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

ஸ்வேதாவும்.

''ஆனா ஸ்வேதாவுக்கு அவ டேஸ்ட்ல ஒரு வீடு கட்டணும்னு ஆசை. அதாவது அவளோட ட்ரீம் ஹவுஸ்.''

மாமனார் சொல்ல, ''அப்படியா'' என்று புன்னகையுடன் மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''அதுக்கான வேலைகளத் தொடங்கற போதுதான் உங்க கல்யாணப் பேச்சு வந்து அப்புறம் அப்படியே நின்னுடுச்சு.''

''சரிதான் மாமா, இனி தொடங்கிட்டாப் போயிடுச்சு.''

''ம், அதுதான் மாப்ள.''

இதைப் பற்றிப் பேச இதைவிட ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்காதென்று தோன்றி விட்டிருக்க, ஆசையாக எவ்வளவு இடம், எப்படிக் கட்டுவது என்ன திட்டம் என அனைத்தையும் சொன்னார் பாலகிருஷ்ணன்.

''அதாவது முன்னாடி இந்த மாதிரி ப்ளேன் இருந்தது மாப்ள, இப்ப நீங்க உங்க கருத்த சொன்னீங்கன்னா அதுப்படி செய்யலாம்.''

''இதுல நான் சொல்ல என்ன மாமா இருக்கு? ஸ்வேதாவுக்குப் பிடிச்சிருக்கணும் அது தான் முக்கியம்'' என்று புன்னகையுடன் மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''எனக்கும்...''

''ம், என்னமா சொல்லு?''

தந்தை கேட்க, அவர் சொன்னவற்றில் ஒரு சில சிறிய மாற்றங்களை அதாவது தன் மனதிற்குப் பட்டதை சொன்னாள் ஸ்வேதா.



மேலும் ஒரு மணி நேரமும் கூட அதைப் பற்றிப் பேசியவர்கள், கடைசியில் முழு மனதாக ஒரு முடிவுக்கு வந்திருந்தனர்.

தங்கள் வீட்டு மாப்பிள்ளையும் ஆர்வத்துடன் அனைத்தையும் இப்படி இப்படிச் செய்யலாமென்று கலந்து கொண்டதில் பாலகிருஷ்ணனுக்கும் மிகுந்த சந்தோஷம்.

அதிலும் ஜெயவர்த்தனின் கருத்துகள் பிரமாதமாக இருக்க, தந்தை மகள் இருவரையுமே புதுமனை கட்டப் போகும் உற்சாகம் தொற்றிக் கொண்டது.

மேலும் சிறிது நேரமும் கூடப் பேசிக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகே தூங்கச் சென்றனர்.

ஃப்ளாஸ்க்கில் இருந்த பாலை இரண்டு கண்ணாடி டம்ளர்களில் ஊற்றிய ஸ்வேதா, ஒன்றைக் கணவனிடம் கொடுத்து விட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

''இப்ப தான் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு ஜெய்.''

''ஏன்?''

''சொல்லத் தெரியல, ஆனா காரணம் நீங்க தான்.''

''நானா?''

''ம்.''

''புரியல.''

''மனசுக்குப் பிடிச்ச மாதிரி வீடு கட்றதே சுகம், அதுலயும் மனசுக்குப் பிடிச்சவர் இப்படி பாத்துப் பாத்து ஐடியாக் குடுக்கும்போது என்ன பாக்கறீங்க நான் உங்கள தான் சொல்றேன்.''

''ம், அப்புறம்.''

''என்ன அப்புறம்?''

''ஏதேதோ சொல்ற கேக்க நல்லா தான் இருக்கு. ஆமா அதென்ன உனக்கு ட்ரீம் ஹவுஸ் மேல அவ்வளவு இன்ட்ரஸ்ட்?''

''இப்படிக் கேட்டா என்ன சொல்றது?''

''என்ன காரணமோ அதச் சொல்லு.''

''இன்ட்ரஸ்டிங்கா முக்கியமா போரடிக்காம பொழுது போகும். ஒவ்வொன்னையும் பாத்துப் பாத்து நாமளே முன்னாடி இருந்து எல்லாத்தையும் செய்யறது. அப்புறம் கிரஹப்பிரவேசம் செய்யறது. அதுக்காக எல்லாரையும் அழைக்கறது. அதுக்கான ப்ளேன் இப்பிடி பிஸியா நேரம் போகும்.''

''அதோட எல்லாரும் வீட்டுக்கு வர்றதால வீடு கல கலன்னு இருக்கும். ஏன் இப்படி இன்னும் நிறையக் காரணங்கள் சொல்லிக்கிட்டே போகலாம்.''

மனைவி சொன்ன காரணங்கள் ஜெயவர்த்தனுக்கு சிரிப்பை வரவழைத்திருந்தன.

''ம், அப்புறம்?''

''ஏன், சிரிக்கறீங்க?''

''பின்ன, நீ சொல்ற காரணங்கள் அப்படியிருக்கு?''

''சரிதான், உங்கள மாதிரி வீடு நிறைய சொந்தங்கள் விசேஷங்கள்னு இருக்கறவங்களுக்கு நான் சொல்றது சிரிப்பா தான் இருக்கும்.''

''ஓஹோ.''

''டாடி காலை நேரத்துல கிள்மபிப் போனார்னா, நைட் எத்தன மணிக்கு வீடு திரும்புவார்னே சொல்ல முடியாது. மேக்ஸிமம் டேஸ் அப்படிதான் போகும்.''



''மிஞ்சிப் போனா ஒரு நாளைக்கு ரெண்டு மூனு வார்த்த. அதுவும் கட்டாயத்துக்குப் பேசுவார்.''

''அதுக்கு அவர் பேசாமலே இருந்திருக்கலாம்னு தோணும்.''

''ஏன்? நீ ரிலேட்டிவ்ஸ் ஃப்ரண்ட்ஸ்னு எல்லார் வீட்டுக்கும் போய்ட்டு வர வேண்டியது தான? அப்படியே பர்ச்சேஸ்க்கு அங்க இங்கன்னு...''

''அப்படியெல்லாம் போறது தான். இருந்தாலும் அதுக்கும் ஒரு வரைமுறை இருக்குதான. ஒருத்தங்க வீட்டுக்கு சும்மா, சும்மா போய்ட்டே இருக்க முடியுமா சொல்லுங்க?''

''ஏன், ஏதாவது க்ளாஸ்க்குக் கூடப் போகலாம்...''

''சரிதான் ஜெய். நான் சொல்ல வர்றது உங்களுக்குப் புரியறது சிரமம் தான்.''

''புரியுதுமா.''

''சும்மா சொல்லாதீங்க.''

''நிஜம்'' என்ற ஜெயவர்த்தன் மனைவியைத் தன்னருகில் இழுத்து அவளுடைய முகத்தில் தனது பார்வையைப் பதித்தான்.

''ஸ்வேதா...''

''நீங்க ஒண்ணும் பேச வேண்டாம்.''

மனைவியின் கோபம் தன்னை என்னவோ செய்ய, மேலும் அவளைத் தன்னருகில் இழுத்து அவளுடைய முகத்தைத் தனது கைகளில் ஏந்திக் கொண்டான்.

''ப்ளீஸ்டா என்ன அப்படிப் பாக்காத. என்னால முடியாது'' என்றான்.

''என்ன முடியாது?''

''நல்லவனா இருக்க முடியாதாக்கும்...''

கணவனின் அருகாமையும் பார்வையும் தன்னை என்னவோ செய்ய, ஸ்வேதாவின் முகம் வெட்கத்தில் சிவந்து விட்டிருந்தது.

உதட்டைக் கடித்து அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயல, மனைவியின் அவஸ்தையை ரசித்தான் ஜெயவர்த்தன்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

அடுத்த கணம் முற்றிலுமாகத் தன் வசமிழந்து போயிருந்த ஜெயவர்த்தன், மனைவியைத் தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

கணவனின் நிலையே அப்படியிருக்க, ஸ்வேதாவின் நிலை பற்றியோ கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

அதிலும் கணவனின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாது மனதிற்குள் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தவள் என்பதால் அவனுடைய அணைப்பில் தன்னை ஏன் இந்த உலகையே மறந்து ஒன்றிப் போய் விட்டிருந்தாள்.

## 19

''குட்மார்னிங் மாமா.''

''குட்மார்னிங் மாப்ள, என்ன இந்த நேரத்துக்கே தயாராயிட்டிங்க?''

''ஆமாம் மாமா வெளிய ஒரு வேல அத முடிச்சுட்டு வந்து ஸ்வேதாவ அழைச்சுட்டுக் கிளம்பிக்கறேன்.''

''சரிதான் காபி சாப்பிடலாம் வாங்க'' என்ற பாலகிருஷ்ணன் ஃப்ளாஸ்கில் தயாராக இருந்த காபியை இரண்டு கப்களில் ஊற்றினார்.



அதில் ஒன்றைத் எடுத்துத் தனது மாமனாரிடம் கொடுத்து விட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டான் ஜெயவர்த்தன்.

''எங்க மாப்ள ஸ்வேதா?''

''தூங்கிட்டிருக்கா'' என்ற ஜெயவர்த்தன் ''வர்றேன் மாமா அப்புறமா போன்ல பேசிக்கறேன்'' என்று குடித்து முடித்த காபி கப்பைக் கீழே வைத்துவிட்டு எழுந்திருந்தான்.

சொன்னது போல மதியம் வீட்டிற்கு வந்தவன், மதிய உணவிற்குப் பிறகு மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பியிருந்தான்.

''என்னாச்சு?''

ஏதோ புரியாத பாவனையில் தன்னைப் பார்த்துக் கேட்ட கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

''என்ன?''

''டல்லாத் தெரியறியே, வரப் பிடிக்கலையா?''

''பிடிக்கலேன்னு சொன்னா விட்டிருவீங்களா?''

யோசிக்காமல் பட்டென்று கேட்டு விட்டிருந்த ஸ்வேதாவிற்கு, அதற்குப் பிறகு தான் அப்படிக் கேட்டது தவறோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

''யோசிப்பேன்.''

வினாடி கூடத் தயங்காமல் கணவனிடமிருந்து வந்த பதிலில் சும்மா தான் அப்பிடி சொன்னேன் என்று சமாளித்து வைத்தாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் இருவரும் வீடு வந்து சேர்ந்திருந்தனர்.

வெறும் வாயை மென்று கொண்டிருந்தவர்களுக்கு அவல் கிடைத்தது போல, சும்மாவே அதிகம்

பேசுபவர்கள் ஸ்வேதா திருமணத்திற்கு வராததை ஒன்றுக்கு இரண்டாகக் கற்பனை செய்து பேசினார்கள்.

''இவ நம்மையும், நம்ம சொந்தங்களையும் எல்லாம் மதிக்க மாட்டான்னு எனக்கு அப்பவே தெரியும்'' என்று பத்மினி சொல்ல, ''என்ன பண்றதுக்கா கொஞ்சம் வசதி இருக்கறவங்களையே கைல புடிக்க முடிய மாட்டேங்குது. அப்படியிருக்கும்போது ஸ்வேதா வீட்டு வசதிக்கு சொல்லவா வேணும்'' என்றாள் இந்துமதி.

''அதுக்கு தான் நம்ம தகுதிக்குத் தகுந்த மாதிரி இடத்துல பொண்ணு எடுக்கணுங்கறது. அப்பிடி எடுத்திருந்தா ஏன்டி முக்கியமான விசேஷத்துக்கு வராம விட்டேன்னு மிரட்டிக் கூடக் கேக்கலாம்'' பத்மினி.

''க்கும், இங்க அடங்கியில்ல போக வேண்டியிருக்கு. இனி மிரட்டி எங்க கேக்கறதாம்'' என்று இந்துமதி சிரிக்க, ''சரிதான் தலைக்கு மேலயே வெள்ளம் போனதுக்கப்புறம் இனி ஒரு அடி, ரெண்டு அடின்னு நாம பேசிக்கறதுல என்ன அர்த்தமிருக்கு'' என்றாள் பத்மினி.

''சரியா சொன்னீங்கக்கா, எல்லாத்துக்கும் மேல கேள்வி கேக்காம இருந்துக்கறது ரொம்ப மரியாத.''

''பின்ன? இதுவே நம்ம ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தரா இருந்திருந்தா எத்தன கேள்வி கேட்டு மிரட்டியிருப்பாங்க...''

சரியாக அதே நேரம் ஜெயவர்த்தன், வீட்டிற்குள் வர, பேச்சு அடங்கிப் போனது.

அதுவரை பத்மினியும், இந்துமதியும் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஸ்வேதாவிற்கு, ஏன் நிறுத்திக் கொண்டு விட்டார்கள். தொடர்ந்து பேச வேண்டியதுதானே என்று நினைக்கத் தோன்றியது.



என்ன பெண்கள் இவர்கள்,

என்ன நடந்ததென்று நேருக்கு நேராகக் கேட்டிருக்கலாம்.

அல்லது எப்பாடு பட்டாவது நீ வந்திருக்கத் தான் வேண்டும். நீ செய்தது தவறு தான் என்றுகூட முகம் பார்த்து சொல்லி விட்டிருக்கலாம்.

அப்படி எதையுமே செய்யாமல்...

''ஸ்வேதா.''

கணவன் அழைப்பது கேட்க அருகில் சென்றாள்.

''வாங்க, இப்பதான் வந்தீங்களா?''

''ஆமாம்மா, அம்மா இன்னும், தோட்டத்திலிருந்து வரலையா?''

''இல்லைங்க...''

''சரி வா, தோட்டத்துக்குப் போய்ட்டு வரலாம்.''

கணவன் அழைத்தது தான் தாமதம், உடனே அவனுடன் கிளம்பி விட்டிருந்தாள் ஸ்வேதா.

ஏனோ பத்மினி, இந்துமதி இருவருடனும் தனியாக இருக்கவே மிகவும் தயக்கமாக இருந்தது.

எப்பொழுது பார்த்தாலும் ஏதோ ஒன்றைப் பெரிதாகப் பற்றிக் கொண்டு குற்றம் கண்டுபிடித்துப் பேசிக் கொண்டே இருந்தால் பிறகு எப்படி இருக்குமாம் என்றும்.

அடுத்த சில நிமிடங்களில் கணவனுடன் தோட்டத்தை அடைந்திருந்த ஸ்வேதாவிற்கு எப்படி அத்தையை எதிர் கொள்வதென்பது அச்சமாகக் கூட இருந்தது.

முக்கியமாக பத்மினியும், இந்துமதியும் அந்த அளவிற்குப் பேசாமல் இருந்திருந்தால் ஒன்றும் தோன்றியிருக்காதோ என்னவோ.

மருமகளைப் பார்த்ததும் புன்னகையுடன் அவளை நோக்கி வந்தார் காஞ்சனா.

''வாடாம்மா, எப்ப வந்த?''

''இப்பதான் அத்தை, எப்படியிருக்கீங்க?''

''இங்க எல்லாரும் நலம்மா, அங்க அப்பா, அப்புறம் நீ எல்லாரும் எப்படியிருக்கீங்க?''

''நல்லா இருக்கோம், ரொம்ப ஸாரி அத்தை.''

''எதுக்கும்மா?''

''என்னால கல்யாணத்துக்கு வர முடியாமப் போயிடுச்சு.''

''பரவாயில்ல விடு கண்ணம்மா, போன்லயே காரணத்த சொன்னியே. அப்படியிருக்கும்போது இன்னும் எதுக்கு அத மனசுக்குள்ளேயே வெச்சு மருகிட்டிருக்க? வா முதல்ல வந்து இப்படி உட்காரு, என்ன சாப்புட்ற?''

மனதார உணர்ந்து தனது அத்தை சொன்ன வார்த்தைகளில் மனம் நெகிழ்ந்து போனாள் ஸ்வேதா.

தன் தாய் இருந்திருந்தால் கூட இப்படித்தானே இருந்திருப்பார்களென்று நினைக்கத் தோன்றியது.

''வாடாம்மா இங்க வந்து உக்காரு'' என்றவர் அங்கு சீவித் தயாராக வைக்கப்பட்டிருந்த இளநியை எடுத்துத் தலையில் குத்தி ஓட்டையிட்டுக் கொடுத்து குடிக்கச் சொல்லி உபசரித்தார்.

''வேண்டாம் அத்தை...''

''என்னடாம்மா, செவ்விளநி ருசி ரொம்ப நல்லார்க்கும் உடம்புக்கும் நல்லது குடி.''

''ம், குடிக்கறவங்களுக்குக் குடுக்க மாட்டேங்கறாங்க. ஆனா வேண்டாங்கறவங்களுக்கு பலமான உபசரிப்பு...''



''வாடா தடிப்பயலே, உன்ன யார் குடிக்க வேண்டாம்னு சொன்னாங்களாம்.''

''அடடா, ரொம்ப நல்ல உபசரிப்பு போங்க.''

கணவனின் கேலியில் நன்றாகவே சிரித்து விட்டிருந்தாள் ஸ்வேதா.

''என்ன சிரிப்பு?''

''ஒன்னுமில்ல, இளநீர் குடிங்க.''

''சரிதான், முதல்ல நீ குடி.''

''பின்ன?'' என்ற ஸ்வேதா அத்தை கையில் கொடுத்து விட்டுப் போனதைக் குடித்தாள்.

குடிக்கத் தெரியாமல் மேலே சிந்தியது போகக் கொஞ்சம் வயிற்றுக்குள்ளும் சென்றது.

அதற்குள் வேலையாட்கள் கைவிடும் நேரமென்று காஞ்சனா அதைப் பார்க்கச் சென்றிருக்க, ''இப்படி மேல ஊத்திக்கறதுக்கு தான் அவ்வளவு அவசரமாக் குடிச்சியாக்கும்'' என்று நன்றாகவே சிரித்தான் ஜெயவர்த்தன்.

''ஏன் இதப் பழகக் கூட எங்காவது க்ளாஸ்க்குப் போகணுமா என்ன?''

''எங்கயும் போக வேண்டாம் நானே சொல்லித் தாரேன்'' என்று ஜெயவர்த்தன் சொல்லவும் ''வாங்க, எப்ப வந்தீங்க?'' என்று வந்தார் அவனுடைய தந்தை ராஜேந்திரன்.

''இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் வந்தோம் மாமா, எப்படியிருக்கீங்க?''

''நல்லார்க்கேம்மா. நீ எப்படியிருக்க? அப்புறம் ஊர்ல அப்பா...''

''எல்லாரும் நலம் மாமா.''

''உன் தோழியோட பாட்டிக்கு இப்பப் பரவாயில்லையாம்மா?''

''நல்லா ஆயிட்டாங்க மாமா.''

''பாவம் இருந்திருந்து கல்யாணத்தன்னைக்கு தான் அப்படியாகணுமா?''

''ஒண்ணுமில்லாத பொண்ணுங்களே மத்தவங்களுக்கு ஒரு உதவின்னா செய்ய யோசிக்கறாங்க. அப்படியிருக்கும்போது நீயே தனியா இருந்து அவங்கள கவனிச்சுக்கிட்டது பாராட்டுக்குரிய விஷயம் ஸ்வேதாம்மா.''

''உனக்கும், உன் குணத்துக்கும் ஏத்த மாதிரியே உனக்குத் துணைவி அமைஞ்சதுக்கு நீயும் குடுத்து வெச்சிருக்கணும்பா'' என்று மகனைப் பார்த்துப் பெருமையுடன் சொன்ன ராஜேந்திரன் ''சரி பேசிட்டிருங்க இதோ வர்றேன்'' என்று மீண்டும் தோட்டத்திற்குள் சென்றிருந்தார்.

இத்தனை நாளும் எப்படியோ, ஆனால் இப்பொழுது தனது மாமனார் மாமியார் மீது பெருமதிப்பு வந்திருந்தது ஸ்வேதாவிற்கு.

இதையே போனால் போகிறது பெருந் தன்மையுடன் மன்னிக்கிறோம் என்பதைப் போலக் கூடக் காட்டிக் கொண்டு போயிருக்கலாம்.

ஆனால் அப்படியெல்லாம் செய்யாததோடு, அதை நினைத்து வருந்த ஒன்றுமில்லையென்று ஆறுதலும் கூடச் சொல்லி விட்டுப் போகிறார்களே என்று பெருமையாக இருந்தது.

அதே சமயம் கர்வத்துடன் சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்ட கணவனைப் புன்னகையுடன் பார்த்தாள் ஸ்வேதா.

''இனி உங்களுக்கு என்னப்பா?''

''பாத்தியா ஐயாவப் பத்தி எவ்வளவு பெருமையா சொல்லிட்டுப் போறாங்கன்னு?''



''அப்படி என்ன சொன்னாங்களாம்?''

''ஐயா ரொம்ப நல்லவராம், வல்லவராம். அதோட மத்தவங்களுக்கு ஒரு கஷ்டம்னா சிரமம் பாக்காம...''

''வெயிட், வெயிட். இப்படியெல்லாமா சொன்னாங்க?''

''ம்.''

''அதுவும் உங்கள?''

''பின்ன?''

''உனக்குக் காதுல ஏதும் பிரச்சனையாப்பா?'' என்று முயன்று வந்த சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு கேட்ட மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

கணவனின் பார்வை மாறியதில் மனம் படபடவென்று அடித்துக் கொள்ள, சிவந்து விட்டிருந்த முகத்தை மறைத்துக் கொள்ள எங்கோ பார்த்தாள் ஸ்வேதா.

''சரி வீட்டுக்குக் கிளம்பலாமா?'' என்று கேட்டுக் கொண்டே காஞ்சனா வர, இருவரும் நடப்பிற்கு வந்தனர்.

சொன்னது போல அடுத்த சில நிமிடங்களில் அனைவரும் வீடு வந்து சேர்ந்திருந்தனர்.

சரியாக அதே நேரம் லாவண்யா கல்லூரி விட்டு வர, அவளுடன் பேசுவதில் சிறிது நேரம் சுவாரஸ்யமாகச் சென்றது.

அப்படியே மாலை டிபனும் நடக்க, தனது அத்தைக்குத் தானும் சென்று உதவினாள் ஸ்வேதா.

அதற்குப் பிறகு பக்கத்திலிருக்கும் கோவிலுக்கு அத்தை மற்றும் லாவண்யாவுடன் கிளம்பிச் சென்றவள், மீண்டும் வீடு வந்து சேர ஒரு மணி நேரத்திற்கும் மேலேயே ஆகி விட்டிருந்தது.

பிறகு வந்து இரவு டிபனைத் தயார் செய்வதற்காகக் காஞ்சனா செல்ல, லாவண்யாவுடன் பேசிக் கொண்டே தானும் சென்று உதவினாள் ஸ்வேதா.

தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் ஆண்கள் வந்து பசியாறி விட்டுச் செல்ல, பிறகு பெண்களும் சாப்பிட அமர்ந்தனர்.

யதார்த்தமாக இருக்க விடாமல் எப்பொழுது பார்த்தாலும் ஜாடை மாடையாக எதையாவது சொல்லிக் கொண்டே இருந்த பத்மினியிடமும் இந்துமதியிடமும் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள ஸ்வேதா சற்று சிரமப்பட்டுத்தான் போனாள்.

அனைவரும் சாப்பிட்டு முடிய, அனைத்தையும் ஒதுக்கி வைப்பதில் தனது அத்தைக்கு உதவினாள்.

''நீ போய் உக்காருடாம்மா, நான் பாத்துக்கறேன்.''

''பரவாயில்ல அத்தை...''

''ஸ்வேதா.''

கணவனின் அழைப்பில் திரும்பிய ஸ்வேதா, என்ன என்பதைப் போலப் பார்த்தாள்.

''தோட்டத்துக்குப் போலாமா?''

''போகலாங்க.''

புன்னகையில் முகம் மலரச் சொன்னாள்.

''அங்க பெரிசா சவுகர்யம் ஒண்ணும் இருக்காதுடாம்மா'' என்று தாய் சொல்ல, புன்னகையுடன் மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

ஆனால் அது காஞ்சனாவின் கண்களுக்குப் பட்டிருக்கவில்லை.

''பரவாயில்ல அத்தை'' என்று ஸ்வேதா சொல்ல, ''பின்ன என்ன வா'' என்று மனைவியுடன் கிளம்பினான் ஜெயவர்த்தன்.

''ஆமா தோட்டத்துக்கு வர்றதுல உனக்கு என்ன அவ்வளவு சந்தோஷம்?'' என்றும் புரியாத பாவனையுடன் மனைவியைப் பார்த்துக் கேட்டான்.



''ம்.''

''என்ன சொல்லு?''

''தெரியல.''

''பொய் சொல்லாத.''

''பொய்யா?''

''பின்ன, எனக்குக் காரணம் தெரியுமே.''

''அப்ப நீங்களே சொல்லுங்களேன் என்ன காரணம்?''

''சொல்லிடுவேன்.''

கண்ணோரம் சுருக்கிய கணவனின் பார்வையும், அப்புறம் சொல்லி விடுவேன் என்பதைப் போன்ற சிரிப்பும் ஸ்வேதாவை என்னவோ செய்திருந்தன.

''ம், என்ன...''

அதற்குள் கணவனை நெருங்கியிருந்தவள் அவனை இறுக அணைத்து அவனுடைய கன்னத்தில் தனது இதழ்களைப் பதித்திருந்தாள்.

சற்றும் எதிர்பார்த்திராத மனைவியின் செய்கையில் ஜெயவர்த்தன் தள்ளாடுவதைப் போல நடிக்க, கணவனின் பாவனையில் நன்றாகவே சிரித்தாள் ஸ்வேதா.

''போதும், போதும் இது ரொம்ப ஓவர்'' என்றான்.

''எது?'' என்று மனைவியின் இதழ்களில் தனது பார்வையைப் பதித்தவன், தனது இதழ்களைக் குவித்துக் காட்டினான்.

கணவன் என்ன கேட்க வருகிறான் என்பது புரிய, முகம் சிவந்து போனாள்.

இரவு நேரம் என்பதால் சில மின்சார விளக்குகள் தரும் வெளிச்சம் தவிர சுற்றிலும் இருட்டாக இருக்க, கணவனின் கைகளுக்குள் அதாவது அவனுடைய அணைப்பிலேயே நடந்து வந்தாள்.

தொடர்ந்து சில வினாடிகளில் வீட்டு வாசலை அடைந்திருந்தார்கள்.

திடீரென்று கணவனுடன் தான் நடந்து வரும் நிலை உறுத்த, யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்களென்று விலக முயற்சித்தாள்.

ஆனால் அதற்கு விடாமல் கணவனின் அணைப்பு இறுக, ''ப்ளீஸ் விடுங்க'' என்றாள்.

''ம்கூம்.''

''யாராவது பாத்தா...''

''பாக்கட்டுமே.''

''வேண்டாம் ஜெய்...'' என்ற மனைவியைத் தனது மார்போடு இறுக்கியவன், ''ம்கூம் வேணும்...'' என்று முனகிக் கொண்டே அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.

கணவனின் செய்கையில் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் வசமிழந்து போய்க் கொண்டிருந்த ஸ்வேதா, கணவனிடமிருந்து விலகவும் முடியாமல், விலகவும் தோன்றாமல் அவன் மீதே சாய்ந்தாள்.

அதற்குள் இருவரும் வீட்டிற்குள்ளேயே வந்திருந்தனர்.

சரியாக அதே நேரம் தோட்டத்து வீட்டின் மறு பக்கத்திலிருந்து யதேச்சையாக ராஜேந்திரன் உள்ளே வர, அந்த நேரத்தில் தந்தையை அங்கு எதிர்பார்த்திராத ஜெயவர்த்தன் சற்றே திகைத்தான்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

உடனே இயல்பு நிலைக்கு வந்திருந்தவன், ''வாங்கப்பா'' என்றான்.

கணவனின் குரலில் நடப்பிற்கு வந்த ஸ்வேதா, உடனே அவனை விட்டு விலக எண்ணி ஏன் விலகவும் முயன்றாள்.



ஆனால் ஜெயவர்த்தன் அதற்கு விட்டிருந்தால் அல்லவா.

அணைப்பிலிருந்து விடுத்திருந்தாலும் தனது கைகளிலிருந்து அவன் மனைவியை விடுவித்திருக்கவில்லை.

''இங்க தூங்க வந்தீங்களா?''

தந்தை கேட்க ''ஆமாம்பா'' என்றான்.

''இங்க ஏ.சி. கூட இருக்காதே, பாவம் மருமகப் பொண்ணு அவள ஏன் வாட்ற?''

கணவனின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள எவ்வளவோ முயன்ற ஸ்வேதா (வெளிப்படையாகத் தெரியாத வண்ணம் தான்) ''அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல மாமா இங்கயும் வசதியா தான் இருக்கு'' என்று முயன்று வரவழைத்த குரலில் சொன்னாள்.

''அப்ப சரிதான்'' என்று தானும் புன்னகையுடன் சொன்ன ராஜேந்திரன், ''தேங்காய் லோடு ஏத்த நைட்டு எந்த நேரத்துக்குன்னு முடிவாத் தெரியல. லாரிகள் வரும்பா. தோட்டத்துக்காரன் குப்பனக் கூட இருக்கச் சொல்லியிருக்கேன்'' என்றார்.

''சரிதான்.''

''சத்தம் கேக்குங்கறதுனால தான் சொன்னேன். நீ எழுந்து வந்து பாத்தாகணுங்கறது இல்ல.'' என்றவர் பொதுவாக ''குட்நைட்'' ஒன்றை சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

மாமனார் சென்ற பிறகும் தனது கையை விடாமல் பிடித்துக் கொண்டிருந்த கணவனை எரித்து விடுவதைப் போலப் பார்த்தாள் ஸ்வேதா.

''என்னடா?''

வெடுக்கென்று கணவனின் பிடியிலிருந்த தனது கையை உதறி விடுவித்துக் கொண்டு எங்கும் நிற்காமல் விடுவிடுவென்று வீட்டிற்குள் வந்திருந்தாள்.

மனைவியின் திடீர்க் கோபத்திற்கான காரணம் புரிந்தும், புரியாதது போலிருக்க, சரிதானென்று சென்று அனைத்துக் கதவுகளையும் தாழிட்டிருக்கிறதா என்று சரி பார்த்துக் கொண்டு தங்களுடைய அறைக்கு வந்திருந்தான்.

''ஸ்வேதா.''

கண்ணுக்கு எட்டும் தூரம் வரை இருட்டாக இருக்க, ஜன்னல் வழியாக இலக்கற்று வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியை மீண்டுமொரு முறையும் அழைத்தான்.

''ஸ்வேதா என்னாச்சு உனக்கு?''

அப்பொழுதும் எந்தப் பதிலும் வராது போக மனைவியை நெருங்கியிருந்தவன் அவளுடைய தோள் பட்டையில் கை வைத்துத் தன் பக்கமாகத் திருப்பினான்.

மனைவியின் கண்கள் கலங்கியிருப்பது தெரிய, சற்று அதிர்ந்து கூடப் போனான்.

''ஸ்வேதா என்னாச்சு?''

'.............'

''உன்னத்தான்...''

''நீங்க பேசாதீங்க.''

''ஏன்?''

''நிஜமா புரியல?''

''இல்லையே.''

''பொய்.''

''நிஜம்மா கொஞ்சம் புரியற மாதிரி தான் பேசேன்...''

''ஏன் அப்படி செஞ்சீங்க?''

''எப்படி?''



''ம், அப்படி... அந்த மா...''

''என்னடா?''

''என்ன விடுங்க முதல்ல'' என்று தனது கையைப் பிடித்திருந்த கணவனின் கையை உதறித் தள்ளியவள், ''மாமாவப் பாத்ததுக்கப்புறமாவது என்ன விட்டிருக்க வேண்டியது தான?'' என்று ஆதங்கத்துடன் கேட்டாள்.

அட இவ்வளவு தானா என்று நினைத்துக் கொண்டவன் அதை வெளியே சொல்லவில்லை.

''ஏன் அப்படி செஞ்சீங்க?''

''ஏன் அதுல என்ன இருக்கு?''

''என்ன நினைச்சிருப்பார்?''

''ஏன் இதுல அப்பிடி நினைக்க என்ன இருக்கு?''

சிறுபிள்ளைத்தனமான மனைவியின் கோபம் புன்னகையை வரவழைத்திருந்தது ஜெயவர்த்தனுக்கு.

வாய் விட்டே நகைத்தான்.

ஆனால் ஸ்வேதாவுக்கோ கணவனின் சிரிப்பு மேலும் ரோஷத்தை அதிகப்படுத்தியிருந்தது.

''ஸ்வேதா இங்க பாரு...''

அருகில் நெருங்கி வந்திருந்த கணவனை பலம் கொண்ட மட்டும் பிடித்துத் தள்ளினாள்.

''நீ பண்றது சிறு பிள்ளைத்தனமா இருக்கு ஸ்வேதா.''

..............

''நாம என்ன கள்ளக் காதலர்களா? அப்படியிருந்தும் கூட உன்ன விலக்கத் தான செஞ்சேன்.''

''யாரு நீங்க? தயவு செஞ்சு போயிடுங்க. எங்கூடப் பேசாதீங்க.''

# 20

சில வினாடிகள் நின்று பார்த்த ஜெயவர்த்தனுக்கு மனைவியின் கோபம் அப்போதைக்குக் குறையும் போலத் தோன்றவில்லை.

சரிதானென்று பக்கத்து அறைக்குச் சென்று தன்னுடைய வேலைகளைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தான்.

பேசாமல் சென்று படுத்துக் கொண்டு விட்டிருந்த ஸ்வேதாவுக்கு, தொடக்கத்தில் எப்படியோ போகப் போகத் தனியாக இருக்கவே பயமாகி விட்டிருந்தது.

அது ஓடுகளால் வேயப்பட்ட வீடாக இருக்க, இடையிடையே இருந்த மரச் சட்டங்களில் பல்லிகள் ஊர்ந்து செல்வதை ஒருவித அருவெறுப்புடன் கண்டாள்.

பயத்துடனும்,

ஒருவேளை அந்தப் பல்லி தன் மீதே வந்து விழுந்து விட்டால்,

அப்படி எண்ணியது தான் தாமதம்,

நிஜமாகவே ஒரு பல்லி அவளுடைய தலைக்கு நேர் மேலாகவே வந்து நின்றிருந்தது.

இதோ இப்பொழுது தன்மேல் விழத்தான் போகிறது.

அடுத்த வினாடி படுக்கையை விட்டுத் துள்ளி எழுந்திருந்தாள்.

கணவனிடம் செல்லவும் மனம் வந்திருக்கவில்லை.

தனியாக இருக்கவும் பயமாக இருந்தது.

அப்படியே எவ்வளவு நேரம் நின்றாளோ,



அது ஓட்டு வீடென்பதால் தனக்கு மேல் ஏதோ சலசலவென்று ஓடுவதைப் போல சத்தம் கேட்டதில் பயத்தில் தன்னையறியாமலேயே கத்தி விட்டிருந்தாள்.

மனைவியின் அலறலில் என்னவோ ஏதோவென்று எழுந்து வந்திருந்த ஜெயவர்த்தனுக்குக் காரணம் தெரிய வந்ததில் அடக்க மாட்டாமல் சிரிப்பு வந்து விட்டிருந்தது.

ஆனாலும் முயன்று அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு மனைவியைப் பார்த்தான்.

''நாம இப்பவே அந்த வீட்டுக்குப் போயிடலாம்.''

..........

''எனக்கு இங்க பயமா இருக்கு...''

''என்ன நீ பல்லிக்கே இவ்வளவு பயப்பட்ற, இங்க தூங்கிட்டிருக்கும்போது பாம்பு, தேள் எல்லாம் கூட மேல வந்து விழும் தெரியுமா. அதோ இப்பக்கூட பாரு அங்க ஒரு...''

அவ்வளவுதான்.

ஓடிவந்து கணவனின் கையைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தாள் ஸ்வேதா.

''ம், என்ன?''

''பயமா இருக்கு.''

''சரி.''

''நான் உங்க பக்கத்துலயே இருக்கலாமா?''

''வேண்டாம்.''

''ப்ளீஸ்.''

''ம்கூம்.''

''ப்ளீஸ் ஜெய்...'' என்று கெஞ்சிய மனைவியை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

இங்க வே.....

தொடர்ந்து ஏதோ சொல்ல வந்த மனைவியின் இதழ்களைத் தனது இதழ்களால் சிறை பிடித்திருந்தான்.

முதலில் லேசாகத் திமிறிய ஸ்வேதா சில வினாடிகளில் முற்றிலுமாகத் தன் வசமிழந்து பிறகு தானும் கணவனை இறுக அணைத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

## 21

பதினைந்து நாட்கள் சென்றிருந்தன.

தன்னைப் புகுந்த வீட்டில் ஒருத்தியாகவே எண்ணத் தொடங்கி விட்டிருந்தாள் ஸ்வேதா.

கணவனுடன் மனமொன்றிப் போனதே அதற்குக் காரணம்.

அதிலும் கணவனைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டு விட்டதில் அவளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியும் கூட.

கணவன் சொல்வதைப் போல இப்பொழுதெல்லாம் தனக்கும் அவனைத் தவிர வேறு நினைவே வருவதில்லையே.

காலையில் கிளம்பிச் சென்றால் மாலை வரை உன் நினைவு தான் என்று கணவன் சொல்வதைப் போலவே தான் தன் நிலையும் ஆகி விட்டது போலிருக்கிறதே.

அவன் இல்லாத நேரங்களில் இப்படியென்றால், கணவன் அருகில் இருக்கும் நேரங்களிலோ உலகமே மறந்து போய் விடுகிறதே.

''ஸ்வேதா.''

''அத்தை.''



''என்னமா பண்ற?''

''சும்மா தான் அத்தை இருக்கேன், என்ன சொல்றீங்க?''

''ரயில்வே ஸ்டேஷன் வரைக்கும் போய்ட்டு வரலாமாம்மா?''

''சரி அத்தை.''

''எதுக்குன்னு தெரிஞ்சுக்....''

''தாராளமா கண்ணம்மா, பத்மினி குழந்தைய எடுத்துட்டு வர்றா. பாவம் கைக் குழந்தையோட லக்கேஜையும் தூக்கிட்டு வர்றது சிரமம், நாம போய் அழைச்சுட்டு வந்துடலாம். ஆனா...''

''என்ன அத்தை?''

''சுதர்சன் வர்றதா சொன்னான். ஆனா இன்னும் காணோம் எப்படிப் போறது...''

''அவங்க எதுக்கு அத்தை?''

''கார் ஓட்டத்தாம்மா.''

''நான் டிரைவ் பண்றேன். வாங்க அத்தை'' என்றவள், தொடர்ந்து வந்த சில வினாடிகளில் தனது அத்தையை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டிருந்தாள்.

பத்மினிக்கு இரண்டு குழந்தைகள்.

அந்தக் குழந்தைகள் இருவரும் அவளுடைய தாய் வீட்டில் தான் வளர்ந்து வந்தனர்.

முதலில் ஆண் குழந்தை.

அவன் ஐந்தாவது படித்துக் கொண்டிருக்க, அடுத்ததாகப் பிறந்த பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளுக்கு இன்னும் சில நாட்கள் இருந்தன.

பிரசவத்திற்காகத் தாய் வீடு சென்றிருந்த பத்மினி, இப்பொழுது சில மாதங்களுக்கு முன்பு தான் அதாவது

ஜெயவர்த்தனின் திருமணத்திற்காகத்தான் மீண்டும் புகுந்த வீடு திரும்பியிருந்தாள்.

அதுவும் குழந்தைகளைத் தாய் வீட்டில் விட்டுவிட்டு அவள் மட்டும்,

பத்மினி அவளைப் பெற்றவர்களுக்கு ஒரே பெண்.

தவமிருந்து பெற்ற செல்லப் பெண்ணும்கூட.

அவளைப் பொறுத்தவரை பத்து மாதம் சுமந்து குழந்தைகளைப் பெற்றுத் தந்ததே மிகப்பெரிய சாதனையென்று சொல்வாள்.

அதற்கு மேல் குழந்தைகளை வளர்ப்பது கூட அவளுடைய பெற்றவர்கள் செய்தாக வேண்டியது என்பதில் உறுதியாக இருந்தாள்.

ஆனால் இப்பொழுது ஊரில் அவளுடைய தாய்க்கு சற்று உடல் நலமில்லை.

கட்டாயம் ஓய்வெடுத்துக் கொண்டே ஆக வேண்டும் என்கிற நிலை.

அப்படியிருக்கும் பொழுது இரண்டு குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதென்பது இயலாத காரியம்.

இருந்தாலும் பெரியவன் நன்கு விவரம் தெரிந்தவன் என்பதோடு, இடையில் பள்ளியை மாற்றுவதும் சிரமமென்பதால் கைக் குழந்தையை மட்டும் பத்மினி தானே எடுத்து வந்து வளர்த்துக் கொள்ள முடிவு செய்திருந்தாள்.

அதற்காக சில நாட்களுக்கு முன்பு தாய் வீடு சென்றவள், இப்பொழுது குழந்தையுடன் திரும்புகிறாள்.

அவளுடைய கணவனும் வேலை விஷயமாக வெளியூர் சென்று விட்டிருக்க, பத்மினியை அழைத்து வர ஸ்வேதாவுடன் தானே கிளம்பியிருந்தார் காஞ்சனா.



அடுத்த அரைமணி நேரத்தில் காஞ்சனா, ஸ்வேதா இருவரும் ரயில் நிலையத்தை வந்தடைந்திருந்தனர்.

அடுத்த பத்து நிமிடங்களில் வந்து சேர்ந்திருந்த பத்மினியை வரவேற்றவர், குழந்தையை சந்தோஷமாகத் தனது கைகளில் வாங்கிக் கொண்டார்.

தனது அத்தையைத் தொடர்ந்து தானும் பத்மினியிடம் நலம் விசாரித்துக் கொண்ட ஸ்வேதா "எங்கிட்டக் குடுங்க" என்று லக்கேஜ்களை வாங்கிக் கொள்வதற்காகக் கையை நீட்டினாள்.

"இல்ல, நானே வெச்சுக்கறேன் உனக்கெதுக்கு சிரமம்?"

"பரவாயில்ல ஒன்ன மட்டுமாவது குடுங்க" என்று வாங்கிக் கொண்ட ஸ்வேதாவிற்கு மனம் முழுவதும் குழந்தையிடம் தான் இருந்தது.

அந்த அளவிற்குக் குழந்தை பார்க்கக் குறுகுறு பார்வையுடன் மிகவும் அழகாக, சந்தன நிறத்தில் நெஞ்சைக் கொள்ளை கொள்ளுவதாய் இருந்தது.

நன்கு விளையாட்டுக் காட்டி சிரிக்க வைத்தாள்.

அதற்குக் குழந்தை பொக்கை வாயைக் காட்டி சிரித்ததில் மிகவும் சந்தோஷமாகிப் போயிற்று ஸ்வேதாவிற்கு.

ஆனால் மீண்டும் காரை செலுத்த வேண்டியிருந்ததால் தொடர்ந்து குழந்தையிடம் கவனத்தைச் செலுத்த முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் வீட்டிற்குச் சென்ற உடனேயே தனது அத்தையிடமிருந்து ஆசையுடன் குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

பத்மினியின் குழந்தை வந்ததற்குப் பிறகு மேலும் சுவாரஸ்யமாக நேரம் செல்லத் தொடங்கி விட்டிருந்தது ஸ்வேதாவிற்கு.

தூங்கும் நேரத்தையும், பசித்து அழும் நேரத்தையும் தவிர மற்ற அனைத்து நேரங்களிலும் தானே தூக்கி வைத்துக் கொண்டாள்.

''குழந்தைன்னா உனக்கு இவ்வளவு ஆசையா'' என்று கணவன் கேலி பேசிச் சிரித்ததைக் கூட அவள் கண்டு கொள்ளவில்லை.

இன்னும் இரண்டு நாட்களில் குழந்தைக்கு முதல் பிறந்தநாள் வர அதை விமரிசையாகக் கொண்டாட முடிவு செய்திருந்தார்கள்.

ஸ்வேதா தானும் நல்ல பரிசு தர விரும்பினாள்.

''ஜெய்.''

மனைவி அழைக்க திரும்பி அவளைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''என்னாச்சு?''

''என்ன, என்னாச்சு?''

''குழந்தைய அவங்கம்மா வாங்கிட்டுப் போய்ட்டாங் களா?''

''அதுல என்ன உங்களுக்கு இவ்வளவு சந்தோஷம்?''

''சந்தோஷமில்லேன்னா என்ன, இருக்கறதக் கேக்க றேன்.''

''இன்னைக்கு நீங்க ஆபீஸ் போகும் போது நானும் உங்க கூட வரட்டுமா?''

''எதுக்கு?''

''பர்ச்சேஸ் இருக்கு.''

''அது என்ன?''

''தன்யாவுக்கு பர்த்டே கிஃப்ட் வாங்கணும்.''

''தன்யா.''



''அதுதான் குழந்தையின் பெயர்.''

''அதுக்கு நீ ஏன் சிரமப்பட்ற? என்ன வேணும்னு சொல்லு நானே வாங்கிட்டு வந்துட்றேன்.''

''ப்ளீஸ் ஜெய், எனக்கும் வேற திங்க்ஸ் கொஞ்சம் வாங்க வேண்டியிருக்கு ப்ளீஸ்...''

''சரிதான், காருக்கு இன்னைக்கு வேலையில்ல எடுத் துட்டுப் போய்ட்டு வந்துடு.''

''தேங்க்யூ.''

''நீ தனியாப் போகாத, யாரையாவது கூட அழைச் சுட்டுப் போய்ட்டு வந்துடு.''

''அப்ப நீங்களே வாங்க.''

''இல்லடா எனக்கு வேற வேலையிருக்கு. நான் வர்ற துக்கில்ல'' என்றவன் ''என் கப்போர்ட்ல பணமிருக்கு. எவ்வளவு வேணும்னாலும் எடுத்துட்டுப் போ'' என்றான்.

லாவண்யா விடுமுறை எடுக்க வழியில்லையென்று கல்லூரிக்குக் கிளம்பி விட்டிருக்க, தோட்டத்தில் அறு வடை நேரமென்பதால் தனது அத்தையையும் அழைக் காமல் தானே கிளம்பி விட்டிருந்தாள் ஸ்வேதா.

குழந்தையின் பிறந்த நாளும் வந்திருந்தது.

குழந்தை தன்யாவின் பிறந்த நாள் விழாவுக்காக வீட்டை அலங்கரிப்பதில் லாவண்யாவுடன் தானும் சேர்ந்து கொண்டாள் ஸ்வேதா.

சிறு பெண் போல ஆசையாக அனைத்து வேலைகளை யும் அனுபவித்துச் செய்தாள்.

எவ்வளவு நல்ல பெண்ணென்று காஞ்சனாவும், ராஜேந்திரனும் பூரித்துப் போயினர்.

அன்புக்காக எவ்வளவு ஏங்கியிருக்கிறாள், பாவமென்று நினைத்த காஞ்சனாவிற்கு மனம் நெகிழ்ந்து போயிற்று.

''ஸ்வேதா.''

''என்ன அத்தை?''

''காலையிலிருந்து வேலை செஞ்சுட்டே இருக்கி யேம்மா, கொஞ்சம் வந்து உக்காரு வா.''

''இல்ல அத்தை இன்னும் நிறைய வேலையிருக்கு'' என்றவள் ''ஏன் அத்தை நான் ஏதாவது வந்து உங்களுக்கு உதவி செய்யணுமா, எதுவானாலும் சொல்லுங்க?'' என்று அக்கறையுடன் கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லமா, நீ பாவம் நிக்காம அலஞ்சுட்டிருக்கியேன்னு சொன்னேன் வேறொன்னு மில்ல'' என்றார்.

''அதனால என்ன அத்தை, குட்டிப் பாப்பாவோட முதல் பர்த்டே கலக்க வேண்டாமா'' என்றவள் ''இதோ வந்துட்டேன் லாவண்யா'' என்று ஓடினாள்.

குழந்தை தன்யாவின் பிறந்த நாளுக்கு அக்கம் பக்கத்தினர், நெருங்கிய சொந்தங்கள் என அனைவரை யும் அழைத்திருந்தனர்.

வரப் போகிறவர்கள் அனைவருக்கும் காஞ்சனா தானே பிரமாதமாக விருந்து தயாரித்திருந்தார்.

''சரி அண்ணி, இனி நீங்க போய் குளிச்சுட்டு ஃப்ரெஷ்ஷா வாங்க'' என்றாள் லாவண்யா.

''அப்ப நீ?''

''நானும் தான் அண்ணி, பத்து நிமிஷத்துல வந்துடு வேன்'' என்று சென்றவள் சில நிமிடங்களிலேயே ''அண்ணி உங்களுக்கு போன், அண்ணா'' என்று வந்தாள்.

கணவனின் அழைப்பை அட்டெண்ட் செய்து பேசி னாள் ஸ்வேதா.



பேசி முடித்து விட்டு போனை வைத்தவளிடம், ''என் னமா உன் வீட்டுக்காரர் என்ன சொல்றார்?'' என்று கேட் டார் காஞ்சனா.

''வர லேட்டாகுமாம் அத்தை. அவருக்காகப் பாத்துட் டிருக்காம எல்லாம் நடக்கட்டும்னு சொன்னார்'' என் றவள் ''சரி அத்தை நான் போய் குளிச்சுட்டு வந்துட் றேன்'' என்று வந்தாள்.

சொன்னது போலப் பத்து நிமிடங்களில் தயாராகி வந்தாள் ஸ்வேதா.

பெரும்பாலானோர் வந்து விட்டிருக்க குழந்தை தயா ராகி விட்டாளா என்று பார்த்து விட்டு வருவதற்காகச் சென்றாள்.

''பத்மினிக்கா.''

''வா, என்ன?''

''பாப்பா ரெடியாயிட்டாளா?''

''ஆயிட்டே இருக்கா.''

''ஏதாவது ஹெல்ப் வேணுமா?''

''சரிதான் பாப்பாவுக்கு கூல் ரெடி பண்ணச் சொன் னேன், அத மட்டும் வாங்கிட்டு வந்துட்றியா?''

''இதோ என்று சமையலறைக்கு வந்தவள், தனது அத்தை தயாராகக் கலக்கி வைத்திருந்த ராகிக் கூழை வாங்கிக் கொண்டு வந்தாள்.

''நான் குடுக்கறேன் குடுங்க.''

''வேண்டாம், பர்த்டே டிரஸ்ஸப் போட்டாச்சு. அத் னால நானே குடுத்துக்கறேன்.''

''இந்த நேரத்துக்குக் கூல் எதுக்கு, லைட்டா ஏதாவது குடுக்கலாமே.''

"இதுன்னா சீக்கிரம் குடிச்சுக்குவா வயிறு நிறையறதால பசிக்கும் அழ மாட்டா."

"சரிதான் குடுங்க. நான் ஊட்டி விட்றேன். நீங்க போய் ரெடியாகி வாங்க."

"நீ வேணும்னா ஒண்ணு செய்றியா?" என்று பத்மினி கேட்க "சொல்லுங்க" என்றாள் ஸ்வேதா.

"பாப்பாவ எடுத்துட்டுப் போய் லாவண்யாவ உதவிக்கு வெச்சுக்கிட்டு ஊட்டி விடு."

"சரி குடுங்க" என்று குழந்தையையும், ராகிக் கூழையும் வாங்கிக் கொண்டு வந்தாள்.

லாவண்யாவை அழைத்து விட்டு, குழந்தைக்கு ஊட்டலாமென்று கீழே அமர்ந்தாள்.

அமர்ந்தவள் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு ராகிக் கூழைக் கையில் எடுத்தாள்.

அந்த நேரத்தில் ஒரு தவறு நடந்து விட்டிருந்தது.

அதுவும் அவள் சற்றும் எதிர்பாராமல் நடந்து விட்டிருந்ததென்று தான் சொல்ல வேண்டும்.

நடந்தது இதுதான்.

குழந்தைக்கு ஊட்டுவதற்காகக் கூழ் இருந்த கிண்ணத்தைக் கையில் எடுத்திருந்தாள் ஸ்வேதா. மிகவும் கவனமாகத்தான் எடுத்தாள்.

ஆனால் அவளே அறியாமல் எப்படியோ கிண்ணம் அவளுடைய கையிலிருந்து தவறி விட்டிருந்தது.

தவறிக் கீழே விழுந்திருந்தால் கூடப் பரவாயில்லை, அது அப்படியே குழந்தையின் மேலேயே விழுந்து கொட்டியிருந்தது.

இப்படி நடக்குமென்று துளியும் எதிர்பார்த்திராத ஸ்வேதாவிற்கு மனதிற்குள் திக்கென்று ஆகி விட்டிருந்தது.



சரியாக அதே நேரம் அந்த அறைக்குள் வந்த காஞ்சனா, "என்ன ஸ்வேதாம்மா பாப்பா குடிக்கறாளா?" என்று அருகில் வந்தார்.

"கூழ் சிந்திடுச்சு அத்தை. அதுவும் பாப்பா மேலயே."

"அடடா, சரி விடு கிண்ணத்துல இன்னும் கொஞ்சம் கூழ் இருக்கு. அத எடுத்துட்டு வர்றேன்" என்றவர் "அதுக்கு முன்னாடி குழந்தையக் குடு இந்தத் துணியக் கழட்டிட்டு ஈரத் துணி வெச்சுத் துடைச்சுக் குடுக்கறேன்" என்றார்.

"ஆனா..."

"என்னமா?"

"இதுதான் பர்த்டே டிரஸ் அத்தை..."

"அடடா, சரி விடு தெரியாம நடந்ததுக்கு என்ன பண்ண முடியும்?" என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "என்ன பாப்பா குடிக்கறாளா?" என்று வந்தாள் பத்மினி.

வந்தவள் அதற்குப் பிறகு தான் நடந்ததைக் கண்டாள்.

"ஸாரிக்கா, தெரியாம பாப்பா மேலயே கூழ் சிந்திடுச்சு" என்று மிகுந்த குற்ற உணர்ச்சியுடன் மன்னிப்புக் கேட்டாள் ஸ்வேதா.

"ஸாரியா என்ன தைரியமிருந்தா இப்படி நடந்துக்கிட்டிருப்ப? உனக்குக் குழந்த மேல பொறாமைன்னு எனக்கு அப்பவே தெரியும். ஆனாலும் அத எப்படி ஃப்ரூப் பண்றதுன்னு தெரியாம தவிச்சுட்டிருந்தேன்."

பத்மினியின் அநியாயமான குற்றச்சாட்டில் துடித்துப் போனாள் ஸ்வேதா.

"அச்சச்சோ, தெரியாம நடந்ததுக்கு என் இப்படியெல்லாம் சொல்றீங்க. தயவு செஞ்சு மன்னிச்சுடுங்க..."

''மன்னிக்கறதா? ஏன் நடிக்கற? பாப்பா மேல கூழ் சிந்தணுங்கறது மட்டும்தான் உன் திட்டமா? இல்ல அவளையே ஏதாவது செய்யணும்னு முடிவு பண்ணி வெச்சிருந்தியா?''

பத்மினி சொன்ன வார்த்தைகளின் பொருள் பயங்கரமானதாய் இருக்க, கோபத்துடன் ''போதும் பத்மினி'' என்றார் காஞ்சனா.

''சரிதான். அவ செஞ்ச தப்புக்கு என்ன மிரட்டறீங்களா?'' அதுவும் ஊர்ல இருந்து என் அம்மா அப்பா ஆசையா எடுத்துக் குடுத்த டிரஸ்ஸப் போய் இப்படி செஞ்சு வெச்சிருக்கா. அத ஏன்னு ஒரு வார்த்த கூடக் கேக்காம என்ன மிரட்டறீங்களா?''

''தெரியாம கை வழுக்கினதப் போய் பெரிசு பண்ணாதமா, எல்லாரும் வந்திருக்காங்க பாரு...''

''அப்ப ஒண்ணுமில்லாததப் பெரிசு பண்றதுதான் என் வேலையா?'' என்று வராத கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் பத்மினி.

''எல்லாத் தப்பும் எம்மேல தான், தயவு செஞ்சு மன்னிச்சுடுங்க'' என்று மீண்டுமொரு முறையும் மனதார உணர்ந்து மன்னிப்புக் கேட்டாள் ஸ்வேதா.

''உன் மன்னிப்பு இங்க யாருக்கு வேணும், எப்படியோ மனசுல நினைச்சத சாதிச்சுட்ட விடு. ஆனாலும் பாரு உன்னால குழந்தைய ஒண்ணும் பண்ண முடியல.''

பத்மினி பாட்டுக்கு சற்றும் கோபம் குறையாமல் பேசிக் கொண்டே போக, ஈட்டியாய் நெஞ்சிலேயே பாய்ந்த அவளுடைய வார்த்தைகளில் மேலும் துடித்துப் போனாள் ஸ்வேதா.



ஆனாலும் அதை மற்றவர்களுக்கு முன்பாகக் காட்டிக் கொள்ள மனம் ஒப்பவில்லை.

''போதும், உன் நடிப்ப நம்ப இனிமேல் நான் தயாரில்லை. இனி என் குழந்தையத் தொட மாட்டேன்னு நினைக்கறேன், சரிதான் அந்த அளவுக்குக் கூடவா ரோஷமில்லாமப் போயிடும்'' என்று குழந்தையின் துணியை மாற்றி ஈரத் துணியால் அதன் உடலை ஒற்றி எடுத்தாள் பத்மினி.

என்னவெல்லாம் சொல்லி விட்டாளென்று நினைத்த ஸ்வேதாவுக்குத் தொண்டை, நாக்கு எல்லாம் வறண்டு எதையும் யோசிக்கக் கூட முடியாத அளவிற்கு ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

ஆனாலும் வெளியில் தன்னை இயல்பாகக் காட்ட முயன்று, அதில் ஓரளவு வெற்றியும் பெற்றாள்.

அதற்காக அவள் எடுத்துக் கொண்ட முயற்சி கொஞ்சம் நஞ்சமல்ல,

அது காஞ்சனாவிற்கும் புரியவே செய்தது.

நடந்தது ஓரளவு அனைவருக்குமே தெரிந்து போய் விட்டிருந்தது.

பத்மினியைப் பற்றித் தெரிந்ததாலேயே காஞ்சனாவும் அதற்கு மேல் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசவில்லை எனலாம்.

குழந்தைக்கென நிறைய புதுத் துணிகள் இருக்க, அதில் நன்றாக இருந்த மற்றொன்றை எடுத்து அணிவித்திருந்தார்கள்.

சிறிது நேரத்தில் பிறந்த நாள் கேக் வெட்டப்பட, தொடர்ந்து அனைவரும் தங்களுடைய பரிசுகளைக் கொடுத்தார்கள்.

ஸ்வேதாவும் தன்னுடைய பரிசைக் கொடுத்தாள்

அதை அப்படியே விட்டிருக்கலாம்.

ஆனால் கள்ளம் கபடமறியாத லாவண்யாவோ ஸ்வேதாவின் அன்பளிப்பை எடுத்துப் பிரித்து அனைவருக்கும் காட்டினாள்.

தங்கத்தில் செயின் ஒன்று இருக்க, அதில் ஆலிழைக் கிருஷ்ணன் உருவம் பொறித்த அழகிய தங்கத்தினாலான பெண்டன்ட் அந்தத் தங்கச் செயினுக்கு மேலும் அழகு சேர்த்திருந்தது.

''வாவ் உங்க கிஃப்ட் பிரமாதம் அண்ணி'' என்று மனதாரச் சொன்னாள் லாவண்யா.

''க்கும், தங்கத்துலயே செயினாம். இதுக்கெல்லாம் ஒண்ணும் குறைச்சலில்ல, அவ பணக்காரிங்கறது எல்லாருக்கும் தெரிய வேண்டாம்.''

''இவ கிஃப்டுக்காக இங்க யாரு காத்துட்டிருக்காங்களாம், இதையெல்லாம் செய்யறதுக்கு பதிலா பொறாமப்படாம நாலு பேர் மாதிரி இருந்துட்டுப் போகலாம்...''

விட்டிருந்தால் பத்மினி பாட்டுக்கு இன்னும் பேசிக் கொண்டே போயிருப்பாளோ என்னவோ, ஆனால் அதற்கு வழியில்லாமல் ராஜேந்திரன் வர, அந்தப் பேச்சு அத்தோடு நின்றிருந்தது.

பத்மினி பேசுவது ஆயிரத்தில் ஒரு பங்காகக் கூட சரியில்லையென்றாலும் காஞ்சனாவால் அதை வெளிப்படையாகக் கேட்க முடிந்திருக்கவில்லை.

அதற்கு மேல் கேட்டாலும் பலன் இருக்காது.

பத்மினியின் குணம் அந்த மாதிரி.

அவளைப் பொறுத்தவரை அவள் வைப்பது தான் சட்டம், அவள் பேசுவது தான் நியாயம்.



என்னதான் செல்லமாக வளர்ந்த பெண் என்றாலும் இப்படியா என்று பத்மினி அந்த வீட்டிற்கு மருமகளாக வந்ததற்குப் பிறகு தாங்க முடியாமல் சில முறை நியாயம் கேட்டிருக்கிறார் காஞ்சனா.

அதனால் நல்லது நடந்ததோ இல்லையோ, பத்மினி பெரும் பிரச்சனையை இழுத்து வைத்தது தான் மிஞ்சியது.

பார்க்கும் வரை பார்த்து விட்டுக் கடைசியில் காஞ்சனா தன்னை மாற்றிக் கொண்டு விட்டார்.

ஆனாலும் தாங்கிக் கொள்ள முடியாமல் சில முறை பேச நேர்ந்து விடுவதும் உண்டு தான்.

இப்பொழுது போல,

என்ன பேசி என்ன, பத்மினியைப் பொறுத்தவரை மற்றவர்கள் தான் அடங்கிப் போயாக வேண்டும்.

என்னதான் இந்துமதியும் கோபக்காரி தான் என்றாலும், பத்மினியின் அளவில் பாதிகூட இல்லை.

அதிலும் அவள் பெரிய குடும்பத்தில் நாலோடு ஐந்தாவதாகப் பிறந்த பெண் என்பதால், விட்டுக் கொடுத்துப் போகவும் கூடத் தெரிந்திருந்தது.

இப்படியெல்லாம் பார்க்கும்போது ஸ்வேதா,

அவளும் ஒற்றைப் பெண் தான்,

அதிலும் தாயில்லாமல் ஆண் வளர்ப்பில் வளர்ந்த பெண்.

வசதியில் பத்மினி, இந்துமதியை விட நூறு மடங்கே கூட அதிகமென்று சொல்லலாம்,

அப்படியெல்லாம் இருந்தும் கூட இவர்களோடு ஒப்பிடுகையில் ஸ்வேதா பழகும் முறை எவ்வளவு பிரமாதமானதாக இருக்கிறது.

பெரியவர்களை மதித்து, விட்டுக் கொடுத்து...

ஏன் அப்படிப் பார்த்தால் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாமே.

இரவு ஒன்பது மணிக்கு மேலேயே ஆகியிருக்க பெருமளவு உணவு வேலைகள் முடிவடைந்திருந்தன.

ஜெயவர்த்தன் மட்டும் இன்னும் வந்திருக்கவில்லை.

கணவன் வந்த பிறகு சாப்பிட்டுக் கொள்கிறேனென்று ஸ்வேதாவும் சொல்லி விட்டிருந்தாள்.

மணி இரவு பத்தும் ஆகியிருக்க அனைவரும் தூங்கச் சென்று விட்டிருந்தார்கள்.

காஞ்சனா மட்டும் தூங்கச் சென்றிருக்கவில்லை.

''அம்மா.''

''வாப்பா.''

ஜெயவர்த்தன் வர, வரவேற்றார் காஞ்சனா.

''ஃபங்ஷனெல்லாம் நல்லபடியா முடிஞ்சதா?''

''ஆமாம்பா, நீ இல்லாதது தான் குறை.''

''தன்யா?''

''அவளுக்கு ஒரே தூக்கம், இந்நேரம் நல்லாத் தூங்கியிருப்பா.''

..........

''சரி கண்ணா சாப்பிட வா.''

''நீங்க எல்லாரும் ஆச்சா?''

''எல்லாரும் சாப்டாச்சு, ஸ்வேதா மட்டும் நீ வந்ததுக்கப்பறம் சாப்பிட்டுக்கறேன்னு சொன்னா.''

''ஏன்?''

''ஏன்னு கேட்டா என்ன சொல்றது.......... அப்புறம்...''

''என்னமா சொல்லுங்க?''

''ஒண்ணுமில்லப்பா...''

''அப்படின்னா என்னவோ இருக்கு. என்னன்னு சொல்லுங்க.''

மாலையிலிருந்து நடந்ததனைத்தையும் ஒன்று விடாமல் சொல்லி விட்டிருந்தார் காஞ்சனா.

அவருக்குள்ளும் ஆதங்கம் கொந்தளித்துக் கொண்டிருந்ததால், அச்சுக் கூடப் பிசகாமல் அனைத்தையுமே சொல்லி விட்டிருந்தார்.

''என்னப்பா?''

''அவங்க குணம் தான் தெரியுமே...''

''அதுக்காக இப்படியா பேசறது. அதுவும் ஸ்வேதா குணத்துக்கு அவ மனசு என்ன பாடுபட்டிருக்கும்?''

''சரிதான்மா விடுங்க'' என்று தாய்க்காக சொன்னாலும் இந்த மாதிரி பேசியிருக்கிறார்களே என்று ஜெயவர்த்தனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சரிதான் அவர்களுடைய குணத்திற்குப் பிறகு வேறு எப்படி நடந்து கொள்ள முடியும்.

''ஒரு நிமிஷம் கண்ணா நான் போய் ஸ்வேதாவ சாப்பிட அழைச்சுட்டு வர்றேன்'' என்று காஞ்சனா சொல்லிக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்திருந்தாள் ஸ்வேதா.

''வாங்க, இப்பதான் வர்றீங்களா?''

''ஆமாம்மா, நீ சாப்டாச்சா?''

''ம்கூம், இன்னுமில்ல.''

''அப்ப வா சாப்புட்லாம்.''

''பசியில்ல.''

''பசிக்கலையா ஏன்?''

ஜெயவர்த்தன் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, ''என்னடாம்மா இது பசிக்கற அளவுக்குக் கொஞ்சமாவது சாப்பிடு'' என்று தானும் அழைத்தார் காஞ்சனா.

அவருடைய பேச்சைத் தட்ட முடியாமல் பெயருக்குக் கொஞ்சத்தை மட்டும் கொறித்து வைத்தாள்.

"ஏன் டல்லா இருக்க?"

ஒன்றும் தெரியாதது போலக் கேட்டான் ஜெயவர்த்தன்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லையே."

"சரிதான், இன்னும் கொஞ்சம் எடுத்து வெச்சு சாப்புடு."

"இல்லைங்க போதும்."

"அதெல்லாம் நிறைய இருக்கு சாப்புடு."

"ம்கூம், எனக்குப் போதும்."

அனைத்தையும் அருகில் எடுத்து வைத்து விட்டு, "சரி இனி நீங்க போட்டு சாப்புடுங்க. எல்லாத்தையும் கழுவற இடத்துல மட்டும் போட்டுடு ஸ்வேதாம்மா. காலைல வேலைக்காரங்க வந்து கழுவிக்குவாங்க" என்று தூங்கச் சென்றார் காஞ்சனா.

சில நிமிடங்களில் உணவை முடித்துக் கொண்டு இருவரும் தங்களுடைய அறைக்கு வந்திருந்தனர்.

மனைவி அறியாமல் அவளுடைய முகத்தை ஆராய்ந்தான் ஜெயவர்த்தன்.

உயிர்த்துடிப்பே இல்லாதது போல இது என்ன தோற்றம்.

நெஞ்சு உருகி விட்டிருந்தது.

எவ்வளவு சந்தோஷமாகப் பேசுவாள்.

அதிலும் சிரிக்காமல் பேசத் தெரியாதே.

கசகசவென்றிருக்க சென்று குளித்து வழக்கம் போல பிரஷ் செய்து விட்டு வந்தான்.

அதற்குள் மனைவி படுத்து விட்டிருந்தது தெரிய, அருகில் சென்று அமர்ந்தான்.

"ஸ்வேதா."



மனைவியின் தோள்பட்டையில் கை வைத்து அழைத்தான் ஜெயவர்த்தன்.

கணவனின் அழைப்பில் அவனைத் திரும்பிப் பார்த்தாள் ஸ்வேதா.

"என்னடா என்னாச்சு?"

..........

"ஸ்வேதா."

..........

"ஏன் டல்லா இருக்க?"

..........

"அம்மா சொன்னாங்க."

..........

"அவங்க குணம் அந்த மாதிரி தான்..."

"அதுக்காக..."

ஏதோ சொல்ல வந்த ஸ்வேதாவால் அதற்கு மேல் பேச முடிந்திருக்கவில்லை.

அழுகை வந்து விடும் போலக் குரல் பிசிறடித்து விட்டிருந்தது.

"வேண்டாம்மா."

"என்ன வார்த்த சொல்லிட்டாங்க... நான்... நான் குழந்தைய..."

அதற்கு மேல் பேச்சு வராமல் கதறி விட்டிருந்த மனைவியை அள்ளி எடுத்துத் தனது மார்போடு அணைத்துக் கொண்டான்.

மனைவியின் அழுகை நிற்க சற்று நேரம் பிடித்தது.

அப்பொழுதும் தேம்பிக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்தவன், "வேண்டாம்மா உன்னோட இந்தக்

கண்ணீருக்கு அவங்க கொஞ்சங் கூடத் தகுதி இல்லாதவங்க'' என்றான்.

கணவனின் வார்த்தைகளில் உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ஆனாலும் நடப்பிறகு வர மனம் வராமல் இன்னும் வாகாகக் கணவனின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அப்படியே சிறிது நேரம் சென்றிருக்க, ''ஸ்வேதா'' என்று மென்மையாக அழைத்தான் ஜெயவர்த்தன்.

''ம்.''

''தூங்கிட்டயா?''

''ம்கூம்.''

''இப்பப் பரவாயில்லையா?''

''ம்.''

''எனக்கு எப்ப கிஃப்ட் தரப் போற?''

கணவனின் கேள்வி புரிந்திருக்காததில் நிமிர்ந்து அவனுடைய முகத்தைப் பார்த்தாள்.

''புரியலையா'' என்றவன் அவளுடைய வயிற்றைத் தொட்டுக் காட்டினான்.

கணவன் என்ன கேட்க வந்திருக்கிறானென்பது புரிந்ததில் முகம் இரத்தமெனச் சிவந்து விட்டிருக்க, தொடர்ந்து அவனுடைய முகத்தைப் பார்க்க முடியாமல் மீண்டும் கணவனின் மார்பில் முகம் புதைத்துக் கொள்ள முயன்றாள்.

ஆனால் அதற்கு விடாமல் மனைவியின் முகவாயைத் தொட்டு நிமிர்த்தியவன், என்ன சொல்ல வருகிறாய் என்பதைப் போல அவளுடைய முகத்தையே பார்த்தான்.



கணவனின் பார்வையைத் தொடர்ந்து எதிர்கொள்ள முடியாமல் போக, உதட்டைக் கடித்துத் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முயன்றாள்.

ஆனால் சில வினாடிகளிலேயே அதுவும் முடியாமல் போய் விட்டிருக்க, மீண்டும் கணவனின் மார்பில் முகம் புதைத்து அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அவ்வளவுதான்.

அதற்கு மேல் இருவருமே பேசும் நிலையில் இருக்கவில்லை.

## 22

''ஸ்வேதா.''

''அத்தை.''

''கொஞ்சம் ஹாஸ்பிட்டல் வரைக்கும் போய்ட்டு வரலாமாம்மா?''

''என்ன அத்தை, யாருக்கு என்ன?''

''குழந்தை தன்யாவுக்குதாம்மா காய்ச்சல் கொதிக்குது.''

''அச்சச்சோ சீக்கிரம் பாப்பாவ எடுத்துட்டு வாங்கக் கிளம்பலாம்'' என்று ஸ்வேதா சொல்லிக் கொண்டிருக்கும்போதே குழந்தையுடன் வந்தாள் பத்மினி.

வீட்டிலிருக்கும் ஆண்கள் நால்வருமே வெளியே சென்றிருக்க, வீட்டில் எப்பொழுதும் இருக்கும் இரண்டு கார்களும் கூட வெளியே சென்றிருந்தன.

ஸ்வேதாவின் கார் அதாவது அவளுடைய தந்தை எதற்கும் தேவைப்பட்டால் இருக்கட்டுமென்று விட்டுச் சென்றிருந்த கார் மட்டுமே இருக்க, ஸ்வேதாவுடன்

அந்தக் காரிலேயே மருத்துவமனைக்குக் கிளம்பி யிருந்தனர்.

நல்லவேளையாகப் போன உடனேயே மருத்துவரைப் பார்க்க முடிந்தது.

பயப்படும்படியாக எதுவும் இல்லையென்றாலும் குழந்தையின் உடல்நிலை மிகவும் பலவீனமாக இருக் கிறதென்று அட்மிட் செய்யச் சொல்லி விட்டிருந்தார்கள்.

மருத்துவர்களின் தொடர்ந்த கண்காணிப்பிலும் கவனத் திலும் காய்ச்சல் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கத் தொடங்கி யிருந்தது.

ஆனாலும் குழந்தை பூரண குணம் பெற இரண்டு நாட்கள் ஆகி விட்டிருந்தன.

அதற்குப் பிறகும் ஒரு நாள் கழித்தே அங்கிருந்து கிளம்ப அனுமதித்திருந்தார்கள்.

அதுவும் கூட இன்னும் சில நாட்கள் குழந்தையை பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல் லியே அனுப்பியிருந்தனர்.

''அத்தை.''

இரண்டாவது மருமகள் இந்துமதியின் அழைப்பில் ''என்னமா?'' என்றார் காஞ்சனா.

இந்துமதி சொன்ன செய்தியைக் கேட்டவருக்கு எல்லை யற்ற ஆனந்தம்.

திருமணம் முடிந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அவள் குழந்தை பாக்கியம் கிடைத்திருப்பதாகச் சொன் னதே அதற்குக் காரணம்.

''உன் வீட்டுக்காரருக்குத் தெரியுமாம்மா.''

''தெரியும் அத்தை. ஆனாலும் டாக்டர் கிட்டப் போய் இது குழந்தை தானான்னு நிச்சயம் பண்ணிக்கிட்டாப் பரவாயில்லைன்னு தோணுது.''



''அதுக்கென்னடாம்மா, தாராளமாப் பாத்துடலாம். அதோட நீ சொல்றத வெச்சுப் பார்க்கும்போது இது குழந் தையே தான் அதுல எந்த சந்தேகமும் வேண்டாம்'' என் றார்.

அன்றே இந்துமதியை மருத்துவரிடம் அழைத்துச் சென்றார் காஞ்சனா.

அங்கு மருத்துவரும் சந்தோஷமான செய்தியையே சொல்ல, அந்த சந்தோஷம் அனைவரையும் தொற்றிக் கொண்டது.

ஆனால் அதே மருத்துவர் மற்றொன்றையும் உறுதி யாகச் சொல்லி விட்டிருந்தார்.

கருப்பை மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதால் அலைவது, பாரம் தூக்குவது, பயணம் செல்வது ஏன் நடப்பது கூடக் கூடாதென்று சொல்லி விட்டிருந்தார்.

சரியாக அதே சமயம் பார்த்து அறுவடை வேலை களும் மும்முரமாக நடந்து கொண்டிருக்க, லாவண்யா விற்கும் பரிட்சை வந்து விட்டிருந்தது.

அதனால் ஸ்வேதா மட்டும் தான் அப்போதைக்கு அனைத்தையும் எடுத்துச் செய்யும் நிலையில் இருந்தாள்.

இதுவே மற்றவர்கள் என்றால் இனி எப்படி நடந்து கொண்டிருப்பார்களோ. ஆனால் ஸ்வேதா அவளாகவே முன் வந்து வீட்டைப் பராமரிக்கும் வேலைகள் முதல் அனைத்து வேலைகளையும் ஏற்றுச் செய்தாள்.

குழந்தை தன்யாவைப் பார்க்கும் பொழுது மட்டும் அவளுக்காக மனம் ஏங்கும்.

ஆனாலும் உடனே பத்மினி பேசிய வார்த்தைகள் நினைவிற்கு வந்து மனதை இறுகச் செய்து விடும்.

சரியாக அதே நேரம் பார்த்து ஜெயவர்த்தனும் வெளியூர் செல்ல வேண்டுமென்ற நிலை வர, சந்தோஷமாக அனுப்பி வைத்தாள்.

அதாவது வெளியில் அப்படிக் காட்டிக் கொண்டாள்.

உள்ளுக்குள் பழக்கமற்ற வீட்டு வேலைகள், கணவனைப் பிரிந்திருக்க வேண்டிய நிலை என அனைத்தும் சேர்ந்து அவளை மிகவும் சோர்வடையச் செய்திருந்தன.

ஆனால் அந்தச் சோர்வை அவளால் இயல்பாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

என்னதான் வழக்கத்திற்கு மாறாக வேலைகள் சற்று அதிகமென்றாலும் கூட, அதற்காக இப்படியா என்றிருந்தது.

அந்த அளவிற்குக் கை கால்கள் எல்லாம் விட்டுப் போய், சக்தியெல்லாம் வடிந்து விட்டதைப் போல உணர்ந்தாள்.

ஆனாலும் வெளியில் இயல்பாகக் காட்டிக் கொள்ள முயன்றாள்.

அன்றும் அப்படித்தான் காலையில் அத்தை காஞ்சனா டிபனை மட்டும் செய்து வைத்து விட்டுத் தோட்டத்திற்குக் கிளம்பி விட்டிருக்க, மதியத்திற்கு சமைக்கும் வேலைகளைத் தொடங்கியிருந்தாள் ஸ்வேதா.

ஏனோ குழந்தை தன்யாவின் பிறந்த நாளுக்குப் பிறகு பத்மினியை பார்க்கவே சற்றுப் பயமாக இருந்தது.

அவசியத்திற்குப் பேசக் கூடத் தயங்கினாள்.

முடிந்த அளவு தவிர்க்கவும் செய்தாள்.

உதவினால் பத்மினியை அழைத்துக் கொள்ளச் சொல்லி விட்டுக் காஞ்சனா சென்றிருந்தாலும் கூட, சிரமப்பட்டே என்றாலும் சமையலைத் தானே தனியாகச் செய்தாள்.



குக்கரில் அரிசியை வைத்தவள் விசில் வந்ததும் இறக்கி வைத்தாள்.

ஆனால் அதற்குள் அந்த சாதத்தின் வாசனை ஏதோ செய்ய, சென்று குடலே வெளியே வந்து விடும் போல வாந்தியெடுத்தாள்.

தலை எங்கோ பறப்பது போலிருக்க, அப்படியே சுவரில் சாய்ந்து கண்களை மூடி நின்று விட்டிருந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படி நின்றாளோ, இயல்பு நிலைக்கு வர சற்று நேரமாகி விட்டிருந்தது.

அதற்குப் பிறகும் எதைப் பற்றியும் யோசிக்கக் கூட முடியாமல் வேலையே சரியாக இருந்தது.

ஆனால் தொடர்ந்து வந்த நாட்களிலும் மீண்டும் சில முறை அதே போல ஆகி விட்டிருந்ததில் என்னவோ ஏதோவென்று பயந்து கூடப் போனாள்.

அத்தையிடம் சொல்லலாம் என்றால் வேலைக்கு யோசிக்கிறாளென்று நினைத்து விடுவார்களோ என்று தயக்கமாக இருந்தது.

அவர் அந்த மாதிரி நினைப்பவர் இல்லையே என்றும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அப்படியே ஒரு வாரம் சென்றிருக்க, இப்பொழுது தலை சுற்றலும் சேர்ந்து கொண்டு விட்டிருந்தது.

''ஸ்வேதா.''

''வாங்க அத்தை, என்ன இன்னைக்கு மதியமே வீட்டுக்கு வந்துட்டிங்க?''

''ஆமாம் கண்ணம்மா பாவம் தினமும் நீயே தனியே இருந்து சிரமப்பட்டுட்டிருக்கியே.''

''அதெல்லாம் கொஞ்சமும் சிரமமில்ல அத்தை பாவம் ஏற்கனவே இருக்கற வேலைல நீங்க ஏன் இன்னும் சிரமப்படறீங்க?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லடாம்மா, இன்னைக்கு ஒரு நாளாவது நீ உக்காரு நான் செய்யறேன்.''

''அது கூட ஏன் அத்தை. நான் மட்டும் தனியா எல்லா வேலைகளையும் செய்யலையே. அதான் வேலைக்கு ஆளுங்க இருக்காங்களே.''

அது உண்மையே என்பது போல எடுபிடி வேலைகளுக்கு ஒரு பெண்ணும், கொஞ்சம் சிரமமான வேலைகளுக்கு நடுத்தர வயதில் ஒரு பெண்மணியும் இருந்தால் ஸ்வேதாவால் சற்றுப் பரவாயில்லாமல் சமாளிக்க முடிந்ததென்று சொல்லலாம்.

தங்களுடைய வீடு போல இல்லாமல் இங்கு வேலைக்காரர்கள் என்றால் இந்திந்த வேலைகளை மட்டும்தான் செய்ய வேண்டுமென்ற வரைமுறை இருந்தது.

அது மட்டுமல்லாமல் அடுப்பில் போட்டு இறக்கும் வேலைகளை அந்த வீட்டில் எப்பொழுதும் காஞ்சனா மட்டுமே செய்தார்.

அந்த அளவிற்கு அவருடைய கைப்பக்குவமும் இருந்தது.

அதிலும் தன் அதாவது அப்பா வீட்டு சமையல்காரர்களின் சமயலெல்லாம் தனது அத்தையின் கைவண்ணத்திற்குப் பக்கத்தில் நிற்கக்கூட முடியாதென்பதையும் புரிந்து கொண்டாள்.

வேளா வேளைக்குப் பதார்த்தங்களும் அப்படித்தான்.

தங்களுடைய வீட்டை விட, ஏன் அதை விடக்கூட இரண்டு மடங்கு எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதையும் ஒருவித ஆச்சரியத்துடன் கண்டாள்.

''காலைல டிபன் சாப்டியா ஸ்வேதாம்மா?''

''ஆமாம் அத்தை.''



''நான் இருந்து பரிமாற முடியல'' என்று காஞ்சனா சொல்லி வருத்தப்பட்டுக் கொள்ள எங்கே சாப்பிடுவதை நினைத்தாலே பயமாக இருக்கிறதே என்று நினைத்துக் கொண்டாள்.

''இந்துமதிக்குத் தான் பாவம் எதையுமே சாப்பிட முடியல ஒரே வாந்தி, மயக்கமா இருக்குன்னு சொல்றா...''

அதற்கு மேல் காஞ்சனா சொன்னது எதுவுமே ஸ்வேதாவின் காதுகளுக்குள் சென்றிருக்கவில்லை.

அப்படியானால்,

கடந்த சில நாட்களாகத் தனது உடல் தந்த பிரச்சனைகளுக்கான காரணம் புரிந்து போனதில், எங்கோ வானத்தில் பறப்பதைப் போல உணர்ந்தாள்.

சரிதான்.

தனக்கும் இந்துமதியின் நிலை தானா,

அதனால் தான் இப்படியெல்லாம் செய்கிறதா.

சில நாட்களுக்கு முன்பு கணவன் கேட்டது தான் நினைவிற்கு வந்தது.

நெஞ்சுக்குள் பட்டாம்பூச்சிகள் பறப்பதைப் போல உணர்ந்தாள்.

ஏதோ ஒரு இனம் புரியாத பெருமித உணர்வு வந்து தன்னை ஆட்கொண்டதைப் போலவும்,

''ஸ்வேதா.''

''அத்தை?''

''என்னமா ஆச்சு?''

''ஒண்ணுமில்ல அத்...''

''பின்ன இவ்வளவு களைப்பாத் தெரியற?''

அத்தையிடம் சொல்லலாமா என்று நினைத்தவள் பிறகு வேண்டாமென்று விட்டு விட்டிருந்தாள்.

ம்கூம், வேண்டாம்.

முதலில் இதைக் கணவனிடம் தான் சொல்ல வேண்டும்.

கணவனிடம் சொன்னால் அவனுடைய முக பாவனை எப்படியிருக்குமென்று நினைத்தவளுக்கு அவளையறியாமலேயே முகம் சிவந்து விட்டிருந்தது.

திடீரென்று நடப்பிற்கு வந்திருந்தவள் நிமிர்ந்து தனது அத்தையைப் பார்த்தாள்.

நல்லவேளையாக அவர் அடுப்பில் வேளையாக இருந்தார்.

''போதும் கண்ணம்மா, நீ முதல்ல கொஞ்சம் உக்காரு பாக்கவே ஒரு மாதிரியிருக்க,''

''அதெல்லாம் ஒன்னுமில்ல அத்தை.''

அப்படிச் சொன்ன மருமகளைப் பெருமையுடன் பார்த்தார் காஞ்சனா.

''உன்னப் பாத்தா எனக்கு ரொம்பப் பொறாமையா இருக்குமா, அங்க அப்பா வீட்ல அவ்வளவு சுகமா இருந்துட்டு வந்து கூட இங்க இப்படி எல்லா வேலைகளையும் எடுத்து செய்யறியே, அதுவும் சிரிச்ச முகத்தோட.''

''அங்க ஒரு இன்ட்ரஸ்டே இருக்காது அத்தை. ஆனா இங்க ஆசையா இருக்கு.''

''ஏன்?''

''ஏன்னா அப்பாவப் பொறுத்த வரைக்கும் சாப்பாட்டு விஷயத்துல ரொம்ப சிம்பிள் நீட்டா ஹைஜீனிக்கா இருக்கணும்னு மட்டும்தான் பாப்பார்.''

''நான் வித்யாசமா பாத்துப் பாத்து எதையாவது செஞ்சாக் கூட வேலைக்காரங்க இருக்காங்களே நீ ஏன் சிரமப்பட்டேன்னு கேப்பார். அதனால ஆசையே போயிடும்.''



............

''ஆனா இங்க நீங்க எவ்வளவு ஊக்கப்படுத்தறீங்க, ஏன் எல்லா விதத்துலயுமே அப்படித்தான. எனக்கு அம்மா இருந்திருந்தாக் கூட உங்கள விடவும் நல்லாப் பாத்துக்கிட்டிருக்க மாட்டாங்கன்னு தான் தோணுது அத்தை'' என்று மனதார உணர்ந்து சொன்னவளுக்கு அவளையறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருந்தன.

அதைப் பார்த்த காஞ்சனாவிற்கும் மனம் உருகி விட்டிருந்தது.

''வேண்டாம் கண்ணம்மா'' என்றார்.

............

''நீ பிரமாதமான பொண்ணுடாம்மா. ஏன் சிரமப்பட்டுக் கண்டு பிடிச்சாக் கூட ஒரு குறை சொல்ல முடியாது. அதோட உங்கிட்ட பாராட்ட விஷயங்களும் எத்தனையோ இருக்கு...''

''நீங்க ரொம்ப மிகைப்படுத்தறீங்க...''

''நிஜம் கண்ணம்மா, லாவண்யாவையும் நல்லது, கெட்டது சொல்லிக் குடுத்துப் பாத்துப் பாத்து தான் வளத்தேன், ஆனா உங்கூட ஒப்பிடும்போது அவகிட்டயுமே கூட, நிறையக் குறைகளிருக்கற மாதிரி தெரி...''

''அவ சின்னப் பொண்ணு தான அத்தை. அதனால அப்படித் தோணும்.''

''அது சரிதான், ஆனா போற இடத்துல உன்ன மாதிரி பெருந்தன்மையா எல்லாருக்கும் விட்டுக் குடுத்து நடந்துக்குவாளான்னு தெரியல.''

தனது அத்தையைப் போல பிரதிபலன் பாராத அன்புடன் நடந்து கொண்டால் யாரால் மோசமாக நடந்து கொள்ள முடியுமாம்.

ஏன் மோசமானவர்களாகவே இருந்தாலும் கூட நல்லவர்கள் ஆகி விடுவார்களே.

தான் நினைத்ததை அப்படியே தனது அத்தையிடம் சொன்னாள் ஸ்வேதா.

ஸ்வேதாவின் வார்த்தைகளில் அவருக்கு பத்மினியின் நினைவு தான் வந்தது.

ஏன் அவளிடமும் கூட இந்தப் பெண்ணிடம் நடந்து கொள்வதைப் போலத்தானே நடந்து கொள்கிறோம். ஆனால் எத்தனை வித்யாசம் இருவருக்குமிடையில்,

''நானும் உதவி செய்யறேன் அத்தை'' என்று வந்த ஸ்வேதாவை, ''ம்கூம் அந்தப் பேச்சே கூடாது இந்தா இத முதல்ல சாப்புடு'' என்று அன்புக் கட்டளையிட்டு விட்டிருந்தார் காஞ்சனா.

''இது என்ன அத்தை?''

''செவ்வாழைப்பழமும், கொய்யாப் பழமும் ஸ்வேதாம்மா. கட் பண்ணிக் குடுத்திருக்கேன் எடுத்துக்கோ.''

அத்தையின் வார்த்தைகளில் ஒன்றை எடுத்து சுவைத்தாள்.

''வாவ், இவ்வளவு ஸ்வீட்டா இருக்கு.''

''ஆமாம் கண்ணம்மா, நம்ம தோட்டத்துல விளைஞ்சது தான். ருசி பிரமாதமா தான் இருக்கும் உக்காந்து சாப்புடு.''

எங்கே சாப்பிடுவதை நினைத்தாலே பயமாக இருந்தது ஸ்வேதாவிற்கு.

அதுவும் பழங்களின் வாசனை சுத்தமாகப் பிடிக்கவில்லை.

''ஏதோ யோசனையாவே இருக்கியே ஸ்வேதா, ம்கூம் ஒண்ணுமில்லேன்னு சொன்னா நான் நம்ப மாட்டேன்'' என்றார்.



''அவரு...''

''ம்.''

''அவரு போன் பண்றதா சொன்னார் அத்தை, அதான் பாத்துட்டிருக்கேன்.''

''சரிதான்.''

''ஏன் அத்தை சிரிக்கறீங்க?''

''பின்ன? என்ன பிசினஸ் இந்த மாதிரி அடிக்கடி வெளியூர் போக இனிமேல் விடமாட்டேன்னு அடிச்சு சொல்லிடு.''

''அச்சச்சோ நல்ல சாப்பாடு, தண்ணியில்லாம வெளியூர்ல போய் அலையணும்னு அவருக்கு மட்டும் ஆசையா என்ன அத்தை. பிசினஸ்னா இதெல்லாம் இருக்கத்தான் செய்யும். நாமதான் விட்டுக் குடுத்துப் போயாகணும்.''

ஸ்வேதா சொல்வதைக் கேட்ட காஞ்சனாவிற்கு அவள் மீதிருந்த மதிப்பு இன்னும் பல மடங்கு அதிகமாகியிருந்ததென்று சொல்லலாம்.

''ஜெயவர்த்தன் ரொம்பக் குடுத்து வெச்சவம்மா.''

அவர் சொல்வதைக் கேட்டுச் சிரித்தாள் ஸ்வேதா.

''என்னடாம்மா, ஏன் சிரிக்கற?''

''மாமாவும் இதையே தான் சொன்னார் அத்தை, அவருகிட்ட...''

''சரிதான் கண்ணம்மா, அவருன்னு இல்ல யாரா இருந்தாலும் அதத் தான் சொல்லுவாங்க. என்னமா சொல்லு...''

சிறு வயதிலிருந்து ஒற்றையாகத் தான் அனுபவித்த சிரமங்களையெல்லாம் சொன்னாள் ஸ்வேதா,

அத்தோடு தான் இப்போது இருக்கும் இந்த நிலைக்காகப் பல நாட்கள் ஏங்கியதையும்...

ஸ்வேதா சொல்லச் சொல்ல பாவம் பெண்ணொன்று மனம் உருகி விட்டிருந்தது காஞ்சனாவிற்கு.

அதிகபட்சம் இவள் எதிர்பார்ப்பது தூய்மையான அன்பை மட்டும். அதற்காக உயிரையும் கொடுப்பாள் போலல்லவா தெரிகிறது.

"நீ வந்ததுக்கப்புறம் ஜெயவர்த்தனுக்கு வர்ற கோபம் கூடக் குறைஞ்சுடுச்சு. அதுவும் முன்ன எல்லாம் அவனுக்கு மூக்குக்கு மேல கோபம் வரும்மா. ஒரு சின்ன தப்பக் கூடப் பொறுத்துக்க மாட்டான், ஏன் அவங்கூடப் பேசவே எல்லாரும் பயப்படுவோம்னாப் பாத்துக்கோ."

"அது சரிதான், உன்ன மாதிரி நல்ல குணவதியப் பாக்கும்போது வர்ற கோபம் கூட காணாமப் போயிடும் ஸ்வேதாம்மா. ஆமா என்ன நீ குடுத்தத அப்படியே வெச்சிருக்க கொஞ்சங் கூட சாப்பிடவே இல்லை."

"போதும் அத்தை."

"ஏன்?"

"பசியே இல்லை."

"இது பசிக்காக இல்லமா உடம்புக்கு நல்லது. அதுலயும் நீ வந்தப்ப இருந்ததுக்கு இப்ப ரொம்பவும் மெலிஞ்சு போயிட்ட கண்ணம்மா. உனக்கு என்ன சாப்பிடணும்னு தோணுதோ சொல்லு செஞ்சு குடுக்கறேன். வேற ஏதாவது வேணும்னாலும் கூடத் தயங்காம கேளு" என்று காஞ்சனா அக்கறையுடன் சொல்ல, "சரி அத்தை, நிச்சயம் கேக்கறேன்" என்றாள் ஸ்வேதா.

## 23

மேலும் நான்கு நாட்கள் சென்றிருந்தன.

நாளுக்கு நாள் தலை சுற்றலும் வாந்தியும் அதிகமாகிக் கொண்டே சென்றன.



இன்னும் சில நாட்கள் போனால் இப்படி மறைக்க முடியாதென்பது தெளிவாகத் தெரிந்தது.

அதற்கு முன் மருத்துவரையும் சென்று பார்த்துத் தக்க ஆலோசனைகளைப் பெற்றாக வேண்டும்.

அதற்கு முதலில் கணவன் இங்கு வந்தாக வேண்டும்.

இந்த இனிப்பான செய்தியைக் கணவனிடம் சொல்லி விட மனம் துடித்தது.

ஆனாலும் போனில் சொல்ல மனம் வந்திருக்கவில்லை.

வெளியூர் சென்ற கணவன் வீடு திரும்புவதற்காக எல்லையற்ற ஆவலுடன் காத்திருந்தாள் ஸ்வேதா.

ஆனால் கணவன் வந்த பிறகும் அவனிடம் விஷயத்தைச் சொல்ல முடியாது போகுமென்று பாவம் அப்பொழுது அவள் அறிந்திருக்கவில்லை.

வழக்கம் போல இப்பொழுதெல்லாம் காலையில் ஸ்வேதாவால் எழ முடிந்திருக்கவில்லை.

அந்த அளவிற்குத் தலை சுற்றலும், வாந்தியும் அவளை வாட்டியெடுத்தன.

அதனால் வெகு நேரம் கழித்தே தனது அறையிலிருந்து வெளியே வந்தாள்.

அவள் வரவும், வெளியூர் சென்றிருந்த அவளுடைய கணவன் வீடு திரும்பவும் சரியாக இருந்தது.

வந்ததும் புன்னகையுடன் மனைவியை எதிர்கொண்டான்.

"வாவ், இதென்ன ஸ்வீட் ஸர்ப்ரைஸ்!"

"எப்படிடா இருக்க?"

கணவனின் மென்மை கலந்த கனிவான விசாரிப்பில் அவனிடம் அப்பொழுதே விஷயத்தைச் சொல்ல வேண்டும் போல மனம் துடித்தது.

ஆனால் அதற்கு வழியில்லாமல் வீட்டு உறுப்பி னர்கள் அனைவரும் வந்து விட்டிருந்தனர்.

''வந்து சாப்பிடு கண்ணா, டிபன் ரெடியாயிடுச்சு.''

காஞ்சனா வந்து அழைக்க ''இதோ வந்துட்டேம்மா எடுத்து வைங்க'' என்றான்.

''என்னம்மா சொல்லுங்க...''

''வெளியூர் போற வேலைகள முடிஞ்ச அளவு குறைச் சுக்கலாமேப்பா.''

''சரிதான்மா, ஒரு பெரிய ஆடர் அது கூடத் தொடர்ந்து வர்றது. அதுக்காக முக்கால் கிணறு தாண்டிட்டேன். இப்பப் பாதில விட முடியுமா சொல்லுங்க.''

என்னதான் தாயிடம் எடுத்துச் சொன்னாலும் பாவம் மனைவி என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இதுவே மனைவியின் இடத்தில் வேறு பெண் இருந் திருந்தால், மணமான இந்த இரண்டு மாதங்களில் பாதி நாட்கள் வெளியூர் செல்ல விட்டிருப்பாளா.

வேறு வழியில்லாமல் கட்டாயத்திற்கு விட்டிருந் தாலும், நிச்சயம் முகத்தைக் காட்டியிருப்பாள்.

கடைசிக்கு ஜாடை மாடையாகவாவது சொல்லிக் காட்டியிருப்பாள்.

ஆனால் தனது மனைவி.

''போங்கப்பா நீங்க போய் சாப்புடுங்க'' என்று தன் னையும், மனைவியையும் குறிப்பிட்டு தந்தை சொல்ல, ''நீங்களும் வாங்கப்பா'' என்றான் ஜெயவர்த்தன்.

''நான் லேட்டாகும், நீங்க போங்க.''

கணவனின் அழைப்பில் சாப்பிடத் தானும் சென்று அமர்ந்தாள் ஸ்வேதா.



''என்னடா, ஏன் இப்படி இளைச்சுட்ட?''

தனது அத்தைக்கு முன்பாகக் கணவன் அப்படிக் கேட்டதில் முகம் சிவந்து போனாள்.

பாவம் பதினைந்து நாட்களுக்குப் பிறகு பார்க்கிறார்கள் அவர்களுக்குள் பேச எவ்வளவோ இருக்குமென்று அனைத்தையும் அருகில் எடுத்து வைத்து விட்டுத் தான் அங்கிருந்து நகர்ந்தார் காஞ்சனா.

சிறிது நேரத்தில் உணவை முடித்துக் கொண்டு தங் களுடைய அறைக்கு வந்திருந்தான் ஜெயவர்த்தன்.

வந்தவன் மனைவிக்காகக் காத்திருந்தான்.

சில நிமிடங்கள் பார்த்தவன், பிறகு குளித்துவிட்டு வந்து விடலாமென்று சென்றான்.

அவன் குளியலறையிலிருந்து வெளியே வரவும் ஸ்வேதா அறைக்குள் வரவும் சரியாக இருந்தது.

''ஏன் டல்லா இருக்கீங்க?''

கணவனிடம் கேட்டாள் ஸ்வேதா.

''என்ன ஜெய்?''

''என்னது?''

''நீங்க ஏன் இப்படி டயர்டாத் தெரியறீங்க?''

''தொடர்ந்து மூணு நாள் தூங்கலேன்னா பின்ன எப்படி இருக்க முடியும் சொல்லு?''

''மூணு நாள் தூங்கலையா?''

''ம்.''

''ஏன்?''

''சீக்கிரம் வேலைய முடிச்சுட்டு வரணும்னுதான்.''

''என்ன ஜெய் இது. அதுக்காகத் தூங்காம உடம்பக் கெடுத்துக்கறதா?''

''நான் என்ன செய்யட்டும், எந்நேரமும் உன் ஞாபகம் தான்.''

''அது சரி, சரிதான் இப்பப் படுத்துத் தூங்குங்க.''

''இல்லமா.''

''ஏன்?''

''இந்த நேரத்துக்குத் தூக்கம் வராது.''

''அதெல்லாம் வரும்.''

''ம்கூம், வராது.''

''அதென்ன அவ்வளவு உறுதியா சொல்றீங்க?''

''அப்புறம் நீ ஏன் இப்படி மெலிஞ்சு போய்ட்ட, அதச் சொல்லு முதல்ல?''

''ஜெய்.''

''ம்.''

''நீங்க எங்கிட்ட எதையோ மறைக்கறீங்கன்னு சொல்றேன் சரியா?''

''அப்படியா?''

''ம்.''

''அப்ப சரிதான்.''

''அது என்ன சொல்லுங்க?''

''ஒண்ணுமில்...''

''ம்கூம், சொல்லுங்க இல்லன்னா விட மாட்டேன்.''

''ஒரு ப்ராஜக்ட் ஒண்ணுமா, அத முடிக்கணும்...''

''சரி.''

''என்ன சரி?''

''அப்புறம் என்ன, மேல சொல்லுங்க ப்ளீஸ்...''

''பிஸினெஸ எக்ஸ்டண்ட் பண்ண முயற்சி பண்ணிட்டிருக்கேம்மா.''



''எனக்குப் புரியற மாதிரி சொல்லுங்க ஜெய்.''

''அதெல்லாம்...''

''ம்கூம், என்ன பிரச்சனைன்னு நீங்க சொல்லத்தான் வேணும் இல்லன்னா விட மாட்டேன்.''

மனைவியின் பழக்கமற்ற பிடிவாதம் புன்னகையை வரவழைத்திருந்தது ஜெயவர்த்தனுக்கு.

''பேங்க்ல லோன் ஒண்ணு கேட்டு அப்ளை பண்ணியிருக்கேன். அது வந்தாதான் அடுத்த ஸ்டெப்புக்குப் போக முடியும்.''

''லோன் எதுக்கு?''

''எதுக்குன்னா, பணத்துக்காகத்தான்.''

''ஓ, எவ்வளவு?''

''ஒரு கோடி தேவப்படுது, குறைஞ்ச பட்சம் அம்பது லட்சமாவது வேணும்.''

''ஓ.''

''மேக்ஸிமம் இந்த வாரத்துக்குள்ள வந்துடும், அது வந்ததுக்கப்புறம் தான் இனி வேலையே. அதுவரைக்கும்...'' என்று ஆசையுடன் மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''ஸாரிடாம்மா.''

''எதுக்கு?''

''நான் உன்ன ரொம்ப சிரமப்படுத்தறேன் இல்ல?''

''புரியலயே.''

''கல்யாணமான கொஞ்ச நாள்லயே உன்னத் தனியா விட்டுட்டுப் போய் ரொம்ப சிரமப்படுத்தறேன்னு சொல்றேன்.''

''இல்ல.''

''அடடா, ஆமான்னு சொல்லுவேன்னு எதிர்பாத்தேன்.''

''ம், அப்புறம்?''

''என்ன அப்புறம்?''

''நான் யாரு சொல்லுங்க?''

''இதென்ன இப்படியொரு கேள்வி?''

''ப்ளீஸ் சொல்லுங்க?''

''என் வொய்ஃப்.''

''ம், அப்புறம்?''

''அப்புறமென்ன என்னில் பாதி, என் உயிர்...''

''போதும் ஜெய்.''

மனைவியின் திடீர் கோபம் அவனுக்கு ஆச்சரியத்தை வரவழைத்திருந்தது.

''புரியற மாதிரி பேசேன்டா.''

''எனக்கு ஒரு கஷ்டம்னா நான் யாருகிட்டக் கேக்கணும்?''

''இதென்ன கேள்வி எங்கிட்டதான்.''

''அதே மாதிரி உங்களுக்கு ஒரு கஷ்டம்னா?''

''இதுக்கு நான் என்ன பதில் சொல்லணும்னு எதிர் பாக்கற?''

''உண்மையான பதில.''

''ரொம்ப வேண்டியவங்ககிட்டக் கேக்கலாம்.''

''அதுதான், அது யாரு?''

''நீ... அப்புறம்.''

''நான்... இத்தன கேள்விகளுக்கு அப்புறமாவது சொன்னீங்களே.''

''சரி என்ன கேக்க வர்ற நீ?''



''பணம் இருந்தா தான் இனி உங்களுக்கு பிஸினஸ்ல அடுத்த ஸ்டெப் இல்லையா?''

''ஏன் கேக்கற.''

''சொல்லுங்க.''

''இருந்தா பெட்டரா இருக்கும்.''

''அத எங்கிட்டக் கேக்கக் கூடாதா ஜெய்?''

''உங்கிட்டயா?''

''ம்.''

''ஏன் நீ ஃபைனான்ஸ் கம்பெனி ஏதாவது வெச்சு நடத்திட்டிருக்கியா?''

''விளையாடாதீங்க ஜெய்.''

''எனக்கு நீதான் விளையாட்ற மாதிரியிருக்கு.''

''பணம் இல்லாததால, நம்ம பிஸினஸ் பாதிக்க வேண்டாம் அத நான் தர்றேன்.''

''புரியல?''

''நான் தர்றேன்னு சொல்றேன்.''

''நீயா?''

''ம்.''

''எப்படி?''

''அப்பாகிட்டக்...''

''வேண்டாம்மா.''

''ஏன்?''

''ஏன்னு கேட்டா என்ன சொல்றது. வேண்டாம் அவ்வளவுதான்.''

''அதான் ஏன்னு கேக்கறேன்.''

''நீ பேசறது சரியில்ல ஸ்வேதா.''

"என்ன ஜெய், அப்படியென்ன நான் தப்பாப் பேசிட்டேன்? இப்ப அவசரத்துக்கு வாங்கிக்கோங்க, அப்புறம் லோன் ஷேங்க்ஸன் ஆனதும் குடுத்துடுங்க."

"வேண்டாம்மா, இந்த விஷயத்துல என்னக் கம்பல் பண்ணாத."

"அதான் ஏன்னு கேக்கறேன்."

இவளிடம் எப்படிச் சொல்லிப் புரிய வைப்பதென்று தெரியாமல் பார்த்தான் ஜெயவர்த்தன்.

"ம், சொல்லுங்க ஜெய்."

"எனக்குன்னு ஒரு தன்மானம் இருக்குமா, அத விட்டுக் குடுக்க என்னால முடியாது."

அப்படிச் சொன்ன கணவனை எதுவும் பேசாமல் பார்த்தாள் ஸ்வேதா.

"இதுதான் உங்க பதிலா?"

"ம்கூம், முடிவு."

தனது பதிலில் கோபத்துடன் திரும்பியிருந்த மனைவியைப் புன்னகையுடன் அருகில் இழுத்து அணைத்திருந்தான் ஜெயவர்த்தன்.

ஆனால் அதே வினாடி கணவனிடமிருந்து திமிறிக் கொண்டு விலகி விட்டிருந்தாள் ஸ்வேதா.

"என்னமா இது..."

"என்ன தொடாதீங்க."

"ம்கூம் மாட்டேன்" என்ற ஜெயவர்த்தன் ஆசையுடன் மனைவியை நோக்கி முன்னேறினான்.

"என்னத் தொட்றதுக்கு உங்களுக்கு உரிமையில்ல."

மனைவியின் பேச்சு மேலும் புன்னகையை வரவழைத்திருக்க அதையும் தான் பார்த்து விடுகிறேனே என்று



மீண்டும் அவளை அருகில் இழுத்திருந்தவன் எல்லையற்ற காதலுடன் அவளுடைய கண்களைப் பார்த்தான்.

ஆனால் மீண்டும் தனது பலம் அனைத்தையும் பிரயோகித்துக் கணவனிடமிருந்து விலகி விட்டிருந்தாள் ஸ்வேதா.

"போதும் ஸ்வேதா, முட்டாள்தனத்துக்கும் ஒரு அளவிருக்கு."

"அதத் தான் நானும் சொல்றேன்."

"பைத்தியம் மாதிரி உளறாத."

"உங்கள விடவுமா?"

"சந்தேகமே இல்ல, இன்னைக்கு உனக்கு என்னவோ ஆயிடுச்சு."

"எனக்கொன்னும் ஆகல, ப்ளீஸ் ஜெய் எனக்காக நான் சொல்ற மாதிரி செய்யுங்களேன்."

"பண விஷயத்த விட்டுட்டு வேற ஏதாவது இருந்தா சொல்லு செய்யறேன்."

"அதப் பத்தி தான் பேசப் போறான்னு தெரிஞ்சும் இப்படி சொன்னா எப்படி?"

"எப்படின்னா, அதப் பத்திப் பேசறதுல எனக்கு விருப்பமில்லன்னு புரிஞ்சுக்கோ."

"அப்படியென்ன நான் தப்பா சொல்லிட்டேனாம்?"

"வேண்டாம்மா, இந்த விஷயத்தப் பத்தி இனிமேல் நீ ஒரு வார்த்தை கூடப் பேசாத."

"என்ன நீங்க, யாரோ மாதிரி பேசறீங்க?"

"ஆமாம். அப்படித்தான்."

"அப்படியெல்லாம் என்னால இருந்துட முடியாது. எனக்காக நான் சொல்றத நீங்க செய்யத்தான்..."

"ம்கூம், அப்படியெல்லாம் மத்தவங்ககிட்டக் கையேந்த என்னால முடியாது..."

"மத்தவங்களா?"

..............

"அப்ப நானும், டாடியும் உங்களுக்கு மத்தவங்களா? மனசுக்குள்ள அப்பிடிதான் நினைச்சுட்டிருக்கீங்களா?"

"இத்தன நாளும் இல்ல, ஆனா இப்ப நீ அப்படி நினைக்க வைக்கற."

"கடைசியா என்ன தான் சொல்றீங்க?"

"பண விஷயத்தப் பத்திப் பேசறதுன்னா எங்கிட்ட நீ பேசவே வேண்டாம்."

ஏன்தான் மனைவியிடம் சொன்னோமோ என்றாகி விட்டிருந்தது ஜெயவர்த்தனுக்கு.

என்னவோ சற்று முன்னர் கூடத் தன்னைப் புரிந்து நடந்து கொள்கிறாளென்று பெருமையுடன் நினைத்தோமே என்றிருந்தது.

"இதுக்கு நீங்க என்ன கல்யாணம் பண்ணிக்காமலே இருந்திருக்கலாம்."

மனைவியின் வார்த்தைகளில் அவளைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

என்ன வார்த்தை சொல்லி விட்டாள்.

இவள் சொல்வதைப் பார்த்தால் பணத்திற்காக மட்டும்தான் இவளைத் தன் திருமணம் செய்து கொண்டோமென்று சொல்வதைப் போலல்லவா இருக்கிறது.

அப்படியானால்...

இத்தனை நாட்களாகத் தன்னை அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறாளா.



அதெப்படி கட்டிய மனைவியே என்றாலும் தன்னை அந்த மாதிரி எண்ணலாம்.

மிகவும் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் பணத்திற்காகத் திருமணம் செய்து கொண்டு விட்டுப் பிறகு ஏன் இப்படி நடிக்கிறாய் என்று கேட்பதைப் போலல்லவா இருக்கிறது.

தன் ஸ்வேதாவா இப்படி.

அவளா தன்னை இந்த மாதிரி நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

சற்று முன் இருந்த சந்தோஷமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய் விட்டிருந்தது ஜெயவர்த்தனுக்கு.

அப்பொழுதும் மனைவிக்காக ஏங்கிய தன் மனதை வெறுப்புடன் வேறு வேலையில் திசை திருப்பினான்.

மிகவும் சிரமப்பட்டுத்தான்.

சிறிது நேரம் சென்றிருக்க, தனக்கு முன்னே நிழலாடியதில் நிமிர்ந்தான்.

மனைவி நின்றிருக்க, உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்தான்.

"நான் ஊருக்குப் போலாம்னு இருக்கேன்."

..............

"உங்ககிட்ட தான்..."

"உன் இஷ்டம்."

பட்டென்று கணவனிடமிருந்து வந்த பதிலில், இப்படிச் சொன்னால் எப்படி என்றிருந்தது.

"இப்ப என்னதான் சொல்றீங்க?"

'இதற்கு என்னைத் திருமணம் செய்து கொள்ளாமலே இருந்திருக்கலாம்.'

மனைவி சொன்ன வார்த்தைகள் ஈட்டியால் மீண்டும் மீண்டும் நெஞ்சைக் குத்திக் கிழிக்க,

''சரிதான் நான் உன்னக் கல்யாணம் பண்ணிக்காமலே இருந்திருக்கலாம். ஆனா காலங் கடந்த ஞானோதயம் இனி என்ன பண்ண முடியும்?'' என்றான்.

கணவனின் எதிர்பாராத அந்த வார்த்தைகளில் துடித்துப் போனாள் ஸ்வேதா.

என்ன வார்த்தை சொல்லி விட்டான்.

தன் ஆதங்கத்தைப் புரிந்து கொள்ளா விட்டாலும் கூடப் பரவாயில்லை. தான் கொடுத்து வைத்தது அவ்வளவு தானென்று போயிருக்கலாம்.

ஆனால் இப்பொழுது கணவன் சொன்ன வார்த்தைகள்,

இப்படியொரு வார்த்தையை சொல்ல அவனால் எப்படி முடிந்தது.

நல்ல கணவன் புகுந்த வீட்டுச் சொந்தங்கள் எனப் பிரமாதமான வாழ்க்கை அமைந்து விட்டதாக நேற்று கூட ஆனந்தப் பட்டோமே.

கணவன் சற்று முன் சொன்ன வார்த்தைகளில் அந்த எண்ணங்களெல்லாம் சுக்கல் நூறாகி விட்டிருக்கக் கண்களும் கூடக் கலங்கி விட்டிருந்தன.

கை கால்களெல்லாம் விட்டுப் போயிருக்க, நிற்கக் கூட முடியாமல் போய் விட்டிருந்தது.

இருந்திருந்து இப்படியொரு வார்த்தை சொல்ல தனது ஜெயவர்த்தனால் எப்படி முடிந்தது.

எத்தனை எத்தனை ஆசைகளுடன் இவனுக்காகக் காத்திருந்தோம்.

தாய்மையென்பது ஒரு பெண்ணிற்குக் கிடைக்கும் எவ்வளவு பெரிய வரம்,



அதைச் சொல்ல வரும் பொழுது தானா கணவனிடமிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகள் வரவேண்டும்.

பணம் போகட்டும்,

தன்னுடைய ஆதங்கத்திற்குத் தான் எதையெதையோ சொல்லிக் கட்டாயப்படுத்தியிருந்தாலும் கூட, அதைப் பற்றி மட்டும் பேசாதே என்று ஒரேயடியாக நின்று விட்டுப் போயிருக்கலாம்.

ஆனால்,

இப்படியொரு வார்த்தை சொல்லி விட்டானே.

அஸ்திவாரமே ஆட்டம் கண்டு விட்டிருக்க, அதன் மீது நிற்க முடியாமல் பல மாடிக் கட்டிடங்கள் பொல பொலவென சரிந்து போயின.

கணவனுக்கு முன்பாக அழுது விடக் கூடாதென்று உதட்டைக் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அந்த நிலையில் மனைவியைப் பார்க்கப் பார்க்க ஜெயவர்த்தனுக்கும் மனம் வெறுத்துப் போனது.

எவ்வளவு ஆசையாக வந்தோம்.

இன்னும் ஒரு வாரத்திற்கு சற்றும் பிரியாமல் மனைவியுடனே இருக்க வேண்டும்.

அவளை அழைத்துக் கொண்டு ஆசையுடன் எங்காவது வெளியில் சென்று வர வேண்டும்.

அழகான ஆசை மனைவியைத் தனது அன்பெனும் அஞ்சனத்தால் திக்கு முக்காடச் செய்ய வேண்டும் என்றெல்லாம் எவ்வளவு ஆசையுடன் வந்தேன்.

ஆனால் இப்பொழுது...

நினைக்க, நினைக்க மனம் ஆற மறுத்தது ஜெயவர்த்தனுக்கு.

''எனக்கு முன்னாடி நிக்காத தயவு செஞ்சு போயிடு'' என்று வெறுப்புடன் சொல்லியே விட்டிருந்தான்.

# 24

''வா ஸ்வேதாம்மா.''

இந்த அன்பான பெண்மணியிடம் என்ன சொல்வது.

''வாடாம்மா, என்னாச்சு?''

''அத்தை.''

''ம்.''

''ஊர்ல என் ஃப்ரண்ட்...''

''யாரு, அன்னைக்கு ஒரு பாட்டிக்குக் கூட உடம்பு சரியில்லாமப் போயிடுச்சே.''

தனது அத்தை தொடங்கி விட்டிருக்க, அதையே பிடித்துக் கொண்டாள் ஸ்வேதா.

''ஆமா அத்தை, அவங்களுக்குத் திரும்பவும் பிரச்சனையாம்.''

''அச்சச்சோ அப்புறம்?''

பொய் சொல்லிப் பழக்கப்படாதவள் என்பதால் மனம் வலித்தது.

சொல்வது போல எதுவும் ஆகிவிடக் கூடாதென்று கடவுளை வேண்டிக் கொண்டாள்.

''அதனால ஊருக்குப் போய்ட்டு வந்துடட்டுமா அத்தை?''

''சரிதான் கண்ணம்மா, உன் வீட்டுக்காரர் கிட்டப் பேசிட்டயா?''



''பேசிட்டேன் அத்தை.''

என்ன சொல்வதென்று தெரியாமல் மீண்டும் பொய் சொன்னாள்.

''அப்ப சரிதான்'' என்றவருக்கு பதினைந்து நாட்கள் கழித்து மகன் இன்று தான் வந்திருக்கிறான் மருமகளைப் பார்க்கவும் இப்படி உயிர்ப்பே இல்லாமல் இருக்கிறாளே இனி உண்மையில் என்ன நடந்ததோ என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

காஞ்சனா சொன்னது தான் தாமதம், உடனே கிளம்பி விட்டிருந்தாள் ஸ்வேதா.

அவ்வளவுதான்.

இனி அனைத்துமே முடிந்தது என்பதைப் போலத் தோன்றிய எண்ணத்திலிருந்து மனதை நடப்பிற்குக் கொண்டு வர சற்று சிரமப்பட்டுத்தான் போனாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் தந்தையின் வீட்டை சென்றடைந்திருந்தாள் ஸ்வேதா.

மாலை நேரம் என்பதால் பாலகிருஷ்ணன் வீட்டில் தான் இருந்தார்.

தனியாக அதுவும் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாது வந்து நின்ற மகளை அதிர்ச்சியைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தார்.

''வா ஸ்வேதாம்மா.''

''எப்படியிருக்கீங்க டாடி?''

''நான் நலம்மா'' என்றவரால் நீ எப்படி இருக்கிறாயென்று கேட்க முடிந்திருக்கவில்லை.

ஏன் அந்தக் கேள்விக்கு அவசியமே இருக்கவில்லை.

அந்த அளவிற்கு முகம் வாடித் துளியும் உயிர்ப்பே இல்லாமலிருந்தாள் பெண்.

தந்தையின் பார்வையை இயன்ற அளவு இயல்பாக எதிர்கொண்டாள்.

தான் பேசட்டுமென்று தந்தை காத்திருப்பது புரிந்தது..

அது புரிந்ததாலேயே என்ன பேசுவதென்று தெரியாமல் விழித்தாள் எனலாம்.

அப்படியே சில வினாடிகள் சென்றிருக்க "உக்காருமா ஏன் நின்னுட்டே இருக்க" என்றார்.

இப்பொழுதாவது சொல்லத் தோன்றியதே என்று நினைத்துக் கொண்ட ஸ்வேதாவால் அதற்கு மேல் எதையும் யோசிக்க முடிந்திருக்கவில்லை.

மூளை சுத்தமாக மரத்துப் போயிருந்தது தெரிந்தது.

"என்னாச்சும்மா, ஏன் இந்த திடீர் விஜயம்?"

.............

"உன்னத்தான் ஸ்வேதா."

.............

"என்னமா..."

"எனக்கு... எனக்குக் கொஞ்சம் தனியா யோசிக்கணும் டாடி."

என்னவாயிற்று இவளுக்கு.

ஏனோ மனதிற்குள் திக்கென்று ஆகி விட்டிருந்தது பாலகிருஷ்ணனுக்கு.

திடீரென்று வந்திருக்கும் மகள் எதையாவது பேசியிருந்தாலோ, இல்லை யார் மீதாவது குற்றப்பத்திரிகை வாசித்திருந்தாலோ, மகள் அப்படிப்பட்ட பெண் இல்லையென்பது தெரிந்த விஷயம் என்றாலும் கூட அதை இயல்பாக ஏற்றுக் கொண்டு அதற்கு ஏற்றாற்போல பதிலும் சொல்லி விட்டுப் போயிருப்பார்.



ஆனால் அப்படி எதுவுமில்லாமல் அவ்வளவுதான் அனைத்துமே முடிந்தது என்பதைப் போன்றதொரு முக பாவனையுடன் இருந்த மகளைக் கவலையைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தார் பாலகிருஷ்ணன்.

"நான் கொஞ்சம் யோசிக்கணும் டாடி."

"எதப்பத்தி?"

"ஸ்வேதா."

"ப்ளீஸ் இப்ப என்ன எதுவும் கேக்காதீங்க, பேசற நிலைல நான் இல்ல."

இப்படிச் சொன்னால் இனி என்ன செய்வது.

"சரிதான் கண்ணம்மா, போய் ரெஸ்ட் எடு போ, அதுக்கு முன்னாடி போய் எதையாவது கொஞ்சம் சாப்டுட்டு அப்புறமா உன் ரூமுக்குப் போ."

தந்தையிடமிருந்து தப்பித்துக் கொண்டு தன்னுடைய அறைக்கு வருவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டிருந்தது ஸ்வேதாவிற்கு.

வந்தவளுக்கு அதுவரை அடக்கி வைத்திருந்ததற்கெல்லாம் சேர்த்து ஆதங்கம் வந்து விட்டிருந்தது.

கல்யாணம் செய்து கொள்ளாமலே இருந்திருக்கலாமாமே.

அதிலும் காலங் கடந்த ஞானோதயமாமே.

என்ன மாதிரி வார்த்தைகள்,

கை தானாகவே வயிற்றுக்குச் சென்றிருக்க, என்ன முயன்றும் அவளால் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

படுக்கையில் விழுந்து கதறினாள்.

கணவனின் வார்த்தைகள் இவ்வளவு தானென்று விளக்கிச் சொல்ல முடியாத அளவிற்கு மனதை வேதனையடைச் செய்திருந்தன.

வெகுநேரத்திற்குப் பிறகு கொஞ்சம் ஓய்ந்தவள், ஐயோ அம்மா என்னால் முடியவில்லையே என்று மீண்டும் நினைத்து நினைத்து அழுதாள்.

கண்ணீரே வற்றிப் போகுமளவிற்கு ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாமல் அழுது தீர்த்தவள், அந்தக் களைப்பிலேயே நன்கு உறங்கியும் போனாள்.

திடீரென்று விழித்து எழுந்தவள், சுவர்க் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மணி இரவு ஏழாகியிருந்தது தெரிந்தது.

சரியாக அதே நேரம் இண்டர்காம் அழைக்க, எடுத்துக் காதில் வைத்தாள்.

தந்தை பசியாற அழைக்க, குளித்து விட்டுப் பதினைந்து நிமிடங்களில் வந்து விடுவதாக ரிஸீவரை வைத்தாள்.

சொன்னது போல சென்று குளித்து முடித்து இரவு உடையுடன் வெளியே வந்தவள், சாப்பிடுவதற்காகக் கீழே இறங்கி வந்தாள்.

அழுது வீங்கிய முகமும், சிவந்து போயிருந்த கண்களும் அவளுடைய வேதனையை மேலும் பல மடங்கு அதிகமாக்கிக் காட்டியதே தவிர துளியும் குறைந்திருக்கவில்லை.

''வாம்மா.''

ஹாலுக்கு வந்த மகளை வரவேற்றார் பாலகிருஷ்ணன்.

''சாப்பிடலாமா?''

தந்தை கேட்க சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

சிறிது நேரத்தில் இரவு உணவு முடிய மீண்டும் தன்னறைக்கு வரத் திரும்பினாள்.



''ஸ்வேதா.

தந்தை அழைக்க திரும்பி அவரைப் பார்த்தாள்.

''உங்கிட்டக் கொஞ்சம் பேசணும்மா.''

இப்பொழுது வேண்டாமே என்று சொல்லி விடத் தான் எவ்வளவோ முயன்றாள் ஸ்வேதா.

ஆனாலும் முடிந்திருக்கவில்லை.

தான் பேசுவதற்காகத் தந்தை காத்திருப்பது தெரிந்தது.

''உனக்கும் மாப்பிள்ளைக்கும் இடையில எவ்வளவோ இருக்கலாம்மா, ஒருவேளை என்னால செய்ய முடிஞ்சது ஏதாவது இருந்தா, அதனால தான் கேக்கறேன். சொல்லு என்ன பிரச்சன?''

...............

''சரிதான், கட்டாயம் சொல்லித் தான் ஆகணுங்கறது ஒண்ணுமில்ல.''

''அப்படியெல்லாம் ஒண்ணுமி....''

''ஒண்ணுமில்லாததுக்கு தான் நீ இப்படி இருக்கியா?''

அழுததை முகமும் கண்களும் காட்டிக் கொடுத்திருப்பது புரிந்தது.

''நீ அங்க சந்தோஷமா இருக்கேன்னு தாம்மா நான் நினைச்சுட்டிருக்கேன்...''

...........

''ஒருவேளை அவசரப்பட்டுட்டேனோ, உன் மனசப் புரிஞ்சுக்காம...''

தந்தையின் வார்த்தைகள் நெஞ்சைக் குலுக்கி எடுத்திருக்க, ஐயோ இல்லை என்று சொல்லி விட மனம் துடித்தது.

ஆனாலும் அதற்கும் விடாமல் எதுவோ தடுத்தது.

'உன்னைக் கல்யாணம் பண்ணிக்காமலே இருந்திருக்கலாம். ஆனா இனி என்ன பண்ண முடியும். காலங் கடந்த ஞானோதயம்.'

கணவனின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளைக் குத்திக் கிழித்தன.

கண்கள் கலங்கி விட்டிருக்க உதட்டைக் கடித்தபடி கீழே குனிந்து கொண்டாள்.

தான் அவ்வளவு மோசமான பெண்ணா,

தன்னுடைய வார்த்தைகள் கணவனை அந்த அளவிற்கா புண்படுத்தி விட்டன.

பண விஷயத்தில் உண்மையிலேயே தான் அதிக உரிமையெடுத்துக் கொண்டு விட்டோமோ.

அப்படியே இருந்தாலும், ஏன் தவறாகவே தான் பேசியிருந்தாலும் கூட அதற்குக் கணவன் சொன்ன வார்த்தைகள் மிகவும் அதிகப்படியல்லவோ.

எப்படிப்பட்ட வார்த்தைகள்.

மனம் மிகவும் வலித்தது.

தந்தைக்கு முன்பாகக் கதறி விடுவோமோ என்று பயமாகி விட்டிருந்தது ஸ்வேதாவிற்கு.

மகளின் வேதனை பாலகிருஷ்ணனுக்கும் புரியவே செய்தது.

பாவம் ஏற்கனவே மகள் இருக்கும் நிலைக்கு அவளைத் தான் மேலும் வேதனைப்படுத்துகிறோமோ என்றிருந்தது.

அதற்காக ஒன்றும் கேட்காமல் விட்டுவிட முடியுமா.

மகள் பாட்டுக்கு இப்படியே உருகிக் கொண்டிருந்தால்.

அதைப் பார்த்துக் கொண்டே சும்மா இருந்து விட அவரால் முடியாதே.



''என்னம்மா அப்பிடித்தானா?''

என்ன அப்படித்தானா.

தந்தை எதைப் பற்றிக் கேட்கிறார்.

''உன் கல்யாண விஷயத்துல நான் கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன் போலத்தாம்மா இருக்கு''

தந்தையின் வேதனை கலந்த வார்த்தைகள் ஏற்கனவே ஸ்வேதா இருந்த மனநிலையில் அவளை மேலும் புண்படுத்திவிட்டிருந்தன என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

''அப்பிடித்தான் இல்லையா?''

மீண்டும் கேட்டார் பாலகிருஷ்ணன்.

''இல்லப்பா, அப்பிடியெல்லாம் இல்ல...''

மகளின் மறுப்பு பெரும் பிரச்சனை எதுவுமில்லையென்பதை உறுதிப்படுத்தி விட்டிருக்க, பாலகிருஷ்ணனின் மனம் சற்றே நிம்மதியடைந்திருந்தது.

அப்படியானால் இப்பொழுது என்ன தான் பிரச்சனை...

அதை மகளிடமே கேட்டார்.

''என்னமா?... என்னன்னு இல்ல சொல்ல முடிஞ்சா என்னால ஏதாவது செய்ய முடியுமான்னு பார்ப்பேன்''

.....

''அவர்.''

''ம்.''

''அவர் பிசினஸ் லோன் அப்ளை பண்ணியிருக்கார்''

''சரி''

''நான்... நான் அதுக்கு லோன் வரும் போது வரட்டும் இப்போதைக்கு அப்பாகிட்ட வாங்கிக்கோங்கன்னு சொன்னேன்...''

மகள் சொல்ல, அவளையே பார்த்தார் பாலகிருஷ்ணன்.

"ஆனா... ஆனா அவர் அப்பிடியெல்லாம் வாங்கிக்க முடியாது, எனக்குன்னு ஒரு தன்மானமிருக்குன்னு சொல்லிட்டார்."

இன்னதென்று தெரியாமல் மனதிற்குள் அஞ்சிக் கொண்டிருந்த பாலகிருஷ்ணனை மகள் சொன்ன செய்தி அட இவ்வளவுதானா என்று எண்ண வைத்திருந்தது.

ஆனாலும் பேச்சு தடித்திருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.

அது எப்படியோ ஏற்கனவே மருமகன் ஜெயவர்த்தனின் மேலிருந்த மரியாதை இப்பொழுது இன்னும் பல மடங்கு அதிகமாகியிருந்தது.

தந்தையின் எண்ணப்போக்கு ஸ்வேதாவிற்கும் ஓரளவு புரியவே செய்தது.

ஆனால் அதற்குக் கணவன் சொன்ன வார்த்தைகள் மட்டும் தெரிந்தால் இவரால் இப்படி எண்ண முடியுமா என்ன.

தந்தையிடமே என்றாலும் அதைச் சொல்ல மனம் வந்திருக்கவில்லை ஸ்வேதாவிற்கு.

அதற்குக் காரணமும் வேறொன்றுமில்லை.

தந்தையே என்றாலும் அவர் தனது கணவனைத் தவறாக நினைப்பதைப் பற்றி அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

தான் ஏன் இப்பிடியிருக்கிறோமென்று தன் மீதே கோபம் வந்திருந்தது ஸ்வேதாவிற்கு.

தன்னுடைய தூய்மையான இந்த அன்பிற்கு உண்மையிலேயே கணவன் தகுதியானவன் தானா என்று நினைக்கத் தோன்றியது.



இத்தனைக்குப் பிறகும் கணவனுக்காக ஏங்கிய மூட மனதை ஒருவித வேதனையுடன் வெறுமனே பார்த்துக் கொண்டு தான் இருக்க முடிந்தது.

ஸ்வேதா இப்படி நினைத்துக் கொண்டிருக்க, பாலகிருஷ்ணனுக்கோ வேறு மாதிரி யோசனை சென்று கொண்டிருந்தது.

சரிதான், வேண்டாமென்பதை மாப்பிள்ளை சற்று அழுத்தத்துடன் சொல்லியிருக்கலாம்.

அதுவே மகளின் மனதைப் புண்படுத்தியும் இருக்கலாம்.

மற்றது இனி எப்படியோ, ஆனால் பண மறுப்பு விஷயத்தில் மாப்பிள்ளை எடுத்த முடிவுதான் சரியென்று பாலகிருஷ்ணனால் மகளிடம் நேரடியாகச் சொல்ல முடிந்திருக்கவில்லை.

தந்தை இப்படிச் சொல்லி விட்டாரே என்று மகளின் மனம் மேலும் வேதனையடைந்து விடக் கூடாதென்று பேசாமல் இருந்து விட்டிருந்தார்.

## 25

மேலும் இரண்டு நாட்கள் சென்றிருந்தன.

உள்ளுக்குள் வேதனை சற்றும் குறையவில்லையென்றாலும், வெளிப்படையாகத் தன்னை ஓரளவு இயல்பாகக் காட்டிக் கொள்ள இப்பொழுது ஸ்வேதாவால் முடிந்தது.

இனிமேல் தள்ளிப் போடுவது நல்லதல்ல என்று தோன்றி விட்டிருக்க, பெண் மருத்துவரை சென்று பார்த்துவிட்டு வந்தாள்.

சில பரிசோதனைகளுக்குப் பிறகு அது குழந்தை தான் என்பதை உறுதிப்படுத்தியிருந்த மருத்துவர், அனைத்தும் நன்றாக இருக்கிறதென்று சில மாத்திரைகளை மட்டும் தவறாது எடுத்துக் கொள்ளச் சொல்லி அறிவுருத்தியிருந்தார்.

மருத்துவரைச் சென்று பார்த்து விட்டு வந்ததிலிருந்து ஸ்வேதாவின் மனம் அவளையறியாமலேயே கணவனுக்காக ஏங்கத் தொடங்கியிருந்தது.

தான் ஏன் இப்படியிருக்கிறோமென்று நொந்து கொள்வதைத் தவிர அவளால் வேறு எதையும் செய்ய முடிந்திருக்கவில்லை.

''ஸ்வேதா''

தந்தை அழைக்க ''சொல்லுங்க டாடி'' என்றாள்.

''என்னம்மா பண்ணிட்டிருக்க?''

''சும்மாதான் டாடி இருக்கேன்''

''உடம்புக்கு என்ன பிரச்சனமா?''

தந்தையின் கேள்வியில் அவரைப் பார்த்தாள் ஸ்வேதா.

''என்ன பாக்கற, ஏன் இப்படி மெலிஞ்சு போயிருக்க?''

''அப்பிடியெல்லாம் இல்ல டாடி''

சரிதானென்று மனதிற்குள் சிரித்துக் கொண்டார் பாலகிருஷ்ணன்.

என்னதான் வெளியில் காட்டிக் கொள்ளா விட்டாலும் மகள் கணவனுக்காக ஏங்குவது புரிந்தது.

ஒரு சில விஷயங்களில் அது உறுதியும் ஆகி விட்டிருக்க, மகளறியாமல் மருமகனை அழைத்துப் பேசினார்.

வரவர ஒன்றுமே பிடித்திருக்கவில்லை ஸ்வேதாவிற்கு.



எதன் மீதும் பிடிப்பு இல்லாமல் மனம் வெறுத்துப் போய்க் கொண்டிருந்தது.

இன்னும் சில நாட்கள் இப்படியே இருக்க நேர்ந்தால் பைத்தியமும் கூடப் பிடித்து விடுமோ என்று பயந்து போனாள்.

கடவுளே என்னை ஏன் இப்படி வாட்டுகிறாய் என்று மனதிற்குள் ஊமையாய் அழுதாள்.

இந்த நல்ல விஷயத்தைக் கணவனிடம் சொல்லாமல் வேறு யாரிடமும் சொல்ல மனம் வந்திருக்கவில்லை.

ஆனால் இப்பொழுதிருக்கும் நிலையில் கணவனிடமும் சொல்லவும் தன்னால் நிச்சயமாக முடியாதே.

மனதோடு சேர்ந்து உடலும் ஓய்ந்து போய் விட்டிருக்க பேசாமல் சென்று படுத்து விட்டிருந்தாள்.

படுத்தவள் வெகு நேரத்திற்குப் பிறகு தூங்கியும் போனாள்.

மீண்டும் அவள் விழித்து எழுந்த போது மதியத்திற்கும் மேல் ஆகி விட்டிருந்தது தெரிந்தது.

தந்தைக்கு உணவருந்தும் நேரம் தாண்டி விட்டதே என்று தோன்ற, உடனே எழுந்து தலை முடியைத் திருத்திக் கொண்டு வெளியே வந்தாள்.

கீழே இறங்கப் போகும் முன்...

ஸ்வேதாவின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, மூச்சே நின்று விடும் போல ஆகி விட்டிருந்தது.

கீழே கேட்ட கணவனின் பேச்சுக் குரலே அதற்குக் காரணம்.

ஏனோ கை கால்களெல்லாம் விட்டுப் போக மீண்டும் அறைக்குள் வந்து விட்டிருந்தாள்.

ஆனால் அதற்கு விடாமல் இண்ட்டர்காம் ஒலித்தது. எடுத்துப் பேசினாள்.

தந்தை பேச ''செல்லுங்கப்பா'' என்றாள்.

.....

''இதோ வர்றேன்''

மிகவும் முயன்று தந்தைக்காக இயல்பாகப் பேசிவிட்டு ரிஸீவரை வைத்தவள், அதுநாள் வரை அப்படியொரு சங்கடமான நிலையை உணர்ந்ததேயில்லை எனலாம். செய்வதறியாது திகைத்தாள்.

அப்படியே மேலும் சில நிமிடங்களும் சென்று விட்டிருந்தது தெரிந்தது.

இதற்கு மேல் தாமதித்தால் நன்றாயிருக்காதென்று தோன்றி விட்டிருக்க, சற்றும் நகர மாட்டேனென்று மறுத்த கால்களால் பிரம்மப்பிரயத்தனப்பட்டு கீழே இறங்கி வந்தாள்.

வழக்கம் போலத் தந்தையும், கணவனும் சகஜமாகப் பேசிக் கொண்டிருந்தது கண்களில் பட்டது.

கணவனின் கணீர்க் குரலில் நெஞ்சுக் கூடே காலியாகி விட்டாற் போல உணர்ந்தாள் ஸ்வேதா.

தன்னால் கணவனை எதிர்கொள்ள முடியுமா என்று நினைத்தவளுக்கு லேசாகக் கண்களும் கூடக் கலங்கி விட்டிருந்தன.

எவ்வளவு மெதுவாக என்றாலும் முடிவில் கீழே வந்து தானே ஆக வேண்டும்.

கணவன், தந்தை இருவரும் ஒரு சேரத் திரும்பிப் பார்க்க மீண்டும் செயலிழந்து நின்றாள்.

''என்ன ஸ்வேதாம்மா தூங்கிட்டிருந்தியா.''



தந்தையின் கேள்வியில் நடப்பிற்கு வந்தவள் ''ஆமாம்பா'' என்றாள்.

மெதுவாகத்தான்.

இரத்தத்திலேயே ஊற்றி வளர்ந்திருந்த பண்பாடு அவளையறியாமலேயே கணவனை ''வாங்க'' என்று வரவேற்றிருந்தது.

''எப்பிடியிருக்க?'' என்ற கணவனின் கேள்வியில் அவளால் வாயைத் திறந்து பதில் சொல்ல முடிந்திருக்கவில்லை.

எங்கே வாயைத் திறந்தால் அழுது தன்னைத் தானே காட்டிக் கொண்டு விடுவோமோ என்று பயமாகி விட்டிருந்தது.

நன்றாக இருக்கிறேன் என்பதைப் போலத் தலையை மட்டும் ஆட்டி விட்டிருந்தாள்.

''லஞ்ச் ரெடியான்னு பாருமா''

தந்தை சொன்னது தான் தாமதம் அடுத்த வினாடி சமையலறையில் இருந்தாள்.

ஆனால் அங்கும் சற்று ஆசுவாசப் படுத்திக் கொள்ள வழியில்லாது, அனைத்தையும் தயாராக டைனிங் டேபிளில் எடுத்து வைத்திருப்பதாகச் சொன்னார்கள்.

மீண்டும் ஹாலுக்கு வந்து அனைத்தும் தயாராக இருப்பதாகச் சொல்லி உணவருந்த அழைக்க, ''வாங்க மாப்ள சாப்பிடலாம்'' என்று எழுந்தார் பாலகிருஷ்ணன்.

சில வினாடிகளில் சாப்பிட வந்து அமர்ந்த தந்தைக்கும், கணவனுக்கும் தானே பரிமாறினாள் ஸ்வேதா.

தந்தைக்காகக் கேட்ட அந்த ஒற்றை வார்த்தைக்கு மேல் கணவன் அவனாகத் தன்னிடம் எதையும் பேசியிருக்காததை மனதில் ஒரு வலியுடன் உணர்ந்தாள்.

சரிதான்.

திருமணமே தவறென்று விட்டிருந்தவனுக்கு பேச ஒன்றுமில்லாததில் ஆச்சரியம் எதுவும் இல்லை தான்.

உண்டு முடித்து அவர்கள் இருவரும் எழுந்து கொண்டதும் மற்றவர்களுக்காகத் தானும் அமர்ந்து பெயருக்குக் கொறித்து வைத்தாள்.

''வா ஸ்வேதாம்மா சாப்டாச்சா?''

''ஆச்சு டாடி''

''சரிடாம்மா, கொஞ்சம் போய் ரெஸ்ட் எடு போ'' என்று தந்தையும் தூங்கச் செல்வது தெரிந்தது.

அப்படியானால் கணவன்.

அதிலென்ன சந்தேகம், தங்களுடைய அறைக்குத் தான் சென்றிருப்பான்.

எதையுமே செய்யத் தோன்றாமல் போய் விட்டிருக்க, அப்படியே அங்கிருந்த ஹால் சோஃபாவில் அமர்ந்து விட்டிருந்தாள்.

இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத அளவிற்கு மனம் வெறுமையாகி விட்டிருந்ததை உணர முடிந்தது.

அப்படியே எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாளோ, திடீரென நடப்பிற்கு வந்தவளாய் நிமிர்ந்து பார்த்தாள்.

ஒரு மணி நேரம் கடந்து விட்டிருந்ததை ஒருவித அதிர்ச்சியுடன் உணர்ந்தவள், தந்தை பார்த்தால் என்ன நினைப்பாரென்று எழுந்து தோட்டத்திற்கு வந்து விட்டிருந்தாள்.

கால்போன போக்கில் சுற்றியவள், பிறகு சோர்ந்து அமர்ந்தாள்.

இப்பொழுது சில நாட்களாகத் தனது உடல்நிலை ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு மாதிரியிருப்பதை ஒருவித பயத்துடன் உணர்ந்தாள்.

யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றாலும் அதற்கும் வழியிருக்கவில்லை.

ஏனோ கண்களை இருட்டிக் கொண்டு வருவதைப் போலிருக்க அப்படியே மரக்கிளையில் சாய்ந்து கொண்டு விட்டிருந்தாள்.

உணவு முடிந்து தங்களுடைய அறைக்கு வந்திருந்த ஜெயவர்த்தன் மீண்டும் இரண்டு நாட்கள் வெளியூர் சென்று வந்த களைப்பு நீங்க படுத்ததும் நன்கு உறங்கி விட்டிருந்தான்.

ஏற்கனவே கடும் உழைப்பாளி தானென்றாலும் மனைவி கிளம்பி வந்து விட்ட பிறகு வினாடி கூட சும்மா இருக்காமல் வேலையே கதியென்று ஆகிப் போனான்.

அப்படியிருந்தும் கூட அவனால் தனது மனைவியை சற்றும் மறந்திருக்க முடியவில்லை.

முனுமுனுவென்று மனதில் ஓரத்தில் ஒருவித வலி இருந்துகொண்டே இருந்தது.

அன்று தான் பேசியது சற்று அதிகப்படிதான் என்பதில் ஜெயவர்த்தனுக்குத் துளியும் சந்தேகமிருக்கவில்லை.

அப்படிப் பார்த்தால் பணத்திற்காகத் தானே என்னைத் திருமணம் செய்து கொண்டாயென்று மனைவி மட்டும் கேட்கலாமா என்றும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நன்கு யோசித்துப் பார்த்தவனுக்கு அவளும் அப்படித் தானென்று சொல்லவில்லையே. அந்த மாதிரிப் பொருள் கொள்ளும்படியாகத் தானே சொன்னாள் என்றிருந்தது.

ஒருவேளை வேறு ஏதேனும் அர்த்தத்தில் மனைவி அப்படிச் சொல்லியிருந்தால்.

விழித்து எழுந்ததற்குப் பிறகு மனைவிக்காக வெகு நேரம் வரை காத்திருந்தான் ஜெயவர்த்தன்.

ஏனோ கடந்த சில நாட்களில் மனைவியின் மேல் அவனுக்கிருந்த கோபம், ஆதங்கம் என அனைத்துமே சுத்தமாகக் காணாமல் போயிருந்தன.

வேறு மாதிரி எண்ணத்தில் மனைவி அப்படி சொல்லி யிருக்கலாமோ என்று தீவிரமாகத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அவன் அப்படி நினைப்பதற்கும் காரணம் இருந்தது.

மனைவியால் யாருடைய மனதையும் புண்படுத்த முடியாது என்பதில் அவனுக்கு எந்தவித சந்தேகமும் இருக்கவில்லை.

அப்படியிருக்கும் போது தான் மட்டும் விதிவிலக்கா என்ன.

அதிலும் பணத்திற்காகத் தான் சிரமப்படக் கூடாது எனும் ஆதங்கத்தினால் தானே அவள் அவ்வளவு பேசிய தும் கூட.

தான் எண்ணியது போலப் பணத்திற்காக மட்டுமே தான் அவளைத் திருமணம் செய்து கொண்டதாக மனைவி நினைத்திருந்தால், அந்தப் பணத்தைக் கணவன் இப்படி ஒரேயடியாக மறுக்க வேண்டிய அவசியம் இல்லை யென்பதும் புரிந்திருக்கும் அல்லவா.

அதற்கு மனைவி முதலில் அந்த அர்த்தத்தில் சொல்லி யிருந்தால் அல்லவா.

ஏனோ அதற்கு மேல் ஜெயவர்த்தனால் இயல்பாக இருக்க முடியவில்லை.

தான் எப்படி இந்த மாதிரி அவசரப்பட்டுப் பேசினோம் என்றிருந்தது.

சிறிது நேரம் அங்கிருந்த நாளிதழில் மூழ்கி விட்டிருந் தவன், பிறகு கீழே இறங்கி வந்தான்.



ஹால் சோஃபாவில் பாலகிருஷ்ணன் அமர்ந்திருக்க "தூங்கினீங்களா மாமா?" என்று கேட்டுக் கொண்டே வந்து அமர்ந்தான்.

"ஆமாம் மாப்ள, நீங்க?"

"நானும் நல்லாத் தூங்கிட்டேன்"

"அது சரிதான், இப்பக் கடைசியாக் கூட ரெண்டு நாள் வெளியூர் போய்ட்டு நேத்து தான வந்தீங்க. அதோட வெளியே போற இடங்கள்ள நல்ல சாப்பாடு, சரியான தூக்கம்னு ஒன்னும் கிடைக்காது இல்லீங்களா?"

"ஒரு விதத்துல அப்பிடித்தான்"

"ஸ்வேதா"

தோட்டத்திலிருந்து வீட்டிற்குள் வந்தவள் தந்தையின் அழைப்பில் அருகில் சென்றாள்.

"ஆறு மணிக்குக் கல்யாணத்துக்கும் கிளம்பணும்மா"

"நீங்க போய்ட்டு வாங்க..."

"அப்ப நீ?"

.....

"என்னமா?"

"நான் வரல"

"இந்த அளவுக்கு ஒரே குடும்பமாப் பழகிட்டு என் னமா இது. நியாயமா பாத்தா ஒரு நாளைக்கு முன்னாடியே கூட நாம போய் இருந்து எல்லாம் செஞ்சு குடுத்திருக் கணும்" என்றார்.

"நீங்களும் கூட வந்தாப் பரவாயில்ல மாப்ள" என்ற பாலகிருஷ்ணன் சில விளக்கங்களையும் கொடுக்க, கட்டாயம் சென்று வர வேண்டிய திருமணமென்று தெரிந்து விட்டதில் ஜெயவர்த்தனும் "சரிதான் மாமா போலாம்" என்று விட்டிருந்தான்.

மாப்பிள்ளையே சொல்லி விட்ட பிறகு ''சரிதான் ஆறு மணிக்கு இங்கிருந்து கிளம்பறோம்'' என்று முடித்து விட்டிருந்தார் பாலகிருஷ்ணன்.

திருமணம் வேறு யாருக்குமல்ல. அவர்களுக்கு அருகிலுள்ள வீட்டினரான நித்யானந்தனின் மகளுக்குத் தான்.

இரண்டு குடும்பங்களும் பல ஆண்டுகளாகத் தோழமையுடன் பழகிக் கொண்டிருந்தன.

அதிலும் ஸ்வேதா என்றால் அவர்கள் அனைவருக்கும் மிகவும் பிடிக்கும்.

இதுவே ஸ்வேதாவிற்கு இன்னும் திருமணம் மட்டும் ஆகியிருக்கா விட்டால் ஸ்வேதா அவர்களுடைய வீட்டிற்கு செல்வதும், அவர்கள் இங்கு வருவதும் தினமும் சகஜமாக நடக்கக் கூடிய ஒன்று தான்.

நிலமை இப்படியிருக்க, மகள் திருமணத்திற்கே வர மாட்டேனென்றது பாலகிருஷ்ணனை யோசிக்க வைத்திருந்தது.

எந்த அளவிற்கு மனதில் வேதனை இருந்தால் இப்படிச் சொல்வாள் என்றிருந்தது.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் ஸ்வேதா மாலை டிஃபனோடு டீயையும் எடுத்து வந்து கொடுத்து உபசரிக்க, டிபனை மறுத்து விட்டு இருவரும் டீயை மட்டும் எடுத்துக் கொண்டனர்.

''இன்னும் ஒரு மணி நேரந்தாம்மா இருக்கு. இனி நீ போய் கிளம்பினா சரியா இருக்கும்.''

தந்தை சொல்ல சரியென்பதைப் போலத் தலையை ஆட்டி விட்டுத் தன்னுடைய அறைக்கு வந்து கிளம்புகிற வேலையில் இறங்கினாள்.



அதற்கு முன்பு சென்று குளித்து விட்டு வந்தாள்.

பெரும்பான்மை ஒப்பனைகள் முடிந்திருக்க கடைசியாகத் தான் அணிந்திருக்கும் சேலைக்கு மேட்சாக நகைகளை எடுத்து அணிந்து கொண்டாள்.

அனைத்தும் எளிமையாக இருக்கும் வண்ணம் பார்த்துக் கொண்டாள்.

தொடர்ந்து வந்த பதினைந்து நிமிடங்களில் மூவரும் திருமணத்திற்குக் கிளம்பி விட்டிருந்தனர்.

என்னதான் திருமண விஷேசம் பிரமாண்டமாக நடக்குமென்பதை எதிர்பார்த்தே வந்திருந்தாலும் அந்த அளவிற்கு ஜெயவர்த்தன் எதிர்பார்த்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு பிரமாதமாக நடந்தேறியது திருமண நலுங்கு வைபவம்.

அதிலும் மனைவியை அனைவரும் மிகுந்த அக்கறையுடனும் அதேசமயம் மரியாதையாகவும் நடத்தியதை சந்தோஷத்துடன் கண்டான்.

அந்த அளவிற்கு தனது மனைவி அனைவராலும் கவரப்பட்ட பெண்ணாக இருந்ததையும்.

இவற்றுடன் மற்றொன்றையும் ஆச்சரியத்துடன் கண்டான் ஜெயவர்த்தன்.

அது தனது மனைவி ஸ்வேதாவின் அழகு.

அதிலும் அந்த உறுத்தாத மிதமான அலங்காரத்தில் வானுலக தேவதையோ என வியக்கும் வண்ணம் இருந்ததைக் கண்டான்.

என்னதான் தனது மனைவி மிகுந்த அழகியே என்றாலும் சூழ உள்ளோரையெல்லாம் மற்றொரு முறை திரும்பிப் பார்க்க வைக்கும் அவ்வளவு அழகை அவன் [illegible]பார்த்திருக்கவில்லை.

மனைவியைப் பார்க்கப் பெருமையாக இருந்தது ஜெயவர்த்தனுக்கு.

அழகு, செல்வம் என அனைத்தும் ஒருசேரக் கைவரப் பெற்றிருந்த போதிலும் அந்தக் கர்வம் நூறில் ஒரு பங்காகக் கூட இல்லாமல் அனைவரிடமும் மிகுந்த அடக்கத்துடனும் பணிவுடனும் நடந்து கொள்ளும் மனைவியினிடம் அவனுடைய மனம் தன் வசம் இழந்து போயிருந்தது.

மனைவியின் அழகிலும் செல்வத்திலும் பாதியளவு இல்லாதவர்கள் எல்லாம் ஏன் பத்தில் ஒரு பங்கு இல்லாதவர்கள் எல்லாம் கூட எந்த அளவிற்கு பார்ப்பவர்களை மதிக்காமல் கர்வத்துடன் நடந்து கொள்கிறார்கள்.

ஆனால் தனது மனைவி.

இப்படிப்பட்ட பெண் தன்னிடம் மட்டும் ஏன் அப்படிப் பேசினாள்.

ஒருவேளை...

''இனி நாம போய் டிபன் சாப்டுட்டு அப்பிடியே கிளம்பலாமா மாப்ள?''

மாமனாரின் கேள்வியில் நடப்பிற்கு வந்தவன் ''சரி தான்'' என்றான்.

''உங்களப் பார்த்து எல்லாருக்கும் ரொம்பப் பெருமை மாப்ள''

அப்படிச் சொன்ன பாலகிருஷ்ணனைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''நம்ம ஸ்வேதாவுக்கு இப்பிடி எல்லா விதத்துலயும் பொருத்தமான மாப்பிள்ளைய எப்பிடித்தான் தேடிப் பிடிச்சீங்களோன்னு எல்லார்க்கும் ஒரே ஆச்சரியம்''

நல்லவேளையாகப் பெரும்பான்மையினரைப் போல பணத்திற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல் விட்டீர்கள் என்று மற்றவர்கள் சொன்னதை மட்டும் சொல்லவில்லை.

எங்கே அந்த வார்த்தைகள் மாப்பிள்ளையின் மனதைப் புண்படுத்தி விடுமோ என்று மறைத்து விட்டிருந்தார்.

என்னதான் பாலகிருஷ்ணன் சொல்ல விட்டாலும் அதை ஜெயவர்த்தனால் புரிந்து கொள்ள முடிந்தது.

பரவாயில்லை மாமனார் தன் மீது இவ்வளவு மரியாதை வைத்திருக்கிறாரே என்று பெருமைப்பட முடியவில்லை.

டிபனை முடித்துக் கொண்டு தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் மூவரும் அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தனர்.

''எல்லாமே ரொம்பப் பிரமாதாப் பண்ணியிருந்தாங்க இல்லையாம்மா?'' என்ற தந்தையின் கேள்விக்கு ''ஆமாம்'' என்று மட்டும் பதில் சொல்லி வைத்தாள் ஸ்வேதா.

# 26

வீடு வந்து சேர்ந்ததும் தங்களுடைய அறைக்கு வந்து விட்டிருந்தாள் ஸ்வேதா.

வந்தவள் முதல் வேலையாக அதிகப்படி அலங்காரங்களை களைத்து விட்டு இரவு உடைக்கு மாறினாள்.

ஏனோ இன்னதென்று விலக்கிச் சொல்ல முடியாத ஒருவித உணர்வில் அவளுடைய மனம் இருந்தது புரிந்தது.

உணவருந்தும் பொழுது கணவன் தன்னருகில் அமர்வானென்று அவள் நினைத்துக் கூடப் பார்த்திருக்கவில்லை.

முடிந்த அளவு மற்றவர்களின் கண்களை உறுத்தாத வண்ணம் தள்ளி அமர்ந்தும் கூட மனம் படபடவென்று அடித்துக் கொள்ளவே செய்தது.

கணவனின் கம்பீரமும், அருகாமையும் அவளை ஏதேதோ செய்ய, அதற்கெல்லாம் சேர்த்து இப்பொழுது தவித்த மனதை எப்படி இயல்புக்குக் கொண்டு வருவதென்று தெரியாமல் திகைத்தாள்.

எவ்வளவு நேரம் அப்படியே சென்றதோ, தூங்கச் செல்லலாமென்று தோன்றியதில் எழப் போனாள்.

அதேநேரம் ஏதோ அரவம் கேட்க எழாமலே கண்ணாடியில் பார்த்தாள்.

கணவன் உள்ளே வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

அவன் வருவதற்குள் படுக்கைக்குச் சென்று விட வேண்டுமென்று நினைத்தாலும், சற்றும் ஒத்துழைக்க மறுத்த கால்களால் அந்த இடத்தை விட்டு எழக்கூட முடிந்திருக்கவில்லை.

கணவன் அருகில் வருவது தெரிய, மனம் சில்லிட்டது.

தாம் ஏன் இப்படி இருக்கிறோமென்று அவளுக்கே புரியவில்லை.

அதற்குள் தனக்கு அருகில் வந்து நின்றிருந்த கணவனை முயன்று வரவழைத்த தைரியத்தில் நிமிர்ந்து பார்த்தாள்.

சலனமற்ற முகத்துடன் தான்.

அதற்கு அவள் எடுத்துக் கொண்ட முயற்சி அளவிடற்கரியது.

''நீ அங்க ஒன்னுமே சாப்பிட்லயே ஏன்?''

கணவனின் கேள்விக்கு எந்தப் பதிலும் சொல்லத் தோன்றியிருக்கவில்லை ஸ்வேதாவிற்கு.



''சரிதான் இந்தப் பாலையாவது எடுத்துக்கோ...''

கணவனின் உபசரிப்பில் தெரிந்த உண்மையான அக்கறை அவளை என்னவோ செய்தது.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

மீண்டும் மனம் வெறுத்துப் போனது.

அதே சமயம் அன்று தான் மட்டும் பண விஷயத்தை சொல்லாமல் விட்டிருந்தால் இன்று இவ்வளவு பிரச்சனைகள் வந்திருக்காதே என்று ஜெயவர்த்தனாலும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மனைவியின் இந்த நிலைக்குக் காரணமும் தானே என்பதும்.

அவனுடைய பார்வை கீழே தரையைப் பார்த்தபடி இருந்த மனைவியின் முகத்தில் விழுந்திருந்தது.

அவ்வளவு தான்.

அந்த வினாடியில் முற்றிலுமாகத் தன் வசமிழந்து போனான் ஜெயவர்த்தன்.

''ஸ்வேதா'' என்று மனைவியைத் தூக்கி நிறுத்தியிருந்தவன், அவளைத் தன்னருகில் இழுத்துத் தனது மார்போடு அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

திமிறிக் கொண்டு கணவனின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் தான் முதலில் நினைத்தாள் ஸ்வேதா.

அதற்கான முயற்சியிலும் இறங்கியிருந்தாள்.

அதற்குள் கணவனின் அணைப்பில் தெரிந்த சற்றும் வழக்கமில்லாத அந்த லேசான நடுக்கம் அவளை சற்றே யோசிக்க வைத்தது.

ஏதோ தவறு செய்து விட்டதைப் போல.

அதை இப்பொழுது மனதார உணர்கிறேன் என்பதைப் போல.

இன்னதென்று மிகச் சரியாகத் தெரியாவிட்டாலும் ஏனோ கணவனைத் தடுக்க முடிந்திருக்காததோடு விலகவும் தோன்றியிருக்கவில்லை.

எண்ண ஓட்டங்கள் அனைத்தும் ஸ்தம்பித்து போயிருக்க, அவளையே அறியாமல் மந்திரத்திற்குக் கட்டுண்டாற் போலக் கணவனின் அணைப்பிற்குள் காணாமல் போயிருந்தாள்.

ஜெயவர்த்தனின் நிலை பற்றியோ சொல்ல வேண்டியதே இருக்கவில்லை.

இருவரும் தங்களை மறந்து போயிருந்தார்கள்.

கணவனின் அணைப்பு இறுக, தானும் அவனுடைய மார்பிற்குள் வாகாக முகம் புதைத்துக் கொண்டாள் ஸ்வேதா.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ மனைவியை விடுவிக்க வேண்டுமென்று ஜெயவர்த்தனுக்கோ, நடந்ததையெல்லாம் மறந்து இப்படிக் கணவனின் கைகளில் இளகிக் கிடக்கிறோமே என்று ஸ்வேதாவிற்கோ துளியும் தோன்றியிருக்கவில்லை.

அதே நேரம் கணவனின் அணைப்பு மேலும் இறுக, சற்றே நடப்பிற்கு வந்தாள் ஸ்வேதா.

மனைவியிடம் அசைவை உணர்ந்த ஜெயவர்த்தன் "ஸ்வேதா..." என்று ஆசையுடன் குனிந்து மனைவியின் முகத்தைப் பார்த்தான்.

ஸ்வேதாவால் கணவனின் பார்வையை சந்திக்க முடிந்திருக்காததோடு முழுமையாக நடப்பிற்கு வந்து கணவனிடமிருந்து விலகவும் முடிந்திருக்கவில்லை.



மனைவியின் முயற்சி புரிய சற்றும் மனமே இல்லாமல் விடுவித்திருந்தான் ஜெயவர்த்தன்.

அவ்வளவு நேரமும் இருந்த நிலைக்கு திடீரென நிலை கொள்ள முடியாது போயிருக்க, அப்படியே கீழே விழப் போனாள்.

ஆனால் அதற்கு விடாமல் பிடித்து மீண்டும் மனைவியைத் தன்மேல் தாங்கிக் கொண்ட ஜெயவர்த்தன் "என்ன அவசரம்" என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டான்.

"என்னடா..." என்று கேட்டுக் கொண்டே தனது முகம் நோக்கிக் குனிந்த கணவனின் பார்வையில் மீண்டும் தன் வசமிழந்து போனாள்.

கணவனின் மனம் புரிய, இன்னதென்று விலக்கிச் சொல்ல முடியாத ஒருவித இன்ப வேதனை உடலெங்கும் ஆட்கொள்வதை அவளாலும் உணர்ந்து கொள்ள முடிந்தது.

அப்படியே மனைவியைத் தன் மேலேயே தாங்கிக் கொண்டு படுக்கைக்கு அழைத்து வந்திருந்த ஜெயவர்த்தன் முதலில் அவளை அமர வைத்துப் பிறகு தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

கணவனின் ஸ்பரிசத்தில் உடல் சிலிர்த்துப் போக, அந்த வினாடியில் ஸ்வேதாவின் மனம் முற்றிலுமாக விழித்துக் கொண்டு விட்டிருந்தது.

உன்னைத் திருமணம் செய்து கொள்ளாமலே இருந்திருக்கலாம். காலங் கடந்த ஞானோதயம்.

அந்த வார்த்தைகள் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்து நெஞ்சைப் பதறச் செய்து விட்டிருக்க துடித்துப் போனாள்.

இவ்வளவு அன்பும், ஆசையும் இருப்பவனால் எப்படி அப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்ல முடிந்தன.

அப்படியானால் இந்த அன்பு வேஷமா.

ஆமாம், அதிலென்ன சந்தேகம்

ஐயோ இருக்காது.

இருக்கவே இருக்காது.

ஏனோ அதற்கு மேல் ஒன்றும் முடியாது போக, ஸ்வேதாவின் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வழியத் தொடங்கி விட்டிருந்தது.

"என்னடா... ஸ்வேதா இங்க பாரு..."

கணவனின் பதற்றம் புரிந்தது.

"ஸ்வேதா இங்க..."

சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் அருகில் வந்த கணவனிடமிருந்து விலகிக் கொண்ட ஸ்வேதாவின் கண்கள் அதன் பாட்டிற்குத் தொடர்ந்து தங்களுடைய வேலையை செய்து கொண்டே இருந்தன.

தன்னை எப்படி, அதுவும் இவனால் எப்படி அப்படிச் சொல்ல முடிந்தது.

கட்டிலின் ஓரத்தில் வெளிப்பக்கமாகப் பார்த்தவாறு திரும்பிக் குறுகிப் படுத்துக் கொண்டாள் ஸ்வேதா.

எதிர்ப்பைக் காட்டினால் கூட என்னவென்று கேட்கலாம், ஆனால் எதுவும் பேசாமல் திரும்பிப் படுத்துக் கண்ணீர் வடிக்கும் மனைவியின் செய்கையில் பதறிப் போனான் ஜெயவர்த்தன்.

செய்வதறியாது பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர அவனால் எதையும் செய்ய முடிந்திருக்கவில்லை.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் அப்படியே தூக்கத்தில் மனைவியின் கண்கள் சொருக, பாவம் தூங்கட்டு



மென்று சத்தம் செய்யாமல் சென்று படுத்துக் கொண்டான்.

ஆனால் அவனுக்குத் தான் அன்று தூக்கம் அருகில் கூட வர மாட்டேன் என்றது.

ஏதேதோ எண்ண அலைகள் தூக்கத்தை மேலும் மேலும் தொலைவில் அனுப்பிக் கொண்டே இருக்க, மனைவியின் அந்தக் கண்ணீர் முகம் ஆண் மகனான ஜெயவர்த்தனுக்கு ஒரு மிகப்பெரிய அடியாகவே இருந்தது.

மனமும் உடலும் ஓய்ந்து போக அதிகாலை நேரத்தில் தான் அவனால் சற்றேனும் கண்ணயர முடிந்தது.

காலையில் ஜெயவர்த்தன் கண் விழித்த போது மனைவி அருகில் இல்லாததைக் கண்டான்.

கடிகாரத்தில் நேரம் பார்த்தவனுக்கு மணி ஆறரை ஆகியிருந்தது தெரிந்தது.

இவ்வளவு நேரமா தூங்கி விட்டோமென்று நினைத்துக் கொண்டே எழுந்தவன், சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தான்.

வந்தவன் ஹால் சோபாவில் அமர்ந்து அன்றைய நாளிதழைப் புரட்டிக் கொண்டிருந்த மனைவியைக் கண்டான்.

அதே சமயம் மனைவியும் தன்னை நிமிர்ந்து பார்க்கப் புன்னகையுடன் காலை வணக்கம் சொன்னான்.

ஆனால் அதற்கு மனைவியிடமிருந்து எந்த விதமான பதிலும் இல்லாது போக மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

இரவு இவனுடைய கைகளில் அப்படி இளகினோமே என்ற எண்ணம் தான் அப்பொழுது ஸ்வேதாவின் மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது.

கணவன் அப்படியெல்லாம் பேசியதற்குப் பிறகும் கூட எப்படித் தன்னால் அப்படி நடந்து கொள்ள முடிந்தது.

கணவன் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான்.

தன்னைப் பற்றிய இன்னும் கேவலமான எண்ணம் தானே இப்பொழுது அவனுடைய மனதிற்குள் ஓடிக் கொண்டிருக்கும்.

ஏனோ தன் மீதே கோபம் வந்தது ஸ்வேதாவிற்கு.

கூடவே தான் இவ்வளவு பலவீனமானவளா என்ற வெறுப்பும்.

அதேசமயம் தனக்கு எதிரிலிருக்கும் சோபாவில் கணவன் வந்து அமர தான் எழுந்து கொண்டாள்.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் மனைவி கொண்டு வந்து நீட்டிய காபியை வாங்கிக் கொண்டான் ஜெயவர்த்தன்.

''மாமா எங்க?''

ஒருசில வினாடிகளுக்குப் பிறகு சற்றும் மனமே இல்லாமல் ''வெளிய'' என்று ஒற்றை வார்த்தையில் மனைவியிடமிருந்து வந்த பதிலில் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்தான்.

## 27

அன்று மூவரும் ஊரிலிருக்கும் பாலகிருஷ்ணனின் தென்னந் தோப்பிற்குக் கிளம்பினார்கள்.

நீங்கள் இருவர் மட்டும் போய் வாருங்களென்று பாலகிருஷ்ணன் எவ்வளவோ சொல்லியும் மறுத்து விட்டிருந்தான் ஜெயவர்த்தன்.



முக்கியமாக ஸ்வேதா.

மகள் மருமகனுக்கு இடையிலான கருத்து வேறுபாடு இன்னும் தீர்ந்திருக்கவில்லையென்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஜெயவர்த்தன் காரை ஓட்ட பாலகிருஷ்ணன் அவனுக்கு அருகில் முன்புறமாக அமர்ந்திருந்தார்.

பின் ஸீட்டில் ஸ்வேதா.

முன்பக்கம் அமரச் சொல்லி அவர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மறுத்து விட்டிருந்தாள் மகள்.

மகளின் பிடிவாதம் லேசான கோபத்தை வரவழைத்திருந்தாலும் மருமகனின் இதமான அணுகுமுறையில் பிரச்சனை பெரிதில்லை போலிருக்கிறதென்று மனம் நிம்மதியடைந்தார்.

ஒரு மணி நேரம் கார் சென்றிருக்கும்.

''கார கொஞ்சம் நிறுத்துங்க...''

திடீரென்று ஸ்வேதா அப்படிச் சொல்ல அடுத்த சில வினாடிகளில் ஒரு ஓரமாகக் காரை நிறுத்தி விட்டுத் திரும்பினான் ஜெயவர்த்தன்.

அதற்குள் ''என்ன ஸ்வேதாம்மா என்னாச்சு?'' என்று மகளை நோக்கித் திரும்பியிருந்தார் பாலகிருஷ்ணன்.

ஆனால் அதெல்லாம் ஸ்வேதாவின் காதில் கூட விழுந்திருக்கவில்லை.

அதற்குள் கதவைத் திறந்து கொண்டு வெளியே சற்று தொலைவாக வந்தவள், குடலே வெளியே வந்து விடும் போல வாந்தியெடுத்தாள்.

சற்றே ஓய்ந்து போயிருந்த வாந்தி ஒரு சில வினாடிகளில் மீண்டும் வந்திருந்தது.

மீண்டும் மீண்டும் குமட்டிக் கொண்டு வர, இப்பொழுது சுத்தமாக ஒய்ந்து போனாள்.

கணவன் நெற்றியைப் பிடித்துக் கொண்டது அக்கறையுடன் தான் என்றாலும், அது உடல் வேதனையை இன்னும் பல மடங்கு அதிகமாக்கி விட்டிருந்ததென்று தான் சொல்ல வேண்டும்.

வேண்டாமென்று சொல்லத் தோன்றினாலும் அதை செயல்படுத்த உடல், மனம் இரண்டுமே ஒத்துழைக்க மறுத்தன.

மிகவும் ஒய்ந்து போய் விட்டிருந்த மனைவியை அப்படியே தன் மீது தாங்கிக் கொண்ட ஜெயவர்த்தன், தனது மாமனார் கையிலிருந்த தண்ணீர் பாட்டிலை வாங்கி மனைவியிடம் கொடுத்து வாய் கொப்பளித்து முகம் கழுவச் செய்தான்.

கணவனின் கையை ஒதுக்கி விட்டு இரண்டு அடி எடுத்து வைத்தவளுக்கு, அந்த வினாடி என்ன நடந்ததென்று தெரிந்திருக்கவில்லை.

அப்படியே கீழே சரிந்தாள்.

ஆனாலும் நினைவு இருந்தது.

''என்னடா என்னாச்சு...'' என்று மிகுந்த பதற்றத்துடன் கீழே சரிவதற்கு முன் மனைவியை பிடித்துக் கொண்டவன், அப்படியே அள்ளித் தூக்கிக் கொண்டு காருக்கு வந்திருந்தான்.

''ஸ்வேதாம்மா''

பாலகிருஷ்ணனையும் அந்தப் பதற்றம் பிடித்துக் கொள்ள ''ஸ்வேதாம்மா இங்க பாரு'' என்று குரல் நடுங்க அழைத்தார்.



மாமனார் தன்னை விட அதிகமாக பயந்து போயிருப்பது தெரிய, ''அவளுக்கு ஒன்னுமில்ல மாமா கண்ணைத் திறந்து பாக்கறா பாருங்க'' என்று அவனுடைய பதட்டத்தையும் பயத்தையும் தனக்குள் மறைத்துக் கொண்டு அவருக்கு ஆறுதல் சொன்னான் ஜெயவர்த்தன்.

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே எழுந்து அமர்ந்தாள் ஸ்வேதா.

''என்ன கண்ணம்மா என்னாச்சு?''

அப்பொழுதும் பயம் அகலாமல் கேட்ட தந்தையிடம் ''ஒன்னுமில்ல டாடி'' என்று புன்னகைக்க முயன்றாள்.

''சிரிக்காத, ஒரு நிமிஷத்துல எங்கள எப்பிடி பயப் படுத்திட்ட தெரியுமா?'' என்று செல்லமாக அதட்டினான் ஜெயவர்த்தன்.

''உடம்புக்கு என்ன கண்ணம்மா வாந்தி, மயக்கம்...''

மீண்டும் கலக்கத்துடன் பாலகிருஷ்ணன் தொடங்க தந்தையின் கலக்கத்தை போக்குவதற்காகவாவது சொல்லித் தான் ஆக வேண்டுமென்று தோன்றியது.

''பயப்பட்ற மாதிரி எதுவுமில்ல டாடி'' என்று தொடங்கியவளுக்கு அதற்கு மேல் என்ன சொல்வதென்று புரிந்திருக்கவில்லை.

என்னவோ ஏதோவென்று வெளிப்படையாகத் தந்தையும், அதைவிட அதிகமாகவே உள்ளுக்குள் கணவனும் கவலைப்படுவதைப் பார்த்துக் கொண்டு பேசாமலும் இருந்து விட முடியவில்லை.

அதே சமயம் இதுதான் விஷயமென்று போட்டு உடைக்கவும் முடிந்திருக்கவில்லை.

மிக அருகில் அணைத்தாற் போல அமர்ந்திருந்த கணவனின் நெருக்கத்தில் இயல்பாகப் பேசவும், என் இயல்பாகக் காட்டிக் கொள்ளக் கூட முடியவில்லை.

ஆனால் அதற்குள் மகளின் முகத்தில் தெரிந்த அந்த லேசான வெட்கத்தை வைத்து விஷயத்தை கிரஹித்துக் கொண்டு விட்டிருந்தார் பாலகிருஷ்ணன்.

''ஓஹோ... நான் தாத்தா ஆகப் போறேன் அப்பிடித் தான?'' என்று சிறு பிள்ளை போலத் துள்ளிக் குதிக்காத குறையாகக் கேட்டார்.

தந்தை விஷயத்தைப் போட்டு உடைத்தே இருக்க இப்பொழுது என்ன முயன்றும் ஸ்வேதாவால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

மனைவியின் முகபாவனை மாமனார் சொன்னதை உறுதிபடுத்தியிருக்க, ஜெயவர்த்தனையும் எல்லையற்ற சந்தோஷம் பற்றிக் கொண்டது.

அப்படியே மனைவியை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போலப் பரபரத்த மனதை முயன்று கட்டுப் படுத்திக் கொண்டான்.

''கங்க்ராட்ஸ் மாப்ள'' என்று பாலகிருஷ்ணன் வாழ்த்து தெரிவிக்க, நன்றி சொன்னான்.

''ஆனா...''

ஏதோ சொல்ல வந்த மாமனாரைப் பார்த்தான் ஜெய வர்த்தன். ஸ்வேதாவும்.

''இப்பிடியே திரும்பி சென்னைக்கே போலாம் மாப்ளே, போய் டாக்டர் கிட்ட செக்கப் பண்ணிடலாம்''

மாமனார் சொன்னதைத் தானும் ஆமோதித்தான் ஜெயவர்த்தன்.

அப்பொழுது ''அதுக்கு அவசியமில்ல'' என்ற ஸ்வே தாவை இருவரும் பார்த்தனர்.

''ஏன்...''



''ரெண்டு நாளைக்கு முன்னாடி தான் டாக்டரப் பார்த் தேன். குழந்தை நல்லபடியா உருவாயிருக்குன்னு சொன் னாங்க...''

''அப்படியா கண்ணம்மா ரொம்ப சந்தோஷம்'' என்றவர் ''ஆனா இவ்வளவு சந்தோஷமான விஷயத்த இப்படித் தான் நாங்க தெரிஞ்சுக்கணுமா?'' என்று மிகுந்த ஆதங் கத்துடன் கேட்டார்.

''அதுவும் மாப்ளகிட்டக் கூட நீ சொல...''

''எப்பிடியும் இன்னைக்கு சொல்லியிருப்பா மாமா. பாவம் ஸ்வேதாவுக்கு முடியல டயர்டா இருக்கா கிளம்ப லாமே'' என்றான்.

''ஆமாம் மாப்ள நான் அத யோசிக்கவே இல்ல பாருங்க கிளம்பலாம்'' என்றார் பாலகிருஷ்ணன்.

''இப்பிடியிருக்கும் போது ட்ராவலிங்...''

கணவன் எனன கேட்க வருகிறானென்பது புரிய, ''அதெல்லாம் இயல்பா எப்பவும் போல இருக்கலாம்னு டாக்டர் சொன்னாங்க'' என்றாள்.

''எதுக்கும் நீங்க மெதுவாவே ஓட்டுங்க மாப்ள'' என்று பாலகிருஷ்ணன் சொல்ல ''நிச்சயமா மாமா'' என்றான் ஜெயவர்த்தன்.

''நீ வேணும்னா படுத்துக்கோயேன் ஸ்வேதா''

கரிசனத்துடன் கணவன் சொல்ல, திருமணத்தையே அவசர கோலம் என்றவனுக்குப் பாவம் இந்தச் செய்தி மனதிற்குள் அதிர்ச்சியாகத் தான் இருக்குமென்று தோன் றியது.

''என்னமா அப்பிடியே படுத்துக்கறியா?''

''இல்ல டாடி, உட்கார்ந்துட்டே வர்றேன் இது தான் சவுகர்யமா இருக்கு'' என்றவள் தலையின் ஹெட்

ரெஸ்ட்டுக்குப் பின்னாலிருந்த குஷனை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

ஒரு வழியாக அடுத்த இரண்டு மணி நேரங்களில் மூவரும் வீடு வந்து சேர்ந்திருந்தார்கள். அதாவது தோட்டத்து வீட்டை.

ஒரு மணி நேரத்தில் வந்து சேர வேண்டிய தூரத்தைக் கடக்க இரண்டு மணி நேரங்கள் எடுத்துக் கொண்டதை நினைத்து சிரிப்பு தான் வந்தது ஸ்வேதாவிற்கு. கூடவே ஏளனமும்.

அதற்குப் பிறகும் கூட ஒவ்வொரு விஷயத்திலும் கணவன் தன்னை உள்ளங்கையில் வைத்துத் தாங்கியதை பல்லைக் கடித்து சகித்துக் கொண்டாள்.

திருமணத்தையே காலங் கடந்த ஞானோதயம் என்றவனுக்கு அந்தத் திருமண பந்தத்தில் உருவான இந்தக் குழந்தை மட்டும் சந்தோஷத்தைக் கொடுக்க முடியுமா என்ன.

ஒருவேளை போனால் போகிறதென்று அவனுடைய குழந்தைக்காகத் தன்னை ஏற்றுக் கொண்டு விட்டானோ.

சரிதான்.

அப்படித்தான் இருக்க வேண்டும்.

இவனுடைய இந்த திடீர்க் கரிசனமே அதற்கு சான்றல்லவா.

''ஸ்வேதாம்மா''

தந்தை அழைக்க திரும்பினாள்.

''வாம்மா சாப்புட்லாம்''

''இல்ல டாடி நீங்க சாப்புடுங்க. நான் அப்புறமா...''

''ம்கூம் முதல்ல எழுந்து வா'' என்று கணவனும் அழைக்க வேறு வழியில்லாமல் சாப்பிட எழுந்து வந்தாள்.



இவன் மட்டும் தான் நினைப்பதை எப்பொழுதும் சாதித்து விடுகிறானே என்று கணவனின் மேலிருந்த எரிச்சலும் கோபமும் இன்னும் அதிகம் தான் ஆனது.

சில நிமிடங்களில் உணவை முடித்தவள் தூங்கப் போகிறேனென்று எழுந்து வந்திருந்தாள்.

இப்படிப் பாதியில் எழுந்து சென்றால் எப்படி என்பதைப் போலக் கணவனும் தந்தையும் பார்ப்பது புரிந்தது.

ஆனாலும் அதைக் கண்டும் காணாதது போல எழுந்து வந்து விட்டிருந்தாள்.

''ஸ்வேதா'' என்று சில நிமிடங்களில் தன்னை அழைத்துக் கொண்டே உள்ளே வந்த கணவனைப் பார்த்தாள்.

''என்னம்மா ஏன் ஒன்னுமே சாப்புட்ல?''

.....

''ஸ்வேதா...''

''பேசு ஸ்வேதா''

''எதுக்கு சாப்பிடணும்?''

பட்டென்று மனைவியிடமிருந்து வந்த கேள்வியில் அவளைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''என்ன கேள்வி இது. எல்லாரும் எதுக்கு சாப்புட்றாங்க? அதுவும் இப்ப நீ இருக்கறதுக்கு...''

''இது வேண்டாம். சீ எனக்கு இது பிடிக்கவே இல்ல...''

அப்படிச் சொன்ன மனைவியைப் புரியாமல் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''எனக்கு இது வேண்டாம். இது என் குழந்தைன்னு சொல்லவே எனக்கு வெக்கமா இருக்கு...''

''ஸ்வேதா''

கோபத்துடன் அதட்டிய கணவனிடம் ''ஏன் என்னாச்சு?'' என்று கேட்டாள்.

"முதல்ல உனக்கு என்னாச்சு? ஏன் இப்படிப் பைத்தியம் மாதிரி ஏதேதோ உளர்ற?"

"யாரு நானா?"

"பின்ன? எவ்வளவு சந்தோஷமான விஷயம் இதப் போய்..."

"இது எனக்கு சந்தோஷமில்ல, என் உடம்பெல்லாம் எரியுது சீ..."

அப்படிச் சொன்ன மனைவியை அதிர்ச்சியைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தான் ஜெயவர்த்தன்.

ஆனால் அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் அப்பொழுது ஸ்வேதா இருக்கவில்லை.

அத்தனை நாளும் அடக்கி வைத்திருந்ததற்கெல்லாம் சேர்த்துப் பொங்கிக் கொண்டு வந்திருந்தது.

"போதும். இதுக்கு மேல ஒரு வார்த்த பேசின..."

"ஏன் பேசினா என்ன செய்வீங்க, இந்த சனியன் எனக்கு வேண்..."

"ஏய்..."

எல்லையற்ற கோபத்துடன் கத்தி விட்டிருந்தாலும் கணவனை இதழோரம் ஏளன வளைவுடன் பார்த்தாள் ஸ்வேதா.

"என்ன... ஏன் நிறுத்திட்டீங்க? அடிச்சுக் கொல்லணும் போலக் கோபம் வருதில்ல?"

"ஏம்மா இப்பிடியெல்லாம் பேசற?"

கணவனின் கரிசனம் ஸ்வேதாவின் கோபத்தை இன்னும் பல மடங்கு அதிகப்படுத்தி விட்டிருந்தது.

பேசுவதையெல்லாம் பேசிவிட்டு ஒன்றுமே தெரியாதது போலக் கேள்வி வேறா என்றிருந்தது.

"சபாஷ் பிரமாதமான நடிப்பு தான்"



"என்ன உளர்ற?"

"பாவம் அவசரப்பட்டுப் பண்ணின கல்யாணத்துக்கு உங்களுக்குக் கிடைச்ச தண்டனையும் பெரிசு தான்..."

"ஆனாலும் இனி என்ன பண்ண முடியும் காலங் கடந்த ஞானோதயமாச்சே"

மனைவியின் கோபத்திற்கான காரணம் இப்பொழுது புரிந்தது.

ஆனால் இவள் பேசுவதில் என்ன நியாயமிருக்கிறது.

சும்மா இருந்தவளிடம் போய் தான் ஏதோ வேண்டுமென்றே அப்படிச் சொன்னதைப் போலல்லவா பேசுகிறாள்.

அப்படிப் பார்த்தால் இவள் பேசியது மட்டும் சரியா என்ன.

மற்றது எப்படியோ தான் அந்த வார்த்தைகளைப் பிரயோகித்தது மிகப்பெரிய தவறு தான் என்பது புரிந்தாலும், அதை ஒத்துக் கொள்ள ஜெயவர்த்தனின் மனம் மறுத்தது.

மனைவி மட்டும் அப்படி பேசியிருக்கா விட்டால் தானும் அப்படி சொல்லியிருக்க வேண்டிய அவசியமே வந்திருக்காதே என்று தான் நினைக்கத் தோன்றியது.

அன்று கணவன் சொன்ன வார்த்தைகள் மீண்டும் அதே போலத் தொடர்ந்து காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்க, மனதால் துடித்தாள் ஸ்வேதா.

இல்லை அன்று நான் அப்படிச் சொன்னது தவறு தான் என்று ஒரு வார்த்தை சொல்லி விட மாட்டானா என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கணவனுடைய முகத்தையே பார்த்தாள்.

சற்று கவனித்துப் பார்த்திருந்தால் மனைவியின் கண்களில் தெரியும் ஏக்கம் ஜெயவர்த்தனுக்கும் புரிந்திருக்குமோ என்னவோ.

ஆனால் அவனும் அப்பொழுது கண்மண் தெரியாத கோபத்தில் இருந்ததால், அது துளியும் அவனுடைய கண்களில் பட்டிருக்கவில்லை.

மாறாக மேலும் எரிந்து விழுந்தான்.

''கொஞ்சம் விட்டா உனக்கு மட்டும் தான் உணர்ச்சி, கோபதாபம் எல்லாம் இருக்குன்னு சொல்லுவ போலிருக்கு?'' என்று ஏளனத்துடன் சிரித்தான்.

அப்படிக் கேட்ட கணவனை இனி இதற்கு என்ன பதில் சொல்ல முடியும் என்பதைப் போலப் பார்த்தாள் ஸ்வேதா.

# 28

மனம் வெறுத்துப் போனது.

நெஞ்சுக் கூடே காலியாகி விட்டாற் போலிருக்க மீண்டும் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

தன்னுடைய கணவனா இப்படி மாறி விட்டானென்று வேதனையுடன் நினைக்கத் தோன்றியது.

கதறி அழ வேண்டும் போல ஓவென்று வந்தது.

ஆனால் கல் மனதுக்காரனுக்கு அதுவும் வேஷமாகத் தானே தெரியுமென்று முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ஆனால் அந்த முயற்சி நிறைய நேரம் தாங்கும் போலத் தோன்றவில்லை.

எங்கே கணவனுக்கு முன்பாகவே அழுது விடுவோமோ என்று பயம் வந்து விட்டிருக்க, படுக்கைக்குச் செல்லத் திரும்பினாள்.



மெதுவாகத்தான்.

''எதையாவது சாப்டுட்டு தூங்கப் போ''

கணவனின் வார்த்தைகள் காதில் விழவே செய்தாலும், தொடர்ந்து நடந்தாள்.

''உன்னத்தான், என்ன கோபமிருந்தாலும் வயித்தப் பட்டினி போடாத''

''.....''

''ஸ்வேதா''

அந்த நேரத்திலும் கூட அடித்துக் கொன்று விட்டுக் கரிசனத்தைக் காட்டுகிறானே என்று சிரிப்பு வந்தது.

''நில்லு ஸ்வேதா''

அப்பொழுதும் நிற்காமல் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தாள்.

அதேநேரம் மனைவிக்கு முன்பாக வந்து நின்றிருந்த ஜெயவர்த்தன் ''என்ன சொல்றது காதுல விழல?'' என்றான்.

.....

''பேசு ஸ்வேதா, அப்படிப் பாத்தா அன்னைக்கு நீ பேசினது மட்டும் சரியா?''

அப்படிக் கேட்ட கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

''ஒரேயடியாப் பணம் வேண்டாம்னு மறுத்ததுக்கு இதுக்கு நீங்க என்னக் கல்யாணம் பண்ணிக்காமலே இருந்திருக்கலாம்னு நீ சொல்லியிருக்கலாமா?''

முயன்று கணவன் கேட்டதை மனதில் இருத்தி நடந்தவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தாள்.

எதற்காக, என்ன அர்த்தத்தில் அந்த வார்த்தைகளை சொன்னாளென்பது நினைவிற்கு வந்திருந்தது.

''என்ன பேசு?''

.....

''உனக்கொரு நியாயம், மத்தவங்களுக்கு ஒரு நியாயமா?''

.....

''என்ன பதில் சொல்ல முடியல இல்ல?''

கடவுளே தாங்க முடியவில்லையே. என்னை ஏன் இப்படியெல்லாம் சோதிக்கிறாய்.

''என்ன...''

''எனக்கு... எனக்கு ஒன்னும் புரியல, அத என்னன்னு ஒருவேள அப்படி ஏதாவது இருந்தா சொல்லுங்களேன் பார்க்கலாம்...''

''இதுக்கு நீங்க என்னக் கல்யாணம் பண்ணிக்காமலே இருக்கலாம்னு சொன்னியே...''

''ஆமாம் சொன்னேன் அதுக்கென்ன?''

''அப்ப நீ பணக்காரி, உங்கிட்ட நிறையப் பணமிருக்குன்னு தான் நான் உன்னக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு சொல்ற அப்படித்தான?''

என்னது...

என்ன சொல்கிறான் இவன்.

''என்ன உண்மையக் கண்டுபிடிச்சுட்டேன்னு அதிர்ச்சியா இருக்கா?''

''என்ன உளர்றீங்க?''

''போதும் ஸ்வேதா''

''என்ன போதும், நீங்க பாட்டுக்கு என்ன வேணும்னாலும் கற்பன பண்ணிக்குவீங்களா?''

கணவன் ஏன் அன்று அந்த பயங்கரமான வார்த்தைகளை சொன்னானென்பது இப்பொழுது புரிந்தாலும், விரக்திக்கு பதிலாகத் தன்னை எப்படி அப்படி எண்ணலாமென்ற ஆதங்கம் அதிகமாகி விட்டிருந்தது.



''நாம யோசிக்காம பேசிட்டு மத்தவங்கள மட்டும் குறை சொல்றது என்ன நியாயம் சொல்லு?''

கடவுளே தான் அந்த மாதிரி பொருளில் சொல்லவே இல்லையே.

தான் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டது மட்டுமல்லாமல், பதிலுக்கு இவன் சொன்ன வார்த்தைகள்.

''தயவுசெஞ்சு என்ன விட்டுடுங்க, என்னால பேச முடியல''

அப்படிச் சொன்ன மனைவியை ''இனிமேலாவது யோசிச்சுப் பேசினா சரிதான்'' என்றான்.

''யோசிக்காம பேசினது நீங்க தான்...''

''திரும்பவும் வேண்டாம்''

''என்ன வேண்டாம், நான் எந்த மாதிரி அர்த்தத்துல அப்பிடி சொன்னேன்னு அப்ப நிஜமாவே புரியலையா உங்களுக்கு?''

முடிந்து போன கதையை ஏன் மீண்டும் கிளறுகிறாய் என்பதைப் போல வெறுப்புடன் பார்த்த கணவனை, அப்படித்தான் நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் காதில் வாங்கிக்கொள்ள மாட்டீர்களா என்பதைப் போலப் பார்த்தாள் ஸ்வேதா.

''அப்ப நான் சொன்ன அந்த வார்த்தைகளுக்கு நீங்க நினைக்கறதத் தவிர வேற அர்த்தமே இருக்க முடியாதுங்கறீங்களா? நான் இவ்வளவு சொல்றேனே அதுக்காகவாவது என் இடத்துல இருந்து கொஞ்சம் யோசிச்சுப் பாருங்களேன்.''

.....

தன் நிலையை விட்டு இவ்வளவு கீழிறங்கிப் போகிறோமே என்பதெல்லாம் கூட அந்த நேரத்தில் மறந்து போயிருந்தது ஸ்வேதாவிற்கு.

மனைவியின் கெஞ்சல் ஜெயவர்த்தனை அவளுடைய நிலையிலிருந்து யோசிக்க வைத்திருந்தது.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

அடுத்த வினாடி "அதுலென்ன சந்தேகம்?" என்று விட்டிருந்தான்.

கணவனின் கேள்வி, இருந்த கொஞ்சநஞ்ச சக்தியையும் வடிய வைத்து விட்டிருக்க, அப்படியே படுக்கையில் அமர்ந்து விட்டிருந்தாள்.

அவ்வளவுதான் அனைத்துமே முடிந்து விட்டது என்பதைப் போன்ற உணர்வு வந்து ஆட்கொள்ள அப்படியே செயலிழந்து நின்றாள்.

அந்த நிலையில் மனைவியைப் பார்த்த ஜெயவர்த்தனுக்கும் ஏனோ திக்கென்று விட்டிருந்தது.

மனைவியைப் புண்படுத்த வேண்டும் பழிவாங்க வேண்டுமென்றெல்லாம் அவன் அப்படிச் சொல்லியிருக்கவில்லை என்பதால் அவளுடைய அந்த நிலை மீண்டும் அவனை யோசிக்க வைத்திருந்தது.

தான் ஏதோ பெரிய தவறு செய்து கொண்டிருக்கிறோமோ என்ற எண்ணத்தையும் கொடுத்திருந்தது.

மனைவியைப் பொறுத்த வரை அவள் மற்றவர்களின் மனதை அது மிகச்சிறிய அளவிலேயே என்றாலும் கூடப் புண்படுத்துகிறவள் அல்லவே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அப்படிப்பட்டவள் தன்னிடம் மட்டும் ஏன் அப்படி நடந்து கொண்டாள்.

அதற்கு ஏதேனும் காரணம் இருக்குமோ.

மனைவி அமர்ந்திருக்கும் கட்டிலில் சென்று அமர்ந்த ஜெயவர்த்தன் "உங்கிட்டக் கொஞ்சம் பேசணும்" என்றான்.



"சொல்லு அன்னைக்கு ஏன் அப்பிடிப் பேசின? விஷயம் எதுவானாலும் மனசு விட்டுப் பேசினா தான் சரியாகும்"

ஆனால் அதெல்லாம் ஸ்வேதாவின் காதுகளில் கூட விழுந்தால் அல்லவா.

மனம் மிகவும் வெறுத்துப் போய் விட்டிருக்க அப்படியே காதுகளில் வாங்கிக் கொண்டாலும் கூட அதை மனதால் உணரும் நிலையில் அவள் இருக்கவில்லை.

மனைவியின் நிலை ஜெயவர்த்தனுக்கும் புரியவே செய்தது.

இப்பொழுது மீண்டும் தான் பேசிய வார்த்தைகள் மனைவியை மேலும் புண்படுத்தி விட்டனவோ.

"ஸ்வேதா..."

.....

"பேசு ஸ்வேதா, இத்தன நாளா நடந்தத விட்டுடலாம். ஆனா இனியும் தொடர்ந்து இந்தப் பிரச்சனைய வளத்துட்டிருக்கறதால லாபமென்ன சொல்லு?"

அப்பொழுதும் எதையும் பேசாமல் இலக்கற்று எங்கோ பார்த்தபடி அமர்ந்திருந்த மனைவியை "ஸ்வேதா இங்க பாரு" என்று அழைத்தான்.

"எனக்குத் தூங்கணும்"

"நிச்சயமா, ஆனா இந்த விஷயத்த மட்டும் பேசித் தெளிவு பண்ணிட்டு அப்புறமாத் தூங்கப் போ"

சொன்னதோடு மட்டுமல்லாமல் படுக்கைக்கும் செல்லத் திரும்பியிருந்த மனைவியை அதற்கு விடாமல் தடுத்திருந்தவன், "எதுவானாலும் மனசு விட்டுப் பேசினா தான் தீர்வு கிடைக்கும் ஸ்வேதா புரிஞ்சுக்கோ" என்றான்.

"அடடா என்ன கண்டுபிடிப்பு."

இவன் அனைத்தையுமே சற்று காலம் கடந்து தான் யோசிப்பானோ.

எப்படியோ இப்போதாவது கேட்கிறானே.

"சொல்லுமா, அன்னைக்கு ஏன் அப்பிடி..."

"அது ஏன்னு தான் நீங்களே உங்க அரிய கண்டுபிடிப்புல சொல்லிட்டீங்களே அப்புறமென்ன?"

"இப்பிடி சொன்னா எப்பிடி?"

"பின்ன எப்படி சொல்லணும்?"

"இல்ல வேற காரணம் ஏதாவது..."

"தயவு தாட்சண்யமே இல்லாம அடிச்சுக் கொன்னுட்டு இப்பக் கரிசனமா?"

"வேண்டாம்மா..."

"நடந்தது போகட்டும் விட்டுடுங்க. இனிமேல் அதக் கிளறாதீங்க. முக்கியமா அதப்பத்திப் பேசற மனநிலைல நான் இல்ல" என்று விட்டு எழப் போன மனைவியை "இத மட்டும் பேசிட்டு அப்புறமாப் போ" என்று மீண்டும் தடுத்தான்.

தனது கையைப் பிடிக்க வந்த கணவனிடமிருந்து இரண்டு அடி பின்னால் நகர்ந்தவள் "எல்லாத்துக்கும் ஒரு எல்லையிருக்கு" என்றாள்.

"அத நானும் சொல்லலாம்"

"ஓ... ம் அப்புறம்?" என்று நின்று திரும்பியவளால் என்ன முயன்றும் ஏளனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"நீ அப்பிடி சொன்னதுக்கு நிச்சயம் ஏதாவது காரணமிருக்கும்னு தோணுது. சொன்னாதான தெரியும்..."

"சபாஷ்" என்ற ஸ்வேதாவால் இப்பொழுது ஆதங்கத்தையும் கோபத்தையும் கூடக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போயிற்று.



"எவ்வளவு சீக்கிரம் கேட்டுட்டீங்க, அதுவும் என்னவெல்லாம் பேச முடியுமோ எல்லாத்தையும் பேசிட்டு இப்பப் போனாப் போகுதுன்னு..."

அதற்கு மேல் ஸ்வேதாவால் பேச முடிந்திருக்கவில்லை, குரல் பிசிறடித்து விட்டிருந்தது.

"ஸ்வேதா..."

"என்னத் தொடாதீங்க..."

கணவன் மேலும் நெருங்க, மீண்டும் இரண்டடி பின்னால் நகர்ந்தாள்.

"இத்தன நாள் மனசு விட்டுப் பேசிக்காம இருந்தது போதும்மா, இப்பவாவது..."

"தயவுசெஞ்சு புரிஞ்சுக்கோங்க, நான் உங்க பழைய ஸ்வேதா இல்ல அவ செத்துப் போயிட்டா..."

மனைவியின் அந்த வார்த்தைகளில் ஆடிப்போனான் ஜெயவர்த்தன்.

என்ன வார்த்தை சொல்லி விட்டாள்.

"நான் சொல்றதக் கொஞ்சம் புரிஞ்சுக்க..."

"உங்களுக்கு எப்பிடி சொல்லிப் புரிய வைக்கிறது..."

ஒருவேளை.

உண்மைதானோ.

இவள் தன்னுடைய பழைய ஸ்வேதா இல்லையோ.

அந்த மென்மையான அன்பு மனம் கொண்டவளை இவள் சொல்வதைப் போலத் தானே ஈவு இரக்கமில்லாமல் கொன்று விட்டோமோ.

"நான் சொன்ன வார்த்தைகள் உன் மனசப் புண்படுத்தியிருந்தா உண்மையா அதுக்காக நான் வருந்தறேன்..."

''அதான் சொன்னேனே. நடந்ததையெல்லாம் விட்டு டுங்க. எனக்காக நீங்க எந்த விதத்துலயும் சிரமப்பட வேண்டாம்''

''நான் கேட்டதுக்கு நீ இன்னும் பதிலே சொல்லல'' என்ற கணவனைப் பார்த்தவள் ''அன்னைக்கு ஏன் நான் அப்பிடி சொன்னேன்னு தெரியணுமில்லையா. நானில்ல என் இடத்துல யார் இருந்திருந்தாலும் அதத்தான் சொல்லி யிருப்பாங்க'' என்றாள்.

அது சரி, அதை இவன் புரிந்து கொண்டிருந்தால் தான் இத்தனை பிரச்சனைகளே வந்திருக்காதே.

கணவனின் பார்வையில் ''எனக்கொரு கஷ்டம்னா முதல்ல உங்ககிட்ட தான் வருவேன். அதேமாதிரி நீங் களும் இருப்பீங்கன்னு நினைச்சு அப்பிடி சொல்லிட் டேன்'' என்றாள்.

''எதுக்காவும் நீங்க சிரமப்படக் கூடாது. உங்க கஷ் டத்த ஏதாவது ஒரு வகைல சரி பண்ணியாகணுங்கற எண் ணத்துல தான் அப்பிடி சொன்னேனே தவிர அந்த நேரத் துல பணம், பெருமை, பந்தா இதெல்லாம் ஆயிரத்துல ஒரு பங்காக் கூட எனக்கு ஞாபகம் வரவே இல்ல''

''நானில்ல, கணவன் மேல உண்மையான அன்பு வெச்சிருக்கற எந்த ஒரு ஏழைப் பெண்ணும் அவகிட்ட இருக்கோ இல்லையோ அவளாள முடியுமோ முடியாதோ நானிருக்கேன் கவலப்படாதீங்கன்னு தான் சொல்லுவா''

''அதுதான் உண்மையான தமிழ்ப் பொண்ணுக்கு அழகும் கூட''

''அப்பிடிப் பாக்கும் போது நானும் ஒரு விதத்துல ஏழ தான், அன்புக்காகவும் ஆதரவுக்காகவும் தவிக்கற ஏழை. அப்படிப்பட்ட எனக்கு உங்ககிட்டிருந்து அதெல்லாம் கிடைச்சது, மனசு நிறைஞ்சு சந்தோஷமா இருந்தேன்''



''அந்த நேரத்துல உங்களுக்கொரு சிரமம்னு தெரிய, அதப் பாத்துட்டு என்னால சும்மா இருக்க முடியல''

''அதான் அந்த வார்த்...''

அதற்கு மேல் ஸ்வேதாவால் சுத்தமாகப் பேச முடி யாது போயிற்று.

மனைவியின் வார்த்தைகள் ஈட்டியாய் நெஞ்சிலே குத்த, ஆடிப் போனான் ஜெயவர்த்தன்.

என்ன பதில் சொல்வதென்று ஒன்றும் புரிந்திருக்க வில்லை.

மனைவி இயல்பாகக் கூறிய வார்த்தைகளுக்குத் தான் கற்பித்துக் கொண்ட பொருள் உண்மையிலேயே படு அபாண்டமானதாய் இருக்க, வாயடைத்துப் போய் நின்று விட்டிருந்தான்.

தான் எப்படி இந்த மாதிரி யோசிக்காமல் பேசினோம் என்றிருந்தது.

அன்று மட்டுமா, இன்னும் கூடத் தான் ஏதேதோ சொல்லி விட்டிருக்கிறோமே.

''நீங்க வெளியூர்ல இருந்து வந்ததும் இந்த சந்தோஷ மான விஷயத்த உங்ககிட்ட சொல்லணும்னு எவ்வளவு ஆசையாகக் காத்திருந்தேன் தெரியுமா?''

''ஆனா... ஆனா நீங்க என்ன வார்த்த சொல்லிட் டீங்க? அதுக்கு பதிலா நீங்க என்ன அடிச்சுக் கூட சித்ரவத பண்ணியிருக்கலாம். ஆனா... என்ன வார்த்த...''

மனைவியின் கதறல் நெஞ்சைக் கசக்கிப் பிழிவதாய் இருக்க, ''ஸ்வேதா இங்க பாரு'' என்று அருகில் வந்தான்.

கணவனின் தொடுகையில் நடப்பிற்கு வந்திருந்த ஸ்வேதா, கண்களில் நீர் வழியப் பார்த்தாள்.

"நீங்க... உங்கள நான் அந்த மாதிரி நினைச்சுக் கூட பாக்கல..."

"நீங்க எப்பிடி... என்னால தாங்கவே முடியலையே அம்மா..."

மனைவியின் கதறலும் தவிப்பும் ஜெயவர்த்தனை மிகுந்த வேதனைக்குள்ளாக்கி விட்டிருக்க, சமாதானம் செய்யும் வகையறியாது தவித்தான்.

தான் என்ன சொன்னாலும் அதைப் புரிந்து கொள்ளும் மனநிலையில் அப்பொழுது மனைவி இல்லையென்பது புரிந்தது.

ஆனாலும் எந்த விதத்திலாவது தான் மனைவியின் வேதனையை குறைத்தே ஆக வேண்டுமென்று தீவிரமாகத் தோன்றி விட்டிருக்க, அவளுடைய தோள் பட்டையில் கை வைத்து "ஸ்வேதா" என்று அழைத்தான்.

.....

"ஸ்வேதா... இங்க பாரு..."

கணவனின் அழைப்பில் அவனைத் திரும்பிப் பார்த்தவளுக்கு அதற்குப் பிறகு தான் அவனுடைய கண்களும் கலங்கியிருப்பது கண்களில் பட்டது.

"ஸ்வேதா"

"உன்ன நான் இந்த அளவுக்கு ஹார்ட் பண்ணியிருக்கேன்னு நினைக்கும் போது என்னால தாங்க முடியலடா..."

அதுவரை எப்படியோ ஆனால் கணவனின் கண்களும் கலங்கி விட்டிருந்தது மனதால் அவனும் மிகவும் வருந்துவதைக் காட்டியது.

எவ்வளவு கம்பீரமான ஆண் மகன்.

தனது தந்தை முதல் ஏன் அனைவருமே இவனிடம் எவ்வளவு மரியாதையுடன் நடந்து கொள்கிறார்கள் கூடவே பயத்துடனும்.



தன்னுடைய அன்புக்காக சற்று முன்பு தான் ஏங்கியதை விடப் பல மடங்கு இப்பொழுது கணவன் ஏங்குவது அவனுடைய கண்களில் தெரிய, அதற்கு மேல் ஸ்வேதாவால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

"ஜெய்..." என்று உதடுகள் துடிக்கக் கணவனின் முகத்தைத் தனது கைகளில் ஏந்தியிருந்தாள்.

"ஜெய்..."

"என்ன மன்னிச்சுடுடா..."

"வேண்டாம் ஜெய்..."

"ஸ்வேதா என்ன மன்..."

"அப்ப எம்மேல உங்களுக்கு இப்ப எல்லாக் கோபமும் தீந்துடுச்சு தான?"

"என்னக் கொல்லாதடா..." என்ற கணவனின் கண்களில் இப்பொழுது இன்னும் ஈரம் அதிகமாகி விட்டதோ.

அவ்வளவு தான், அதற்கு மேல் கணவனைப் பேச விடாமல் அவனை இறுக அணைத்து, அவனுடைய இதழ்களில் தனது இதழ்களைப் பதித்திருந்தாள் ஸ்வேதா.

சில வினாடிகள் எதையுமே உணர்ந்து கொள்ளும் மனநிலையில் ஜெயவர்த்தன் இல்லையென்றாலும், அதற்கு பிறகு நிலைமை தலைகீழாகி விட்டிருந்தது.

ஆம்.

கணவனின் கைகளில் பச்சை மண்ணாகிப் போயிருந்தாள் ஸ்வேதா.

அதற்கு முன்பு நடந்ததனைத்தையும் சுத்தமாக மறந்து போயிருந்தாள்.

ஜெயவர்த்தனின் அன்பு அத்தகையதாய் இருந்தது.

மணமானதிலிருந்து அன்று தான் இருவரும் ஒருவரையொருவர் முழுமையாக புரிந்து கொண்டார்களென்று கூடச் சொல்லலாம்.

இரவு வெகு நேரத்திற்குப் பிறகே தூங்கத் தொடங்கியவர்கள், காலையிலும் வழக்கத்தை விடவும் சற்று நேரம் கழித்துத்தான் எழுந்தார்கள்.

முதலில் விழிப்பு வந்து எழுந்த ஜெயவர்த்தன், மனைவி நன்கு உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

அப்படியே கண் கொட்டாமல் பார்த்தான்.

இரவு நடந்ததெல்லாம் நினைவு வர, இதழோரம் ஒருவிதப் பெருமிதப் புன்னகை பூத்தது.

மீண்டும் அப்படியே அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போலப் பொங்கியெழுந்த பேராவலைக் கட்டுப்படுத்திக் கொள்ள சற்று சிரமப்பட்டுத்தான் போனான்.

பாவம் இரவே அவளை ஒரு வழியாக்கி விட்டோமே என்று நினைத்தவனுக்கு இப்பொழுது லேசான பயம் கூட வந்து விட்டிருந்தது.

மனைவி இப்பொழுதிருக்கும் உடல்நிலையில் தான் அப்படி நடந்து கொண்டிருக்கலாமா.

ஆனால் அது சில வினாடிகள் தான்.

சற்று யோசித்ததில் அப்படியெல்லாம் பயப்பட எதுவுமில்லையென்பது புரிந்தது.

ஆனாலும்...

கடிகாரத்தில் நேரம் பார்த்தான்.

மணி ஏழாகியிருந்தது தெரிய, அரவம் செய்யாமல் திரைச்சீலைகளை வெளிச்சம் வராத வண்ணம் இழுத்து விட்டுவிட்டு காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தான்.



''வாங்க மாப்ள, குட்மானிங்''

''வெரிகுட்மானிங் மாமா, நேரத்துலயே எழுந்துட்டீங்க போல?''

''வழக்கம் போலத் தான், ஸ்வேதா?''

''தூங்கறா''

''ஸ்வேதாவுக்குத் திரும்பவும் பிரச்சனை எதுவுமில்லையே''

மாமனார் எதைப் பத்தி கேட்கிறார் என்பது புரிய ''இல்ல மாமா'' என்றான்.

''வாங்க மாப்ள காபி சாப்புட்லாம்'' என்று சொல்லிக் கொண்டே அவர் இரண்டு கப்களில் ஊற்ற ''நீங்களும் இன்னும் காபி எடுத்துக்கலயா?'' என்று தானும் ஒரு கப்பை எடுத்துக் கொண்டான்.

''தோட்டத்துக்குள்ள நடந்துட்டு இப்பதான் மாப்ள வந்தேன்''

''வெளிய அதுவும் இந்தக் காலை நேரத்துல ரொம்ப ரம்யமா இருக்கு'' என்று ஜெயவர்த்தன் சொல்ல ''அது சரிதான், அதான் வருஷத்துக்கு ரெண்டு முறையாவது இங்க வந்துட்றது'' என்றார்.

''பேச்சினூடே கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் சென்றிருக்க, அங்கே வந்தாள் ஸ்வேதா.

''வா ஸ்வேதாம்மா, குட்மானிங்''

''குட்மானிங் டாடி''

''உடம்புக்கு இப்ப எப்பிடிமா இருக்கு?''

''பரவாயில்ல டாடி'' என்றவளுக்குக் கணவனை இயல்பாக எதிர்கொள்ள முடியும் போலத் தோன்றவில்லை.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

"இந்தமா எடுத்துக்கோ" என்று கணவன் கொடுத்த காபி கப்பை "தேங்க்ஸ்" என்று வாங்கிக் கொண்டவள், சோபாவின் மறு பக்கத்தில் அமர்ந்தாள்.

முதல் நாள் இரவுக்குப் பிறகு அந்த நன்றி சற்று அதிகப்படியாகத் தான் தோன்றியது.

கணவனுக்கும் அப்படித்தான் இருக்குமோ என்று இயல்பாகப் பார்ப்பதைப் போல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

கணவனும் அப்பொழுது தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிய, முகம் சிவக்கத் தொடங்கிவிட்டிருந்தது.

நல்லவேளையாகத் தந்தை நாளிதழில் மும்முரமாகி இருக்க, அதற்குள் முகத்தை இயல்பாக்கிக் கொண்டாள்.

"உங்களுக்குக் காபி..."

"நாங்க ரெண்டு பேரும் ஆச்சுமா"

சில நிமிடங்களில் குளித்து விட்டு வருவதாக பால கிருஷ்ணன் எழுந்து செல்ல, தானும் குளிக்கப் போவதாக எழுந்தான் ஜெயவர்த்தன்.

"நீ உட்காரு..."

"சோப், டவல் எல்லாம் இன்னும் எடுத்து வைக்கல... அதான்" என்று மெல்லிய குரலில் சொன்ன ஸ்வேதா, தானும் எழுந்து கணவனைத் தொடர்ந்து வந்தவள் சென்று ஹீட்டரை ஆன் செய்து விட்டுக் கணவனுக்குத் தேவையான அனைத்தையும் எடுத்து வைத்து விட்டுத் திரும்பினாள்.

"இப்பதான் ஹீட்டர ஆன் செஞ்சிருக்கேன் தண்ணி சூடாக இன்னும் கொஞ்ச நேரமாகும்"

"மெதுவா ஆகட்டும் ஒன்னும் அவசரமில்ல" என்று அருகில் வந்த கணவனை நெஞ்சு படபடக்கப் பார்த்தாள்.



"ஸ்வேதா"

"ம்..."

"எம்மேல இன்னும் கோபமா?"

இரவு கணவன் கண்கள் கலங்கியது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது ஸ்வேதாவிற்கு.

"என்னடா?"

"நான்..."

"ம்"

"நான்... நான் நைட் உங்கள ரொம்பவும் கஷ்டப்படுத்திட்டேன் இல்ல..."

"இல்லடா, நான் செஞ்ச தப்ப முழுமையா உணர வெச்ச. அதுவும் அன்பால"

"அப்ப நீங்க என் பழைய ஜெய் ஆயிட்டீங்கன்னு சொல்..."

"இல்லடா இப்ப நான் புது ஜெயவர்த்தன். முன்னைக்கு இப்பதான் உன்ன முழுமையாப் புரிஞ்சிட்டிருக்கேன்னு கூடச் சொல்லலாம்..."

"அப்படியா!"

"ம்" என்ற ஜெயவர்த்தன் மனைவியை அருகில் இழுத்து இறுக அணைத்திருக்க, அதற்காகவே ஏங்கினாற் போலக் கணவனின் அணைப்பிற்குள் தானும் காணாமல் போயிருந்தாள் ஸ்வேதா.

## 29

தொடர்ந்து வந்த ஒரு மணி நேரத்தில் மூவரும் காலை உணவை எடுத்துக் கொண்டனர்.

டிபனை முடித்துக் கொண்டு ஹாலுக்கு வந்த பால கிருஷ்ணன் ''வாங்க மாப்ள உக்காருங்க'' என்று ஜெய வர்த்தனை அழைத்தார்.

''ஒரு நிமிஷம் மாமா என் மொபைல் மேல இருக்கு எடுத்துட்டு வந்துட்றேன்'' என்று அவன் மாடிப் படிகளில் ஏற, ''உங்களுக்கு டீ குடுக்கட்டுமா டாடி?'' என்று வந் தாள் ஸ்வேதா.

''எனக்கு வேண்டாம்மா, மாப்ளைக்கு வேணும்னா...''

''அவரு கொஞ்ச நேரமாகும்''

''அப்புறம் ஸ்வேதாம்மா''

''சொல்லுங்க டாடி''

......

''என்ன டாடி சொல்லுங்க?''

''உனக்கொன்னும் பிரச்சனையில்லையேம்மா'' என்று கேட்ட தந்தையைப் புரியாமல் பார்த்தாள் ஸ்வேதா.

''இல்ல அங்க உங்க வீட்ல...''

''அச்சச்சோ என்ன டாடி நீங்க, எனக்கு எந்தப் பிரச் சனையுமில்ல நான் சந்தோஷமா இருக்கேன். சும்மாவே அத்தெ ரொம்ப அக்கறையாப் பாத்துக்குவாங்க இனி மேல் சொல்லவே வேண்டாம்''

''ஆளே பாக்க ஒரு மாதிரியாயிட்டே, ஹெல்த் ரொம்ப முக்கியம் அதுவும் இந்த மாதிரி சமயத்துல நல்லாப் பாத் துக்கோமா''

அதேநேரம் ஜெயவர்த்தனும் அங்கு வந்து சேர்ந்திருக்க, ''சரிதான் டாடி'' என்றாள் ஸ்வேதா.

''நீ இங்கயே சொன்னாலும் கேக்காம எல்லா வேலை களையும் இழுத்துப் போட்டு செய்வியே அதனால சொல் றேம்மா, இனிமேல் அதெல்லாம் வேண்டாம்.''



''சரிதான் டாடி''

''நீங்க நிம்மதியா இருங்க மாமா, ஸ்வேதாவ நான் ரொம்ப நல்லாப் பாத்துக்குவேன். ஆனா...''

''என்ன மாப்ள?''

''உங்களுக்கு தான் ஸ்வேதாவ விட்டுட்டு இருக்கறது கொஞ்சம் சிரமமா இருக்கும் போலிருக்கு?''

''ஒரு விதத்துல அப்பிடிதான் மாப்ள, ஆனா எனக்குப் பெரும்பாலும் என் பிஸினஸ் வேலைகளே சரியா இருக் கறதால அவ்வளவா தெரியாது.

''எது எப்படியோ மாமா, உங்களுக்கு எப்ப ஸ்வே தாவப் பாக்கணும்னு தோனினாலும் ஒரு போன் மட்டும் பண்ணுங்க நான் அழைச்சுட்டு வர்றேன், அப்பிடியே நீங்களும் அப்பப்ப முடியும் போது அங்க நம்ம வீட்டுக்கு வாங்க''

''சரிதான்'' என்று மன நிறைவுடன் சொன்னார் பால கிருஷ்ணன்.

''நான் கொஞ்சம் பக்கத்துத் தோட்டம் வரைக்கும் போய்ட்டு வந்துடட்டுமா மாப்ள''

''சரிதான் மாமா, போய்ட்டு வாங்க''

''லஞ்சுக்கு வந்துடுவீங்க தானே டாடி?''

''அவ்வளவு நேரமாகாதுமா, முன்னாடியே வந்துடுவேன்'' என்று புறப்பட்டார் பாலகிருஷ்ணன்.

தந்தை கிளம்பியதும் கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

''என்னமா?''

''மேல மாடி வராண்டால போய் உக்காந்து பேசிட்டிருக்க லாமா?''

''ஏன்?''

''வேப்ப மரங்களோட காத்து இதமா வீசும் அதான்''

''அப்படியா அப்பப் போலாம்'' என்ற கணவனுடன் நடந்தாள் ஸ்வேதா.

மனைவி சொன்னது போல மாடியில் காற்று இதமாய் வீச, அங்கே போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது இருவருக்கும் பிடித்திருந்தது.

அதிலும் தனது சிறு வயது முதல் பள்ளி கல்லூரி வரை எடுத்த போட்டோக்களை ஸ்வேதா வெட்கத்துடன் கணவனிடம் காட்ட, அதை ஆர்வமாய் பார்த்தான் ஜெயவர்த்தன். அதாவது இடையிடையே கேலி பேசிக் கொண்டே.

''ஆனா ஒன்னு மட்டும் உறுதி''

''அது என்ன?''

''நீ ரொம்ப அழகா இருக்கேங்கறது தான்''

''அப்பிடியா!''

''ம்''

''சும்மா சொல்லக் கூடாது''

''ஏன் அத நான் தான் சொல்லணுமா என்ன, படிக்கும் போதே உன்ன நிறைய பேர் ஸைட் அடிச்சிருப்பாங்களே...''

''தெரியல''

''தெரியலையா?''

''ம்''

''என்ன தெரியல? சரி அதவிடு நீ யாரையாவது ஸைட் அடிச்சிருப்ப தான?''

''நானா?''

''ம், ஏன் சிரிக்கற?''

''ஒன்னுமில்ல?''



''என்ன சொல்லு?''

''இல்ல என்ன எல்லாருமே சாமியாரினின்னு தான் சொல்லுவாங்க. அந்த அளவுக்கு பசங்க இருக்கற பக்கம் கூடத் திரும்ப மாட்டேன்''

''நீ அப்படி இருந்திருக்கலாம், ஏன் நீ அந்த மாதிரி டைப் தான். ஆனா உன்ன மத்த பசங்க நிச்சயம் ஸைட் அடிச்சிருக்க வாய்ப்பிருக்கு''

''என்னயா? சான்ஸே இல்ல?''

''ஏன்?''

''ரொம்ப அவசியத்துக்குக் கூட ஒரு வார்த்த பேசாத எங்கிட்ட யாருக்கும் துளி கூட சுவாரஸ்யம் வந்ததில்ல, அதுல ஒன்னும் ஆச்சரியமும் இல்லையே''

''நம்பவே முடியலையே...''

''என்ன நம்ப முடியல?''

''அப்பிடி எதுவும் பேசலேன்னா தான் திரும்பத் திரும்ப வந்து பேசுவாங்க, ஆனா நீ எதிர்ப்பதமா சொல்ற?''

''நீங்க சொல்றது கூட சரிதான், ஆனா அதுக்கும் ஒரு எல்லை வெச்சிருப்பாங்க தான?'' என்றவள் ''அது சரி உங்க காலேஜ் லைப்லாம் எப்பிடி?'' என்று கேட்டாள்.

''நானும் கிட்டத்தட்ட உன்ன மாதிரி தான்''

''அப்பிடின்னா?''

''அவசியமில்லாம யாருகிட்டயும் பேச மாட்டேன்''

''அப்ப உங்க பாஷைல நீங்க யாருகிட்டயும் பேசாததாலயே உங்ககிட்ட நிறையப் பேரு வலிய வந்து பேசினாங்களாக்கும்''

''நிறையப் பேர்னு சொல்லிட முடியாது.''

''அப்புறம்?''

''ஒரு சில பொண்ணுங்க, அதுலயும் ஒருத்தி தான் கடைசி வரைக்கும் விடாம துரத்திட்டே இருந்தா''

''ஓ...''

''என்னமா?''

''லவ்வா?''

''எனக்கா, ம்கூம்''

''அப்ப அவங்களுக்கா?''

''அப்படீன்னு வேணும்னா சொல்லலாம்''

''சும்மா அவங்களுக்கு மட்டும் தான்னு சமாளிக்காதீங்க.''

''நிஜம்மா''

''அப்ப நீங்க கொஞ்சங் கூட இம்ப்ரஸ் ஆகலையாக்கும்.''

''ம்கூம்''

''சரிதான் நம்பிக்கிட்டேன்.''

''நம்பினாலும், நம்பலேன்னாலும் அதுதான் உண்மை''

''அப்புறம் என்னாச்சு?''

''அப்புறம்னா?''

''அவங்க ப்ரபோஸ் பண்ணினாங்களா?''

''அத ஏன் கேக்கற?'' என்று கணவன் சொன்னதனைத் தையும் சினிமாக் கதை கேட்பதைப் போல சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டாள் ஸ்வேதா.

''அப்புறம் என்னாச்சு?''

''அப்புறமென்ன இவன் பின்னாடி எத்தன நாள் சுத்தினாலும் வேஸ்ட்தான்னு உணர்ந்துகிட்டு முற்றுப் புள்ளி வெச்சுட்டா''

''எப்ப?''

''ஸ்டடிஸ் முடியும் போது தான்.''



''ஓ. ஆனா...''

''ம். என்ன?''

''அப்படி அவங்க உங்களையே சுத்திட்டிருந்தப்ப உங்களுக்கு அவங்க மேல ஒரு சின்ன ஸாஃப்ட் கார்னர் இருந்திருக்கும் தான, மறைக்காம சொல்லணும்''

''ம்கூம், தான் அப்பிடியெல்லாம் சுத்தினது தப்புன்னு கடைசி நேரத்துல பிரியும் போது அந்த சுமிதாவே ரியலைஸ் பண்ணிட்டா''

''நான் உங்களுக்குக் கேக்கறேன், ஒரு சின்ன ஸாஃப்ட் கார்னர்... அதுவும் கொஞ்சமாவது...''

.....

''என்ன ஜெய்?''

''கொஞ்சம் இருந்தது. ஆனா அது காதல் இல்ல. அது கூடக் கடைசில அவளே மாறிக்கிட்டதும் காணாமல் போயிடுச்சு''

''என்ன அப்பிடிப் பாக்காத ஸ்வேதா...''

.....

''என்னடா எம்மேல நம்பிக்கையில்லாம சந்தேகப்பட்ற தான?''

அதற்கும் மனைவியிடமிருந்து பதில் வராது போக அவளை அருகில் இழுத்துக் காதலுடன் அவளுடைய கண்களையே பார்த்தான்.

''என்னமா அப்பிடித்தான?''

''சேச்சே. உங்க அன்பு காதல் எல்லாம் எனக்கு மட்டும் முழுசா கிடைச்சா எவ்வளவு சுகமா இருக்கும்னு நினைச்சுப் பாத்தேன்''

''உத விழும், உன்னைத் தவிர வேற யாருக்குமே எம் மனசுல இடம் கிடையாது தெரிஞ்சுக்கோ.''

''வாய் சொல்லலாம், ஆனா மனசு ஒரு நொடியாவது யோசிக்கும் தான?''

''ம்கூம் உன்ன...''

''சரி விடுங்க, அத ரெண்டு பேருமே மறந்துடலாம்''

''என்ன நீ, ஒன்னுமே இல்லேங்கறேன்.''

''லைஃப்ல இதெல்லாம் சகஜம் விடுங்க ஜெய்...''

''ஸ்வேதா.''

கணவனின் குரல் மாறுவதை மனதிற்குள் ரசித்தவள் ''சரி இனி வேற டாபிக் பேசலாமே'' என்றாள்.

''அப்ப என்ன நீ நம்பல?''

''வேற பேசலாம்னு சொல்லிட்டேன்.''

சை, பெரும்பாலும் பெண்கள் ஒரே மாதிரிதான் இருப்பார்கள் போலிருக்கிறதென்று மனதிற்குள் நொந்து கொண்டான் ஜெயவர்த்தன்.

சுவாரஸ்யமாகக் கேட்கிறாளே என்று மறைக்காமல் அனைத்தையும் சொன்னது தவறோ.

ஆனால் தன் ஸ்வேதா எப்படி?

''எங்க எழுந்து போற?''

''கீழே''

''ஏன்?''

''சும்மா தான்.''

''பேசிட்டிருக்கலாம்னு தான மேல வந்தோம்.''

''போரடிக்குது.''

''ஸ்வேதா நில்லு.''

''பீரோவுக்குள்ள இன்னும் நிறைய போட்டோஸ் இருக்கு எடுத்துப் பாத்துட்டிருங்க பொழுது போறதே தெரியாது.''



''ஆமாம் இது ஒன்றைப் பார்த்ததற்கே இந்தப் பிரச்சனை இனியுமா'' என்று மடியிலிருந்த ஆல்பத்தை வெறுப்புடன் எடுத்து டேபிள் மீது போட்டான்.

கீழே வந்திருந்த ஸ்வேதாவிற்கு சிரிப்பு தான் வந்தது.

பாவம் கணவன்.

மனதில் இருந்ததை மறைக்காமல் சொல்லியிருக்கிறான் அதற்குப் போய் தான் இப்படி எழுந்து வந்திருக்கக் கூடாதோ.

ஆனாலும்,

என்ன ஆனாலும்.

அதெப்படி, அவனுடைய மனதிலும் துளியாவது ஆசை இருக்கப் போய் தானே அதை சொல்லியிருக்கிறான்.

அப்படியானால் தான் கணவனை சந்தேகப்படுகிறோமா.

சேச்சே, என்னுடைய ஜெய் நல்லவன் என்பதில் எனக்குத் துளியும் சந்தேகம் கிடையாது.

பிறகென்ன அவன் சொன்னதை இத்தோடு மறந்து விட வேண்டியது தானே.

ஆமாம் அதிலென்ன சந்தேகம் என்று புன்னகையுடன் நினைத்துக் கொண்டாள்.

உடனே கிச்சனுக்கு சென்றவள், கணவனுக்கும் தனக்குமாக டீ தயாரித்து எடுத்துக் கொண்டு மீண்டும் மாடிக்கு வந்தாள்.

மனைவியைக் கண்டு கொள்ளாமல் தன் பாட்டுக்குக் கையிலிருக்கும் நாளிதழில் தொடர்ந்து கவனத்தை செலுத்தினான் ஜெயவர்த்தன்.

''டீ எடுத்துக்கோங்க.''

''உங்கள தான் ஜெய்.''

''வேண்டாம்மா.''

''ஏன்?''

''அப்புறமா...''

''ம்கூம், உங்களுக்காக நானே ஆசையாப் போட்டுட்டு வந்தேனாக்கும்'' என்றவளின் வார்த்தைகளில் உடனே எடுத்துக் கொண்டான்.

''எங்கூடப் பேச மாட்டீங்களா?''

''பேசாம என்ன.''

''அப்புறம் ஏன் கோபமா இருக்கீங்க?''

''அப்பிடியா?''

''இப்ப இல்லையா, அப்ப சரிதான்.''

.....

''நாம எப்ப ஊருக்குக் கிளம்பறது?''

''நான் இன்னைக்குக் கிளம்பறேன், நீ வேணும்னா இருந்துட்டு வா.''

ஏன் அப்படி என்று நினைத்தவளாள் அதைக் கேட்க முடிந்திருக்கவில்லை.

''ஜெய்.''

''சொல்லு.''

''ஏதாவது பேசுங்க''

''என்ன பேசணும்?''

''இப்பிடிக் கேட்டா?''

''தொடர்ந்து நாலஞ்சு, நாளா நைட் சரியான தூக்க மில்லாததால ஒரு மாதிரியிருக்குமா, குறைஞ்சது ஒரு மணி நேரத்துக்காவது என்ன எழுப்பாத'' என்று அங்



கிருந்த பெட்ருமுக்குள் சென்று கணவன் படுத்திருக்க, ஏன் தூக்கமில்லையென்று நினைத்துப் பார்த்தாள்.

முதல் நாள் தூங்காததற்கான காரணம் புரிய, முகம் இரத்தமென சிவந்து போனது.

ஆனால் என்ன இது, ஒன்றுமில்லாததற்கெல்லாம் இப்படி திடீர் திடீரென்று கோபப்பட்டுக் கொள்கிறான்.

ஆனால் இப்பொழுது தவறு தன் மீது தான் அல்லவா.

அது எப்படி.

தான் பேசியது வெறும் விளையாட்டுக்குத் தான் என்பது கூடக் கணவனுக்குப் புரியாதா என்ன.

சரிதான்.

ஆனால் இந்த மாதிரி விஷயங்களில் கூட யாராவது விளையாடுவார்களா.

மாட்டார்களோ.

சில வினாடிகள் யோசித்தவள் ''ம்கூம் நிச்சயம் மாட்டார்கள்'' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

அதுதான் கணவனுக்கும் கோபம் போலிருக்கிறது.

சிரமப்பட்டு ஒரு மணி நேரத்தைக் கடத்தியவள் சத்தம் செய்யாமல் கணவன் படுத்திருந்த அறையை எட்டிப் பார்த்தாள்.

இன்னும் நன்றாக உறங்கிக் கொண்டிருப்பது தெரிய, வெளியே வரத் திரும்பினாள்.

ஆனால் அதேநேரம் கணவன் தன்னை அழைக்க, ஆச்சரியத்துடன் மீண்டும் திரும்பினாள்.

''ஈவினிங் நான் ஊருக்குக் கிளம்பறேன்''

நான் என்றால்... அப்பொழுது தான் வேண்டாமாமா.

''ஏன்?''

''மாமாவோட மகனும் மருமகளும் இன்னைக்கு அங்க வீட்டுக்கு விருந்துக்கு வந்திருக்காங்க அதான்''

''.....''

''அன்னைக்குக் கல்யாணத்துக்குக் கூட உன்னால வரமுடியாமப் போச்சே...''

''புரியுது''

''உனக்கொன்னும் சிரமமில்லேன்னா நீயும் கிளம்பி வா''

கணவன் சொல்ல, அதற்கு என்ன பதில் சொல்வ தென்று தெரிந்திருக்கவில்லை.

குறைந்தது இரண்டு நாட்களாவது அங்கே இருப்போ மென்று ஆசையுடன் நினைத்தவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

''வர்றதா இருந்தா இப்பவே எல்லாத்தையும் தயாரா எடுத்து வெச்சுக்கோ''

''நாளைக்குக் காலைல...''

''ம், என்ன?''

''இல்ல காலைல ரொம்ப நேரத்துலயே கிளம்பிக்க லாமே''

''சரிதான், ஆனா நாம போய் சேரும்போது அவங்க கிளம்பிப் போயிருப்பாங்க.'' இப்பப் போனாலே பாக் கறது கஷ்டம் என்று தனக்குள் நினைத்துக் கொண்டான் ஜெயவர்த்தன்.

''ஒன்னு பண்ணு. நீ இருந்துக்கோ நான் மட்டும் கிளம்பிக்கறேன்''

கணவனின் வார்த்தைகளில் ஸ்வேதாவின் கண்கள் அவளையறியாமலேயே கலங்கி விட்டிருந்தன.



''என்னமா?''

''ஏன் என்ன அவாட்ய் பண்ணவே பாக்கறீங்க?''

''அங்கயும் அப்பிடிதான் பாதி நாளைக்கு மேல வெளியூர்லயே இருக்கீங்க... இப்ப இப்ப எத்தன தடவ...''

மனைவியின் ஆதங்கம் புரிய சிரிப்பு தான் வந்தது ஜெயவர்த்தனுக்கு.

இவளைப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு நாளும் தான் படும் அவஸ்தை புரிந்தால் இப்படிச் சொல்வாளா என் றிருந்தது.

பத்து நாட்கள் வெளியூரிலிருந்து பார்க்க வேண்டிய வேலைகளை நேரங்காலம் பார்க்காது நான்கு நாட்களில் முடித்துக் கொண்டு விழுந்தடித்துக் கொண்டு ஓடி வரு வதை மனைவிக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது.

''என்னால உங்களப் பிரிஞ்சு இனி ஒருநாள் கூட இருக்க முடியும்னு தோனல, என்ன... என்னால உங்களத் தவிர வேற எதையுமே இப்பெல்லாம் நினைக்க முடியல. உங்க பைத்தியம் ஆயிட்டேன்... ஆனா என்ன நீங்க...''

மனைவியின் ஆதங்கமும், அழுகையும் தன்னை என் னவோ செய்ய, அப்படியே அவளை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல மனம் துடித்தது-

ஆனாலும் மனதிலிருப்பதெல்லாம் இப்படியாவது வெளியே வரட்டுமென்று எதுவும் பேசாமல் அதாவது எதையும் காட்டிக் கொள்ளாமல் சாதாரணம் போல அமர்ந் திருந்தான்.

''எனக்கு... எனக்கு இன்னும் எப்பிடி முழுமையா சொல்றதுன்னு தெரியல ஜெய்.''

''வயித்துல உங்க குழந்தைய சுமந்துட்டிருக்கறது மட்டும் தான் உங்களுக்குத் தெரியும், ஆனா நெஞ்சுல உங்களையும்...''

லேசாக உயரத் தொடங்கியிருந்த கையை மனைவி அறியாமல் மீண்டும் கட்டுப்படுத்திக் கொண்டான்.

மனைவியின் அன்பில் உள்ளம் உருகிப் போனது.

''என்ன சகிச்சுக்கறது அவ்வளவு கஷ்டமாவா இருக்கு ஜெய்?''

மனைவி முடிக்கும்முன் அவளைத் தன்னருகில் இழுத்திருந்தான் ஜெய்வர்த்தன்.

''சொல்லு, இப்ப நான் என்ன செய்யணும்?''

.....

''பேசுடா.''

''என்ன... என்ன நீங்க அவாய்ட் பண்றீங்க.''

''நானா?''

.....

''அதெப்பிடி சொல்ற?''

''என்ன இங்கயே இருக்கச் சொல்றீங்க?''

''ம்கூம் திருத்தம், உனக்கு இருக்கனும்னு தோனுச்சுன்னா இருன்னு சொன்னேன்.''

''அப்பிடின்னா என்ன அர்த்தம்...''

''ம், என்ன அர்த்தம்?''

''என்னப் பிரிஞ்சு உங்களால இருக்க முடியும்னு தான...''

''பைத்தியம்.''

''அப்ப இல்லேன்னு சொல்றீங்களா?''

''இன்னும் ஒன்னக் கூட நீ நல்லா புரிஞ்சுக்கணும் ஸ்வேதா, ரொம்ப உரிமையிருந்தா மட்டும் தான் சண்டையே வரும்...''



''என்ன பாக்கற, எம்மேல உனக்கிருக்கற உரிமைல தான் நீ பணத்துக்காக சிரமப்படாதீங்க நானிருக்கேன்னு சொன்ன. அதே உரிமைல தான இந்த விஷயத்துல என்னக் கம்பல் பண்ணாத புரிஞ்சுக்கோன்னு நானும் சொன்னேன். ஆனா கடைசில அது எப்பிடி எப்பிடியோ ஆயிடுச்சு...''

''அப்ப நீங்க செஞ்சது சரிதான்னு நியாயப்படுத்தறீங்களா?''

''இல்லடா நான் செஞ்சது மன்னிக்கவே முடியாத பெரிய தப்புத்தான். நீ பெருந்தன்மையா மன்னிச்சுட்டதால தப்பிச்சேன். ஆனா அப்பிடி சொல்லிட்டு அதுக்கப்புறம் நான் எவ்வளவு ஃபீல் பண்ணினேன் தெரியுமா?''

''ம்கூம், நான் நம்ப மாட்டேன்''

''எங்கிட்டவும் எவ்வளவோ கெட்ட பழக்கங்கள் இருக்கலாம்மா, ஆனா பொய் சொல்லிப் பழக்கமில்ல''

''அச்சச்சோ, நான் சொன்னது என்னால நம்ப முடியலேன்னு தான்...''

''நீ கிளம்பி வந்த கொஞ்ச நேரத்துலயே உன்ன பாக்க வர்றதுக்காக நானும் கிளம்பிட்டேம்மா, ஆனா அதுக்குள்ள உங்க லோன் ஸேங்ஷனாயிடுச்சு கிளம்பி வர முடியுமான்னு கூப்புட்டாங்க. அதான் திரும்பவும் ரெண்டுநாள் வெளியூர் பயணம்''

''அதான, ரொம்ப நல்லதாப் போயிடுச்சுன்னு கிளம்பிப் போயிருப்பீங்க''

''அந்த ரெண்டு நாளும் இந்த சின்ன விஷயத்தப் போய் எதுக்காக உங்கிட்ட சொல்லி இத்தன பிரச்சனைகள ஏற்படுத்தினேன்னு மனசுக்கு ரொம்பக் கஷ்டமாப் போயிடுச்சுமா.''

''அந்த அளவுக்கு அதுக்கு முன்னாடி ஒரு நாளும் நான் ஃபீல் பண்ணினதில்ல. எந்நேரமும் ஐயோ இப்பிடிப் பண்ணிட்டோமேங்கற தவிப்பு தான், சாப்பாடு தண்ணி கூட நேரத்துக்கு எடுத்துக்கல.

அதுவரை அந்த மாதிரியொரு கோணத்தில் யோசிக்காமலிருந்த ஸ்வேதா அதற்குப் பிறகுதான் கணவனுக்குத் தான் ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி வைத்து விட்டிருந்ததை உணர்ந்தாள்.

கணவனும் பண விஷயத்தை சொல்லவே எவ்வளவு யோசித்தான்.

ஆனால் தான் அதற்கு விடாமல் திரும்பத் திரும்பக் கேட்டு, தன் அறிவிற்கு எட்டிய அளவிற்கு அதற்குத் தீர்வாகத் தோன்றிய ஒன்றை செய்யச் சொல்லி வற்புறுத்தி, கணவனின் தன்மானத்தை சோதித்தது வரை எவ்வளவு பிரச்சனைகளை இழுத்து வைத்து விட்டிருக்கிறோம் என்றிருந்தது.

''என்னடா?''

''ரொம்ப ஸாரி ஜெய், நான் ரொம்பப் பெரிய தப்பு தான் பண்ணியிருக்கேன்''

''இல்லடா, எல்லாமே அதிகபட்ச உரிமைகளால வந்த வேதனை, இத இத்தோட மறந்துடலாம். திரும்பத் திரும்ப அதையே நினைச்சு மனச ஏன் கஷ்டப்படுத்திக்கணும் சொல்லு.''

''ஆனாலும் பட்ட வேதனை...''

''வேண்டான்டா, அது முடிஞ்சு போன கத.''

.....

''ஸ்வேதா.''

கணவனின் அழைப்பில் நடப்பிற்கு வந்தவள், ஆனாலும்...



''என்னடா?''

''நேத்து உங்களக் கண் கலங்க வெச்சுட்டேன் ஜெய்...''

''அது உன் அன்போட வலிமை'' என்று மெல்லிய புன்னகையுடன் பார்த்த கணவனை, ''அப்ப அதுக்காக நீங்க வருத்தப்படலயா?'' என்று நம்ப மாட்டாதவளாய்க் கேட்டாள்.

''வருத்தமா?...'' என்று மனைவியை அருகில் இழுத்துத் தனது ைகைகளுக்குள் கொண்டு வந்திருந்தவன், அவளுடைய கண்களையே ஊடுருவிப் பார்த்தான்.

சும்மாவே கிரங்கிப் போய்க் கிடப்பவளால் கணவனின் அந்தப் பார்வையை சுத்தமாக எதிர்கொள்ள முடியாது போயிற்று.

''ஸ்வேதா.''

''ம்.''

''என்னாலயும் உன்ன ஒரு நாள் கூடப் பிரிஞ்சிருக்க முடியாதுடா, எப்பவும் உங்கூடவே.''

.....

கணவனின் பார்வையில் கண்கள் சொக்கிப் போன ஸ்வேதா அவனுடைய மார்பிலேயே முகம் புதைந்திருக்க, ஜெயவர்த்தன் அவளை இதமாய் அணைத்துக் கொண்டான்.

அப்படியே வெகுநேரம் மனைவியைத் தனது அணைப்பிற்குள் வைத்துக் கொண்டிருந்தவனுக்கு, உடல் மனமெங்கும் ஒரு இதம் பரவ அப்படியே மனமும் லேசாகிப் போனது.

கணவனிடம் அசைவு தெரிய, துளியும் விலக மனமில்லாமல் மேலும் இறுக அணைத்துக் கொண்டாள் ஸ்வேதா.

# 30

சிறிது நேரத்தில் பாலகிருஷ்ணன் வீட்டிற்குள் வரவும், அவருடைய மகளும் மருமகனும் மாடியிலிருந்து இறங்கி வரவும் சரியாக இருந்தது.

மகளிடம் தெரிந்த முகச் சிவப்பும், மருமகனிடம் தெரிந்த அந்த லேசான பெருமித உணர்வும் அவருக்கு மிகுந்த மன நிம்மதியைக் கொடுத்திருந்தன.

''வாங்க மாமா''

''வரலாம் மாப்ள'' என்ற தந்தையிடம் ''என்ன டாடி எல்லாரையும் பாத்தீங்களா, நல்லார்க்காங்களா?'' என்று கேட்டாள் ஸ்வேதா.

''ஆமாம்மா, எல்லாரும் உங்க ரெண்டு பேரையும் ரொம்பக் கேட்டதா சொன்னாங்க. சாயங்காலம் பாக்க வருவாங்கன்னு நினைக்கறேன்''

''அப்புறம் நாங்க இன்னைக்குக் கிளம்பலாம்னு இருக்கோம் மாமா'' என்றவனை பாலகிருஷ்ணன் பார்க்க, விஷயத்தைச் சொன்னான் ஜெயவர்த்தன்.

''சரிதான் அப்பக் கிளம்பறது தான் நியாயம், சாயங்காலம் கிளம்பினாப் போதுமில்லீங்களா?''

''ஆமாம் மாமா அஞ்சு மணிக்குக் கிளம்பினாப் போதும்.''

''அப்புறம் ஸ்வேதாம்மா...''

''என்ன டாடி?''

''அங்க போனதும் அத்தைய அழைச்சுட்டு இன்னொரு தடவ டாக்டர்கிட்டப் போய்ட்டு வந்துடுமா.''



''நிச்சயம் மாமா, நான் அழைச்சுட்டுப் போய்ட்டு வந்துட்றேன்'' என்று தானும் சொன்னான் ஜெயவர்த்தன்.

சொன்னது போல மாலை கணவனுடன் புகுந்த வீட்டிற்கு கிளம்பினாள் ஸ்வேதா.

வீட்டை விட்டுக் கிளம்பி சில நிமிடங்கள் சென்றிருக்க, காரை ஓட்டுவதில் கவனமாக இருந்தான் ஜெயவர்த்தன்.

ஏதோ சொல்வதற்காகக் கணவனைத் திரும்பிப் பார்த்தவள் பிறகு அவன் செல்லும் பாதையில் கவனமாக இருப்பது தெரிய வேண்டாமென்று திரும்பிக் கொண்டாள்.

''என்ன சொல்லு?''

''இன்னும் கொஞ்சம் தான் வேகமாப் போறது?''

''ம்கூம், வேணும்னா இன்னும் கொஞ்சம் மெதுவாப் போறேன்.''

''ஏனோ?''

''இப்ப நீ இருக்கற கண்டிஷனுக்கு ஸ்பீட் வேண்டாம்.''

''என்ன கண்டிஷன்?''

அப்படிக் கேட்ட மனைவியைத் திரும்பிப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''என்ன ஸார் பாக்கறீங்க?''

''வேண்டாம்''

''என்ன வேண்டாம்?''

''இந்தப் பார்வை தான்.''

''ஏனோ?''

''அப்புறம் ஸ்பீட் கன்ட்ரோல்லயே இல்லாமப் போயிடும்'' என்று கணவன் சொன்ன பாவனையில் சிரித்தாள் ஸ்வேதா.

''இன்னும் எவ்வளவு தூரமிருக்கு?''

"ஏழு மணிக்கு போய் சேந்துடலாம்" என்றவன் "அம்மா ரொம்ப சந்தோஷப்பட்டுட்டிருப்பாங்க" என்றான்.

கணவன் எதை சொல்கிறான் என்பது புரிய "சொல்லிட்டீங்களா?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"ஆமாம்மா, மதியம் பேசினப்ப சொன்னேன்."

"என்னடா?"

"அத்தெ என்ன சொன்னாங்க?"

"ரொம்ப சந்தோஷப்பட்டாங்க, உங்கிட்டப் பேசணும்னு சொன்னாங்க."

"அப்ப எங்கிட்ட ஏன் சொல்லல?"

"இன்னைக்கு ஊருக்கு வந்துடுவோம். நேர்லயே பேசிக்கோங்கன்னு சொல்லிட்டேன். அப்புறம் இன்னொரு விஷயம்மா, மாமாவோட மகனும் மருமகளும் ஏதோ ஒரு அவசர வேலைன்னு கிளம்பிட்டாங்களாம். அப்பிடிப் பாக்காத எனக்கே இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் போன் வந்தது" என்றவன் "என்னடா?" என்றான்.

"ஒன்னுமில்ல விடுங்க" என்ற மனைவியிடம் "எப்பிடியிருந்தாலும் இன்னைக்கு நைட் பிஸினஸ் விஷயமா ஒருத்தரப் பாக்க வேண்டியதிருக்கு, அதனால, கிளம்பி வந்ததும் நல்லதா தான் போயிடுச்சு" என்றான்.

இருவரும் வீட்டை வந்தடைந்த போது அனைவரும் வீட்டில் தான் இருந்தார்கள் கணவன் சொன்னது போல அவனுடைய மாமன் மகனும் மருமகளும் ஒரு அவசர வேலையென்று கிளம்பி விட்டிருந்ததாகச் சொன்னார்கள்.

"வா கண்ணம்மா"

அத்தை சந்தோஷமாக வரவேற்க, தாயையே பார்ப்பது போன்ற உணர்வில் உள்ளம் பூரித்துப் போனாள் ஸ்வேதா.



"எப்படியிருக்கீங்க அத்தெ?"

"எனக்கென்ன கண்ணம்மா நல்லார்க்கேன். அப்புறம் சந்தோஷமான விஷயம் கேள்விப்பட்டேனே அப்பிடியா."

அத்தையின் கேள்வியில் வெட்கத்துடன் ஆமாமென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் ஸ்வேதா.

அதேநேரம் கணவன் ஜெயவர்த்தனும் தங்களை நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிய, மேலும் சற்று அதிகமாகவே.

தனது அத்தையைத் தொடர்ந்து, வீட்டு உறுப்பினர்கள் அனைவருமே விஷயம் கேள்விப்பட்டு (அதாவது இந்துமதியையும் பத்மினியையும் தவிர) நலம் விசாரிக்க தன்னால் முடிந்த அளவு இயல்பாக பதில் சொன்னாள்.

ஆண்களைத் தொடர்ந்து பத்மினியும், இந்துமதியும் தங்களுக்குள் ஏதோ மும்முரமாகப் பேசிக் கொண்டே அங்கே வர இயல்பாகப் புன்னகை செய்தாள்.

சில நாட்களுக்குப் பிறகு பார்ப்பதால் இயற்கையிலேயே அமைந்து விட்டிருந்த மென்மையான சுபாவம் ஸ்வேதாவை அப்படிச் செய்ய வைத்திருந்தது.

"வா, இப்பதான் வர்றியா?" என்று இந்துமதி கேட்க "ஆமாம்கா எப்பிடியிருக்கீங்க?" என்று கேட்டாள்

"நல்லார்க்கேன். அப்புறம் அத்தெ சொன்னாங்க உனக்கு உடம்புக்கு ஒன்னும் பிரச்சனையில்லையே"

"இல்ல, நல்லார்க்கேன்"

"எப்ப கன்ஃபார்ம் ஆச்சு?"

இந்துமதிக்கு பதில் சொல்லிக் கொண்டே, அங்கிருந்த பத்மினியையும் ஸ்நேக பாவத்துடன் பார்த்துப் புன்னகைத்தாள்.

ஆனால் அவளோ அதைக் கண்டும் காணாதது போல அங்கிருந்து சென்று விட்டிருக்க, ஸ்வேதாவின் மென்மையான முகம் அனிச்ச மலர் போல வாடி விட்டிருந்தது.

ஆனாலும் அதை மற்றவர்கள் அறியாத வண்ணம் மறைத்துக் கொண்டாள் என்றாலும், அது ஜெயவர்த்தனின் கவனத்தில் படத் தவறவில்லை.

இந்துமதியை அவளுடைய கணவன் அழைத்ததில் ''இதோ வர்றேன்'' என்று அவளும் செல்ல, தானும் அங்கிருந்து நகரப்போனாள்.

''ஹாய் அண்ணி!?''

''லாவண்யா, வா வா எப்பிடியிருக்க?''

''அத நான் கேக்கணும், நீங்க எப்பிடியிருக்கீங்க?''

''நல்லார்க்கேன்''

''அப்புறம் குட்டிப் பாப்பா'' என்று புன்னகையுடன் லாவண்யா தனது வயிற்றைத் தொட்டுக் கேட்க லேசான வெட்கத்துடன் ''அதுவும் ஃபைன்'' என்றாள்.

''எவ்வளவு சந்தோஷமான விஷயம், எப்ப ட்ரீட் தரப் போறீங்க?''

''தந்துட்டாப் போச்சு.''

''அதான் எப்ப?''

''கரெக்டா சொல்லணும்னா உன் அண்ணாகிட்ட தான் கேக்கணும்''

''அது சரி, அண்ணாகிட்ட ஒரு கேள்வி கேட்டு பதில் வர வைக்க முடியுமா அதுவும் என்னால ம்கூம். ஏன் அண்ணி அன்னைக்கு திடீர்னு ஊருக்குக் கிளம்பிப் போய்ட்டீங்க?''

''அதுவும் அன்னைக்கு காலேஜ்ல இருந்து என் ஃப்ரண்ட்ஸையெல்லாம் கூட்டிட்டு வந்திருந்தே...''



''ம், இப்பிடிக் கேள்வி மேல கேள்வி கேட்டுட்டிருந்தா அப்புறம் சொல்லாம தான் போகணும்'' என்று ஜெயவர்த்தனும் வர ''ம் சொல்ல மாட்டீங்க அன்னைக்கு நீங்களும் இல்லாம அண்ணியும் இல்லாம ரொம்பக் கஷ்டமா இருந்தது எனக்குதான தெரியும்?'' என்றாள்.

''அடடா, பாவம் லாவண்யா குட்டி இனிமேல் சொல்லிட்டே போறேன் சரியா?''

''ம்கூம், இனிமேல் நீங்க போகவே கூடாதாக்கும்''

''அதுசரி, நான் எங்கடா காலேஜ்ல இருந்து வந்தவளையே காணமேன்னு பாத்துட்டிருக்கேன். நீ இங்கே வந்து வாயடிச்சுட்டிருக்கியா?'' என்று மகளிடம் கேட்டுக் கொண்டே சூடான மசாலா வடைகள் அடங்கிய ப்ளேட்டுகளுடன் அங்கு வந்தார் காஞ்சனா.

வந்தவர் மகனுக்கும் மருமகளுக்கும் முதலில் கொடுக்க, தானும் ஒரு ப்ளேட்டை எடுத்துக் கொண்டாள் லாவண்யா.

''வந்து கை கால் கூட அலம்பாம என்ன லாவண்யா இது?''

''அண்ணி இப்பதான ஊர்ல இருந்து வந்திருக்காங்க, கொஞ்சம் பேசிட்டு குளிக்கப் போறேன் விடுங்களேன்மா.''

''சரிதான் அதையாவது செய்'' என்றவள் ''என்ன ஸ்வேதாம்மா டேஸ்ட் நல்லார்க்கா?'' என்று மீண்டும் மருமகளிடம் வந்தார்.

''பிரமாதமா இருக்கு அத்தெ''

இப்பொழுது லாவண்யா அரட்டைக்குத் தனது அண்ணனைப் பிடித்துக் கொண்டு விட்டிருக்க, ஆசையுடன் ஸ்வேதாவைப் பார்த்தார் காஞ்சனா.

''எனக்கு அப்பவே சந்தேகமா தான் இருந்தது'' என்ற அத்தையின் வார்த்தைகளில் ''என்ன அத்தெ?'' என்றாள்.

"நல்லா இருந்த பொண்ணு திடீர்னு உடம்பு மெலிஞ்சு சோர்ந்து சோர்ந்து போயிட்றையே நல்ல விஷயமா தான் இருக்கும்னு அப்பவே நினைச்சேன். சரியா தான் போயிடுச்சு" என்றார்.

"வாந்தி, மயக்கம் இருக்குதா கண்ணம்மா?"

"ஆமாம் அத்தை, ரொம்பவே"

"சரி தான், இனி நீ எந்த வேலையும் செய்யக் கூடாது. சில மாசங்களுக்கு நல்ல ரெஸ்ட் எடு" என்ற அத்தையின் அக்கறை கலந்த வார்த்தைகளில் காலையில் தான் தந்தையிடம் சொன்னது தான் நினைவிற்கு வந்தது.

"என்ன உன் அம்மா மாதிரி நினைச்சுக்கோ ஸ்வேதாம்மா. எதுவானாலும் தயங்காமக் கேளு. இந்த சமயத்துல வாய்க்குப் புடிக்கற மாதிரி எதையாவது சாப்பிடலாம்னு தோனும். என்ன சாப்பிடத் தோனுதோ சொல்லு செஞ்சு தர்றேன்"

"நிச்சயமா அத்தெ"

"இந்த சமயத்துல சந்தோஷமா இருக்கறதும் ரொம்ப முக்கியம். இவன் ஏதாவது சொன்னாலும் எங்கிட்ட சொல்லு நான் பாத்துக்கறேன்" என்று கணவனைக் குறிப்பிட்டு அத்தை சொன்ன விதத்தில் சிரிப்பு தான் வந்தது.

"குளிச்சுட்டு வந்துட்றேன் அண்ணி" என்று லாவண்யா அங்கிருந்து நகர, "என்ன என் தலை உருளுது?" என்று அவர்களை நோக்கித் திரும்பினான் ஜெயவர்த்தன்.

"அத்தெ உங்களப் பத்தி பெருமையா சொல்லிட்டிருந்தாங்க" என்று ஸ்வேதா புன்னகையுடன் சொல்ல "அம்மா தான சொல்லியிருப்பாங்க" என்றான்.

"அப்புறம் கண்ணா..."

"என்னம்மா சொல்லுங்க?"



"யாரோ உன் ஃப்ரண்டாம்பா, பேர் கூட ம் சுமிதான்னு சொன்னா. நம்ம வீட்டு போனுக்கு நேத்து அழைச்சிருந்தா."

"நேத்துன்னா எப்ப?"

"நேத்துக் காலை, நீ ஊருக்குப் போயிருக்கறதா சொன்னேன். சரிதான்னு உங்கிட்டயே பேசிக்கறதா உன்னோட மொபைல் நம்பர மட்டும் வாங்கிக்கிட்டாப்பா"

"சரிதான்மா" என்ற கணவனை கண்களில் சிரிப்புடன் பார்த்தாள் ஸ்வேதா.

"அத்தெ"

"பெரிய மருமகள் பத்மினி வர "என்னமா?" என்றார்.

"நானும் அவரும் வெளிய போய்ட்டு வர்றோம். பாப்பாவ பாத்துக்கோங்க" என்று குழந்தையை அத்தையிடம் கொடுத்தவளை அப்பொழுதாவது பேசுவாளா என்பதைப் போல ஆவலுடன் பார்த்தாள் ஸ்வேதா.

ஆனால் பத்மினி ஸ்வேதாவின் பக்கமாகக் கூடத் திரும்பினால் அல்லவா.

"சரிமா போய்ட்டு வாங்க" என்று குழந்தை தன்பாவை வாங்கிக் கொண்ட காஞ்சனா, அதற்கு விளையாட்டுக் காட்டி சிரிக்க வைத்தார்.

சில வினாடிகளில் "அடடா அடுப்புல பாத்திரமிருக்கு மறந்தே போயிட்டேன் புடிமா" என்று ஸ்வேதாவிடம் குழந்தையை கொடுத்து விட்டு அங்கிருந்து சென்றார்.

சும்மாவே குழந்தையென்றால் சொல்லத் தேவையில்லை, அவ்வளவு பிடிக்கும்.

இப்பொழுது குழந்தை அவளைப் பார்த்துத் தனது பொக்கை வாயைக் காட்டி அழகாக சிரிக்க, தன்னை

மறந்து ஆசையுடன் அதனுடன் விளையாடத் தொடங்கி விட்டிருந்தாள் ஸ்வேதா.

''அண்ணி.''

''வா லாவண்யா.''

''ஹாய் குட்டிப்பாப்ப, எங்கிட்ட வா.''

லாவண்யா குழந்தையை நோக்கித் தனது கைகளை நீட்டி அழைக்க, அது மேலும் அதிகமாக ஸ்வேதாவிடம் ஒட்டிக் கொண்டது.

''ஏய் குட்டிப்பாப்பா, அவங்களுக்கும் ஒரு குட்டிப் பாப்பா வரப் போகுது தெரியுமா? அதுக்கப்புறம் உன்னக் கண்டு...''

''ம்கூம் நீ என்ன தாஜா பண்ணினாலும் அவ வரமாட்டா.''

''வாவ், எப்பிடி அண்ணி உங்கள இந்த அளவுக்கு ஞாபகம் வெச்சிருக்கா?''

''லாவண்யா.''

''என்னமா?''

''கொஞ்சம் தோட்டம் வரைக்கும் போய்ட்டு வர முடியுமா?''

''என்ன சொல்லுங்க?''

''அங்க வேல செஞ்சுட்டிருக்கறவங்களுக்கு இந்த ஃப்ளாஸ்க்ல டீ இருக்கு கொண்டு போய்க் குடுத்துட்டு வந்துட முடியுமா?''

தனது மொபைலுக்கு வந்த அழைப்பை பேசி முடித்து விட்டு மொபைலை பாக்கெட்டில் வைத்துக் கொண்டே திரும்பினான் ஜெயவர்த்தன்.

''எதுக்கு தோட்டத்துக்கு?''



காஞ்சனா விஷயத்தை சொல்ல, ''இந்நேரத்துக்கு அவள எதுக்கு அனுப்பறீங்க கொடுங்க நான் போய்ட்டு வர்றேன்'' என்றான்.

''வேண்டாம்னா இதையெல்லாம் நீங்க ஏன் செய்யறீங்க?'' என்று மறுத்து விட்டிருந்த லாவண்யா தாயின் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டு கிளம்பியே விட்டிருந்தாள்.

''என்னமா நீங்க, இந்த நேரத்துல அதுவும் இந்த மாதிரி வேலைகளுக்கெல்லாம் லாவண்யாவை ஏன் அனுப்பறீங்க, இனிமேல் இந்த மாதிரி செய்யாதீங்க''

மகனின் பேச்சிலிருக்கும் நியாயம் புரிய, எதுவும் பேசாமல் அவனைப் பார்த்தார்.

''என்னமா நான் பாட்டுக்கு சொல்லிக்...''

''சரிதான்பா இனிமேல் இல்ல'' என்ற காஞ்சனா ''குழந்த உங்கிட்ட நல்லா ஒட்டிக்கிட்டாளா?'' என்று மருமகளைப் பார்த்தார்.

''ஆமாம் அத்தெ'' என்றவளிடம் ''ஒரே நிமிஷம் கண்ணம்மா'' என்று மீண்டும் சமையலறைக்குச் சென்றார்.

''என்ன ஒசியில குழந்த சுமக்கறியா?'' என்று கேட்டான் ஜெயவர்த்தன்.

பத்மினியின் குழந்தையென்பதால் தான் அவன் அப்படிக் கேட்டதும்,

அது ஸ்வேதாவிற்கும் புரியவே செய்தது.

அது மட்டுமல்லாமல் பத்மினி தான் ஏதோ அவளுக்கு துரோகம் இழைத்து விட்டதைப் போலக் குரோதத்துடன் பார்த்ததும் அப்பொழுது பார்த்து நினைவிற்கு வந்தது.

ஆனாலும் அதற்கெல்லாம் இந்தப் பச்சை மண் என்ன செய்யுமாம்.

''உன்னைத் தான் ஸ்வேதா, ஓசில குழந்த சுமக்கறியா?''

''நீங்க எதக் கேக்கறீங்க?''

மனைவியின் கேள்வியில் கண்களை சுருக்கி அவளைப் பார்த்தான், எதுவும் பேசாமல் தான்.

கணவனின் பார்வை தன்னை ஏதோ செய்ய கவனம் முழுவதும் குழந்தையிடம் இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டாள்.

''ஓ, அப்ப...''

கணவன் என்ன கேட்க வருகிறானென்பது புரிய, ''ப்ளீஷ் ஜெய் சும்மா விளையாட்டுக்குத் தான் அப்பிடிக் கேட்டேன் விட்டுடுங்க'' என்றாள்.

''இப்ப விட்றேன்...''

கணவனின் வார்த்தைகளும், பார்வையும் தன்னை என்னவோ செய்ய என்னதான் விளையாட்டுக்காக என்றாலும் தான் அப்படி சொல்லியிருக்கக் கூடாதோ என்று நினைக்கத் தோன்றியது.

''சரிமா நான் தோட்டத்து வரைக்கும் போய்ட்டு வந்துட்றேன்'' அப்படியே வெளிய ஒரு வேலையிருக்கு அதையும் முடிச்சுட்டு வந்துட்றேன்''

கணவன் சொல்ல ''சரிங்க'' என்றாள்.

''பாத்து, குழந்தையையும் தூக்கிட்டு எவ்வளவு நேரம் நிப்ப உக்காரு'' என்று போகிற போக்கில் சொல்லி விட்டுப்போன கணவனின் வார்த்தைகளில் பெருமையாக உணர்ந்தாள் ஸ்வேதா.

ஒருவர் விடாமல் அனைவரிடமும் விளையாட்டுப் போல தனது அக்கறையைக் காட்டி விடுகிறானே, அதே போலக் கண்டிப்பையும்.



அதுவும் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதைப் போல.

இப்பொழுது கூடத் தங்கைக்காத் தான் கணவன் தோட்டத்திற்குச் செல்கிறானென்பது அவளுக்குப் புரியாமலில்லை.

யார் எப்படிப் போனால் தனக்கென்னவென்று தான் தோன்றியாக இருந்து விடாமல் எவ்வளவு பொறுப்பாக நடந்து கொள்கிறான்.

சரிதான். இப்படிப்பட்ட ஒரு உண்மையான கம்பீரமான ஆண் மகனைத் தான் கணவனாக அடைய நிச்சயம் கொடுத்து வைத்திருக்கத்தான் வேண்டுமென்று புன்னகையுடன் நினைத்துக் கொண்டாள்.

ஸ்வேதா அப்படி நினைத்துக்கொண்டிருக்க அதே நேரம் ஜெயவர்த்தனும் மனைவியைப் பற்றித் தான் எண்ணிக் கொண்டிருந்தான்.

பத்மினி அன்று அவ்வளவு பேசிய பிறகும் கூட அவர்களுடைய குழந்தையை ஆசையாகத் தூக்கிக் கொண்டாளே.

அதுவும் அன்று பத்மினி பேசிய வார்த்தைகளுக்கு இதுவே மனைவியின் இடத்தில் வேறொரு பெண் இருந்திருந்தால் எவ்வளவு வெறுப்புடனும் கோபத்துடனும் நடந்து கொண்டிருப்பாள்.

ஏன் பத்மினியை ஒரு பொருட்டாக மதிக்காததோடு, அவள் இருக்கும் பக்கமாகக் கூடத் திரும்பிப் பார்த்திருக்க மாட்டாளே.

ஆனால் மனைவி.

பத்மினி பேசியதனைத்தையும் மறந்து விட்டிருந்ததும் அல்லாமல், மீண்டும் அவளிடம் ஆசையுடன் பேச வேறு முயன்றாளே.

இப்படிப்பட்ட பெண் மனைவியாக அமையப் போன பிறவியில் தான் என்ன தவம் செய்திருக்க வேண்டுமோ என்றிருந்தது.

அதற்கு மேலும் அனைவரிடமும் எவ்வளவு ப்ரியமாகவும், அன்பாகவும் நடந்து கொள்கிறாள்.

அதுவும் தன்னிடம்.

முதல் நாள் இரவு நடந்தது தான் அவனுக்கு அப்பொழுது நினைவிற்கு வந்தது.

நானிருக்கிறேன் என்று கள்ளம், கபடமறியாமல் மனைவி சொன்ன வார்த்தைக்கு தான் கற்பித்துக் கொண்ட பொருள்.

வேண்டாம் மனமே.

போனது போனதாகவே இருக்கட்டும்.

மனைவியே அதை அன்பெனும் அஞ்சனத்தால் அழித்து விட்டதற்குப் பிறகு தானும் அதை மறந்து விடுவதில் தவறு ஒன்றுமில்லையே.

என்ன மனைவியின் அந்த அன்பு ஒரு நாளும் விஷமாக மாறாமல் அல்லது மாற்றிவிடாமல் தான் பார்த்துக் கொண்டால் அதுவே போதுமானது.

ஆனாலும் மனதின் ஒரு மூலையில் இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித கலக்கம் சூழ்ந்து கொண்டதைப் போல அதுவும் ஒரு சில வினாடிகள் தான் உணர்ந்தான் ஜெயவர்த்தன்.

வாழ்க்கையிலேயே முதல் முறையாக முதல் நாள் இரவு தன்னைப் பார்த்தது போல மனைவியின் பார்வை ஒருநாளும் தன்னை வெறுப்பாகப் பார்க்கக் கூடாது. அவளுடைய மனதை விளையாட்டிற்குக் கூடத் தான் புண்படுத்தி விடக் கூடாது என்றெல்லாம் மனதார கடவுளை வேண்டிக் கொண்டான்.



ஆனால் பாவம் அந்த ஆத்மார்த்தமான கணவன் மனைவியின் நியாயமான ஆசைகள் பொய்த்து விடப் போவதைப் பாவம் அவர்கள் இருவருமே அப்பொழுது அறிந்திருக்கவில்லை.

## 31

தொடர்ந்து வந்த இரண்டு மணி நேரங்களில் இரவு உணவு முடிய, தானும் தனது அத்தைக்கு அனைத்து வேலைகளிலும் உதவினாள் ஸ்வேதா.

''இது எதுக்கு அத்தெ?''

''அத மட்டும் நறுக்கி எடுத்து ஃப்ரிட்ஜ்ல வெச்சுட்டா, காலைல சீக்கிரம் வேலையாகும்மா''

''நான் நறுக்கறேன்...''

''வேண்டாம் கண்ணம்மா, அதையெல்லாம் நான் பாத்துக்குவேன் நீ போய் உக்காரு''

''அம்மா'' என்று அழைத்துக் கொண்டே ஜெயவர்த்தன் வர, ''வாப்பா'' என்றார்.

''நீ வந்த மஹிமை, உன் வீட்டுக்காரர் சமயல்கட்டு பக்கமெல்லாம் வர்றார் ஸ்வேதாம்மா. இந்த வீட்ல இப்பிடியொன்னு இருக்குன்னு இத்தன நாளும் ஐயாவுக்குத் தெரியுமான்னு இருந்தேன்''

தாயின் கேலி புன்னகையை வரவழைத்திருக்க, ''ம் எல்லாம் என் பொண்டாட்டிய எப்பிடி கொடுமப்படுத்திட்டிருக்கீங்கன்னு பாக்க தான் வர்றேன் வேறென்ன?'' என்றான்.

''பாத்ததுல என்ன தெரிஞ்சுக்கிட்ட?''

''ஐயோ பாவம் இந்த அசட்டு அம்மாவ அப்பிடியெல்லாம் நினைக்கக் கூடாதுன்னு தெரிஞ்சுக்கிட்டேன்''

''ஏதோ இப்பவாவது தெரிஞ்சதே''

''அதே மாதிரி இவ ஏதாவது உங்கள கொடுமப்...''

மகன் சொல்ல வருவது புரிய, ''நீ ஒன்னும் பேசாத போடா'' என்றார்.

''அட என்னமா திடீர்னு கோபம்?''

''பின்ன நீ இன்னும் கொஞ்ச நேரம் இங்கிருந்தா நிஜமாவே எங்க ரெண்டு பேருக்குள்ளயும் சண்ட வர வெச்சுடவ போலிருக்கே''

தாய் கேட்க ''என்னடா நான் அப்படிப்பட்டவனா?'' என்று மனைவியைப் பார்த்துக் கேட்டான்.

''அச்சச்சோ, நீங்க அப்பிடியெல்லாம் செய்யவே மாட்டீங்களாக்கும்'' என்று அடித்துச் சொன்னாள் ஸ்வேதா.

''அதுசரி, விட்டாக் கடைசில புருஷன் பொண்டாட்டி ரெண்டு பேரும் என்னக் கூட யாருன்னு கேட்ருவீங்க'' என்ற காஞ்சனா ''சொல்லுப்பா என்ன விஷயம்?'' என்றார்.

''நாளைக்குக் காலைல செக்கப்புக்கு ஸ்வேதாவ ஹாஸ்பிட்டலுக்கு அழைச்சுட்டு போகணும்மா. நேரத்துல போய்ட்டு வந்துட்டா மதியத்துக்கு மேல எனக்கு வேற வேலையிருக்கு பாக்க சவுகர்யமா இருக்கும்''

''சரிதான்பா ஒன்பது மணிக்கு கிளம்பிட்றேன், போய்ட்டு வந்துடலாம்''

''சரி நாம கிளம்பலாமா?''

கணவன் கேட்க ''எங்க?'' என்றாள்.

''தோட்டத்துக்கு தான்.''

''எதுக்குங்...''



''எல்லாத்தையும் இங்கையே நின்னு கேட்டுட்டிருந்தா எப்பிடி, முதல்ல கிளம்பு''

''அப்புறம் கண்ணா...''

''என்னமா?''

''ஒன்னுமில்லப்பா...''

''என்னமா சொல்லுங்க?''

''இல்ல... பணம் கொஞ்சம் வேணும்...''

''இந்த சின்ன விஷயத்துக்கு ஏம்மா இவ்வளவு தயக்கம், எவ்வளவு வேணும் சொல்லுங்க?''

''இல்லப்பா கல்யாணத்துக்கு முன்னாடி தான் எல்லாத்தையும் நீயே பாத்துட்டிருந்த இப்பவும்...''

''இப்பவும் நான் உங்க மகன் தான், விஷயத்துக்கு வாங்க''

''எனக்கு கண் ஆபரேஷன் செய்ய வேண்டியது வரும்னு நினைக்கறேன்பா, அதுக்கு தான்...''

''செக்கப் போய்ட்டு வந்துட்டீங்களா?''

''இன்னும் இல்ல...''

''சரிதான்மா நாளைக்கு ஸ்வேதாவுக்கு பாத்துட்டு வந்துட்டு அதுக்கு அடுத்த நாள் போய் உங்களுக்கு பாத்துட்டு வந்துடலாம்''

''அதுக்கெல்லாம் நான் உங்கபபாவ அழைச்சுட்டு போய்க்கறேன், பணமும் உங்க அப்பாகிட்டயே இருக்கும்பா, ஆனாலும் எதுக்கும் இருக்கட்டும்னு தான் உங்கிட்டயும் ஒரு வார்த்த கேட்டு வைக்கறேன்.''

''நல்லாக் கேட்டீங்கமா, கல்யாணச் செலவு, தோட்டத்துக்குக் கூலி, அது இதுன்னு அவருக்கும் இந்த வருஷம் செலவுகள் ரொம்ப அதிகம். அதனால நீங்க அவருகிட்ட

எதுவும் கேக்க வேண்டாம் எப்பன்னு மட்டும் சொல்லுங்க நானே தர்றேன்''

அதுசரி, அனைத்துக் கல்யாண செலவுகளையும் ஏற்றுச் செய்தது நீதான் என்று நினைத்துக் கொண்டவரால் அதை மகனிடம் சொல்ல முடிந்திருக்கவில்லை.

பிறகு அதற்கென்ன என்று மீண்டும் மனம் சங்கடப்படுவானென்று பேசாமல் இருந்து விட்டார்.

பெரிய மகன்கள் இருவரும் எங்கே தங்களிடம் கேட்டுவிடுவார்களோ என்று அதற்கு முன்பே தயாராக பஞ்சப்பாட்டு பாடி ஒவ்வொரு முறையும் தப்பித்துக் கொள்ள, இவன் தானாகவே வந்து அனைத்துச் சுமைகளையும் தனது தோளில் தாங்கிக் கொள்கிறானே என்று தாய் மனம் தவித்தது.

அது மட்டுமா.

மற்றவர்களை ஒரு வார்த்தை குறை சொன்னாலும் அதை காதில் வாங்கிக் கொள்ளாமல், அவர்களுக்கு அவர்களுடைய குடும்பம் இருக்கிறதே என்று முடித்து விடுகிறானே.

அப்படிப் பார்த்தால் இவனுக்கும் தானே இப்பொழுது தனியாக குடும்பம் ஆகிவிட்டது. இன்னும் சில மாதங்களில் குழந்தையும் வந்து விடும்.

எது எப்படியோ மகனுக்கேற்ற மகராசி தான் மனதிற்குள் ஆதங்கத்துடன் நினைத்துக் கொண்டார்.

''தயவுசெஞ்சு இனிமேல் கேவலம் பணத்துக்கா இந்த அளவுக்குக் கெஞ்சாதீங்கம்மா.''

''அதுக்கில்லப்பா...''

''சிரமப்படாதீங்கமா விடுங்க'' என்றவன் மனைவியிடம் ''கிளம்பலாமா?'' என்றான்.



''தன்ன நம்பியிருக்கற குடும்பதத அது பெத்தவங்க, கூடப் பிறந்தவங்க, பொண்டாட்டி, புள்ளைங்கன்னு யாரா இருந்தாலும் அவங்களுக்கொரு தேவையோ, கஷ்டமா வந்தா கேக்கறதுக்கு முன்னாடியே உதவறவன் தான் ஆம்பள. அப்படியிருக்கும் போது அத நான் செய்ய மாட்டேன்னு முடிவு பண்ணிட்டீங்களா?''

''அச்சச்சோ...''

''சரிமா இனியொரு தடவ இப்படித் தயங்காதீங்க'' என்றவன் ''வர்றோம்மா'' என்று மனைவியுடன் கிளம்பி விட்டிருந்தான்.

கணவனின் ஆதங்கத்தை ஸ்வேதாவால் முழுமையாய்ப் புரிந்து கொள்ள முடிந்தது.

அதே சமயம் தனது அத்தையின் மீதும் தவறு இருப்பது போல அவளுக்குத் தோன்றவில்லை.

சில நிமிடங்களில் இருவரும் தோட்டத்திற்கு வந்து சேர்ந்திருந்தனர்.

''என்ன பாக்கற?''

போனமுறை அங்கு வந்த போது நடந்தது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது ஸ்வேதாவிற்கு.

''ஒன்னுமில்ல''

சரிதான் என்று கணவன் சிரிக்க, அதுதானே இவனிடம் ஒன்றை மறைக்க முடியுமா என்றிருந்தது.

''மனச திடப்படுத்திக்கோ, உள்ள நிறைய சந்தோஷ அதிர்ச்சிகள் காத்திருக்கு''

''என்ன இப்பிடி சொல்றீங்க?'' என்ற ஸ்வேதா கணவனிடம் வந்து ஒட்டி நின்று அவனது கையை இறுகப் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

"என்னமா?"

"பயமா இருக்கு"

"அதுசரி, ஆனாலும் நீ இவ்வளவு தைரியசாலியா இருக்கக் கூடாதுமா"

உள்ளே தங்களுடைய அறையை வந்து பார்த்தவளின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்து போயின.

அந்த அளவிற்கு அந்த அறை நவநாகரீகமாக மாறியிருந்தது.

கிட்டத்தட்ட ஊரில் இருக்கும் தங்களுடைய படுக்கையறை போல.

பெரிய ஏ.ஸி. தெர்மோகோல் ஷீலிங் வண்ண விளக்குகள், எல்.இ.டி. டி.வி, ஹோம் தியேட்டர், இதமான வண்ணத்தில் புது பெயிண்ட், திரைச் சீலைகள் என அறையே ஏதோ புது இடத்திற்கு வந்து விட்டாற் போல முற்றிலுமாக மாறிப் போயிருந்தது.

"எப்பிடியிருக்கு?"

"சூப்பர்ப்"

"நிஜமா?"

"உண்மையா தான் ஜெய், ரொம்ப ரொம்ப நல்லார்க்கு. ஆனா..."

"ம், என்னமா?"

"செலவு தான் நிறைய ஆகியிருக்கும் போலிருக்கு"

"ஏதோ என் மகாராணிக்கு என்னால முடிஞ்ச சின்ன பரிசு"

"தேங்க்ஸ் ஜெய்"

"ம், என்ன சொல்லு?"

"இல்ல ஏற்கனவே பிஸினஸ்க்கு நிறைய பணம் வேணும்னு சொல்லிட்டிருந்தீங்க. இதுக்காக செலவு



செஞ்ச பணத்தையெல்லாம் பேசாம பிஸினஸ்க்கே பயன்படுத்தியிருக்கலாமில்லையா?"

தயக்கத்துடன் என்றாலும் எப்படியோ நினைத்ததைக் கேட்டு விட்டிருந்தாள் ஸ்வேதா.

ஆனாலும் கணவன் என்ன சொல்லி விடப் போகிறானோ என்று அச்சமாகத் தான் இருந்தது.

ஸ்வேதா இப்படி எண்ணிக் கொண்டிருக்க, மிகவும் உணர்ந்து மனைவி கேட்டதை ஜெயவர்த்தனாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

"பரவாயில்லமா, என் அன்பு மனைவிக்காகத் தானே. அதுவும் கொஞ்சம் தான்"

கொஞ்சமா, நாலைந்து லட்சங்களுக்கு மேலேயே ஆகியிருக்கும் போலிருக்கிறது. ஆனால் கணவனோ கொஞ்சம் தான் என்கிறானே.

"என்னடா?"

மீண்டும் நினைத்ததை கேட்டே விட்டிருந்தாள்.

"நான் பணத்தோட மதிப்ப சொல்லல. உனக்காக இந்த உலகையே பரிசாக் கொடுக்க நேர்ந்தாலும் என்னப் பொறுத்த வரைக்கும் அது கொஞ்சம் தான்" என்றான்.

அப்படிச் சொன்ன கணவனை காதல் பொங்கப் பார்த்தாள் ஸ்வேதா.

"ம்கூம், இப்பிடிப் பாத்தா அப்புறம் கஷ்டம்"

அதே சமயம் கணவனை நெருங்கி வந்திருந்த ஸ்வேதா "இந்த இடம் மட்டும் எப்பவுமே எனக்கே எனக்காக கிடைச்சா அதுவே எனக்குப் போதும் ஜெய்" என்று கணவனின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

"ஸ்வேதா."

கணவன் அழைப்பது காதில் விழவே செய்தாலும், நிமிர்ந்து என்னவென்று கேட்காமல் மேலும் வாகாக ஒன்டிக் கொண்டாள்.

சில வினாடிகளில் மார்பில் ஈரம் தெரிய மனைவியை கட்டாயத்துடன் நிமிர்த்தினான்.

மென்மையாகத் தான்.

நினைத்தது போலவே மனைவியின் கண்கள் கலங்கியிருக்க, பதறிப் போனான்.

''என்னடா, என்னாச்சு?''

.....

''உன்னதான் ஸ்வேதா''

ஸ்வேதாவின் அழுகை மேலும் அதிகம் தான் ஆனதே தவிர சற்றும் குறைந்திருக்கவில்லை.

''ஸ்வேதா என்னடா இங்க பாரு...''

கணவனின் பதற்றம் புரிய, அவனைப் பார்த்தாள்.

''ஜெய்...''

''என்னமா சொல்லு?''

''நீங்க கிடைக்க நான் ரொம்பவும் குடுத்து வெச்சிருக்கணும் ஜெய், உங்க அன்புக்கு முன்னாடி என்னைப் பொறுத்த வரைக்கும் இந்த உலகமே தூசு தான்'' என்று கண்களில் நீர் பொங்கப் பார்த்த மனைவியை என்ன சொல்வதென்று தெரியாமல் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''உண்மையான சொந்தங்கள் கிடைக்கறது தான் ஒரு மனுஷனுக்குக் கிடைக்கற பெரும் பாக்கியம்னு நினைக்கறவ நான், என் மனசப் புரிஞ்சுக்கிட்டு உங்கள எனக்குக் குடுத்த அந்தக் கடவுளுக்கு நன்றி தான் சொல்லணும் ஜெய்...''



''ஜெய், ஐ லவ் யூடா... ஐ லவ் யூ'' என்று தனது மார்பில் முகம் புதைத்து மாலை மாலையாக கண்ணீர் இல்லையில்லை ஆனந்தக் கண்ணீர் வடித்த மனைவியை எங்கே அவளுக்கு வலித்து விடுமோ என்பதைப் போல இதமாக அணைத்துக் கொண்டான் ஜெயவர்த்தன்.

மனைவியின் உண்மையான அடி மனதிலிருந்து வந்த வார்த்தைகள் ஜெயவர்த்தனுக்குப் புன்னகையைத் தான் வரவழைத்திருந்தன.

உன் அன்பிற்கு முன்னால் மற்ற அனைத்துமே எனக்கு தூசுதான் என்று சொல்லும் இவளைப் போல ஒரு மனைவி கிடைக்கத் தானல்லவா இவளை விடக் கொடுத்து வைத்தவன்.

உண்மையிலேயே கடவுளுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருப்பவனும் தானே அல்லவா.

ஏனோ அன்று மனைவியிடம் வேறு எதையுமே எதிர்பார்க்கத் தோன்றியிருக்கவில்லை ஜெயவர்த்தனுக்கு. ஸ்வேதாவுக்கும் அப்படித்தான்.

ஏதோ ஒருவித இனம் புரியாத இதம் இருவருடைய உள்ளங்களையும் நிரப்பியிருக்க, ஒருவரையொருவர் அணைத்தவாறு நன்றாக உறங்கிப் போயினர்

முக்கியமாகக் கணவனின் அணைப்பிற்குள் புதைந்து போன ஸ்வேதா, அது நாள் வரை உணர்ந்தே இராத அளவிற்குப் பாதுகாப்பாகவும் மிகவும் இதமாகவும் உணர்ந்தாள்.

சில நாட்களாகப் பட்டிருந்த துன்பம் நீங்க அன்று இரவு முழுக்க ஆழ்ந்து உறங்கியும் போனாள்.

# 32

காலையில் கண் விழித்த ஸ்வேதா கணவன் இன்னும் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

சரிதான் தூங்கட்டுமென்று சத்தம் செய்யாமல் படுக்கையை விட்டு இறங்கியவள், பூனை நடையில் வெளியே வரத் திரும்பினாள்.

''ஸ்வேதா'' என்று கணவன் அழைக்க,

''அட நீங்க முழிச்சுட்டு தான் இருக்கீங்களா?'' என்று கேட்டாள்.

''இங்க வாயேன் ஸ்வேதா.''

''எதுக்கு?''

''வா சொல்றேன்.''

''ம்கூம், முதல்ல எழுந்து வாங்க.''

''ஒரு நிமிஷம் இங்க வாடா...''

''அதான் எதுக்குன்னு கேக்கறேன்.''

''அந்தத் தலையணைய எடுத்துக் குடேன்...''

கணவனின் உள்நோக்கம் புரிய, தூர நின்று தலையணையை எடுத்துக் கணவனிடம் நீட்டினாள்.

''இந்தாங்க.''

''நீயே கொண்டு வந்து வெச்சுடு.''

''ம்கூம், அதுதான் நடக்காது'' என்ற ஸ்வேதா தலையணையை அப்படியே வைத்து விட்டு, நேராகச் சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சமையலறைக்கு வந்தாள்.



வந்தவளுக்கு அங்கே ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

அங்கே தனது அத்தை இருக்க ''வாவ் அத்தை!'' என்றாள்.

''வாடாம்மா, இப்ப தான் எழுந்தியா?''

''ஆமாம் அத்தை, நீங்க எப்படி இந்த நேரத்துல இங்க?''

''அங்க டிபன் வேல கொஞ்சம் சீக்கிரமாவே முடிஞ்சது. அதான் கீரையெல்லாம் பறிச்சுட்டுப் போலாம்னு வந்தேன்'' என்றவர்,

''இந்தாடாம்மா காபி எடுத்துக்கோ'' என்றார்.

''தேங்க்ஸ் அத்தை, நானே கலக்கணுமேன்னு...''

''கலங்கிட்டே வந்தியாக்கும்?''

''சரியா சொன்னீங்க.''

''எங்க உங்க வீட்டுக்காரர்?''

''தூங்கறார்'' என்றவள் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''இன்னுமா?''

.............

''என்ன அதிசயம், நாலு மணிக்கு மேல ஒரு நிமிஷம் தூங்க மாட்டானே'' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்ட அத்தையை எதுவும் பேசாமல் பார்த்தாள்.

''அப்புறம் ஸ்வேதாம்மா.''

''சொல்லுங்க அத்தை?''

''ஸ்டோர் ரூமெல்லாம் ரொம்பவும் கலைஞ்சு கிடக்கு. போய் சுத்தம் பண்றேன். உன் வீட்டுக்காரர் எழுந்ததும் காபி மட்டும் கலக்கிக் குடுத்துடு.''

''சரி அத்தை, இருங்க நானும் வந்து உங்களுக்கு ஹெல்ப் பண்றேன்.''

''அதெல்லாம் வேண்டாம், நீ காபி குடிச்சுட்டு பேப்பர் வந்திருக்கு படிக்கறதா இருந்தா படி இல்லன்னா போய்க் குளிச்சுட்டு கிளம்பற வேலையப் பாரு.''

மருமகளிடம் கறாராகச் சொல்லி விட்டுச் சமையலறையை ஒட்டியே இருந்த அந்தப் பெரிய ஸ்டோர் ரூமிற்குள் சென்று சுத்தம் செய்யும் வேலையைத் தொடங்கினார் காஞ்சனா.

சில நிமிடங்களில் கையிலிருந்த காபியைக் குடித்து முடித்த ஸ்வேதா, ஸிங்கில் கிடந்த காபி பாத்திரங்களை மட்டும் கழுவி எடுத்து அடுக்கினாள்.

வேலையில் மும்முரமாக இருந்தவள் பூனை போலக் கணவன் பின்னால் வந்து அணைப்பானென்று துளியும் எதிர்பார்க்கவில்லை.

திடீரென்று தனக்கு மிக அருகில் பின்னால் ஏதோ அரவம் கேட்க வேகமாகத் திரும்பிய வினாடியில் கணவனின் கைகளுக்குள் சிறைபட்டுப் போனாள்.

பக்கத்து அறையில் அத்தை இருப்பதை சத்தமாகச் சொல்லவும் முடியாமல், மந்தகாசப் பார்வையுடன் இப்பொழுது எப்படி வசமாக மாட்டிக் கொண்டாய் பார்த்தாயா என்ற கணவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவும் முடியாமல் தவித்தாள்.

''ப்ளீஸ் விடுங்க ஜெய்...'' என்று மிகவும் மெல்லிய குரலில் ஏதோ சொல்ல வந்த மனைவியை விடாமல் இறுக அணைத்து அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தவன் தனது இதழ்களால் மனைவியின் இதழ்களை சிறை பிடித்திருந்தான்.

''அப்புறம் ஸ்வேதாம்மா...'' என்று யதார்த்தமாகப் பக்கத்து அறையிலிருந்து வெளியே வந்த காஞ்சனா

 

திகைத்துப் போய் விட்டிருக்க, தனது தாயை அங்கு கண்ட ஜெயவர்த்தனோ அதை விட சற்று அதிகமாகவே திகைத்துத்தான் போனான்.

அதே சமயம் கணவனிடமிருந்து விலகி நின்றிருந்த ஸ்வேதாவினால், நிமிர்ந்து யாரையும் பார்க்கக்கூட முடியாது போயிற்று.

முகம் இரத்தமெனச் சிவந்து போய் விட்டிருக்க, கடவுளே இப்படியாகி விட்டதே என்று மிகவும் ஒரு மாதிரியாக உணர்ந்தாள்.

ஆனால் அதற்குள் இயல்பு நிலைக்கு வந்திருந்த ஜெயவர்த்தன் ''வாங்கமா என்ன இங்க இந்த நேரத்துக்கு?'' என்று முயன்று வரவழைத்த குரலில் கேட்டான்.

''சரிதான், இந்த நேரத்துல அதுவும் முன்னறிவிப்பில்லாம வந்திருக்க வேண்டியதில்ல தான்'' என்ற அத்தையின் குரலில் தெரிந்த அந்த விளையாட்டுப் பேச்சு ஸ்வேதாவை மேலும் கூனிக் குறுகச் செய்திருந்தன.

''அப்படின்னு ஒரேயடியா சொல்லிட முடியாது'' என்று தானும் விளையாட்டாக பதில் சொன்ன ஜெயவர்த்தன் ''காபி கலக்கி எடுத்துட்டு வா ஸ்வேதா'' என்று அங்கிருந்து சென்றிருந்தான்.

என்னதான் அந்த சங்கடமான நிலை உருவானதே கணவனால் தான் என்றாலும், இப்பொழுது அவனும் அங்கிருந்து சென்று விட்டிருக்க மேலும் தர்ம சங்கடமாய் உணர்ந்தாள்.

ஸ்வேதாவின் நிலையைக் காஞ்சனாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

அதனாலேயே அவளிடம் நெஞ்சு உருகிப் போனது.

நிமிரக் கூட முடியாமல் குனிந்து கொண்டிருந்த மருமகளை அழைத்தவர், ''வெளியே போய்க் கறிவேப்பிலை,

கொத்தமல்லித் தழையெல்லாம் பறிச்சுட்டு வாம்மா'' என்று சாதாரணமாக சொல்லி விட்டு மீண்டும் வந்து தனது வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தார்.

அத்தை சென்றது தான் தாமதம், சரிதான் தப்பித்தால் போதுமென்று அவர் சொன்ன வேலையைச் செய்யும் சாக்கில் உடனே வெளியே வந்து விட்டிருந்தாள் ஸ்வேதா.

சிறிது நேரத்தில் மீண்டும் சமையலறைக்கு வந்த ஜெயவர்த்தன் அங்கு யாருமில்லாதது கண்டு ஸ்டோர் ரூமை எட்டிப் பார்த்தான்.

''காபி கிடைக்குமாம்மா?''

''இதோ வர்றேன்பா.''

சில நிமிடங்களில் காபியைக் கலக்கிக் கொடுத்த தாயிடம் அதை வாங்கிக் கொண்டவன், ''ஒன்பது மணிக்கு ஹாஸ்பிடலுக்குக் கிளம்பணும்மா'' என்றான்.

''சரிதான் நான் கிளம்பிட்டேன், இனி நீங்க ரெண்டு பேரும் கிளம்பறது தான் நேரம்.''

''சரிமா இங்கிருந்து இன்னும் ஒரு மணி நேரத்துல கிளம்பிடலாம், அப்பதான் அங்க போய் சாப்டுட்டுப் போற துக்கு சரியா இருக்கும்'' என்று சென்றான் ஜெயவர்த்தன்.

சில நிமிடங்களில் ''இது போதுமா அத்தை?'' என்று பறித்திருந்த கறிவேப்பிலை, கொத்தமல்லித் தழைகளுடன் அங்கு வந்த ஸ்வேதாவால் ஏனோ அப்பொழுதும் அவரை இயல்பாக எதிர்கொள்ள முடிந்திருக்கவில்லை.

மருமகள் மிகவும் சங்கடமாக உணர்வது புரிய ''பைத்தியம், போதும் நடந்தத மறந்து இயல்பா இரு'' என்று செல்லமாகத் திட்டினார்.

மருமகளின் கையிலிருந்தவற்றைப் பார்த்தவருக்குச் சிரிப்பு தான் வந்தது.



''நம்ம குடும்பத்துக்கு இதெல்லாம் எந்த மூலைக்குப் போதும், சரிடாம்மா அதையெல்லாம் நான் பாத்துக் கறேன் இனி நீ போய்க் கிளம்பற வேலையைப் பாரு போ'' என்று அனுப்பினார்.

தங்களுடைய அறைக்கு வந்தவள் கணவன் அங்கிருந்த சோபாவில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருப் பதைக் கண்டாள்.

''ஸ்வேதா.''

கணவன் அழைப்பது கேட்டாலும் கேட்காதது போல உள்ளே வந்திருந்தாள்.

மீண்டும் இருமுறை அழைத்தும் மனைவியிடமிருந்து பதில் வராது போக, அருகில் சென்று ''ஸ்வேதா இங்க பாரு!'' என்று தொட்டு அழைத்தான்.

''தயவு செஞ்சு போயிடுங்க.''

''புரிஞ்சுக்கோடா...''

''இனிமேல் எப்பவுமே எங்கிட்டப் பேசாதீங்க, எங் கிட்ட வராதீங்க.''

''இப்ப என்ன ஆயிடுச்சுன்னு இப்படி...'' என்று ஜெய வர்த்தன் மனைவியை அருகில் இழுத்திருக்க, கண்கள் சிவக்கப் பார்த்தாள் ஸ்வேதா.

''என்னடா?''

கணவன் கேட்டது தான் தாமதம் பலம் கொண்ட மட்டும் கண் மண் தெரியாமல் அவனுடைய மார்பில் குத்தியவள், பிறகு வெறி பிடித்தவள் போலப் பிடித்துத் தள்ளினாள்.

சிறு பிள்ளைத்தனமான மனைவியின் செயல்களை ரசிக்க முடிந்ததே தவிர அதை அவனால் ஸீரியசாக எடுத்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஆனால் அவ்வளவிற்குப் பிறகும் சிரித்த கணவனைப் பார்த்த ஸ்வேதா, இப்பொழுது கோபத்தின் எல்லைக்கே சென்றிருந்தாள்.

முன்னை விடவும் அதிகமான பலத்தை பிரயோகித்துத் தள்ளி விட்டிருந்தாள்.

மனமும் உடலும் இளகியிருந்த அந்த நேரத்தில் மனைவியிடம் அவ்வளவு முரட்டுத் தனத்தை எதிர்பார்த்திருக்காத ஜெயவர்த்தனின் தலை சென்று சுவற்றில் மோதியதில் ''அம்மா...'' என்று முனகி விட்டுப் பிறகு சமாளித்துக் கொண்டு நின்றான்.

அடியென்று எதுவும் படாவிட்டாலும் கூட பட்டது போல தலையைப் பிடித்துக் கொண்டு நிற்க முடியாமல் தள்ளாடினான்.

ஐயோ இப்படி நடந்து கொண்டு விட்டோமே என்று ஏற்கனவே பதறிப் போயிருந்தவள், தலையைப் பிடித்துக் கொண்டு கணவன் தள்ளாடியதில் மிகவும் பயந்து போனாள்.

''ஜெய் என்னாச்சு?''

மிகுந்த பதற்றத்துடன் அருகில் வந்த மனைவியைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும், உண்மையை உறைக்க மனம் வந்திருக்கவில்லை.

இவளுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கத் தான் வேண்டுமென்று தோன்றி விட்டிருக்க, அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டிருந்தான்.

உதடுகளின் சிரிப்பு காட்டிக் கொடுத்து விடாதபடி முயன்று மறைத்துக் கொண்டு, நிமிர்ந்து வலி தந்த வேதனையுடன் மனைவியைப் பார்த்தான்.



கணவனின் நிலையைக் கண்ட ஸ்வேதா இப்பொழுது அழவே தொடங்கி விட்டிருக்க, ஒன்றுமில்லையென்று சொல்லி விடலாமா என்று மனம் துடித்தது.

ம்கூம்.

இப்பொழுது வேண்டாம்.

பிறகு... சிறிது நேரம் கழித்துச் சொல்லிக் கொள்ளலாம்.

''இதோ வர்றேன்'' என்று அழுகையை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டபடி அங்கிருந்து நகர்ந்த மனைவியைக் கண்டவனுக்கு ஏனோ பாவமாக இருக்க திரும்பி வந்தவுடன் சொல்லி விட வேண்டியது தானென்று நினைத்துக் கொண்டான்.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர இயல்பு நிலைக்கு வந்து எடுத்து அட்டெண்ட் செய்து பேசினான்.

''ஆமா ஜெயவர்த்தன்.''

...............

''அட சுமிதா! எப்படியிருக்க?''

''ம் நான் உட்பட எல்லாரும் நலம், நீ எப்படி...''

ஜெயவர்த்தனின் அந்தக் கேள்விக்கு எதிர்பக்கத்தில் அந்த சுமிதா சொன்ன பதில் அவனை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டிருந்தது.

''நிஜமாதான் சொல்றியா?'' என்று நம்ப மாட்டாதவனாய்க் கேட்டான்.

''ஸ்ஷ்யூர்மா, நான் இப்ப அங்க அந்த ஹாஸ்பிட்டலுக்கு தான் வர்றேன். இன்னுமொரு ரெண்டு மணி நேரத்துல உன்ன நேர்லயே வந்து பாக்கறேன். தைரியமா இரு'' என்று மொபைலை ஆஃப் செய்து பாக்கெட்டில் வைத்திருந்தான்.

# 33

தோழியிடம் சொன்னது போலத் தாய் மற்றும் மனைவி யுடன் இரண்டு மணி நேரங்களில் மருத்துவமனையை வந்தடைந்திருந்தான் ஜெயவர்த்தன்.

தாயும் மனைவியும் அப்பாயிண்ட்மென்ட் வாங்கிக் கொண்டு மருத்துவரைப் பார்ப்பதற்காகக் காத்திருக்க, தான் சிறிது நேரத்தில் வந்து விடுவதாகச் சொல்லி விட்டுத் தோழியைப் பார்க்கக் கிளம்பினான்.

கிளம்பியவன் அவளைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியமின்றி வழியிலேயே எதிர்கொண்டான்.

''ஜெயன்!''

''சுமிதா.''

''எப்படியிருக்க ஜெயன்?''

என்று கேட்டவளுக்கு அவன் எப்பொழுதும் போல கம்பீரமாக ஏன் முன்னைக்கு இப்பொழுது இன்னும் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் ஆண் மகனாக மாறியிருந்தது பார்த்த உடனேயே தெரிந்தது.

பழைய நினைவுகள் அனைத்தும் மீண்டும் துளிர் விட, உள்ளம் சிலிர்த்துப் போனாள்.

''சுமிதா என்னாச்சு?''

''ஸாரி ஜெயன், டாக்டர் கொடுத்த பிரிஸ்கிரிப்ஷன எங்க வெச்சேன்னு யோசிச்சுட்டிருந்தேன் அதான்...''

''ஆமா உனக்கு உடம்புக்குப் பரவாயில்லையா?'' என்று கேட்டவனுக்குக் காலையில அந்த மாதிரி தானே ஏதோ சொன்னாளென்று நினைக்கத் தோன்றியது.



''எனக்கு அந்த அளவுக்கெல்லாம் பெரிசா ஒண்ணுமில்ல ஜெயன், அந்தக் கடவுளுக்கு எம்மேல எப்பவுமே ஓர வஞ்சனை தான்'' என்று கண் கலங்கினாள் சுமிதா.

''வேண்டாம்மா.''

''முதல்ல அம்மா, அப்புறம் நான் ரொம்ப விரும்பின நீ எனக்குக் கிடைக்காம போன, இப்ப...''

''வேண்டாம் சுமிதா, கன்ட்ரோல் யுவர்ஷெல்ஃப் எல்லாரும் பாக்கறாங்க பாரு.''

சுமிதாவைப் பார்க்க மனதிற்குள் மிகவும் பரிதாபமாக உணர்ந்தான்.

பாவம்,

அடிமேல் அடி.

மனம் விரும்பியவனை... இல்லையில்லை. ஏற்கனவே தெரிந்தவனான தன்னைப் பார்த்ததும் வேதனை இன்னும் பெரிதாகத் தெரியும் போலிருக்கிறது.

சரிதான்,

அதிலென்ன ஆச்சரியம்.

''முடியல ஜெயன், என்ன மட்டும் ஏன் கடவுள் இப்படியெல்லாம்...''

மீண்டும் கண் கலங்கிய தோழிக்கு ஆறுதல் சொன்னவன், ''வா எங்காவது போய் உக்காரலாம்'' என்றான்.

''முதல்ல நீ சாப்டியா?''

''ம்கூம்.''

''சரி வா சாப்டுட்டே பேசலாம்'' என்றவன் எதிரே வந்த மருத்துவமனை ஊழியனிடம் கேண்டினுக்கு செல்லும் வழி கேட்டுக் கொண்டு தோழியுடன் நடந்தான்.

சுமிதாவைப் போல ஜெயவர்த்தனுக்கும் கல்லூரிக் காலம் தான் மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது.

எவ்வளவு அழகான பெண் இந்த சுமிதா.

எத்தனையோ பேர் இவள் பின்னால் பைத்தியமாகச் சுற்ற, இவள் தன்னை சுற்றிச் சுற்றி வந்தாளே.

தான் எவ்வளவோ முறை மறுத்தும் கண்டித்தும் கேட்காமல், கிடைக்காததை கிடைக்க வைப்பதில் தான் சுவாரஸ்யமே என்று சிரிப்பாளே.

ஒன்றைப் பிடித்தால் அதை அடைந்தே தீர வேண்டுமென்று போராடும் அவளுடைய குணம்தான் ஜெயவர்த்தனை அவளுடன் நட்புக் கொள்ள வைத்திருந்தது.

கிட்டத்தட்ட அவனுடைய குணமும் அதுவேதான்.

அப்படிப் படிப்பில், ஏன் அனைத்திலுமே தன்னுடன் சரிக்கு சரி போட்டியிட்டு அரிதாக சில முறை ஜெயித்தும் இருந்தவள், கடைசியில் அதைத் தன்னிடமே பிரயோகிப்பாளென்று அவன் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அவள் என்ன முயன்றும் அவளுடைய காதலை ஏற்றுக் கொள்ளாதவன், நல்ல தோழியாக ஏற்றுக் கொண்டான்.

அந்த நட்பு கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகும் கூட சில வருடங்கள் தொடர்ந்தன.

ஆனால் அதற்குப் பிறகு சுமிதாவின் திருமணம், அவளும் கணவனுடன் வெளிநாடு கிளம்பிச் சென்றது, அங்கு வேலையில் சேர வேண்டிய கட்டாயம் என சுமிதா மிகவும் பிஸியாகி விட்டிருந்தாள்.

கடந்த மூன்று வருடங்களாக சுத்தமாகத் தொடர்பே இல்லாது போயிற்று.

கேண்டீனுக்கு வந்து சேர்ந்ததும் சுமிதாவிடம் கேட்காமலே அவளுக்கு டிபன் ஆர்டர் செய்தான்.



அப்படியே தனக்கு ஒரு டீயையும்.

சில நிமிடங்களில் அவன் ஆர்டர் செய்திருந்த தயிர் வடை வர, ''சாப்பிடு சுமிதா'' என்றான்.

பரவாயில்லையே தனக்குப் பிடித்ததைக் கூட இன்னும் நினைவில் வைத்திருக்கிறானே என்று விரக்தியுடன் நினைத்துக் கொண்டே ''உனக்கு?'' என்றாள்.

''நான் ஆச்சு, டீ மட்டும் போதும்.''

''அப்புறம் உன் லைஃபைப் பத்தி சொல்லு ஜெயன்.''

''என்னைப் பத்தி சொல்லப் பெரிசா ஒண்ணுமில்ல, இப்ப ரெண்டு மாசம் முன்னாடி தான் கல்யாணம் முடிஞ்சது மனசுக்குப் பிடிச்ச அன்பான மனைவி'' என்றான்.

அந்தக் கடைசி வார்த்தைகளில் சற்று அழுத்தம் கொடுத்துச் சொன்னானோ என்று சுமிதாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இல்லையில்லை.

ஜெயன் சாதாரணமாகத்தான் சொன்னான். தனக்குத் தான் அப்படித் தோன்றுகிறது.

ஏனோ அவனுடைய மனைவியை அப்பொழுதே பார்க்க வேண்டும் போலிருந்தது.

தன்னை ஒரேயடியாக மறுத்திருந்தவன் வேறு எப்படிப்பட்டவளை மணந்திருப்பானென்று தெரிந்து கொள்ள மிகவும் ஆவலாக இருந்தது.

''உன் வொய்ஃப் பேரு?''

''ஸ்வேதா.''

''சுமிதா, ஸ்வேதா பெரிய வித்யாசம் எதுவுமில்ல இல்ல?'' என்று சிரித்தவளிடம் ''சாப்புடுமா'' என்றான்.

''ஒரு வாய் எடுத்துக்கோ.''

''இல்ல நீ சாப்புடு.''

''உன் குணம் இன்னும் கொஞ்சங் கூட மாறவே இல்ல ஜெயன்'' என்று சொல்லிக் கொண்டே சாப்பிடத் தொடங்கினாள் சுமிதா.

தனக்கு எதிரே அமர்ந்திருப்பவளைப் பார்க்கவே பாவமாக இருந்தது ஜெயவர்த்தனுக்கு.

எப்படியிருந்தவள் இப்படி இளைத்து ஆளே மாறிப் போய் விட்டாளே.

''இப்ப நீங்க எதுக்கு ஹாஸ்பிட்டலுக்கு வந்தீங்க?''

ஜெயவர்த்தன் விஷயத்தைச் சொல்ல, ''வாவ் கங்ராட்ஸ் ஜெயன்'' என்று உண்மையான சந்தோஷத்துடன் வாழ்த்தினாள்.

''இன்னும் ஏதாவது...''

''ம்கூம், ஒரு காபி மட்டும்.''

''ஏன்...''

''ப்ளீஸ் ஜெயன், இதுவே உனக்காக தான்.''

சில நிமிடங்களில் ஆர்டர் செய்த காபி வர எடுத்துக் கொண்டாள்.

''சொல்லுமா, என்ன நடந்தது?''

''என்ன சொல்றது ஜெயன், எனக்குக் கல்யாணம் நடந்தது, நானும் அவரோட ஃபாரின்ல போய் ஸெட்டி லானது அப்புறம் அங்க நான் வேலைக்குப் போனது வரைக்கும் உனக்கும் எல்லாமே தெரியும்.''

''நாம நினைச்ச மாதிரி, விருப்பப்பட்ட மாதிரி எதுவுமே நடக்க மாட்டேங்குதேன்னு முதல்ல மனசுக்குக் கொஞ்சம் கஷ்டமா இருந்தாலும் அப்புறம் எல்லாம் பழகிடுச்சு.''



''ரெண்டு பேரும் வேலைக்குப் போய்ட்டு ஓரளவு லைஃப் திருப்தியாதான் போகத் தொடங்கிச்சு. ஆனா...''

''என்னமா?''

''ஆனா திடீர்னு அவருக்கு உடம்புக்கு முடியாமப் போகும்னு நாங்க நினைச்சு கூடப் பாக்கல.''

''அதுக்கப்புறம் அவருக்கு நோய் ரொம்ப அதிகமா யிட்டதால செலவு பண்ணிக் கட்டுபடியாகல.''

''அவரோட குடும்பம் பெரியதுன்னு உனக்கே தெரியுமே, அவங்க எல்லாரும் இங்க வெச்சு ட்ரீட்மெண்ட் குடுத்து சரி பண்ணிடலாம் வாங்கன்னு கூப்டாங்க.''

''சரின்னு அவசர அவசரமா எல்லாத்தையும் ஸெட்டில் பண்ணிட்டு அவர அழைச்சுட்டு இங்க வந்தேன்.''

''வந்ததிலிருந்து தொடர்ந்து நல்ல ட்ரீட்மெண்ட்டும் குடுத்தோம். ஆனா அவருக்கிருந்தது லிவர் ப்ராப்ளம். என்ன பாத்தும் ஒண்ணும் சரி பண்ண முடியல. நாளுக்கு நாள் அவரோட உடல்நிலை மோசமாயிட்டே தான் வந்தது.''

''அதோட...''

''என்னமா?''

''குடி, கஞ்சான்னு அவருக்கு இல்லாத கெட்ட பழக்கமே இல்லேங்கறதும் இங்க வந்ததுக்கப்புறம் தான் எனக்குத் தெரிஞ்சது.''

''ஆனாலும் எல்லா கெட்ட பழக்கங்களையும் விட்டுத் திருந்தினதுக்கப்புறம் இப்பப் போய் இப்படி ஆயிடுச்சேன்னு ரொம்ப வருத்தப்பட்டார்.''

''என்ன பண்றது, நாம ஒண்ணு நினைச்சா கடவுள் ஒண்ணு நினைக்கிறாரே'' என்றவள் ''அப்புறமென்ன அவர் போய் சேந்தும் கூட மூணு மாசமாச்சு'' என்றாள்.

''சாரிமா.''

''பரவாயில்ல ஜெயன் என்னவோ தெரியல சந்தோஷமான நேரங்கள்ல எப்பவுமே எனக்கு உன் ஞாபகம் வர்றதில்ல'' என்று தனக்குத்தானே விரக்தியாக சொல்லிக் கொண்டவளைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''அப்புறம்...''

''ம் என்ன கேளு ஜெயன்?''

''இல்ல அப்பாவுக்கு...''

தயக்கத்துடன் கேட்டவனைக் கண்களில் நீருடன் நிமிர்ந்து பார்த்தாள் சுமிதா.

''அப்பாவும்...''

''என்னமா?''

''அப்பாவும் போன வாரம் தான் ஹார்ட் அட்டேக்ல...''

''சுமிதா.''

''என்ன ஜெயன் அதிர்ச்சியா இருக்கா?'' என்று விரக்தியாக சிரித்தவளைப் பார்க்க உண்மையிலேயே மிகவும் பரிதாபமாக இருந்தது ஜெயவர்த்தனுக்கு.

''நேத்து தான் எல்லாத்தையும் செட்டில் பண்ணி முடிச்சேன்'' என்றவள் தாங்க மாட்டாமல் அவளுடைய கைகளில் முகம் புதைத்துக் கொண்டு அழுதாள்.

என்ன வார்த்தைகளை உபயோகித்து சமாதானம் செய்வதென்று கூட அவனுக்குப் புரிந்திருக்கவில்லை.

ஆனாலும் முயன்று ஆறுதல் சொன்னான்.

எல்லாத் துன்பங்களையும் பட்டு விட்டாய். இனிமேல் வாழ்க்கையில் எப்பொழுதும் நன்றாக இருப்பாயென்று உணர்ந்து சொன்னான்.

''போதும் ஜெயன்.''



''என்னமா?''

''இருந்ததெல்லாத்தையும் தொலைச்சுட்டு, சொந்தங்களையும் முழுங்கிட்டு வழியில்லாம நிக்கறேன், முதல்ல அடுத்த வேளை சாப்பாட்டுக்கே...''

''நான் இருக்கும்போது அப்படிச் சொல்லாத சுமிதா.''

''கேக்க நல்லாத் தான் இருக்கு.''

''ஏன், நான் உதவ மாட்டேன்னு நினைச்சுட்டியா?''

''நீ செய்வ ஜெயன், ஆனா உனக்கும் இப்பக் குடும்பம் ஆயிடுச்சே.''

''அதனாலென்ன, உதவறதுக்கும், நல்லது செய்யறதுக்கும் மனசு இருந்தாப் போதும்.''

ஏனோ தோழியின் இந்த நிலைக்குத் தெரிந்தோ தெரியாமலோ தானும் ஒரு காரணம் தான் என்று ஜெயவர்த்தனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவளுக்கு முதலில் தான் செய்ய வேண்டியதைப் பற்றி யோசித்தான்.

''இப்ப எங்க இருக்க?''

''அப்பாவோட வீட்ல தான் ஆனா, அதுவும் வாடகை வீடு, அங்க தொடர்ந்து அதுவும் தனியா இருக்க முடியாது.''

''வேண்டாம் அத காலி பண்ணிட்டு ஏதாவதொரு நல்ல பாதுகாப்பான லேடீஸ் ஹாஸ்டலுக்கு வந்துடு.''

''சரிதான், ஆனா தொடர்ந்து செலவுகள் வருமே.''

''வேலைக்கு நான் ஏற்பாடு பண்றேன், உனக்கு ஆட்சேபணை இல்லேன்னா...''

''என்ன ஜெயன் சொல்லு?''

''இல்ல நானே கம்பெனிய புது பில்டிங்குக்கு மாத்தலாம்னு இருக்கேன். அந்த ஆபீஸப் பாத்துக்கறதுக்கு

நம்பிக்கையான ஸ்டாஃப் ஒருத்தங்க வேணும்னு நினைச்சுட்டிருந்தேன். நீ வரத் தயாரா?''

''இது என்ன கேள்வி? சாப்பிட்டே பல நாள் ஆனவனுக்கு விருந்தே கிடைச்சா வேண்டாம்னு சொல்லிடுவானா. அத விட சந்தோஷம் எனக்கு வேறென்ன இருக்க முடியும்?''

''குட்.''

மேலும் சிறிது நேரமும் தோழியுடன் பேசிக் கொண்டிருந்தவன் ''இந்தாமா இப்ப இந்தப் பணத்த வெச்சுக்கோ'' என்று தனது சட்டைப் பாக்கெட்டிலிருந்து சில ஆயிரங்களை எடுத்துக் கொடுத்தான்.

''நோ தேங்க்ஸ் ஜெயன், எங்கிட்டயே பணமிருக்கு அவசியப்பட்டாக் கேக்கறேன். ஆனா அதுக்குக் கூட நீ வேலைக்கு வழி செஞ்சு குடுத்துட்டியே'' என்று சந்தோஷமாகச் சொன்னாள்.

அதே நேரம் மனைவியிடமிருந்து அழைப்பு வர, எடுத்து ''இதோ இப்ப வர்றேம்மா'' என்றான்.

''சரி சுமிதா கிளம்பலாமா?''

''நான் வந்து உன் வொய்ஃப் பாக்கலாமா ஜெயன்?''

''வராமப் போக நினைச்சாலும் விட மாட்டேன்'' என்றவன் தோழியுடன் பேசிக் கொண்டே நடந்தான்.

தோழியுடன் ஜெயவர்த்தன் வந்து சேர்ந்தபோது அவர்கள் மருத்துவரைப் பார்த்து முடித்திருந்தார்கள்.

அங்கு தனது தாய் மட்டும் இருக்க ''என்ன சொன்னாங்கமா? என்று விவரம் கேட்டான்.

''எல்லாம் நல்லார்க்குப்பா மாத்திரை மட்டும் எழுதிக் குடுத்திருக்காங்க, திரும்பவும் அடுத்த மாசம் வரச்





சொல்லியிருக்காங்க'' என்றவர் மகனுடன் வந்திருந்த அந்தப் பெண்ணைக் கேள்வியாகப் பார்த்தார்.

''ஸ்வேதா எங்கமா?'

''உள்ள போயிருக்கா.''

''அம்மா'' என்று தாயை தோழிக்கு அறிமுகப் படுத்தியவன், தோழியைத் தாய்க்கும் அறிமுகப்படுத்தினான்.

''பேர் சுமிதா எங்கூடக் காலேஜ்ல ஒன்னாப்...''

''ஓ, நேத்து கூடப் போன்ல பேசினியே...''

''ஆமா ஆன்ட்டி நாந்தான், எப்படியிருக்கீங்க?''

''நல்லார்க்கேன், ஆமா நீ இங்க...''

''அது சொல்றேம்மா'' என்றவன் அப்பொழுது அங்கு வந்த மனைவியையும் தோழியையும் பரஸ்பரம் அறிமுகப்படுத்தி வைத்தான்.

கணவனின் தோழி என்பதற்கு மேல் ஸ்வேதாவிற்கு வேறு எதுவுமே தேவையிருக்கவில்லை. மனம் விட்டு நன்றாகப் பேசினாள்.

மனைவி அந்த அளவுக்கு வெகு இயல்பாகப் பேசுவாளென்று ஜெயவர்த்தனே கூட எதிர்பார்க்கவில்லை. ஏனோ நிம்மதியாக உணர்ந்தான்.

''அப்புறம் வாழ்த்துக்கள்'' என்று சுமிதா சொல்ல நன்றி சொன்னாள் ஸ்வேதா.

''நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க ஸ்வேதா.''

''நீங்களும்தான்.''

''நம்பிக்கிட்டேன்'' என்றவள் ''அப்புறம் நீங்க ஹவுஸ் வொய்ஃபா?'' என்று கேட்டாள்.

''இதுவரைக்கும் அப்படித் தான்'' என்று புன்னகையுடன் கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

"அப்ப இனிமேல்?"

"இனிமேலும் தான்" என்று இடையில் வந்திருந்த ஜெயவர்த்தன், "சரிமா இனி கிளம்பினா சரியா இருக்கும் அம்மா ஃபார்மஸிக்குப் போய்ட்டு இந்நேரம் காருக்குப் போயிருப்பாங்க" என்றான்.

"சரிதான், போய் நிறைய வேலையிருக்குன்னு வேற சொல்லிட்டிருந்தாங்க" என்ற ஸ்வேதா "வாங்க சுமிதா வீட்டுக்குப் போய்ட்டுப் போலாம்" என்று அழைத்தாள்.

"நிச்சயம் வர்றேன்."

"எப்ப?" என்று கேட்டுக் கொண்டே பின்னால் பார்க்காமல் நகர்ந்த ஸ்வேதா அங்கிருந்த சேரில் பலமாக மோதிக் கொள்ள, அந்த வினாடியில் வேகமாக அருகில் வந்திருந்த ஜெயவர்த்தன் மனைவியைக் கீழே விழாமல் பிடித்துக் கொண்டான்.

"என்ன கேர்லெஸ் ஸ்வேதா பலமாப் பட்டிருந்தா என்னாகறது?" என்று கோபமாகத் திட்டியவனுக்கு மனைவியின் மேலிருந்த அக்கறை வெளிப்படையாகவே தெரிந்தது.

"அதான் நீங்க பிடிச்சுட்டிங்களே ஜெய்..."

"அது சரி நானும் பாக்காம விட்டிருந்தா என்னாயிருக்கும்? இனியாவது பாத்து நில்லு..." என்றவனுக்கு இப்பொழுது மனைவியின் மேல் அன்பும், காதலும் இருப்பது கூட நன்றாகவே தெரிந்தன.

எவ்வளவு பிரமாதமான ஜோடி,

ஆனால்...

ஆனால் ஜெயவர்த்தன் தன்னுடையவன் அல்லவா.

தனக்குக் கிடைக்காதவன் எப்படி அவளுக்கு மட்டும் கிடைக்கலாம்.



தனது எண்ணம் போகும் போக்கில் பயந்து போய் விட்டிருந்த சுமிதா அதற்குப் பிறகு தான் ஜெயவர்த்தன் தன்னை சில முறை அழைத்து விட்டிருந்ததையே உணர்ந்தாள்.

"சரிமா கிளம்பறோம், என்ன உதவி வேணும்னாலும் என் மொபைலுக்குக் கூப்புடு."

"சரி ஜெயன்."

"நான் நாளைக்குப் பேசறேன்."

"சரி."

கணவன் மனைவி இருவரும் மீண்டுமொரு முறையும் விடை பெற்றுக் கொண்டு கிளம்ப அவர்கள் கண்களை விட்டு மறையும்வரை கண் கொட்டாமல் அவர்களையே பார்த்தபடி நின்று விட்டிருந்தாள்.

அந்தப் பார்வையில் என்ன இருந்தது.

வேறென்ன.

பொறாமை, கோபம், இயலாமை...

முக்கியமாக அது எப்படித் தனக்குக் கிடைக்காதவன் இன்னொருத்திக்குக் கிடைக்கலாம்.

தன்னை விரும்பாதவன் இன்னொருத்தியை மட்டும் எப்படி விரும்பலாம் என்ற அளவு கடந்த பொறாமையும் வயிற்றெரிச்சலும்தான்.

## 34

"என்னப்பா இவ்வளவு நேரம்?"

"எம்மா நீங்க வந்து ரொம்ப நேரமாச்சா?"

"எனக்கென்னப்பா? ஸ்வேதா காலைலயும் சரியா சாப்புட்ல அதுக்கு மேல வாந்தி வேற, பாவம் இவ்வளவு

நேரமும் நிக்கக் கூட முடியாம கஷ்டப்பட்டிருந்தா சீக்கிரம் கிளம்பி வர வேண்டியது தான?''

தாய் சொல்ல, மனைவியைத் திரும்பிப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வரட்டுமா?''

''வேண்டாம் வீட்டுக்கே போயிட்லாம்'' என்று மனைவி சொல்ல சரிதானென்று காரை ஸ்டார்ட் செய்து விட்டிருந்தான்.

தங்களை விட்டுவிட்டு அவ்வளவு நேரமும் போய்ப் பேசியது போதாதென்று அந்தப் பெண்ணை உடன் வேறு அழைத்து வந்து விட்டானே என்ற ஆதங்கம் காஞ்சனாவிற்கு.

அவளும் அவளுடைய பார்வையும்.

இவன் இருப்பதற்கு எப்படித்தான் அந்த மாதிரிப் பெண்ணிடமெல்லாம் பழக்கம் வைத்திருக்கிறானோ.

''மாத்திரையெல்லாம் வாங்கிட்டிங்களாமா?''

''வாங்கிட்டேன்.''

''என்னமா கோபமா இருக்கீங்க?''

''எனக்கென்னப்பா கோபம்?''

''ம்கூம், கோபமாதான்...''

''நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே கண்ணா?''

''அட என்ன நீங்க, என்ன சொல்லுங்க?''

''என் மருமக முகம் வாட்ற மாதிரியான எந்தக் காரியத்தையும் நீ செய்யக் கூடாது.''

''நானென்ன...''

''ம், அந்தப் பொண்ணு சுமிதாவ அழைச்சுட்டு வந்து அறிமுகப்படுத்தலேன்னா என்ன?''



''ஏம்மா அதுலென்ன இருக்கு?''

''ஒண்ணுமில்ல தான், அதோட ஸ்வேதா நல்ல பொண்ணுங்கறதால பிரச்சனையும் இல்ல. இதுவே கடுகடுன்னு இருக்கற பொண்ணுங்களா இருந்தா நீயே நினைச்சுப் பாரு.''

தாய்க்கு ஏனோ சுமிதாவைப் பிடிக்கவில்லையென்பதை ஜெயவர்த்தனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அந்தப் பெண்ணுக்கு நேர்ந்த கொடுமைகளை சொன்னான்.

அதைக் கேட்ட பெண்கள் இருவருக்குமே அதிர்ச்சி தான் என்றாலும், ஸ்வேதாவுக்கு சற்று அதிகமாகவே.

''பாவம் ஜெய்'' என்று அவளையறியாமலேயே சொல்லி விட்டிருந்தாள்.

''அடடா பாவம்'' என்ற காஞ்சனாவும் ''இந்த வயசுல இருந்து யாருமே இல்லாம எப்பிடி. சரிதான் குழந்தையும் இல்லாததால இவளப் போலவே மனைவியும் குழந்தைகளும் இல்லாத யாரையாவது பாத்து மறு வாழ்க்கை அமைச்சுக்க வேண்டியது தான்'' என்றார்.

தாயின் தீர்வு ஜெயவர்த்தனுக்கும் பிடித்திருந்தது.

சரிதான் சில மாதங்கள் அல்லது வருடம் போகட்டும், சுமிதாவிடம் சொல்லிப் பார்க்கலாமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

வீடு வந்து சேர்ந்ததும் சில நிமிடங்களில் ஒரு பெரிய டம்ளர் நிறையப் பசும் பாலில் ஹார்லிக்ஸ் இரண்டு ஸ்பூன் விட்டுக் கலக்கி எடுத்து வந்து ஸ்வேதாவிடம் கொடுத்தார் காஞ்சனா.

''இந்தா இன்னும் ஒரு மணி நேரத்துல சமையல் ரெடி பண்ணிட்றேன். அது வரைக்கும் இதக் குடிச்சுட்டு வேலையப் பாரு.''

அத்தையின் அன்புக் கட்டளையில் பேசாமல் வாங்கிக் கொண்டவளுக்கு ஏனோ அந்த ஹார்லிக்ஸ் வாடையே சுத்தமாகப் பிடித்திருக்கவில்லை.

''என்னமா?''

''இவ்வளவு எது...''

''எவ்வளவு, முதல்ல குடி'' என்றவர் அவள் குடிக்கும் வரை அருகில் நின்றிருந்து காலியான டம்ளரை வாங்கிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தார்.

அத்தை சென்றதும் கணவனை நாடி வந்தாள் ஸ்வேதா.

ஆனால் அவனை அங்கு காணாது போக, சரிதான் சற்று நேரம் ஒய்வெடுக்கலாமென்று படுத்துக் கொண்டாள்.

வலுக்கட்டாயமாக உள்ளே சென்ற ஹார்லிக்ஸ் இதோ வந்துவிடப் போகிறேன் என்பதைப் போல படம் காட்டியது.

அத்தை சொன்னது போல அதையே நினைக்காமல் வேறு எண்ணத்தில் கவனத்தை செலுத்தினாள்.

அந்த சுமிதா தான் நினைவிற்கு வந்தாள்.

கூடவே கணவன் சொன்னவையும்,

பாவம்.

ஒரு சேர எத்தனை கொடுமைகள்.

ஒரு பெண்ணாகத் தனித்து நின்று எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்.

கடினம் தான்.

கணவனிடம் அந்தப் பெண்ணுக்கு எந்த விதத்தி லாவது உதவச் சொல்லிக் கேட்டுக் கொள்ள வேண்டு மென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.



மறுநாள் வீட்டிற்கே வந்திருந்த சுமிதாவை சந்தோஷ மாக வரவேற்றாள் ஸ்வேதா.

டிபன் காபி கொடுத்து உபசரித்தாள்.

சிறிது நேரத்தில் வெளியே சென்றிருந்த அத்தை வீடு திரும்ப, அவர் என்ன சொல்லி விடுவாரோ என்று சற்று பயமாகத் தான் இருந்தது.

அவள் எண்ணி பயந்தது போலவே, இவளா என்பதைப் போலத் தான் பார்த்தார்.

''சாப்பிட ஏதாவது கொடுத்தியா?''

''ஆமாம் அத்தை.''

''சரிதான் கண்ணம்மா, போய் பேசிட்டிரு போ.''

''சரி அத்தை'' என்று விட்டு சுமிதாவை நாடி வந்தாள்.

பாவம் யாருமில்லாமல் தனியாக அமர்ந்திருக்கிறாளே என்று தான் அவள் வந்து பேசியதும்,

சாதாரணம் போல ஸ்வேதாவைப் பற்றி அனைத் தையும் தெரிந்து கொண்ட சுமிதாவிற்கு வியப்பு தாங்க வில்லை.

அவ்வளவு பெரிய கம்பெனி எம்.டி.யின் மகளா இவள் என்றிருந்தது.

சரிதான்.

அதுதான் நேற்று பார்த்த உடன் தன்னையறியாம லேயே பொறாமைப்படத் தோன்றியிருக்கிறது.

தன்னைப் பற்றிக் கேட்டுக் கொண்டதோடு மட்டுமல் லாமல் அவள் தனது கணவனுடன் பழகியது வரை சுமிதா அனைத்தையுமே சொல்ல கேட்டுக் கொண்டாள் ஸ்வேதா.

ஆனால் அவள் சொன்னவற்றையெல்லாம் வைத்துக் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது ஒன்று மட்டும் தெளி வாகப் புரிந்தது.

ஒவ்வொரு முறையும் தனது கணவன் இவளை நிராகரித்தும் கூட இவள் விடாமல் துரத்தியிருக்கிறாள் என்பதே அது.

ஆனால் என்ன, அதை அந்த சுமிதா சற்று மாற்றிச் சொன்னாள் அவ்வளவே.

அனைத்தையும் மிகைப்படுத்தி ஏன் சற்று விரசமாகக் கூடச் சொல்லிவிட்டு ஸ்வேதாவின் முகத்தை அவளறியாமல் ஆராய்ந்தாள் சுமிதா.

ஆனால் அவள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தது போல எந்தச் சந்தேகக் கோடுகளும் அங்கே தெரியாது போக சப்பென்று ஆகி விட்டிருந்தது.

கூடவே என்ன பெண்ணிவள் என்று எரிச்சலாகவும்,

கணவன் யாருடன் பழகினால் தனக்கென்னவென்று விட்டுவிடும் பெண் போல அல்லவா இருப்பாள் போலிருக்கிறது என்றும்,

அப்படியானால் இவளும் அப்படிப்பட்ட பெண்ணாகத் தான் இருப்பாள்.

அது சரிதான்.

பணக்காரப் பெண்ணாயிற்றே பின் எப்படி இருப்பாள்.

அதே சமயம் கணவனின் மேலிருக்கும் அபரிதமான நம்பிக்கையால் கூடக் கண்டு கொள்ளாமல் விடலாம் என்பது அந்த சுமிதாவின் குறுக்கு புத்திக்குப் புலப்பட்டிருக்கவில்லை.

மேலும் இரண்டு மணி நேரங்களும் இருந்து விட்டு அதற்குப் பிறகே சுமிதா கிளம்ப ஏனோ மிகவும் சோர்வாக உணர்ந்தாள் ஸ்வேதா.

அது காஞ்சனாவின் கவனத்திலும் படத் தவறவில்லை.

ஏன் மகன் இரண்டு நாட்கள் வெளியூர் சென்றிருக்கும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் அந்தப் பெண் சுமிதாவை எச்சரித்து விடக் கூடாதென்று நினைக்கத் தோன்றியது.

ஆனாலும் மகன் விஷயத்தில், அதுவும் அவனுக்குத் தெரியாமல் அப்படிச் செய்யத் தயக்கமாக இருந்தது. பயமாகவும்.

# 35

ஸ்வேதா மனதிற்குள் எண்ணி அஞ்சியது போலவே மறுநாளும் வந்தாள் சுமிதா.

ஆனால் அன்று அவள் தன்னை அவ்வளவாகக் கண்டு கொள்ளாது போக, அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சுதான் விட முடிந்தது.

பிறகு எந்நேரமும் சுயதம்பட்டமும், பந்தாவுமாகவே பேசுபவளின் வார்த்தைகளை எவ்வளவு நேரம்தான் சகித்துக் கொண்டிருப்பது.

ஆனால் அன்று அவள் சென்று பேசியது பத்மினியிடம்.

அப்படியே இந்துமதியிடமும்,

ஆனால் என்ன கிளம்பும் போது மட்டும் வந்து தேனொழுகும் குரலில் விடைபெற்றுக் கொண்டு சென்றாள்.

எப்படியோ இன்று அந்த சுமிதா வந்து போன நேரம் அத்தை வீட்டில் இல்லை என்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.

மேலும் ஒரு வாரம் சென்றிருந்தது.

ஜெயவர்த்தன் தொழிலை சற்று பெரிய அளவில் நிறுவனமாகத் தொடங்கவிருக்க, அதற்கு மிகவும்

வேண்டப்பட்டவர்கள் அனைவரையும் அழைத்திருந் தான்.

முக்கியமாக பாலகிருஷ்ணன். அவருடைய தோழ னான அந்த சமயம் தனது தந்தைக்கும் நன்கு பழக்கமான சித்தார்த்தின் குடும்பத்தினர், நண்பர்கள், பிறகு தனது குடும்பத்து உறுப்பினர்கள் என ஐம்பது பேருக்குள் அழைத்திருந்தான். அதற்கு மேல் கம்பெனி ஊழியர்கள் முப்பது பேர்.

அதி முக்கியமாக சுமிதா.

அவள் அனைவரிடமும் ஜெயவர்த்தனின் பி.ஏ. என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள அது யாருக்கும் தவறாகப் படவில்லை.

காஞ்சனாவைத் தவிர,

அவருக்கு மட்டும் மனதிற்குள் எதுவோ சரியாகப் படவில்லை.

அவருக்கு மட்டும் தான் என்றில்லை.

ஸ்வேதாவிற்கும்,

அன்றும் பத்மினி அந்த சுமிதாவிடம் ஸ்நேகமாக சிரிப்பதும், பேசுவதும் அவளுடைய கண்களில் படத் தவறவில்லை.

எங்கோ அபாய மணி ஒலிப்பது போலிருந்தது.

தொழிலை விரிவு படுத்தியதிலிருந்து ஜெயவர்த்தன் மிகவும் பிஸியாகிப் போனான்.

அதிலும் இரவு வெகு நேரம் கழித்து வருவது, காலை யில் தான் எழுவதற்கு முன்னரே எழுந்து சென்ற விடு வது என கண்ணாமூச்சி காட்டிய கணவனிடம் முன்பு போலப் பேச முடியவில்லையே என்று ஸ்வேதாவின் மனம் ஏங்கியது.



முன்னைப் போலக் கணவன் ஆசையாகத் தன்னை நெருங்கி எத்தனை நாட்களாயிற்று என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

குறைந்த பட்சம் பதினைந்து நாட்கள் இருக்குமா சரிதான்.

அந்த சுமிதா வந்தும் கூட அதே பதினைந்து நாட்கள் தானே ஆகிறது.

சேச்சே, எதை எதனோடு முடிச்சிடுகிறோம்.

அப்படிப் பார்த்தால் கணவனின் மேல் தனக்கு நம் பிக்கையில்லையா.

ஐயோ இல்லை.

இல்லவே இல்லை.

அந்த சுமிதாவின் மேல் தான் நம்பிக்கையில்லை.

நம்பிக்கையில்லையென்று சொல்வதை விட, நல்ல விதமாக நினைக்க முடியவில்லையென்று சொல்வது சரியாக இருக்கும்.

ஏன் தனது அத்தைக்கும் தானே சுமிதாவைப் பிடிக்க வில்லை.

அவருடைய வயதிற்கும், அனுபவத்திற்கும் அவருக்கே அப்படித் தோன்றுகிறதென்றால்,

ஏனோ மனதிற்கு ஒன்றும் சரியாகப் படாது போக, வேண் டாம் மனமே எதையும் யோசிக்காதே என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அதிசயமாக அன்று மாலையில் நேரத்திலேயே வீட் டிற்கு வந்திருந்தான் ஜெயவர்த்தன்.

''வாவ் அண்ணா?''

தங்கையின் ஆச்சரியத்தில் புன்னகையுடன் என்ன வென்று கேட்டான்.

''என்ன அண்ணா இவ்வளவு நேரத்துலயே வந்துட்டிங்க, சரிதான் அண்ணி உங்க மேல கோபமா இருக்காங்க போய் சமாதானப்படுத்துங்க.''

''அதிகப் பிரசங்கி, இப்பெல்லாம் வாய் உனக்குக் கொஞ்சம் நல்லாவே நீளமாயிடுச்சு.''

''ஆமாம் பின்ன, முன்னாடியே சொல்லிட்டா அடி, உதையிலிருந்து நீங்களும் பாவம் தப்பிச்சுக்கலாம் இல்லையா?''

''அப்ப என் மனைவியப் பத்தி நீ இப்படியா நினைச்சுட்டிருக்க?''

''ஓ, அப்ப வெட்டு குத்தெல்லாம் கூட உண்டா?''

''இரு உன்ன வந்து பேசிக்கறேன்'' என்று தங்கையை விளையாட்டாக மிரட்டி விட்டு மனைவியை நாடி வந்தான் ஜெயவர்த்தன்.

பல நாட்களுக்குப் பிறகு அதிசயமாக நேரத்தில் வந்திருக்கும் கணவன் நேராகத் தன்னிடம் வர மாட்டானா என்று மனதிற்குள் மிகவும் ஏங்கிக் கொண்டிருந்த அவள், ''ஸ்வேதா'' என்ற கணவனின் அழைப்பில் திரும்பினாள்.

''என்னடா பண்ணிட்டிருக்க?''

ஆசையுடன் கேட்டுக் கொண்டே மனைவியின் அருகில் வந்தான்.

''ஸ்வேதா.''

...............

''என்னடா...''

''ஜெய்.''

''சொல்லுமா.''

''நான் இன்னும் உயிரோட தான் இருக்கேன் ஜெய்.''



மனைவியின் அந்த வார்த்தைகளில் நெஞ்சு உருகி விட, ''ப்ளீஸ் வேண்டாம்மா'' என்று குற்ற உணர்வுடன் பார்த்தான்.

''இன்னைக்கு வேலையில்லையா, நேரத்துலயே வந்துட்டிங்க?''

''இருக்குமா செய்யச் சொல்லிட்டு வந்திருக்கேன்.''

''அப்ப திரும்பவும் போகணும்ா?''

...............

''பேசுங்க ஜெய்.''

''போனாலும் உடனே வந்துடுவேன்.''

''ஸ்வேதா இங்க பாரு, ப்ளீஸ்டா இப்ப ஏன் கண்...''

''நீங்க டாடி மாதிரி இல்ல தான ஜெய்?''

.............

''உங்களுக்கு என்ன விட பிஸினஸ் முக்கியமா?''

கண்களில் உயிரைத் தேக்கிக் கொண்டு ஏக்கத்துடன் கேட்ட மனைவியைப் பார்த்தான்.

''சொல்லுங்க ஜெய்.''

இப்படிக் கேட்டால் என்ன சொல்வது.

கணவனின் மௌனம் ஆமாம் என்று சொல்லாமல் சொல்வதைப் போலிருக்க, அதற்கு மேல் ஸ்வேதாவால் அங்கு நிற்க முடிந்திருக்கவில்லை.

வெளியே வந்து விட்டிருந்தாள்.

இன்னும் சில வினாடிகள் அங்கிருந்தால் அழுது விடுவோமோ என்னும் பயத்தில்தான் அவள் அப்படி வெளியே வந்ததும்,

இல்லையடா எனக்கு பிஸினஸ் என்ன இந்த உலகத்திலுள்ள அனைத்தையும் விட நீதான் முக்கியம் என்று

தனக்குள் சொல்லிக் கொண்ட ஜெயவர்த்தன், அதை செயலிலும் காட்டிவிட முடிவு செய்திருந்தான்.

உடனே மொபைலை எடுத்து, இன்று என்னை எதிர் பார்க்க வேண்டாம். மீதியிருப்பவற்றை நீங்களே பார்த்துக் கொள்ளுங்களென்று சொல்லி விடுவதற்காகக் கம்பெனிக்கு அழைத்தான்.

ஆனால் எதிர்முனையிலோ பேசத் தொடங்கு முன்பே பெரும் பிரச்சனை ஒன்றை முன் வைத்தார்கள்.

அப்பொழுது தான் புதிதாகத் தொடங்கப்பட்ட நிறுவனம் என்பதால் அவனளவிற்கு ஏன் அவனில் பாதியளவு திறமை வாய்ந்தவர்கள் கூட அப்பொழுது அங்கே இருக்கவில்லை. இருந்த சிலரும் பழைய கம்பெனியின் ஆடர்களை முடிப்பதற்காக அங்கே இருந்தார்கள். புதிய ஆட்கள் சொல்வதை அப்படியே செய்வார்கள். அவ்வளவே மற்றபடி அவர்களிடம் பெரிதாக எதையும் எதிர்பார்க்க முடியாது.

மேலும் சில வினாடிகள் பேசிய ஜெயவர்த்தனுக்குத் தான் சென்றால் அன்றிப் பிரச்சினை தீராது, ஏன் இன்னும் பெரிதாகி விடுவதற்கும் வாய்ப்பிருப்பது தெளிவாகி விட்டிருக்க, எதற்காக அழைத்தோம் என்பதையே மறந்து மீண்டும் காரை எடுத்துக் கொண்டு கம்பெனிக்குப் பறந்தான்.

அப்படிச் சென்றவன், மீண்டும் வீடு திரும்ப இரவு பன்னிரண்டு மணிக்கு மேலேயே ஆகி விட்டிருந்தது.

டைனிங் டேபிளில் பதமாக ஹாட் பாக்ஸில் எடுத்து மூடி வைக்கப்பட்டிருந்த உணவை ருசி கூடப் பார்க்கத் தோன்றாமல் விழுங்கி விட்டு அறைக்கு வந்தவன், மனைவி நன்கு உறங்கி விட்டிருந்ததைக் கண்டான்.



சத்தம் செய்யாமல் அறைக் கதவைத் தாளிட்டு விட்டு சென்று குளித்து பிரஸ் செய்து விட்டு படுக்கைக்கு வந்தான்.

குழந்தைத் தனமான முகத்துடன் குறுகிப் படுத்திருந்த மனைவியைக் கண்டவனுக்கு அப்படியே அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல மனம் ஏங்கியது.

ஆனாலும் ஆழ்ந்து உறங்குபவளை எப்படி...

மனைவியிடம் அசைவு தெரிய, அவளையே பார்த்தான்.

தூக்கத்திலேயே திரும்பிப் படுத்தவள், கணவன் வந்து விட்டது தெரிய லேசாகக் கண்களைத் திறந்து பார்த்தாள்.

அப்படிப் பார்த்தவளுக்கு அதற்குப் பிறகு தான் கணவனும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவனுடைய கண்களில் தெரிந்த தாகம் தன்னையும் ஏதோ செய்ய, கண் கொட்டாமல் பார்த்தாள்.

"ஸ்வேதா."

கணவன் அருகில் வந்திருக்க அவனுடைய வாசனையில் உடல் சிலிர்த்துப் போனாள்.

"என்னடா..." என்று கேட்டுக் கொண்டே மனைவியை அள்ளி எடுத்திருந்தவன், எல்லையற்ற ஆசையுடன் அவளுடைய முகம் நோக்கிக் குனிந்திருந்தான்.

இன்னும் சில வினாடிகள் சென்றிருந்தால் கணவனின் கைகளில் தன்னை மறந்தும் போயிருப்பாள்.

ஆனால் அதற்குள் நன்றாக விழித்துக் கொண்டு விட்டிருந்தாள்.

மாலையில் வந்து விட்டு திடீரென்று தன்னிடம் சொல்லாமலே கூடப் போனானே என்பது நினைவு வர,

அப்பொழுது போல மீண்டும் மனம் பாரமாகி விட்டிருந்தது.

வினாடியில் அனைத்துமே கசந்து போய் விட்டிருந்தது.

''என்னடா?''

''ஸ்வேதா...''

இப்பொழுது கணவனின் அணைப்பு மேலும் இறுக, ''எல்லாம் இந்த உடம்பு செய்யற வேலை அதுதான் உங்களப் பாடாப் படுத்துது இல்ல?'' என்றாள்.

மனைவியின் வார்த்தைகள் ஓங்கிக் கன்னத்திலேயே அறைந்ததைப் போலிருக்க, சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்தான்.

அதுவே மிகவும் அதிகப்படியாக இருக்க, மீண்டும் தனது வார்த்தைகளெனும் கூர் அம்புகளால் குத்திக் கிழித்தாள்.

''சரிதான், நான் இருக்கறதே அதுக்காகத்தான வாங்க எடுத்துக்கோங்க'' என்றாள்.

அந்த வார்த்தைகளில் கையிலிருந்த மனைவியை மீண்டும் படுக்கையில் விட்டிருந்த ஜெயவர்த்தன், அதே உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் அங்கிருந்து சென்றிருந்தான்.

தான் அந்த மாதிரி வார்த்தைகளைப் பயன்படுத்தியதும், பேசியதும் மன்னிக்கவே முடியாத ஒன்று தான் எனபது தெளிவாகத் தெரிந்திருந்தாலும், கோபத்துடன் கணவன் சென்றதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

பைத்தியம் போலக் கண்ணீர் வடித்தாள்.

கணவனின் அருகாமைக்காக ஏங்கினாள்.



அடங்கா ஆவலுடன் மனைவியை நெருங்கியிருந்த ஜெயவர்த்தனுக்கு அவளுடைய வார்த்தைகள் மனதைக் கல்லாக்கி விட்டிருந்தன.

பக்கத்து அறைக்குச் சென்று சிகரட் ஒன்றைப் பற்ற வைத்திருந்தான்.

பிறகு வெகுநேரம் குறுக்கும் நெடுக்கும் நடந்தவன் கால்கள் ஓய்ந்த பின் மீண்டும் படுக்கைக்குத் திரும்பினான்.

கணவன் வந்ததும், எழுந்து அவனருகில் சென்றாள் ஸ்வேதா.

கணவனுக்கு முன்பாக வந்து நின்றவள் அவனை நிமிர்ந்து பார்த்துக் கேட்டாள்.

''என்ன வெறுத்துடுவீங்களா ஜெய்?''

''சரிதான் நான் ரொம்ப மோசம், அதனால நீங்க என்ன வெறுக்கறது தான் நியாயம்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

''கொஞ்ச நாளாவே நீங்க டாடி மாதிரி அவர் செய்ற மாதிரியே தான் தொழிலுக்குள்ளேயே மூழ்கிப் போயிட்டிருக்கீங்க. கல்யாணத்துக்கு முன்னாடி மாதிரியே ரொம்ப தனிமையா, நிராதரவா ஃபீல் பண்றேன் ஜெய்.''

''மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு. எப்பப் பார்த்தாலும் அழுகை தான் வருது. சரிதான் நான் இந்த உலகத்துக்கு வந்ததே அழுதுட்டே இருக்கணும்னுதான்'' என்றவள்.

''ஆனாலும் ரொம்ப பயமா இருக்கு ஜெய்'' என்றாள்.

''எனக்குக் காசு பணமெல்லாம் வேண்டாம் ஜெய், தினமும் கொஞ்ச நேரமாவது நீங்க என் முகம் பாத்து சிரிச்சுப் பேசற பாக்கியம் மட்டும் போதும். அத எனக்குத் தருவீங்களா ஜெய்?''

மனதில் இருந்தவற்றையெல்லாம் கொட்டியிருந் தவள், என்னை மன்னிக்கவே முடியாதா என்பதைப் போலப் பார்த்தாள்.

அப்பொழுதும் கணவனிடமிருந்து எந்த எதிரொலியும் இல்லாது போக கலங்கிய கண்களுடன் திரும்பி நடந்தாள்.

ஆனால் அந்த வினாடியில் மனைவியின் கையைப் பிடித்திருந்த ஜெயவர்த்தன், தன்னை நோக்கித் திரும்பி யிருந்தவளை என்ன இவ்வளவுதானா அல்லது இன்னும் இருக்கிறதா என்பதைப் போலப் பார்த்தான்.

மனைவியின் உதடுகள் அழுகையில் துடிக்க, என் இப்படி என்னை வருத்தியது போதாதென்று உன்னை யும் வருத்திக் கொள்கிறாய் என்பதைப் போலப் பார்த் தான்.

அப்படியே மனைவியைப் படுக்கைக்கு அழைத்து வந்தவன், அவளை அமர வைத்துப் பின் தானும் அரு கில் அமர்ந்தான்.

அமர்ந்தவன் நெருங்கி அவளுடைய வயிற்றைத் தொட்டான்.

''எல்லாம் இந்த குழந்தைக்காகத் தாம்மா ஒரு நல்ல அப்பாவாவும் இருக்க வேண்டாமா?'' என்றான்.

''அதே சமயம் உன்னையும் இனிமேல் கஷ்டப்படுத்தாம இருக்க முடிஞ்ச அளவுக்கு முயற்சி பண்றேன்'' என்ற வன் ''சரி எனக்குத் தூக்கம் வருது நீயும் போய்ப் படுத் துக்கோ'' என்று கால்களை நீட்டித் திரும்பிப் படுத்திருந் தான்.

கணவனுக்காக ஏங்கிய மனதை முயன்று கட்டுப் படுத்திக் கொண்டு வந்து படுத்திருந்த ஸ்வேதா வழக்கம் போல ஓசையற்றுக் கண்ணீர் வடித்தாள்.



ஏனோ இனி வரப் போகும் நாட்களை நினைத்துப் பார்க்கவே மிகவும் பயமாக இருந்தது.

திருமணமானதிலிருந்து இத்தனை நாட்களும் தன்னை அவனுடைய எல்லையற்ற அன்பில் திக்குமுக் காடச் செய்துவிட்டு, இப்பொழுது திடீரென்று இவ் வளவு ஒதுக்கிப் போகிறானே.

அதற்கு அவன் முன்பிருந்தே சராசரியாக நடந்து கொண்டிருந்திருக்கலாம் என்று நினைத்தவள் பிறகு அதற்காகவும் கண்ணீர் வடித்தாள்.

ஆனால் அதெல்லாம் சிறிது நேரம் தான்.

பிறகு அப்படியே தூங்கிப் போயிருந்தாள்.

## 36

வழக்கம் போல ஸ்வேதா காலையில் விழித்து எழுந்த போது, கணவன் அலுவலகத்திற்குக் கிளம்பிச் சென்று வெகு நேரமாகி விட்டிருந்தது தெரிந்தது.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அத்தையைத் தேடிச் சென்றாள்.

''வாடாம்மா, பல் துலக்கிட்டயா?''

''ஆச்சு அத்தை.''

''ஹார்லிக்ஸ் குடுக்கட்டுமா?''

''ம்கூம் காபி...''

''சரிதான் ரெண்டு நிமிஷம்'' என்றவர்,

''ஏன் ரொம்ப அசதியா இருக்க?'' என்று கேட்டார்.

''எப்பவும் போலத் தான அத்தை. வாந்தி வர்ற மாதிரி யிருக்கு லேசாத் தல சுத்துது...''

''சரிதான், உக்காருமா.''

''பரவாயில்ல அத்தை, எனக்கு ஏதாவது வேல குடுங்களேன்.''

''அது சரி, இந்த சமையல் வாசத்துல திரும்பவும் குடலப் பிரட்டிட்டு வரும். இந்தா காபி டைனிங் ரூம் சேர்ல போய் உக்காந்துக்கோ போ.''

அத்தை கொடுத்த காபியை வாங்கிக் கொண்டு நகரப் போனவள், அவருடைய அழைப்பில் மீண்டும் நின்றாள்.

''என்ன அத்தை?''

''உன் வீட்டுக்காரர் ஏதாவது சொன்னாரா?''

..............

புரியாமல் பார்த்தவளிடம் ''ரொம்ப ஒரு மாதிரியா இருக்கியேன்னு கேட்டேம்மா, வேறொன்னுமில்ல. போய் உக்காரு போ'' என்றார்.

ஸ்வேதாவின் பளிங்கு முகம் அவள் மனதிற்குள் நினைப்பதை அப்படியே பிரதிபலிப்பதாய் இருந்தது.

அப்படியிருக்கும்போது அது காஞ்சனாவின் கவனத்திற்குச் சென்றதில் ஒன்றும் ஆச்சரியமில்லையே.

நிச்சயம் மகனிடம் இதைப் பற்றிப் பேசித் தான் ஆக வேண்டுமென்று மனதிற்குள் குறித்து வைத்துக் கொண்டார்.

''அண்ணி.''

''வா லாவண்யா, என்ன காலேஜ் கிளம்பலையா?''

''ம்கூம், இன்னைக்கு லீவ்...''

''இன்னைக்கென்...''

''நான் லீவ் போட்டுட்டேன் அண்ணி.''

''ஏன், என்னா...''

''சும்மாதான் அண்ணி ப்ராஜக்ட் சம்பந்தமா பர்ச்சேஸ் நிறைய இருக்கு அதான்.''



''அப்படியா காபி சாப்பிடு லாவண்யா.''

''நான் குடிச்சாச்சு அண்ணி...''

''என்னமா சொல்லு?''

''இல்ல...''

''ம்.''

''பர்ச்சேஸ் பண்றதுக்கு நான் மட்டும் தான் போறேன். பஸ்ல போனா அதுக்கே நேரம் போயிடும்...''

''டோண்ட் வொரி லாவண்யா குட்டி நான் வர்றேன், கார் எடுத்துட்டு நாம ரெண்டு பேரும் போய்ட்டு வரலாம்.''

''உங்களுக்கு சிரமம் தான அண்ணி...''

''எனக்கென்ன சிரமம், வீட்ல வெட்டியா பொழுதப் போக்கறதுக்கு பதிலா ஒரு உருப்படியான வேலையாகுதேன்னு சந்தோஷப்படத்தான் முடியும். சரி சொல்லு எப்பக் கிளம்பலாம்?''

''பத்து மணிக்கு அண்ணி?''

''சரிதான் நான் ஒன்பதே முக்காலுக்கே கிளம்பிட்றேன். நீயும் அதுக்குள்ள ரெடியாயிடு.''

''ஆனா...''

''ம் இன்னும் என்ன?''

''அம்மா ஏதாவது சொல்வாங்க...''

''அதெல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. அத்தை கிட்ட நான் பேசிக்கறேன்'' என்று ஸ்வேதா முடித்துவிட்டிருக்க ''தேங்க்யூ அண்ணி'' என்று சந்தோஷமாகச் சென்றாள் லாவண்யா.

லாவண்யா சொன்னது போல முதலில் காஞ்சனா யோசித்தாலும் பிறகு சரிதான் போய் வாருங்களென்று சம்மதித்து விட்டிருந்தார்.

"ஆனா..."

"என்ன அத்தை?"

"போற இடத்துல உனக்குக் குடிக்கறதுக்கு அப்புறம் மதிய சாப்பாடெல்லாம்..."

"அட என்ன அத்தை நீங்க அதெல்லாம் நல்ல ஹோட்டலாப் பாத்து போய்க்கறோம் கவலப்படாதீங்க."

"ஆனாலும்..."

"இல்லேன்னா அவரோட கம்பெனி பக்கம் தான, அங்க போய்க்கறோம்."

"ம், அப்பிடி வேணும்னா செய்ங்க. அதோட அங்க வர்ற சாப்பாடும் நமக்குத் தெரிஞ்ச ஒரு பாட்டி, வீட்டு முறைப்படி நல்ல சுத்தமா செஞ்சு குடுக்கறது தான்" என்று சந்தோஷமாக ஒப்புக் கொண்டார்.

"ஆனா அங்க போறது சர்ப்ரைஸா இருக்கட்டும் அத்தை. நீங்க அவருக்கு போன் பண்ணி எதுவும் சொல்லிட வேண்டாம்."

"சரிதான்மா உன் வீட்டுக்காரர்கிட்ட நான் எதுவும் பேசிட மாட்டேன் போ" என்றார்.

"அச்சச்சோ, அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்தை. என்ன பண்ணிட்டிருக்கார், எப்படி வேலை நடக்குதுன்னு நான் போய் ஒரு மிரட்டு மிரட்டிக்கறேன்" என்று புன்னகையுடன் சொன்னாள்.

"ம், அப்படி சொல்லு கண்ணம்மா. போய் நீ குடுக்கற சவுண்ட்ல சும்மா அரண்டு போயிடணும்" என்று சிரித்தவர் "ஆனா பாத்துமா அவனே ஒரு முசுடு, மூக்குக்கு மேல கோபப்படுவான்" என்றார்.

"ம், என் வீட்டுக்காரர் ஒண்ணும் அந்த மாதிரியெல்லாம் கிடையாது. இனிமேல் எங்கிட்டப் பேசும்போது கொஞ்சம் யோசிச்சுப் பேசுங்க..."



மருமகளின் பாவனையில் இப்பொழுது நன்றாகவே சிரித்து விட்டிருந்தார் காஞ்சனா.

தனது கணவனைப் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணமே இந்தச் சிறு பெண்ணை எவ்வளவு சந்தோஷப் படுத்தி விட்டதென்று நினைத்தவருக்கு உள்ளம் உருகி விட்டிருந்தது.

ஆனால் அங்கு அந்த சுமிதா இருப்பாளே.

இந்த மென்மையான பெண்ணின் உள்ளம் வாடி விட அது ஒன்றே போதாதா.

"கிளம்பலாம் அண்ணி" என்று லாவண்யா வந்து விட்டிருக்க, மீண்டுமொரு முறையும் காஞ்சனாவிடம் சொல்லிக் கொண்டு பெண்கள் இருவரும் கிளம்பினர்.

ப்ராஜக்டுக்கு பொருட்களை வாங்கவென்று கிளம்பி வந்தவர்களுக்கு, அவர்கள் நினைத்ததை விடவும் வேலை சுலபமாகவும் எளிதாகவும் முடிந்தது.

முதலில் எடுத்த உடனேயே ஒரு பெரிய கடைக்குச் சென்றதால், அங்கு லாவண்யா கேட்ட அனைத்தையுமே வைத்திருந்தார்கள்.

விலையைப் பற்றி அவள் தனது ஆட்சேபணையைத் தெரிவிக்கும் முன் பில் கொடுக்கச் சொல்லி, பணத்தையும் எடுத்துக் கொடுத்திருந்தாள் ஸ்வேதா.

"என்ன அண்ணி இது..."

"எது?"

"விலை கொஞ்சம் அதிகமாத் தெரியுது. அதுக்குள்ள பணத்தக் குடுத்துட்டிங்களே."

"அப்படியொன்றும் தெரியாமலா, முதல்ல நல்லாப் பாரு எல்லாமே பிராண்டட் திங்க்ஸ். ஒரே இடத்துலயும் வாங்கியாச்சு, அதுக்கு முதல்ல நீ சந்தோஷப்படு."

''அது சரிதான்...''

''நாலு கட ஏறி இறங்கி டயர்டாகி கடைசில முடியாம இங்க வர்றதுக்கு ஈஸியா வேல முடிஞ்சது வா'' என்று அவர்கள் கொடுத்த கவர்களை வாங்கிக் கொண்டு லாவண்யாவுடன் வெளியே வந்தாள் ஸ்வேதா.

''எங்கிட்ட ஒன்னக் குடுங்க'' என்று ஒரு கவரை வாங்கிக் கொண்டவள் ''ரொம்ப தேங்க்ஸ் அண்ணி'' என்றாள்.

''எதுக்கு?''

''இல்ல எனக்கிந்த வேல மல மாதிரியிருந்தது. ஆனா ரெண்டு மணி நேரத்துல எல்லாமே வாங்கியாச்சு.''

''சரிதான்.''

''அடுத்து எங்க அண்ணி?''

''உங்கண்ணா ஆபீஸ்க்கு.''

''ஏன், உங்க வீட்டுக்காரரோட ஆபீஸ்னு சொல்லுங்களேன்.''

''அப்பிடியும் வெச்சுக்கோ.''

''அண்ணி...''

''என்னமா?''

''அந்த சுமிதா...''

..............

''இல்ல அண்ணாவோட பி.ஏ.ன்னு ஒருத்தங்க இருந்தாங்க தான. அவங்க என்னவோ அண்ணாவோட ஃப்ரண்டாம் நேத்து தான் அம்மா சொல்லத் தெரிஞ்சுகிட்டேன்...''

''சரி.''

''எனக்கென்னவோ அவங்களப் பிடிக்கவே இல்ல அண்ணி.''

''ஏன்?''



''பத்மினி அண்ணிகிட்ட எப்பப் பாத்தாலும் அதாவது கம்பெனி ஓபனிங் அன்னைக்கு தான் இரகசியம் மாதிரி பேசிட்டே இருந்தாங்க.''

''அடி அசடு இதுல என்ன இருக்கு'' என்று சாதாரணம் போலக் கேட்டுக் கொண்டே காரை ஸ்டார்ட் செய்தாள் ஸ்வேதா.

''என்னவோ தெரியல அண்ணி. ஆனா மனசுக்கு சரியாப் படல.''

அது சரி, யாருக்குத் தான் சரியாகப் பட்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டே காரை செலுத்தத் தொடங்கினாள்.

## 37

அடுத்த பத்து நிமிடங்களில் இருவரும் கம்பெனியை வந்தடைந்திருந்தனர்.

உள்ளே சென்றதும் ரிஸப்ஷனிலேயே இருந்தாள் அந்த சுமிதா.

திடீரென்று அவர்களை அங்கு எதிர்பார்க்கவில்லையென்பது அவளுடைய முகத்திலேயே தெரிந்து.

அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு ''வாங்க'' என்று வரவேற்றாள்.

இவளுடைய குணத்திற்கு இந்த அதிர்ச்சி சற்றும் பொருந்தவில்லையே என்று ஸ்வேதா மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்க ''அண்ணா இருக்காரா?'' என்று கேட்டாள் லாவண்யா.

அதற்கு ''ஒரு மெஷின் பராப்ளம் உள்ள லைன்ல பிஸியா இருக்கார். இன்னும் கொஞ்ச நேரத்துக்கு

பாக்கறது கஷ்டம்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது அவளுக்கு முன்பாக இருந்த இன்டர்காம் ஒலிக்க அதை அட்டெண்ட் செய்து பேசத் தொடங்கி விட்டிருந்தாள்.

''அண்ணாவப் பாக்க முடியாதுன்னு நம்மகிட்டயே சொல்றதப் பாத்தீங்களா அண்ணி. இப்படி சொல்ல எவ்வளவு தைரியமிருக்கணும்?''

மெல்லிய குரலில் சொன்ன லாவண்யாவைப் பார்த்தாள் ஸ்வேதா.

ஆனால் அவளுக்கோ அப்பொழுது அவளுடைய தந்தையின் நினைவு தான் வந்தது.

எத்தனை முறை தானே தந்தையைப் பார்க்க வேண்டுமென்று சென்றும் பார்க்க முடியாமல் திரும்பியது. அதே சமயம் வெகுநேரம் காத்திருந்து பிறகு பார்க்க நேர்ந்தது என அனைத்தும் அப்பொழுது போல நினைவிற்கு வந்தன.

எப்பொழுது ஒருவரைக் காத்திருந்து பார்க்க நேரிடுகிறதா, அப்பொழுது அவர் பெரிய மனிதர் ஆகிவிட்டார். அல்லது ஆகப் போகிறார் என்பது நிச்சயமாகி விட்டதல்லவா.

கணவனை நினைக்கப் பெருமையாக இருந்தது ஸ்வேதாவிற்கு.

தனது தந்தையைப் போல, இல்லையில்லை அவரை விடக் கூடப் பல மடங்கு கணவன் உயர வேண்டும்.

அதைத் தான் கண் குளிரப் பார்க்க வேண்டும்.

''உக்காருங்க.''

சுமிதா சொல்ல ''அவர் ரூம்ல வெயிட் பண்றோம்'' என்று லாவண்யாவுடன் உள்ளே நடந்தாள் ஸ்வேதா.



''நம்மகிட்டயே எப்படி சொல்றாங்கன்னு பாருங்கண்ணி...''

''அது சரிதான் லாவண்யா குட்டி முக்கியமான வேலைல இருக்கும்போது பாதில வந்தா அதுக்கப்புறம் திரும்பவும் போய் தொடக்கத்திலிருந்து செய்ய வேண்டியதாயிடும் இல்லையா?''

அண்ணி சொல்வதிலிருக்கும் நியாயம் புரிந்தாலும் அதை ஒப்புக் கொள்ள மனம் வந்திருக்கவில்லை.

அந்த சுமிதாவின் மேல் தான் கோபம் வந்தது.

வந்தும் அரை மணி நேரத்திற்கும் மேலேயே ஆகி விட்டிருக்க, பொறுமை இழந்து போனாள் லாவண்யா.

''சரி அண்ணி நானொரு ஒரு மணி நேரத்துல வந்துட்றேன். இல்லன்னா அண்ணா வந்ததுக்கப்புறம் கூப்புடுங்க.''

''தனியா எங்க போகப் போற?''

''காருக்குதான். போன் கார்ல இருக்கு அண்ணி, போய் ஃப்ரண்ட்கிட்டப் பேசிட்டு வர்றேன்.''

''ஒரு மணி நேரம் பேசற ஃப்ரண்டா! ஏய்...''

''அச்சச்சோ, அப்பிடிப் பாக்காதீங்க அண்ணி.''

''உண்மைய சொல்லு, அது பாய் ஃப்ரண்ட் தான?''

''க்கும், சும்மா பந்தா விட்டுக்கக் கூட எனக்கொரு பாய் ஃப்ரண்ட் கிடையாதாக்கும்'' என்றவள் ''வந்துட்றேன் அண்ணி'' என்று சென்றாள்.

மேலும் பத்து நிமிடங்களும் சென்றிருக்க கையிலிருந்த நாளிதழை மேலோட்டமாகப் படித்து முடித்திருந்தாள் ஸ்வேதா.

அதே நேரம் யாரோ வரும் அரவம் கேட்க எம்.டி. ஸீட்டில் சென்று அமர்ந்திருந்தாள்.

நினைத்தது போலவே கணவன் உள்ளே வர, ''வாப்பா வா...'' என்று அதிகாரத் தோரணையுடன் பார்த்தாள்.

மனைவியை அங்கு அதுவும் தனது இருக்கையில் கனவிலும் எதிர்பார்த்திருக்காத ஜெயவர்த்தன் உண்மையிலேயே திகைத்துத்தான் போனான்.

''வேலையெல்லாம் எப்படிப் போகுது. ஆமா நீ ஒண்ணும் வேலைய ஒழுங்காவே செய்யறதில்லையாமே. என்ன உடம்புக்கு எப்படியிருக்கு?'' என்று அதே அதிகாரத் தோரணையுடன் கேட்டாள்.

மனைவியின்... இல்லையில்லை எம்.டி.யின் அந்த அதிகாரக் கேள்வியில் ''அப்படியெல்லாம் இல்லையே மேடம், என்ன பிடிக்காதவங்க யாரோ உங்ககிட்டத் தப்பா சொல்லிக் குடுத்திருக்காங்கன்னு நினைக்கறேன்'' என்று திக்கித் திணறி பதில் சொன்னான் ஜெயவர்த்தன்.

''அது சரி, நீ தப்பு செஞ்சுட்டு மத்தவங்களையும் வேற தப்பு சொல்றியா? போய் ஒழுங்கா வேலையப் பாரு. இல்லன்னா ஸ்ட்டக் கிழிச்சிடுவேன்...''

''ஐயய்யோ, அப்பிடியெதுவும் செஞ்சுடாதீங்க மேடம். இப்பத்தான் கல்யாணம் வேற ஆயிருக்கு. என் பொண்டாட்டி வேற...''

''ம், என்ன சொல்லு?''

''கொஞ்சம் ஒரு மாதிரி...''

''என்னது?'' என்ற ஸ்வேதாவால் அதற்கு மேல் முடிந்திருக்கவில்லை, ஏன் ஜெயவர்த்தனுக்கும்.

இருவருமே தங்களை மறந்து சிரிக்கத் தொடங்கி விட்டிருந்தனர்.

முதலில் சிரிப்பை அடக்கிக் கொண்ட ஸ்வேதா ''என்ன உன் பொண்டாட்டி ஒரு மாதிரியா?'' என்று பொய்யான



கோபத்துடன் புன்னகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு கேட்டாள்.

''அதையேன் மேடம் கேக்கறீங்க, அதுவும் உங்ககிட்ட சொல்றதுக்கென்ன?'' என்று மிக அருகில் வந்திருந்தவனை, ''யோவ் தள்ளிப் போ நீ தான் ஒரு மாதிரி போலிருக்கு'' என்று கோபத்துடன் சொன்னாள்.

''ஸ்வேதா...''

ஏனோ கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போயிருக்க ஆசையுடன் வந்து மனைவியின் கைகளைப் பிடித்துக் கொண்டான் ஜெயவர்த்தன்.

அந்த நிலையில் கணவனைப் பார்த்த ஸ்வேதாவும் அந்த வினாடியில் தன்னிலை மறந்து போய்க் கணவனின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

அப்படி சில வினாடிகள் தான் சென்றிருக்க வேண்டும். யாரோ உள்ளே வரும் அரவத்தில் இருவரும் நடப்பிற்கு வந்திருந்தனர்.

வந்தவள் சுமிதா.

''ஸாரி...''

''பரவாயில்ல வா...'' என்ற ஜெயவர்த்தன் வெகு இயல்பாக அங்கிருந்த மற்றொரு இருக்கையில் அமர்ந்து கொண்டு என்னவென்று கேட்டான்.

ஆனால் அந்த நேரத்தில் ஸ்வேதாவிற்குத் தான் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

முக்கியமாக முகம் இரத்த நிறம் கொண்டு விட்டிருக்க, அதை பேப்பர் படிப்பதைப் போலக் குனிந்து மறைத்துக் கொண்டாள்.

சில வினாடிகளில் அந்த சுமிதா சென்றதும் ''ம் அப்புறம்'' என்று மீண்டும் புன்னகையுடன் திரும்பி மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

ஏனோ அந்த வினாடியில் கணவனைப் பார்த்த வளுக்கு சற்றுப் பொறாமையாகக் கூட இருந்தது.

இவனால் மட்டும் எப்படி, எந்த நிலையிலும் வெகு இயல்பாக சூழ்நிலையைச் சமாளிக்க முடிகிறதென்று.

''ஸ்வேதா.''

''என்ன கேட்டிங்க?''

''இங்க எப்படி சர்ப்ரைஸா...''

கணவன் கேட்க, விஷயத்தைச் சொன்னாள்.

''ஸாரி ஜெய்.''

''என்ன திடீர்னு?''

''வந்து உங்கள வேலை செய்ய விடாம டிஸ்டர்ப் பண்ணிட்டிருக்கேன்.''

''அப்பிடியா!''

''அப்ப இல்லையா?''

''எப்பிடியும் இது லஞ்ச் டைம். அதோட...''

''அதோட?''

"இது உன் ஆபீஸ், உன் பிஸினஸ், ஏன் நானும் கூட உன் சேவகன் தான். நீ மட்டும் ஒரு வார்த்தை சொல்லு...''

''சரிப்பா சரி, பசி மயக்கத்துல உளறினது போதும்.''

''என்னது உளறலா?''

''பின்ன?''

''வேண்டாம்.''

''என்ன வேண்டாம்?''

''சரிதான் விடு.''

''அட, விட்டுட்டிங்க...''

''எல்லாத்தையும் சேத்து வெச்சு நைட் பாத்துக்கறேன்.''



அப்படிச் சொன்ன கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

அப்பொழுது மனைவியின் கண்களில் தெரிந்த வேதனை ஜெயவர்த்தனை என்னவோ செய்திருக்க, பேச்சை மாற்றியிருந்தாள் ஸ்வேதா.

அவள் அப்படிச் செய்ததற்கும் காரணம் இருந்தது.

ஆசையுடன் நெருங்கிய கணவனை வார்த்தைகளாலும் கூர் அம்புகளால் குத்திக் கிழித்தது தன்னுடைய தவறு தான் அல்லவா.

இனிமேல் எப்பொழுதும் அப்படி நடந்து கொண்டு விடக் கூடாது என்று வேதனையுடன் நினைத்துக் கொண்டாள்.

சில நிமிடங்களில் லாவண்யா வந்து சேர, தொடர்ந்து சிறிது நேரத்தில் மதிய உணவும் வந்து சேர்ந்தது.

பசி வயிற்றைக் கிள்ள, மூவரும் ஒரு பிடி பிடித்திருந்தார்கள்.

''பரவாயில்லண்ணா நீங்களாவது தினமும் மதியம் நல்ல சாப்பாடு சாப்புட்றீங்க'' என்ற தங்கையை ''அப்ப அம்மா சமையல மோசம்னு சொல்றியா?'' என்று கேட்டான் ஜெயவர்த்தன்.

''அதான?'' என்று ஸ்வேதாவும்,

''அட்டா புருஷன், பொண்டாட்டி ரெண்டு பேரும் விட்டா அடிச்சிருவீங்க போலிருக்கு. நான் காலேஜ்ல ஆறி அவலாப் போனத சாப்புட்டுட்டிருக்கும்போது நீங்க இங்கயும், அண்ணி வீட்ல அம்மா சமயலையும் ஒரு புடி புடிக்கறீங்கன்னு சொன்னேன்.''

''நல்லவேளை அத்தை கிட்டப் போட்டுத் தரலாம்னு நினைச்சேன், தப்பிச்சுட்ட.''

''அந்த மாதிரி போட்டுத் தர்ற வேலையயெல்லாம் உங்களால எப்பவுமே செய்ய முடியாது'' என்று சர்வ நிச்சயத்துடன் சொன்னாள் லாவண்யா.

''அடடா, சரி விடு அப்படியே நினைச்சுக்கோ.''

''அப்புறம் அண்ணா, இந்த அண்ணியப் பாருங்க பர்ச்சேஸ் போனப்ப என்னக் குடுக்க விடாம அவங்களே பணத்தக் குடுத்துட்டாங்க.''

''ஏன் அதுல என்னிருக்கு? எதுக்கு பிரிச்சுப் பேசற?''

''அதனா, நல்லாக் கேளுங்க ஜெய்.''

''அன்னைக்கும் அப்பிடித்தான்...'' என்று தொடங்கி விட்டுப் பாதியில் நிறுத்தியிருந்த தங்கையை ''ம் என்னமா?'' என்று பார்த்தான்.

அன்று ஸ்வேதாவுடன் ஊருக்குப் போனபோது அவள் வாங்கிக் கொடுத்திருந்தவற்றையெல்லாம் சொல்லி விட்டிருந்தாள் லாவண்யா.

''அப்பவே வேண்டாம்னு சொல்லியிருந்திருக்கணும் அத விட்டுட்டு இப்ப...''

''அதில்லண்ணா, ஏதோ உங்ககிட்ட மறைக்கிற மாதிரி தப்பாத் தோணுச்சு அதான் சொன்னேன்.''

''அப்ப அண்ணாவும், தங்கையும் என்ன வேற்று மனுஷியாதான் பாக்கறீங்க இல்ல?''

''அச்சச்சோ என்ன அண்ணி நீங்க...'' என்று லாவண்யா சமாதானம் சொல்ல வர,

''ஆமாம் அப்படித்தான்னு உண்மையாவே சொல்லேன். லாவண்யா அண்ணா இருக்கேன் தான எதுக்கும் பயப் படாத'' என்றான் ஜெயவர்த்தன்.

''ம்கூம் நானில்ல அண்ணி, என்ன விட்ருங்க'' என்று லாவண்யா அவசரமாகச் சொல்ல, ''உங்கள..'' என்று கணவனைப் பிடித்துக் கிள்ளினாள் ஸ்வேதா.



''வேண்டாம்மா இதையெல்லாம் நாம தனியா வெச்சுக்க லாம்'' என்று ஜெயவர்த்தன் மனைவியைப் பார்த்து சாதாரணமாகவே சொல்லியிருந்தாலும், ஏனோ அந்த வினாடியில் ஸ்வேதாவின் முகம் சிவந்து போயிருந்தது.

''ம்கூம், இனி நான் இங்க அதிகப்படி'' என்று லாவண்யா எழுந்து கொண்டு விட்டிருக்க, ''என்ன அதிகப்படி?'' என்று கேட்டாள் ஸ்வேதா.

''ஒண்ணு அடிச்சுக்குவீங்க இல்லன்னா ஆப்போஸிட்டா நடக்கும். எப்பிடிப் பாத்தாலும் எனக்கு இனி இங்க வேலை யில்ல'' என்று புன்னகையுடன் சொன்ன தங்கையை பார்த்த ஜெயவர்த்தன் ''பரவாயில்ல நல்லாப் பேசப் பழகிட்ட'' என்றான்.

அண்ணனின் வார்த்தைகள் என்ன செய்ததோ உணர்ந்து ''ஸாரிண்ணா'' என்றாள்.

## 38

அதே நேரம் சுமிதா அனுமதி கேட்டுக் கொண்டு உள்ளே வர, அவளை என்ன என்பதைப் போலப் பார்த் தான் ஜெயவர்த்தன்.

அவள் விஷயத்தை சொல்ல ''சரி அனுப்பு'' என்றான்.

''சரிண்ணா நான் காருக்குப் போறேன்'' என்ற லாவண்யா ''கார்ல இருக்கேன் அண்ணி'' என்று ஸ்வேதா விடமும் சொல்லி விட்டுப் போனாள்.

சில வினாடிகளில் இரு ஆண்கள் உள்ளே வர அனுமதி கேட்க, அவர்களை வரச் சொன்னான் ஜெயவர்த்தன்.

வந்தவர்களை ''வாங்க'' என்று சந்தோஷமாக வரவேற் றான்.

அதே சந்தோஷத்துடன் ஜெயவர்த்தனுடன் பேசிய அவர்கள் இருவரும், அங்கிருந்த ஸ்வேதாவை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

"மேடம் நீங்க..."

ஏதோ கேட்க வருபவர்களைத் தானும் பார்த்தாள் ஸ்வேதா.

"நீங்க பாலகிருஷ்ணன் ஸாரோட டாட்டர் தான?"

"ஆமாம், உங்களுக்கு அப்பாவத் தெரியுமா?"

"என்ன மேடம் இப்படிக் கேட்டுட்டிங்க? ஸாரால தான் நாங்களே இன்னைக்கு இந்த நிலைமைக்கு வந்திருக்கோம். அவர் எங்களுக்கு செஞ்ச உதவி கொஞ்சமில்ல, அந்த உதவிய எந்தக் காலத்துக்கும் மறக்கவும் முடியாது" என்றனர்.

"ஆமா நீங்க இங்க..."

ஜெயவர்த்தன் விஷயத்தைச் சொல்ல இப்பொழுது முன்னைவிட சற்று அதிகமாகவே தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மேலும் சில நிமிடங்களும் இருந்து பேசி விட்டுத் தங்களுக்குக் கிடைக்கப் போகும் ஆடரை மீண்டுமொரு முறை உறுதி செய்து கொண்டு மரியாதையுடன் இருவருக்கும் நன்றி சொல்லி விட்டு அவர்கள் இருவரும் அங்கிருந்து கிளம்ப பந்தாவாக சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டே திரும்பி மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

"என்ன ஸார்?"

"பாத்தியா ஐயாவப் பத்தி என்ன சொல்லிட்டுப் போறாங்கன்னு?"

"அதையும் தான் நீங்களே சொல்லிடுங்களேன்."



"மாமா அடைஞ்சிருக்கற அந்த அபரிதமான வெற்றிய இன்னும் சில வருஷங்கள்லயே நான் எட்டிப் பிடிச்சடு வேன்னு சொல்றாங்க..."

"சரி அதுக்கு?"

"மாமாவோட நிலைய எட்டிப் பிடிக்க சில வருஷங்களாகுதோ, இல்ல அதுக்கு முன்ன பின்ன ஆகுதோ அது வேற விஷயம் ஆனா..."

"ம்."

"ஆனா தொழில் தான் முக்கியம்னு உன்ன அலட்சியப் படுத்த மாட்டேன்டா, எனக்கு உன் சந்தோஷமும் நிம்மதியும் தான் ரொம்ப ரொம்ப முக்கியம். அத நீ புரிஞ்சுக்கணும்" என்றான்.

முதல் நாள் இரவுப் பேச்சின் எதிரொலி என்பது புரிந்தது.

"புரியுது ஜெய்."

"முக்கியமா தொழிலக் குடும்பத்துக்குள்ள கொண்டு வர மாட்டேன், ரெண்டையும் மிங்கிள் பண்ண மாட்டேன். எனக்கு எப்பவுமே அது வேற, இது வேற தான்."

"சரிதான் ஜெய்" என்று புன்னகையுடன் தன்னைப் பார்த்த மனைவியைப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

அந்தப் பார்வையின் பொருள் புரியாமல் ஸ்வேதா பார்க்க, "அதே சமயம் மாமாவும் ஒண்ணும் உன்ன அலட்சியப்படுத்திட்டு தொழிலப் பாக்கலைங்கறத நீ புரிஞ்சுக்கணும்" என்றான்.

"ஓ, அது எப்பிடி சொல்றீங்க?"

"ஆமாம்மா, அதக் கண்டுபிடிக்க பிரமாத மூளையெல்லாம் ஒண்ணும் தேவையில்ல. உம்மேல மாமா வெச்சிருக்கற பாசத்துலயே அது தெளிவாத் தெரியுதே" என்றான்.

''ம், அப்புறம்.''

''என்னதான் நேரம் போறது தெரியாம நான் இங்க பிஸி னஸ்ல மூழ்கிப் போய்ட்டாலும் சாயங்காலம் ஆனதுமே வீட்டு... அதாவது உன் ஞாபகம் வந்துடும். எப்படா வீட் டுக்கு வந்து சேருவோம் உன்னப் பார்ப்போம்னு மனசு அலைபாயும்.''

''அப்பிடிப் பாக்காதமா. இப்ப சில வாரங்களா இருக்கற நிலைய வெச்சு எந்த முடிவுக்கும் வந்துடாத. பெரிய இன்வெஸ்மென்ட் போட்டிருக்கேன். எம்மேல நம்பிக்க வெச்சு நான் நல்லாப் பண்ணிக் குடுப்பேன்னு என்னத் தேடி வந்த புது ஆடர்கள் நிறைய கையிலிருக்கு. நல்ல தொடக்கம் பாதி வெற்றிக்கு சமம்னு சொல்லு வாங்க. அதனால நான் இப்ப அதிக உழைப்ப போட்டாக வேண்டிய கட்டாயத்துலே இருக்கேன். இன்னும் சில மாசங்கள்லயே பேங்க் கடனக் கட்டிடலாம். அதாவது கைல இருக்கற ஆடர்கள வெற்றிகரமா முடிச்சுட்டாப் போதும்.''

''அதுக்கப்புறம் இதே ஆடர்கள் நமக்குத் தொடர்ந்து வர ஆரம்பிச்சுடுங்கறதோட, நாளுக்கு நாள் அது டபு ளாகும். ஏன் அதுக்கு மேலயும், அதே சமயம் புது ஆடர் களும்.''

''அதுக்குள்ள கம்பெனில எல்லாமே ஸிஸ்டமைஸ் ஆயிடும். திறமையான ஸ்டாஃப்ஸ என்கரேஜ் பண்ணி அதிகமான முக்கியமான பொறுப்புகளக் குடுக்கலாம்.''

''அப்ப ஆட்டமேட்டிக்கா என் வொர்க் பிரஷர் குறையும். நீ எதிர்பாக்கறதும் நடக்கும்.''

கணவனின் பேச்சைத் தன்னை மறந்து கேட்கத் தொடங்கி விட்டிருந்த ஸ்வேதாவிற்கு, இன்னும் ஒரு சில வருடங்களிலேயே கணவன் ஒரு நல்ல நிலைக்கு வந்து விடுவானென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாகி விட்டிருந்தது.



''என்னடா?''

''நிச்சயமா நடக்கப் போறத சொன்னீங்க, சந்தோஷமா இருக்கு.''

''எதுல விட்டேன்... ம் மாமாவுக்கும் உம்மேல முழு அக்கறை இருக்கு. அவருக்கும் உனக்கு அடுத்தது தான் தொழில்...''

''அது எப்பிடி...''

''இருடா, நான் சொல்றதக் கேட்டு கொஞ்சம் யோசிச்சுப் பாத்தாலே உனக்கே புரியும். சாயங்காலம் ஆனதும் வீட்டுக்கு வரணும்னு என் மனசு பரபரக்குதுன்னா அதுக் கான உந்துதல் நீ. மாமாவும் அத்தை இருக்கும்போது வேற மாதிரி தான் அதாவது இப்ப நான் இருக்கற மாதிரி...''

''ஓ, அப்ப மம்மி போனதுக்கப்புறம் அவருக்கு வீடு பிடிக்காமப் போயிடுச்சு அதான? அதாவது என்னப் பிடிக்காம போயிடுச்சுங்கறத நீங்களே ஒத்துக்கறீங்க.''

''இல்லமா உனக்கு எப்பிடி சொல்லிப் புரிய வைக்கறது... ம் கொஞ்சம் விரக்தி வந்திருக்கும், உடனே ஓடி வரணுங்கற உந்துதல் கொஞ்சம் குறைஞ்சிருக்கும். நீ குட்டிப் பொண்ணா இருந்திருப்ப, அதனால உம்மேல பரிதாபம் தான் அதாவது உன்ன நல்ல நிலைக்குக் கொண்டு வரணும், உனக்காக ஒரு ஆரோக்கியமான எதிர் காலத்த உருவாக்கணும் இப்பிடியெல்லாம் தோனியிருக் குமே தவிர அவரோட ஆதங்கத்த, வருத்தத்த சொல்ற அளவுக்கு உன்ன மெச்சூர்டா பாத்திருக்க மாட்டார்

அப்படியிருக்கும்போது அவருக்கிருந்த ஒரே வடிகால் தொழில், அதுலயும் இயற்கையிலேயே தொழில் மேல கொஞ்சம் அதிக அக்கறையிருக்கறவரா மாமா இருக்கற தால அதுக்காகவே தன்னை ஈடுபடுத்திக் கிட்டதா உனக் குத் தோணியிருக்கு. நாளுக்கு நாள் உன்ன அறியாமலேயே நீ அப்பிடித் தாங்கற முடிவுக்கு வந்துட்ட.''

மனைவி யோசிப்பது தெரிய, மேலும் அதாவது உண்மையாகத் தனது மனதிற்குப் பட்டவற்றைச் சொன்னான் ஜெயவர்த்தன்.

''ஏன் உனக்கு எந்த விதத்திலாவது குறை வெச்சாரா? நீ சின்னப் பொண்ணா இருந்தப்ப நீ விளையாட்றதுக்கு நல்ல பொம்மைகள வாங்கிக் கொடுத்தது, நல்ல ஸ்கூல், காலேஜ்ல படிக்க வெச்சது, அதுக்கப்புறம் நல்ல மண வாழ்க்கை அமைச்சுக் குடுத்தது'' என்ற ஜெயவர்த்தன் குறுகுறுவென்று மனைவியைப் பார்க்க, அதே நேரம் ஸ்வேதாவும் கணவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''அப்ப இல்லையா?''

''என்ன பதில் சொல்லணும்னு எதிர்பார்க்கறீங்க?''

''உண்மைய...''

''அப்ப சரிதான்.''

''என்ன சரிதான்?''

''பிரமாதமான, வாழ்க்கைத் துணையத் தான் எனக் காக அமைச்சுக் குடுத்திருக்கார்.''

''சும்மா சொல்லக் கூடாது.''

''ப்ராமிஸ் ஜெய்.''

''அவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் எதுக்குமா? கொஞ்சம் அழுத்தமா சொன்னாலே போதுமே'' என்ற வன்,



''அதுக்கப்புறம்...''

''சொல்லுங்க ஜெய் இன்னும் என்ன?''

''அவரோட சின்ன வயசுலயே மனைவிய இழந்தும் அவர் ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கல? உங் கம்மா மேல இருக்கற அந்த அன்ப இன்னொரு பொண்ணு கூடப் பகிர்ந்துக்க பிடிக்காததாலயும், முடியாததாலயுமே மாமா அப்பிடிப் பண்ணாம இருந்ததுக்கான காரணம்னு நாம எடுத்துட்டாக் கூட, அப்படி இல்லாம இருக்கறதுக் கான வாய்ப்புகளும் இருக்கலாம் இல்லையா?''

அது என்ன என்பதைப் போலக் கணவனைப் பார்த் தாள் ஸ்வேதா.

''அதாவது புதுசா வர்றவங்க உன்ன எப்பிடி நடத்து வாங்களோ, அல்லது நல்லா நடத்தாம மாற்றாந்தாய் மனப்பான்மையோட நடத்தினா என்னாகும்னு பயந் துட்டுக் கூட அவர் இன்னொரு கல்யாணம் பண்ணிக் காம இருந்திருக்கலாம் இல்லையா...''

''ஒரு நிமிஷம் ஸ்வேதா, இப்பிடித்தான்னு சரியா எதுவும் தெரியாதப்ப நான் சொல்றதும் கூட தப்பாவே இருக்கலாம்.''

''புரியுது ஜெய்...'' என்றவளுக்குக் கண்களும் கூட லேசாகக் கலங்கி விட்டிருந்தன.

''என்னடா?''

''நான்... நான் எப்பவுமே விவரமில்லாத சின்னப் பொண்ணா தான் நடந்துக்கிட்டிருக்கேன் ஜெய், அதுவும் தப்பு தப்பா எம் மனசுக்கு பட்றதயே பெரிசா நினைச் சுக்கிட்டு.''

''வேண்டாம் ஸ்வேதா, நான் சொன்னது எல்லாமே ஜஸ்ட் இப்படியும் இருக்கலாங்கற யூகம் தான், இப்பிடித் தான்னு சர்வ நிச்சயமா நடந்தத இல்ல.''

"அதோட நாம ஒன்னத் தப்பாப் பாக்கும்போது அது தப்பாத் தெரியும். சரின்னு நினைச்சுட்டுப் பாக்கும்போது சரியாத் தெரியும். எதுவுமே நாம பாக்கற கண்ணோட்டத்துல தான் இருக்கு. நீ நல்ல விவரமான பொண்ணு சொல்றத யோசிச்சுப் பாக்க உன்னால முடியுங்கறதால, தான் எம்மனசுக்குப் பட்டதச் சொன்னேன்."

"தேங்க்ஸ் ஜெய்."

"எதுக்கு?"

"என் அறிவுக் கண்ணத் திறந்து விட்டதுக்கு."

"வேறொண்ணுமில்லையா?"

"வேறென்ன வேணும்?"

"இன்னைக்கு ஊருக்குப் போலாமா?"

"நிஜமாவா கேக்கறீங்க?"

"ஆமான்டா, பதினஞ்சு நாளாப் பாவம் நீயும் தனியா வாடிட்ட..."

"ஆனாலும் இப்ப இருக்கற நிலைமைல உங்களுக்கும் சிரமம் தான?"

"ஒரு நாள் மட்டும் தான, ஈவினிங் கிளம்பினா நாளைக்குக் காலைல வந்துடலாம்."

"போலாம் ஜெய் ப்ளீஸ்" என்று சிறு குழந்தை மிட்டாயை வெகு ஆவலுடன் எதிர்பார்ப்பதைப் போலச் சொன்ன மனைவியை புன்னகையுடன் பார்த்தான்.

"அப்ப போய்ட்டு வரலாம்மா, ஆனா அங்க வந்து உன்ன வீட்ல விட்டுட்டு ஒரு ஒன் அவர் வெளிய வேலையிருக்கு. அத மட்டும் பாத்துட்டு வந்துட்றேன். வேண்டாம்மா அப்படிப் பாக்காத, கட்டாயம் போய்த்தான் ஆகணுங்கறது இல்ல. அங்கயே போறதுனால அந்த வேலைய முடிச்சுடலாம்னு பாத்தேன்."



"சும்மா தான் அப்பிடிப் பாத்தேன், ஜாக்பாட் அடிச்ச மாதிரி இன்னைக்கு ஊருக்குப் போகப் போறேங்கறதே பெரிய சந்தோஷம். என்ன அப்பா வீட்ல விட்டுட்டு நீங்க தாராளமாப் போய் உங்க வேலைய முடிச்சுட்டு வாங்க."

"சந்தோஷம்" என்றவன் வீட்டிற்கு அழைத்து விஷயத்தை சொல்லிவிட்டு வேலை முடிந்து அந்த வழியாக வீட்டிற்குப் போகும் பெரிய அண்ணனை கம்பெனிக்கு வரச் சொல்லி அவனுடன் தங்கையை அனுப்பி வைத்தான்.

தன்னையும் இங்கு வீட்டில் அத்தையுடனும் அங்கே தந்தையிடமும் பேசச் சொல்லி விட்டு, தானும் சென்று ஊழியர்களுக்கு வேலைகளைக் கொடுத்து விட்டு மறு நாள் காலையில் தான் வந்து பார்க்கும்போது கட்டாயம் முடித்திருக்க வேண்டுமென்று சொல்லி விட்டு வந்த கணவனின் வேகத்தை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் ஸ்வேதா.

பி.ஏ. சுமிதாவையும் அழைத்து விஷயத்தை சொல்லி விட்டு அவளுக்கான வேலைகளையும் கொடுத்தான்.

தொடர்ந்து மேலும் சிலருடன் போனில் பேசியவன் அடுத்த பதினைந்து நிமிடங்களில் "கிளம்பலாமா?" என்று வந்து நின்றான்.

காதல் பொங்கக் கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா. அதே சமயம் பெருமையாகவும்,

அப்படியே இறுக அணைத்துக் கொள்ள வேண்டும் போலத் தீவிரமாகத் தோன்றிய எண்ணத்தை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"என்னடா?"

"ஒண்ணுமில்ல ஜெய் கிளம்பலாம்."

''சந்தோஷமா.''

''அது...''

''ம்.''

''அத நைட் சொல்றேன்.''

தன்னைப் போலவே அதே சமயம் அவளுடைய பாணியில் வெட்கத்துடன் சொன்ன மனைவியை நோக்கி ஒரு எட்டு எடுத்து வைத்தவன் பிறகு என்ன தோன்றியதோ ''வா'' என்று முன்னால் நடந்தான்.

தானும் கணவனைப் பின் தொடர்ந்த ஸ்வேதா சுமிதாவுடன் ஒரு வார்த்தை சொல்லி விட்டு வெளியே வந்தாள்.

## 39

அடுத்த ஒரு மணி நேரத்தில் தனது வீடு வந்து சேர்ந்திருந்தாள் ஸ்வேதா.

கணவன் தன்னை இறக்கி விட்டு விட்டு சொன்னது போலவே சிறிது நேரத்தில் வந்து விடுவதாகச் சென்றிருக்க, தான் மட்டும் வீட்டிற்குள் வந்தாள்.

மாலை நேரமென்பதால் கம்பெனியிலிருந்து திரும்பியிருந்த பாலகிருஷ்ணன் டி.வி.யில் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்த வண்ணம் ஹால் சோஃபாவில் தான் அமர்ந்திருந்தார்.

ஸ்வேதா ஏற்கனவே போனில் பேசியிருந்ததால் மகளின் வரவை எதிர்பார்த்தபடி தான் அமர்ந்திருந்தார்.

''டாடி.''

''வா ஸ்வேதாம்மா.''



''எப்படியிருக்கீங்க டாடி?''

''நீ வர்றேன்னு தெரிஞ்சதும் தலகால் புரியாத சந்தோஷத்துல உக்காந்துட்டிருக்கேன்.''

''அப்ப அவர் வர்றதுல உங்களுக்கு சந்தோஷமில்லையா?''

''அட இது என்ன கேள்வி, நீன்னு சொன்னாலே அதுல மாப்பிள்ளையும் அடக்கம் தானே?''

''அதென்னவோ உங்க கணக்கு எனக்குப் புரியல'' என்று சொன்னவளுக்கு கணவன் மாலையில் சொன்னவை தான் நினைவிற்கு வந்தன.

சரிதான்,

தனக்கு எப்பொழுது எந்தக் கணக்கு தான் சரியாகப் புரிந்திருக்கிறது.

''டாடி.''

தனது காலடியில் வந்து அமர்ந்திருந்த மகளை ஆச்சரியத்துடன் ''என்ன கண்ணம்மா?'' என்று பார்த்தார்.

''என்ன மன்னிப்பீங்களா டாடி?''

''எதுக்குமா?''

''முதல்ல சொல்லுங்க.''

''நீ என்னமா தப்புப் பண்ணின மன்னிக்கறதுக்கு?''

''நான் ரொம்பப் பெரிய தப்பு தான் டாடி பண்ணியிருக்கேன்.''

''அப்படியென்ன பண்ணின?''

தந்தை கேட்க சில வினாடிகள் தயங்கியவள் பிறகு அவரைப் பற்றித் தனக்கு எப்பொழுதும் இருந்த ஆதங்கத்தை, அதாவது அவரைத் தான் தவறாக நினைத்துக் கொண்டிருந்ததைப் பற்றிச் சொன்னாள்.

மகள் சொல்லச் சொல்ல சிரிப்பு தான் வந்தது பாலகிருஷ்ணனுக்கு.

ஆனாலும் வெகு ஸீரியஸாக சொல்லிக் கொண்டிருக்கும் மகளுக்குக் கஷ்டமாக இருக்குமே என்று முயன்று அதை வெளியே காட்டாமல் மறைத்துக் கொண்டார்.

ஒரு வழியாக சொல்லி முடித்தவள், தந்தை என்ன சொல்லப் போகிறாரோ என்பதைப் போல அவருடைய முகத்தையே பார்த்தாள்.

"என்ன டாடி?"

"என்ன கண்ணம்மா?"

"எம்மேல கோபம் வரலையா உங்களுக்கு?"

"உம்மேல எனக்கு எப்பிடிமா கோபம் வரும்? அதோட..."

"ம், அதோட?"

"உன் இடத்துல நான் இருந்திருந்தா நானும் அந்த மாதிரி தான் நினைச்சிருப்பேன்."

"அப்ப நீங்க அந்த மாதிரி இல்லையா?"

"ம்கூம், ஆமாம் நினைச்சேன் நினைச்சேன்னு இறந்த காலத்துலயே சொல்லிட்டிருக்கியே அப்ப இப்ப அப்பிடி நினைக்கலையா?".

"அது..."

"ம், என்ன கண்ணம்மா?"

தான் அப்படி முட்டாள்த்தனமாக நினைத்துக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல் அதைக் கணவனிடமே பேச்சு வாக்கில் சில முறை சொல்லியிருந்தது. அதற்கு உன் எண்ணம் தவறு என்று அன்று அலுவலகத்தில் வைத்துக் கணவன் சொன்னது. அதனால் கிடைத்திருக்கும் இந்த ஞானோதயம்,



என அனைத்தையும் ஒன்று விடாமல் அப்படியே சொல்லியிருந்தாள் ஸ்வேதா.

தனக்காகத் தான் தந்தை வேறு திருமணம்கூட செய்து கொள்ள வில்லையென்று கணவன் சொன்னது வரை அனைத்தையுமே.

என்னதான் தனது மாப்பிள்ளை ஜெயவர்த்தனின் மீது பாலகிருஷ்ணனுக்கு அளவு கடந்த மதிப்பும் மரியாதையும், அவனுடைய திறமையின் மீது அபரிதமான நம்பிக்கையும் இருந்தாலும் கூட, இப்பொழுது மகள் சொன்னதைக் கேட்டவருக்கு இன்னும் பெருமதிப்பு வந்திருந்தது.

ஜெயவர்த்தனின் கணிப்பு ஓரளவு சரியாக இருந்ததே அதற்குக் காரணம் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், மற்றவர்களிடம் நல்லதைக் காண முதலில் நம்மிடம் நல்லது இருக்க வேண்டுமே, தனது மாப்பிள்ளை நல்லவராக இருக்கப் போய் தானே அவரால் இப்படி எண்ண முடிந்திருக்கிறதென்று பெருமையுடன் நினைக்கத் தோன்றியது.

தந்தை என்ன சொல்லப் போகிறாரோ என்பதைப் போல ஸ்வேதா அவரையே பார்க்க, "நான் உன்ன இவ்வளவு கஷ்டப்படுத்தியிருக்கேனா கண்ணம்மா?" என்று லேசான ஆதங்கத்துடன் தனது காலடியில் அமர்ந்திருந்த மகளின் தலையை வருடியபடி கேட்டார்.

"அச்சச்சோ என்ன டாடி நீங்க அதுதான் முட்டாள்த்தனமா அப்பிடி நினைச்சுட்டிருந்தேன்னு நானே சொல்லிட்டேனே..."

"ம்கூம், சிறு பிள்ளைத்தனமா."

"எப்பிடியோ என்ன மன்னிப்பீங்களா டாடி?"

''ம்கூம் வெகுளித்தனத்தையெல்லாம் மன்னிக்க வழியில்ல. அப்பப்ப சந்தோஷமா நினைச்சு சிரிச்சுக்க வேணும்னா செய்யலாம்.''

''அப்ப...''

''எப்பிடியோ மாப்பிள்ள கூட நீ இந்த அளவுக்கு யதார்த்தமான அன்போட நடந்துக்கறையே அதே போதும்மா, அதே போல அவரும்.''

''அப்புறம் டாடி...''

''என்னமா?''

''இத அவர் வந்தா சொல்லாதீங்க டாடி, ஓட்ட வாய்னு சிரிப்பார்.''

''இல்ல கண்ணம்மா சொல்லல.''

''தேங்க்யூ டாடி'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து சோபாவில் அமர்ந்தாள் ஸ்வேதா.

அதற்குப் பிறகு வேறு விஷயங்களைப் பற்றி பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

தொடர்ந்து சில வினாடிகளில் ஜெயவர்த்தன் வர, சந்தோஷமாக வரவேற்றார் பாலகிருஷ்ணன்.

''வாங்க மாப்ள.''

''எப்படியிருக்கீங்க மாமா?''

''உங்கள மாதிரி பிரமாதமான மாப்ள கிடைச்சிருக்கும் போது எனக்கென்ன மாப்ள, சந்தோஷமா இருக்கேன்.''

''ரொம்ப மிகைப்படுத்தற மாதிரி எனக்குத் தோணுது'' என்று ஜெயவர்த்தன் புன்னகையுடன் பார்க்க, எங்கே இந்த தந்தை சற்று முன் தான் சொன்னதையெல்லாம் சொல்லி விடுவாரோ என்று பயந்து போனாள் ஸ்வேதா.

''உங்க ரெண்டு பேரையும் பாத்து நாளாச்சேன்னு மதியம் தான் நினைச்சேன். இன்னைக்கு நீங்க வந்ததுல



எனக்கு ரொம்ப சந்தோஷம்'' என்ற பாலகிருஷ்ணன் மகளை அழைத்தார்.

''என்ன டாடி?''

''மாப்பிள்ளைக்கு டிபன் எடுத்துட்டு வாம்மா'' என்று சொன்னதை மறுத்திருந்த ஜெயவர்த்தன் ''டீ மட்டும் போதும்'' என்றான்.

கண் மூடித் திறப்பதற்குள் மறுநாள் காலையில் கிளம்பும் நேரம் வந்து விட்டதைப் போல உணர்ந்தாள் ஸ்வேதா.

''என்னடா?''

கணவன் கேட்க தயக்கத்துடன் பார்த்தாள்.

''என்னாச்சு?''

''நான் இங்க ஒரு நாலு நாள் இருந்துட்டு வரட்டுமா?''

''நாலு நாளா?'' என்ற மாப்பிள்ளையின் தயக்கம் பாலகிருஷ்ணனுக்குப் புன்னகையை வரவழைத்திருந்தது. ஆனாலும் கண்டும் காணாதது போல இருந்து விட்டிருந்தார்.

''என்ன ஜெய்?''

''சரிதான், இருந்துட்டு வா.''

''என்ன அர மனசா சொல்றீங்க?''

''சரி முழு மனசோடயே சொல்றேன் சந்தோஷமா இருந்துட்டு வாங்க மேடம்.''

''நீங்களும் இங்கயே இருக்கலாமில்லீங்களா, அதாவது ஆபீஸ்க்கு போய்ட்டு இப்பிடியே வந்துடுங்க மாப்ள, ரெண்டு பேரும் சில நாள் இருந்துட்டுப் போலாம்.''

''சரிதான் முயற்சி பண்றேன்'' என்ற ஜெயவர்த்தன் இருவரிடமும் சொல்லி விட்டுக் கிளம்பியிருந்தான்.

தொடர்ந்து சிறிது நேரத்தில் தந்தையும் அலுவலகத்திற்குக் கிளம்ப, அவரையும் வழியனுப்பி விட்டு வீட்டிற்குள் வந்தாள் ஸ்வேதா.

ஏனோ சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் வானில் சிறகடிப்பதைப் போல சந்தோஷமாக உணர்ந்தாள்.

வாழ்க்கைக்கு ஏதோ பிடிப்பு வந்து விட்டதைப் போல.

அதைவிட வாழ்க்கைக்கு ஓர் புது அர்த்தம் கிடைத்ததைப் போல என்று சொல்வது சரியாக இருக்கும்.

கணவனிடமிருந்து தனது மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினாள்.

சில நிமிடங்கள் பேசிவிட்டு மொபைலை வைத்தவளுக்கு, பரவாயில்லையே தான் நினைப்பதைப் போல அல்லாமல் வேலைகளுக்கு இடையிலும் கூடத் தன்னை நினைவு வைத்திருக்கிறானென்று புன்னகையுடன் நினைக்கத் தோன்றியது.

நேராகத் தங்களுடைய அறைக்கு வந்தவள் அனைத்தையும் ஒதுக்கி வைத்தாள்.

''ஸ்வேதாம்மா.''

''வாங்க அமிர்தாம்மா.''

''காபி எடுத்துக்கோங்கமா.''

அமிர்தம் நீட்டிய காபியைத் ''தேங்க்ஸ்'' என்று எடுத்துக் கொண்டாள்.

''என்னமா சொல்லுங்க?''

''நீங்க ரொம்பவும் குடுத்து வெச்சிருக்கீங்க ஸ்வேதாம்மா.''

''அட, என்ன திடீர்னு?''

''சின்னய்யாவுக்கு உங்க மேல தான் எவ்வளவு அக்கறைமா!''



''அப்பிடியா?''

''எவ்வளவு பத்திரம் சொல்லிட்டுப் போறாங்க, என் சின்னச் சின்ன விஷயத்துல கூட பாத்துப் பாத்து நடந்துக்கறாங்கமா.''

சந்தோஷமாக அமிர்தம் சொல்லச் சொல்ல அவளைப் புன்னகையுடன் பார்த்தாள் ஸ்வேதா.

''சரிதான் அமிர்தாம்மா. நீங்க சொல்ற மாதிரியே நான் குடுத்து வெச்சவ தான் ஒத்துக்கறேன்.''

''அதுல என்னமா சந்தேகம், உங்க மனசுக்கு ஏத்த மாதிரியே எல்லாம் நல்ல விதமா நடந்துட்டிருக்கு அவ்வளவுதான்'' என்றவள் ''நான் போய்க் கூட்டித் துடைக்க ஆள அனுப்பட்டுங்களாமா?'' என்று கேட்டாள்.

''இப்ப வேண்டாம், நான் கீழே வந்ததுக்கப்புறம் அனுப்புங்க'' என்ற ஸ்வேதாவிடம் ''சரிங்கமா அப்பிடியே செய்யறேன்'' என்று நகர்ந்தாள் அமிர்தம்.

பல நாட்களுக்குப் பிறகு அமிர்தம்மாவின் காபியை ருசித்துக் குடித்த ஸ்வேதா, காலி கப்பை கீழே ஒரு ஓரமாக வைத்துவிட்டு நிமிர்ந்தாள்.

மீண்டும் தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பார்த்தாள்.

சுமிதா.

அவள் ஏன்...

சரிதான் என்று அட்டெண்ட் செய்து காதில் வைத்தாள்.

சாதாரணமாகப் பேசத் தொடங்கியவளுக்கு எதிர்ப் பக்கத்தில் அந்த சுமிதா சொன்னவற்றை சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''இல்ல நீ சொல்றதெல்லாம் அப்பட்டமான பொய் நான் நம்ப மாட்டேன்'' என்று அவளையறியாமலேயே கோபமாகச் சொல்லி விட்டிருந்தாள்.

சை இப்பிடிக் கீழிறங்கிப் போய் விட்டாளே எனும் எண்ணம் ஸ்வேதாவை அவளையறியாமலேயே ஒருமையில் பேசச் செய்து விட்டிருந்தது.

ஒரு எல்லைக்கு மேல் அந்த சுமிதா சொல்வதைக் காது கொடுத்துக் கேட்க முடியாமல் இணைப்பைத் துண்டித்திருந்தாள் ஸ்வேதா.

சை இவ்வளவு கேவலமாகக் கூட இருப்பார்களா என்று மனம் வெறுத்துப் போயிற்று.

சற்று முன் இருந்த சந்தோஷமும் நிம்மதியும் இப்பொழுது எரிச்சலும், கோபமுமாக மாறியிருந்தன.

எதையும் செய்யத் தோன்றாமல் விரக்தி மேலோங்க அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள்.

## 40

காய்ச்சலும் தலைவலியுமாக நேற்றிலிருந்து முடியவில்லை இன்று ஒரு நாள் மட்டும், அதுவும் முடிந்தால் மதியமே கூட வந்து விடுகிறேனென்று எம்.டி.யிடம் அதாவது தோழன் ஜெயவர்த்தனிடம் விடுமுறை கேட்டுக் கொண்டு அன்று வீட்டில் இருந்து விட்டிருந்தாள் சுமிதா.

ஏனோ அவளுக்கு வாழ்க்கையே கசந்தது.

ஒன்றுமே பிடிக்கவில்லை.

அதற்குக் காரணமும் இருந்தது.

ஆனால் அந்தக் காரணம் தான் ஒப்புக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை.

முதல் நாள் மதியம் அலுவலகத்தில் அந்த ஸ்வேதாவும் ஜெயவர்த்தனும் கைகளைப் பிடித்துக் கொண்டு காதல்



சொட்டத் தங்களை மறந்து நின்றிருந்ததைப் பார்க்க நேர்ந்தது தான் அது.

அதைப் பார்க்க நேர்ந்ததற்குப் பிறகு ஏனோ என்ன முயன்றும் அவளால் இயல்பாக இருக்க முடியவில்லை.

அங்கேயே இப்படியென்றால் இனித் தனிமையில்...

தனக்கு மட்டும் ஏன் எதுவுமே சரியாக அமையவில்லை.

தன்னைச் சுற்றியுள்ளவர்கள் அனைவருமே சந்தோஷமாக இருக்கும்போது, தனக்கு மட்டும் ஏன் அந்தப் பாக்கியம் வாய்க்கவில்லை.

ஜெயவர்த்தனுக்கு என்ன இல்லை.

முக்கியமாக அந்த ஸ்வேதாவிற்கு.

கோடி கோடியாகப் பணம், அழகு, அந்தஸ்து அக்கறையுடன் தாங்கும் பிறந்த மற்றும் புகுந்த வீட்டுச் சொந்தங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக அன்பாகவும் ஆசையாகவும் உள்ளங்கையில் வைத்துத் தாங்கும் கணவன்.

இல்லை.

தனக்குக் கிடைக்காதது வேறு யாருக்குமே கிடைக்கக் கூடாது.

முக்கியமாக அந்த ஸ்வேதாவிற்குக் கிடைக்கவே கூடாது.

அதற்காகத் தான் என்ன பாடுபட நேர்ந்தாலும் சரிதான்.

கூடவே என்ன செய்ய நேர்ந்தாலும்,

விடக் கூடாது.

விடவே கூடாது.

உடனே ஏதாவது செய்தே ஆக வேண்டும்.

பொறாமைத் தீ கொழுந்து விட்டெரிய, என்ன செய்வதென்று யோசித்தாள்.

தொடக்கத்தில் ஒன்றுமே புலப்படவில்லை.

கண்களைக் கட்டி நடுக் காட்டுக்குள் விட்டாற் போலிருந்தது.

நிம்மதியில்லாமல் மூளையைக் கசக்கி மேலும் மேலும் யோசித்தாள்.

ஒரு யோசனை தோன்றியது.

ஜெயவர்த்தனிடம் அவனுடைய மனைவியைப் பற்றித் தவறாக, இல்லாததையும் பொல்லாததையும் சொல்லலாம், தொடக்கத்தில் நம்பா விட்டாலும் போகப் போக நம்பத் தொடங்கி விடுவான்.

நம்பித்தான் ஆக வேண்டும்.

சொல்வதை அந்த மாதிரி நம்பும் படியாகச் சொல்ல தன்னால் முடியாதா என்ன.

ஆனால்,

எங்கோ இடித்தது.

ம்கூம்.

வேண்டாம்.

ஒரு சில வினாடிகள் மட்டும் தான் சற்று மாற்றி யோசித்துப் பார்த்தவள், உடனே வேண்டாம் இந்த வழி ஒத்து வராதென்று ஒதுக்கி விட்டிருந்தாள்.

அவன் அழுத்தக்காரன்.

ஏனோ தனக்கு ஸ்வேதாவைப் பிடிக்கவில்லை என்பதை உடனே புரிந்து கொண்டு விடுவான்.

பூமராங் போல அது தன் மீதே திரும்பும் பிறகு தன்னை வெறுத்து ஒதுக்கிவிடுவான்.

கடவுளே, அந்த மாதிரி முட்டாள்த்தனமாக எதையும் தான் செய்து விடவே கூடாது.



தோழியின் இந்த நிலைக்குத் தானும் ஒரு காரணம் என்ற எண்ணம் ஜெயவர்த்தனுக்கு இருப்பதில் அவளுக்குத் துளியும் சந்தேகமிருக்கவில்லை.

அதை வைத்தே காயை நகர்த்த வேண்டும்.

நினைத்ததைச் செயல்படுத்த வேண்டும்.

கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு வர வேண்டும்.

பிறகு அது சண்டையாகி, வெறுப்பாகிக் கடைசியில் இருவரும் பிரிய வேண்டும்.

முக்கியமாக அந்த ஸ்வேதாவை நீ போ என் முகத்திலேயே விழிக்காதே என்று ஜெயவர்த்தன் தூக்கியெறிய வேண்டும்.

இவையனைத்தும் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நடந்தாக வேண்டும்.

அதற்குப் பிறகு,

பிறகென்ன, அதைத் தான் பார்த்துக் கொள்ளலாம்.

இப்போது அடுத்ததாகத் தான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி மட்டும் யோசிக்கலாம்.

ஜெயவர்த்தன் வேண்டாமென்றால், அதற்கடுத்து இருக்கும் ஒரே வழி அந்த ஸ்வேதாதான்.

ஏனோ அவளை நினைக்க நினைக்கத் தன்னுடைய இழப்புகள் பயங்கரமாகத் தெரிந்தன சுமிதாவிற்கு.

இல்லை.

விடக் கூடாது.

விடமாட்டேன்.

மீண்டும் யோசித்தாள்.

அப்படி யோசித்தவளுக்கு அடுத்து தான் என்ன செய்ய வேண்டுமென்பது தெளிவாகப் புரிந்து விட்டிருந்தது.

என் நிராதரவான நிலையைப் பயன்படுத்தி உன் கணவன் என்னிடம் தவறாக நடக்கப் பார்க்கிறான் என்று சொல்ல வேண்டும்.

தோழனென்று நம்பி வந்த பாவத்திற்கு அவனே இப் படிச் செய்தால் பிறகு நான் என்னதான் செய்வது என்று கண்ணீர் சிந்த வேண்டும்.

அதிலும் உன்னைப் போன்ற பிரமாதமான பெண் ணுக்குத் துரோகம் செய்ய ஒருத்தியால் அதுவும் என்னால் எப்படி முடியுமென்று நியாயம் கேட்க வேண்டும்.

நானும் எப்படியாவது உன் கணவனை, ஆம் என் தோழன் என்று சொல்லக்கூட எனக்கு இப்பொழுது வெட்கமாக இருக்கிறது. திருத்திவிட வேண்டும், இந்த விஷயம் உன் காதுகளுக்கு வராமல் அனைத்தையும் சுமுக மாக முடித்து விட வேண்டுமென்று தான் முயன்றேன். முயன்று கொண்டும் இருக்கிறேன்.

ஆனால் எதற்கும் ஒரு எல்லை இருக்கிறதல்லவா.

என்ன ஆனாலும் நானும் ஒரு பெண்.

அதிலும் முன்பு உன் கணவனை மனதாரக் காத லித்தவளும் கூட.

என்னையே அறியாமல் அந்தப் பழைய நினைவுகள் மேலோங்கி ஒருவேளை நானும் நிலை தடுமாறி விட்டால்,

யோசித்துப் பார்.

உனக்குப் பெரும் அநியாயமும், தீங்கும் இளைத்தவ ளாகி விட மாட்டேனா.

வேண்டாம்.

ஏற்கனவே என்ன பாவம் செய்தேனோ வாழ்க்கையில் படக் கூடாத கஷ்டங்களையெல்லாம் பட்டுத் தீர்த்து



இப்பொழுது தான் அதுவும் கொஞ்சம் தலை நிமிர்த் தொடங்கியிருக்கிறேன்.

இதுவே பழைய சுமிதாவாக இருந்தால் இதற்கொரு தீர்வை நானே வெகு சுலபமாகக் கண்டுபிடித்து இக்கட் டிலிருந்து மீண்டும் இருப்பேன்.

ஆனால் இப்பொழுது என்னால் ஒன்றும் முடியவில்லை.

எப்படியாவது என்னைக் காப்பாற்று என்றெல்லாம் அவள் நம்பும்படியாகச் சொல்ல வேண்டும்.

அதையே தினமும்,

நாளுக்கு நாள் பிரச்சனை பெரிதாகிக் கொண்டிருப்ப தாகவும் நீ மனம் வைத்தால் எனக்கு ஒரு தீர்வு கிடைக் கும் என்றும் கதற வேண்டும்.

ஆனால் அந்த அளவுக்கு அவசியமே இருக்காதென்று தான் சுமிதாவிற்குத் தோன்றியது.

அதற்குள்ளேயே அவள் கணவனை ஒரு வழி செய் திருப்பாள்.

அவனோ கோபக்காரன், மிகுந்த தன்மானம் பார்க் கிறவன் வேறு,

தன் மேல் அபாண்டத்தையே சுமத்திக் கொண்டிருக் கும் மனைவியை சும்மா விடுவானா, அவனும் ஒரு கை பார்த்து விட்டிருப்பான்.

பிறகென்ன,

தான் நினைத்தது தான் நடக்கும்.

நினைக்க நினைக்க சுமிதாவின் மனம் குதியாட்டம் போட்டது.

கொஞ்சம் கவனமாகக் காயை நகர்த்தினால் இந்த ஆட்டத்தில் தான் ஜெயிக்கப் போவது நிச்சயம் என்ற

உறுதி இப்பொழுது அவளுக்கு நிறையவே வந்து விட்டிருந்தது.

இதெல்லாம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, அதே சமயம் ஜெயவர்த்தனிடமும் தனது வேலையைக் காட்டியிருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அவனிடம் வேறு மாதிரி.

அவனிடம் அவனுடைய மனைவி ஸ்வேதாவை நல்ல விதமாகச் சொல்ல வேண்டும்.

உனக்கு என் நிலை தெரியும்.

தோழனும்கூட.

அதனால் நீ எனக்கு உதவலாம்.

ஆனால் அதை அனுமதிக்கும் உன் மனைவி எவ்வளவு பிரமாதமான பெண்ணென்று புகழ வேண்டும்.

இடையிடையில் அவனுக்கும் மனதார உணர்ந்து நன்றி சொல்ல வேண்டும்.

உன்னுடைய இந்த உதவி மட்டும் கிடைத்திருக்காவிட்டால் இந்நேரம் நான் என்னவாகியிருப்பேனென்று அவ்வப்பொழுது உருக்கத்துடன் சொல்லிக் கொள்ள வேண்டும்.

உன்னை விடவும் உன் மனைவி ஸ்வேதாவிற்குத் தான் அதிக நன்றிக்கடன் பட்டிருக்கிறேனென்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

முடிவு.

தான் அவனுடைய மனைவியைப் புகழப்புகழ, அந்த ஸ்வேதாவோ அவளுடைய க்ணவனை சந்தேகப்பட,

ஆனால் என்ன எந்த நேரத்திலும் அந்த அழுத்தக்காரனுக்குத் தன் மேலும் சந்தேகம் வந்து விடலாம்.



முடிந்த அளவு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதற்கு மேல் வந்தாலும் வரட்டுமே.

இந்த ஜெயவர்த்தன் மட்டுமென்ன மகா நல்லவனோ.

இவனைத் தான் அவ்வளவு சுற்றியும் கண்டு கொள்ளாமல், வழியில் விட்டுச் சென்றானே.

காதல் கெஞ்சுவதால் வருவதல்ல என்பது தெரிந்திருந்தாலும், அதை ஒப்புக் கொள்ள சுமிதாவிற்கு மனம் வந்திருக்கவில்லை.

அவள் செய்யப் போகும் பாவத்திற்கு அவளுக்கு ஒரு சப்பைக்கட்டு தேவைப்பட்டது.

அனைத்திற்கும் மேலாகத் தொடர்ந்து வாழ்க்கையில் பட்ட அடிமேல் அடி நியாய அநியாயம், நல்லது கெட்டது என எதையும் யோசிக்க விடாமல் அவளுடைய கண்களை மறைத்திருந்தது.

## 41

எப்படியோ ஒரு முடிவை எடுத்து விட்டிருந்த சுமிதா அதை செயல்படுத்தவும் தொடங்கினாள்.

முதலில் ஜெயவர்த்தனை அழைத்து விடுமுறை கேட்கும் சாக்கில் அவன் வீட்டில் இல்லையென்பதை உறுதி செய்து கொண்டு, அடுத்த நிமிடம் ஸ்வேதாவிற்கு அழைத்திருந்தாள்.

அப்படி அழைத்தவள் மிகுந்த தயக்கத்துடன் தொடங்கி நம்பும்படியான ஏற்ற இரக்கங்களுடன் ஏற்கனவே தான் யோசித்து வைத்திருந்தவற்றையெல்லாம் வேதனை கலந்த குரலில் சொல்லத் தொடங்கினாள்.

ஆனால் அந்த ஸ்வேதாவோ அவள் சொல்ல நினைத்த தில் பாதியைக் கூட சொல்ல விடாமல் நீ சொல்வ தெல்லாம் பொய் நம்ப மாட்டேனென்று இணைப்பை துண்டித்திருக்க, சுமிதாவும் முதலில் திகைத்துத் தான் போனாள்.

முதல் அடியிலேயே தோல்வியா என்றிருந்தது.

ஆனாலும் அவள் மனம் தளர்ந்து விடவில்லை.

எடுத்த உடனேயே நினைத்ததெல்லாம் நடந்து விடுமென்று எதிர்பார்க்கும் அளவிற்கு அவள் ஒன்றும் முட்டாள் இல்லையே.

எப்படியோ தெளிந்த நீரோடையில் கல்லெறிந் தாயிற்று.

இனி கலங்கி சகதியாவதற்காகத் தொடர்ந்து முயற்சிப் போமென்று தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்.

அதாவது பொய் என்று இணைப்பை துண்டிப்பவளை முதலில் தான் சொல்ல வருவதைக் கேட்க வைக்க வேண்டும்.

அப்படிக் கேட்க வைத்தால் கணவனின் மேல் சந்தேகம் வரும்.

சந்தேகம் நம்பிக்கைக்கு உலை வைக்கும்.

பிறகு தான் எதிர்பார்ப்பதும் நடக்கும்.

அந்த நாள் இனி வெகு தொலைவில் இல்லை.

ஏனோ அந்த விளையாட்டு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்திருக்க, சுமிதாவால் வீட்டில் வெறுமனே போர டித்துக் கொண்டு அமர்ந்திருக்க முடியவில்லை.

உடனே கம்பெனிக்குக் கிளம்பி விட்டிருந்தாள்.

போகிற வழியில், வீட்டில் சும்மா அதுவும் தனியாக இருந் தால் வேதனை இன்னும் அதிகமாகத் தான் தெரிகிறது.



அதனால் ஆபீஸிலேயே வந்து அமர்ந்து முடிந்த வேலையைச் செய்கிறேனென்று எம்.டி. ஜெயவர்த்தனுக்கு அழைத்துச் சொல்லியிருந்தாள்.

பேருந்துக்காகக் காத்திருந்த வேளையில் திடீரென ஸ்வேதாவை விட ஜெயவர்த்தனைப் பழி வாங்கத் தான் தன் மனம் அதிகம் விரும்புகிறதோ என்று கூட சந்தேகம் வந்து விட்டிருந்தது.

சரிதான்.

அவர்கள் தான் ஒருடல் ஈருயிர் தம்பதிகளாயிற்றே. பாவம் எதற்குப் பிரித்துப் பார்க்க வேண்டுமென்று ஏளனத்துடன் நினைத்துக் கொண்டாள்.

''குட்மார்னிங் ஜெயன்.''

''வா சுமிதா, இப்ப எப்படியிருக்கு உனக்கு?''

''அது பரவாயில்ல விடு. அப்புறம் என்ன நீயும் வந்துட்ட?''

''ஏன்?''

''இல்ல ஊருக்குப் போறதா சொல்லிட்டிருந்தியே...''

''சரிதான், ஊருக்குப் போய்ட்டு அங்கிருந்து தான் இப்ப ஆபீஸ்க்கு வந்திருக்கேன்.''

''அப்படியா'' என்றவள் ''அங்க உங்க வொய்ஃப் வீட்ல எல்லாரும் நலமா?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம்'' என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னவனை சரியான கல்லுளி மங்கன் என்று மன திற்குள் திட்டினாள்.

''ஏன் திடீர் மாற்றம்? கேட்ட மாதிரியே இன்னைக்கு ஒரு நாள் வீட்ல ரெஸ்ட் எடுத்திருக்கலாமே.''

''தனியா இருக்கணுங்கறதோட வீட்ல இருக்க மனசு வரல.''

"புரியல."

"எனக்காக நீ இவ்வளவு உதவி பண்ணிட்டிருக்கும் போது, அதுவும் நீ இங்க ஆடர்ஸ சமாளிக்க முடியாம திணறிட்டிருக்கணுமேன்னு நினைச்சேன். வீட்ல இருக்க முடியல."

"என்ன ஜெயன் பாக்கற? சரியா சொல்லணும்னா இங்க இத்தன வேலைகள் இருக்கும்போது வீட்ல வெட்டியாப் பொழுதக் கழிக்க மனசு வரல" என்றாள்.

"பைத்தியம்."

"சொல்லமாட்ட, நான் உன்ன விடக் கூட ஸ்வேதாவுக்காகத் தான் நிறையப் பாக்கறேன் தெரிஞ்சுக்கோ."

தான் சொல்ல வருவது புரியவில்லையென்பது ஜெயவர்த்தனின் பார்வையிலேயே புரிந்து விட்டிருக்க, அவனிடமும் தான் யோசித்து வைத்திருந்த கதையைத் தொடங்கினாள்.

"உனக்கு என் பிரச்சனைகள் புரியுது ஜெயன், அதோட நீ ஃப்ரண்டும் கூட. ஆனா ஸ்வேதா? இதுவே வேற ஒரு பொண்ணா இருந்தா நீ எனக்கு உதவறத தப்பான கண்ணோட்டத்துல கூடப் பாக்க வாய்ப்பிருக்கு."

"என்ன நீ ஏதேதோ சொல்லிட்டிருக்க..."

"மனசுக்குப் பட்டத சொல்றேன், என்னதான் என் கஷ்டத்தப் பாத்து நீ எனக்கு உதவறேன்னாலும் அத அனுமதிக்கற ஸ்வேதா கிரேட் தான? நிச்சயம் அவளுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கேன்..."

"அவ அனுமதிக்கறான்னு உனக்கென்ன அவ்வளவு நிச்சயம்?"

திடீரென்று ஜெயவர்த்தன் அப்படியொரு கேள்வியைக் கேட்பானென்று சுமிதா எதிர்பார்க்கவில்லை.



திகைத்து விழித்தாள்.

சில வினாடிகள் தான்.

"அசடு சும்மா தான் அப்பிடிக் கேட்டேன்" என்று அவனுடைய ஸ்டைலில் சிரித்த ஜெயவர்த்தனை, தனது பழைய காதலனாக அப்பொழுது பார்த்தாள் சுமிதா.

மனதிற்குள் இருந்த வெறி மேலும் தீவிரமடைந்திருந்தது.

"என்ன பலமான யோசனை?"

ஜெயவர்த்தனின் குரலில் நடப்பிற்கு வந்திருந்தவள் "அதெல்லாம் ஒண்ணுமில்லையே" என்றாள்.

"சரிதான், ஆமா என்ன நீ உன் இயல்புக்கு மாறா இப்பிடியெல்லாம் பேசிட்டிருக்க?"

மீண்டும் சந்தேகத்துடனான கேள்வி.

இவனிடம் தான் நினைப்பதை செயல்படுத்துவது கடினம் தான்...

"அட என்ன திரும்பவும் யோசன?"

"இல்ல ஜெயன், நீ மட்டும் இப்ப உதவி செஞ்சிருக்கலேன்னா என் கதி என்ன ஆகியிருக்கும்னு யோசிச்சுப் பாத்தேன்" என்று லேசாகக் கண்கள் கலங்கச் சொன்னாள் சுமிதா.

"ம்கூம், இப்படியெல்லாம் மனசு விடக் கூடாது. நீ தைரியமான பொண்ணு, அதோட படிச்சவளும் கூட. எங்கிட்ட செய்யற வேலைய நீ நினைச்சா எங்க வேணும்னாலும் உன்னால செய்ய முடியும். அதனால இனிமேலாவது இப்படி ஒண்ணுமே இல்லாத விஷயங்களையெல்லாம் மனசுல போட்டுக் குழப்பிக்காத" என்றான்.

"சரிதான் ஜெயன்."

"அதையேன் இவ்வளவு சோகமா சொல்ற. சிரிச்சுட்டே சொல்லு பாக்கலாம்."

ஜெயவர்த்தன் கேட்பதைப் போலவே சொன்னவள் "ம் போதுமா?" என்று பற்கள் அனைத்தையும் காட்டிச் சிரித்தாள்.

"ஐயோ இது பயமா இருக்கு. அதுக்கு நீ பழைய மாதிரியே இருக்கலாம்மா" என்றவனைப் பார்த்தவளுக்கு மீண்டும் அந்தப் பழைய கல்லூரி நாட்கள் தான் நினைவிற்கு வந்தன.

அதைத் தொடர்ந்து பழி வாங்க வேண்டுமென்ற தீவிரமும்.

அதற்குப் பிறகு எதைப் பற்றியும் யோசிக்க முடியாமல் வேலையே சரியாக இருந்தது.

சுமிதா அவளே தன்னை மறந்து ஏன் அனைத்தையுமே மறந்து விட்டு வேலையே தன் இரு கண்களென மூழ்கிப் போனாள்.

ஆனாலும் அவள் தன் பழி வாங்கும் படலத்தை மறந்து விடவில்லை.

அதற்கான முயற்சியிலிருந்து கடுகளவும் தளர்ந்து விடவுமில்லை.

அவளே ஆச்சரியப்பட்டுப் போகும் விதமாக கணவன் மனைவியைப் பழிவாங்க வேண்டுமென்ற தீவிரம் நாளுக்கு நாள் மணிக்கு மணி, நிமிடத்துக்கு நிமிடம், வினாடிக்கு வினாடி அதிகம் தான் ஆகிக் கொண்டிருந்ததே தவிர துளி கூடக் குறைந்திருக்கவில்லை.

இரண்டு நாட்கள் சென்றிருந்தன.

ஸ்வேதா இங்கு தந்தையின் வீட்டிலிருக்க, ஜெயவர்த்தன் இங்கு தொழிலிலேயே மூழ்கிப் போனான்.



மனைவி அவளுடைய வீட்டில் இருப்பது கூட அவனுக்குச் சற்று ஆறுதலைக் கொடுத்திருந்தது.

இந்த மாதிரி தொழிலே கதியென்று தான் கிடக்கும் போது மனைவி இங்கு இருந்தால் தனக்கும் குற்ற உணர்வு ஏற்படுவதோடு மனைவியும் அதைத் தன்னிடம் கேட்கவும் முடியாமல் கேட்காமல் இருந்து விடவும் முடியாமல் இருதலைக் கொல்லி எறும்பாகத் தவிப்பாள்.

அதனால் நான்கு நாட்களென்ன, அதற்கு மேலும் நான்கு நாட்கள் கூட இருந்து விட்டு வரட்டுமென்று நினைத்துக் கொண்டான்.

தொழிலுக்காக அப்படி நினைக்க நேர்ந்தாலும், மனைவியைப் பிரிந்திருப்பது அவனுக்கும் வேதனையாகவே இருந்தது.

சரிதான் அதிகபட்சம் இன்னும் சில வாரங்கள், அதற்குள் இங்கே அனைத்தும் பெருமளவு சரியாகி விடப் போகிறது என்று மனதைத் தேற்றிக் கொண்டான்.

ஆச்சரியப்பட்டுக் கொள்ளும் விதமாக மனைவி தன்னை அழைத்துப் பேசாதது கருத்தில் பட, சரிதான் தன்னைப் போலவே தான் அவளும் எண்ணுகிறாள் போலிருக்கிறதென்று சிரித்துக் கொண்டான்.

அதற்காக போனில் கூட அழைத்துப் பேசக் கூடாதாமா.

ஒருவேளை அந்த அளவிற்குக் கூடத் தன்னை தொல்லை செய்யக் கூடாதென்று இருக்கிறாளோ.

ஆனால் அவனால் பேசாமல் இருக்க முடியவில்லை.

மனைவியை அழைத்துப் பேசினான்.

நீ ஏன் பேசவில்லையென்று கேட்டு செல்லமாகக் கடிந்து கொண்டான்.

இனிமேல் இப்படிச் செய்தால் அப்புறம் பாரென்று சிரித்துக் கொண்டே எச்சரிக்கை விடுத்தான்.

சில நாள் பிரிவே அவனை அப்படியெல்லாம் பேச வைத்திருந்தன.

மேலும் சில நாட்கள் சென்றிருந்தன.

ஜெயவர்த்தன் நினைத்தது போலவே தொழில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றப் பாதையில் செல்லத் தொடங்கியிருந்தது.

நிறைய ஆடர்கள், சுமுகமான நிலை, நல்ல லாபம் என அவன் நினைத்ததை விடவும் அனைத்தும் சிறப்பாக நடந்தன.

சரிதான், கண நேரமும் விடாமல் சிறுசிறு விஷயங்களிலும் அவன் காட்டும் அக்கறைக்கு அதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லையே.

இப்போதைக்கு சரி, தொழில் ஓரளவு தான் நினைக்குமளவிற்கு கைவரத் தொடங்கிய பிறகு எக்காரணத்தைக் கொண்டும் மாலை ஐந்து மணிக்கு மேல் கம்பெனி வேலையில் கவனம் செலுத்தக் கூடாதென்று நினைத்துக் கொண்டான்.

அதற்கு மேல் குடும்பத்திற்காகத் தான் செலவிட வேண்டுமென்றும் முக்கியமாக மனைவிக்காக என்றும்.

## 42

அந்த ஒரு வாரத்தில் மேலும் சில முறையும் ஸ்வேதாவை அழைத்துப் பேசியிருந்தாள் சுமிதா.

ஆனால் என்ன, தன் மொபைல் எண்ணைக் கண்டாலே அந்த ஸ்வேதா அழைப்பை துண்டிக்க, வெவ்வேறு எண்களிலிருந்து பேசினாள்.



அதே போல ஜெயவர்த்தனிடமும்,

ஆனாலும் அவனிடம் பேசுவது ஸ்வேதாவிடம் பேசுவது போல அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

எங்கே, எந்தக் கேள்வியைக் கேட்டுத் தன்னை விழிக்க வைத்து விடுவானோ என்று மிகவும் பயந்து பயந்து தான் பேசினாள்.

ஆனாலும் கடுகளவுகூட அவள் அந்தப் பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

முதலில் எப்படியோ, போகப்போக ஜெயவர்த்தனுக்கும் சுமிதாவின் மேல் மிகுந்த பரிதாபம் வந்து விட்டிருந்தது.

எப்படியிருந்த பெண்ணை வாழ்க்கை எப்படி மாற்றியிருக்கிறது என்று பாவமாகவும்,

இப்பொழுதெல்லாம் ஜெயவர்த்தன் தன் மீது மிகவும் பரிதாபப்படுவதையும், எந்த விதத்திலாவது தனது கவலையைப் போக்க வேண்டுமென்று அவன் மனதார விரும்புவதையும் அவனறியாமல் எட்டி நின்று ரசித்தாள் சுமிதா.

பரவாயில்லையே தன் நடிப்பு இவனிடமே வேலை செய்யத் தொடங்கியிருக்கிறதென்றால் அந்த ஸ்வேதாவிடம் இனி கேட்க வேண்டிய அவசியமே இல்லையென்று மனதிற்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டாள்.

இனிமேல் தான் தன் மேல் துளியும் சந்தேகம் வந்து விடாதபடி நடந்து கொள்ள வேண்டுமென்று தனக்குத் தானே எச்சரித்துக் கொண்டவள், அதைக் கணவன் மனைவி இருவரிடமுமே கடைபிடிக்கவும் செய்தாள்.

அன்றோடு ஸ்வேதா பிறந்த வீட்டிற்கு வந்து பத்து நாட்கள் ஆகியிருந்தன.

இந்தப் பத்து நாட்களாகவே அனைத்துமே தனது கை மீறிப் போய்க் கொண்டிருப்பதை ஒருவித விரக்தியுடன் உணர்ந்தாள்.

கணவன் தொழிலே கதியென்று கிடக்க, அவன் தன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையையும், பரிதாபத்தையும் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் சுமிதாவின் ஆட்டத்தைத் தான் அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சகித்துக் கொள்ளவும்.

இப்படிப்பட்ட பெண்ணைப் போய்ப் பெரிதாக நம்பிக் கொண்டு அவளிடம் பொறுப்புகளையும் ஒப்படைத் திருக்கும் கணவனை இனி என்னவென்று சொல்வது என்றிருந்தது.

சரியாக அதே நேரம் தனது மொபைலுக்கு ஒரு புது எண்ணிலிருந்து அழைப்பு வர அதை அட்டெண்ட் செய்து பேசவே பயமாக இருந்தது ஸ்வேதாவிற்கு.

சில வினாடிகள் தயங்கியவள், பிறகு அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தாள்.

அஞ்சியது போலவே சுமிதா தான்.

ஏனோ தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்குக் கோபம் வந்திருக்க, தன் மனதிற்குப் பட்டதையெல்லாம் கேட்டிருந்தாள்.

'என் கணவனைப் பற்றி எனக்குத் தெரியும்.

ஒரு முறையல்ல, ஓராயிரம் முறை நீ அழைத்து இல்லாததையும் பொல்லாததையும் சொன்னாலும் நான் அவற்றை நம்பப் போவதில்லை.

ஏன் தொடக்கத்திலிருந்த லேசான குழப்பமும் கூட இப்பொழுது தெளிவாகி விட்டது.



நாளுக்கு நாள் நீதான் உனக்கு வரப் போகும் எந்த விதமான பின் விளைவுகளைப் பற்றியும் யோசிக்காமல் எதற்காகவோ இந்த ஆட்டத்தை ஆடிக் கொண்டிருக் கிறாய் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி புரிந்து விட்டது.

எதற்காகவோ என்ன,

அதெப்படி நம்மைத் தவிர அனைவரும் சந்தோஷ மாக இருக்கலாமென்கிற பொறாமை தான்.

உன்னைப் போல எத்தனை பேரை நான் பார்த்திருக்க மாட்டேன்.

கேவலம் உன்னுடைய வார்த்தைகளையெல்லாம் நம்பி நான் என் கணவனை சந்தேகப்படுவேன் என்றா நினைத்தாய்.

சந்தேகமே படாத போது இனி அதைப் பற்றிக் கேட் பது எங்கே,

உன் மரமண்டைக்குத் தானாகவே இதெல்லாம் புரியு மென்று நினைத்தேன்.

புரிந்து கொண்டு நீயாக ஒதுங்கிப் போய் விடுவா யென்று நினைத்தேன்.

நான் நினைத்தால் உன்னைக் கையும் களவுமாகப் பிடித்து உன் குட்டை வெளிப்படுத்தி விட முடியாதென்றா நினைக்கிறாய்.

வேண்டாமென்று தான் விட்டு வைத்திருக்கிறேன்.

அவசியப்பட்டால் அதற்கும் தயங்க மாட்டேன்.

இத்தனைக்குப் பிறகும் இனி நீ என்னிடம் வாலாட்ட மாட்டாய், அதற்கு இனி உனக்கு தைரியமிருக்காது என்று எதிர்பார்க்கிறேன்.

இல்லை அப்படி என்னால் விட்டுவிட முடியாதென்று நீ மீண்டும் அழைத்தாலும் அதற்காக நான் ஆவலுடன் காத்துக் கொண்டு தான் இருப்பேன்.

ஏதோ புத்தியிருந்தால் பாவம் திருந்திக் கொள்ளட்டு மென்று தான் எச்சரித்தேன்.

எதற்கும் நீ அழைப்பாயென்று ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டே போனை வைக்கிறேன் பை' என்று இணைப்பைத் துண்டித்திருந்தாள் ஸ்வேதா.

சை இப்படியெல்லாம் கூடக் கேவலமாக இருக்கிறாளே என்று கோபம் தான் வந்தது.

எதற்கும் எல்லை என்று ஒன்று இருக்கிறதல்லவா.

இனிமேலும் தனக்கு அவசியமின்றி தொல்லை கொடுத் தால் பிறகு சொன்னதை செய்துவிட வேண்டியது தானென்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்டாள்.

என்னதான் அந்தப் பெண்ணை எச்சரித்து விட்டிருந் தாலும் மனம் மிகுந்த வேதனைக்குள்ளாகி இருந்தது ஸ்வேதாவிற்கு.

ஒரு பெண்ணாக அவளுக்கும் உண்மையிலேயே ஏதாவது பிரச்சனைகள் இருக்குமோ,

அப்படி ஏதாவது இருந்து...

அதற்கு மேல் தான் சொன்னவற்றையெல்லாம் அவளும் யோசித்துப் பார்க்காமலா இருந்திருப்பாள்.

ஒருவேளை அவள் சொல்வதெல்லாம்...

அப்படியானால் கணவனை சந்தேகப்படுகிறாயா.

மனம் கேள்வி கேட்டது.

இல்லை, இல்லவே இல்லை.

அவனை நான் சந்தேகப்படுவது நான் என்னையே சந்தேகப்படுகிற மாதிரி.



பிறகு ஏன் அப்படி நினைத்தாய்.

மீண்டும் அந்த மனமே கேள்வி கேட்டது.

ஒரு வினாடி என்றாலும் அந்த மாதிரி உன்னால் எப்படி நினைக்க முடிந்தது.

அது...

அதற்குக் காரணம் கணவன் தான்.

அந்தப் பெண்ணிற்கு அந்த அளவிற்கு இடம் கொடுத்து வைத்திருப்பவனும் அவனே அல்லவா.

எப்படி இந்த மாதிரி ஒரு பெண்ணை உடன் வைத் திருக்கிறான், அதிலும் பெரிய பொறுப்புகளைக் கொடுத்து வேறு.

அந்த வகையில் கணவன் செய்து கொண்டிருப்பதும் தவறு தானே.

எப்பொழுது அந்த சுமிதா முன்பு அவனைக் காதலித் திருக்கிறாளோ,

இனி என்ன காரணத்தினால் அவனும் நிராகரித்தானோ அது வேறு விஷயம்.

ஆனால் அப்படிப்பட்ட பெண்ணை எதற்காக உடன் வைத்திருக்க வேண்டும்.

அப்படித்தான் உடன் படித்த தோழி என்கிற பாவத் திற்கு உதவி செய்தே ஆக வேண்டுமென்றால், அதற்கு வேறு எத்தனை வழிகள் இல்லை.

வேறு எங்காவது இன்னொரு நல்ல இடத்தில் சிபாரிசு செய்து வேலை வாங்கிக் கொடுத்திருக்கலாம்.

பணமாக எவ்வளவு வேண்டுமென்று கேட்டுப் பாவ மென்று எடுத்துக் கொடுத்து விட்டுப் போயிருக்கலாம்.

ஏன் அதற்கு மேலும் அவளுடைய நியாயமான ஆசை கள் எதுவாக இருந்தாலும் அதை சந்தோஷமாக செய்து கொடுத்து விட்டுப் போயிருக்கலாம்.

அதையெல்லாம் விட்டுவிட்டு கூடவே வைத்து எந்நேரமும் பார்த்துக் கொண்டிருக்கிற மாதிரி எதற்காக ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான்.

ஒருவேளை முன்பு தான் எண்ணியது போலவே, அப்படியொன்றும் தான் உடனே அந்த மாதிரி எண்ணி விடவில்லையென்பதோடு, அந்த மாதிரி எண்ண நேர்ந்ததற்கு ஒவ்வொரு வினாடியும் தன் மனம் எவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதும் அவள் மட்டுமே அறிந்த ஒன்று.

அப்படி ஒருவேளை அந்தக் கல்லூரிக் காதலின் மிச்சம் கணவனுடைய மனதிலும் கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கிறதோ,

அதைத் தெரிந்து கொண்டு அந்த தைரியத்தில் தான் அந்த சுமிதா இப்படியெல்லாம் வாலாட்டிக் கொண்டிருக்கிறாளோ.

தானும் ஒன்றும் எடுத்த உடனேயே இந்த முடிவுக்கு வந்து விடவில்லையே,

எவ்வளவோ வேதனைப்பட்டு விடை தெரியாமல் ஏன் கடைசியில் தானே அதுவும் வருத்தத்துடன்....

அப்படியானால் கணவனைத் தான் சந்தேகப்படுகிறோமா.

இல்லை, அது மட்டும் இல்லை.

என்னதான் கணவனின் மேல் தவறில்லை என்பதில் அவளுக்குத் துளிகூட சந்தேகமில்லையென்றாலும், நிறைய அதுவும் தொடர்ந்து பல நாட்கள் அதையே யோசிக்க நேர்ந்ததின் பலன், மனம் மிகவும் சோர்ந்து போய் பலவீனமடைந்திருந்தது.



எங்கே தொடர்ந்து இதே நிலை நீடித்தால் பைத்தியம் கூடப் பிடித்து விடுமோ என்று பயந்து போனாள்.

ஒரு பக்கம் பிரச்சனையே அந்தக் கணவனால் தான் என்றாலும், அதே மனம் இன்னொரு பக்கம் கணவனுக்காக ஏங்கியது.

அவன் மட்டும் தன்னுடன் இருக்க நேர்ந்தால் அனைத்தும் சரியாகி விடுமோ என்றும்,

ஒருவேளை...

ஒருவேளை தான் நினைப்பது போலக் கணவனாலும் அந்தப் பெண் சுமிதாவை முழுமையாக மறக்க முடியாமல் விரும்பிக் கொண்டிருந்தால்,

அப்படி எண்ணியது தான் தாமதம்.

படுக்கையில் விழுந்து கதறத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாமல் வெகுநேரம் அழுதவள், மீண்டும் தெளிந்து எழுந்து அமர்ந்த போது வலியில் தலை விண்விண்ணென்று தெறிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

கடவுளே என்னால் முடியவில்லையே...

மீண்டும் அழுகையில் உதடுகள் பிதுங்கின.

ம்கூம்.

வேண்டாம் மனமே வேண்டாம்.

சும்மாவே என்னவென்று கேட்பவர்களிடம் சமாளிப்பது கடினம்.

இனி முகத்தையும், கண்களையும் வேறு வீங்க வைத்துக் கொண்டால்,

அவ்வளவுதான்.

அதிலும் சந்தேகமே இல்லாமல் தந்தை பயந்துபோய் விடுவார்.

கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மாலை ஆறு மணி ஆகியிருந்தது.

கம்பெனியிலிருந்து எப்பொழுதோ தந்தை வந்திருப்பார்.

உடனே எழுந்தவள் சென்று குளித்து விட்டு இரவு உடையுடன் வெளியே வந்தாள்.

கண்ணாடியில் முகத்தைப் பார்த்தவளுக்கு அழுததின் அடையாளங்கள் தெரிவதைப் போலத் தான் இருந்தன.

லேசான ஒப்பனைக்குப் பிறகு சற்றே பரவாயில்லாமல் உணர்ந்தாள்.

தொடர்ந்து சில நிமிடங்களில் கீழே வந்திருந்தாள்.

தந்தை ஹால் சோபாவில் அமர்ந்து டி.வி.யில் ஏதோ நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''வாடாம்மா.''

''வரலாம் டாடி கம்பெனியிலிருந்து எப்ப வந்தீங்க?''

''வழக்கம் போல அஞ்சு மணிக்குத் தான்'' என்ற தந்தையின் பார்வை தனது முகத்தை ஆராய்கிறதோ.

அல்லது தனக்குத் தான் அப்படித் தோன்றுகிறதா.

''என்னடாம்மா?''

''என்ன டாடி?''

''டல்லார்க்க?''

தலைசுற்றல், வாந்தியென வழக்கமான காரணங்களையே சொன்னாள்.

சாதாரணம் போலத் தந்தையைப் பார்த்துச் சொன்னவளுக்கு அதற்காக அழுதாயா என்பதைப் போல அவருடைய பார்வை இருந்தது.

''உண்மைய சொல்லு என்ன பிரச்சனை?''



''அதெல்லாம்...''

''வேண்டாம் கண்ணம்மா சமாளிக்காத சில நாளாவே நானும் உன்ன கவனிச்சுட்டுத் தானே இருக்கேன்...''

''சில நாளா தான் எனக்கும் இந்த டைம் டென்ஷன்ஸ் அதிகமா இருக்கு டாடி. ஒண்ணுமே முடியல. பேசாம அங்க போய் இருந்தாலாவது அத்தை இருக்காங்க நல்லாப் பாத்துப்பாங்க...''

தந்தை நம்ப வேண்டுமென்பதற்காக எதையெதையோ சொன்னாள்.

அதற்குப் பலன் இருந்தது.

''சரிதான் கண்ணம்மா. இதப்பத்தி இங்கயும் அவ்வளவா யாருக்கும் ஒண்ணும் தெரியாது. அதனால அப்படியே செய் அதுதான் சரி'' என்றார் பாலகிருஷ்ணன்.

கிளம்புவதில் ஆர்வம் காட்டாமல் இருக்கிறாளே, ஏதாவது பிரச்சனையோ என்று மனதிற்குள் லேசாக பயந்து கொண்டிருந்தவருக்கு மகளின் வார்த்தைகள் சற்று நிம்மதியைக் கொடுத்திருந்தன.

நான்கு நாட்கள் இருக்கட்டுமா என்று கேட்டு விட்டு தொடர்ந்து பத்து நாட்களுக்கும் மேலேயே ஆகி விட்டதில் எங்கே மாப்பிள்ளைக்குக் கோபம் வந்து விட்டதோ என்ற பயம் அவருக்கு.

அப்படி ஒன்றும் இல்லையென்பது இப்பொழுது தெளிவாகி விட்டிருந்தது.

ஆனாலும் அதை மகளிடமும் கேட்டார்.

அதற்கு மகள் சொன்ன பதில் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒன்றாகத் தான் இருந்தது.

அவள் சொன்னது இதுதான்.

''அவர் காலைல நேரத்துல நாலு மணிக்குப் போனார்னா, நைட் பன்னிரெண்டு மணிக்கு தான் டாடி வர்றார். புதுக் கம்பெனி ஆரம்பிச்சதுக்கப்புறம் நான் அங்கிருந்த பதினஞ்சு நாளுமே அப்பிடித்தான் செஞ்சார்.''

''இப்பவும் அப்படித்தான் செஞ்சுட்டிருக்கார். இன்னுமொரு சில வாரங்களுக்கும் இப்பிடித்தான் இருக்கும் பொறுத்துக்கோன்னு அன்னைக்கே கேட்டுக்கிட்டார்.''

''அப்பிடி அவரும் இல்லாம நான் மட்டும் அங்க போரடிச்சட்டிருக்கணுமேன்னு தான்...''

''புரியுது கண்ணம்மா.''

''அதோட...''

''ம், என்னமா?''

''ஒண்ணுமில்ல டாடி, ஏன் சிரிக்கறீங்க?''

''முதல்ல போய் எதையாவது சாப்புடு போ'' என்று பாலகிருஷ்ணன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே டிபன் ப்ளேட்டுடன் வந்தாள் அமிர்தம்.

''இந்தாங்க ஸ்வேதாம்மா எடுத்துக்கோங்க.''

''தேங்க்ஸ் அமிர்தாம்மா'' என்று வாங்கிக் கொண்டவள் ''கொஞ்சம் ஸ்ட்ராங்கா ஒரு கப் காபி மட்டும் எடுத்துட்டு வாங்க இப்பவே'' என்று அனுப்பினாள்.

சரியென்று அவள் நகர, ''இந்தாங்க டாடி எடுத்துக்கோங்க'' என்று ஸ்பூனுடன் சுண்டல் இருந்த ப்ளேட்டை தந்தைக்கு முன்பாக நீட்டினாள்.

''நான் ஆச்சு, அப்புறம் மாப்ள வர்றேன்னார்மா.''

அப்படிச் சொல்லி விட்டு மகளின் முகத்தை ஆராய்ந்தார், அவளறியாமல் தான்.

எதிர்பார்த்தது போலவே அங்கே எந்த உணர்ச்சிகளும் தென்படவில்லை.



மாறாகக் கேள்வியுடன் பார்த்தாள்.

''என்னமா?''

''ஐயா ரொம்ப பிஸின்னு சொல்லிக்கிட்டார்'' என்று முயன்று வரவழைத்த புன்னகையுடன் கேட்டாள்.

''சரிதான், மாப்ள வந்ததும் அவர்கிட்டயே கேளேன்.''

''சரிதான், அப்புறம் அவர் பிஸினஸ் எப்படி டாடி போகுது. ஐ மீன் எனக்கு பிஸினஸ் பத்தி அவ்வளவா தெரியாததால உங்க அனுபவத்துக்கு என்ன தோணுதுன்னு கேக்கறேன்.''

எங்கே குழி பறிக்கும் பெருச்சாளியாய் உடன் இருந்து கொண்டு அந்த சுமிதா இன்னும் என்னென்ன செய்கிறாளோ என்ற பயம் ஸ்வேதாவிற்கு.

''என்ன டாடி?''

''திடீர் திடீர்னு ஏதோ யோசனைக்குப் போயிடற?'' என்றவர் ''அவரோட ஒவ்வொரு மூவ்மெண்ட்டும் ரொம்பப் பிரமாதமா இருக்குமா. இவ்வளவு சீக்கிரம் இந்த அளவு முன்னேற்றத்த நானே எதிர்பார்க்கல'' என்றார்.

அதைச் சொல்லும்போது தந்தையின் குரலில் இருந்த பெருமிதம் வெளிப்படையாகவே தெரிந்தது.

சரிதான் கணவன் கொஞ்சம் வேலையையும் பார்க்கிறான் போலத்தான் இருக்கிறதென்று ஏளனத்துடன் நினைத்துக் கொண்டாள்.

பிறகு உடனே அப்படி நினைத்ததற்காகத் தன்னையே நொந்து கொண்டாள்.

அப்படியெல்லாம் நினைக்க வைக்கும் அந்த சுமிதாவின் மேல் வெறுப்பும், கோபமும் இன்னும் அதிகம் தான் ஆயின.

ஏதோ தோன்றியவளாக உடனே முக பாவனையை சீராக்கிக் கொண்டாள்.

ஆனாலும் மகளின் முகத்தில் தெரிந்த அந்த லேசான விரக்தியும், ஏதோ எண்ணங்களின் தீவிரமும் பாலகிருஷ்ணனின் கண்களில் படத் தவறவில்லை.

முன்பு எப்படியோ, இப்பொழுது பாலகிருஷ்ணனுக்குத் தனது மாப்பிள்ளையின் மீது முழு நம்பிக்கை வந்திருந்தது.

அதற்காக முன்பு அப்படியில்லை என்று பொருளல்ல. மகள் சிறுபிள்ளைத்தனமாக ஏதாவது தவறுகளை செய்தாலும் கூட அதைப் பொறுத்துக் கொண்டு போய் விடுவாரென்ற நம்பிக்கை இப்பொழுது அவருக்கு நிறையவே இருந்தது.

என்னவென்று கேட்ட மகளிடம் அதை சொல்லிவிடப் போனவர் பிறகு வேண்டாமென்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டார்.

## 43

தொடர்ந்து சிறிது நேரத்தில் வந்த கணவனை தந்தையைப் போலவே தானும் சந்தோஷமாக வரவேற்றாள் ஸ்வேதா.

பத்து நாட்களுக்குப் பிறகு பார்ப்பதற்கு மனம் எப்படித் துள்ளிக் குதிக்க வேண்டும்.

ஆனால் அந்த முறை ஸ்வேதாவிற்கு அப்படியெல்லாம் எதுவும் தோன்றவில்லை.

ஆனாலும் அந்த வித்யாசம் துளியும் வெளியே தெரியாத வண்ணம் பார்த்துக் கொண்டாள்.



தந்தையிடம் சில வார்த்தைகள் பேசி விட்டுத் தன்னை நோக்கித் திரும்பிய கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

அவன் முகத்தில் தெரிந்த ஆவலும் ஆர்வமும் அவன் இன்னும் பழைய ஜெயவர்த்தன் தான் என்பதை உறுதி செய்திருந்தன.

அதை ஸ்வேதா உணர்ந்து கொண்டு இயல்பு நிலைக்குத் திரும்பும் முன், மனைவியிடம் தெரிந்த அந்த வித்யாசத்தை நன்றாகவே கண்டு கொண்டிருந்தான் ஜெயவர்த்தன்.

ஆனாலும் அதில் அவனுக்குத் தவறாக ஒன்றும் படவில்லை.

ஏனோ...

ஏனோ என்ன, இப்படித்தான் தொழிலையே பார்த்துக் கொண்டு இருந்து விடுவதா என்ற கோபம் என்பது புரிந்தது.

"என்னமா, எப்படியிருக்க?"

கணவன் கேட்க, "நல்லார்க்கேன்" என்றாள்.

கணவனின் அந்தக் கரிசனத்தில் அவளையறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருக்க, எங்கே அவர்களுக்கு முன்பாகவே அழுது விடுவோமோ என்று திரும்பிக் கொண்டாள்.

உடனே எழுந்து தனது அறைக்கும் வந்து விட்டிருந்தாள்.

வந்தவள் தன்னைத் தொடர்ந்து கணவனும் எழுந்து வந்து தன்னிடம் பேசுவானென்று ஆவலுடன் அந்த அறையின் வாயிலையே பார்த்தாள்.

உள்ளம் பரபரக்க இதோ வந்து விடுவானென்று காத்திருந்தாள்.

ஆனால் ஒரு மணி நேரத்திற்கு மேலேயே ஆகியும் ஜெயவர்த்தன் மனைவியைத் தேடி வந்திருக்கவில்லை.

பாலகிருஷ்ணன் தொழிலைப் பற்றி ஏதோ கேட்க, சாதாரணம் போலத் தொடங்கிய பேச்சு பிறகு வெகு மும்முரமாகி விட்டிருந்தது.

தன்னைவிட மிகுந்த முன் அனுபவஸ்த்தரான மாமனாரின் தொழில் அனுபவங்களையும், வழி முறைகளையும் தன்னை மறந்து கேட்கத் தொடங்கி விட்டிருந்தான் ஜெயவர்த்தன்.

தான் சொல்வதனைத்தையும் தனது மரியாதைக்குரிய மாப்பிள்ளையே மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்கத் தொடங்கி விட்டிருக்க, பாலகிருஷ்ணனுக்கோ சொல்ல வேண்டியதே இருக்கவில்லை தன்னை மறந்து பேசத் தொடங்கி விட்டிருந்தார்.

இடையில் சிலமுறை ஜெயவர்த்தனுக்கும் மனைவியின் நினைவு வரவே செய்தது.

பாவம் மகள் பல நாட்களுக்குப் பிறகு கணவனுடன் பேச ஆசையாக இருப்பாளே என்று அவருக்கும்.

சரிதான் அது மாப்பிள்ளைக்கே தெரியுமல்லவா, தான் குறிப்பிட்டுச் சொன்னால் என்ன நினைத்து விடுவாரோ என்று அவர் பேசாமல் இருந்துவிட, மாமனார் அவரே என்றைக்குமில்லாத அதிசயமாக இவ்வளவு ஈடுபாட்டுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது இனி தான் இடையில் எழுந்து சென்றால் நன்றாயிருக்குமா என்று ஜெயவர்த்தனும் அப்படியே அமர்ந்து விட்டிருந்தான்.

அதெல்லாம் தொடக்கத்தில் தான்,

போகப் போக இருவருமே ஸ்வேதாவைப் பற்றி மறந்து போனார்கள்.



கணவன் வருவான் வருவானென்று தங்களுடைய அறையில் காத்திருந்த ஸ்வேதாவிற்கு, அதற்குப் பிறகு தான் ஒரு மணி நேரமும் கூட ஆகி விட்டிருந்தது தெரிந்தது.

என்னவாயிற்று.

ஆச்சரியமாகப் போய் விட்டிருக்க வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

பார்த்தவளுக்குக் கணவனும், தந்தையும் வெகு மும்முரமாகப் பேசிக் கொண்டிருந்தது தெரிந்தது.

அப்படியே சில வினாடிகள் நின்று பார்த்தவள் பிறகு மீண்டும் அறைக்குள் வந்து விட்டிருந்தாள்.

ஏனோ இன்னதென்று சொல்ல முடியாத அளவிற்கு மனம் கசந்து போயிருந்தது.

மணமான புதிதில் வெளியூர் சென்று வரும் கணவன் தன்னைப் பார்ப்பதற்காகவே ஆவலுடன் ஓடி வருவது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

அப்படியானால் கணவன் இப்பொழுது அந்த மாதிரி இல்லையா.

மாறி விட்டானா.

அதிலென்ன சந்தேகம்.

அவனைப் பொறுத்தவரை ஒன்றை நினைத்து விட்டால் எப்பொழுதும் யாருக்காகவும் பார்க்க மாட்டானே,

அவனே இப்பொழுது இப்படி இருக்கிறானென்றால்.

சந்தேகமே இல்லை கணவன் மாறித்தான் போய் விட்டான்.

அவனிடம் போய் அப்படிக் கண் கலங்கினோமே என்று ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

அந்தக் கண்ணீர், நீண்ட நாள் பிரிவு, ஆவலுடனான தனது எதிர்பார்ப்பு இப்படியெதுவுமே துளியும்

கணவனை பாதிக்கவில்லையென்றால் இனிமேல் சொல்ல என்ன இருக்கிறது.

சரிதான், அந்த சுமிதா இவனை மாற்றி விட்டாள்.

அப்படி ஏன் நினைக்க வேண்டும்.

இவனென்ன பச்சைக் குழந்தையா வாய்க்குள் விரலை வைத்துக் கடி என்றதும் கடிப்பதற்கு...

அதுவும் அந்த சுமிதாவை மாற்றியதே இவனாக இருக்கும் பொழுது.

அப்படியானால் கணவனைத் தான் சந்தேகப்படுகிறோமா.

நல்லபடியாக எண்ண எவ்வளவோ தேடியும் ஒன்றும் கிடைக்காதபோது.

பிறகு என்ன தான் செய்வது.

சரி 'சந்தேகம்' என்பது வேண்டாம்.

அது சற்றுப் பெரிய வார்த்தை.

ஆனால் முன்பு இருந்ததற்கு இப்பொழுது கணவன் மாறி விட்டது உறுதி.

அதில் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லை.

மேலும் சிறிது நேரமும் கூட அப்படியே பார்த்துக் கொண்டிருந்தவள், பிறகு டி.வி.யை ஆன் செய்து கொண்டு அமர்ந்து விட்டிருந்தாள்.

அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்ததாக தான் மட்டும் ஏன் காட்டிக் கொள்ள வேண்டும் என்றிருந்தது.

மேலும் பத்து நிமிடங்களும் சென்றிருக்க இன்டர்காம் ஒலித்தது.

தந்தை தான்.

சாப்பிட அழைக்க, ''இதோ'' என்று கீழே இறங்கி வந்தாள்.



''டிபன் ரெடியான்னு பாருமா?''

தந்தை சொல்ல, ''இதோ பாக்கறேன் டாடி'' என்று வந்தாள்.

சிறிது நேரத்தில் மூவரும் டிபன் சாப்பிட்டு முடிய, எதைப் பற்றியும் யோசித்து இருக்கிற கொஞ்சம் நிம்மதியையும் கெடுத்துக் கொள்ள மனமின்றி இயல்பாகத் தங்களுடைய அறைக்குள் வந்திருந்தாள்.

இப்பொழுது கணவன் தனக்காகக் காத்திருப்பது தெரிய சிரிப்பு தான் வந்தது.

ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

இயல்பாகத் தன்னைப் பார்த்த கணவனை தானும் பார்த்தாள்.

''மாமாகிட்டப் பேசிட்டிருக்கும்போது இடையில எழுந்து வர முடியலமா.''

''நமக்குக் கல்யாணமானதுல இருந்து இது வரைக்கும் அவர் இந்த அளவுக்கு டீப்பா பேசினதே இல்ல.''

''நீயாவது கீழ வருவேன்னு எதிர்பாத்தேன். ஆனா நீயும் வரல.''

விட்டால் உன் தந்தை மீது தான் தவறு என்று கூடச் சொல்வான் போலிருக்கிறது.

இல்லையே, தன்னுடைய ஜெயவர்த்தன் எப்பொழுதும் யாரையும் குற்றம் சொல்லவே மாட்டானே.

அவனைப் பொறுத்தவரை ஒன்றை நினைத்து விட்டால் அந்தக் கடவுளே கீழே இறங்கி வந்தாலும் கூட அதைச் செய்ய விடாமல் தடுக்க முடியாதே.

இவன் கூட இந்த மாதிரி சப்பைக் கட்டுகளைக் கட்டுவானா.

நம்பவே முடியவில்லையே.

''என்னடா...'' என்று கணவன் தன்னை நோக்கி இரண்டு அடிகள் எடுத்து வைத்திருக்க, தன்னையறியாம லேயே அப்படியே பின்னால் நகர்ந்திருந்தாள் ஸ்வேதா.

மனைவியின் தயக்கம் வித்யாசமாகத் தெரிந்தாலும் அதைப் பற்றி யோசிக்காமல் குளிக்கச் சென்று விட்டிருந் தான் ஜெயவர்த்தன்.

ஸ்வேதாவிற்கும் கணவனின் செய்கைகள் சற்று வித் யாசமாகவே தெரிந்தன.

கோபத்துடன் செல்கிறானோ.

சரிதான் போகட்டும்.

தன்னைப் பற்றி என்னவென்று நினைத்துக் கொண் டிருக்கிறான்.

கணவனும் வேண்டுமென்றே எதையும் செய்திருக்க வில்லை என்றாலும்கூட, இப்பொழுது அவன் நடந்து கொள்வதைத் தான் அவளால் ஏனோ சுத்தமாகப் புரிந்து கொள்ள முடிந்திருக்கவில்லை.

குளித்து முடித்து பதினைந்து நிமிடங்களில் வந்த ஜெயவர்த்தன் மனைவி படுத்து விட்டிருந்ததைக் கண் டான்.

''ஸ்வேதா.''

............

பேசாததில் தூங்கி விட்டாள் போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே திரும்பிய மனை வியைப் பார்த்தவன் ''என்னாச்சு?'' என்று கேட்டான்.

''ஒண்ணுமில்ல ஒரு மாதிரியிருக்கு.''

முதலில் புரியாதது போலப் பார்த்த கணவன், பிறகு சரிதானென்று அவனுடைய வேலைகளைப் பார்க்கத் தொடங்கி விட்டிருக்க, தொடர்ந்து சில வினாடிகள்



கணவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு மீண்டும் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

மனம் கேட்காமல் போக மீண்டுமொரு முறையும் கூடத் திரும்பிப் பார்த்தாள்.

ஆனால் இப்பொழுது அவன் படுத்து விட்டிருந்தது தெரிய, என்னவோ போல ஆகி விட்டிருந்தது.

திடீரென்று இப்படி முற்றிலுமாக மாறிவிட முடியுமா என்ன?

கணவன் தன்னிடம் வந்து பேச மாட்டானா.

அவனுடைய மார்பில் முகம் புதைத்துத் தூங்க மாட் டோமா என்றெல்லாம் ஏங்கிய மனதைக் கட்டுப் படுத்திக் கொள்ளத் தெரியாமல் விழித்தாள்.

ஆனால் வினாடிகள் நிமிடமும் பிறகு அதுவும் கரைந்து இப்பொழுது கணவனிடமிருந்து சீரான மூச்சின் ஒலியும் வரத் தொடங்கி அவன் தூங்கி விட்டானென் பதும் உறுதியாகி விட்டிருக்க, கண்களும் கலங்கியிருந்தன.

ஓசையின்றி கண்ணீர் வடித்தாள்.

மனம் எதையதையோ எண்ணிக் களைத்துப் போனது தான் மீதியாயிற்று.

இவனுக்குத்தான் இருபத்தி நான்கு மணி நேரங்களும் தொழில், வெளி மனிதர்கள், வெளியூர் பயணங்கள்.

போதாக்குறைக்கு அந்த சுமிதா வேறு.

ஆனால் தனக்கு.

எந்நேரமும் தன்னையே நினைத்துக் கொண்டிருப் பாளே என்பது தெரியாதா என்ன?

பத்து நாட்களுக்கு முன்பு கம்பெனியில் வைத்து சிரித்துப் பேசியது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

தந்தையைத் தான் தவறாக நினைத்து விடக் கூடாதென்று கூட அவ்வளவு எடுத்துச் சொன்னானே.

ஏன் அந்த மாதிரியெல்லாம் தான் கூட இதுநாள் வரை யோசித்ததில்லையே.

அந்த அளவிற்கு மற்றவர்களின் மனதைப் புரிந்து கொள்ள முடியும் என்கிறவனால் தன் மனதை மட்டும் எப்படிப் புரிந்து கொள்ள முடியாது போயிற்று.

சரிதான்.

இவனுக்குத் தான் அந்த சுமிதா இருக்கிறாளே, அவளுடனான பழங்கதைகளைப் பேசிக் கொண்டிருந்தாலே நேரம் போவது தெரியாது.

எல்லாவற்றிற்கும் மேலாக அவளுடைய ஜாலம் வேறு.

அது தன் மேல் கணவனுக்கிருக்கும் கொஞ்ச நஞ்ச நினைவுகளையும் மறக்கச் செய்து விடுமே.

எது எப்படியோ கணவனுக்காக ஏங்கும் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளத் தெரியாமல் வெகுநேரம் கண்ணீர் வடித்தாள் ஸ்வேதா.

எதற்கும் எல்லையென்று ஒன்று இருக்கிறதல்லவா, ஒரு கட்டத்தில் உடலோடு மனதும் சோர்ந்து போய் விட்டிருக்க, அப்படியே தூங்கிப் போனாள்.

## 44

நல்ல தூக்கத்திலிருந்து திடீரென்று கண் விழித்த ஜெயவர்த்தன், கடிகாரத்தில் நேரம் பார்த்தான்.



நடு இரவு ஒரு மணி எனக் காட்டியது கடிகாரம்.

மனைவியைத் திரும்பிப் பார்த்தான்.

நல்ல உறக்கத்திலிருந்தது தெரிந்தது.

அதே குழந்தைத்தனமான முகம்.

ஆனால் அது ஏன் இப்படி ஒரேயடியாக வாடிப் போய்க் களைத்து, களையிழந்து...

உண்மையிலேயே அவளால் முடியவில்லையோ.

பார்ப்பதற்கும் முன்பு இருந்ததற்கு இப்பொழுது பாதியாக மெலிந்து போயிருந்தது தெரிந்தது.

மனைவியே சொல்வதைப் போல இங்கு வந்தாலே தனிமையின் கொடுமையை சற்று அதிகமாகத் தான் உணர்கிறாள் போலிருக்கிறது.

ம்கூம், இனிமேல் இங்கு தொடர்ந்து அதிக நாட்கள் தங்குவதற்கு ஊக்குவிக்கக் கூடாது.

ஒன்றும் முடியாமல் நிறையத்தான் சிரமப்படுகிறாள்.

இந்த நேரத்தில் எதெது எப்படிச் செய்ய வேண்டுமென்று கூட இங்கு அவ்வளவாக யாருக்கும் தெரியவில்லையென்று மாமா சொன்னதும் நினைவிற்கு வந்தது.

மனைவி இங்கே இருக்கிறேனென்றதும் தான் சரியென்றிருக்கக் கூடாதோ,

சரிதான், நல்லதாகிப் போயிற்று தொல்லையின்றி தொழிலைப் பார்க்கலாமென்று கேட்டதும் தான் உடனே சரியென்று விட்டதாகக் கூட அவள் நினைத்திருக்கலாம்.

தான் இப்போதிருக்கும் நிலைக்கு மனைவி அப்படி நினைத்திருந்தாலும் கூட அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையே.

என்னதான் தொழில் முக்கியமென்றாலும் ஒவ்வொரு நாளும் அவளுக்காகத் தன் மனம் ஏங்குவதைப் பற்றி மனைவிக்கு என்ன தெரியும் என்றிருந்தது.

இப்படித் தொழிலைப் பார்க்க நேர்ந்து விட்டதே, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இந்த நிலை மாற வேண்டும் மாற்றியாக வேண்டும் என்றெல்லாம் வெகு தீவிரமாகத் தான் போராடிக் கொண்டிருப்பதைப் பற்றியும்.

தூக்கம் அருகில் கூட வரமாட்டேனென்று விட்டிருக்க, தூங்கிக் கொண்டிருந்த மனைவியையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தவன் அதிகாலை நேரத்தில் தான் உறங்கவே தொடங்கினான்.

காலையில் விழித்து எழுந்தபோது கணவன் மனைவி இருவருக்குமே வெவ்வேறு விதங்களில் உடலும் மனமும் சோர்ந்து தான் போயிருந்தன.

மனைவி கொண்டு வந்து நீட்டிய காபி கப்பை ட்ரேயிலிருந்து எடுத்துக் கொண்ட ஜெயவர்த்தன் "நீயும் கூட வர்றதான?" என்று கேட்டான்.

எப்படியும் அன்று மனைவியை உடன் அழைத்துப் போய் விடுவது என்பதில் அவன் உறுதியாகவே இருந்தான்.

என்ன தன்னுடன் வருவதற்கு அப்பொழுதே சென்று கிளம்பியாக வேண்டும். ஆனால் அது மனைவிக்கு சிரமமாக இருக்குமே என்று தான் அவன் அப்படிக் கேட்டதும்.

ஆனால் ஸ்வேதாவையோ கணவனின் கேள்வி வேறு மாதிரி எண்ண வைத்திருந்தது.

இது என்ன பட்டும் படாமல் இப்படியொரு கேள்வி என்றிருந்தது.



இதுவே 'கிளம்பு' என்று அவனுடைய பாணியில் சொல்லியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்குமென்று நினைக்கத் தோன்றியது.

சரிதான், சும்மா பெயருக்கு அழைப்பவன் பிறகு வேறு எப்படிக் கேட்பான்.

கணவன் என்ன என்பதைப் போலத் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிய "நீங்க எப்படி சொல் நீங்களே அப்படியே செஞ்சுக்கறேன்" என்றாள்.

"உனக்கு என்ன தோணுதோ அப்படியே செய்."

என்னது.

தன் மனதிற்குத் தோன்றுவதை செய்வதாமா. இதற்கு இவன் அழைக்காமலே இருந்திருக்கலாம்.

"என்ன சொல்ற?" என்று மீண்டும் கணவன் கேட்க,

"தெரியல" என்றாள் ஸ்வேதா.

இது என்ன இப்படியொரு பதில் என்பதைப் போல மனைவியைப் பார்த்த ஜெயவர்த்தன்,

"ஆமா ஏன் லாஸ்ட் டென் டேஸா போனே பண்ணல?" என்றான்.

"ரெண்டு தடவ கூப்பிட்டேன்..."

அப்படிச் சொன்ன மனைவியை நாளொன்றுக்குக் குறைந்தது இரண்டு முறை அழைப்பவளா இவள் என்பதைப் போலப் பார்த்தான்.

என்னவாயிற்று இவளுக்கு.

ஏன் இப்படிப் பட்டும் படாமல் வித்யாசமாக நடந்து கொள்கிறாள்.

தனது இப்போதைய நிலையை அன்று அவ்வளவு எடுத்துச் சொன்ன பிறகும் இன்னும் கோபம் தீரவில்லையோ

''நானொரு பத்து நாள் குறைஞ்சது ஒரு வாரம் வெளியூர் போக வேண்டியதிருக்கும். அப்ப நீ வந்து கம்பெனில இருக்கணும்.''

''ஏன் சுமிதா இல்லையா?''

மனைவியின் கேள்வியில் அவளை உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்தவன் ''நான் உன்ன வரச் சொன்னேன்'' என்றான்.

''அதான் ஏன்?''

மீண்டும் மனைவி அப்படிக் கேட்க, இனி உன்னுடன் பேச ஒன்றுமில்லை என்பதைப் போல அங்கு வந்த பாலகிருஷ்ணனுடன் பேசத் தொடங்கி விட்டிருந்தான்.

இயல்பாகப் பேசிக் கொண்டிருந்த பாலகிருஷ்ணனும் ''என்னமா நீயும் மாப்ள கூடக் கிளம்பற தான?'' என்று மகளைப் பார்த்துக் கேட்டார்.

என்னதான் தந்தையும் கணவனைப் போலவே கேட்டிருந்தாலும் அதில் அவளுக்குத் தவறாக எதுவும் தெரியவில்லை.

இயல்பாக பதில் சொன்னாள்.

அந்த வித்யாசம் ஜெயவர்த்தனின் கவனத்திற்கும் தப்பவில்லை.

அப்படியானால் தனக்கு மட்டும் ஏன் அப்படி வித்யாசமான பதில் என்று தனக்குத்தானே நினைத்துக் கொண்டபடி குளிப்பதற்காகச் சென்றான்.

''சரிடாம்மா நான் கிளம்பறேன்'' என்ற தந்தையைத் திரும்பிப் பார்த்தாள் ஸ்வேதா.

''என்ன பாக்கற? இன்னைக்கு வெளியூர் போக வேண்டியிருக்குன்னு ஒரு வாரமா சொல்லிட்டிருந்தேனே மறந்துட்டியா?'' என்றார்.



''சரிதான் டாடி ஞாபகம் வந்துடுச்சு, அவர்கிட்ட சொல்லிட்டிங்களா?''

''அதெல்லாம், இப்பக் கூடக் கிளம்பறேன்னு மாப்ள கிட்ட சொன்னேன் நீ தான் ஏதோ பலமான யோசனைல இருந்த.''

தொடர்ந்து சில நிமிடங்களில் தந்தை கிளம்பியிருக்க, அவருடைய கார் கண்களை விட்டு மறைந்ததும் வீட்டிற்குள் வந்தாள்.

கணவனிடம் மறக்காமல் கொடுத்து விடச் சொல்லித் தந்தை கொடுத்து விட்டுப் போன கவர் கையிலிருக்க, சரிதான் அப்பொழுதே கொடுத்து விடலாமென்று மேலே வந்தாள்.

''கவர் அப்பா குடுக்கச் சொன்னார்'' என்று வேகமாக வந்து சொன்னவளுக்கு அதற்குப் பிறகு தான் கணவன் இருந்த நிலை கண்களில் பட்டது.

கீழே வெறும் ஸார்ட்ஸ் மட்டும் அணிந்து வெற்று மார்புடன் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தவனின் நிலையில் தொடர்ந்து பார்க்க முடியாமல் குனிந்து கொண்டாள்.

முகம் சூடாகிச் சிவந்து விட்டிருந்த மனைவியின் அந்த நிலை பழைய நினைவுகளைத் தட்டியெழுப்பியிருக்க, முற்றிலுமாகத் தன் வசமிழந்து போயிருந்த ஜெயவர்த்தன் அவளை அருகில் இழுத்து அணைத்திருந்தான்.

ஏற்கனவே கணவனின் அருகாமைக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த ஸ்வேதாவும் நாற்புறமும் பொங்கிப் பிரவகித்து வந்த காட்டாற்று வெள்ளம் போன்ற கணவனின் எல்லையற்ற அன்பில் தன்னை மறந்துதான் போனாள்.

தானும் அப்படியே கணவனை இறுக அணைத்து அவனுடைய கதகதப்பான மார்பில் முகம் புதைத்துக் கொள்ள வேண்டும் போல ஏங்கிய மனதின் தீவிரத்தை ஒருவித வெறியுடன் அலட்சியம் செய்தவள், பலம் கொண்ட மட்டும் பிடித்துத் தள்ளினாள்.

காரணமே இல்லாமல் எதிர்க்கும் மனைவியின் செய்கையைப் புரிந்து கொள்ள முடியாமல் சில வினாடிகள் பார்த்த ஜெயவர்த்தன் பிறகு அங்கிருந்து சென்று விட்டிருந்தான்.

தன்னை அப்படிப் பார்த்து விட்டுப் போன கணவனின் அந்தப் பார்வை ஏதேதோ செய்ய, முயன்று நடப்பிற்கு வந்திருந்தாள்.

சிறிது நேரத்தில் குளித்துக் கிளம்பி வந்திருந்தவனைப் பார்த்தவள், ''டிபன் ரெடியா இருக்கு...'' என்றாள்.

மிகவும் மெல்லிய குரலில் தான்.

அதற்கே அவள் பிரம்மப் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது.

தொடர்ந்து சில வினாடிகளில் சாப்பிட வந்து அமர்ந்த கணவனுக்குப் பரிமாறினாள் ஸ்வேதா.

கணவனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட பார்வை தன்னை ஏதேதோ செய்ய, அதைக் கண்டும் காணாதது போல எங்கோ பார்த்துக் கொண்டு பரிமாறினாள்.

ஏன் தவறு செய்து விட்டதைப் போலத் தன் மனம் இப்படித் தவிக்கிறதென்று கேள்வி கேட்ட மனதை சும்மா இரு என்று அடக்கினாள்.

''இன்னமொரு இட்லி...''

ஜாடையிலேயே போதுமென்று தடுத்திருந்த கணவனின் பார்வை இப்பொழுது தன்னை அளவிடுவது புரிந்தது.



இன்னும் கிளம்பாமலிருக்கிறானே என்று பார்க்கிறானோ.

எதுவானாலும் உடன் வருகிறாயா என்று கேட்டவனுக்கு பதில் சொல்லிவிட நினைத்தவள், ''பக்கத்து வீட்ல... அன்னைக்குக் கூட கல்யாணத்துக்குப் போயிட்டு வந்தோமே அவங்க இன்னைக்கு சாயங்காலம் விருந்துக்கு வர்றாங்க'' என்றாள்.

என்ன சொல்லப் போகிறானோ என்று பார்த்தவளுக்குத் தான் சொன்னது காதில் கூட விழாதது போல நடந்து கொண்ட கணவனின் செய்கையில் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

கணவனின் அப்போதைய கோபத்திற்கான காரணம் புரிந்தாலும் அதை ஸ்வேதாவால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

ஒரு சிறிய விஷயத்திற்கே இப்படி நடந்து கொள்கிறானே, அப்படிப் பார்த்தால் தான் எப்படியெல்லாம் நடந்து கொள்வதாம்.

இவனுக்கு மட்டும் தான் கோபம் வருமாமா.

மற்றவர்களுக்கெல்லாம் ஒன்றுமே இல்லையாமா.

தொடர்ந்து சில நிமிடங்களில் உணவு முடிந்து எழுந்து கொண்ட கணவனின் பார்வையில் தானும் பார்த்தாள்.

''கம்பெனிக்கு வர முடியுமா... மத்தவங்களப் பத்தியெல்லாம் நீ பேச வேண்டாம்.''

சரிதான்.

அந்த சுமிதாவைப் பற்றிப் பேசுவதற்குத் தனக்கு உரிமையில்லை என்கிறான்.

"உதவி இல்லேன்னாலும் பரவாயில்ல. உபத்திரவம் செய்யாம இருந்தாப் போதும்" என்ற கணவனை நான் எதுவானாலும் செய்யத் தயார் என்பதைப் போலப் பார்த்தாள்.

தொடர்ந்து சில நிமிடங்களில் வருகிறேன் என்பதைப் போல ஒரு பார்வை பார்த்து விட்டுக் கணவன் கிளம்பியிருக்க, அவனுடைய கார் கண்களை விட்டு மறையும் வரை நின்றிருந்து விட்டு வீட்டிற்குள் வந்தாள்.

அந்த சுமிதாவைப் பற்றி ஒரு வார்த்தை பேசுவதற்கு முன் ஏன் இப்படிக் கோபப்படுகிறான் என்று யோசித்தவளுக்கு, அதற்கான காரணம் மட்டும் புரியவே இல்லை.

அதற்கு முன்பு யாரும் தன்னை அந்த அளவிற்கு உதாசீனப்படுத்தியதில்லை என்பதால், சுமிதாவின் விஷயத்தை எப்படிக் கையாள்வதென்று தெரியாமல் திகைத்து நின்றாள்.

அப்படி தான் செய்த தவறுதான் என்னவென்று யோசித்தவளுக்கு எதுவும் புரிந்திருக்கவில்லை.

தொடக்கத்திலிருந்து நடந்ததை ஒப்பிட்டுப் பார்த்தாள்.

பத்து நாட்களுக்கு முன்பு கணவனுடன் தான் அங்கு வந்தது.

அன்று வழக்கம் போலக் கணவன் அவனுடைய யதார்த்தமான அன்பில் தன்னைத் திக்குமுக்காட வைத்தது.

அதற்கு மறுநாள் காலையில் சுமிதாவிடமிருந்து தனக்கு அழைப்பு வந்தது.

அப்பொழுது அவள் சொன்ன அந்த அநியாயமான, அநாகரீகக் குற்றச்சாட்டுகள்.





அது அன்றோடு முடிந்து விடாமல் தொடர்ந்து ஒரு நாள் விட்டு ஒருநாள் அவள் அழைத்துக் கொண்டே இருந்தது.

மீண்டும் மீண்டும் அதே மாதிரி அசிங்கமான குற்றச் சாட்டுகள்.

என்னதான் கணவனைப் பற்றி அந்த சுமிதா சொன்ன வற்றையெல்லாம் நூறில் ஒரு பங்காகக் கூட நம்ப வில்லையென்றாலும், தனது அத்தையே சொல்வதைப் போல இப்படிப்பட்ட பெண்ணையெல்லாம் இவன் எதற் காக ஊக்குவிக்கிறான் என்ற ஆதங்கம் மட்டும் நிறை யவே இருந்தது.

அதற்குப் பிறகு ஏனோ கணவனிடம் வழக்கம் போல இயல்பாகப் பேச முடியாதென்று தோன்றியதில் தானாக அவனுக்கு அழைக்காதது.

பிறகு அவனாக அழைத்தபோது முயன்று இயல்பான குரலில் பேசியது.

அப்பாடா ஒரு பெரிய பிரச்சனை தீர்ந்ததென்று கார ணமே இல்லாமல் மனம் நிம்மதியடைந்தது.

பிறகு அதே நிலை இன்று வரை தொடர்வது,

தொடக்கத்திலிருந்து நடந்ததனைத்தையும் ஒவ்வொன் றாக நினைத்துப் பார்த்தவளுக்கு மனம் மேலும் பலவீன மடைந்தது தான் மீதியாயிற்று.

இதெல்லாம் தனக்கு நடந்ததாக இருக்க, காரணமே இல்லாமல் கணவன் ஏன் வித்யாசமாக நடந்து கொள்கிறா னென்று தான் அவளுக்கு சுத்தமாகப் புரிந்திருக்கவில்லை.

அப்படிப் பார்த்தால் இவனிடம் தான் எவ்வளவு தவறு களைக் கண்டு பிடிப்பதாம் என்று அதன் பாட்டுக்கு முணு

முணுத்த மனதையும் சமாதானப்படுத்த முடிந்திருக்க வில்லை.

## 45

மேலும் ஒரு வாரமும் சென்றிருக்க, இனி இதற்கு மேல் இங்கேயே இருந்தால் நன்றாயிருக்காது. ஏன் தந்தைக்கும் பதில் சொல்ல முடியாதென்று தோன்றி விட்டிருக்க, அன்றே புகுந்த வீட்டிற்குக் கிளம்பி வந்திருந் தாள் ஸ்வேதா.

சொன்னது போலக் கணவன் வெளியூர் கிளம்பிச் சென்றும் கூட ஒரு வாரமாகியிருந்தது தெரிந்தது.

சரிதான் அவனைப் பொறுத்தவரை சொன்னதை எப்பொழுது செய்யாமல் விட்டான் என்றிருந்தது.

ஏனோ இந்த ஒரு வாரமாக சுமிதாவிடமிருந்து எந்த வொரு அழைப்பும் வந்திருக்காததில் மனதிற்குள் சற்று நிம்மதியாக உணர்ந்தாள்.

சரிதான், சொல்கிற பொய்யைப் பொருந்தச் சொல்ல வேண்டாமா.

ஊரிலேயே இல்லாத ஒருவன் தன்னிடம் தவறாக நடந்து கொண்டானென்று சொன்னால் பிறகு அது எங்கப்பன் குதிருக்குள் இல்லையென்னும் கதையாகி விடாதா என்ன,

அப்படிப் பார்த்தால் கணவன் வெளியூரிலிருந்து வந்ததும் மீண்டும் தொடங்கி விடுவாளோ.

சரிதான்.

தாராளமாகத் தொடங்கட்டும்.



போனைக் கணவனிடமே கொடுத்து எனக்கொன்றும் புரியவில்லை என்னவென்று பாருங்களென்று விட லாம்.

அவனொரு கோபக்காரனம்மா என்று அத்தையும், ஒவ்வொரு நாளும் மாப்பிள்ளை போன் செய்தார் உன் னைப் பற்றி விசாரித்தார். அதென்ன எப்பொழுது பார்த் தாலும் என்னிடமே கேட்கிறார் அவருடைய அழைப்பை நீ ஏற்றுப் பேசுவதில்லையா என்று தந்தை சிரித்ததும் தான் நினைவிற்கு வந்தன.

தனக்கு அழைக்கக் கூடாதென்றெல்லாம் கணவன் அப்படிச் செய்திருக்கவில்லை என்றாலும், அந்த அள விற்கு ஏன் தந்தையிடம் விசாரிக்க வேண்டுமென்று வெட்கத்துடன் நினைக்கத் தோன்றியது.

தான் என்னென்ன செய்ய வேண்டுமோ, அதையெல் லாம் இவன் செய்து கொண்டிருக்கிறானே என்று புன்னகை யுடனும்,

''ஸ்வேதாம்மா.''

''வாங்க அத்தை.''

''என்ன பலமான யோசனைல உக்காந்திருக்க?''

''அப்படியெல்லாமில்லையே.''

''அப்பா வீட்ல ஜாலியா இருந்திருக்கும் இல்லையா கண்ணம்மா? இங்க சுத்த போர்...''

''ம்கூம், இங்க தான் ஜாலியா இருக்கு.''

''சரிதான் நம்பிக்கறேன்'' என்றவர் ''இந்தாடாமா எடுத் துக்கோ'' என்று ஆப்பிள் பழச்சாறு நிறைந்த டம்ளரை ஸ்வேதாவிடம் கொடுக்க அவள் ''தேங்க்ஸ் அத்தை'' என்று வாங்கிக் கொண்டாள்.

''ஆமா நானொன்று கேப்பேன். நீ மறைக்காம முக்கியமா உண்மையான பதில சொல்லணும்.''

அப்படிச் சொன்ன அத்தையை என்ன கேட்கப் போகிறாரோ என்பதைப் போலப் பார்த்தாள் ஸ்வேதா.

''ஏன் இப்படி மெலிஞ்சு போய்ட்ட?''

............

''என்னமா, பேசு...''

''நீயும் அங்க நிம்மதியா இருந்த மாதிரி தெரியல. உன் வீட்டுக்காரரும் இங்க அப்படித்தான், என்ன பாக்கற? நீ மட்டும் இன்னைக்கு வந்திருக்கலேன்னா நானே அங்க கிளம்பி வந்திருப்பேன் உன்ன அழைச்சுட்டு வர்றதுக்கு.''

...............

''இனிமேல் போனாலும் ரெண்டு, மூணு நாளைக்கு மேல இருக்காதடாம்மா, இந்த சமயத்துல உடம்புக்கு சத்தானத எடுத்துக்கணும். அதோட எதப் பாத்தாலும் வாய்க்குப் பிடிக்காத மாதிரி இருக்கும், உனக்கு என்ன சாப்பிடணும்னு தோணுதோ சொல்லு நான் செஞ்சு தர்றேன்.''

''சரிதான் அத்தை.''

தாயில்லாப் பெண் மனதிற்குள் வாடக் கூடாதே என்ற ஆதங்கம் காஞ்சனாவிற்கு.

அதை ஸ்வேதாவாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆறுதல் சொல்வதாக எண்ணிக் கொண்டு தானே இந்த மென்மையான சிறு பெண்ணின் உள்ளத்தை நோகடித்து விட்டோமோ என்று தோன்றி விட்டிருக்க, மீண்டும் அவராகவே வேறு பேசினார்.

அப்படி அவர் பேசியதும் உண்மையையே.



''கல்யாணத்துக்கு முன்னாடியெல்லாம் கோபப்படுவான்னா அதுக்கு ஏதாவது அர்த்தமிருக்கும். ஆனா இப்ப சில நாளா காரணமே இல்லாம எரிஞ்சு விழறான. அப்புறம் சம்பந்தமே இல்லாம சமாதானப்படுத்தறான்...''

கணவன் அப்படிச் செய்தானோ இல்லையோ, ஆனால் அத்தை சொன்ன பாவனையில் நன்றாகவே சிரித்து விட்டிருந்தாள் ஸ்வேதா.

ஏனோ சில நாட்களுக்குப் பிறகு மனம் மிகவும் லேசாகியிருப்பதைப் போல உணர்ந்தாள்.

சரிதான், அத்தையின் அணுகுமுறை அந்த மாதிரியான தாயிற்றே என்று நினைத்தவளுக்கு மீண்டும் மீண்டும் அவர் சொன்னதை நினைத்து சிரிப்பு வந்து கொண்டே இருந்தது.

''எது எப்படியோ கண்ணம்மா, நீ இல்லாம உம் புருஷன் ரொம்பத்தான் சிரமப்பட்டான், நீயும் ஒண்ணும் அங்க சந்தோஷமா இருக்கலேங்கறது பாத்தாலே தெரியுது. இனிமேல் போனா இப்படி ஒரேயடியா இருந்துடக் கூடாது. அப்புறம் அனுப்பவே மாட்டேனாக்கும் சொல்லிட்டேன்.''

வழக்கம் போல விளையாட்டாகவே அதே சமயம் கறாராகச் சொல்லி விட்டிருந்த அத்தையின் வார்த்தைகளில் ஏனோ தனது பிரச்சனைக்குப் பெரும் தீர்வு கிடைத்து விட்டாற் போலிருந்தது ஸ்வேதாவிற்கு. மனமும் நிம்மதியடைந்திருந்தது.

''அப்புறம் கண்ணம்மா...''

''என்ன அத்தை சொல்லுங்க?''

''அந்த சுமிதா வந்துட்டுப் போனாம்மா. என்னவோ உங்கிட்டக் கையெழுத்து வாங்கணும்னு வந்தா. சரிதான்

நீ வந்தா சொல்றேன்னு அவ கொண்டு வந்த புக்க வாங்கி வெச்சுக்கிட்டேன்.''

''அது என்னன்னு பாத்துக் கையெழுத்துப் போட்டுக் குடுத்துடுமா, யாராச்சும் டவுனுக்குப் போகும்போது குடுத்தனுப்பிடலாம்.''

''சரி அத்தை.''

''உன் வீட்டுக்காரர் எப்ப வர்றேன்னார் ஸ்வேதாம்மா?''

எங்கே அவனுடன் பேசித் தான் பல நாட்களாயிற்றே...

சரிதான், அவனுக்கென்ன போன வேலை முடிஞ்சதும் வருவானா இருக்கும் என்று மீண்டும் தனக்குத்தானே சொல்லிக் கொண்ட அத்தையை எதுவும் பேசாமல் பார்த்தாள்.

சற்றே நிம்மதியடைந்திருந்த மனம் அந்த சுமிதாவின் பேச்சில் மீண்டும் பாரமாகி விட்டிருந்தது.

ஏனோ அவளைப் பற்றி நினைக்கவே பயமாக என்பதை விட மிகவும் அருவெறுப்பாக உணர்ந்தாள்.

இப்படியெல்லாம் நாக்கூசாமல் இல்லாததையும், பொல்லாததையும் சொல்பவள் இனியும் என்னென்ன செய்ய மாட்டாள்.

சரிதான். அதுதான் முடிந்து போன கதையாயிற்றே.

அப்படியிருக்கும் போது தான் ஏன் மீண்டும் மீண்டும் அதையே நினைத்துப் பழையபடி மனதைப் புண்ணாக்கிக் கொள்ள வேண்டுமென்று நினைத்தவள், வேண்டாம் மனமே இனியும் அவளைப் பற்றி நினைக்காதே நடந்த தனைத்தையும் மறந்துவிடு என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

ஆனால் இனிமேல் தான் பெரும் பிரச்சனையே தொடங்கப் போகிறது என்பதை அப்பொழுது பாவம் ஸ்வேதா அறிந்திருக்கவில்லை.



# 46

குட்டிபோட்ட பூனையைப் போலக் குறுக்கும் நெடுக்குமாக கால்கள் தேய நடந்திருந்த சுமிதாவின் மனம் அன்று ஏனோ சற்றும் நிம்மதியில்லாமல் தவித்தது.

அதற்குக் காரணமும் வேறு யாருமல்ல.

அந்த ஸ்வேதா தான்.

கடைசியாகப் பேசிய போது அந்த ஸ்வேதா விடுத்த மிரட்டலில் உண்மையிலேயே பயந்து தான் போனாள் சுமிதா.

ஆனால் அதெல்லாம் சில நாட்கள் தான்.

அதெப்படி தன்னை ஒருத்தி மிரட்டலாமென்று நினைத்தவளுக்கு பிறகு ஸ்வேதாவின் மீதிருந்த வெறுப்பு பல மடங்கு அதிகமாகி விட்டிருந்ததென்று தான் சொல்ல வேண்டும்.

சரிதான், அவளே சொல்வதைப் போல சும்மா வாயிலேயே பேசிக் கொண்டிருப்பதை நிறுத்தி விடலாமென்ற முடிவுக்கு வந்திருந்தவள், மூளையைக் கசக்கி அதற்குமொரு வழியைத் தேடிப் பிடித்திருந்தாள்.

ஆனால் அதற்குள் ஜெயவர்த்தன் வெளியூர் பயணம் கிளம்பியிருக்க, ஒரு விதத்தில் அதைத் தனக்கு சாதகமாகவே பயன்படுத்திக் கொள்ள எண்ணினாள்.

எண்ணியதோடு மட்டுமல்லாமல் அதை வெற்றிகரமாகச் செயல்படுத்த ஒத்திகையும் பார்த்துக் கொண்டாள்.

ஒருமுறை இரு முறையல்ல, பலமுறை.

அப்படிப் பார்த்துக் கொண்டவள் மற்ற அனைவரையும் விடக் கூட ஜெயவர்த்தனின் வரவுக்காக ஆவலுடன் காத்திருக்கலானாள்.

இந்த முறை சற்றுப் பெரிய சிரமத்தைத் தான் எடுத்துக் கொள்ளப் போகிறோமோ என்று பதைபதைத்த மனதை, மீண்டும் மீண்டும் அதற்காகத் தயார்படுத்திக் கொண்டாள்.

சரிதான்.

இந்த முறை தான் நடிக்கப் போவது ஜெயவர்த்தனிடமே அல்லவா.

அதற்கு தைரியத்தோடு அதை செயல்படுத்த கொஞ்சம் விஷயமும் இருந்தாக வேண்டுமென்று நூற்றி ஓராவது முறையாக மீண்டுமொரு முறையும் மனதிற்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டாள்.

வெளியூரிலிருந்து திரும்பிய ஜெயவர்த்தன் முதலில் வீட்டிற்குத் தான் செல்ல எண்ணினான்.

ஆனால் அதற்குள் கம்பெனியில் செய்தாக வேண்டிய முக்கியமான வேலையொன்று நினைவிற்கு வர, அதைச் சொல்லி விட்டுச் சென்று விடலாமென்று அங்கு வந்திருந்தான்.

வந்தவன் நேராக ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்டுக்குப் போய் செய்ய வேண்டிய அந்த வேலையைப் பற்றிச் சொன்னான்.

அப்பொழுது தான் தான் நினைத்ததை விடவும் வேலைகளனைத்தும் பிரமாதமாக நடந்திருப்பது தெரிய, சந்தோஷத்துடன் தட்டிக் கொடுத்து தொடர்ந்து இதே போல நல்ல விதமாகச் செய்தால் நடப்பு மாதத்திலேயே நல்ல ஊதிய உயர்வு உண்டென்று ஊழியர்களுக்கு நம்பிக்கையூட்டி விட்டு வந்தான்.



அடுத்ததாக ஜெயவர்த்தன் வந்தது அவனுடைய இருக்கைக்கு.

வீட்டிற்குப் போய்க் குளித்து ஒரு குட்டித் தூக்கம் போட்டு விட ஏங்கிய மனதை சற்றுப் பொறு என்று அடக்கியவன் தனது பி.ஏ. நேர்த்தியாக அதே சமயம் வரிசைக் கிரமமாக அடுக்கி வைத்திருந்த ஃபைல்களை மேலோட்டமாகப் பார்வையிட்டான்.

அவன் எதிர்பார்த்ததை விடவும் அதிக ஆடர்கள், அதே சமயம் புதிய ஆடர்களும் வந்திருப்பது தெரிந்தன.

என்னதான் சுமிதா போனில் சொன்னாள் என்றாலும் நேரில் பார்ப்பதற்கு இன்னும் திருப்தியாக இருந்தது.

அது மட்டுமல்லாமல் அனைத்து வேலைகளுமே கூட பிரமாதமாக நடந்திருப்பதைக் கண்டான்.

சுமிதாவுக்காக அவளை வேலைக்கு எடுத்தது போலத் தெரியவில்லை. அவளால் நமக்கு தான் பலன் அதிகம் போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டவன், அவளுக்கும் நல்ல ஊதியம் முதல் அனைத்து சலுகைகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டான்.

''குட்மார்னிங் ஜெயன்.''

''வெரிகுட்மார்னிங் சுமிதா.''

''இப்பதான் வெளியூர் ட்ரிப் முடிஞ்சு வந்திருக்க போலிருக்கு?''

''சரிதான். ஆமா என்ன இவ்வளவு நேரத்துலயே வந்துட்ட?'' என்றவனுக்கு வாடி வதங்கிப் போயிருந்த அவளுடைய முகத்தைக் காண என்னவோ போலிருந்தது.

என்னவென்று காரணம் கேட்டான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்ல ஜெயன்.''

''சரிதான் எங்கிட்ட ஏன் உன் கஷ்டத்த சொல்லணும் விடு.''

ஜெயவர்த்தனின் அக்கறை மனதிற்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்திருந்தாலும் அதை அவள் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

பெரிதாக ஒன்றுமில்லையென்றே சாதித்தாள்.

ஆனால் ஜெயவர்த்தன் விட்டிருக்கவில்லை.

அதுவும் தனது நம்பிக்கைக்குரிய தொழிலாளியை ஆம் கம்பெனிக்குள் அந்த அட்டவணையில் தான் அவன் சுமிதாவை வைத்திருந்தான்.

அதற்குக் காரணமும் இருந்தது.

கல்லூரிக் காலத்தில் சுமிதா நடந்து கொண்டதை என்னதான் ஜெயவர்த்தன் பெருமளவு மறந்து போயிருந்தான் என்றாலும், அப்படி நடந்து கொண்டவளை மீண்டும் ஏன் அதையெல்லாம் எண்ணி வருத்தப்பட வைக்க வேண்டுமென்று அவன் அவசியமற்ற பேச்சுகள் எதையும் அங்கு வைத்துக் கொண்டதில்லை.

அப்படியானால் வெளியில் அதெல்லாம் இருக்கிறதா என்று கேட்டால், அங்கும் இல்லை தான்.

சும்மா சில வார்த்தைகள் இயல்பாகப் பேசுவதற்கே நேரமில்லாமல் சுற்றிக் கொண்டிருப்பவனுக்கு இனி அதற்கெல்லாம் ஏது நேரம்.

அதாவது அந்தப் போர்வையில் தான் சுமிதாவிடம் அவசியமற்ற பேச்சுக்களை தவிர்த்துக் கொண்டிருந்தான் ஜெயவர்த்தன்.

ஆனால் சுமிதா யார்,

அவளொன்றும் அதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள் அல்லவே.

நேரமே இருந்தாலும் கூட ஜெயவர்த்தன் தன்னை அவனிடமிருந்து வெகு தொலைவில் தான் நிறுத்தி வைப்பான் என்பதை அவள் நன்றாகவே புரிந்து வைத்திருந்தாள்.

அது மட்டுமல்லாது தனக்கு அவனிடமிருந்து வேறு எந்தச் சலுகைகளுமே கிடைக்காது என்பதையும்,

வேறென்ன, எக்காரணத்தைக் கொண்டும் கல்லூரி கால நினைவுகள் தனக்கு வந்து விடக் கூடாதென்பதில் அவன் மிகவும் உறுதியாக இருக்கிறான் என்பதும்.

ஆனால் அதனாலேயே தான் மனதிற்குள் நினைத்திருப்பதை செயல்படுத்தியே ஆக வேண்டுமென்று தீவிரம் கொண்டாள் சுமிதா.

கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் மிகுந்த அன்புடனும் அக்கறையுடனும் நடந்து கொண்டது அவளை மேலும் மேலும் பழிவாங்கத் தூண்டியதென்றே சொல்லலாம்.

ஏனோ இத்தனை நாட்கள் நடந்த நாடகம் இனிமேல் தான் சூடு பிடிக்கப் போவதைப் போல பெரும் ஆவல் கொண்டாள்.

சரிதான்.

அதிலென்ன சந்தேகம்.

தனது நாடகம் அரங்கேறப் போவது ஜெயவர்த்தனிடமே அல்லவா.

பிறகு அதெப்படி இல்லாமல் போகும்.

''அப்ப எங்கிட்ட சொல்லப் போறதில்ல அப்படித் தான?''

ஜெயவர்த்தனின் கேள்வியில் தான் அவள் மீண்டும் நடப்பிற்கு வந்திருந்தாள் எனலாம்.

அப்படி வந்திருந்தவள், பழையபடி முகத்தை சோகமாக இருக்கும்படி வைத்துக் கொண்டாள்.

''உனக்கு ஏன் என்னோட தலைவலியெல்லாம் ஜெயன்? அதுவும் இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் வெளியூர்ல இருந்து வந்திருக்க...''

''விஷயத்துக்கு வா'' என்றவனை இப்பொழுது இன்னும் சோகமே உருவாகப் பார்த்தாள்.

''என்ன பேசு?''

''அது...''

''ம் என்னமா சொல்லு?''

''உங்கிட்ட எப்படி...''

''ஏன்? பரவாயில்ல எதுவானாலும் சொல்லு. அப்ப தான் எந்த விதத்துலயாவது உனக்கு என்னால உதவ முடியுமான்னு பாக்க முடியும்.''

''ம் சொல்லு?''

''உன்...''

........

''உன் மனைவி ஸ்வேதா...'' என்றுவிட்டு அவள் ஜெயவர்த்தனுடைய முகத்தைப் பார்க்க, 'ம் மேலே சொல்' என்பதைப் போல அவன் தன்னையே பார்ப்பது தெரிந்தது.

அவனுடைய பார்வையில் இருப்பது என்ன...

வேறென்ன அப்படி மனைவி என்ன சொல்லியிருப்பாளென்ற ஆர்வம் தான். கொஞ்சம் கோபமும்.

''என்ன உன் முகத்தையே பாத்துட்டிருக்கணுமா...''



இப்பொழுது அவனுடைய குரலில் கோபம் வெளிப்படையாகவே தெரிய, ''வேண்டாம் ஜெயன் தயவு செஞ்சு இத இத்தோட விட்டுடு என்னால ஸ்வேதாவுக்கு சிரமம் வேண்டாம்...'' என்றாள்.

ஸ்வேதாவிற்கு சிரமமா.

என்ன சொல்கிறாள் இவள்.

''ஒரு நிமிஷம்'' என்று எழுந்து வெளியே சென்ற சுமிதா ஒரு கவருடன் திரும்பினாள்.

''நான்... நான் ரிஸைன் பண்ணிக்கறேன்.''

என்னது.

ஏன் இப்படி, திடீரென்று என்னவாயிற்று இவளுக்கு.

''என் ரெஸிக்னேஷன் லெட்டர்'' என்று தனது டேபிளுக்கு முன்பாக சுமிதா வைத்த கவரைத் துளியும் கண்டு கொள்ளாது ''என்ன இதெல்லாம்?'' என்றான்.

''நான் வேலைய விட்டு நிக்கறேன்.''

''அதான் ஏன்?''

''எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். தயவு செஞ்சு என்ன எதுவுமே கேக்காத.''

''இது ஒரு பதிலா?'' என்ற ஜெயவர்த்தனை இப்பொழுது கண்கள் கலங்கப் பார்த்தவள் ''என்னால மத்தவங்களுக்கு எந்த சிரமமும் வேண்டாம் விட்டுடு'' என்றாள்.

''என்ன உளற?''

''ஸ்வேதா...''

..............

''ஸ்வேதா எனக்கு போன்ல கூப்புட்டு... நீ வந்ததிலிருந்து என் நிம்மதி போயிடுச்சு... நீ இனிமேல் வேலைக்கு வராதன்னு சொன்னாங்க.''

''எப்ப?''

''எப்பன்னு சொல்றது? ரெண்டு தடவ போன்ல பேசினாங்க. முக்கியமா நான் சொன்னதாக் காட்டிக்க வேண்டாம்னு ரொம்பவும் கேட்டுக்கிட்டாங்க... ஆனா நான் இப்ப எல்லாத்தையும் சொல்லிட்டேனே...''

ஜெயவர்த்தின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்தைப் பார்த்தவள், இப்பொழுது குலுங்கி அழவே தொடங்கி விட்டிருந்தாள்.

எங்கே தன் நடிப்பு நம்பக் கூடியதாக இல்லையோ என்று தோன்றியதால் தான் அவள் அப்படிச் செய்ததும், ஆனால் கண்டும் காணாதது போல நன்கு உற்றுப் பார்த்தவளுக்கு ஜெயவர்த்தன் நம்பி விட்டிருந்தது போலத் தான் தெரிந்தது.

''நீ... நீ போய் அவங்கள ஒண்ணும் கேக்காத ஜெயன். ஏன் சொல்றேன்னா முதல்லயே எவ்வளவோ நொந்து போய்க் கிடக்கறேன். இனி அவங்களோட வெறுப்பான பார்வையையும் என்னால ஃபேஸ் பண்ண முடியாது.''

''இந்த வேல இல்லேன்னா என்ன நீயே சொன்ன மாதிரி நல்லாப் படிச்சிருக்கேன். இங்க இல்லேன்னாலும் இன்னொரு...''

''கடைசியா எப்ப போன் பண்ணினா?''

''மூணு நாளைக்கு முன்னாடி...''

''என்ன சொல்லு?''

''அவங்க கம்பெனிக்குக் கூட அப்ளை பண்ணச் சொன்னாங்க, அவங்க ரெக்கமண்ட் பண்றேன்னாங்க...''

''என்ன மன்னிச்சுடு ஜெயன், இன்னையோட நான் ரிஸைன் பண்...''



''வேற என்ன சொன்னா?''

''இன்னும்... அதெல்லாம் வேண்டாம். இப்பவே அவங்க அவ்வளவு கேட்டுக்கிட்டும் ஏதோ பெரிய தப்புப் பண்ணின மாதிரி எம் மனசாட்சி உறுத்துது...''

அதே நேரம் ஜெயவர்த்தன் தனது மொபைலைக் கையிலெடுத்திருக்க, இது என்ன புதுத் திருப்பம் என்று திகைத்துப் போனாள்.

ஆனாலும் அவள் அதைத் துளியும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''என்ன பண்ணப் போற ஜெயன்?''

''ஸ்வேதாவுக்குக் கூப்புட்றேன்...''

''எதுக்கு?''

''ஏன் இப்படி செஞ்சான்னு கேக்க தான், கேக்காம விட்டா...''

''சரிதான், என் ஃப்ரண்ட் நீ உன்னாலயே என்னப் பத்திப் புரிஞ்சுக்க முடியல. இனி மத்தவங்கள என்ன சொல்லி என்ன...''

சுமிதாவின் அந்த வார்த்தைகளில் என்ன தோன்றியதோ, மீண்டும் மொபைலைத் தனது பாக்கெட்டில் வைத்திருந்தான் ஜெயவர்த்தன்.

''நான்...''

''என்ன சொல்லு?''

''இல்ல அவங்க... ஸ்வேதா நம்ம ரெண்டு பேரையும்... ஸாரி ஸாரி என்னத் தப்பா நினைச்சுட்டிருக்காங்க. நான் உன் மனச மாத்திடுவேனோன்னு... அவங்க பேசினத வெச்சுப் பாக்கும்போது நான் தொடர்ந்து இங்கிருந்தா உன் நிம்மதியும் கெட்டுப் போகுங்கறது மட்டும் தெளிவாப் புரியுது.''

அதே உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்திலிருந்து சுமிதாவால் எதையும் கண்டுகொள்ள முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் அவன் மிகுந்த கோபத்திலிருப்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

''என் ரெஸிக்னேஷன் லெட்டர எடுத்துக்கோ நான்...''

சுமிதா சொன்னது தான் தாமதம் அந்த லெட்டரை எடுத்து சுக்கல் நூறாகக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் வீசியிருந்தான் ஜெயவர்த்தன்.

''என்ன ஜெயன் இது? ஏன் இப்பிடி...''

''பேசாத... போய் வேலையப் பாரு.''

''நான் எப்பிடி இனி...''

''உனக்கு எம்.டி. நான். என் ஆடர்ஸ்க்கு மட்டும் நீ ஒபே பண்ணினாப் போதும்.''

''இருந்தாலும்...''

''போய் வேலைய கவனி.''

ஜெயவர்த்தனின் அந்தக் குரலில் அதற்கு மேல் அவளால் அங்கு நிற்க முடிந்திருக்கவில்லை.

பேசாமல் வந்து வேலையை கவனிக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

திரி நன்கு பற்றிக் கொண்டது தெரிந்தது.

முடிவு என்னவாகுமென்று தெரிந்து கொள்ள மிகுந்த ஆவல் கொண்டாள்.

ஆனாலும்...

சரிதான் இந்தக் கோபம் மனைவியிடம் போய்ச் சேரும் வரையாவது தாக்குப் பிடித்தால் சரிதானென்று ஏளனத்துடன் சிரித்துக் கொண்டாள்.



எது எப்படியானாலும் தான் பற்ற வைத்த வெடி நிச்சயம் வெடிக்கத் தான் போகிறது.

அது ஏற்படுத்தப் போகும் சேதத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளத் தான் சற்று தான் பொறுத்தாக வேண்டும்.

ஆனாலும் அதை இந்த அழுத்தக்காரனிடமிருந்து தெரிந்து கொள்ள முடியாதே.

சில வினாடிகள் யோசித்தவளுக்கு எப்படித் தெரிந்து கொள்ளலாம் என்பது புரிந்து போயிற்று.

''சரி நான் போய்ட்டு மதியத்துக்கு மேல வர்றேன்'' என்று கிளம்பி விட்டிருந்தான் ஜெயவர்த்தன்.

''சரிதான், மெதுவா வந்தாப் போதும் நான் பாத்துக்கறேன்.''

போகப் போகத் தேய்ந்து போன குரலில் சொன்னாள் சுமிதா.

ஆனால் ''பாத்துக்கணும்'' என்று அந்த வார்த்தையில் அழுத்தம் கொடுத்துச் சொன்ன ஜெயவர்த்தன் பாக்கலாமென்று கிளம்பி விட்டிருந்தான்.

அங்கிருந்து கிளம்பியவன் நேராகத் தனது கார் நின்றிருக்கும் இடத்திற்கு வர, அதைப் பார்த்துவிட்டு வேகமாக வந்தான் செக்யூரிட்டி முத்தையன்.

''வா முத்தையா, ஏன் இப்பிடி ஓடி வர்ற?''

''நான் காரத் துடைச்சுத் தர்றேங்கய்யா.''

என்னதான் தினமும் நன்றாகத் துடைத்து வைக்கப்பட்டு விடும் கார் என்றாலும் மரத்தடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் காய்ந்து போன இலை தழை எனக் கொஞ்சம் தூசும் படிந்து கிடக்க, ஒரு துணியை எடுத்து முன் பக்கக் கார்க் கண்ணாடியை லேசாகத் தட்டி விட்டான் ஜெயவர்த்தன்.

அதைத் தனது முதலாளிக்கு முன்பாகத் தான் வந்து செய்துவிட வேண்டுமென்று தான் முத்தையன் அப்படி ஓடி வந்ததும்.

"அதுக்காக இப்பிடி ஓடி வர்றதா?"

ஜெயவர்த்தனின் கேள்வியில் லேசாக அசடு வழிய நின்ற பெரியவரை ஒரு சிறு புன்னகையுடன் ஒதுங்கிக் கொள்ளச் சொல்லி விட்டுக் காரில் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்திருந்தான்.

சற்று முன்பு இருந்த உற்சாகம் நீங்கி என்னவோ போலிருந்த மனதை முயன்று நடப்பிற்குத் திருப்பினான்.

சுமிதா சொன்னவை தான் நினைவிற்கு வந்தன.

ஏனோ தனது மனைவி ஸ்வேதாவைப் பற்றி அவள் சொன்னதை அவனால் சுத்தமாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஸ்வேதா அந்த அளவிற்கு அநாகரீகமாக நடந்து கொள்வாளா.

ம்கூம், வாய்ப்பே இல்லை.

அப்படியானால் சுமிதா வேண்டுமென்றே சொல்கிறாளா.

அப்படியும் தெரியவில்லையே.

பிறகு.

ஸ்வேதா வேறு ஏதாவது சொல்லி, அது சுமிதாவிற்குத் தவறாகப் புரிந்திருந்தால்,

அப்படியானால் சுமிதா இல்லாததயும், பொல்லாததையும் அளக்கிறாளா.

அதெப்படி, அப்படிச் சொல்வாள்.

அதுவும் இந்த மாதிரி விஷயத்தில் கூட.

சரி அதையெல்லாம் விட்டுவிடு. சுமிதாவின் வார்த்தைகளை நீ நம்புகிறாயா இல்லையா.



மனசாட்சி கேட்ட கேள்விக்கு ஜெயவர்த்தனால் பதில் சொல்ல முடிந்திருக்கவில்லை.

ஒருவேளை...

தனது மனைவி ஸ்வேதா அதுவும் நூற்றில் ஒரு பங்காகத்தான் ஏன் அப்படியெல்லாம் சொல்லியிருக்கக் கூடாது.

அந்த மாதிரி நினைத்தவனுக்கு இப்பொழுது குழப்பம் இன்னும் அதிகம்தான் ஆகியிருந்தது.

வீடு வந்து சேரும் வரை கூட அதைப் பற்றியே தான் யோசித்தபடி வந்தான்.

சுமிதா சொன்னது போல இல்லாவிட்டாலும் ஸ்வேதா நிச்சயம் ஏதோ சொல்லியிருக்கிறாள்.

அதை சுமிதா மாற்றிப் புரிந்து கொண்டதோடு. மேலும் கொஞ்சம் மிகைப்படுத்தியும் சொல்கிறாள்.

எப்படிப் பார்த்தாலும் மனைவி செய்தது தவறு தான்.

இவள் மட்டும் ஒன்றும் சொல்லாமலிருந்திருந்தால் சுமிதாவால் இப்படி ஒன்றுக்கு இரண்டாகக் குற்றம் சாட்டியிருக்க முடியுமா என்ன?

ஏன் நான் வெளியூர் செல்வதால் நீ கம்பெனிக்கு வர வேண்டியிருக்குமென்று சொன்னபோது கூட ஏன் அந்த சுமிதா இல்லையா என்று மனைவியே கேட்கவில்லையா.

தான் கம்பெனிக்கு வரச் சொன்னதற்கும், அவளுடைய கேள்விக்கும் என்ன சம்பந்தம்.

ஏற்கனவே அவளுடைய மனதில் ஏதோ இருக்கப் போய் தானே அவளால் இப்படியொரு கேள்வியைக் கேட்க முடிந்திருக்கிறது.

சரியாக என்ன சொன்னாளென்பது தெரியா விட்டாலும். மனைவி ஏதோ சொல்லியிருக்கிறாளென்பதில் மட்டும்

இப்பொழுது ஜெயவர்த்தனுக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கவில்லை.

அந்த மாதிரி இருக்கலாமென்று எண்ணத் தொடங்கியிருந்தவனுக்கு, அதை ஒட்டியே இன்னும் ஏதேதோ நினைவிற்கு வந்தன.

ஏன் அன்று தோட்டத்து வீட்டில் வைத்து பழைய ஆல்பங்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோதுகூட மனைவி தன்னையும், சுமிதாவையும் தவறான கோணத்தில் பார்க்கவில்லையா.

தான் எவ்வளவு சொல்லியும் திருப்தியடையாமல் சரிதான் விட்டுவிடுங்களென்று பேச்சை மாற்றவில்லையா.

அன்று தான் விளையாட்டாகச் சொன்னவற்றிற்காகவா இன்று இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள்.

அப்படியானால், தனது மனைவி தன்னை நம்பவில்லையா.

உள்ளதை உள்ளபடி சொல்ல வேண்டுமென்றால் தன்னை இன்னொரு பெண்ணுடன் சம்பந்தப்படுத்தி சந்தேகப்படுகிறாள்.

தன்னுடைய ஸ்வேதாவா இப்படி.

ஏனோ மனம் மிகவும் பாரமாகி விட்டிருக்க, ஜெயவர்த்தனால் அதை ஜீரணித்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

சந்தேகப்படுவது மட்டுமா,

அதை அந்த சுமிதாவிடமே அல்லவா கேட்டிருக்கிறாள்.

நினைக்க நினைக்க மனம் ஆற மறுத்தது ஜெயவர்த்தனுக்கு.

எது எப்படியிருந்தாலென்ன, இந்த விஷயத்தில் இப்படி பொய்த்துப் போய் விட்டாளே என்றிருந்தது.



தாங்கிக் கொள்ள முடியாத வேதனை தோன்றி நெஞ்சை அறுப்பதைப் போலிருக்க, மிகவும் முயன்றே முகத்தை இயல்பாக வைத்துக் கொள்ள முடிந்தது.

## 47

வெளியூர் சென்று விட்டுப் பத்து நாட்களுக்குப் பிறகு வீட்டிற்கு வந்த மகனை ஆசையாக வரவேற்றார் காஞ்சனா.

''வாப்பா.''

''வரலாம்மா, எல்லாரும் எப்படியிருக்கீங்க?''

''எங்களுக்கென்னப்பா, நீதான் பாவம் வெளியூரெல்லாம் போய் அலஞ்சுட்டு ஆளே பாதியாகி வர்ற...''

''ம், அப்புறம்?''

''பின்ன, நானென்ன இல்லாததையா சொல்லிட்டிருக்கேன்? சரி போய் குளிச்சுட்டு வாப்பா டிபன் எடுத்து வைக்கறேன்.''

''இதோ இப்பவே வர்றேன், சரியான பசி...'' என்று நகர்ந்த மகனை பாவம் நல்லபடியாக சாப்பிட்டு எத்தனை நாட்களாயிற்றோ என்று பார்த்துக் கொண்டே திரும்பினார்.

''அம்மா'' என்று வந்தாள் லாவண்யா.

''வாம்மா, இந்நேரம் எங்க போய்ட்டு வர்ற?''

''பின்னாடி தோட்டத்துல இருந்தேம்மா'' என்ற மகளிடம் ''சரி நீயும் வந்து சாப்புடு டிபன் வேலை முடியட்டும்'' என்றார்.

''ஏன்?''

...சொல்றது. மதியத்துக்கு சாப்பாட்டு வேலையத் தொடங்க வேண்டாம்?''

''அடப் போங்கமா, உங்களுக்கு எப்பப் பாத்தாலும் சாப்பாடு சாப்பாடுன்னு அதே நினைப்பு தான்.''

''அது சரி. இதென்ன சின்னக் குடும்பமா? அடுப்படில நான் வேகலேன்னா சாப்புடலாமான்னு வர்ற நேரத்துக்கு எல்லாம் எங்கிருந்து வரும்?''

''சின்ன அண்ணா எங்கமா?''

''எதுக்கு?''

''சொல்லுங்க.''

''குளிக்கப் போயிருக்கான். என்ன...''

''ஒண்ணுமில்லமா, சினிமாவுக்குப் போகலாம்னு ப்ளேன் அண்ணாகிட்டக் கேக்கணும்.''

''உனக்கு வேற வேலையே இல்லையா லாவண்யா?''

''ஏம்மா?''

''பத்து நாள் வெளியூர் போய்ட்டு இப்பதான் வந்திருக்கான்.''

''சரிதான், எனக்கு முன்னாடியே அண்ணி கேட்டிருப்பாங்க. என்னமா பாக்கறீங்க ப்ளானே அண்ணியோடது தான் தெரிஞ்சுக்கோங்க'' என்றாள்.

''அதெல்லாம் இருக்கட்டும் முதல்ல வந்து சாப்புடு'' என்று மகளை ஒரு அதட்டு அதட்டி விட்டுச் சென்றாள் காஞ்சனா.

ஜன்னல் கம்பியில் தலை சாய்த்து ஜன்னலுக்கு வெளியே வெகு தூரம் வரை பரவிக் கிடந்த தென்னை மரங்களையே பார்த்தபடி நின்றிருந்த ஸ்வேதா கணவன் உள்ளே வந்ததை கவனிக்கவில்லை.



ஏனோ மனைவியைப் பார்த்ததும் பிரச்சனைகள் அனைத்துமே மறந்து போய் விட்டிருந்தன ஜெயவர்த்தனுக்கு.

மணமானதிலிருந்து பாதி நாட்கள் வெளியூர். அப்படியே உள்ளூரிலேயே இருந்தாலும் எந்நேரமும் தொழில் தொழிலென்று அதையே பார்த்துக் கொண்டு...

உண்மையிலேயே மனைவி பாவம் தானோ...

ஏதோ அரவம் கேட்டுத் திரும்பிய ஸ்வேதா அங்கே நின்று கொண்டிருந்த கணவனையும், அவனும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதையும் கண்டாள்.

ஏனோ முன்பு இருந்த கருத்து வேறுபாடுகளனைத்தும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து காணாமல் போய் விட்டிருக்க, ''ஜெய்...'' என்று ஆசையுடன் கணவனை நோக்கி ஓடி வந்தாள்.

மனைவி ஆள் பார்க்க மிகவும் மெலிந்திருந்தது பார்த்த உடனேயே தெரிந்தது.

இந்த நாட்களில் உடல் இப்படி மெலியலாமா.

ஏன், என்னவாயிற்று இப்படியிருக்கிறாள்.

அதே நேரம் கணவனுக்கு முன்னால் வெகு அருகில் வந்து நின்றிருந்த ஸ்வேதா எல்லையற்ற ஆவலைக் கண்களில் தேக்கிக் கொண்டு கணவனையே பார்த்தாள்.

அந்தக் கண்கள் இப்பொழுது லேசாகக் கலங்குகிறதோ.

அவ்வளவுதான் அதற்கு மேல் வேறு எதுவுமே நினைவில் இருக்கவில்லை ஜெயவர்த்தனுக்கு. ஏன் சுற்றியிருக்கும் உலகமே மறந்து போய் ஏக்கமும் காதலும் ஒன்றுக்கொன்று போட்டியிடத் தனக்கு முன்னால் நின்றிருந்த மனைவியை அருகில் இழுத்து இறுக அணைத்துக் கொண்டான்.

கணவனின் அணைப்பிற்குள் தானும் தன்னை மறந்து ஒன்றிப் போய் விட்டிருந்தாள் ஸ்வேதா.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ மார்பின் ஈரம் உணர்ந்து நடப்பிற்கு வந்திருந்தான் ஜெயவர்த்தன்.

"என்னாச்சு...?" என்று அவன் முகவாயைப் பிடித்து நிமிர்த்தியிருக்க, கலங்கிய கண்களுடன் கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

"என்னடா?"

"என்னால இனிமேல் உங்களப் பிரிஞ்சு இருக்க முடியாது ஜெய். இந்த முறையே எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா?" என்று கண்கள் கலங்கச் சொன்னவளை மீண்டும் அணைத்துக் கொண்டான். மிகவும் மென்மையாகத்தான்.

மீண்டும் வெகுநேரம் கழித்தே மனைவியை விடுவித்திருந்த ஜெயவர்த்தன், நிற்க முடியாமல் தள்ளாடியவளை அப்படியே தூக்கிக் கொண்டு போய்ப் படுக்கையில் விட்டிருந்தான்.

விட்டுவிட்டுத் திரும்பிய தனது கையை மனைவி மீண்டும் பிடித்திருக்க, "கசகசன்னு இருக்குடா குளிச்சிட்டு வந்துட்றேன்" என்றான்.

கணவனின் வார்த்தைகளில் சரிதானென்று விட்டிருந்தவள், அவனுக்காகக் காத்திருக்கலானாள்.

சிறிது நேரத்தில் குளித்து, பிரஷ் செய்து விட்டு வந்த கணவனைப் பார்த்தவள், "சாப்டிங்களா?" என்று கேட்டாள்.

"ம்கூம்."

"அட்டா, சரிதான் வாங்க முதல்ல போய் சாப்பிடலாம்."



"நீ சாப்டாச்சா?"

"இன்னும் இல்ல, ஆமா என்ன நீங்க ஏதோ யோசனையிலயே இருக்கறீங்க?"

"ஒண்ணுமில்ல."

"ம்கூம், பாத்தா அப்பிடித் தெரியல."

"சாப்பிடப் போலாம் வர்றியா?"

"சரிதான், ஆனா அதுக்கு முன்னாடி ஏன் நீங்க டல்லா இருக்கீங்கன்னு சொல்லுங்க."

"வேண்டாம்மா விட்ரு."

"ம்கூம் சொல்லுங்க, என்னால ஏதாவது ஹெல்ப் பண்ண முடியுமான்னு பாக்கறேன்."

அப்படிக் கேட்ட மனைவியைப் பிரச்சனையே உன்னால் தானே என்பதைப் போலப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

"என்ன ஜெய்?"

முன்பு ஒரு முறை வெளியூர் சென்று வந்தபோது மனைவி இதேபோலத் துருவித் துருவிக் கேட்டது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது அவனுக்கு.

ஆனால் அந்த முறை தவறு தன் மீதல்லவா.

ஆனால் இப்பொழுது..

"சொல்லுங்க ஜெய்..."

"வேண்டாம்மா விட்ரு, அப்புறம் நமக்குள்ள திரும்பவும் சண்டைதான் வரும்."

என்னது சண்டையா?

என்ன சொல்கிறான்.

"புரியற மாதிரி பேசுங்க ஜெய்."

அப்படிச் சொன்ன மனைவியை சில வினாடிகள் பார்த்தவன் "ஏன் சுமிதாவுக்கு போன் பண்ணி அப்பிடி சொன்ன?"

என்னது.

சுமிதாவிற்கு நான் போன் செய்தேனா.

அவளல்லவா தனக்கு போனில் அழைத்து முட்டாள் தனமாக ஏதேதோ உளறிக் கொண்டிருந்தாள்.

பரவாயில்லையே சுயமாகவே புத்தி வந்து திருந்தி விட்டாள் போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில், இதென்ன புதிதாக ஒரு பூதம்.

''என்ன சொன்னேன்னு யோசிக்கறியா?''

கணவனின் கேள்வியில் மீண்டும் நடப்பிற்கு வந்திருந்தவள், என்னவென்பதைப் போலப் பார்த்தாள்.

''இல்ல நீ பேசினது உனக்கே மறந்துடுச்சான்னு கேக்கறேன்.''

''முதல்ல நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னே எனக்கு சுத்தமாப் புரியல.''

'பார்த்தாயா, இதற்குத் தான் நான் சொல்லவில்லையென்று சொன்னேன்' என்பதைப் போலப் பார்த்த கணவனை, ''நிஜம் ஜெய் கொஞ்சம் புரியற மாதிரி பேசுங்க'' என்றாள்.

''பாரு இதுக்கு தான் சொன்னேன், வா சாப்புடப் போலாம்...''

''அச்சச்சோ என்ன ஜெய் நீங்க...''

''ப்ராமிஸா எனக்கு ஒண்ணுமே புரியல, அத என்னன்னு சொல்லுங்க அப்புறம் போலாம்'' என்றாள்.

''அதெப்பிடி நீ சுமிதாகிட்டப் பேசினது உனக்கே மறந்து போயிடும்?''

''அப்படின்னு அவ சொன்னாளா?''

''உன்னைவிட வயசுல ஏழெட்டு வருஷத்துக்குப் பெரியவ, கொஞ்சம் மரியாதையாப் பேசு.''



''நிச்சயம் ஜெய், என்னைவிட ஏழெட்டு மாசம் பெரியவங்களுக்குக் கூட நான் மரியாத குடுப்பேன், ஆனா அவளுக்கு அவசியமில்ல.''

''ஸ்வேதா.''

''என்ன சொல்லுங்க?''

''நீ பண்றதெல்லாம் உனக்கே நல்லாக்கா?''

''அதான் என்ன செஞ்சேன், நீங்களே சொல்லுங்க.''

''எதுக்கு சுமிதாவுக்கு போன் பண்ணி அப்பிடி சொன்ன?''

''அதான் என்ன சொன்னேன்னு சொல்லுங்க, முட்டாள் மாதிரி கேட்டதையே திரும்பத் திரும்பக் கேட்டுட்டிருக்கறீங்க.''

''யாரு நானா? அப்படி அநாகரீகமா போன் பண்ணி மிரட்டினதுமில்லாம அத ஏன்னு கேக்கற என்னையே முட்டாளுங்கறியா?''

''அதிலென்ன சந்தேகம்?'' என்ற மனைவியை இப்பொழுது ஏளனமாகப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''சரிதான் நானுங் கூட என்னவோன்னு நினைச்சேன்.''

''நீங்க நினைக்கறதக் கொண்டு போ...'' என்றவளுக்கு இப்பொழுது குரல் கம்மி அழுகை வந்துவிடும் போலாகி விட்டிருந்தது.

''போதும் உன் நீலிக் கண்ணீருக்கெல்லாம் இனி நான் மயங்க மாட்டேன்.''

அப்படிச் சொன்ன கணவனை நிமிர்ந்து பார்த்த ஸ்வேதாவிற்கு, அந்த நிலையிலும் கூட சிரிப்பு வந்து விட்டிருந்தது.

முதலில் தன்னுடைய ஜெயவர்த்தனா இவன் என்றிருந்தது.

எவளோ எதையோ சொன்னாளென்று அதையும் இவனிடமே வந்து கேட்கிறானே.

அப்படி எதையுமே தான் சொல்லியிருக்காத போது அந்த சுமிதா சொன்னதை இவன் நம்பியதே தவறல்லவா.

ஏன் முதலில் அவள் அந்த சுமிதா சொன்னதை இவன் காதுகளில் கூட வாங்கிக் கொண்டிருக்கக் கூடாதல்லவா.

ஆனால் இவன்,

"என்ன குட்டு வெளுத்துப் போயிடுச்சுன்னு அதிர்ச்சியா இருக்கா?"

"நீங்க இப்படி வெளுத்துப் போயிட்டிங்களேன்னு தான் அதிர்ச்சியா இருக்கு."

"வார்த்தைய அளந்து பேசு."

"அது சரிதான். பேசாததையே பேசினதா சொல்றவங்களுக்கு நியாயமாப் பேசறது கூடத் தப்பாத் தான தெரியும்."

"உருக்கமாப் பேசினா செஞ்ச தப்பு இல்லேன்னு ஆயிடாது."

"நிச்சயமா ஆயிடாதுங்கறது முதல்ல நீங்க தெரிஞ்சுக் கோங்க."

"ஸ்வேதா."

கோபத்துடன் அதட்டிய கணவனை விரக்தி கலந்த புன்னகையுடன் பார்த்தாள் ஸ்வேதா.

"சொல்லு, அது ஏன் சுமிதா வந்ததிலிருந்து உன் நிம்மதி கெட்டுப் போச்சா?"

அடடா, இது வேண்டுமானால் சரி.

அவள் வந்ததிலிருந்து தனது நிம்மதி கெட்டுத் தான் போய் விட்டது.

அதிலென்ன சந்தேகம்.



அப்படி நிம்மதியையே கெடுக்கிற அளவிற்கு ஒருத்தியைக் கொண்டு வந்ததுமில்லாமல் கேள்வி வேறா என்றிருந்தது.

"சொல்லு."

"என்னக் கேட்டா?"

"பின்ன, சொன்னவளைத் தான் கேக்க முடியும்?"

சொல்லாததையே மீண்டும் மீண்டும் சொன்னதாகச் சொல்லும் கணவனின் வார்த்தைகளில் இப்பொழுது கோபம் வந்திருந்தது ஸ்வேதாவிற்கு.

"சரிதான் நான் சொன்னத விடுங்க, ஆனா அவளும் கூடத் தான் எனக்கு போன் பண்ணி அசிங்கமா ஏதேதோ சொன்னா, அதுக்கு என்ன பண்ணலாங்கறீங்க?" என்று கேட்டாள்.

அப்படிக் கேட்ட மனைவியை இப்பொழுது வெறுப்பு உமிழப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

முதலில் சொல்லவே இல்லையென்றவள் இப்பொழுது சொன்னதாக ஒப்புக் கொள்வது மட்டுமல்லாமல், பதிலுக்கு சுமிதா இவளுக்கு, போன் செய்ததாக வேறு சிறு பெண் போல பொய் சொல்கிறாளே.

இருந்திருந்து இவளைப் போயா நாம் மிகவும் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

"சொல்லுங்க, எனக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க?"

"நீயெல்லாம்... சை உங்கூடப் பேசறதே கூடப் பாவம்."

"அட, இதென்ன உங்க புதுக் கண்டுபிடிப்பா? நடக்கறது என்னன்னு கூடத் தெரியாம, உங்களுக்குத் தெரிஞ்சதையே பெருசா நினைச்சுட்டுப் பேசிட்டிருக்கீங்களே கொஞ்சங்கூட..."

''போதும் வாய மூடு.''

''சரிதான். அந்த சுமிதாவ எப்ப நீங்க துரத்தி விட்றீங்களோ அப்பதான் எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் நிம்மதி தெரிஞ்சுக்கோங்க.''

சை என்று மனம் வெறுத்துப் போயிருந்தது ஜெயவர்த்தனுக்கு.

அப்படியானால்...

தன்னிடமே இப்படிச் சொல்கிறாளென்றால் இவள் சுமிதாவிற்கு போன் செய்தது உண்மை தான்.

அதோடு சுமிதா சொன்னவையும்.

''ஆனா ஒன்ன மட்டும் நீ தெரிஞ்சுக்கோ, சுமிதாவ நான் எப்பவுமே வெளிய அனுப்பப் போறதில்ல. அவ எப்பவுமே நம்ம கம்பெனில அதுவும் என் பி.ஏ. வாதான் இருப்பா.''

''சரிதான் அவளையே கட்டிட்டு அழுங்க.''

''கொஞ்சம் டீஸன்டாப் பேசு...''

''அதென்ன உங்களுக்கொரு சட்டம் எனக்கொரு சட்டம்? நீங்க என்ன வேணும்னாலும் செய்வீங்க, ஆனா நான் மட்டும் வார்த்தைல கூட நாகரீகத்தக் கடைபிடிச்சாகணும் இல்ல?''

''அப்ப என்னையும் சுமிதா...''

ஏதோ கேட்க வரும் கணவனை ஏளனத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டபடி பார்த்தாள் ஸ்வேதா.

அவன் கேட்க வருவது என்னவென்று நன்றாகவே புரிந்தது.

ஆமாம் என்று சொல்லிவிட நாவும் துடித்தது.

அதைக் கூட நான் சொல்லவில்லை. அந்த சுமிதா தான் சொன்னாளென்று சொல்லி விடவும்.



''நீ சொல்றதைப் பார்த்தா என்னையும் அவளையும்...''

''ஆமாம் அப்பிடித்தான். அந்த மாதிரி தான் சுமிதா சொல்லிட்டுத் திரியறா'' என்று சொன்ன ஸ்வேதாவிற்கு சை இந்த மாதிரி அசிங்கமாகத் தன்னையே அவள் பேச வைத்து விட்டாளே என்று கூசிப் போனது.

ஆனால் அதையெல்லாம் ஜெயவர்த்தன் கவனித்திருக்கவில்லை.

மனைவியின் ஆமாமென்ற ஒரு வார்த்தையிலேயே அவன் மனதளவில் துடித்துப் போய் விட்டிருந்தான்.

அதற்கு மேல் எதையுமே கவனிக்கும் மனநிலையில் அவன் இருக்கவில்லை.

சை இந்த அளவிற்குக் கீழிறங்கிப் போய் விட்டாயே என்பதைப் போலப் பார்த்தவன் தான் பிறகு வெளியே சென்று விட்டிருந்தான்.

கணவன் அந்த மாதிரி பார்த்து விட்டுச் சென்றிருந்தாலும் அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் அப்பொழுது ஸ்வேதாவும் இருக்கவில்லை.

அந்த சுமிதா என்ன வேண்டுமானாலும் சொல்லி விட்டுப் போகட்டும். ஆனால் அதையெல்லாம் கணவன் எப்படி நம்பலாம் என்ற நிலையிலேயே இருந்தாள் அவள்.

ஏன் அந்த சுமிதா பலமுறை போனில் தன்னை அழைத்து இவனைப் பற்றி ஏதேதோ சொன்னாளே, அதையெல்லாம் தான் நம்பினோமா.

ஏன் அதை மறந்து கூடப் போய் விட்டோமே.

ஆனால் இவன்.

அவள் ஏதோ சொன்னாளாம். உடனே இவன் அதை நம்பி விட்டானாம்.

கட்டிய மனைவியை நம்பாமல் இன்னொருத்தியின் வார்த்தையைப் பெரிதாக எடுத்து இப்படி வரிந்து கட்டிக் கொண்டு வந்து கேட்கிறானென்றால் இனிமேல் பேச என்ன இருக்கிறது. யோசிக்கவும்.

ஏனோ இந்த முறை ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வந்திருக்கவில்லை.

சரிதான் கணவனே ஒருமுறை சொன்னதைப் போலத் தனது கண்ணீருக்கு அவர்கள் தகுதியானவர்கள் அல்ல, அவன் உட்பட.

ஆனாலும் மனம் வெறுத்துப் போய் விட்டிருந்தது ஸ்வேதாவிற்கு.

இது என்ன வாழ்க்கை என்றும்,

போனில் அபாண்டமாக ஏதேதோ சொன்னவள் இப்பொழுது இப்படித் தொடங்கி விட்டாளே, ஏன் இப்படியெல்லாம் செய்கிறாய் அப்படி என்ன எதிர்பார்க்கிறாயென்று அவளுக்கே அழைத்துக் கேட்டாலென்ன?

ஒரு வினாடி தான்.

உடனே தனது தவறு புரிந்து விட்டிருந்தது ஸ்வேதாவிற்கு.

எனது கணவன் என்னை நம்பவில்லையென்று தானே அவளிடம் போய் சொல்லாமல் சொல்வதைப் போல ஆகாதா.

நிச்சயம் அப்படித்தான் எண்ணத் தோன்றும்.

அதிலும் அவளுடைய ஈனப்புத்திக்கு இன்னும் என்ன வேண்டுமானாலும். அதைவிட இந்த சுமிதாவைப் போல இன்னும் உலகத்தில் எத்தனை பேர்.

கணவனுக்கல்லவா தன் மீது நம்பிக்கை இருக்க வேண்டும்.

அனைத்திற்கும் மேலாக கேவலம் அந்த சுமிதாவிடம் தான் போய்ப் பேசுவதா.

ம்கூம் கூடாது.

என்ன நடந்தாலும் சரிதான் கணவனாகத் தனது தவறை உணர்ந்தாலன்றி இனிமேல் இந்த விஷயத்தில் யோசிக்க ஒன்றுமில்லையென்று விட்டு விட்டிருந்தாள்.

ஆனால்,

அதை இவன் எப்போது உணர்வது.

அதற்குள் அந்த சுமிதா இன்னும் என்னென்ன நாடகங்களையெல்லாம் அரங்கேற்றி விடுவாளோ.

ஏற்றட்டுமே.

ஊசி இடம் கொடுக்காமல் நூல் எப்படி நுழையுமாம்.

தனது கணவன் இடம் கொடுக்காமல், அவள் ஏன் அப்படியெல்லாம் செய்யப் போகிறாள்,

முதலில் கணவனுக்கு நல்ல புத்தியைக் கொடு கடவுளே என்று ஏளனத்துடன் நினைத்துக் கொண்டாள்.

ஆச்சரியப்படும் விதமாக அவ்வளவிற்குப் பிறகும் அன்று கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வந்திருக்கவில்லை ஸ்வேதாவிற்கு.

மாறாகத் தனது வாழ்க்கையை நினைத்து சிரிப்புதான் வந்தது.

கூடவே கணவனைக் கோபக்காரனென்று அனைவரும் சொல்வதும்,

சரிதான் கோபக்காரனாகக்கூட இருக்கட்டும், ஆனால் இப்பொழுது அவன் செய்து கொண்டிருப்பது...

''ஸ்வேதாம்மா.''

''வாங்க அத்தை.''

"என்ன பண்ணிட்டிருக்க?"

"சும்மா தான் இருக்கேன் அத்தை."

"சரி வா சாப்புடலாம்."

..............

"என்னமா?"

"இல்ல அவர்..."

"யாரு உன் வீட்டுக்காரரா, அவனுக்கினி என்ன ஆச்சோ ரொம்பக் கோபமாப் போறாம்மா. இனி கம்பெனில ஏதாவது அவசர வேலையோ என்னவோ, சரி நீ வா."

"ஆமா, உங்கிட்ட ஏதாவது சொன்னானா?"

"இல்லையே அத்தை..."

"சரிதான், இல்லன்னா நீ இங்கயே இரு நான் போய் உனக்கு டிபன் எடுத்துட்டு வர்றேன்."

"அச்சச்சோ என்ன அத்தை நீங்க, வாங்க நானே வர்றேன்."

"இந்த சமயத்துல உடம்பு தேறணும் ஸ்வேதாம்மா, ஆனா நீ நாளுக்கு நாள் கீழ்வரம் போயிட்டிருக்கற மாதிரியிருக்கு. வாய்க்குப் பிடிச்சது ஏதாவது சாப்பிடணும் போல இருந்தாலும் கேளுமா செஞ்சு தர்றேன்."

"சரிதான் அத்தை."

"ஆமா இத மட்டும் வாய் நிறைய சொல்லு" என்று அத்தை சலித்துக் கொள்ள, சிரித்தாள் ஸ்வேதா.

கணவன் வெறுப்பையும் வேதனையையுமே கொடுத்தபடியிருக்க, அத்தையின் வடிவில் தாயையே கண்ட ஸ்வேதா அதில் தான் சற்று ஆறுதலாக உணர்ந்தாள் எனலாம்.



# 48

மேலும் ஒரு வாரம் சென்றிருந்தது.

மணமானதிலிருந்து அந்தப் பத்து நாட்களாகத் தான் ஸ்வேதா கணவனிடம் சுத்தமாகப் பேசியிருக்கவில்லை.

அப்படியே பேசினாலும் அதற்குப் பலன் இருக்கும் போலத் தோன்றவில்லை.

அதிகாலையில் எழுந்து சென்றானானால் நடு ஜாமத்தில் தான் வீடு திரும்பிக் கொண்டிருந்தான் ஜெயவர்த்தன்.

சரிதான், தன் தொல்லையின்றி தொழிலைப் பார்க்கிறான் போலிருக்கிறதென்று நினைத்துக் கொள்வதைத் தவிர ஸ்வேதாவால் வேறு எதையும் செய்ய முடிந்திருக்கவில்லை.

தன்னுடன் பழையபடி பேச மாட்டானா, என்று ஏங்கிய மனதை மிகவும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

கூடவே தவறே செய்யாத தன்னை அவன் கோபித்துக் கொள்வதும், அவன் மேல் கோபம் கொள்ள வேண்டிய தான் அவனுக்காக ஏங்குவதும் இதென்ன விசித்திரமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நல்ல வேளையாகத் தங்களுடைய பிரச்சனை வேறு யாருக்கும் தெரியாமலிருக்கிறதே அதுவே போதுமென்று சற்றே மனதைத் தேற்றிக் கொள்வாள்.

ஸ்வேதா இப்படி நினைத்துக் கொண்டிருக்க, காஞ்சனா அனைத்தையும் பார்த்துக் கொண்டு தான் இருந்

முன்பெல்லாம் எப்படியிருப்பார்களென்று நினைத்துப் பார்த்தவருக்கு. இப்போதைய வித்யாசம் நன்றாகவே புரிந்தது.

முடிந்த அளவு இருவரும் ஒன்றாக வருவதைத் தவிர்ப்பது. அப்படியே வந்தாலும் ஆளுக்கொரு திசையில் பார்ப்பது. அதற்கு மேல் மருமகளிடம் ஏதாவது ஏக்கப் பார்வை தெரிந்தாலும் அதை மகன் திரும்பிக் கூடப் பாராதது என அனைத்தையும்.

தவறு என்று ஒன்றிருந்தால் இந்த விஷயத்தில் மகன் மீது தான் இருக்க முடியுமென்பதில் காஞ்சனாவிற்கு எந்தவித சந்தேகமும் இருக்கவில்லை.

என்ன பிரச்சனையென்று ஸ்வேதாவிடம் கேட்கலாமா என்று நினைத்தவர் பிறகு வேண்டாமென்று விட்டு விட்டிருந்தார்.

அவளிடம் கேட்டால் என்ன சொல்வாள் பாவம்.

அந்த அழுத்தக்காரனிடமே கேட்கலாம். அதுவும் மருமகளறியாமல் என்று நினைத்துக் கொண்டவருக்கு அன்று மாலையே அதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

லாவண்யா வழக்கம் போல அருகிலிருக்கும் கோவிலுக்குச் சென்றுவிட்டு அப்படியே பூங்காவிற்கும் சென்று வரலாமென்று ஸ்வேதாவை அழைத்துச் சென்று விட்டிருக்க, அதிசயமாக அன்று நேரத்திலேயே வந்த சின்ன மகனை வரவேற்றார் காஞ்சனா.

''வாப்பா.''

''டீ கிடைக்குமாம்மா.''

''இதோ'' என்று சென்றவர், சில நிமிடங்களில் டீயுடன் வந்தார்.



தாயிடமிருந்து டீயை வாங்கிக் கொண்ட ஜெயவர்த்தனுக்கு அவர் ஏதோ கேட்க விரும்புகிறார் என்பது புரிந்தது.

''சொல்லுங்கமா.''

''நான் என்ன சொல்றதுப்பா, நீதான் சொல்லணும் என்ன பிரச்சனைன்னு?''

அப்படிக் கேட்ட தாயை ஜெயவர்த்தன் பார்க்க, ''என்னப்பா பாக்கற, உனக்கும் ஸ்வேதாவுக்கும் இடையில என்ன பிரச்சன?'' என்று கேட்டார்.

............

''உன்னத்தான் கண்ணா.''

''ஏன் அதையும் அவகிட்டயே கேட்டுத் தெரிஞ்சுக்கலாமே...''

''அதையும்னா, அப்ப வேற எதை நான் ஸ்வேதாகிட்டக் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டேன்னு சொல்ற?''

''அதான் பிரச்சனைங்கற அளவுக்கு சொல்லியிருக்காளே.''

''அத ஒண்ணும் அவ சொல்லல. ரெண்டு கண் இருக்கற யாருக்கும் அது புரியும்.''

''சரி இப்ப என்ன தெரியணும் உங்களுக்கு?''

''ஸ்வேதா நல்ல பொண்ணுப்பா. அவள ஏன் இப்படியெல்லாம்...''

''ஓ. அவ உங்ககிட்ட வந்து நியாயம் கேட்டுப் புலம்பினாளாக்கும்?''

''ஏன் இப்படித் தப்பே கண்டு பிடிச்சுட்டிருக்க? வாய அழுந்த மூடிக்கறதுல அவ உன்னையும் மீறுவா. நானா தான் கேக்கறேன் என்ன பிரச்சனைன்னு?''

"புருஷன், பொண்டாட்டிக்குள்ள ஆயிரம் இருக்கும்மா விடுங்..."

"இருக்கலாம். ஆனா ஸ்வேதா இப்ப இருக்கற நிலமையில அவ சந்தோஷமா இருக்கணும்பா..."

"இப்ப என்ன பண்ணச் சொல்றீங்க?"

"கொஞ்சம் யோசிச்சு நல்லபடியா...?"

"சுயபுத்தியோட நடந்துக்கச் சொல்றீங்க. அப்படித்தானே?"

"அப்படியில்ல கண்ணா..."

"என்னமா கொஞ்சம் சீக்கிரம் சொல்லுங்க."

"ஸ்வேதா மாதிரி ஒரு தங்கமான பொண்ணுகிட்டயே நீ தப்பு கண்டுபிடிக்கறேன்னா பிரச்சன அவகிட்ட இல்ல உங்கிட்ட தான்."

"சரியா தான் கண்டுபிடிச்சிருக்கீங்க."

"அதில்லப்பா, உங்க பிரச்சன எதுவா வேணும்னாலும் இருக்கலாம். நீயே சொன்ன மாதிரி அது எனக்கு அவசியமில்லாதது தான். ஆனாலும் அந்தத் தாயில்லாத வெகுளிப் பொண்ண வதைக்காதப்பா, மத்தவங்களுக்கு புத்தி சொல்ற உனக்கு நான் எதையும் சொல்ல வேண்டிய அவசியமில்லதான்..."

"டீ ஆறிப் போறதுக்கு முன்னாடி குடிக்கலாம்னு இருக்...."

மகனின் குரலில் தெரிந்த அழுத்தம் அதற்கு மேல் காஞ்சனாவைப் பேச விட்டிருக்கவில்லை.

முதலில் சாதாரணமாக இருந்த மகன் திடீரென்று அப்படி நடந்து கொள்வானென்று காஞ்சனா துளியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

சிறிது நேரத்தில் வீட்டிற்குள் வந்த மனைவியை நோக்கிச் சென்ற ஜெயவர்த்தன் "உம்மனசுல நீ என்னதான் நினைச்சுட்டிருக்க?" என்று கேட்டான்.

திடீரென்று கணவனை அதுவும் அந்த நேரத்தில் அங்கு கண்ட ஸ்வேதா அதற்கே திகைத்து நிற்க, அவன் கேட்ட கேள்வி அவளுடைய காதுகளுக்குள் கூடச் சென்றிருக்கவில்லை.

"உன்னத்தான், கேக்கறது காதுல விழல?"

அப்படிக் கேட்ட கணவனை புரியாமல் என்ன கேட்கிறான் என்பதைப் போலப் பார்த்தாள் ஸ்வேதா.

"என்ன நடிக்கிறியா?"

"நீங்க என்ன... சொல்றீங்க?"

"ம், வாயில விரல் வெச்சாக் கடிக்கத் தெரியாது. இன்னொரு முறை இந்த மாதிரி நடந்துக்கிட்ட அப்புறம் நடக்கறதே வேற."

"ஏன் நானென்ன செஞ்சேன்..."

"ஓ, செய்யறதையெல்லாம் செஞ்சுட்டுக் கேள்வி வேறயா? நானும் போனாப் போகுதுன்னு பேசாம இருக்கலாம்னு பாத்தா விட மாட்ட போலிருக்கு. இன்னொரு முறை இந்த மாதிரி ஏதாவது செஞ்ச அப்புறம் நான் மனுஷனாவே இருக்க மாட்டேன்" என்றுவிட்டு ஜெயவர்த்தன் பாட்டுக்கு அங்கிருந்து சென்றிருக்க, உண்மையிலேயே ஒன்றும் புரிந்திருக்கவில்லை ஸ்வேதாவிற்கு.

அங்கிருந்த தனது அத்தையைப் பார்த்தாள்.

ஸ்வேதாவின் அந்தப் பார்வையை சந்திக்க முடியாமல் தனக்குள் குறுகிப் போனார் காஞ்சனா.

நல்லது செய்ய எண்ணி இப்படி செய்து விட்டோமே என்று வருந்துவதைத் தவிர அவராலும் ஒன்றும் முடிந்திருக்கவில்லை.

"என்ன அத்தை?"

''என்ன மன்னிச்சிடுமா.''

''ஐயோ, என்ன அத்தை பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க.''

''பாவம் நீயே வேதனைல இருக்கும்போது, உன்ன மேலும் கஷ்டப்படுத்திட்டேன் கண்ணம்மா.''

''ஒண்ணுமே புரியல அத்தை.''

நடந்ததை மேலோட்டமாக் காஞ்சனா சொல்ல ''அட இவ்வளவுதானா?'' என்று புன்னகையுடன் கேட்டாள் ஸ்வேதா.

''என்ன மன்னிச்சுடுமா...''

''ப்ளீஸ் அத்தை. நீங்களும் கொல்லாதீங்க.''

''எல்லாம் சரியாயிடும்மா, நீ எதுக்கும் கவலப்படாத...''

''அட என்ன அத்தை நீங்க ஒன்னுமே இல்லாததுக்குப் போய்...'' என்றவள் ''வெளிய நடந்துட்டு வந்ததுல ஒரு மாதிரியா இருக்கு நான் போய் குளிச்சுட்டு வந்துட்றேன்'' என்று மேலே வந்திருந்தாள்.

வந்தவள் முதல் வேலையாகக் கதவைத் தாழிட்டு விட்டுத் திரும்பினாள்.

முதலில் எப்படியோ, ஆனால் அத்தை காஞ்சனாவின் ஆறுதல் வார்த்தைகள் அவளை ஏதேதோ எண்ண வைத்திருந்தன.

யதார்த்தமாக அத்தை ஏதோ கேட்கப் போக, அதற்குக் காரணம் தான் தானென்று கணவன் எரிந்து விழுந்து விட்டுப் போவது புரிந்தது.

கணவனைப் பொறுத்தவரை சந்தோஷம் கோபம் என அனைத்து உணர்ச்சிகளையுமே சற்று அதிகமாகத் தான் காட்டுவான் என்பதை இத்தனை நாட்களில் புரிந்து வைத்திருந்தாள் ஸ்வேதா.



ஆனாலும் மிகவும் நியாயமானவன் என்பதால் அப்படி அவன் மீதே தவறு இருந்தாலும் கூட அதைப் புரிந்து கொண்டு இறங்கி விடுவான் என்பதையும்.

மணமான இத்தனை நாட்களில் அதைக் கண்கூடாக உணர்ந்தும் இருக்கிறாள் என்பதால், சுமிதாவின் விஷயத்திலும் அப்படியே நடக்குமென்று மிகவும் நம்பினாள் ஸ்வேதா.

நாளுக்குநாள் அந்த எண்ணம் அதிகம் தான் ஆகிக் கொண்டிருந்ததே தவிர குறைந்திருக்கவில்லை.

அப்படி மனதிற்குள் மிகவும் தீவிரமாக நம்பிக் கொண்டு கணவனின் இன் முகத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தவளுக்கு சற்று முன் பேசிய வார்த்தைகள் மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்திருந்தன.

முதலில் அப்படி உணர்ந்தவளுக்குப் பிறகு அந்த ஏமாற்றமே வருத்தமாகவும், வேதனையாகவும் மாறி இப்பொழுது அழுகையையும்.

அனைத்திற்கும் மேலாக லாவண்யா, அத்தை என ஏன் இன்னும் கூட யார் யாரோ இருக்க, அவர்களுக்கு முன்பாகவே கணவன் அப்படிக் கோபத்துடன் பேசிவிட்டுச் சென்றதைத் தான் அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

என்னதான் அனைவருக்கும் முன்பாக ஒன்றுமே இல்லையென்பதைப் போலக் காட்டிக் கொண்டு வந் திருந்தாலும், தனிமையில் அப்படி முடிந்திருக்கவில்லை.

அதிலும் அத்தையின் ஆறுதல் வார்த்தைகள் பிரச் சனை பெரியது தான் என்பதைப் போன்ற எண்ணத்தை ஏற்படுத்தி விட்டிருக்க, பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் படுக்கையில் விழுந்து கதறினாள்.

கணவனின் கோபத்திற்கு இருக்கும் சக்தியை அப்பொழுது தான் முழுமையாக உணர்ந்தாள் என்பதால் அழுகையும் ஆதங்கமும் மேலும் மேலும் பொங்கிக் கொண்டே இருந்ததே தவிர சற்றும் குறைந்திருக்கவில்லை.

ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாமல் வெகுநேரம் அழுது தீர்த்தவள், பிறகு ஒரு வழியாகத் தெளிந்து எழுந்தாள்.

எழுந்தவள் சற்றும் மனமே இல்லாவிட்டாலும் கூட அத்தையிடம் சொல்லிவிட்டு வந்தது போலச் சென்று குளித்து விட்டு வந்தாள்.

கணவனின் வார்த்தைகள் நினைவிற்கு வர, மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

ஆனாலும் தனது அழுது வீங்கிய முகத்தைப் பார்த்தால் பாவம் தன்னால் தானென்று அத்தை மேலும் வேதனைப்படுவாரே என்று இப்போதைக்கு வேண்டாம் பொறு என்று முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தொடர்ந்து சிறிது நேரத்தில் கீழே இறங்கி வந்தாள் ஸ்வேதா.

''வாடாம்மா.''

''வரலாம் அத்தை, லாவண்யா எங்க?''

''அவ இப்பதான் படிக்கறேன்னு போனாம்மா, டிஃபன் சாப்பிடலாம் வா.''

''லாவண்யா கூடவே சாப்புட்டுக்கறேன் அத்தெ.''

''அவ இப்பத்துக்கு வர மாட்டா கண்ணம்மா நாளைக்கு என்னவோ பரீட்சையாம்'' என்று சற்று ஆழமாகத் தனது



முகத்தை கவனித்துப் பார்த்த அத்தையைத் தானும் பார்த்தாள் ஸ்வேதா.

ஸ்வேதாவின் அழுது வீங்கிய முகம், மகனின் மீது வாழ்க்கையிலேயே முதன்முறையாக எல்லையற்ற கோபத்தை வரவழைத்திருந்தது காஞ்சனாவிற்கு.

அதேபோல ஸ்வேதாவின் மீது ஆதங்கமும்.

இந்தப் பெண் இப்படிக் குனிந்து கொடுக்கத் தானே குட்டுகிறான், நிமிர்ந்து பார்க்க வேண்டியது தானே, எதிர்த்து நிற்க வேண்டியது தானே என்றும்.

பிறகு அப்படி நினைத்துக் கொண்டதற்காகத் தன்னையே நொந்து கொண்டார்.

மகன்தான் புத்தியில்லாமல் நடந்து கொள்கிறான் என்றால் நாமும் இப்படியா நினைப்பது என்றிருந்தது.

''வாடாம்மா சாப்பிடு.''

''நீங்க அத்தெ?''

''எனக்கென்னமா இப்ப அவசரம்?'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மாமனார் வர, அவரிடமும் சில வார்த்தைகள் சிரித்த வண்ணம் பேசிவிட்டு சாப்பிட அமர்ந்தாள்.

சிறிது நேரத்தில் டிஃபன் முடித்து மேலே வந்தவள் என்ன செய்வதென்று தோன்றாமல் இனி கணவன் எப்பொழுது காட்சியளிக்கப் போகிறானோ என்று நினைத்துக் கொண்டே படுக்கைக்கு வந்திருந்தாள்.

அவள் நினைத்தது தான் தாமதம்.

சரியாக அதேநேரம் உள்ளே வந்த கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

ஆனால் அவனோ நேராகக் குளியலறைக்குச் சென்றிருக்க, அவன் திரும்புவதற்காகக் காத்திருந்தாள்.

சிறிது நேரத்தில் வந்த கணவனிடம் "ஏன் ஈவினிங் அப்பிடிப் பேசினீங்க?" என்று கேட்டாள்.

"உங்கள தான்."

.....

மீண்டுமொரு முறையும் அழைத்த பிறகே அதுவும் கோபத்துடன் திரும்பிப் பார்த்து கணவனை சொல்லுங்கள் ஏன் அப்படிச் செய்தீர்கள் என்பதைப் போலப் பார்த்தாள்.

ஆனால் அப்பொழுதும் கணவனிடமிருந்து எந்த பதிலும் வராது போயிருக்க, "சொல்லுங்க ஏன் அப்பிடிப் பேசினீங்க?" என்று மீண்டும் கேட்டாள்.

"பின்ன உங்கிட்ட வேற எப்பிடிப் பேச முடியும்?"

"அப்ப நீங்க இன்னும் என்ன நம்பல அப்பிடித்தான?"

"நம்பறதா, அதுவும் உன்னையா?"

"ஏன்... நம்ப முடியாதா?"

"ம், அதுக்குக் குறைஞ்சது நீ இன்னுமொரு ஜென்மம் எடுத்து வரணும்."

"அப்பிடி நான் செஞ்சது தான் என்ன?"

"நீ என்ன தான் செய்யல?"

"கொஞ்சம் யோசிச்சுப் பேசுங்க ஜெய்..."

"சரிதான் உங்கிட்ட யோசிச்சு யோசிச்சு தான் இனி மேல் பேசியாகணும். ஆனா ஏன் அவ்வளவு சிரமப்படணும் சொல்லு?"

அப்படிக் கேட்ட கணவனை ஏன் இப்படியெல்லாம் என்னை சோதிக்கிறீர்கள்? என்பதைப் போலப் பார்த்தாள் ஸ்வேதா.

"சுமிதாவப் பத்தி நிஜமாவே உங்களுக்குத் தெரியலையா, இல்ல தெரிஞ்சும் எங்கிட்டக் காட்டிக்க மாட்டேங்கறீங்களா?"



"வேண்டாம், அவளப் பத்திப் பேசற தகுதி கூட உனக்கு இல்ல."

யாரைப் பற்றிப் பேசும் தகுதி யாருக்கு இல்லை.

நரம்பு இல்லாத நாக்கு எப்படி வேண்டுமானாலும் திரும்பும் என்பார்களே.

அதற்கு இதுவே சான்றோ.

"தயவுசெஞ்சு புரிஞ்சுக்கோங்க, உங்களுக்கே தெரியாம நீங்க ரொம்பப் பெரிய தப்பு செஞ்சுட்டிருக்கீங்க..."

"ஓ, என்னயே எச்சரிக்கறியா?"

"புரிய வைக்க முயற்சி பண்றேன்."

"சிரமப்படாத. உன் வார்த்தைகளக் கூட ஒரு பொருட்டா மதிச்சு ஏத்துக்கறவங்க இங்க யாரும் இல்ல பாரு."

பதிலுக்கு பதில்.

அதுவும் எப்படிப்பட்ட வார்த்தைகள்.

தன்னைக் கூட இந்த அளவிற்கு உதாசீனப் படுத்துவார்களென்று யாராவது முன்பே சொல்லியிருந்தால், அதை ஸ்வேதா நம்பிக் கூட இருக்க மாட்டாளே.

எவ்வளவு இறங்கி வந்து பேசினாலும் அதைக் காதில் கூட வாங்கிக் கொள்ள மாட்டேன் என்பவனுக்கு அதற்கு மேல் எப்படிப் பேசிப் புரிய வைப்பதென்று தெரியாமல் விழித்தாள்.

சில நிமிடங்கள் தான்.

மனம் கசந்து போயிருக்க, பேசாமல் படுத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

மனைவியின் வார்த்தைகள் ஜெயவர்த்தனையும் அசைத்திருந்ததென்னவோ உண்மைதான்.

ஏன் செய்யக் கூடாததையெல்லாம் செய்து விட்டு அவளும் சிரமப்படுவதோடு தன்னையும் இப்படி நோகடிக்கிறாள் என்றிருந்தது.

எதுவாக இருந்தாலும் அதைத் தன்னிடமே முகத்திற்கு நேராகச் சொல்லியிருந்தால், தான் செய்திருக்க மாட்டோமா என்ன.

ஆனால் இவள்.

தான் இல்லாத சமயமாகப் பார்த்து சுமிதாவிற்கு அழைத்து எப்படியெல்லாம் கீழிறங்கிப் பேசியிருக்கிறாள்.

பேசியது மட்டுமா.

அவளையும் தன்னையும் இணைத்து...

அதற்கு மேல் அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

எந்தக் கோணத்தில் பார்த்தாலும் மனைவி செய்தது மிகப்பெரிய தவறு தான். ஏன் மன்னிக்க முடியாததும் கூட.

எப்பொழுது நான் செய்தது தவறுதானென்று உணர்ந்து மன்னிப்புக் கேட்கிறாளோ அப்பொழுது பார்க்கலாம்.

ஆனால் அப்பொழுதும் கூட முன்பு போலத் தன்னால் அவளை ஏற்றுக் கொள்ள முடியுமா.

ஆனாலும் இவள் எப்படி சை...

அதுவும் எப்படிப்பட்ட முகத்தை வைத்துக் கொண்டு.

வழக்கம் போல சற்றே இளகத் தொடங்கியிருந்த மனதை மீண்டும் கல்லாக்கிக் கொண்டான் ஜெயவர்த்தன்.

தனது மனைவி சொன்னதாக சுமிதா சொன்னவற்றில் பெரும்பகுதியை அவனும் நம்பவில்லையென்றாலும், மனைவி அவனை அழைத்துப் பேசியதை அவனால் ஜீரணித்துக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.



அப்படிச் செய்தது மட்டுமா.

தான் ஏனென்று கேட்டதற்குப் பழியை அப்படியே சுமிதாவின் மீதே வேறு போடுகிறாளே.

இருந்திருந்து அவளால் எப்படி அப்படியொரு செயலைச் செய்ய முடிந்தது.

முதலில் இந்த அளவிற்குக் கீழிறங்கிப் போய் விட்டவளைப் பற்றி நினைக்க இனிமேல் என்ன இருக்கிறது.

இவள் என்ன செய்தாலும், தான் அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் வழக்கம் போல நடந்து கொள்வோமென்று நினைத்து விட்டாள் போலிருக்கிறது.

அது நடக்காது.

அதை மனைவி புரிந்து கொள்ளத் தான் வேண்டும்.

தான் புரிய வைக்கத் தான் வேண்டும்.

## 49

வழக்கம் போலக் காலையில் நேரம் கழித்து எழுந்த ஸ்வேதா காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

வந்தவளுக்கு மிகுந்த ஆச்சரியமாகப் போயிற்று.

அங்கு மர சோஃபாவில் அமர்ந்திருந்த தந்தையைப் பார்த்து "டாடி!" என்று ஓடினாள்.

அதேசமயம் தானும் திரும்பி மகளைப் பார்த்த பாலகிருஷ்ணன் "பாத்து மெதுவா வாம்மா" என்றார்.

"எப்ப டாடி வந்தீங்க? அப்புறம் எப்பிடியிருக்கீங்க?"

"இப்பக் கொஞ்சம் முன்னாடிதாம்மா வந்தேன். அப்புறம் எப்பிடியிருக்க கண்ணம்மா?"

''எனக்கென்ன டாடி ரொம்ப நல்லார்க்கேன், நீங்க எப்பிடியிருக்கீங்க?''

''நல்லார்க்கேம்மா, அப்புறம் இதுதான் எழுந்து வர்ற நேரமா?''

அத்தையும், மாமாவும் இருக்க, தந்தையின் கேள்வியில் அசடு வழிந்தாள் ஸ்வேதா.

''என்னமா?''

''நான் எப்பவும் எழற நேரமே இது தான்'' என்று அங்கிருந்த சுவர்க்கடிகாரத்தைப் பார்த்தவள் ''ம்கூம் இல்லில்ல இன்னைக்கு ரொம்பவும் நேரத்துலயே எழுந்து வந்திருக்கேன்'' என்று தனது அத்தையைப் பார்த்து சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''அது சரி.''

''என்ன டாடி?''

''எல்லாம் உங்கம்மா இருந்த வளர்க்காத குறை...'' என்ற தந்தையை இடைமறித்த ஸ்வேதா ''நீங்க வளர்த்த அழகுன்னு சொல்லுங்க'' டாடி என்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

அப்படிச் சொல்லி விட்டவளுக்கு அதற்குப் பிறகு தான் என்னதான் விளையாட்டென்றாலும் அதற்கும் ஒரு வரைமுறை இருக்கிறதல்லவா என்று சற்றுச் சங்கடமாகிப் போயிற்று.

ஆனால் அங்கிருந்த வேறு யாருக்கும் தான் சொன்னது தவறாகத் தோன்றவில்லை போலும். விளையாட்டாக எடுத்துக் கொண்டு புன்னகை செய்வதைக் கண்டாள்.

''விளையாட்டுக்குக் கூட அப்பிடியெல்லாம் சொல்லாதீங்கண்ணா. ஸ்வேதா மாதிரியொரு பிரமாதமான பொண்ண மருமகளா அடைய நாங்க குடுத்து வெச்சிருக்



கணும்'' என்று லேசாகக் கண்கள் கலங்கச் சொன்ன தனது சம்பந்தியம்மாவை நன்றியுடன் பார்த்தார் பாலகிருஷ்ணன்.

''ரொம்ப சரியா சொன்னமா'' என்ற ராஜேந்திரன் தானும் அதை ஆமோதிக்க, ''உங்கள மாதிரி நல்ல மனுஷங்க கிடைக்கறதுக்கு நாங்களும் தான் குடுத்து வெச்சிருக்கணும்'' என்று தானும் உணர்ந்து சொன்னார் பாலகிருஷ்ணன்.

மேலும் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு ''இருங்க இப்பவே வர்றேன்'' என்று ராஜேந்திரன் எழுந்து செல்ல ''காஃபி எடுத்துட்டு வர்றேன் கண்ணம்மா'' என்று தானும் உள்ளே சென்றார் காஞ்சனா.

''என்ன டாடி திடீர்னு, அதுவும் சொல்லாமக் கூட விஜயம்?''

''ஆமாம் கண்ணம்மா, இங்க பக்கத்து ஊர்ல ஒரு கல்யாணம் அதான் அப்பிடியே உன்னையும் பாத்துட்டுப் போலாம்னு...''

''சரிதான் நம்பிக்கிட்டேன்.''

''நிஜம்மா, கம்பெனி ஸ்டாஃப்ஸ் வந்திருந்தாலே போதும். அஃபீஷியல் ஃபங்ஷன் தான். ஆனாலும் இங்க வந்துட்டுப் போலாங்கற ஆசைல அவங்களத் தவிர்த்துட்டு நானே வந்தேன்.''

''ஏன் டாடி சிரமப்பட்றீங்க?''

''அது சரி. அடடா மகளப் பாத்து நாளாச்சே பாத்துட்டுப் போலாம்னு வந்தா நீ இதுவும் சொல்வ இன்னமும் சொல்வ...''

''அச்சச்சோ என்ன டாடி நீங்க? என்று சிரித்த ஸ்வேதாவிற்குத் தந்தை இப்படியெல்லாம் கூட பாசத்தைக் காட்டுவாரா என்றிருந்தது.

இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத வண்ணம் அது பிடித்தும் இருந்தது.

''அவங்களுக்கு முன்னாடி சொல்லக் கூடாதுன்னு பாத்தேன். காலைல கொஞ்சம் நேரத்துலயே படுக்கையை விட்டு எழுந்து வரலாமேம்மா.''

''எனக்கென்ன வரக் கூடாதுன்னா டாடி, முடியறதில்ல. அதோட அப்பிடி எழுந்து வந்து நான் செய்யறதுக்கும் ஒரு வேலையும் இருக்காது. ஏன் இப்பிடி இருக்கறத அப்பிடி நகத்தி வைக்கக் கூட அத்தெ விடமாட்டாங்க. விட்டா பிரேக்ஃபாஸ்ட்டையே பெட்டுக்குக் கொண்டு வந்துடுவாங்க டாடி, நான் தான் வேண்டாம்னு ஒரேயடியாத் தடுத்து வெச்சிருக்கேன்.''

''முடியாதன்னைக்குப் பரவாயில்லமா, எல்லா நாளும் அப்பிடியே செய்யாத. உடம்புக்கு எப்பிடியிருக்கு கண்ணம்மா, மறுபடியும் டாக்டரப் போய்ப் பாத்துட்டு வந்தியா?''

''நாளைக்குப் போகணும் டாடி, அதோட முன்ன எப்பிடியோ என்னவோன்னு பயமா இருக்கும். ஆனா இப்பெல்லாம் அத்தெ ஆறுதல் சொல்லிச்சொல்லி பயமும் போயிடுச்சு.''

''சந்தோஷம்மா, மாப்ள நேரத்துலயே கிளம்பிட்டாரா?''

''ஆமா டாடி.''

மற்ற கேள்விகளுக்கெல்லாம் நீட்டி முழங்கிக் கொண்டு பதில் சொன்ன மகள் ஏன் இதற்கு மட்டும் இப்படிப் பட்டும் படாமல் சொல்கிறாளென்று நினைக்கத் தோன்றியது.

உடனே வேறு பேசி பேச்சை மாற்றியதும்,



அதே நேரம் தனது அத்தை கொண்டு வந்து கொடுத்த காஃபியை வாங்கிக் கொண்டாள் ஸ்வேதா.

''உங்களுக்கு டாடி.''

''நான் இப்பதான் ஆச்சுமா.''

''உங்களுக்கு சாப்பிட டிஃபன் ஏதாவது கொஞ்சமாக் கொண்டு வரட்டுங்களாண்ணா?'' என்று காஞ்சனா கேட்க, கல்யாணத்தில் சாப்பிட்டதும் வருகிறேனென்று மறுத்து விட்டிருந்தார் பாலகிருஷ்ணன்.

மேலும் சிறிது நேரமும் இருந்து பேசிவிட்டே அவர் கிளம்ப தனது அத்தை மாமாவுடன் தானும் வாசல் வரை சென்று தந்தையை வழியனுப்பி விட்டு அதற்குப் பிறகே வீட்டிற்குள் வந்தாள் ஸ்வேதா.

''ஸ்வேதாம்மா.''

''அத்தெ.''

''இன்னைக்கே டாக்டரப் பாத்துட்டு வந்துடலாமாம்மா.''

''சரிதான் அத்தெ, நீங்க எப்பிடி சொல்றீங்களோ அப்பிடியே செஞ்சுக்கலாம்.''

''அதுக்கில்லமா நாளைக்கு ஒரு முக்கியமான கல்யாணம், ஊர்ல இருந்து பதினஞ்சு நாளைக்கு முன்னாடி வந்து அழைச்சுட்டுப் போனாங்களேம்மா...''

''ஆமா அத்தெ, ஞாபகமிருக்கு.''

''அந்தக் கல்யாணத்துக்குப் போகணும்மா. போறது சொந்த ஊருக்குங்கறதால நாளைக்குக் காலைல போனா திரும்ப ராத்திரியாயிடும். அது கூட ஒரு விதத்துல சந்தேகம் தான். விடலேன்னா அதுக்கும் மறுநாள் தான் திரும்பி வர முடியும்.''

''அப்பிடியா அத்தெ?''

"ஆமாம்மா அப்புறம் டாக்டரப் பாக்க ரெண்டு நாள் தள்ளிப் போயிடும். அதனால இன்னைக்கே போய்ட்டு வந்துடலாம்."

"சும்மா ரெகுலர் செக்கப் தானே அத்தெ. ரெண்டு நாளென்ன ஒரு வாரமே தள்ளிப் போனாக் கூட ஒன்னும் தப்பில்ல. அதனால நீங்க நாளைக்குக் கல்யாணத்துக்குப் புறப்படறதுக்கான எல்லாத்தையும் எடுத்து வைக்கற வேலைகளப் பாருங்க. ஏதாவது ஹெல்ப் வேணும்னா சொல்லுங்க நானும் வந்து உதவறேன்."

"அதுசரி, நீ என்னைக்கு உன்னப் பத்தி நினைச்சிருக்க?" என்று புன்னகையுடன் தனது வேலையைப் பார்க்கச் சென்றார் காஞ்சனா.

அன்று வேறு சில வேலைகளும் வந்து விட்டதால் மருத்துவரைப் பார்க்கக் கிளம்ப முடியாது போனதோடு, அதற்கு அடுத்த இரண்டு நாட்களும் கூட அத்தையும் மாமாவும் வெளியூர் திருமணத்திற்குச் சென்றுவிட்டிருந்ததால் மருத்துவரைச் சென்று பார்த்து வர முடிந்திருக்கவில்லை.

அதற்கடுத்த நான்கு நாட்களும் கூட சொந்தத்தில் ஒரு வயதான தாத்தா இறந்து விட்டாரென்று அனைவரும் அங்கு சென்று விட்டிருக்க, ஸ்வேதா பேச்சு வாக்கில் சொன்னதைப் போலவே ஒரு வாரம் தள்ளிப் போய் விட்டிருந்தது.

## 50

அன்று காலையில் தான் எழுந்து வந்த போதே எங்கோ வெளியே கிளம்பத் தயாராக இருந்த அத்தையைக் கண்டாள் ஸ்வேதா.



"என்ன அத்தெ?"

"என்னமா?"

"எங்கயோ வெளிய கிளம்பப் போறீங்க போல?"

"ஆஸ்பத்திரிக்குத் தான் ஸ்வேதாம்மா."

"ஓ. அதுக்கு ஏன் இவ்வளவு நேரத்துலயே?"

"அதுசரி, ஏற்கனவே ஒரு வாரம் தள்ளிப் போயிடுச்சு இன்னைக்காவது போய்ட்டு வந்துடலாம். இந்தாடாம்மா காஃபி குடிச்சுட்டு சீக்கிரம் போய்க் கிளம்பி வா."

"நம்ம ரெண்டு பேரும் தான அத்தெ?"

"இல்லமா, உன் வீட்டுக்காரரும் வர்றார்."

கணவன் வருகிறானா.

ம்கூம், வாய்ப்பே இல்லை.

"என்னமா?"

"ஒன்னுமில்ல அத்தெ" என்று விட்டுக் காஃபி டம்ளருடன் தனது அறைக்கு வந்து விட்டிருந்தாள் ஸ்வேதா.

கணவன் வர மாட்டானென்று பாவம் அத்தையிடம் ஏன் இப்பொழுதே சொல்லி அவரைக் கஷ்டப்படுத்த வேண்டும் என்றிருந்தது.

சிறிது நேரத்தில் குளித்துக் கிளம்பியிருந்த ஸ்வேதா அறையை விட்டு வெளியே வந்தாள்.

சரியாக அதேநேரம் வீட்டிற்குள் வந்த கணவனை ஆச்சரியத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு நம்ப மாட்டாமல் பார்த்தாள்.

பரவாயில்லையே.

தாயின் வார்த்தையைத் தட்ட முடியாமல் வந்து விட்டான் போலிருக்கிறதே.

"வா கண்ணா."

உள்ளே வந்த சிறிய மகனை வரவேற்றார் காஞ்சனா.

"டிஃபன் சாப்பிடலாம் வா"

"ஆச்சுமா."

"சரிதான் கிளம்பலாமாப்பா?"

"எங்க?"

"ஸ்வேதாவ டாக்டர்கிட்ட அழைச்சுட்டுப் போகத்தான்."

"நான் வரல."

"ஏன், காலைல வர்றதா சொன்னியே."

"அப்ப வேற ஏதாவது முக்கியமான விஷயமா ஹாஸ்பிட்டல் போக வேண்டியிருக்கும்னு நினைச்சேன்."

"அப்ப இது முக்கியமில்லையா?"

தாயின் கேள்வியில் "இருக்கலாம்மா ஆனா இதவிட எத்தனையோ முக்கியமான வேலைகள் எனக்கிருக்கு" என்று உள்ளே சென்று விட்டிருந்தான் மகன்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்வேதாவிற்கு சரிதான் தன்னுடைய கணிப்புச் சரியாகத் தான் இருக்கிறதென்று அந்த நேரத்திலும் கூடச் சிரிப்பு வந்தது.

ஆனால் அதேநேரம் அத்தை தன்னைத் திரும்பிப் பார்ப்பது தெரிய, "நாமளே போய்ட்டு வந்துடலாம் அத்தே பாவம் அவருக்கும் எவ்வளவோ வேலைகள் இருக்குமே ஏன் இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் அவர சிரமப்படுத்தணும்" என்றாள்.

மகனின் பதிலில் ஏற்கனவே சற்றுக் கோபத்துடன் இருந்த காஞ்சனாவிற்கு, மருமகளின் வார்த்தைகள் அதை இன்னும் அதிகப்படுத்தியிருந்தன.

"சிரிக்காதமா."

"என்ன அத்தெ..."



"பின்ன அவன் பாட்டுக்கு வர முடியாதுன்னு போறான், நீயும் சந்தோஷமா சிரிக்கற. என்ன தான் நடக்குது இங்க?"

"இல்ல அவருக்கும் பாவம் எத்தனையோ வேலைகள்..."

"ஆமாம் இப்பிடியே இரு. ஊர் உலகத்துல எல்லாப் பொண்ணுங்களும் எப்பிடியிருக்காங்க நீயும் இருக்கியே."

அத்தையின் ஆதங்கம் மனதை பாரமாக்கியிருக்க, இதோ வரப்போகிறேனென்று பயம் காட்டிய கண்ணீரை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அப்படியே மனதையும் கல்லாக்கிக் கொண்டாள்.

"என்னப்பா வர முடியுமா முடியாதா?" என்ற அத்தையின் கேள்வியில் தான் மீண்டும் கணவன் அங்கு வந்திருப்பதையே கண்டாள் ஸ்வேதா.

"இல்லமா, எனக்கு நிறைய வேலையிருக்கு."

"இதுவும் முக்கியம் தான், அதோட கடமையும் கூட..."

"அப்பிடியா?"

"விளையாடாத கண்ணா."

"முதல்ல இந்த மாதிரி உப்புப் பெறாத விஷயத்துக்கெல்லாம் என்னத் தொந்தரவு பண்ண வேண்டிய அவசியமில்லேங்கறத நீங்க புரிஞ்சுக்கோங்கமா."

"ஏன் இவ மட்டும் தான் உலகத்துலயே அதிசயமாக் குழந்தையப் பெத்தெடுக்கப் போறாளா எல்லாம் அப்பாவித்தனமான நடிப்பு நம்பாதீங்க."

"எல்லாத்துக்கும் மேல நீங்களும் ஏம்மா சிரமப்பட்றீங்க? வீட்ல மூனு வேளையும் நல்லாக் கொட்டிக்கிட்டு

சும்மாதான படுத்துட்டிருக்கா. அனுப்பி விடுங்க அவளே போய் டாக்டரப் பாத்துட்டு வரட்டும்.''

''போதும், வாய மூடுடா.''

''அட ஏம்மா டென்ஷனாகறீங்க?''

''உன்னால எப்பிடிப்பா இந்த மாதிரியெல்லாம் பேச முடியுது...'' என்று கேட்ட காஞ்சனாவிற்கு அவரையறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருந்தன.

ஆனால் அதற்குள் அவர்களை இடைமறித்திருந்த ஸ்வேதா ''அவர் சொல்றதும் நியாயம்தான அத்தெ. நானும் பொழுது போகாம வீட்ல போரடிச்சுட்டுத் தான இருக்கேன். விடுங்க நானே போய்ட்டு வந்துட்றேன்'' என்றாள்.

ஆச்சரியப்படத்தக்க விதமாக அதை இயல்பான குரலில் சொல்லவும் அவளால் முடிந்திருந்தது.

தன்னுடைய அந்த வார்த்தைகளில் 'நீயுமா' என்பதைப் போலப் பார்த்தவரை, ''நிஜம்தான் அத்தெ சின்ன வயசுலிருந்தே அப்பிடித்தான் எனக்காக யாரும் இப்பிடி உங்கள மாதிரி அக்கறை எடுத்துக்கிட்டதில்ல'' என்ற ஸ்வேதாவிற்கும் கடைசி வார்த்தைகளில் பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போயிற்று.

அந்த வினாடியே தங்களுடைய அறைக்கு வந்து விட்டிருந்தவள் படுக்கையில் விழுந்து கதறினாள்.

இப்படிச் செய்து விட்டாயே என்பதைப் போலக் காஞ்சனா மகனைத் திரும்பிப் பார்க்க, அவனோ எப்போதோ வெளியே சென்று விட்டிருந்தான்.

சுற்றியிருக்கும் எதையுமே உணர்ந்து கொள்ள மாட்டாதவளாய் படுக்கையில் விழுந்து கதறிக் கொண்டிருந்



தவளுக்கு, அங்கு தனது அத்தை வந்திருப்பதோ தன்னை அழைப்பதோ எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

அந்தச் சிறு பெண்ணின் கதறல் காஞ்சனாவின் தாயுள்ளத்தையும் பதறச் செய்து விட்டிருந்தது.

''ஸ்வேதா இங்க பாரு'' என்று அருகில் அமர்ந்து அவளைத் தொட்டு அழைத்தார்.

யாரோ தன்னை அழைப்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்த ஸ்வேதா, அருகில் வந்து அமர்ந்திருந்த தனது அத்தையைக் கண்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

ஆனால் பொங்கி வந்த ஆதங்கத்திற்கு முன் எதுவுமே எடுபட்டிருக்கவில்லை.

ஐயோ தாயில்லாப் பெண் அதுவும் இந்த நிலையில் இருந்து கொண்டு இப்படிக் கதறுகிறாளே என்று நினைத்த காஞ்சனாவிற்கும் செய்வதறியாது கண்கள் கலங்கி விட்டிருக்க, ''வேண்டாம்மா அழாத'' என்றார்.

ஆனால் அவருடைய ஆறுதலைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாது போயிருக்க, அவருடைய மடியிலேயே முகம் புதைத்துக் கதறி விட்டிருந்தாள் ஸ்வேதா.

இப்படியழும் பெண்ணை எப்படி சமாதானப்படுத்துவதென்று தெரியாமல் தானும் கண்கள் கலங்குவதைத் தவிர அப்பொழுது காஞ்சனாவால் வேறு எதையும் செய்ய முடிந்திருக்கவில்லை.

என்ன செய்வதென்று ஒன்றும் புரியாமல் இன்னும் தனது மடியில் விழுந்து கொஞ்சம் கூட ஆதங்கம் குறையாமல் அழுது கொண்டிருந்த மருமகளின் முதுகை வருடிக் கொடுத்தார்.

மேலும் சில நிமிடங்களும் சென்றிருக்க, ஒரு வழியாகத் தன்னிலை உணர்ந்து எழுந்து அமர்ந்திருந்தாள் ஸ்வேதா.

அத்தையின் முகத்தைப் பார்த்தவளுக்கு மீண்டும் அழுகை பொங்கிக் கொண்டு வந்தது.

ஆனால் அதற்கு விடாமல் ''வேண்டாம் கண்ணம்மா வயித்துல குழந்தைய வெச்சுட்டு இப்படிக் கலங்கக் கூடாதுமா'' என்றார்.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் இன்னும் கூட இயல்பு நிலைக்கு வந்திருந்தவள், சென்று முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு வந்தாள்.

இப்போது எவ்வளவோ பரவாயில்லாமல் உணர்ந்தவள் ''வாங்க அத்தெ'' என்று அழைத்தாள்.

புரியாமல் பார்த்தவரிடம் ''ஹாஸ்பிட்டலுக்கு'' என்றாள்.

அத்தை இன்னும் நடந்ததையே எண்ணிக் கொண்டிருப்பது புரிய, அவர் அருகில் அமர்ந்து ''நான் ஒன்று சொல்லலாமா அத்தெ?'' என்று கேட்டாள்.

''சொல்லுமா.''

''தயவுசெஞ்சு அவருகிட்ட இனிமேல் எனக்காக, அது எந்த விஷயத்துக்காக இருந்தாலும் சரி பேசாதீங்க அத்தெ'' என்றாள்.

''ஆமா அத்தெ, எனக்காக நீங்க சப்போர்ட் பண்ணிப் பேசறதால தான் அவருக்கு அவ்வளவு கோபம் வருது அதனால சொல்றேன்.''

''அவன் வதைக்கறது பத்தாதுன்னு நானும் என் பங்குக்குக் கெடுதல் தான் பண்ணிட்டிருக்கேன் இல்லையாம்மா...''



''ஐயையோ அத்தெ நான் அந்த அர்த்தத்துல சொல்ல வரல, அவரு என்ன சொன்னாலும் சரின்னு ஒரே வார்த்தைல கேட்டுட்டுப் போய்ட்டா அவர் இந்த அளவுக்குப் பேச முடிஞ்சிருக்காதில்லையா அதுக்காக சொல்றேன்.''

''புரியுதுடாம்மா.''

''நீங்கன்னு இல்ல அத்தெ, எனக்காக யார் பேசினாலும் அவர் இப்பிடித்தான் கோபப்படுவார்னு தோனுச்சு அதான்...''

ஏதோ சொல்ல வந்த காஞ்சனா பிறகு வேண்டாமென்று எழுந்து விட்டிருந்தார்.

பாவம் இவளே ஓரளவு தெளிந்து நடந்ததை மறக்க முயற்சிக்கும் பொழுது தான் ஏன் அதற்கு விடாமல் தடுக்க வேண்டுமென்று ''ரெண்டே நிமிஷம் கண்ணம்மா உனக்கு குடிக்க சூடா ஏதாவது எடுத்துட்டு வர்றேன்'' என்று சென்றார்.

''எனக்கு காஃபி தான் வேணும் அத்தெ'' என்றவள், ''நீங்க வரவேண்டாம் நானே ரெண்டு நிமிஷத்துல வர்றேன்'' என்றாள்.

அடுத்த சில மணி நேரங்களில் இருவரும் மருத்துவரை சென்று பார்த்து விட்டுத் திரும்பியிருந்தார்கள்.

அனைத்தும் நன்றாக இருக்கிறதென்று முதல் முறை சென்ற போது சொன்னது போலவே மாத்திரைகளை மட்டும் எழுதிக் கொடுத்திருக்க, அதை மட்டும் வாங்கிக் கொண்டு வந்திருந்தனர்.

மருமகளே சொன்னதைப் போலக் காஞ்சனாவிற்கும் இதற்குப் போய் மகனை அழைத்திருக்க வேண்டாமோ என்றிருந்தது.

அதற்காக அழைத்தால் அப்படிப் பேசுவதா.

இதுவே இந்த வெகுளிப் பெண்ணின் இடத்தில் வேறு பெண் இருந்திருந்தால் சரிதானென்று கிளம்பிக் கூடப் போயிருக்க மாட்டாளென்று என்ன நிச்சயம்.

குறைந்த பட்சம் எதிர்த்து நின்று சரிக்கு சரி பேசியிருப்பாளே.

இதெல்லாம் ஏன் அந்தக் கல் நெஞ்சக்காரனுக்குப் புரிய மாட்டேன் என்கிறது.

மதிய உணவிற்குப் பிறகு வந்து படுத்திருந்த ஸ்வேதா நன்றாக உறங்கி விட்டிருந்தாள்.

விழித்து எழுந்தவளுக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு கிடைத்த ஆழ்ந்த தூக்கம் மனதை மிகவும் லேசாக்கியிருந்தாற் போலிருந்தது.

தலை முடியைத் திருத்தி, முகம் கழுவி லேசான ஒப்பனை மட்டும் செய்து கொண்டு வெளியே வந்தாள்.

''லாவண்யா!''

''வாங்க அண்ணி என்ன இவ்வளவு ஆச்சரியம்.''

''என்ன இன்னைக்கு நேத்துலயே வந்துட்ட?''

லாவண்யா காரணத்தைச் சொல்ல ''ரொம்ப சந்தோஷம்'' என்றவள் ''எங்காவது போய்ட்டு வரலாமா?'' என்று கேட்டாள்.

''வாவ், சரி அண்ணி போலாம்.''

''எங்க போலாம்?''

''நீங்களே சொல்லுங்க.''

''தோட்டத்துக்கு?''

''ஓயெஸ், அப்பிடியே வாக்கிங் மாதிரி நடந்து போய்ட்டு வரலாம் அண்ணி.''



''அஞ்சு நிமிஷத்துல கிளம்பி வர்றேன்'' என்று லாவண்யா அங்கிருந்து நகர, சமையலறைக்குச் சென்று சிற்றுண்டியை மறுத்து விட்டுத் தனது அத்தையிடமிருந்து டீயை மட்டும் கேட்டு வாங்கிக் கொண்டாள்.

லாவண்யாவுடன் பேசிக் கொண்டே நடப்பது வழக்கத்தை விடவும் கூட மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்திருந்தது ஸ்வேதாவிற்கு.

லாவண்யாவின் சிறுபிள்ளைத்தனமான பேச்சே அதற்குக் காரணம்.

''அப்புறம் நானொன்னு கேக்கலாமா அண்ணி?''

''என்ன திடீர்னு இப்பிடிக் கேக்கற?''

''சொல்லுங்கண்ணி, கேக்கலாமா, கேட்டாலும் உண்மையான பதில் வருமா?''

''முதல்ல நீ கேள்வியக் கேளு.''

''அண்ணாவுக்கும், உங்களுக்கும் ஏதாவது பிரச்சனையா அண்ணி?''

''ஏன்?''

''சும்மா தான் சொல்லுங்க.''

''உனக்கென்ன தோணுது?''

''பிரச்சனை தான், அது கூட தப்பு அண்ணா மேல தான்'' என்றவள் ''ஆனாலும் உங்க மேலயும் தப்பிருக்கு அண்ணி'' என்றாள்.

''அப்பிடியா?''

''ஆமாம், நீங்க கல்யாணமாகி வந்த புதுசுல நான் என்ன சொன்னேன்னு ஞாபகமிருக்கா. அதுவும் கூட இதே மாதிரி தோட்டத்துல வெச்சு தான்.''

''ஞாபகமில்ல நீயே சொல்லிடு.''

''தொழில்னு வந்துட்டா அண்ணா வேற எதையுமே கண்டுக்க மாட்டாருன்னு...''

''ம், சொல்லு லாவண்யா.''

''அதான் அண்ணி, இனியும் என்ன சொல்றது? என் அண்ணாவுக்கு இந்த அளவுக்கு இடம் குடுக்கறீங்க. டான்னு இந்த நேரத்துக்கு வந்து தான் ஆகணும்னு சட்டம் போடுங்க. வரலேன்னா உரிமையா சண்டப் போடுங்க. ஏன் நீங்க நினைச்சா உங்க வீட்டுக்காரர மாத்த லாம் தெரியுமா?''

அது சரி, கணவனிருக்கும் நிலைக்கு இனி அது ஒன்று தான் மீதி.

''என்ன அண்ணி?''

''சரிதான் சொல்லிட்டாப் போச்சு. ஆனா பாரு இப்ப தான கம்பெனிய ஆரம்பிச்சிருக்காரு அத டெவலப் பண்ண எத்தன வேலைகள செய்ய வேண்டியதிருக்கும்...''

என்ன பேசுவதென்று தெரியாமல் மனதிற்குப் பட் டதை அவள் பாட்டுக்கு சொன்னாள் ஸ்வேதா.,

''அடப் போங்க அண்ணி, இப்ப அந்தக் காரணம். இன் னும் கொஞ்ச நாள் போச்சுன்னா கம்பெனி நல்லா டெவ லப் ஆயிட்டதால ஆடர்ஸ் எக்கச்சக்கமா வருதுன்னு சொல்லுவார்.''

''அதுக்கப்புறம் டர்ன் ஓவர பீட் பண்ணியாகணும், எக்ஸ்டென்ஸன்ல போயாகணும்னு சொல்லுவார். நீங்க இப்பிடியிருந்தா ரொம்பக் கஷ்டம் அண்ணி.''

அப்படிச் சொன்ன லாவண்யாவை என்ன பதில் சொல்வ தென்று தெரியாமல் பார்த்தாள் ஸ்வேதா.

இந்தச் சிறு பெண்ணிற்குக் கூடத் தன்னால் பதில் சொல்ல முடியவில்லையே.



இப்படியே போனால் வழியில் போகிறவர்கள் வருகிற வர்கள் கூடத் தன்னை ஐயோ பாவமென்று பரிதாபமாகப் பார்த்து விட்டுச் செல்வார்களோ.

ஆனால் இப்போதைய பிரச்சனையே வேறாயிற்றே.

எவளோ ஒருத்தியின் வார்த்தைகளைப் பெரிதாக நம்பிக் கொண்டு கணவன் தன்னை உதாசீனப்படுத்திக் கொண்டல்லவா இருக்கிறான்.

அது மட்டுமா.

அதை விடக் கூட...

''நான் ஏதாவது தப்பா சொல்லியிருந்தா ஸாரி அண்ணி.''

அப்படிச் சொன்ன லாவண்யாவைப் புன்னகையுடன் பார்த்தாள் ஸ்வேதா. ஏனோ கையால் ஆகாதவளைப் போலத் தன்னை நினைக்கத் தனக்கே பிடிக்காமல் போயிருந்தது.

''அண்ணி.''

''சொல்லு லாவண்யா.''

''அங்க பாருங்களேன்...''

''அங்க என்ன?''

''அது தான் என் ஃப்ரண்ட் ராதிகாவோட வீடு. அங்க போய்ட்டு வரலாமா?''

''ப்ளீஸ் அண்ணி.''

ஏனோ அப்போதிருக்கும் மனநிலையில் யாரிடமும் இயல்பாகப் பேச முடியும் போலத் தோன்றவில்லை ஸ்வேதாவிற்கு.

''என்ன அண்ணி?''

''எனக்கு எப்பிடியோ இருக்கு லாவண்யா...''

''அச்சச்சோ வீட்டுக்கு வேணும்னாப் போலாமா அண்ணி?''

"ம்கூம், நீ போய்ட்டு வா நான் இங்க வீட்ல இருக்கேன்."

"அட இது நல்ல ஐடியாவா இருக்கே, ஆனா..."

"என்னமா, அதுக்குள்ள என்ன?"

"நீங்க மட்டும் எப்பிடித் தனியா..."

எனக்குக் கொஞ்சம் தனியாக இருக்க வேண்டும் போலிருக்கிறதென்பதைச் சொல்ல முடியாமல் "நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும் லாவண்யா. அதனால நீ உன் ஃப்ரண்ட் வீட்டுக்குப் போய்ட்டு வாயேன்" என்றாள்.

"நீங்களும் கொஞ்ச நேரமாவது இந்த லொடலொடப்பு இல்லாம ஃப்ரீயா இருப்பீங்க இல்லையா அண்ணி?"

"ஆமா வாயாடி, ஒரு விதத்துல அப்பிடிதான்."

"அப்படியா இருங்க திரும்பவும் வந்து உங்கள கவனிச்சுக்கறேன். சரி அண்ணி ரெஸ்ட் எடுங்க நான் போய்ட்டு வந்துட்றேன்..."

"உடனே வரணும்னு இல்ல லாவண்யா. நான் வீட்டுக்குள்ள ரெஸ்ட் எடுத்துட்டிருக்கேன்" என்ற ஸ்வேதா கிளம்பியதும் வீட்டிற்குள் வந்தாள்.

அதிலும் தங்களுடைய அறைக்கு.

தனக்காகக் கணவன் அங்கு செய்திருக்கும் வசதிகள் தான் கண்களில் பட்டன.

இந்த அளவிற்கு இருந்தவன் எப்படி...

வேண்டாம் மனமே யோசிக்காதே என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள், செய்ய வேலையென்று எதுவுமில்லாமல் சென்று படுத்து விட்டிருந்தாள்.

ஏனோ பெருக்கெடுத்து வந்த பழைய நினைவுகளின் தாக்கத்தில் செய்வதறியாது திகைத்துப் போனாள்.



அதிலும் அன்று இரவெல்லாம் கணவனின் மார்பில் முகம் புதைத்துத் தூங்கியது தான் நினைவிற்கு வந்தது.

ஏனோ அது நடந்து பலப்பல ஆண்டுகள் ஆகிவிட்டாற் போலிருந்த அந்த அரிய பொக்கிஷம் போன்ற நினைவுகளின் தாக்கத்தில் இப்போதைய பிரச்சனை பூதாகாரமாகத் தெரிய அப்படியே துடித்துப் போனாள்.

அம்மா முடியவில்லையே என்று வாய் விட்டே புலம்பினாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

பிறகு அங்கிருந்த தலையணையையே துணையாய்ப் பற்றி அதை இறுக அணைத்துக் கண்களை மூடிப் படுத்துக் கொண்டாள்.

முட்டி மோதிக் கொண்டு வந்த நினைவுகளின் தாக்கத்திலிருந்து சற்றே விடுதலை கிடைத்தாற் போலிருந்தது.

## 51

காலையில் மனைவியை அப்படியெல்லாம் பேசி விட்டுச் சென்ற ஜெயவர்த்தனும் துளியும் நிம்மதியில்லாமல் தான் தவித்தான்.

காரை எடுத்துக் கொண்டு இலக்கில்லாமல் எங்கெங்கோ சுற்றியவன் மதியத்திற்கு மேல் தான் கம்பெனிக்கே வந்தான்.

அப்படி வந்தவனுக்கு அதற்குப் பிறகும் கூட எந்த வேலையும் ஓடியிருக்கவில்லை. என்ன முயன்றும் சிறிது நேரத்திற்கு மேல் அவனால் வேலையில் கவனத்தை செலுத்த முடிந்திருக்கவில்லை.

மனைவியைத் தான் பேசியதெல்லாம் மன்னிக்க முடியாத தவறுதான் என்பது அவனுக்கும் புரிந்திருந்தது. செய்வதறியாது திகைத்துப் போனான்.

நேரம் போவது தெரியாமல் வேலையில் மூழ்கிக் கிடப்பவன், அன்று நேரத்தை முயன்று தள்ளிக் கொண் டிருந்தான்.

ஒரு வழியாக மாலையாகி விட்டிருக்க, உடனே வீட் டிற்குக் கிளம்பி விட்டிருந்தான்.

மனைவியைத் தான் பேசிய வார்த்தைகளுக்கு எப் படிச் சென்று அவளைப் பார்ப்பதென்று ஒன்றும் புரிந் திருக்கவில்லை.

வீடு வந்து சேர்ந்தவன் அங்கு யாரையும் காணாது போக தங்கையின் மொபைலுக்கு அழைத்தான்.

தாயும் தந்தையும் பக்கத்துத் தோட்டத்திற்குப் போயிருப் பதாகவும், அவளும் மனைவியும் தங்களுடைய தோட் டத்தில் இருப்பதாகவும் தங்கை சொல்ல, கடிகாரத்தில் நேரம் பார்த்தான்.

மாலை ஆறு மணி.

இருள் கவிழத் தொடங்கியிருந்தது.

ஜெயவர்த்தனின் அண்ணன்கள் இருவரும் வேலை முடிந்து வீடு திரும்ப குறைந்தது எட்டு மணி ஆகும். ஏன் அதற்கு மேலும்.

திருமணமாகிப் பல வருடங்களுக்குப் பிறகு குழந்தை உண்டாகியிருப்பதால் ஓய்விலேயே இருந்தாக வேண்டு மென்று இந்துமதி தனது தாய் வீட்டிக்குச் சென்றிருக்க, பத்மினியும் அவளுடைய தாய்க்கு சற்று உடல் நல மில்லையென்று குழந்தை தன்யாவை எடுத்துக் கொண்டு ஊருக்குச் சென்று சில நாட்கள் ஆகியிருந்தன.



வீடே வெறிச்சோடிக் கிடக்க, அங்கே இருக்கப் பிடிக் காமல் காரை எடுத்துக் கொண்டு தோட்டத்திற்கு வந் திருந்தான் ஜெயவர்த்தன்.

மனைவியின் காலணிகள் மட்டும் வெளியே இருக்க, தங்கை எங்கே சென்றிருப்பாளென்று நினைத்துக் கொண்டே வீட்டிற்குள் வந்தான்.

வந்தவன் தங்களுடைய அறையில் படுத்திருந்த மனை வியைக் கண்டான்.

அங்கிருந்த தலையணையை இறுக அணைத்துக் கொண்டு அவள் படுத்திருந்த விதத்தில், அப்படியே சென்று அந்தத் தலையணையை அகற்றி விட்டுத் தான் அவளை இறுக அணைத்துக் கொள்ள வேண்டும் போல அவனுடைய மனம் பரபரத்துப் போனது.

அந்த எண்ணத்தின் தீவிரத்தில் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள சற்றுச் சிரமப்பட்டுத்தான் போனான்.

சிறு குழந்தையைப் போன்றிருந்த அவளுடைய முகம் அவனை ஏதேதோ எண்ண வைத்திருந்தன.

இப்படிப்பட்ட பெண்ணைத் தான் கோபித்துக் கொண் டிருப்பது தவறோ.

அதிலும் எவ்வளவு இனிமையான, வெகுளித்தன மான பெண் தனது மனைவி.

ஏதோ தெரியாமல் ஒரு தவறைச் செய்து விட்டதற் காக ஏன் அவளை இப்படியெல்லாம் வதைக்க வேண்டும்.

பேசிய தன்னாலேயே இயல்பாக இருக்க முடியவில்லை யென்னும் பொழுது மனைவிக்கு எப்படியிருக்கும்.

அதே போக்கில் யோசித்துக் கொண்டே சென்றவ னுக்கு, ஏனோ ஒன்றுமே இல்லாததை வேண்டுமென்றே

தான் பெரிதாக்கிக் கொண்டிருப்பதைப் போலத் தீவிரமாகத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனால்...

மனைவி தன்னிடம் நேரடியாக, ஏன் தன்னிடம் எப்படி நடந்து கொண்டிருந்தாலும் அதைத் தான் தவறாக எடுத்துக் கொண்டிருக்கவே மாட்டோமே.

ஆனால் அவள் செய்த காரியம்...

செய்தது மட்டுமா.

இப்பொழுதும் கூடத் தன்னையும், சுமிதாவையும் இணைத்துத் தவறான கண்ணோட்டத்தில் தானே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

மீண்டும் மனைவியைத் திரும்பிப் பார்த்தான் ஜெயவர்த்தன்.

நன்கு உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவளையே தொடர்ந்து சில வினாடிகள் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, அன்று ஊருக்கு சென்று வந்த அந்த இரவில் இதே அறையில் வைத்து அவள் சொன்னது தான் நினைவிற்கு வந்தது.

எவ்வளவு உருக்கமாகப் பேசினாள்.

அதுவும் எப்படிப்பட்ட வார்த்தைகள்.

உன்னுடைய அன்புக்கு முன்னிலையில் இந்த உலகமே தூசு என்றாளே.

அப்படிப்பட்ட அன்பு தவறு கண்டுபிடிக்குமா.

தவறு கண்டுபிடித்தது மட்டுமா, கீழ்த்தரமாக வேற நடந்து கொண்டதே.

அது எப்படிச் சாத்தியமாயிற்று.

அப்படிப்பார்த்தால் அன்று மனைவி இட்டது வேஷமன்றி வேறு என்னவாக இருக்க முடியும்.



இல்லை, அது வேஷமில்லை என்று ஓலமிட்ட மனசாட்சியை ஒரு தட்டுத்தட்டி அடக்கியிருந்தான் ஜெயவர்த்தன்.

நல்லவேளை, புத்தியில்லாமல் தடுமாற இருந்த மனதை மீண்டும் நிலைக்குக் கொண்டு வந்தோமென்று நினைத்துக் கொண்டான்.

தூங்குகிறாளே என்று சத்தம் செய்யாமல் வெளியே வந்தவன், கால் போன போக்கில் தோட்டத்தைச் சுற்றினான்.

''அண்ணா...''

''வா லாவண்யா, எங்க போய்ட்டு வர்ற?''

''ராதிகாவோட தோட்டத்துக்கு... அதாண்ணா எங்கூடப் படிச்சாளே...''

''நந்தகுமாரோட தங்கை தான?''

''ஆமாண்ணா அவளே தான். அப்புறம் என்ன அதிசயமா நேரத்துக்கே வந்துட்டீங்க?''

''ஏன் வரக் கூடாதா?''

''இல்ல எப்பவும் நடு ஜாமத்துக்கு தான வருவீங்க'' என்று யோசிக்காமல் சொல்லிவிட்டுப் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''அண்ணி எங்கண்ணா?''

''ஏன், உங்கூட வரலையா?''

''ம்கூம், ரெஸ்ட் எடுக்கறேன் நீ மட்டும் போய்ட்டு வான்னு சொல்லிட்டாங்க. ஓ அவங்களும் எங்கூட வந்துட்டதா நினைச்சுட்டு தான் தோட்டத்துக்குள்ள நடந்துட்டிருக்கீங்களா?''

''சரிதான், கிளம்பலாமா லாவண்யா?''

''அண்ணி?''

"பின்ன, போய்க் கூட்டிட்டு வா."

"நீங்களே போய் அழைச்சுட்டு வாங்களேன், இந்த நேரத்துல உங்களப் பாத்தா ரொம்ப சந்தோஷப்படுவாங்க."

அதேநேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசத் தொடங்கி விட்டிருந்தான் ஜெயவர்த்தன்.

சில வினாடிகள் நின்று பார்த்த லாவண்யா பிறகு தானும் வீட்டிற்குள் வந்து விட்டிருந்தாள்.

அண்ணனுக்கு வந்தது கம்பெனி அழைப்பு என்பதால் தான், அவள் அப்படி வந்ததும்.

அண்ணி முடியவில்லையென்று படுத்து விட்டிருக்க, அண்ணன் மும்முரமாகப் பேசத் தொடங்கி விட்டிருக்க, இனி தான் எப்பொழுது சென்று மறுநாளைய தேர்வுக்குப் படிப்பதோ என்றிருந்தது.

வீட்டிற்குள் வந்தவள் ஸ்வேதா ஹாலில் அமர்ந்திருப்பதைக் கண்டாள்.

"என்ன அண்ணி ரெஸ்ட் எடுக்கலையா?"

"எடுத்துட்டு இப்ப தான் வந்தேன், அப்புறம் வெளிய யார் கூடப் பேசிட்டிருந்த."

"ம், உங்க வீட்டுக்காரர் கூடத் தான்."

லாவண்யா சொன்னது தான் தாமதம் உடல் விறைத்துப் போனாள் ஸ்வேதா.

அவன் எங்கே இங்க.

அதுவும் இந்த நேரத்தில்.

காலையில் அவன் பேசியதே இன்னும் எத்தனையெத்தனையோ பிறவிகளுக்கு போதுமென்னும் போது இன்னும் என்னவெல்லாம் சொல்லி விடுவானோ என்றிருந்தது.



அப்படி இனியும் ஏதாவது சொன்னால் அதைத் தாங்கிக் கொள்கிற சக்தி தனக்கு இருக்கிறதா.

ம்கூம் இல்லை.

நிச்சயமாக இல்லை.

ஏனோ இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித பயத்தில் மனம் பதறத் தொடங்கி விட்டிருக்க, என்னாச்சு அண்ணி? என்று அருகில் வந்திருந்தாள் லாவண்யா.

"என்ன அண்ணி?"

"வீட்டுக்குப் போலாமா?"

"ஏன்?"

"பசிக்குது அதான்..."

எங்கே இந்தப் புத்திசாலிப் பெண் தன் நிலையைப் பார்த்து சிரிப்பாளோ என்று பயம் வந்து விட்டிருக்க, வாய்க்கு வந்ததைச் சொன்னாள்.

ஆனாலும் அண்ணியின் நிலை லாவண்யாவிற்கும் புரியவே செய்தது.

அண்ணாவிற்காகத் தான் இப்படியெல்லாம் மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாள் என்பதும்.

ஒருவேளை அண்ணி சொன்னது உண்மையான காரணமாகவே இருந்தால்.

"ரொம்ப பசிக்குதுன்னா நான் வேணும்னா இங்க தோட்டத்துக்குள்ள போய் ஃப்ருட்ஸ் ஏதாவது பறிச்சுட்டு வரட்டுமா அண்ணி?"

"அப்பிடியெல்லாம் ஒன்னும் உயிர் போற பசியில்ல."

"சிரிக்காதீங்க அண்ணி, அம்மா எதையாவது கொஞ்சமாவது சாப்பிடச் சொல்லி எவ்வளவு சொன்னாங்க. ஏன் வேண்டாம்னு வந்தீங்க?"

''அட என்ன நீ. அப்பப் பசிக்கல இப்பப் பசிக்குது.''

''சரிதான் எழுந்து வாங்க போலாம்.''

''எப்பிடி?''

''ம், நடராஜா சர்வீஸ் தான், இல்லன்னா உங்க வீட்டுக் காரர் இருக்காரே கார எடுக்கச் சொல்லிக் கேட்டுப் பாக்க லாம்.''

''வரவர உனக்கு ரொம்பத்தான் வாய் ஆயிடுச்சு லாவண்யா.''

''அச்சச்சோ என்ன அண்ணி நீங்க, நான் எப்பவும் போல சாதாரணமாதான் பேசறேன். நீங்க தான்...''

ஏதோ சொல்ல வந்தவளுக்கு அண்ணி ஸ்வேதாவின் முகத்தைப் பார்க்க இனி என்ன தோன்றியதோ பேசாமல் இருந்து விட்டிருந்தாள்.

காரின் டிரைவர் ஸீட்டில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த ஜெயவர்த்தன் அவர்கள் இருவரும் வருவதைப் பார்த்து காரை ஸ்டார்ட் செய்து விட்டிருக்க, ''வாங்க அண்ணி'' என்று ஸ்வேதாவுடன் சென்று காரில் ஏறிக் கொண்டாள் லாவண்யா.

அண்ணனும் அண்ணியும் பேசிக் கொள்ளாதது, ஏன் ஆளுக்கொரு திசையைப் பார்த்துக் கொண்டிருந்தது அவளுடைய கண்களில் படத் தவறவில்லை.

வேறு எதையோ மும்முரமாகப் பார்த்துக் கொண்டு வருவதைப் போலக் கண்டும் காணாமல் இருந்து விட் டிருந்தாள்.

வீடு வந்து சேர்ந்ததும் அண்ணியிடம் வந்தாள்.

''வாங்க அண்ணி.''

''எங்க?''



''சாப்புட்றதுக்கு தான்.''

''இப்ப வேண்டாம் லாவண்யா, அத்தெ வரட்டும் டிஃபனே சாப்பிட்டுக்கறேன்.''

''டிஃபன் தான் அண்ணி, இட்லியும் உப்புமாவும் ஹாட் பாக்ஸ்ல சூடா இருக்கு பாத்துட்டு வந்து தான் கூப் புட்றேன் வாங்க.''

''இன்னும் கொஞ்சம் போகட்டுமே.''

''ஏன்?''

''அத்தையும் வரட்டும்.''

சில வினாடிகள் எதுவும் பேசாமல் தனது அண்ணியைப் பார்த்த லாவண்யா, ''சரிதான் அண்ணி அம்மா வந்ததும் உடனே சாப்புடுங்க'' என்று படிக்கப் போய் விட்டிருந் தாள்.

என்னதான் படிப்பதற்காகத் தனது அறைக்கு வந்து அமர்ந்திருந்தாலும், பாடம் துளி கூட அவளுடைய மனதிற்குள் ஏறியிருக்கவில்லை.

ஏக்கமும் பதட்டமும் கலந்து அண்ணனைப் பார்த்த அண்ணியின் முகம்தான் அவளுக்குத் திரும்பத் திரும்ப நினைவிற்கு வந்து கொண்டே இருந்தது.

பாவம் அண்ணி என்று நினைத்தவளுக்கு அண்ண னின் மேல் கோபம் தான் வந்தது.

தனது பெரிய அண்ணிகளை நினைத்துப் பார்த்தாள்.

யாரையும் மதிக்காமல் எப்படியெல்லாம் குறை கண்டு பிடித்துப் பேசுவார்கள்.

ஆனால் ஸ்வேதா அண்ணி.

அவர்களுக்குக் கெட்டதைக் கூட நல்லவிதமாகத் தானே பார்க்கத் தெரியும்.

இருந்திருந்து இந்த அண்ணியைப் போய் இந்த ஜெயவர்த்தன் அண்ணனால் எப்படிக் கோபித்துக் கொள்ள முடிகிறது.

எல்லாம் இந்த அண்ணியைச் சொல்ல வேண்டும்.

பெரிய அண்ணிகளைப் போல இருக்கா விட்டாலும் அவசியத்திற்காவது பேச வேண்டியதுதானே.

மேலும் சிறிது நேரமும் அதே போக்கில் யோசித்துக் கொண்டிருந்த லாவண்யா பிறகு பாடத்தில் மூழ்கி விட்டிருந்தாள்.

## 52

மேலும் பதினைந்து நாட்கள் ஓடிப் போயிருந்தன.

நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே சென்ற கணவனின் கோபம் ஸ்வேதாவின் மென்மையான உள்ளத்தை மிகவும் பலவீனமடையச் செய்திருந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

என்னதான் அவள் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் சிரித்த முகத்துடன் நடமாடினாலும் அது காஞ்சனாவிற்குத் தெரிந்தே இருந்தது.

ஏன் லாவண்யாவிற்கும்.

முடிவே இல்லாமல் நீண்டு போய்க் கொண்டே இருந்த கணவனின் வெறுப்பில் இன்னும் ஓடாய்க் கரைந்து கொண்டிருந்தாளே தவிர ஸ்வேதாவாலும் எதையும் செய்ய முடிந்திருக்கவில்லை.

இதனுடன் ஒப்பிடும் பொழுது அவள் மிகவும் வெறுத்த திருமணத்திற்கு முன்பிருந்த வாழ்க்கை கூட இனிமையான வசந்த காலமாகத் தோன்றிற்று.



அந்த வீட்டைப் பொறுத்தவரை ஜெயவர்த்தனின் வார்த்தைகளுக்கு மேல் பேசக் கூடியவர்கள் அங்கு யாரும் இருக்கவில்லை.

அந்த அளவிற்கு அதுநாள் வரை அவன் செய்து வந்த அனைத்துமே பிரமாதமாகத்தான் இருந்தன.

ஏன் ஒவ்வொரு விஷயத்திலுமே மற்றவர்களுடைய நலன் பார்த்து தான் நடந்து கொள்வான் என்பதோடு, அவனால் அவனைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் நல்லதே நடந்து வந்திருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

ஏன் குடும்பத்திற்காக அவன் இன்னும் எவ்வளவோ செய்தும் இருக்கிறான்.

எது எப்படியிருந்தாலும் மருமகள் விஷயத்தில் மகன் நடந்து கொள்ளும் விதத்தை மட்டும் காஞ்சனாவால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ளவே முடியாது போயிற்று.

அவசியத்திற்குத் தான் சொல்வதைக் கேட்டு அதன்படி நடக்கும் மகன் இந்த விஷயத்தில் மட்டும் தனது வார்த்தைகளுக்கு செவி கூட மடுக்காதது அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்திருந்தது.

அதற்கு மேல் வேறு மாதிரி எடுத்துச் சொன்னாலும் பலன் பூஜ்யமாகத்தான் இருந்தது.

அதிலும் தாங்கிக் கொள்ள முடியாமல் சிலமுறை ஸ்வேதாவுக்காக அவர் பேச நேர்ந்த பொழுது மகன் இன்னும் அதிகமாக அவள் மீதே எரிந்து விழப் போய் இப்பொழுதெல்லாம் அவர் பேசுவதையே நிறுத்திக் கொண்டு விட்டிருந்தார்.

ஆனாலும் நீ செய்து கொண்டிருப்பது சற்றும் மன்னிக்க முடியாத மிகப்பெரிய தவறுதான் என்பதை

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மகனுக்கு ஒரு முறை கூட அவர் உணர்த்தத் தவறியதில்லை.

அதே சமயம் ஸ்வேதாவிடமும் அவர் இன்னொரு தாயாகவே நடந்து கொண்டார்.

அத்தையுடைய அக்கறையும் கவனிப்பும் மட்டும் கிடைக்காமல் போயிருந்தால் கணவனின் தொடர்ந்த வெறுப்பிலும் கோபத்திலும் தான் என்ன நிலைக்கு ஆளாகியிருப்போமோ என்று ஸ்வேதாவும் அவ்வப் பொழுது நினைத்துக் கொள்வது உண்டு தான்.

அவ்வளவிற்குப் பிறகும் கணவனுக்காக ஏங்கிய மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளத் தெரியாமல், வழக்கம் போலத் தனிமையில் கண்ணீர் வடித்தாள்.

ஆனாலும் அவளுடைய எதிர்பார்ப்பிற்கு நேர் மாறாக அவளுடைய கணவன் ஜெயவர்த்தனிடமிருந்து அவளுக்கு வெறுப்பும் கோபமுமே மிகுதியாகக் கிடைத்தன.

ஜெயவர்த்தனும் மனைவியை நேருக்கு நேர் பார்ப்பதை, அதுவும் வேண்டுமென்றே அவள் அறியவே தவிர்த்தான்.

அதற்கு மேல் பார்க்க நேர்ந்தாலும் அவனுடைய வெறுப்பை உமிழும் பார்வையில் இன்னும் அதிகமாக வெந்து போய்க் கொண்டிருந்தாள் ஸ்வேதா.

அனைத்திற்கும் மேல் அவனுடைய கூர்மையான அம்பு போன்ற வார்த்தைகள் வேறு.

அவை இருக்கிற கொஞ்சநஞ்ச உயிரையும் குத்திக் கிழித்துக் கூறு போட மேலும் அதிகமாகத் துடித்துப் போனாள்.

நாளுக்குநாள் இன்று என்ன வேதனையோ என்று நினைத்து பயந்து நடுங்குமளவிற்கு நிலமை மிகவும் மோசமாகியிருந்தது.

அதிலும் இந்தநாள் வராமலே போயிருக்கலாமே என்று நினைத்து நினைத்து அழ வைத்த அந்த நாள் ஸ்வேதாவை இன்னும் பலப்பல மடங்கு வேதனைப்படுத்தி விட்டிருந்ததென்று தான் சொல்ல வேண்டும்.

அன்று ஏதோ காரணத்தினால் 'பந்த்' என்று லாவண்யாவிற்குக் கல்லூரி விடுமுறையாகி விட்டிருக்க, அவள் வீட்டில் தான் இருந்தாள்.

லாவண்யாவை விட ஸ்வேதாவிற்குத் தான் அதில் மிகுந்த சந்தோஷம்.

''எப்படியோ இன்னைக்கு ஒரு நாளைக்காவது எனக்குக் கம்பெனி குடுக்கப் போறியே லாவண்யா, ரொம்ப சந்தோஷம்'' என்றாள்.

''சரிதான் அண்ணி, இன்னைக்கு ஸ்பெஷலா என்ஜாய் பண்ணலாம். என்ன பண்ணலாம் சொல்லுங்க?''

''எங்கயாவது வெளிய போய்ட்டு வரலாமா லாவண்யா?''

''அதான் முடியாதே.''

''ஏன்?''

''இன்னைக்கு தான் 'பந்த்'தாச்சே.''

''அதனால என்ன, நாம கார்ல தான போகப் போறோம்.''

''ஆனாலும் வேண்டாமே அண்ணி, ஏதாவது கலவரம் நடந்ததுன்னு வெச்சுக்கோங்க...''

''அப்படிக் கூட நடக்குமா?''

''பின்ன, பந்த் ஸிவியரா நடக்கும்னு தான் பேசிக்கறாங்க. ஏன் திடீர்னு காலேஜ் கூட லீவாயிடுச்சே.''

''வேணும்னா இப்பிடிப் பண்ணலாமா அண்ணி?''

''என்ன லாவண்யா சொல்லு?''

''எனக்குக் கார் ஓட்டக் கத்துக்கணும்னு ரொம்ப நாள் ஆச...''

"அடடா லாவண்யா குட்டிக்கு இப்பிடியொரு ஆசையா, ஆசைங்கறத விடவும் அது கட்டாயமாச்சே நான் கத்துத் தர்றேன்."

"ஆனா கார்..."

"ஏன் நம்ம கார் இருக்கே."

"அது உங்க கார் அண்ணி, அதுவுமில்லாம காஸ்ட்லி யான புதுக் கார் வேற..."

"அதனாலென்ன?"

"இல்ல..."

"ஏன் லாவண்யா பிரிச்சுப் பேசிட்டிருக்க நீ கத்துக் கறதால கார் தேஞ்சு காணாமப் போயிடுச்சுன்னாக் கூட வேற கார் வாங்கிடலாம் ஒன்னும் கவலப்படாத."

"அதுக்கில்ல."

"நோ, இதுக்கு மேல ஒன்னும் பேசக் கூடாது. இன் னைக்கே உனக்குக் கார் ஓட்டக் கத்துக் குடுக்கப் போறேன். முழுசா இன்னும் ஒரு வாரத்துல எல்.ஆர். வாங்கிட்டு காலேஜ்க்கு நீயே தனியா கார் எடுத்துட்டுப் போலாம் ஓ.கே.?"

ஸ்வேதா சொல்ல, கண்களில் ஆவல் மின்னத் தலை யாட்டினாள் லாவண்யா.

"ஆனா..."

"என்னமா?"

"அண்ணா..."

"ஏன் அவருக்கென்ன?"

"ஏதாவது சொல்லிட்டார்னா..."

தனது வார்த்தைகளில் அண்ணியின் முகம் லேசாகக் கறுத்து விட்டதைக் கண்டவள், உடனே பேச்சை மாற் றிருந்தாள்.



ஏன் இந்த விஷயத்தில் அண்ணனும்தான் என்ன சொல்லி விட முடியுமாம் என்று நினைத்துக் கொண்டாள்.

அண்ணி சொல்வதைப் போல அப்படியே காருக்கே ஏதாவது ஆகிவிட்டாலும் கூட, இது ஒன்றும் அண்ணா வுடைய காரல்லவே என்றிருந்தது.

அப்படியே அண்ணனுடைய காராகவே இருந்தாலும் இந்த மாதிரி சிறு விஷயத்திற்கெல்லாம் அவரும் ஒன் றும் சொல்ல மாட்டார். அது எவ்வளவு சேதமென்றாலும் கார் தானே போனால் போகிறது உனக்கு ஒன்றும் ஆகி விடவில்லையே அந்த அளவிற்கு சந்தோஷப்படு என்று ஊக்குவிக்கத் தான் செய்வாரென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

"என்ன லாவண்யா?"

"நீங்க காலேஜ்க்கு எப்பிடிப் போவீங்க?"

"நான் எப்பவும் கார் தான், அதுவும் நானே தான் எடுத் துட்டுப் போவேன்."

"பந்தாவா இருக்கும் இல்ல அண்ணி, அதுவும் தின மொரு கார்ல போய் இறங்கலாம்..."

அப்படியெல்லாம் ஒருமுறை கூடத் தோன்றியதே இல்லையென்றாலும் லாவண்யாவின் ஆவலுடனான கேள்வியில் சரிதான் என்று புன்னகையுடன் ஒப்புக் கொண்டாள்.

அதற்குப் பிறகு ஸ்வேதாவின் கல்லூரிக் காலம், அப்பொழுது நடந்த சுவாராஸ்யமான விஷயங்கள் எனப் பேச்சு நீண்டது.

ஆர்வமாக லாவண்யா கேட்க, தானும் தன்னை மறந்து சொல்லத் தொடங்கிவிட்டிருந்தாள் ஸ்வேதா.

இடையில் காஞ்சனா ஜூஸ் கொண்டு வந்து கொடுக்க, பெண்கள் இருவரும் எடுத்துக் கொண்டனர்.

"நெல்லுக்கு இறைக்கிற நீர் புல்லுக்கும் போற மாதிரி உங்களால எனக்கும் நல்ல கவனிப்பு அண்ணி" என்று கையிலிருந்த ஜூஸைக் குடித்தாள் லாவண்யா.

எவ்வளவு இனிமையான பெண் இந்த லாவண்யா.

தான் எந்த மாதிரி மனநிலையில் இருந்தாலும் அதற்குத் தகுந்தாற் போல எதையாவது பேசிச் சிரிக்க வைக்காமல் விட மாட்டாளே....

"ஜூஸ் குடிங்க அண்ணி."

ஒரே மடக்கில் குடித்து முடித்த ஸ்வேதா, "போலாமா?" என்றாள்.-

"ஓ யெஸ்."

எல் போர்ட் ஸ்டிக்கர் ஒட்ட ரெட் கலர் இன்சுலேஷன் டேப்பை மட்டும் பழைய மர சாமான்கள் போட்டு வைத்திருக்கும் டூல் கிட்டிலிருந்து எடுத்துக் கொண்டு பெண்கள் இருவரும் வெளியே வந்திருந்தனர்.

சொன்னது போலவே அன்று முழுவதும் லாவண்யா விற்குக் கார் ஓட்டப் பயிற்சி கொடுத்தாள் ஸ்வேதா.

தான் எதிர்பார்த்ததை விடவும் வேகமாகவும் நன்றாக வும் ஓட்டக் கற்றுக் கொண்டவளை பார்த்தவளுக்கு ஒரே சந்தோஷம்.

அதை வெளிப்படையாகவே சொன்னாள்

"சும்மா சொல்லாதீங்கண்ணி."

"நிஜம்மா, விட்டா இன்னும் ரெண்டே நால்ல நீயே தனியா காலேஜ்க்குக் கார எடுத்துட்டுப் போயிடுவ போலிருக்கு."

"எல்லாம் நீங்க கத்துக் குடுக்கற சிறப்பு தான் அண்ணி" என்று தானும் தனது மனதிற்குப் பட்டதைச் சொன்னாள் லாவண்யா.

மதியம் வரை காரை எடுத்துக் கொண்டு சுற்றியவர்கள் பிறகு வந்து மதிய உணவை முடித்துக் கொண்டு இரண்டு மணி நேர ஓய்வுக்கு பின் மீண்டும் சென்றிருந்தனர்.

அப்படிச் சென்றவர்களுக்கு மீண்டும் ஐந்து மணி வரை கூட நேரம் போனதே தெரிந்திருக்கவில்லை.

"சரி அண்ணி, இனி போதும் கிளம்பலாம்."

"ஏன் டயர்டா இருக்கா?".

"எனக்கென்ன விட்டா இருபத்தி நாலு மணி நேரமும் தொடர்ந்து கத்துக்குவேன். அந்த அளவுக்கு இன்ட்ரஸ்ட் டும் இருக்கு பலமும் இருக்கு."

"ஓ, அப்ப என்ன நோஞ்சான்னு நினைச்சுட்டிருக்க அப்பிடிதான?"

"அச்சச்சோ நான் அந்த அர்த்தத்துல சொல்லல அண்ணி, நீங்க இப்ப இருக்கற கண்டிஷனுக்கு..."

"ஏன் எனக்கென்ன? வா இன்னொரு ரவுண்ட் போய்ட்டு வரலாம். இல்லன்னா இன்னொன்னு செய்யலாமா?"

"என்ன அண்ணி?"

"நான் இறங்கி நின்னுக்கறேன் நீ மட்டும் இந்த ஸ்ட்ரீட் கடைசி வரைக்கும் போய்ட்டு அப்பிடியே திருப்பிட்டு வா."

"நான் மட்டும் தனியாவா?"

"ஏன், பயமா இருக்கா?"

"ம்கூம் அதெல்லாம் ஒன்னுமில்ல அண்ணி. அதான் எல் போர்ட் ஸ்டிக்கர் இருக்கே" என்றவள் "அதோட இந்த

ரோட்ல மணிக்கொரு வண்டி போறதே ஆச்சரியமாச்சே. நான் ரெடி அண்ணி நீங்க சொல்ற மாதிரியே செய்யறேன்'' என்றாள்.

''எல்லாத்த விடவும் ரோடு நல்லாப் பெருசா இருக்கறதால தான் என்கரேஜ் பண்றேன். ஒருவேள உனக்கு ஏதாவது பயமா இருந்தாலும் அதே இடத்துல நிறுத்திட்டுக் கூப்புடு நான் ரெண்டு நிமிஷத்துல நடந்து வந்துட்றேன்.''

''சரிதான் அண்ணி'' என்ற லாவண்யா முதன்முறையாகக் காரை தனியாக ஓட்டிக் கொண்டு போனாள்.

மனதிற்குள் பயமாக இருந்தாலும் அண்ணி சற்றுக் கொடுத்தது போலவே செய்ததால் அந்த வீதியின் கடைசி வரை சென்று விட்டு அப்படியே திருப்பிக் கொண்டு பழைய இடத்திற்கும் வந்து சேர்ந்திருந்தாள்.

அப்படி வந்தவளுக்கு அங்கே ஒரு மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

''எப்படி அண்ணி நானே தனியாப் போய்ட்டு வந்துட்டேன் பாத்தீங்களா?'' என்று பெருமை பொங்க சற்று தொலைவில் நின்று கொண்டிருந்த ஸ்வேதாவைப் பார்த்தவளுக்கு அதற்குப் பிறகு தான் அந்த வித்தியாசம் கண்களில் பட்டது.

ஏனோ நிற்க முடியாமல் காலைப் பிடித்துக் கொண்டு தள்ளாடியபடி நின்று கொண்டிருந்த அண்ணியைப் பார்த்தவள், ''அண்ணி... என்னாச்சு அண்ணி?'' என்று பதட்டத்துடன் இறங்கி ஓடினாள்.

''அண்ணி...''

''லாவண்யா...''

''அண்ணி, என்னாச்சு அண்ணி? ஏன் காலெல்லாம் இப்பிடி இரத்தம்...''

அண்ணியின் நிலையைப் பார்த்து லாவண்யா அழவே தொடங்கி விட்டிருக்க, ''ஏய் அசடு ஏன் அழற?'' என்று கேட்டாள் ஸ்வேதா.

அதற்குள் லாவண்யா ஸ்வேதாவிற்கு அருகிலேயே சென்றிருக்க, அவளைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு சற்றே தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள் ஸ்வேதா.

''என்னாச்சு அண்ணி?, காலெல்லாம் இப்பிடி ப்ளட்... எனக்கு ரொம்ப பயமா இருக்கு அண்ணி'' என்று லாவண்யா மீண்டும் அழத் தொடங்கி விட்டிருக்க, ''ப்ளீஸ் லாவண்யா'' என்று அவளை அடக்கினாள் ஸ்வேதா.

''என்...''

''ஒன்னுமில்லமா அப்பிடியே மர நிழல்ல மெதுவா நடந்து வந்துட்டிருந்தேனா அப்ப இங்கிருந்த இந்த தார்ப்பாய் குவியல் மேல அதுவும் ஒரு ஓரத்துல தான் கால வெச்சுட்டேன். அப்புறம் தான் தெரியுது அடியில ஒரு மரப்பலகைல முழுக்க ஆணி இருந்திருக்கு. அதெல்லாம் அப்பிடியே கால்ல ஏறிடுச்சு...''

''ஐயோ இரத்தம் நிக்காம வந்துட்டே இருக்கே அண்ணி...'' என்று கண்ணீருடன் தனது மொபைலை எடுத்து யாருக்கோ அழைக்கப் போனாள் லாவண்யா.

''ஏய், யாருக்குக் கூப்புட்ற?''

''அண்ணாவுக்கு தான்...''

''நல்லவேல செய்யப்பாத்த'' என்று தடுத்திருந்த ஸ்வேதா, ''யாருக்கும் கூப்புடாத நாம இப்பிடியே ஹாஸ்பிட்டலுக்குப் போய்ட்டு வந்துடலாம்'' என்றாள்.

''அதெப்பிடி. அம்மாவுக்காவது கூப்புட்டு சொல்லித் தான ஆகணும்...''

"சொன்னா என்னவோ ஏதோன்னு பயந்துக்குவாங்க இல்லையா லாவண்யா குட்டி. அதுவே டாக்டர்கிட்டப் போய்ட்டு வந்துட்டு பயப்பட ஒன்னுமில்லன்னே சொல் விடலாம்..."

"அதுக்காவது எப்பிடி அண்ணி போறது?"

"கார்ல தான்..." என்று அங்கிருந்த காரை நோக்கிக் கை காட்டினாள் ஸ்வேதா.

"யார் ஓட்டறது?"

"நாந்தான்."

"என்ன விளையாட்றீங்களா?"

"இதுல விளையாட என்னமா இருக்கு?" என்று கேட்டுக் கொண்டே காரை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்த வளைக் கைத் தாங்கலாகப் பிடித்து நடத்தி வந்தாள் லாவண்யா.

"மெதுவா அண்ணி."

ஒரு வழியாக இருவரும் வந்து காரில் ஏறி அமர்ந்திருக்க "வலிக்குதா அண்ணி?" என்று கேட்டாள் லாவண்யா.

"இல்ல ரொம்ப குளிர்ச்சியா இருக்கு" என்று சிரித்த ஸ்வேதாவால் ஏனோ சிரிப்பைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அதே சமயம் "எல்லாம் என்னால தான்" என்று நன்றா கவே அழத் தொடங்கி விட்டிருந்தாள் லாவண்யா.

"என்ன இது லாவண்யா, நீ ரொம்ப தைரியமான பொண்ணா இருப்பேன்னு நினைச்சேன் ஆனா நீ நேர்மாறா இருக்க..."

"ஆமா சொல்ல மாட்டீங்க, காரெல்லாம் இரத்தம் பாருங்க..."



"சரிதான் வீட்டுக்குப் போனதும் நல்ல கார் வாஷ் போட்டுக் கழுவிக்கலாம் அழாத."

"சிரிக்காதீங்க அண்ணி..."

"வேண்டாமா, சரி விடு நானும் அழறேன்."

"விளையாடாதீங்க."

"என்ன நீ, நான் என்ன செஞ்சாலும் ஏதோ ஒன்னு சொல்லிட்டே இருக்க."

அதற்குள் காரைத் திருப்பி முக்கிய சாலையில் செலுத்தத் தொடங்கியிருந்தாள் ஸ்வேதா.

"எல்லாம் என்னால தான் நாந்தான் சும்மா இருக்காம..."

"நோ..."

"பயமா இருக்கு அண்ணி."

"பயப்பட இதுல என்னமா இருக்கு, கால்ல ஆணி ஏறிடுச்சு அவ்வளவுதான..."

"என்ன ஒரு ஆணியா?"

"ம்கூம், ஒரு பத்துப் பன்னிரெண்டு ஏறியிருக்கும்..."

"அவ்வளவா..." என்று சத்தமாகக் கேட்ட லாவண்யா, "அதான் இவ்வளவு இரத்தம் அதுவும் நிக்காம வந்துட்டே இருக்கா?" என்று அழுகையுடன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

ஏன் தான் சொன்னதை விடவும் இன்னும் நாலைந் தாவது அதிகமாகத் தான் இருக்கும் என்று நினைத்துக் கொண்ட ஸ்வேதா அதை வெளியே சொல்லவில்லை.

பாவம் லாவண்யா இன்னும் ஒரேயடியாக பயந்து போவாளென்று தனக்குள்ளேயே மறைத்துக் கொண்டாள்.

நிற்காமல் வந்து கொண்டே இருந்த இரத்தத்தில் காரை ஓட்டக் கூடச் சிரமமாகத் தான் இருந்தது. மயக்கம் வருவதைப் போலவும்.

ஆனாலும் அதை அவள் துளியும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

இயன்ற அளவு இயல்பாகப் பேசியபடி காரைச் செலுத்தினாள்.

## 53

ஒரு வழியாக மருத்துவமனையை வந்து அடைந்திருந்த போது, ஒரேயடியாகச் சோர்ந்து போயிருந்தாள் ஸ்வேதா.

தான் முதலில் மருத்துவமனைக்குள் ஓடிச் சென்று வீல் சேருடன் திரும்பி வந்தாள் லாவண்யா.

அதே சமயம் அண்ணனுக்கும் போன் செய்து விஷயத்தை சொல்லியிருந்தாள். அம்மாவுக்கு இன்னும் சொல்லவில்லை தெரிவித்து விடுங்கள் என்றும்.

இவ்வளவையும் அழுது கொண்டே தான் சொல்லியிருந்தாள்.

அனைத்துமே என்னால் தான் அண்ணியை ஒரு வார்த்தை ஏதாவது சொன்னீர்கள் என்றாலும் அப்புறம் அவர்கள் பாவம்... என்னாலும் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியாதென்று போனை வைத்திருந்தாள்.

தங்கையுடன் பேசிய ஜெயவர்த்தன் அடுத்த பதினைந்து நிமிடங்களில் மருத்துவமனையில் இருந்தான்.

எப்படி வந்தானென்பது அந்தக் கடவுளுக்கே வெளிச்சம். அந்த அளவிற்கு இரு மடங்கு வேகத்துடன் வந்து சேர்ந்திருந்தான்.

வெறும் ஆள் என்றாலும் கூடப் பரவாயில்லை. அண்ணி அப்போதிருக்கும் நிலைக்கு, அதுவும் எவ்வளவு இரத்தம்



போய் விட்டது இனி என்ன சொல்லி விடுவார்களோ என்று ஒரேயடியாகக் கலங்கிப் போயிருந்தவளுக்கு அண்ணனை அங்கு கண்டதும் தான் உயிரே வந்தது.

கூடவே அழுகையும்...

தன்னைக் கண்டதும் ஓடி வந்த தங்கைக்கு ஆறுதல் சொன்னவன் "அண்ணி எங்க?" என்று கேட்டான்.

"உள்ளே இருக்காங்கண்ணா, கால க்ளீன் பண்ணிக்கிட்டிருக்காங்க. வலி தாங்க முடியாம அவங்க கண் கலங்கறதை என்னால பாக்க முடியல" என்று மீண்டும் கலங்கியவளை அதட்டினான் ஜெயவர்த்தன்.

"சும்மா சும்மா இது என்ன லாவண்யா, நீயே இப்பிடி அழுதுட்டிருந்தா அப்புறம் ஸ்வேதா ரொம்பவும் பயந்துட மாட்டா பேசாம இரு" என்று விட்டு மனைவியைப் பார்க்கச் சென்றான்.

கணவனை அங்கு கண்ட ஸ்வேதாவிற்கு மனம் தைரியமடைந்திருந்தாலும், என்ன சொல்லி விடுவானோ என்று பயமாகவும் இருந்தது.

அதற்குள் மனைவியின் அருகிலேயே சென்றிருந்த ஜெயவர்த்தன், ஆறுதலாக அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு கணவனின் ஸ்பரிசமும், அருகாமையும் தன்னை ஏதேதோ செய்ய, லேசாகக் கலங்கத் தொடங்கியிருந்த கண்களை மறுபக்கம் திரும்பித் துடைத்துக் கொண்டாள்.

ஆனால் அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் அப்பொழுது ஜெயவர்த்தன் இருக்கவில்லை. சில வினாடிகளில் என்னவென்று விவரம் கேட்டு வருவதற்காக மருத்துவரைப் பார்க்கச் சென்றிருந்தான்.

அதற்குள் "ம் எல்லாம் முடிஞ்சது அப்பிடியே மெதுவா எழுந்துக்கலாம்" என்று அங்கிருந்து நகர்ந்தாள் நர்ஸ்.

"என்னாச்சு..." என்று ஸ்வேதா கேட்பதற்குள் அவள் வெளியே சென்றிருந்தாள்.

தொடர்ந்து சில நிமிடங்களில் வந்த கணவன் "கிளம்பலாமா?" என்று கேட்க சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் ஸ்வேதா.

அதற்குள் லாவண்யாவும் உள்ளே வந்திருந்தாள்.

"இப்ப எப்பிடியிருக்கு அண்ணி?" என்று கேட்டவளைப் பார்த்த ஸ்வேதாவிற்கு அவள் பார்க்க இப்பொழுது எவ்வளவோ தெளிந்திருந்தது தெரிந்தது.

சரிதான் அண்ணனிடமிருந்து கிடைத்த ஆறுதலாய் இருக்கும் என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

"என்ன அண்ணி இப்பப் பரவாயில்லையா?"

லாவண்யா கேட்க சிறு புன்னகையுடன் தலையை ஆட்டினாள்.

அது ஜெயவர்த்தனின் கவனத்தில் படத் தவறவில்லை. பொதுவாக "கிளம்பலாம்" என்றான்.

ஒரு வேகத்தில் படுக்கையை விட்டு இறங்கியிருந்த ஸ்வேதாவால் ஒரு எட்டு கூட எடுத்து வைக்க முடிந்திருக்கவில்லை.

முன்னைக்கு இப்பொழுது கால் நன்றாக வலிக்கத் தொடங்கியிருக்க வீங்கியும் விட்டிருந்தது.

கட்டிலைக் பிடித்துக் கொண்டே சில அடிகள் எடுத்து வைத்திருந்தவள், அதற்கே பிரம்மப்பிரயத்தனப்பட்டுத் தான் போனாள்.

ஆனால் அதற்குள் மனைவியின் நிலையைப் புரிந்து கொண்ட ஜெயவர்த்தன் "ஒரு நிமிஷம்" என்றுவிட்டுச் சென்று வீல் சேருக்கு சொல்லி விட்டு வந்தான்.



"ஒரு நிமிஷம் உக்காரு வீல் சேர் வரட்டும்" என்றவன் "கால்ல செப்பல் கூட இல்லாம அப்பிடி எங்க நடந்து போன?" என்று எரிச்சலை இயன்ற அளவு மறைத்துக் கொண்டு கேட்டான்.

கணவனின் கேள்வியில் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தாள் ஸ்வேதா.

"என்ன?"

ஆனால் அதற்குள் தான் முந்திக் கொண்டிருந்தாள் லாவண்யா.

"தப்பு என்னோடது தாண்ணா. என்னோடது பிஞ்சு போச்சுன்னு அண்ணியோடத நான் தான் கேட்டு வாங்கியிருந்தேன். அத மறந்துட்டு அப்பிடியே கார எடுத்துட்டு..."

போகப்போகத் தேய்ந்து போன குரலில் சொன்னாள் லாவண்யா.

"சரிதான் எல்லாம் நீங்க சொல்றது தான" என்று ஜெயவர்த்தன் தன் பாட்டுக்கு சொல்லிக் கொள்ள பெண்கள் இருவரும் லேசான பயத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

லாவண்யா சொன்னது உண்மையையே.

அவளுடைய காலணிகளுள் ஒன்று திடீரென்று வார் அறுந்து போக, "உங்களோடதப் போட்டுப் பாக்கட்டுமா அண்ணி?" என்று ஸ்வேதாவிடம் கேட்டு ஆசையுடன் அணிந்து பார்த்தாள்.

அப்படிக் கேட்டு வாங்கி அணிந்து கொண்டவள், காரைத் தனியாக ஓட்டிச் சென்ற போது அண்ணியிடம் திருப்பிக் கொடுக்க மறந்து விட்டது தான் துரதிர்ஷ்டம்.

சில வினாடிகளில் வீல் சேர் வர "வாங்க" என்று எழுந்திருந்தான் ஜெயவர்த்தன்.

''மறுபடியும் டாக்டரப் போய் பாக்க வேண்டா மாண்ணா?''

''நான் பாத்துட்டு வந்துட்டேன்'' என்றவன் மருத்துவர் சொன்னதைப் பொதுவாகச் சொன்னான்.

''மெதுவா அண்ணி...'' என்று ஸ்வேதா வீல் சேரில் ஏறி அமர உதவிய லாவண்யா, அவளுடன் பேசிக் கொண்டே நடந்தாள்.

சில வினாடிகளில் வெளியே வந்திருந்த ஜெயவர்த்தன், தன்னுடைய காரைக் கொண்டு போய்ப் பார்க்கிங்கில் போட்டு விட்டு வந்தான்.

வந்தவன் ''உன் கார் சாவியக் குடு'' என்று மனைவியிடமிருந்து கார் சாவியை வாங்கிக் கொண்டு அந்தக் காரை எடுத்து வருவதற்காகச் சென்றான்.

வந்து காரைத் திறந்து ஏறி அமரப் போனவன், அங்கு டிரைவர் ஸீட்டுக்கு அடியில சிந்தியிருந்த மனைவியின் இரத்தத்தின் அளவைப் பார்த்துப் பதறிப் போனான்.

இவ்வளவு இரத்தம் வெளியேறியிருக்கிறதென்றால், பாவம் மனைவி என்றிருந்தது.

சில வினாடிகளில் ஒரு துணியை எடுத்து அந்த இரத்தத்தை ஓரளவு துடைத்து வீசியவன், காரை வீல் சேருக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தியிருந்தான்.

ஏற உதவியது போலவே வீல் சேரிலிருந்து இறங்கி காருக்குள் அமரவும் அண்ணிக்கு உதவினாள் லாவண்யா.

நீண்ட நாட்களுக்குப் பிறகு முன் ஸீட்டில் கணவனுக்கு அருகில் அமர நேர்ந்தது மனதிற்குள் ஒருவிதப் படபடப்பை ஏற்படுத்தியிருந்தது ஸ்வேதாவிற்கு.

அதே சமயம் பிடித்தும் இருந்தது.



பின் ஸீட்டில் தங்கையும் ஏறி அமர்ந்திருக்க, காரை ஸ்டார்ட் செய்யப் போனான் ஜெயவர்த்தன்.

அதற்குள் மனைவி ஏதோ கேட்கத் தயங்குவது புரிய என்னவென்று கேட்டான்.

''காஃபி'' என்று அங்கிருந்த இன்ஸ்டன்ட் காஃபி ஷாப்பைக் காட்டி தயக்கத்துடன் மனைவி கேட்க.

இளகிய மனதைக் காட்டிக் கொள்ளாமல் காரை ஒரு ஓரமாக நிறுத்தி விட்டு இறங்கினான்.

இறங்கியவன் திரும்பித் தங்கையைப் பார்த்தான்.

''உனக்குமா?''

சரிதான் அண்ணிக்குக் கம்பெனி கொடுக்கலாமென்று நினைத்த லாவண்யா ''வேணும்னா, இதோ நானே வர்றேன்'' என்று காரை விட்டு இறங்கியிருந்தாள்.

''சாப்பிட ஏதாவது...''

குனிந்து கேட்ட கணவனிடம் ''வேண்டாம் காஃபி மட்டும் போதும்'' என்றிருந்தாள் ஸ்வேதா.

சில வினாடிகளில் இரண்டு டிஸ்போஸபிள் காஃபி டம்ளர்களுடன் திரும்பிய லாவண்யா ஒன்றைத் தனது அண்ணியிடம் கொடுத்து விட்டு, மற்றொரு டம்ளருடன் காருக்குள் ஏறி அமர்ந்து குடிக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

''தேங்க்ஸ் லாவண்யா'' என்று சிறு புன்னகையுடன் மெல்லிய குரலில் சொன்ன அண்ணியைப் பார்த்தாள் லாவண்யா.

''இது ரொம்ப ஓவர் அண்ணி.''

''எது?''

''காஃபிக்கெல்லாம் தேங்க்ஸ் சொல்றது தான்.''

''அசடு, நான் சொன்ன தேங்க்ஸ் உங்கண்ணாவ வந்த சொன்னதுக்கு.''

''ம், உங்க வீட்டுக்காரரன்னு கூடச் சொல்லலாம்.''

''நீ கூப்புட தான வந்திருக்கார். அப்ப நான் சொல்றது தான சரி...''

''எப்படியும் அவர் வந்தது உங்களுக்காகதான?'' என்றவள் ''அதுவும் நான் சொன்னதக் கேட்டு எப்பிடிப் பதறிப் போய்ட்டார் தெரியுமா அண்ணி. குறைஞ்சது அர மணி நேரமில்லாம கம்பெனில இருந்து இங்க வர முடியாது. ஆனால் பதினஞ்சு நிமிஷத்துல வந்திருக்கார்னாப் பாருங்க'' என்றாள்.

''உங்க மேல உயிரையே வெச்சிருக்கார் அண்ணி. ஆனா என்ன அவர் ஸ்டைல்ல உருட்டல் மிரட்டலா தான் அத வெளிப்படுத்துவார். எனவே என்ஜாய்'' என்று கண்ணடித்துச் சிரித்தாள்.

லாவண்யாவின் கேலியில் ''ம் அப்புறம்?'' என்று விளையாட்டுக்கு அதட்டியவள், வலியில் முகம் சுளித்தாள்.

''ரொம்ப வலிக்குதா அண்ணி?''

''இல்ல குளுகுளுன்னு இருக்கு'' என்று வலியை ஒதுக்கி சிரிக்க முயன்றாள் ஸ்வேதா.

''அவர் காஃபி சாப்புட்லயா?''

''ம்கூம், வேண்டாம்னு சொல்லிட்டார்'' என்ற லாவண்யா தன்னுடைய டம்ளருடன் ஸ்வேதா குடித்து முடித்த டம்ளரையும் வாங்கிக் கொண்டு போய் குப்பை பேஸினில் போட்டுவிட்டு வந்தாள்.

சில வினாடிகளில் பேசி முடித்து மொபைலைப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டே காரை நோக்கி வந்தான் ஜெயவர்த்தன்.



வந்தவன் ''கிளம்பலாமா?'' என்று மெதுவாக ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டே காருக்குள் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்தான்.

கணவனின் அருகாமையை மனதிற்குள் மிகவும் ரசித்தாள் ஸ்வேதா.

ஸ்டியரிங்கைப் பிடித்திருக்கும் அவனுடைய வலிய கரங்கள் தன்னை அணைத்துக் கொண்டால் எப்படியிருக்குமென்று நினைத்தவளுக்கு அதற்காக மனம் ஏங்கத் தொடங்கி விட்டிருந்தது.

சரியாக அதேநேரம் தானும் மனைவியைத் திரும்பிப் பார்த்த ஜெயவர்த்தனுக்கு ஏக்கம் நிறைந்த அவளுடைய பார்வை கண்களில் பட்டது.

ஆனாலும் அதைக் கண்டும் காணாதது போலப் பாதையில் கவனமாகக் காரைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான்.

சரியாக ஒரு மணி நேரத்தில் மூவரும் வீடு வந்து சேர்ந்திருந்தனர்.

கார் வந்து நின்றதும் வாசலில் இருந்து இறங்கி பதட்டத்துடன் காருக்கு அருகிலேயே வந்திருந்தார் காஞ்சனா.

''என்னடாம்மா, என்னாச்சு...''

மனைவியை நோக்கி வந்த தாயைப் பார்த்த ஜெயவர்த்தன் ''ஒன்னுமில்லமா'' என்று விஷயத்தைச் சொன்னான்.

''ஐயோ ஒன்னுமில்லேன்னு சொல்றியேடா வெறும் ஆளா இருந்தாக் கூடப் பரவாயில்ல...'' என்று தானும் வந்து மகளுக்கு உதவியாக ஸ்வேதாவை ஒரு கை பிடித்துக் கொண்டார்.

அவர்கள் இருவருடைய உதவியுடனும் தொடர்ந்து சில நிமிடங்களில் தங்களுடைய அறைக்கு வந்திருந்தாள் ஸ்வேதா.

''சரிடாம்மா பேசாம படுத்துக்கோ'' என்று அத்தை சொல்ல ''டிஃபன மட்டும் கொஞ்சமாப் போதும் அத்தை லாவண்யா கிட்டக் குடுத்தனுப்பிடுங்க'' என்று படுக்கையில் அமர்ந்து பிறகு மெதுவாகப் படுத்துக் கொண்டாள்.

''டிஃபன் மட்டுமில்ல கண்ணம்மா, வேற என்ன வேணும்னாலும் ஒரு குரல் மட்டும் குடு போதும் குடுத்தனுப்பறேன்'' என்று விட்டுப் போனார் காஞ்சனா.

படுத்தவள் தான், அடித்துப் போட்டது போல நன்றாக உறங்கி விட்டிருந்தாள்.

மீண்டும் விழித்து எழுந்த போது இரவு மணி ஒன்பதாகியிருந்தது தெரிந்தது.

இவ்வளவு நேரமா உறங்கி விட்டோமென்று ஆச்சரியத்துடன் நினைத்துக் கொண்டே திரும்பினாள்.

கணவன் அவனுடைய டேபிளில் அமர்ந்து ஏதோ ஆஃபீஸ் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

பசி வயிற்றைக் கிள்ளியது.

மீண்டும் திரும்பிப் பார்த்தவளுக்கு அருகில் இருந்த டீபாயின் மேல் அனைத்தும் தயாராக ஹாட் பாக்ஸில் சூடாக வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. ஸ்பூன், அதற்கு மேல் வேண்டுமானாலும் கை கழுவத் தண்ணீர், அதற்கும் ஒரு கிண்ணம் உட்பட அனைத்தும்.

கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த ப்ளேட்டை எடுத்து டிஃபனை பரிமாறிக் கொண்டு



காலில் வலி முன்னைக்கு இப்பொழுது மிகவும் அதிகமாகியிருந்தது தெரிந்தது.

அத்தையின் கைப்பக்குவத்தை முடிந்த அளவு ருசித்து உண்டவளுக்கு வழக்கம் போல முடியவில்லை.

முடிந்த அளவு சாப்பிட்டவள், பிறகு அப்படியே வைத்து விட்டிருந்தாள்.

ஃப்ளாஸ்க்கில் இருந்த சுடுநீரைக் கொஞ்சம் டம்ளரில் ஊற்றிக் குடித்தவள், சேலையிலிருந்து இரவு உடைக்கு மாறிக் கொண்டு அப்படியே பாத்ரூமிற்கும் சென்று வந்து விடலாமென்று படுக்கையை விட்டு இறங்கினாள்.

அப்படியே படுக்கையைப் பிடித்துக் கொண்டே சிரமப்பட்டு நடந்து சென்றவள் பிறகு தொடர்ந்து சுவரைப் பிடித்துக் கொண்டு அருகில் இருக்கும் அறைக்குள் சென்றிருந்தாள்.

சென்றவள் உள்ளாடைகளைத் தவிர மற்ற ஆடைகளைக் களைந்து விட்டு அங்கு மர அலமாரியில் வைக்கப்பட்டிருந்த இரவு உடையை எடுத்தாள்.

சரியாக அதே நேரம் ''ஏதாவது ஹெல்ப் வேணுமா?'' என்று அறைக்கு வெளியே மிக அருகில் கேட்ட கணவனின் குரலில் கையிலிருந்த இரவு உடையைத் தவற விட்டாள்.

மீண்டும் அதைக் குனிந்து எடுக்கக் கூட அவளால் முடிந்திருக்கவில்லை.

அதற்குள் உள்ளேயே வந்திருந்த கணவனை செய்வதறியாது பார்த்தாள் ஸ்வேதா.

அதிலும் தான் அப்பொழுது இருந்த நிலையில் மிகவும் ஒரு மாதிரியாகி விட்டிருக்க, உள்ளம் படபடக்க அப்படியே குனிந்து கொண்டாள்.

அதற்குள் மனைவியின் அருகிலேயே வந்திருந்த ஜெயவர்த்தன், அவளுடைய முகவாயைப் பிடித்து நிமிர்த்தினான்.

எங்கே வலித்து விடுமோ என்பதைப் போல மிகவும் மென்மையாகத் தான்.

அவ்வளவுதான், அதற்கு மேல் அவனாலும் முடிந்திருக்கவில்லை.

மனைவியை அருகில் இழுத்துத் தனது மார்போடு அணைத்துக் கொண்டான்.

ஜெயவர்த்தனின் நிலையே அப்படியிருக்க, ஸ்வேதாவின் நிலை பற்றியோ கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

அப்படியே கணவனின் அணைப்பிற்குள் காணாமல் போயிருந்தாள்.

ஆனால் சில வினாடிகளில் தன்னிலை உணர்ந்திருந்த ஜெயவர்த்தனுக்கு மனைவியின் அப்போதைய நிலை நினைவிற்கு வர குனிந்து இரவு உடையை எடுத்து மனைவியின் கையில் கொடுத்தான்.

ஆனால் இயல்பாக நிற்கவே தள்ளாடிய அவளுடைய நிலை புரிய, அவள் வேண்டாமென்று செய்கையால் மறுத்ததைக் கண்டு கொள்ளாமல் தானே அணிவித்து விட்டான்.

"என்ன..."

"பாத்ரூம் போகணும்..." என்று மெல்லிய குரலில் சொன்னவளைத் தானே கைகளில் ஏந்திக் கொண்டு போய் விட்டிருந்தான் ஜெயவர்த்தன்.

விட்டிருந்தவனுக்கு மனைவியின் பார்வை தன்னை வெளியேறச் சொல்வது புரிந்தது.



சரிதானென்று வெளியே வந்திருந்தவன் "காலில தண்ணி படக் கூடாது" என்று மனைவிக்குக் கேட்குமளவு ஒலியில் அக்கறையுடன் சொன்னான்.

தொடர்ந்து சில நிமிடங்களில் சுவரைப் பிடித்துக் கொண்டு மனைவி மெதுவாக வெளியே வர, மீண்டும் கைகளில் ஏந்திக் கொண்டு போய்ப் படுக்கையில் விட்டிருந்தான்.

விட்டவனால் மனைவியை விட்டு விலக முடிந்திருக்கவில்லை.

கணவனின் நிலை புரிய தானும் அவனை இறுக அணைத்துக் கொண்டாள் ஸ்வேதா.

ஒருவிதக் கிரக்கத்தில் நடுங்கிய மனைவியின் இதழ்களை தனது இதழ்களால் சிறைபிடித்திருந்தான் ஜெயவர்த்தன்.

கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து அப்படியே கணவனின் கைகளில் முற்றிலுமாகத் தன்னை இழந்திருந்தாள் ஸ்வேதா.

அந்த நேரத்தில் தான் அது நடந்திருந்தது.

ஏதோ தோன்றியவனாக மனைவியை விட்டு விலகியிருந்தான் ஜெயவர்த்தன்.

மனைவிக்காக ஏங்கித் துடித்த மனதை மனசாட்சியே இல்லாமல் அடக்கினான்.

முதலில் ஒன்றும் தெரியாவிட்டாலும் பிறகு வித்யாசம் உணர்ந்து மனமே இல்லாமல் கண்களைத் திறந்து பார்த்த மனைவியிடம் "ஸாரி" என்று விட்டு எழுந்திருந்தான்.

முதலில் ஒன்றும் புரியாவிட்டாலும் பிறகு புரிய, கணவனின் அந்த ஒற்றை வார்த்தை பல்லாயிரக்கணக்

கான ஆணிகள் ஒருசேர நெஞ்சைக் குத்திக் கிழிப்பதைப் போன்றதொரு வலியைக் கொடுத்திருந்ததில் அப்படியே துடித்துப் போனாள்.

ஏன் அதற்குள் என்ன ஆயிற்று.

முழுமையாகப் புரியா விட்டாலும் கொஞ்சம் புரிவதைப் போலிருந்தது.

ஆனாலும் அதை ஒப்புக் கொள்ள மனம் மறுத்தது.

கணவனுக்காக மனம் ஏங்கித் துடித்தது.

வேறு எதற்காக இல்லா விட்டாலும், அவனுடைய அணைப்புக்காக, அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கவலைகளை மறந்து தூங்க வேண்டும் போல வெகு தீவிரமாகத் தோன்றிய எண்ணத்தில் செய்வதறியாது துடித்தாள்.

மனைவியின் நிலை ஜெயவர்த்தனுக்கும் புரிந்தது.

அது முழுமையாகப் புரிந்த காரணத்தினாலேயே மனைவியை விட்டு விலகியிருந்தான் என்று கூடச் சொல்லலாம்.

அவளுடைய வேதனை மனதைச் சுட அவனாலும் நிம்மதியாக உறங்க முடிந்திருக்கவில்லை.

சிறிது நேரம் சென்றிருக்க மனைவியின் அழைப்பில் திரும்பிப் பார்த்தான்.

''ஃபேன் வேண்டாம்.''

மனைவியின் வார்த்தைகளில் எழுந்து சென்று ஃபேனை ஆஃப் செய்திருந்தான்.

''தண்ணி வேணும்...''

மனைவி கேட்க அருகில் சென்று தண்ணீரைத் தேடினான்.



''ஃப்ளாஸ்க்ல இருக்கு...'' என்றவளின் வார்த்தைகளில் எடுத்து டம்ளரில் ஊற்றிக் கொடுத்தான்.

டம்ளரை மனைவியின் கையில் கொடுத்தவனுக்கு அப்பொழுது தான் அது தெரிந்தது.

அவளுடைய உடல் காய்ச்சலில் தீயாய்க் கொதித்துக் கொண்டிருந்தது.

''ஸ்வேதா இங்க பாரு...'' என்று அருகில் அமர்ந்து நெற்றியைக் கன்னக் கதுப்பைத் தொட்டுப் பார்த்தான்.

சந்தேகமே இல்லை நல்ல காய்ச்சல் தான்.

டம்ளரை இரண்டு கைகளாலும் இறுகப் பிடித்து சில வாய்த் தண்ணீரைக் குடித்த ஸ்வேதா மீண்டும் டம்ளரைக் கணவனிடம் கொடுத்தாள்.

''சரி படுத்துக்கோ'' என்று எழுந்திருந்த கணவனின் கையைப் பிடித்திருந்தவள், என்னவென்பதைப் போலப் பார்த்தவனிடம் ''எம் பக்கத்துலயே இருங்க ப்ளீஸ்...'' என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

எதுவும் பேசாமல் சில வினாடிகள் பார்த்தவன், மீண்டும் பழையபடி மனைவியின் அருகில் அமர்ந்து கொண்டான்.

அப்படி அமர்ந்திருந்த கணவனைத் தன் அருகில் இழுத்து அவனுடைய மடியில் தலை வைத்துப் படுக்கப் போனாள் ஸ்வேதா.

ஆனால் அதற்குள் தீப்பட்டாற் போல எழுந்து விட்டிருந்தான் ஜெயவர்த்தன்.

அப்படி எழுந்திருந்ததோடு மட்டுமல்லாமல் ''நீ எதிர்பாக்கறது என்கிட்டக் கிடைக்காது அதுக்கு வேற ஆளப் பாரு'' என்று சென்று விட்டிருந்தான்.

யோசிக்காமல் அப்படி சொல்லி விட்டு வந்திருந்தவனுக்கு அதற்குப் பிறகோ ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

என்னதான் கோபமென்றாலும் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லி விட்டோமே என்று மனதிற்குள் கூனிக் குறுகிப் போனான்.

அவன் மீது அவனுக்கே மிகுந்த வெறுப்பாகி விட்டிருந்தது. காய்ச்சலும் வலியுமாகத் துடித்துக் கொண்டிருந்தவளிடம் என்ன வார்த்தை சொல்லி விட்டோம் என்றிருந்தது.

சற்றும் நிலை கொள்ளாமல் தவித்தான்.

தான் ஏன் இப்படியாகி விட்டோமென்று அவனுக்கே புரிந்திருக்கவில்லை.

காரை எடுத்துக் கொண்டு கம்பெனிக்குச் சென்றிருந்தான்.

மனைவி காய்ச்சலில் தவித்துக் கொண்டிருந்ததில் மனம் கேளாமல் போனை எடுத்துத் தாய்க்கு அழைத்திருந்தான்.

உடனே திரும்பி விடலாமென்று தான் ஒரு வேலையாகக் கம்பெனிக்கு வந்தேன். ஆனால் இன்னும் வேலை முடியவில்லை. நான் வரும் போதே ஸ்வேதாவிற்குக் காய்ச்சல் கொதித்துக் கொண்டிருந்தது எதற்கும் சென்று பார்த்துக் கொள்ளுங்களென்று போனை வைத்திருந்தான்.

என்னதான் தாயை அழைத்து சொல்லியிருந்தாலும் ஜெயவர்த்தனின் மனசாட்சி அவனை நிம்மதியாக இருக்க விட்டிருக்கவில்லை.

இரவெல்லாம் பொட்டுக் கண் மூடாமல் குற்ற உணர்வுடன் தவித்தான்.

பாவம் ஏற்கனவே முடியாமல் இருந்தவளிடம் போய்த் தான் அப்படி நடந்து கொண்டது மட்டுமல்லாமல்



அதற்கு மேலும் என்ன வார்த்தை சொல்லி விட்டோம் என்றிருந்தது.

என்னதான் அவளும் ஒரு தவறைச் செய்திருந்தாலும் அதை மனதில் வைத்துக் கொண்டு தினம் தினம் ஏதோ ஒரு வகையில் தான் அவளை வதைப்பது நியாயமா.

அதெப்படி செய்தாளென்று இறந்த காலத்தில் சொல்லி விட முடியும்.

இப்பொழுதும் தானே தன்னையும், சுமிதாவையும் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

அப்படி நினைத்துக் கொண்டு தான் இருக்கிறாளென்பது நிச்சயமா.

மனசாட்சியின் அந்தக் கேள்வியில சில வினாடிகள் யோசிக்கத் தான் வேண்டியிருந்தது.

ஆனால் அடுத்த வினாடியே பின்னே, அதிலென்ன சந்தேகம் என்றிருந்தான்.

அதைத்தான் மனைவி தனது வாயாலேயே ஒப்புக் கொண்டாளே.

ஒருவேளை தான் அப்படிச் சொன்னது தவறு என்பதை மட்டும் உணர்ந்திருந்தால் இந்நேரம் அதற்காக தன்னிடம் வருந்திருக்க வேண்டுமே.

ஏன் மனைவியின் குணத்திற்கும் அவள் செய்தது தவறு என்பதை மட்டும் உணர்ந்து விட்டால் மன்னிப்புக் கேட்கக் கூடத் தயங்க மாட்டாளே.

இப்படியே யோசித்துக் கொண்டு போன ஜெயவர்த்தனால் என்ன முயன்றும் மனதை சமாதானப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

இருதலைக் கொல்லி எறும்பாகத் தவித்தான்.

## 54

''அம்மா.''

''வா லாவண்யா.''

''காஃபி வேணும்.''

''என்ன இந்த நேரத்துக்கே எழுந்துட்ட?''

''ஆமாம்மா, படிக்க வேண்டியது நிறைய இருந்தது. சீக்கிரம் குடுங்க போய்ப் படிக்கணும்.''

''பொறு, ரெண்டு நிமிஷமாவது இல்லாம எப்பிடிக் குடுக்க முடியும்?''

''சரி சரி வெயிட் பண்றேன் மெதுவாவே குடுங்க, அண்ணி...''

''ம் என்ன?''

''இல்ல அண்ணிக்குக் கால் எப்பிடியிருக்குன்னு தெரியல.''

''ம், இப்பக் கேளு...''

''என்னமா கோபமா இருக்கீங்க?''

''பின்ன, கார் ஓட்டவெல்லாம் வீட்ல எத்தன ஆம்பளைங்க இல்ல, கேட்டிருந்தா ஆளுக்குக் கொஞ்ச நேரம் சொல்லிக் குடுத்திருக்கப் போறாங்க அத விட்டுட்டு...''

''என்னமா இப்படி டென்ஷ..''

''நீ பேசாத லாவண்யா'' என்ற காஞ்சனாவால் தனது ஆதங்கத்தைத் துளியும் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

மகன் தான் கண்மூடித்தனமாகக் கோபப்படுகிறான் என்றால் இவள் வேறு என்றிருந்தது.



பாவம் அந்தப் பெண் ஸ்வேதா.

பூ மாதிரி என்ன மென்மையான பெண். குரங்கு கையில் கொடுக்கப்பட்ட பூமாலையைப் போல மகனிடம் சிக்கிக் கொண்டு சீரழிகிறாள். போதாக்குறைக்கு இவள் வேறு.

இந்த மாதிரி கொடுமைகளையெல்லாம் முன்பின் நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டாள் பாவம்...

''சீக்கிரம் குடுங்கமா.''

''கொஞ்சம் நேரமாகும், பொறுத்தாப் பொறு இல்லன்னா போய்ட்டு அப்புறமா வா.''

''என்னமா இன்னைக்குக் காலைலயே இவ்வளவு கோபமா இருக்கீங்க?''

மகளின் குரலில் தெரிந்த வருத்தம் காஞ்சனாவை சற்று இயல்பு நிலைக்கு வரவழைத்திருந்தது.

''என்ன பண்றதுமா, வேற யார்கிட்டயும் பேச முடியல. அதுக்குப் பாவம் நீயென்ன பண்ணுவ?''

''ஏம்மா அண்ணிக்கு...''

''அவளுக்கு நைட்டெல்லாம் சரியான காய்ச்சல், கொஞ்ச நேரங் கூடத் தூங்கல.''

''அச்சச்சோ...''

''அது மட்டும்னாக் கூடப் பரவாயில்ல. கால் வலில அதவிடத் துடிச்சுப் போய்ட்டா. பின்ன அந்த ஆணி சல்லட மாதிரி துளைச்சிருக்கு என்னாகும்.''

''அப்புறம் என்னமா செஞ்சீங்க?''

''என்ன செய்ய முடியும். இந்த மாதிரி சமயத்துல வலி மாத்திரையும் எடுத்துக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லிட்டாரே வலியப் பொறுத்துகிட்டு தான ஆகணும்.''

''இப்பக் காய்ச்சல் எப்பிடியிருக்கு?''

''பரவாயில்ல. கை வைத்தியத்துக்கே அது ஓரளவு கேட்டுச்சு. ஆனா வலிக்கு தான் ஒன்னும் பண்ண முடியல. கைகட்டி நின்னு பாக்க வேண்டியதாயிடுச்சு.''

''நைட்டெல்லாம் தூங்கவே இல்லையா?''

''ம்கூம் இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் கண் அசந்திருக்கா. தூங்கட்டும் பாவம்.''

''நான் வேணும்...''

''வேண்டாம்மா போய் எழுப்பி விட்றாத. அவளாவே கண் முழிக்கட்டும்.''

''சரிமா.''

''இந்தா காபி எடுத்துக்கோ'' என்று தாய் கொடுத்ததை வாங்கிக் கொண்டாள் லாவண்யா.

''அண்ணாமா?''

''ம், என்ன?''

''இல்ல அண்ணாவும் தூங்கியிருக்க மாட்டார் இல்லையா?''

அவனைப் பற்றி யாருக்குத் தெரியும் என்று ஆதங்கத்துடன் நினைத்துக் கொண்டவர் அதை இந்த சிறு பெண்ணிடம் காட்ட மனமின்றி ''உங்கண்ணா ஏதோ முக்கியமான வேலைன்னு நைட்டே கம்பெனிக்குக் கிளம்பிப் போனது தான் இன்னும் வரல'' என்றார்.

''பாவம் அண்ணி, இப்பிடியானதுக்கு நாந்தான் காரணம்..'' என்று மகள் புலம்பியபடி செல்வது கேட்டது.

என்ன முயன்றும் மகனின் மேலிருக்கும் ஆதங்கம் சற்றும் குறைந்திருக்கவில்லை காஞ்சனாவிற்கு.

நேற்று ஒரு நாளாவது வேலையை விட்டுவிட்டு அவன் வீட்டிலிருந்திருந்தால் மருமகள் அவ்வளவு



வேதனைப் பட்டிருக்க மாட்டாளோ என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் அவனிடம் யார் பேசுவது.

சாதாரணமாக என்றாலும் பரவாயில்லை. தான் ஒன்று கேட்கப் போய் அதற்கு அவன் ஏதாவது சொல்லி விட்டால் இப்பொழுது ஸ்வேதா இருக்கும் நிலைக்கு சுத்தமாகத் தாங்கிக் கொள்ள மாட்டாள்.

ஏன் இன்னும் அதிகமாகத் துடித்துப் போவாளே என்று நினைத்துக் கொண்டவர், மகன் வந்தால் ஒரு வார்த்தையாவது கேட்காமல் விடக் கூடாது என்று நினைத்திருந்த எண்ணத்தைக் கை விட்டிருந்தார்.

காலை டிபன் வேலையை மட்டும் முடித்துக் கொண்டு சத்தம் செய்யாமல் ஸ்வேதாவின் அறையை எட்டிப் பார்த்தார் காஞ்சனா.

அவள் விழித்துக் கொண்டு படுத்திருந்தது தெரிய ''என்னடாம்மா எப்ப எழுந்த?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் சென்றார்.

''இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் அத்தெ.''

''சரிதான், கூப்புட்டிருக்கலாமே கண்ணம்மா.''

''ஸாரி அத்தெ.''

''எதுக்குமா?''

''நைட்டெல்லாம் என்னால நீங்களும் தூங்கவே இல்ல.''

''அதுசரி, எனக்கென்னமா?, நீ இப்ப இருக்கற நிலமைல என்ன பாடு பட்டுட்ட போ...'' என்று பேசிக் கொண்டே ஸ்வேதாவின் கழுத்திற்குக் கீழ் தொட்டுப் பார்த்தார்.

''காய்ச்சல் நல்லாவே குறைஞ்சுடுச்சு வலி எப்பிடியிருக்கு ஸ்வேதாம்மா?''

''பரவாயில்ல அத்தெ.''

''சரி அப்பிடியே மெதுவா எழுந்துக்கோ பாக்கலாம். ஒரு கை புடிக்கறேன் போய் பல் துலககிட்டு பாத்ரூம் போய்ட்டு வந்துடு.''

''அப்புறமா அத்தெ...''

''இல்லடாம்மா, முதல்ல ஏதாவது கொஞ்சமாவது சாப்டுட்டு அப்புறம் காபி குடி.''

''நீங்க விடுங்க அத்தெ நானே மெதுவா நடந்து பாக்க றேன்'' என்று எழுந்தவள்தான் தலை எங்கோ பறக்க கை காலும் ஒத்துழைக்காததில் மீண்டும் படுக்கையில் விழுந்தாள்.

''பாரு இதுக்கு தான் சொன்னேன். உடம்புல என்ன பலமிருக்குன்னு நடக்கப் போற'' என்றவர் ஒரு கை பிடித்துக் கொள்ள அந்தப் பலத்தில் சுவரையும் ஒரு கை பிடித்துக் கொண்டு மெதுவாக நடந்தாள் ஸ்வேதா.

சில நிமிடங்களில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அத்தையின் உதவியுடனேயே படுக்கைக்கும் வந்திருந்தாள்.

அத்தையின் அதட்டலில் ருசி பார்க்காது இரண்டு இட்லிகளை உண்டவள், அப்படியே கைகளைக் கழுவிக் கொண்டு மீண்டும் படுத்துக் கொண்டாள்.

''சரிடாம்மா படுத்துட்டிரு. கொஞ்ச நேரம் கழிச்சு காபி எடுத்துட்டு வர்றேன்'' என்றவளிடம் ''மெதுவாவே வாங்க அத்தெ'' என்றாள்.

சற்றே தெம்பு வந்திருக்க, மனம் நடந்ததனைத்தையும் அசை போட்டது.

முக்கியமாகக் கணவன் இரவு நடந்து கொண்டது தான் எடுத்ததும் நினைவிற்கு வந்தது.



அவன் சொன்ன வார்த்தைகளில் அப்பொழுது போல மீண்டுமொரு முறை உடல் சிலிர்த்துப் போனவள், கண்களினோரம் ஈரம் உணர்ந்து துடைத்துக் கொண்டாள்.

எப்படிப்பட்ட வார்த்தைகள்.

''அதற்கு வேறு ஆளைப் பார்'' நினைக்க, நினைக்க மனம் ஆற மறுத்தது.

அதை விடக் கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டுப் போயிருக்கலாமே.

அவன் கையில் சந்தோஷமாக உயிரை விட்டுவிட்டுப் போயிருக்கலாம்.

ஆனால் அவன்...

தன்னை எவ்வளவு கீழ்த்தரமாக எண்ணியிருந்தால் அப்படிப்பட்ட வார்த்தைகள் அவனுடைய வாயிலிருந்து வந்திருக்கும்.

கணவனே என்றாலும் தன்னை அப்படி எண்ணுவதா.

ஏன் அவனாகத் தானே அருகில் வந்தான்.

அதிலும் தன் பேதை மனம் எப்பொழுதும் அவனுடைய காலடியில் தான் என்பதும் அவன் அறியாதது அல்லவா.

அப்படியிருக்க ஏன் இப்படி...

ஒருவேளை அதனால் தான் ஏளனமோ.

அது தெரிந்ததால் தான் கர்வமோ.

அது எப்படி அந்த மாதிரி...

வேண்டாம் மனமே வேண்டாம்.

யோசிக்காதே.

கணவன் என்ன நினைத்துக் கொண்டாலும் என் எப்படி நடந்து கொண்டாலும் தன்னுடைய அன்பு தூய்மையானது.

அது அவனுக்குப் புரியாததால் மட்டும் அப்படி இல்லையென்று ஆகி விடாது.

ஏனோ மனம் வெறுத்துப் போயிற்று ஸ்வேதாவிற்கு. எவ்வளவுக்கு எவ்வளவு கணவனுக்காக ஏங்கினாளோ இப்பொழுது அதே அளவிற்கு வெறுப்பும் வேதனையும் வந்து குடி கொண்டிருந்தன.

சரிதான்.

இத்தனை நாளும் அவன் தனக்கு என்ன கொடுத்தானோ பதிலுக்கு அதையே திருப்பிக் கொடுக்கப் போகிறோம் வேறென்ன என்று விரக்தியுடன் சிரித்துக் கொண்டாள்.

''ஸ்வேதாம்மா.''

''வாங் அத்தெ.''

''இந்தாம்மா எடுத்துக்கோ'' என்று அத்தை கொடுத்த காபியை மெதுவாக எழுந்து அமர்ந்து வாங்கிக் கொண்டாள்.

''என்னமா?''

ஸ்வேதா ஏதோ கேட்க வருவது புரிய அருகில் அமர்ந்து என்னவென்று கேட்டார்.

''நான்...''

''ம்.''

''நான் ஊருக்குப் போய்ட்டு வரட்டுமா அத்தெ?''

''இப்ப இருக்கற நிலமைல வேண்டாமே கண்ணம்மா. வேணும்னா ஒன்னு செய் ஒரளவு சரியானதும் போவியாம் சரியா?''

''அதுக்குன்னும் நாளாகுமே அத்தெ...''

''அதென்னமா இன்னுமொரு வாரம் கண்மூடித் திறக்கறதுக்குள்ள போயிடும்...''



அத்தையின் வார்த்தைகளில் அவளையறியாமலேயே சரியென்றிருந்தாள் ஸ்வேதா.

கணவனைப் பற்றிக் கேட்கத் தோன்றிய எண்ணத்தைத் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டாள்.

தன்னைப் பற்றி ஏதாவது கேட்டானா என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் போலிருக்க, முயன்று மனதை திசை திருப்பிக் கொண்டாள்.

மேலும் ஒரு வாரம் ஓடிப் போயிருந்தது.

ஸ்வேதா பெருமளவு தேறியிருந்தாள்.

இடையில் இரண்டு நாட்கள் கல்லூரி விடுமுறையென்று லாவண்யாவும் உடனிருக்க சற்றுப் பரவாயில்லாமல் உணர்ந்தாள்.

இதெல்லாம் இப்படியிருக்க கடந்த ஒரு வாரமாக ஜெயவர்த்தன் மனைவியின் கண்களில் கூடப் பட்டிருக்கவில்லை.

அதற்கு மேல் தான் இருக்கும் இடங்களுக்கு வர நேர்ந்து விட்டாலும் இயன்ற அளவு முகத்திற்கு நேராகப் பார்ப்பதைக் கணவன் தவிர்த்துக் கொண்டிருப்பது ஸ்வேதாவிற்கும் புரிந்தது.

சரிதான்.

அன்று அவன் பேசிய வார்த்தைகளுக்குத் தனது முகத்தில் விழிக்கக் கூட வெட்கமாக உணர்கிறான் போலிருக்கிறதென்று ஏளனத்துடன் நினைக்கத் தோன்றியது.

ஏன் உண்மையும் அதுவே.

யோசிக்காமல் பேசுவது ஜெயவர்த்தனுடைய இயல்பு அல்லவென்றாலும் அன்று ஏன் அப்படிப்பட்ட வார்த்தைகளை சொன்னானென்று இதுவரை அவனுக்கும் புரிந்திருக்கவில்லை.

அதைப் பற்றி நினைக்காமல் இருந்து விட எவ்வளவோ முயன்றான்.

அதற்கு மேல் நினைக்க நேர்ந்தாலும் குற்ற உணர்வில் வழக்கம் போலக் குறுகிப் போனான்.

கூட்டிக் கழித்துப் பார்த்ததில் அது ஸ்வேதாவிற்கும் புரிந்தது.

ஏதோ இந்த அளவிற்கேனும் மனிதனாக இருக்கிறானே என்று ஏளனத்துடன் நினைத்துக் கொண்டாள்.

''அண்ணி.''

''வா லாவண்யா.''

''என்ன பண்ணிட்டிருக்கீங்க?''

''ஸ்டோரி புக் தான். இண்ட்ரஸ்டிங்கா போயிட்டிருக்கு. வா உக்காரு.''

''ம்கூம் நான் கிளம்பணும்.''

''எங்க?''

''சொன்னா அப்புறம் உங்களுக்குக் கஷ்டமா இருக்குமே...''

''ஏன், எனக்கேன் கஷ்டமா இருக்கப் போகுது?''

''பின்ன நீங்க வர முடியாதே, முக்கியமா அம்மா உங்கள அனுப்ப மாட்டாங்களே...'' என்று மகள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்த காஞ்சனா ''என்ன அளந்துட்டிருக்க. உன்ன மட்டும் இங்க யார் போக விடப் போறாங்க?'' என்றார்.

''அம்மா... ப்ளீஷ்மா...''

''பேசாம இரு லாவண்யா.''

''என்ன அத்தெ, என்...''

''நானே சொல்றேன் அண்ணி. நான் சர்க்கஸ்க்கு போகப் போறேன்...'' என்ற மகளை இடைமறித்த காஞ்சனா ''அதெல்லாம் ஒன்னுமில்லமா'' என்றார்.



''ம்கூம், நான் போகத் தான் போறேன்.''

''வாய் மேலயே ரெண்டு போடுவேன்'' என்ற மனைவியின் வார்த்தைகளில் ''ஏன் குழந்தயத் திட்டிட்டிருக்க?'' என்று வந்தார் ராஜேந்திரன்.

''ம், அப்பிடிக் கேளுங்கப்பா.''

''பின்ன திட்டாம அவ சொல்றதுக்கு கொஞ்சவா முடியும்?''

அதற்குள் லாவண்யா தந்தையிடம் விஷயத்தை சொல்லியிருக்க அவரும் ''ஏன் இதுல என்ன இருக்கு. போய்ட்டு வரட்டுமே'' என்றார்.

''அதான.''

''என்ன அதான? ஒன்னும் வேண்டாம்...''

''நீ பேசா இரு காஞ்சனா. நான் வேணும்னா கொண்டு போய் விட்டுட்டு வர்றேன். முடிஞ்சதும் கூப்புடுங்க நானே வந்து அழைச்சுட்டு வர்றேன்.

''வாவ், தேங்க்யூ டாடி தேங்க்யூ.''

''வாங்க அண்ணி போலாம்.''

''நானுமா?!''

''பின்ன அப்பா பன்மைல சொன்னாரே. நம் ரெண்டு பேரையும் சேத்து தான்'' என்று ஸ்வேதாவின் காதில் இரகசியம் போல சொன்னவள் ''ஒருவேள உங்களுக்கு சாகஸ்ஸெல்லாம் பிடிக்காதோ?'' என்று ஏமாற்றத்துடன் கேட்டாள்.

''யார் சொன்னது. எனக்கும் ரொம்பப் பிடிக்குமாக்கும்.''

''சும்மா சொல்லாதீங்க அண்ணி.''

''நிஜம். நான் சின்னப் பொண்ணா இருக்கும் போது மம்மி டாடி கூடப் போன ஞாபகம். அதுக்கப்புறம் போக சான்ஸே கிடைக்கல.''

"அதான் இப்பப் போகப் போறோமே. வாங்க வாங்க."

ஸ்வேதாவையும் லாவண்யாவின் உற்சாகம் பற்றிக் கொள்ள, அத்தையிடம் சென்று ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு வந்து கிளம்பத் தொடங்கி விட்டிருந்தாள்.

கணவனே சொல்லி விட்ட பிறகு, சரிதான் வீட்டில் போரடித்துக் கொண்டிருப்பதற்கு அப்படித்தான் போய் வரட்டுமே என்று அவரும் சந்தோஷமாக சம்மதித்து விட்டிருந்தார்.

ஆனாலும் "இது கிராமம் ஒரு அளவுக்கு தான் இருக்கும் ஸ்வேதாம்மா" என்ற அத்தையிடம் "சரிதான் அத்தெ, இப்பதான் விவரம் தெரிஞ்சதுக்கப்புறம் ஃபர்ஸ்ட் டைம் பாக்கப் போறேன் எப்பிடியிருந்தாலும் சரிதான்" என்று விட்டிருந்தாள்.

"ஆனாலும் அப்பிடியொன்னும் மோசமா இருக்காது அண்ணி. பக்கத்துத் தோட்டத்து ராதிகா போய்ட்டு வந்துட்டு சொன்னா" என்று நம்பிக்கையூட்டினாள் லாவண்யா.

வீட்டில் சும்மா உட்கார்ந்திருப்பதற்கு அது எப்படியிருந்தாலும் அதைப்பற்றி எனக்கு ஒன்றுமில்லை என்று நினைத்துக் கொண்ட ஸ்வேதா அதை வெளியே சொல்லவில்லை.

சொன்னது போல ராஜேந்திரன் தானே இருவரையும் காரில் அழைத்துச் சென்று விட்டுவிட்டு காட்சி தொடங்கியதும் கிளம்பி வந்திருந்தார்.

"என்னங்க... விட்டுட்டு வந்துட்டீங்களா?"

மனைவியின் பதட்டத்தைப் பார்த்து "என்னமா என்னாச்சு?" என்று காரை விட்டு இறங்கி வந்தார் ராஜேந்திரன்.

"பக்கத்துத் தோட்டத்துல செல்லமுத்து அண்ணனோட அப்பாவுக்கு திடீர்னு பேச்சு மூச்சு இல்லமப் போயிடுச்சாம். இப்பதான் போன் பண்ணினாங்க..."

"அப்பிடியா, என்ன சொன்னாங்க?"

"ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டுப் போகணும்னாங்க. அவங்க வீட்ல கார் இல்லையே..."

மனைவி சொல்ல வருவது புரிய "இதோ நான் போய்ப் பார்க்கறேன்" என்று காரை எடுத்துக் கொண்டு வினாடியில் கிளம்பி விட்டிருந்தார் ராஜேந்திரன்.

தானும் செல்ல வேண்டுமோ என்று நினைத்தவர் பிறகு வேண்டாமென்று விட்டிருந்தார்.

அதற்குள் பெரிய மகன் வந்திருக்க, அவனிடம் விஷயத்தைச் சொன்னார்.

"ஆஸ்ப்பத்திரிக்கு உங்கப்பா அழைச்சுட்டுப் போயிடுவார். நீ போய் ஸ்வேதாவையும் லாவண்யாவையும் மட்டும் அழைச்சுட்டு வந்தாப் போதும்.

"சரி போய்க்கறேன்."

"பத்மினி அம்மாவுக்கு இப்ப எப்பிடிப்பா இருக்கு?"

"பரவாயில்லையாம். ஆனாலும் ஒரு வாரம் கூட இருந்துட்டு வர்றேன்னாமா."

"சரிதான். உடம்பு நல்லாத் தேறினதுக்கப்புறமே கூட வரட்டும். அவ ஒரே பொண்ணாச்சே, அவங்களுக்கும் தான் வேற யாரு இருக்கா..."

"எதுக்கும் சர்க்கஸ் முடியப் போற நேரத்துக்கு ஞாபகப் படுத்துங்கமா."

"சரிப்பா சொல்றேன். நீ போய் கை கால் அலம்பிட்டு வா. டிபன் எடுத்து வைக்கறேன்" என்று உள்ளே வந்தார்.

ஆனால் சர்க்கஸ் முடியும் நேரத்திற்கு முன்பாகவே யாரோ தோழனைப் பார்க்க வேண்டுமென்று பெரிய மகன் கிளம்பிச் சென்று விட்டிருக்க, என்ன செய்வ தென்று தெரியாமல் திகைத்தார் காஞ்சனா.

ஒன்றைச் சொன்னால் மறக்காமல் செய்து முடிப்பதற் கெல்லாம் சிறியவன் ஜெயவர்த்தன் தானென்று நினைக் காமல் இருக்க முடியவில்லை.

அவனுக்கே அழைத்துப் பார்த்தால், அழைத்ததில் ''சரிதான் நானும் வீட்டுக்கு தான் வந்துட்டிருக்கேன். நானே அழைச்சுட்டு வந்துட்றேன்'' என்றவனின் பதிலில் மனம் நிம்மதியடைந்தார்.

அங்கெல்லாம் அதுவும் பெண்கள் இருவரை மட்டும் தனியாக எதற்காக அனுப்பினீகளென்று கோபம் கொள் வானோ என்று அஞ்சிக் கொண்டே அழைத்திருந்த வருக்கு அவன் அப்படியெல்லாம் எதுவும் கேட்டிருக் காததும் நிம்மதிக்கு ஒரு காரணம்.

ஆனாலும் அவன் விஷயத்தில் ஒன்றையுமே முடிவாகச் சொல்லி விட முடியாதே. வழியில் வைத்து எதற்கு வீட் டிற்குப் போய்ப் பேசிக் கொள்ளலாமென்று கூட வருவா னாய் இருக்குமென்று நினைத்துக் கொண்டார்.

## 55

ஜெயவர்த்தன் சர்க்கஸ் நடந்து கொண்டிருந்த கிரவுண்டை வந்தடைந்திருந்த போது இரவுக் காட்சி முடிந்து விட்டதென்றார்கள். அதற்கும் வேகமாகத் தான் வந்திருந்தான்.



உடனே தங்கைக்கு செல்போனில் அழைத்தான்.

''சரி அங்கேயே மெதுவாப் போயிட்டிருங்க வந்துட் றேன்'' என்றவன் மீண்டும் காரை ஸ்டார்ட் செய்திருந் தான்.

தங்கை லாவண்யா சொன்ன இடத்திற்கு சில வினாடி களில் வந்து சேர்ந்திருந்தவன், பெண்கள் இருவரையும் காணாது திகைத்தான்.

மீண்டும் தங்கைக்கு அழைத்தான்.

அடுத்த வினாடி மரத்திற்குப் பின்னாலிருந்து தங்கை யும் மனைவியும் வர, காரை அருகில் கொண்டு போய் நிறுத்தினான்.

அமாவாசை நாள் என்பதால், எங்கும் காரிருள் சூழ்ந்து கிடந்தது.

அண்ணனை அங்கு கண்டதும் தான் போன உயிர் திரும்பி வந்திருந்தது லாவண்யாவிற்கு.

''என்னாச்சு, ஏன் இவ்வளவு பதட்டமா இருக்க?''

அண்ணன் கேட்க திரும்பி அண்ணியைப் பார்த்தாள் லாவண்யா.

ஸ்வேதாவோ அது தான் முக்கியம் போல வேறு எங்கோ மும்முரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், கணவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.

''என்ன பேசு?''

''இல்லண்ணா... ரெண்டு காலிப் பசங்க நல்ல மப்பு வேற...''

சொல்லிக்கொண்டே இடையில் தனது மனைவியைப் பார்த்த தங்கையிடம் ''முழுங்காம சொல்லி முடி'' என்று எரிந்து விழுந்தான் ஜெயவர்த்தன்.

அண்ணனின் கோபத்தை லாவண்யாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் ஸ்வேதாவின் பார்வையோ ஆமாம் இதற்கெல்லாம் ஒன்றும் குறைவில்லை என்று கேட்பதைப் போலிருந்தது.

கூடவே மிகுந்த ஏளனமும்.

ஆனால் அப்பொழுது லாவண்யா இருந்த நிலைக்கு அதையெல்லாம் அவள் கவனித்திருக்கவில்லை.

லாவண்யா மட்டும் தான்.

நடந்தது இதுதான்.

காட்சி தொடங்கியதும் முடியும் போது வருகிறேனென்று விடைபெற்றுக் கொண்டு ராஜேந்திரன் கிளம்பியிருக்க, பெண்கள் இருவரும் முன்பக்கம் காலியாக இருந்த இருக்கையில் போய் அமர்ந்திருக்கிறார்கள்.

தொடக்கத்தில் யாரும் இல்லாவிட்டாலும் போகப்போக நிறையப் பேர் இவர்களைச் சுற்றியும் வந்து அமர்ந்திருக்கிறார்கள்.

அப்படி அமர்ந்தவர்களில் பெரும்பாலானோர் ஆண்கள் என்பதோடு, அதில் சிலர் நன்றாகக் குடித்து விட்டு வந்திருப்பதும் தெரிந்திருக்கிறது.

அப்படி வந்து அமர்ந்திருந்தவர்கள், முக்கியமாக அந்தத் தண்ணி பார்ட்டிகள் லாவண்யாவிடமும், ஸ்வேதாவிடமும் தங்களது கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள்.

அதாவது கொச்சையாக வாய்க்கு வந்ததையெல்லாம் பேசியிருக்கிறார்கள்.

கோபம் வந்தாலும் தொடக்கத்தில் பெண்கள் இருவரும் அவர்கள் பேசியதைக் கண்டு கொள்ளாததைப் போலக் காட்டிக் கொண்டிருந்திருக்கிறார்கள்.



அப்படி அவர்கள் இருந்ததாலேயே அந்தப் பொறுக்கிகளின் வார்த்தைகள் நீண்டு கொண்டே போயிருக்கிறது.

ஒரு கட்டத்தில் தாங்க முடியாமல் கோபத்துடன் தட்டிக் கேட்கப் போன ஸ்வேதாவை லாவண்யா தடுத்திருக்கிறாள்.

அதோடு மட்டுமல்லாமல், பெண்கள் நிறைய இருக்கும் இடத்திற்கு அண்ணியை அழைத்துக் கொண்டு போய் அவர்களிடம் கேட்டுக் கொண்டு அங்கு அமர்ந்திருக்கிறார்கள்.

அத்தோடு பிரச்சனை தீர்ந்ததென்று சர்க்கஸைப் பார்க்கும் ஆர்வத்தில் அதை மறந்தும் விட்டார்கள்.

ஆனால் அந்தத் தண்ணி வண்டிகளோ சர்க்கஸ் முடிந்து பெண்கள் இருவரும் தனியாகக் கிளம்புவதை சற்று தள்ளி நின்று கவனித்துக் கொண்டிருந்து விட்டுப் பின் தொடர்ந்து வந்திருக்கிறார்கள்.

சினிமாக் கதை போல சொல்லிக் கொண்டே வந்த தங்கை இடையில் நிறுத்தியிருக்க, கோபத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டபடி "ம் அப்புறம் என்ன நடந்தது?" என்று கேட்டான் ஜெயவர்த்தன்.

ஆனாலும் அந்தக் குரலில் இருந்த எரிச்சல் வெளிப்படையாகவே தெரிந்தது.

"சொல்லு லாவண்யா."

"அப்புறம் அவங்க பின்னாடி வந்துட்டிருக்கறது தெரிஞ்சு வேகமா நடந்தோம். ஆனாலும் என்னளவுக்கு ஸ்பீடா அண்ணியால நடக்க முடியல கால் இப்ப தான சரியாயிட்டு வருது..."

"விஷயத்துக்கு வா..." என்ற அண்ணனைத் தொடர்ந்து அண்ணியையும் ஒருமுறை பார்த்து விட்டு மீண்டும் சொல்லத் தொடங்கினாள் லாவண்யா.

"அதுல ஒருத்தன் அண்ணியோட... கையப் பிடிச்சிருக்கான். கோபத்துல அண்ணி அவன ஓங்கி அறஞ்சுட்டாங்க."

"பதிலுக்கு அவனுக்குக் கோபம் வந்து என்னயா அடிச்சேன்னு அண்ணியப் பிடிச்சு இழுத்துட்டான். அண்ணி கீழே விழறதுக்குள்ள நான் வந்து பிடிச்சுட்டேன்..." என்றவளின் குரல் இப்பொழுது விட்டால் அழுது விடுவாள் போலக் கரகரத்து விட்டிருக்க "இப்ப அவங்க எங்க?" என்று கேட்டிருந்தான் ஜெயவர்த்தன்.

அண்ணனின் குரலில் இப்பொழுது வெளிப்படையாகவே தெரிந்த கோபத்தில் நடுங்கி விட்டிருந்தாள் லாவண்யா.

"சரியா அந்த நேரத்துல தான் உங்க முதல் போன் வந்தது. அண்ணா வந்துட்டாங்க அண்ணி இனி நமக்கு கவலையில்ல இவனுங்க இன்னும் ரெண்டு நிமிஷம் இங்க நின்னுட்டிருந்தாக் கூட முடிஞ்சாங்கன்னு தைரியமா சொன்னேன்."

"ஆனா அது வரைக்கும் உங்கள விட்டு வெச்சா தானன்னு ஒருத்தன் என்னோட கையையும் இன்னொருத்தன் அண்ணியோட கையையும் புடிச்சுட்டான்."

நல்லவேளையா அந்த நேரம் பாத்து நாலஞ்சு வீலர் தொடர்ந்து இதே வழில வரவும் அவனுங்க நீங்க தான் வந்துட்டீங்களோன்னு பயந்துட்டு வாடா அந்தக் கூர வீட்டுக்குப் பின்னாடி மறைஞ்சிருந்துட்டு வண்டியெல்லாம் போனதுக்கப்புறம் திரும்பவும் வந்து இவங்களப் பாத்துக்கலாம்னு பாருங்க அந்த வீட்டுக்குப் பின்னாடி தான் போய் ஒழிஞ்சுக்கிட்டாங்க..."

"தொடர்ந்து ரெண்டு நிமிஷத்துல நீங்களும் வந்துட்டீங்க" என்று தங்கை சொன்ன கடைசி வார்த்தைகளைக் கேட்க அவன் அங்கே இருக்கவில்லை.



அண்ணன் அந்தத் தண்ணி வண்டிகளைத் தேடிப் போவது புரிய, இப்பொழுது அழவே தொடங்கி விட்டிருந்தாள் லாவண்யா.

"அட லாவண்யா அதான் எந்தப் பிரச்சனையும் இல்லாமத் தப்பிச்சுட்டோமே இனியும் என்ன பயம்..." என்று ஸ்வேதா கேட்டதெல்லாம் அவளுடைய காதுகளுக்குள் கூடச் சென்றிருக்கவில்லை.

"லாவண்யா இங்க பாரு..."

"அண்ணாவப் பத்தி உங்களுக்குத் தெரியாது அண்ணி. அவனுகளக் கண்டுபிடிச்சு ஒரு வழி செய்யாம வர மாட்டார். பிரச்சனை பெருசாகத் தான் போகுது எல்லாம் என்னால தான்..." என்று அழுகைக்கிடையில் இன்னும் ஏதேதோ சொன்னாள்.

ஆனால் ஸ்வேதாவிற்கோ அவர்களே மப்பில் கண் மண் தெரியாமல் தள்ளாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் போய் இவன் வீரத்தைக் காட்டப் போகிறானாக்கும் என்று எரிச்சலாக இருந்தது.

ஏளனமாகவும்.

அதை மறைத்துக் கொள்ளவும் அவள் தயாராக இருக்கவில்லை.

தொடர்ந்து சில வினாடிகளில் திரும்பி வந்த அண்ணனை அழுகையை நிறுத்தி விட்டுப் பார்த்தாள் லாவண்யா.

"வண்டில ஏறுங்க."

.....

"என்ன பார்வ, சீக்கிரம் வாங்க."

"அவங்க எண்ணா..."

"ஃபுல் மப்பு. ஒருத்தன் நீட்டிட்டான் இன்னொருத்தன் அடுத்ததா தயாராயிட்டிருக்கான்."

.....

அண்ணனின் அந்த வார்த்தைகளில் அந்த நிலையிலும் சிரிப்பு வந்திருந்தது லாவண்யாவிற்கு.

பெண்கள் இருவரும் மெதுவாகக் காரை நோக்கி வர, "சீக்கிரம் வந்து ஏறுங்க உங்கள விட்டுட்டு வந்து அவனுங்கள கவனிச்சுக்கறேன்" என்ற அண்ணனை திரும்பவுமா என்பதைப் போலப் பார்த்தாள் லாவண்யா.

தங்கையின் பார்வையில் என்னவென்று கேட்டான் ஜெயவர்த்தன்.

"வேண்டாம்ணா தயவுசெஞ்சு இதோட விட்ருங்கண்ணா, அவனுங்க ரொம்பக் கேவலமானவங்க..."

அதற்குள் தங்கையும், மனைவியும் ஏறி அமர்ந்திருக்க, காரை ஸ்டார்ட் செய்திருந்தான் ஜெயவர்த்தன்.

"ப்ளீஷ்ணா..."

"என்னமா?"

"அவனுங்க அவங்க செஞ்ச தப்ப மறைக்கறதுக்காக தேவையில்லாம இன்னும் என்ன வேணும்னாலும் சொல்லத் தயங்க மாட்டாங்க. அதோட இதுல பொண்ணுங்க நாங்க ரெண்டு பேரும் வேற சம்பந்தப்பட்டிருக்கோம்..."

"இல்லன்னா இவ்வளவு தூரம் சொல்ல மாட்டேண்ணா..."

தனது வார்த்தைகளுக்கு பதிலாக அண்ணன் எதுவும் சொல்லாததிலேயே சரிதான் இந்தப் பிரச்சனையை இனி இத்தோடு விட்டு விடுவார் என்று நம்பிக்கை வந்து விட்டிருந்தது லாவண்யாவிற்கு.

தங்கை சொல்வது ஒருபுறமிருக்க, அந்தத் தடியர்கள் தாங்கள் தப்பித்துக் கொள்ள ஜாதிப் பெயரைக் கூட இழுத்து விடத் தயங்க மாட்டார்கள், என்பதிலும் அவ



அதே ஊரில் தொடர்ந்து முப்பது வருடங்களாக இருப்பவன் என்பதால், முன்பு நடந்தவையும் நினைவிற்கு வந்தன.

"நீ இன்னும் சின்னப் பொண்ணாவே இருக்க லாவண்யா கொஞ்சம் மாற முயற்சி செய்யணும்" என்ற அண்ணனைக் குற்ற உணர்ச்சியுடன் பார்த்தாள் தங்கை.

அண்ணன் சொல்வது நியாயம் தானே, தன்னால் தானே இப்பொழுது இவ்வளவு பிரச்சனை என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நிச்சயம் தான் இனிமேல் இந்த மாதிரி சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொள்ளவே கூடாது என்று மனதார நினைத்துக் கொண்டாள்.

"ஸாரிங்கண்ணா..."

"மனசுக்குள்ள உணர்ந்து மாறினாலே போதும்..." என்று சொல்லிக்கொண்டே அவன் வீட்டு வாசலில் காரை நிறுத்தியிருக்க.

"ஒரு சின்ன உதவிண்ணா..." என்று தயக்கத்துடன் தனது அண்ணனைப் பார்த்தாள் லாவண்யா.

"என்னமா?"

"அம்மாகிட்ட நடந்ததையெல்லாம் சொல்ல வேண்டாண்ணா, பயந்துக்குவாங்க அதோட..."

"உன்னையும் திட்டுவாங்க வேறென்ன?" என்ற ஜெயவர்த்தன், "அதெப்படி எதுக்கு உங்க ரெண்டு பேரையும் தனியா அனுப்பினாங்கன்னு கேட்டு சண்டைப் போடலாம்னு இல்ல நான் இருக்கேன்..."

"இந்த ஒரே முறை மட்டும் வேண்டாண்ண ப்ளீஷ்..."

"சரிசரி, இந்தத் தடவ பரவாயில்ல இனிமேல் இப்பிடி நடக்காமப் பாத்துக்கோ."

அண்ணனின் வார்த்தைகளில் சந்தோஷமாக முகம் மலர்ந்திருந்த லாவண்யா "தேங்க்ஸ்ண்ணா" என்றாள்.

ஆனால் ஸ்வேதாவின் பார்வையோ 'பெரிய ஹீரோ மற்றவர்களை மன்னிக்கிறானாம், முதலில் இவன் செய்யும் தவறுகளுக்கு இவனுக்கு யார் தண்டனை கொடுப்பதாம்' என்பதைப் போல இருந்தது.

அது ஜெயவர்த்தனின் கவனத்தில் விழத் தவறவில்லை.

விழ வேண்டும் என்பதற்காகவே ஸ்வேதா அந்த மாதிரி பார்த்திருக்கும் போது பிறகு அது எப்படி விழாமல் போகும்.

## 56

முதலில் பெண்கள் இருவரும் வீட்டிற்குள் வந்திருக்க, அவர்களைத் தொடர்ந்து சில வினாடிகளில் ஜெயவர்த்தனும் வந்திருந்தான்.

"என்னமா சர்க்கஸ் எப்படியிருந்தது?"

காஞ்சனா கேட்க "அதெல்லாம் அத்தை, அதவிடக் கூட சுவாரஸ்யமா நிறைய நடந்ததாக்கும்" என்ற அண்ணியைக் கெஞ்சுவது போலப் பார்த்தாள் லாவண்யா.

"அது என்னது?"

"அது ஒண்ணுமில்ல அத்தை, எனக்கு எல்லாமே புதுசா இன்ட்ரஸ்டிங்கா இருந்தது அத சொன்னேன்."

"சாப்பிடலாமாம்மா?" என்று ஜெயவர்த்தன் வர, "எல்லாம் தயாரா இருக்கு வந்தா சாப்பிடலாம் கண்ணா" என்றார் காஞ்சனா.

"வாங்க அண்ணி மூணு பேரும் உக்காந்துக்கலாம்."



"என்ன ஸ்வேதாம்மா, இப்பவே மணி ஒன்பதரையாச்சு இனி அப்புறமா எப்ப, உக்காரு."

கணவனுடன் அமர்ந்து சாப்பிட்டாக வேண்டுமா என்பது ஸ்வேதாவிற்கு.

ஆனாலும் அத்தையின் வார்த்தையைத் தட்ட முடியாமல் அமர்ந்திருந்தாள்.

ஏனோ கணவனைப் பார்க்கவே மிகவும் வெறுப்பாக இருந்தது ஸ்வேதாவிற்கு.

மணமானதிலிருந்து அன்று தான் முதன் முறையாகக் கணவனின் மீது அவ்வளவு வெறுப்பை மனதார உணர்ந்தாள் எனலாம்.

காரணமே இல்லாமல் வதைப்பதற்கு இனிதான் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கவே கூடாதென்று நினைத்துக் கொண்டாள்.

அதற்காகத் தான் என்ன பாடுபட நேர்ந்தாலும் சரிதான் என்றும்,

காலையில் ஊருக்குக் கிளம்பப் போவதைப் பற்றி அத்தையிடம் சொல்லி விடலாமென்று வாயைத் திறந்தவள், பிறகு அப்போதைக்கு வேண்டாமென்ற முடிவுக்கு வந்திருந்தாள்.

இப்பொழுது சொன்னால், அதற்குக் கணவன் ஏதாவது சொல்லக் கூடும்.

பிறகு மகனே ஒன்று சொல்லி விட்டானென்று அத்தை அதை வேத வாக்காக எடுத்துக் கொண்டு விட்டாலும் விட்டதுதான்.

வேண்டாம்.

காலையில் கிளம்பும் முன் அத்தையிடம் மட்டும் சொல்லிக் கொண்டு கிளம்பி விடலாம்.

''என்ன ஸ்வேதாம்மா ப்ளேட்ல வெச்ச இட்லி ஆறுது பாரு'' என்று அத்தை உள்ளே செல்ல ''நீங்க ஊத்திக் கிட்டு சட்னி சாம்பார அண்ணிக்கு நகர்த்திக் குடுங் கண்ணா'' என்ற லாவண்யா தான் ஊற்றிக் கொண்டதும் அடுத்து இருக்கும் அவளுடைய அண்ணனுக்கு நகர்த்திக் கொடுத்தாள்.

யதேச்சையாக என்றாலும் கணவன் அருகில் வந்து அமர்ந்திருந்ததே ஸ்வேதாவிற்கு கோபத்தை வரவழைத் திருக்க, இனி அதற்கும் ஒரு படி மேல் போய் அவன் எடுத்துக் கொடுப்பதைத் தான் உண்பதா என்றிருந்தது.

தங்கை கேட்டுக் கொண்டது போலவே தான் பரிமாறிக் கொண்டதும் தனக்கு அடுத்ததாக அமர்ந்திருந்த மனை விக்கு சட்னி சாம்பாரை நகர்த்திக் கொடுத்தான்.

ஆனால் ஸ்வேதாவோ அதற்குள் அருகில் இருந்த மிள காய்ப் பொடியை எடுத்து வைத்து சாப்பிடத் தொடங்கி விட்டிருந்தாள்.

''என்னமா இது?''

''என்ன அத்தை?''

''சட்னி, சாம்பார் வைச்சுக்கல?''

''வேண்டாம் அத்தை.''

''ஏம்மா?''

''இன்னைக்கு ஏனோ அதப் பாத்தாலே வெறுப்பா இருக்கு.''

''என்ன அண்ணி இப்படிச் சொல்றீங்க? மிளகாய்ப் பொடி தான உங்களுக்குப் பிடிக்காது.''

''ம்கூம் இன்னைக்கு இது தான் பிடிச்சிருக்கு.''

ஒருவேளை தான் நகர்த்திக் கொடுத்ததால்தான் மனைவி மறுக்கிறாளோ என்று ஜெயவர்த்தனுக்கு



ஆனாலும் அதைக் கண்டு கொள்ளாமல் தன் பாட்டுக்கு சாப்பிடத் தொடங்கி விட்டிருந்தான்.

''இட்லி மட்டும் தானாம்மா?''

லாவண்யாவின் கேள்வியில் ''இல்லமா இடியாப்பமும் இருக்கு நீ வெச்சுட்டு அப்படியே அவங்களுக்கும் நகத் திக் குடுத்துடு'' என்று இடியாப்பம் இருந்த ஹாட்பாக்ஸை எடுத்து வந்து மகளுக்கு அருகில் வைத்து விட்டு நகர்ந் தார் காஞ்சனா.

''அப்பாடா இட்லியே பிடிக்காதே சோதிச்சுட்டிங்களோன்னு பயந்துட்டேன்'' என்று புன்னகையுடன் தனது ப்ளேட்டில் பரிமாறிக் கொண்டு பழையபடி நகர்த்திக் கொடுத்தாள்.

ஜெயவர்த்தன் தானும் தனது ப்ளேட்டில் பரிமாறிக் கொண்டு, மனைவியின் பக்கம் நகர்த்தி வைத்திருந்தான்.

ஆனால் இப்பொழுது அதையும் வேண்டாமென்று மனைவி மறுத்திருக்க, அவனுக்குத் தெளிவாகி விட் டிருந்தது.

''என்ன அண்ணி இடியாப்பமும் வேண்டாமா?''

''ம்கூம்.''

''அட என்ன ஸ்வேதாம்மா நீ, சரி இந்தா இதையாவது வெச்சுக்கோ'' என்று காஞ்சனா தயிர் சேமியாவைப் பரிமாற இன்னும் கொஞ்சம் என்று கேட்டு வாங்கிக் கொண்டாள்.

''வாவ் என்ன டேஸ்ட்! கொஞ்சமாவது வெச்சுக்கோங்க அண்ணி இடியாப்பம் ரொம்ப டேஸ்டா இருக்கு.''

''அப்பிடியா?''

''ஆமாம் அண்ணி எனக்காகக் கொஞ்சமாவது டேஸ்ட் பண்ணிப் பாருங்களேன்.''

''வேண்டாம் லாவண்யா, இன்னைக்கு சட்னி சாம்பார், இடியாப்பம் இத மூணையும் பாத்தாலே எனக்கு ரொம்ப வெறுப்பா இருக்கு.''

''சரிதான், உங்க இஷ்டம்'' என்று தன் பாட்டுக்கு சாப்பிடத் தொடங்கி விட்டிருந்தாள் லாவண்யா.

குரலில் மிகுந்த ஏளனம் தொனிக்க அப்படிச் சொன்ன ஸ்வேதா, கணவனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட பார்வையை எதிர் கொண்டாள்.

கணவனின் அந்தப் பார்வையில் இது மட்டுமா, இனி மேல் தானே இருக்கிறதென்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

அதற்குள் ''மெதுவா சாப்புடுங்க'' என்று பொதுவாகச் சொல்லிவிட்டு எழுந்து சென்றிருந்தான் ஜெயவர்த்தன்.

அண்ணன் சென்றதும் ''ஏன் அண்ணி?'' என்றாள்.

''என்ன?''

ஆனால் மீண்டும் காஞ்சனா வர, பேசாமல் சாப்பிடத் தொடங்கி விட்டிருந்த லாவண்யா அவர் நகர்ந்ததும் மீண்டும் ''என்ன அண்ணி இது?'' என்றாள்.

''எது?''

''அண்ணா மேல இருக்கற கோபத்த சாப்பாட்டு மேல ஏன் காட்றீங்க?''

''நானொன்...''

''பாத்தேனே அண்ணி வயிறு நிறைய சாப்பிடுங்க அண்ணி...''

''சரிதான் மேடம். நீங்க சாப்புடுங்க...''

''ஸாரி அண்ணி.''

''அதெல்லாம் எதுக்கு லாவண்யா...''

''இது உங்க டர்னா அண்ணி?''



இன்னும் உன் அண்ணனே முடிக்கவில்லை போலிருக்கிறதே. முதலில் அது முடியட்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட ஸ்வேதா, இயல்பாக ஒரு புன்னகையை மட்டும் சிந்தினாள்.

''நான் ஒன்று சொல்லட்டுமா அண்ணி?''

''சொல்லு.''

''நாளுக்கு நாள் நீங்க ரொம்ப அழகாயிட்டே வர்றீங்க அண்ணி...''

''உன்ன விடவுமா?''

''ஜோக் அடிக்காதீங்க அண்ணி, உங்க பக்கத்துல நானெல்லாம் நிக்கக் கூட முடியாது. உங்க கலர், ஹைட்... ஏன் விட்டா இன்னும் சொல்லிட்டே போலாமே...''

''அழகுங்கறது பாக்கறவங்க கண்ல தான் லாவண்யா இருக்கு, மனசுக்குப் பிடிச்ச எதுவும் அழகாத் தெரியும். ஆமா என்ன நீ பாட்டுக்கு ஏதேதோ பேசிட்டிருக்க?''

''சும்மா மனசுக்குப் பட்டதக் கேட்டேன், வேறொன்னுமில்ல அண்ணி.''

தொடர்ந்து சிறிது நேரத்தில் தனது அறைக்கு வந்திருந்தாள் ஸ்வேதா.

கணவன் படுக்கையில் சாய்ந்தபடி ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

இன்னும் தூங்கப் போகாமல் துரை அப்படி என்ன படித்துக் கொண்டிருக்கிறானோ,

''ஏன் இப்படி சின்னக் குழந்த மாதிரி நடந்துக்கற?''

கணவனின் கேள்வி காதில் விழுந்தாலும் விழாதது போலத் தனது வேலையில் கவனமாக இருந்தாள் ஸ்வேதா.

''உன்னத்தான் ஸ்வேதா.''

..............

''ஏன் பேசறதுக்கென்ன?''

மேலும் ஒரு முறையும் கேட்ட ஜெயவர்த்தன், எழுந்து மனைவியின் அருகில் வந்திருந்தான்.

''எனக்குக் கோபம் வரவைக்கறது உனக்கு நல்லதல்ல.''

அட.

ஏன் என்ன செய்து விடுவானாம்.

கழுத்தை நெறித்து விடுவானோ.

மனதின் ஏளனம் முகத்தில் தெரியப் பார்த்தாள் ஸ்வேதா.

''எங்கிட்டப் பாத்து நடந்துக்கறது உனக்கு நல்லது.''

''இல்லன்னா என்ன செஞ்சுடுவீங்க?''

''ஒழுங்காப் பேசு.''

''உங்ககிட்டயா? ம், அப்புறம்?'' என்று சற்று முன்பு போலவே ஏளனம் முகத்தில் தென்படக் கேட்டவளைக் கோபத்துடன் பார்த்தான் ஜெயவர்த்தன்.

''ஏன், அப்பிடிப் பேசலேன்னா என்ன பண்ணிடுவீங்க?''

''அப்புறம் என்னக் குத்தம் சொல்லிப் பலனில்ல.''

''புரியல?... ஓ மனுஷனாவே நடந்துக்க மாட்டிங்களோ?''

''புரிஞ்சா சரி.''

''அப்ப இப்ப மட்டும் மனுஷனா நடந்துட்டிருக்கறதாவா நினைச்சுட்டிக்கீங்க?''

''திரும்பவும் சொல்றேன், வார்த்தைல கொஞ்சம்...''

''முடியாது. அப்பிடிதான் பேசுவேன்.''

..............

''ஏன், என்ன கிழிச்சுடுவீங்க?''



''அப்புறம் தாங்க மாட்ட.''

அப்படிச் சொன்ன கணவனின் வார்த்தைகளில் இப்பொழுது சிரிக்கத் தொடங்கி விட்டிருந்தாள் ஸ்வேதா.

''இப்ப அனுபவிச்சுட்டிருக்கறத விடவுமா? சான்ஸே இல்ல...''

..........

''என்னப்பத்தி என்னன்னு நினைச்சுட்டிருக்கீங்க? நீங்க எட்டி உதைச்சாலும் மறுபடியும் உங்க காலடிலயே வந்து விழுவேன்னு தான?''

''ஏன் இப்பிடியெல்லாம் பேசற?''

''பின்ன எப்படிப் பேச முடியும்? அதுவும் அன்னைக்குக் கால்ல பிரச்சன வந்த அன்னைக்கு எப்படியெல்லாம் பேசினீங்க, அதுவும் என்ன வார்த்த...''

அதைச் சொல்லக்கூட முடியாமல் அழுகையில் குரல் கம்மி, கண்களும் கலங்கி விட்டிருந்தன ஸ்வேதாவிற்கு.

''அது... அதுக்காக நானும் மனசார வருந்தறேன்.''

''ஓ. வருந்தினா பேசினது இல்லேன்னு ஆயிடுமா?''

''மனசார உணர்ந்து தான் சொல்...''

''அப்பக் கொல செஞ்சுட்டு வருந்தறேன்னு சிம்பளா ஒரு வார்த்தை சொல்லிட்டா சட்டம் சும்மா விட்ருமா?''

''அதில்ல...''

''அன்னைக்கு நீங்க பேசினது எந்த விதத்துலயும் கொலக் குற்றத்துக்குக் குறைஞ்சது கிடையாது.''

''அது தப்புதான்னு...''

''யாருக்கு வேணும் உங்க வருத்தம்...''

''சரி. இப்ப என்னதான் செய்யணுங்கற?''

''எங்கிட்ட எந்தக் கேள்வி கேக்கறதுக்கும் உங்களுக்கு உரிமை கிடையாது. ஏன் எனக்கு முன்னாடி கூட

வராதீங்க. தயவு செஞ்சு போயிடுங்க'' என்று மிகுந்த கோபத்துடன் கையை வெளிப்புறமாக நீட்டிச் சொன்ன மனைவியை செய்வதறியாது பார்த்தான் ஜெயவர்த்தன்.

மனைவியின் கோபமும் ஆதங்கமும் ஜெயவர்த்தனுக்கும் புரிந்தன.

மனதார வருந்தவும் செய்தான்.

அதுவும் ஒரு முறை இரு முறையல்ல. அப்படிச் சொன்ன நாளிலிருந்து இன்று வரை எத்தனையோ முறை.

என்னதான் மிகுந்த தன்மானம் பார்க்கிறவன் என்றாலும், தவறு செய்து விட்டு அந்தப் போர்வைக்குள் ஒளிந்து கொள்வது மிகவும் கேவலமான ஒன்று என்பது அவனுக்கும் தெரிந்தே இருந்தது.

அது புரிந்ததாலேயே மனதார உணர்ந்து மன்னிப்புக் கேட்டான் எனலாம்.

ஆனாலும் அதைத் துளிகூடப் புரிந்து கொள்ள மாட்டேன் என்பவளிடம் இனி என்ன தான் செய்வது.

## 57

முன்னைக்கு இப்பொழுது இன்னும் அதிகமான கோபத்துடன் கணவனைப் பார்த்தாள் ஸ்வேதா.

''செத்துப் போன பிணத்துகிட்ட வருந்திப் பலனிருக்குன்னு நினைக்கறீங்களா?'' என்று கேட்டாள்.

மனைவியின் கேள்வியில் இப்பொழுது சலிப்பு வந்து விட்டிருந்தது ஜெயவர்த்தனுக்கு.

ஏன் அப்படிச் சொன்னோமென்பதை நினைத்துப் பார்த்தான்.



இவள் மட்டும் தன்னை எப்படி வேண்டுமானாலும் ஏன் இன்னொரு பெண்ணுடன் கூட இணைத்து சந்தேகப்படலாம்.

ஆனால் தான் தெரியாமல் சொல்லி விட்ட ஒரு வார்த்தைக்காகப் பல முறை மன்னிப்புக் கேட்ட பிறகும் கண்டு கொள்ள மாட்டேனென்றால் இனி என்ன தான் செய்வது.

இதற்கு மேல் இனி இந்த விஷயத்தைப் பற்றிப் பேசிப் பலனில்லையென்று தோன்றி விட்டிருக்க, திரும்பி நடந்தான்.

ஆனால் அப்படிச் சென்ற கணவனை ''என்ன பதில் சொல்ல முடியல இல்ல?'' என்று கேட்டாள் ஸ்வேதா.

''இனிமேல் இந்த விஷயத்தப் பத்திப் பேச வேண்டாம் விட்ரு.''

''சரிதான், செஞ்சது தப்புங்கறத ஒத்துக்கிட்டா சரி...''

''ஏன் நீ இவ்வளவு பேசற. லாவண்யா சின்னப் பொண்ணு அவகூட சேந்துட்டு அன்னைக்குப் போய்க் காலல ஆணி ஏத்திட்டு வந்த. அதே மாதிரி இன்னைக்கு அவன் மட்டும் கொஞ்சம் பலமா பிடிச்சுத் தள்ளியிருந்தா யோசிச்சுப்...''

''கீழ விழுந்துட்டுப் போறேன். அதனால உங்களுக்கு என்ன?''

''முட்டாள் மாதிரி உளறாத.''

''யாரு...''

''குழந்தைக்கு ஏதாவது ஆயிருந்தா...''

''ஆகட்டுமே.''

''ஏய்...''

''என்ன கோபம் வருதா?''

''வேண்டாம் ஸ்வேதா. என் பொறுமைய ரொம்பவும் சோதிச்சுட்டிருக்க...''

''என்ன பண்றது? வேற ஆளப் பாத்துக்கோன்னு புருஷனே சொல்லிட்டதுக்கப்புறம் பாக்கறதுல...''

''அசிங்கமாப் பேசாத.''

''அசிங்கமா? நீங்க சொன்னாப் புனிதம், நான் சொன்னா அசிங்கமா?''

''வேண்டாம்மா... ஏற்கனவே வருந்தறவனப் போய் மேல... மேல...''

கோபத்தைக் கூடத் தாங்கிக் கொண்டவளால் ஏனோ கரிசனத்தை சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று...

இப்பொழுது வெறி பிடித்தவள் போல மாறி விட்டிருந்தாள்.

''வேற ஆளப் பாத்துட்டுப் போறேனோ இல்லையோ, ஆனா இனிமேல் உங்ககூட... எம் பக்கத்துல கூட வராதீங்க. ஏன் இந்த உடம்பு வேற ஆளுக்கு...''

''சை போதும் நிறுத்து, நான் யோசிக்காம சொன்ன ஒரு வார்த்தைக்காக நீ ஏன் உன்ன இப்படி அசிங்கப் படுத்திக்கறே.''

''ஆமாம் அப்படித்தான் பேசுவேன், ஏன் இன்னும் யார் கூட வேணும்னாலும் போ...''

அப்படிச் சொன்ன மனைவியை இப்பொழுது எல்லை யற்ற கோபத்துடன் நெருங்கியிருந்தான் ஜெயவர்த்தன்.

''எதுக்கும் ஒரு எல்லையிருக்கு ஸ்வேதா.''

''அத சொல்ற உரிமை உங்களுக்குக் கிடையாது.''

''உரிமை, உரிமை, உரிமை. என் உரிமையோட அளவக் காட்டறேன் பாக்கறியா?''

''சரிதான் எவளாவது ஏமாந்தவ கிட்டப் போய்க் காட்



அப்படிச் சொன்ன மனைவியை அவள் முடிப்பதற்குள் அருகில் இழுத்திருந்த ஜெயவர்த்தன் ''சரிதான் அந்த ஏமாந்தவளும் நீயாவே இருந்துட்டுப் போ'' என்று தனது கைகளுக்குள் கொண்டு வந்து அணைத்திருந்தான்.

''விடுங்க... என்ன விடுங்க... சீ.''

''விட்டுர்றேன் உரிமையப் புரிய வெச்சதுக்கப்புறம்.''

கணவனின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள எவ்வளவோ முயன்றாள் ஸ்வேதா.

ஆனால் அவளுடைய முயற்சியெல்லாம் அவளுடைய கணவனிடம் வெகு இயல்பாகத் தோற்றுப் போயின.

தன்னுடைய உணர்வுகளுக்கும், விருப்பத்திற்கும் ஏன் கதறலுக்கும் கூட செவி மடுத்திருக்காத கணவனின் கைகளில் கடைசியில் முழுமையாகத் தன்னை இழந்து போயிருந்தாள்.

அதுநாள் வரை கணவனை வேறு மாதிரி கண்டிருந்த ஸ்வேதா முதன் முறையாக அவனுடைய முரட்டுத் தனத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் முக்கியமாக நம்ப முடியாமல் அதிர்ந்து போனாள்.

அதுநாள் வரை மனமெனும் சிம்மாசனத்தில் வீற்றிருந்த அந்தக் காதலும், அன்பும் தவிடு பொடியாகியிருந்தன.

நம்ப முடியாத அதிர்ச்சி கண்ணீருக்கும் இடம் கொடுத் திருக்கவில்லை.

அன்று இரவு முழுவதும் அவள் ஒரு வினாடி கூட உறங்கியிருக்கவில்லை.

விடிவதற்காகவே காத்திருந்தாற் போல ஐந்து மணிக்கே சென்று குளித்துக் கிளம்பி வெளியே வந்திருந்தாள்.

கணவன் இன்னும் உறங்கிக் கொண்டிருப்பது

எங்கே எழுந்து விடுவாளோ எனும் எண்ணமே மேலும் நெஞ்சைப் பதறச் செய்து விட்டிருந்தது.

போதும்.

அனைத்தும் போதும்.

ஏனோ அந்த வீட்டிற்குள் உயிர்க் காற்றே இல்லாத தைப் போலத் துடித்த மனதையும், உடலையும் இயன்ற அளவு அமைதிப்படுத்த முயன்றவள் அத்தையிடம் மட்டும் ஒரு வார்த்தை சொல்லி விட்டுக் கிளம்பி விடலா மென்று சமையலறைக்கு வந்திருந்தாள்.

''வா ஸ்வேதாம்மா.''

.............

''என்ன இவ்வளவு நேரத்துல எழுந்து வந்திருக்க?'' என்று கேட்டவர் அதற்குப் பிறகு தான் அவளுடைய முகத்தை கவனித்தார்.

கவனித்தவர், பயந்து போய் விட்டிருந்தார்.

அந்த அளவிற்கு வாடி, வதங்கி ஏன் இன்னும் கூட... கடவுளே என்னவாயிற்று.

முக்கியமாகக் கண்கள் சிவந்து ஒரு வினாடி கூடத் தூங்கவில்லை போலல்லவா தெரிகிறது.

அவருடைய அதிர்ச்சியும், பதட்டமும் அவருடைய குரலிலேயே வெளிப்பட்டன.

''என்ன கண்ணம்மா, ஏன் இப்படியிருக்க?''

உண்மையான கரிசனத்துடனான அத்தையின் வார்த்தை களில் எங்கிருந்து தான் அவ்வளவு ஆதங்கம் வந்ததோ கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறி விட் டிருந்தாள்.

''ஸ்வேதாம்மா... இங்க பாரு...''



ஆனால் அதெல்லாம் ஸ்வேதாவின் காதுகளுக்குள் கூட சென்றால் அல்லவா.

அவளுடைய நிலையைக் கண்ட காஞ்சனாவிற்கும் என்ன இதென்று மனம் விட்டுப் போயிருக்க மேலே பேசக் கூட வார்த்தைகள் வராமல் அப்படியே நின்று விட்டிருந் தார்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள்தான்.

''ஸ்வேதாம்மா...''

''வேண்டாம்மா. வா இங்க வந்து உக்காரு.''

அத்தையின் அழைப்பில் நடப்பிற்கு வந்தவள், உதட் டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ஏதோ தோன்ற, சென்று பச்சைத் தண்ணீரை முகத்தில் அடித்துக் கழுவிக் கொண்டு வந்தாள்.

மீண்டும் கண்கள் கலங்கினாலும் முயன்று கட்டுப் படுத்திக் கொண்டு நிமிர்ந்து அத்தையைப் பார்த்தாள்.

''நான் ஊருக்குப் போறேன் அத்தை.''

போய் வருகிறேன் என்று சொல்லாமல் இது என்ன போறேன் என்று மொட்டையாக.

அந்த ஒற்றை வார்த்தை அவரை இன்னும் கலங்கச் செய்து விட்டிருந்தன என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

''ஏன்.. இவ்வளவு நேரத்துலயே?''

.............

''ஸ்வேதாம்மா...''

''எனக்கு ஊருக்குப் போகணும்... நான் போய்ட்டு வர்றேன் அத்தை.''

''தனியாவா?''

.............

''யாரையாச்சும் கொண்டு வந்து விடச் சொல்றே...''

''நான் போயிடுவேன் அத்தை. அங்க போய்ச் சேர்ந்ததும் போன் பண்றேன்.''

''அது சரிதான் கண்ணம்மா, ஆனாலும் தனியா அனுப்பக் கஷ்டமா...''

யாரோ உள்ளே வரும் அரவத்தில் பதற்றத்துடன் வாயிலைப் பார்த்துவிட்டுப் பிறகு சற்று நிம்மதியுடன் மீண்டும் தன்னைப் பார்த்த ஸ்வேதாவின் பார்வை காஞ்சனாவின் கவனத்திலும் விழவே செய்தது.

தோட்டக்காரன் மாரிமுத்து ஒரு பெரிய அலுமினியப் பாத்திரம் நிறைய பாலைக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போக திடீரென்று நினைவு வந்தவராய் ''இரு பால் ஹார்லிக்ஸ் ஏதாவது கலக்கறேன்'' என்று திரும்பிப் போனார்.

ஆனால் அதற்குள் ''ம்கூம் வேண்டாம்'' என்று விட்டிருந்தாள்.

அவளாகவே காபி கேட்பாளென்று எதிர்பார்த்தவர் பிறகு ''சரி இரு காபியாவது கலக்கறேன் எதுவும் குடிக்காம காரயாவது ஓட்டிட்டுப் போக வேண்டாமா'' என்று நிமிடத்தில் காபியைக் கலக்கி ''இந்தா குடி'' என்று ஸ்வேதாவின் கைகளில் வைத்திருந்தார்.

அத்தைக்காக ஒரு வாய் குடித்திருந்தவளால் பிறகு அதுவும் முடிந்திருக்கவில்லை.

மீண்டும் ஏதேதோ நினைவிற்கு வந்ததில் அங்கிருந்து வேகமாகக் கிளம்பிவிட முடிந்தால் அதுவே போதுமென்று வெகு தீவிரமாகத் தோன்றத் தொடங்கி விட்டிருக்க பதட்டத்துடன் கையில் இருந்த டம்ளரை அப்படியே கீழே வைத்திருந்தாள்.



''நான் கிளம்பறேன்.''

''சரிதான், நானும் உங்கூட வர்றேன்...''

''ம்கூம், டிரைவர வரச் சொல்லியிருக்கேன். இந்நேரம் வந்து வெயிட் பண்ணிட்டிருப்பாங்க.'' என்று அவளையறியாமலேயே பொய் சொல்லியிருந்தாள்.

அதற்கு மேல் ஸ்வேதாவை நிற்க வைத்துப் பேசினால் அவளை மேலும் கொடுமைப்படுத்துவதாகி விடுமோ என்று தோன்றி விட்டிருக்க, ''சரிதான் கண்ணம்மா பத்திரமாப் போய் சேந்ததும் எனக்கு போன் பண்ணு'' என்று விட்டிருந்தார்.

அதோடு விட்டு விடாமல் தானும் அவளுடன் வெளியே வந்தவர் கார் கண்களை விட்டு மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகே வீட்டிற்குள் வரத் திரும்பினார்.

சரியாக அதே நேரம் அங்கு வந்த கணவன் என்னவென்று கேட்க, சுருக்கமாக விஷயத்தைச் சொன்னார்.

''நல்ல வேல செஞ்ச'' என்றவர் ''அப்படி மனசு விட்டு முடியாமப் போறாங்கறியே. நானும் கிளம்பறேன் மருமக பத்திரமா வீடு போய்ச் சேர்ந்ததும் திரும்பறேன்'' என்று அவர் மீண்டும் அதே காரில் ஏறிப் புறப்பட்டு விட்டிருந்தார் ராஜேந்திரன்.

மருமகளைத் தொடர்ந்து சில வினாடிகளிலேயே கணவன் பாதுகாப்பிற்குச் சென்றிருக்க, அவ்வளவு நேரத்திற்குப் பிறகு அப்பொழுது தான் இயல்பாக சுவாசித்தார் எனலாம்.

மருமகளை நன்கு கவனித்துப் பார்த்திருந்தார் என்பதாலேயே, என்ன நடந்திருக்குமென்பதை அவரால் யூகிக்கவும் முடிந்திருந்தது.

சரியாக அதே நேரம் அந்த மகனே வந்து கொண்டிருப்பதைக் கண்டார்.

ஏனோ ஆதங்கத்தை அவரால் என்ன முயன்றும் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

"இப்ப சந்தோஷமா?" என்று கேட்டார்.

தாயின் கேள்வி ஜெயவர்த்தனுக்கும் புரியவே செய்தது.

படுத்தபடி மனைவி குளித்துக் கிளம்புவதை அவன் பார்த்துக் கொண்டு தான் இருந்தான்.

ஏன் அதிலிருந்து நடந்த அனைத்தையுமே கூட,

என்ன தந்தை சென்றிருக்கா விட்டால் அவருக்கு பதிலாக அவன் சென்றிருப்பான் அவ்வளவே.

என்னவென்பதைப் போலப் பார்த்த தாயிடம் "காபி கிடைக்குமா?" என்று கேட்டான்.

முடியாது என்று சொல்வதற்காக வாய் வரை வந்திருந்த வார்த்தை ஏனோ அதற்கு மேல் வந்திருக்கவில்லை.

மிகுந்த ரோஷக்காரன் வேறு.

எங்கே தான் ஒன்று சொல்லப் போய் திருப்பிக் கொண்டு போய் விடுவானோ என்று பயமாகி விட்டிருந்தது.

பிறகு அவசியத்திற்குக் கூட ஒன்றும் கேட்க முடியாது போய் விடுமோ என்றும்,

மற்றவர்களைத் தான் ஒரு வார்த்தை சொல்வதற்கு முன் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதம் கண்டு கொள்ளாமல் விட்டு விடுங்கள் என்பானே,

ஏன் அப்படி இவனும் இருந்து விட்டுப் போக வேண்டியது தானே.

என்ன யோசித்தும் எதனால் பிரச்சனை வந்திருக்குமென்பதை அவரால் யூகிக்க முடிந்திருக்கவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் அவருக்கு வெகு நிச்சயமாகப் புரிந்தது.

அது ஸ்வேதாவின் மீது தவறிருக்க வாய்ப்பில்லை என்பதே.



அப்படியானால் மகன் மீது தவறு இருக்குமோ.

அவனும் தெரிந்து, வேண்டுமென்றே எதையும் செய்பவன் அல்லவே.

பிறகு என்னதான் நடந்திருக்கும்.

நிச்சயம் கருத்து வேறுபாடாகத்தான் இருக்க முடியும்.

அதற்கு மகன் அவனுடைய முரட்டுக் கோபத்தைக் காட்டியிருக்க வேண்டும். அதை மென்மையான குணம் கொண்ட அந்தப் பெண்ணால் தாங்கிக் கொள்ள முடியாது போயிருக்குமாய் இருக்கும்.

சரிதான்.

மகனே சொல்வதைப் போலக் கணவன் மனைவிக்குள் ஆயிரம் இருக்கும்.

அதற்காக அந்தப் பெண்ணை அப்படி நடத்துவதா.

என்ன முயன்றும் மகனின் மேலிருக்கும் ஆதங்கம் கோபமாக மாறிக் கொண்டிருந்ததை அவரால் தடுக்க முடிந்திருக்கவில்லை.

தாய் கொண்டு வந்து கொடுத்த காபியை எடுத்துக் கொண்ட ஜெயவர்த்தன். "இன்னும் இருபது நிமிஷத்துல கிளம்பியாகணும். டிபன் ரெடி பண்ணிடுங்க" என்றான்.

...............

"வெறும் இட்லி மட்டும் போதும்."

தான் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருக்கத் தாயிடமிருந்து எந்த பதிலும் வந்திருக்காதது சற்று எரிச்சலை வரவழைத்திருந்தது.

"முடிஞ்சாப் பாருங்க, இல்லன்னா..."

"யாருக்கும் தனியா என்ன செய்யப் போறேன். எங்கிட்டக் கேக்க வேண்டிய அவசியமே இல்ல எந்த நேரத்துக்கு வந்தாலும் டேபிள் மேல டிபன் இருக்கும்."

அப்படிச் சொல்லி விட்டுத் தாய் தன் பாட்டுக்கு உள்ளே சென்றிருக்க, சரிதானென்று காபியைக் குடிக்கத் தொடங்கி விட்டிருந்தான்.

கணவன் மனைவிக்குள் என்ன பிரச்சனையென்று கூடத் தெரியாமல் இது என்ன புதிதாகத் தலைவலி என்றிருந்தது.

தாயே என்றாலும் தன்னை ஒருவர் உதாசீனப் படுத்துவதா என்றிருந்தது.

அதிலும் இது என்ன அவருடைய வழக்கத்திற்கு மாறாக என்றும்,

மனைவி தான் ஒரு விதத்தில் வதைக்கிறாள் என்றால்...

அப்படியானால் அவள் இரவு பேசியது மட்டும் சரியா என்ன.

தன்னை அந்த அளவிற்கு கோபப்படுத்தியிருக்கா விட்டால் தானும் அப்படி நடந்து கொண்டிருக்கவே மாட்டோமே.

ஏன் அதற்கு மேலும் தவறு தன் மேலும் தானே என்று அதை இயல்பாக ஏற்றுக் கொண்டு விட்டுப் போயிருக்கலாம்.

அவசியமற்ற வேதனை மிஞ்சியிருக்காது.

இப்படி என்னதான் காரணங்களை அவன் தனக்குத் தானே அடுக்கிக் கொண்டாலும், தான் அப்படி நடந்து கொண்டது தவறுதான் என்பதை அவனுடைய மனசாட்சி சொல்லவே செய்தது.

ஏன் அதற்குப் பிறகு அவனும் மனைவியைப் போலவே இரவு முழுவதும் வினாடி கூடத் தூங்கியிருக்கவில்லை.

மனைவியின் ஆதங்கமும் வேதனையும் அவனுக்கும் முழுமையாகப் புரிந்ததே அதற்குக் காரணம்.



ஏன் அப்படியெல்லாம் பேசித் தன்னைக் கோபம் கொள்ளச் செய்து அவளையும் வருத்திக் கொள்ள வேண்டுமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அன்று காலையில் மகன் சாப்பிடாமலே சென்று விட்டிருந்தது காஞ்சனாவிற்கு மிகுந்த வேதனையைக் கொடுத்து விட்டிருந்தது.

மகனைப் பொறுத்தவரை முதலில் எதற்கும் கோபப் பட மாட்டான். அப்படியே அதிசயமாகக் கோபப்பட நேர்ந்தாலும் அதை உணவில் காட்ட மாட்டானே என்றிருந்தது.

காலையில் தான் அப்படி முகத்தைக் காட்டியிருக்கக் கூடாதோ.

இனி எப்பொழுதுமே இப்படித் தான் நடந்து கொள்வானோ.

சரிதான் இவன் விஷயத்தில் தான் இனிமேல் எதையும் பேசக் கூடாது. முக்கியமாக இந்த விஷயத்தையும் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

## 58

வீடு வந்து சேர்ந்ததும் முதல் வேலையாகத் தனது அத்தைக்கு போனில் அழைத்துத் தான் வந்து சேர்ந்து விட்டதைச் சொல்லி விட்டிருந்தாள் ஸ்வேதா.

அவர் மாமனாரைப் பின்னாலேயே அனுப்பியிருந்ததையும், தான் வீடு வந்து சேர்ந்து விட்டதை உறுதி செய்து கொண்டு அதற்குப் பிறகே அவர் கிளம்பியதையும் அவள் அறிவாள்.

அவருக்குத் தான் தன் மேல் எவ்வளவு அக்கறை- அதுவும் தாயைப் போல என்று நினைக்கத் தோன்றியது

ஒருவேளை மாமனாரைத் தான் பார்த்து விட்டதை அவரும் அறிவாரோ, அவரை நின்று வீட்டிற்குள் அழைத்திருக்க வேண்டுமோ.

கணவனே சொன்னதைப் போலத் தான் சிறு பிள்ளைத் தனமாகத் தான் நடந்து கொண்டிருக்கிறோமோ.

அவ்வளவுதான்.

கணவனைப் பற்றி நினைக்க நேர்ந்ததே அவளை மிகுந்த வேதனைக்குள்ளாக்கி விட்டிருந்தது.

அவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்ததெல்லாம் பீறிட்டுக் கொண்டு வந்திருக்க, தனது அறைக்கு வந்து கதவைத் தாளிட்டிருந்தாள்.

பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் படுக்கையில் விழுந்து கதறினாள்.

மணமானதிலிருந்து நடந்த அனைத்துமே காரணமே இல்லாமல் முன்னுக்குப் பின் முரணாக நினைவுக்கு வந்து கொண்டே இருந்தன.

அதிலும் இப்பொழுது கடைசி சில நாட்களாகக் காரணமே இல்லாமல் கணவனால் அனுபவிக்க நேர்ந்த வேதனை அவளுடைய மனதை இறுகச் செய்திருந்தன.

தன்னுடைய ஜெயவர்த்தனா அவன்.

ம்கூம் இல்லை.

இல்லவே இல்லை.

அவனால் நிச்சயம் தன்னிடம் இப்படியெல்லாம் நடந்து கொள்ளவே முடியாது.

அவன் இப்பொழுது தன்னுடையவன் அல்ல.

இனியும் அப்படி நினைத்து மனதை வேதனைப்படுத்திக் கொள்வதால் எந்தப் பிரயோஜனமும் இல்லை.

முதல் வேலையாக நடந்ததையெல்லாம் குறைந்தது அப்போதைக்காவது



அப்பொழுதுதான் கடைசிக்கு மற்றவர் பார்க்கவாவது தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடியுமென்று நினைத்தவள் இன்டர்காம் ஒலிக்க தன்னை ஓரளவு சமனப்படுத்திக் கொண்டு எடுத்துக் காதில் வைத்தாள்.

அமிர்தம்தான்.

சில வார்த்தைகள் முயன்று இயல்பாகப் பேசியவள் அவளையே உணவை மேலே கொண்டு வந்து வைத்து விடச் சொல்லியிருந்தாள்.

மூன்று வேளையும்,

தண்ணீர், காபி உட்பட அனைத்தையும் வேளா வேளைக்கு அத்தையின் அதட்டலில் சரியாக சாப்பிட்ட பழக்கம் பசியில் வயிறு நான் இருக்கிறேனென்று நினைவு படுத்தியது.

பெயருக்குக் கொஞ்சம் உண்டவள், மீண்டும் படுக்கையில் விழுந்தாள்.

உறக்கம் கலைந்து மீண்டும் அவள் எழுந்தபோது மணி ஐந்துக்கும் மேலேயே ஆகி விட்டிருந்ததைக் கண்டாள்.

சரிதான், இரவுத் தூக்கத்தை இழந்ததால் தான் இப்படித் தூங்கியிருக்கிறோமென்பது புரிந்தது.

வெளியே எட்டிப் பார்த்தாள்.

டிபன் ஹாட்பாக்ஸ்களை எடுத்துக் கொண்டு, அமிர்தம்
மதிய உணவை வைத்திருந்தது தெரிந்தது.

அதற்குப் பிறகு இப்பொழுது சற்று முன் செய்த
மாலைச் சிற்றுண்டியையும் காபியையும் கூட
மற்றதைத் தவிர்த்து விட்டு காபியை மட்டும் எடுத்துக்
கொண்டாள்.

தந்தை ஒரு முக்கிய பிஸினஸ் வேலையாக மூன்று
நாட்கள் வெளியூர் சென்று விட்டிருந்தது ஒரு விதத்தில்
நல்லதாகத் தான் போயிற்றென்று நினைத்துக் கொண்டாள்.

அன்று போலவே அடுத்த மூன்று நாட்களும் கூட ஸ்வேதா அறையை விட்டு வெளியே வந்திருக்கவில்லை.

வேளா வேளைக்குக் கொஞ்சத்தை உண்டதாகப் பெயர் செய்து விட்டுப் படுத்தே கிடந்தாள்.

அமிர்தத்தின் வற்புறுத்தலாலேயே அதையாவது உண்டாள் எனலாம்.

அன்று நான்காவது நாளும் ஆகியிருக்க, காலையில் எழுந்ததுமே சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குளித்து விட்டு வந்திருந்தாள்.

கண்ணாடியில் தன்னைப் பார்த்தவளுக்கு வயிறு நன்கு மேடிடத் தொடங்கியிருந்தது தெரிந்தது.

ஏனோ எப்பொழுதும் போல அப்பொழுதும் அவளுக்கு அந்த வயிற்றுச் சிசுவின் மேல் சுவாரஸ்யம் ஏற்பட்டிருக்க வில்லை.

அக்கறையும்,

ஏனோ அனைத்துமே தப்புத் தப்பாக தனது விருப்பத் திற்கு மாறாக நடப்பதைப் போல மனம் வெறுத்துப் போயிருந்தது.

கடனே என்று அனைத்தையும் செய்தாள்.

அதைக் கூட மற்றவர்களுக்காகத் தான்.

இண்டர்காம் ஒலிக்க, இந்த நேரத்தில் யாராக இருக்கு மென்று நினைக்கத் தோன்றியது.

ஒருவேளை தந்தை வந்து விட்டாரோ

சென்று எடுத்து காதில் வைத்தாள்.

நினைத்தது போலவே அழைத்தது தந்தையாக இருக்க, சில வார்த்தைகள் பேசிவிட்டு டிபன் சாப்பிட வந்து விடு கிறேனென்று சொல்லி விட்டு ரிஸிவரை வைத்திருந் தாள்.



இன்னதென்று சொல்ல முடியாத வண்ணம் மனமும் உடலும் இறுகிப் போய்க் கிடந்தன.

இனி தந்தையின் கேள்விகளை வேறு சமாளிக்க வேண்டுமே என்ற எண்ணம் அவளை இன்னும் ஏதேதோ எண்ண வைத்திருந்தன.

''வா கண்ணம்மா.''

கீழே வந்த மகளை ஆசையாக வரவேற்றார் பால கிருஷ்ணன்.

''எப்ப வந்தீங்க டாடி?''

''நைட் பதினோரு மணிக்குமா, நீ தூங்கியிருப்பியோன்னு தான் அப்பப் பேசல. எப்படியிருக்க கண்ணம்மா?''

''நல்லார்க்கேன் டாடி.''

''என் பேரக் குழந்தை எப்படியிருக்கு?''

சிறு புன்னகையுடன் ''அதுவும் நல்லார்க்கு'' என்றாள்.

''என்னடாம்மா?''

''சாப்பிடலாமா?''

''பின்ன, உனக்காக தான் வெயிட்டிங்'' என்று தந்தை வர அவருடன் தானும் வந்து சாப்பிட அமர்ந்திருந்தாள்.

அமிர்தம் அனைத்தையும் தயாராக எடுத்து வைத்திருக்க, சாப்பிடத் தொடங்கினார்கள்.

மகளறியாமல் அவளை கவனித்துப் பார்த்த பாலகிருஷ்ண னுக்கு ஏனோ ஒன்றும் சரியாகப் பட்டிருக்கவில்லை.

கொஞ்சமும் உயிர்த்துடிப்பே இல்லாமல் என்ன தோற்றம் இது.

வந்து மூன்று நாட்களாயிற்று தன்னை ஒருமுறை கூட அழைத்துப் பேசியிருக்கவில்லையே.

ஏன் ஒன்றுமே இல்லாத சிறு சிறு விஷயங்களுக் கெல்லாம் கூட அழைத்துப் பேசுவாளே.

முன்பிருந்ததற்கு ஆள் பார்க்கவும் ஒன்றும் தேறினாற் போலத் தெரியவில்லை.

மீண்டும் ஏதாவது பிரச்சனையோ,

ம்கூம் அப்படியெல்லாம் எதுவும் இருக்காது. தனக்குத் தான் அப்படியெல்லாம் தோன்றுகிறது என்று நினைத்துக் கொண்டவர் தான் ஏன்தான் எப்பொழுது பார்த்தாலும் எதையாவது எண்ணி அஞ்சிக் கொண்டே இருக் கிறோமோ என்று தன்னையே நொந்து கொண்டார்.

''இன்னும் கொஞ்சம் வெச்சு சாப்புடுமா.''

''போதும் டாடி, நீங்க வைச்சுக்கோங்க.''

''பின்ன?'' என்று பாலகிருஷ்ணன் மீண்டும் ஒரு முறை கொஞ்சம் வெண்பொங்கலை எடுத்துப் பரிமாறிக் கொண்டு உண்ணத் தொடங்கினார்.

''அம்மா...''

அமிர்தம் வந்து அழைக்க ''என்ன அமிர்தாம்மா?'' என்று கேட்டாள்.

''குடிக்க ஏதாவது கொண்டு வரட்டுங்களாம்மா?''

''ஆமாம், எனக்கு காபி எடுத்துட்டு வாங்க.''

''அப்புறம் கண்ணம்மா.''

''சொல்லுங்க டாடி.''

''நம்ம புது வீட்டு வேல பாதி முடிஞ்சது. நேரம் கிடைக் கும் போது அப்பப்ப போய்ப் பாரு, ஏதாவது மாற்றங்கள், கருத்துக்கள் இருந்தா சொல்லு.''

''சரிதான் டாடி.''

''ஏன் டல்லா இருக்க?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே.''

''சும்மா சொல்லாதமா, பாக்கவே ஒரு மாதிரி...''

''..............''



''என்னாச்சுமா?''

''..............''

''சரிதான், எங்கிட்ட ஏன் சொல்லணும்...''

தந்தையின் கேள்வியில் சலிப்பு தான் அதிகமாக வந் திருந்தது ஸ்வேதாவிற்கு, கூடவே என்ன வாழ்க்கை இதென்ற வெறுப்பும்.

தந்தை வேறு பேச மாட்டாரா என்ற ஆதங்கமும்,

''என்ன ஸ்வேதாம்மா?''

''எனக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்ல டாடி, லேசா சளிப் புடிச்சு தலைவலிக்குது. ரெஸ்ட் எடுக்கணும். இப்பக் கூட நீங்க கூப்புட்டிங்களேன்னு தான் மறுக்க முடி யாம சாப்புட வந்தேன்'' என்றவள் ''நான் போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கறேன்'' என்று எழுந்து விட்டிருந்தாள்.

எழுந்ததோடு மட்டுமல்லாமல் சென்று கைகளைக் கழுவிக் கொண்டு தன்னுடைய அறைக்கும் வந்து விட் டிருந்தாள்.

காபியுடன் வந்த அமிர்தத்தின் கண்களிலும் சின்னம்மா வெறுப்புடன் எழுந்து செல்வது விழுந்தது.

வழக்கமில்லாத வழக்கமாக மகளின் செய்கை பெரியய்யா வையும் மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்க, செய்வதறி யாது அவரும் திகைத்துப் போய் அமர்ந்திருந்ததும், த்யக்கத்துடன் டேபிளுக்கு அருகில் சென்றவள்

''ஐயா உங்களுக்குக் குடிக்...

''வேண்டாம், சின்னம்மாவுக்கு காபி கொண்டு போய்க் குடு'' என்றவர் அவள் இன்னும் தயங்கிக் கொண்டே நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார்.

''என்ன சொல்லு?''

''ஐயா சின்னம்மா ஊர்ல இருந்து வந்து இன்னையோட நாலு நாளாச்சு, வந்த நாள்ல இருந்தே முகம சரியில்ல.

ஏன் இத்தன நாள்ல இன்னைக்கு தான் கீழயே இறங்கி வந்திருக்காங்க. வேளா வேளைக்கு அதுவும் வற்புறுத்தினா தான் பேருக்கு எதையாவது கொஞ்சம் சாப்பிடுறாங்க... அவங்க இருக்கறதுக்கு வழக்கத்த விடவும் நல்லத, சத்தானத எடுத்துக்கணுங்கையா, நீங்க தான் அவங்களுக்கு எடுத்துச்...''

''சரிதான், நான் பாத்துக்கறேன் போ.'' என்ற பெரியய்யாவின் வார்த்தைகளில் சற்று நிம்மதியுடன் அங்கிருந்து நகர்ந்த அமிர்தம் ஆறிவிட்ட காபியை வைத்து விட்டு வேறு காபியைக் கலக்கிக் கொண்டு போய் சின்ன எஜமானியம்மாவிற்குக் கொடுக்கலாமென்று சமையலறைக்குச் சென்றாள்.

எப்படியோ பெரியய்யாவின் காதுகளில் போட்டாயிற்று. இனி அவர் பார்த்துக் கொள்வாரென்று நினைத்துக் கொண்டே தனது வேலையைத் தொடர்ந்தாள்.

# 59

மேலும் சில நாட்களும் சென்றிருந்தன.

நாளுக்கு நாள் ஸ்வேதா தனக்குள் நத்தையாக சுருட்டிக் கொண்டாளே தவிர எந்த முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

அதை பாலகிருஷ்ணனும் பார்த்துக் கொண்டு தான் இருந்தார்.

சரிதானென்று மாப்பிள்ளைக்குப் பேசுவதற்காக அவருடைய கம்பெனிக்கு அழைத்திருந்தார்.

ஆனால் அவர்களோ எம்.டி. வெளியூர் சென்று விட்டார். திரும்ப இன்னும் சில நாட்களாகலாம் என்றார்கள்



அவருக்கே அழைத்துப் பேசினால் என்னவென்று நினைத்தவர், பிறகு அப்படி வேண்டாமென்ற முடிவுக்கு வந்திருந்தார்.

வெளியூரில், அதுவும் முக்கியமான தொழில் விஷயமாகச் சென்றவர் இனி என்ன மனநிலையில் இருக்கிறாரோ ஊர் திரும்பட்டும் பிறகு பார்த்துக் கொள்ளலாமென்று பேசாமல் இருந்து விட்டிருந்தார்.

ஆனாலும் மனம் கேட்கவில்லை.

இனி என்ன பிரச்சனையோ என்று நிம்மதியில்லாமல் தவித்தார்.

இதனை ஏன் மகளிடமே பேசி விடலாமென்ற முடிவுக்கு வந்திருந்தவர் அவளுக்காகக் காத்திருக்காமல் அவரே மகளை நாடி வந்திருந்தார்.

டி.வி. அதன் பாட்டுக்கு ஓடிக் கொண்டிருக்க அங்கிருந்த சோபாவில் அமர்ந்தபடி இலக்கற்று எங்கோ பார்த்துக் கொண்டிருந்த மகளை ''ஸ்வேதா'' என்று அழைத்தார்.

அவர் மேலும் சிலமுறை அழைத்திருக்க, அதற்குப் பிறகே திரும்பியிருந்தாள் ஸ்வேதா.

வாயிலில் தந்தை நின்றிருப்பது தெரிய, ''வாங்க டாடி'' என்று எழுந்திருந்தாள்.

''வாங்க டாடி.''

மகளின் அழைப்பில் உள்ளே வந்தவர், அவள் கேட்டுக் கொண்டதைப் போலவே அங்கிருந்த சோபாவில் அமர்ந்தார்.

அமர்ந்தவர் மகளைப் பார்த்தார்.

''சொல்லுங்க டாடி.''

''உக்காருமா.''

''பரவாயில்ல...''

"அட உக்காரு கண்ணம்மா."

சோபாவில் தனக்கு அருகிலேயே மகள் அமர்ந்திருக்க, "என்னமா பண்ணிட்டிருக்க?" என்று கேட்டார்.

"சும்மா தான்..."

"டிஸ்டர்ப் பண்ணியிருந்தா மன்னிச்சுடுமா."

"ஐயோ என்ன டாடி பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்..."

"அப்ப, அப்படி இல்லேங்கறியா?"

தந்தையின் அந்தக் கேள்விக்கு ஏனோ அவளால் பதில் சொல்ல முடிந்திருக்கவில்லை.

எதுவும் பேசாமல் பார்த்தாள்.

"உன்னக் கஷ்டப்படுத்தணுங்கறது என்னோட எண்ணம் கிடையாதுமா, எம் மனசு கேக்காம.. தான் வந்திருக்கேன் சொல்லு. என்ன பிரச்சன?"

தந்தை இப்படி நேரடியாக விஷயத்திற்கே வருவாரென்று அவள் துளியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்தாள்.

தந்தை தனது பதிலை எதிர்பார்த்துக் காத்திருப்பது புரிந்தது.

என்ன சொல்வது, எதைச் சொல்வதென்று ஸ்வேதாவிற்குத் தான் ஒன்றும் புரிந்திருக்கவில்லை.

முதலில் எப்படித் தொடங்குவது என்றுகூட.

"என்னமா?"

"சொல்லுங்க டாடி."

"எதுவோ உன் நிம்மதியக் கெடுத்துட்டிருக்குங்கறது புரியுது. சொல்லுடாம்மா..."

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே."

"அப்புறம் மாப்பிள்ளைக்கே கூப்புட்டுக் கேக்கறதத் தவிர எனக்கு வேற வழி தெரியலமா."



'ஓ. அருமை மாப்பிள்ளைக்கே அழைக்கப் போகிறாராமா.

சரிதான், அவனும் உள்ளதை உள்ளபடி அப்படியே சொல்லி விடப் போகிறான்.'

தந்தையும்...

"என்னமா?"

"என்ன சொல்லுங்க?"

"உனக்கு என்னதான் பிரச்சன? ஏன் நாளுக்கு நாள் இப்படி உருகிட்டு வர்ற?"

............

"சொல்லுமா."

"என்ன சொல்றது டாடி?"

"என்ன பிரச்சனன்னு தான்."

எதைச் சொல்வது.

எப்படிச் சொல்வது.

தொடக்கமே பிசகென்றா.

சொன்னால் அதைத் தாங்கிக் கொள்ள முதலில் இந்தத் தந்தையால் முடியுமா.

அதற்காக சொல்லாமலே இருந்து விடப் போகிறாயா.

அல்லது அதைச் சொல்லாமலே இருந்துவிடத் தான் முடியுமா?

மனசாட்சி கேட்ட கேள்விக்கும் பதில் சொல்ல முடிந்திருக்கவில்லை.

நடப்பிற்கு வந்து தந்தையைப் பார்த்தாள்.

தனது பதிலுக்காக அவர் காத்திருப்பது தெரிந்தது.

"மாப்பிள்ளை ஏதாவது சொன்னாராம்மா."

..............

"இல்ல வேற பிரச்..."

''வேண்டாம் டாடி, விட்ருங்க.''

''எதமா விடச் சொல்ற?''

''தேவையில்லாம நீங்க கவலைப்பட்றத தான்.''

''எப்படி முடியும். நீ பிரச்சன ஒண்ணுமில்லேன்னு சொல்லு கவலைப்படல...''

''எல்லாமே முடிஞ்சு போயிடுச்சு டாடி...''

அப்படிச் சொன்ன மகளை அதிர்ச்சியைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தார் பாலகிருஷ்ணன்.

என்ன சொன்னாள்...

அல்லது தனது காதில்தான் சரியாக விழவில்லையா...

''எல்லாமே முடிஞ்சு போச்சு, இனிமேல் எதப்பத்திப் பேசறதுக்கும் ஒண்ணுமில்ல.''

''கொஞ்சம் புரியற மாதிரி பேசு ஸ்வேதா.''

தந்தையின் அதிர்ச்சி புரிந்தது.

சரிதான் எப்படியும் அவரும் தெரிந்து கொண்டு தானே ஆக வேண்டுமென்று தோன்ற, ''ஆமாம் எல்லாமே முடிஞ்சு போச்சு'' என்று மீண்டுமொரு முறையும் அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

''எல்லாமேன்னா?''

''எல்லாமே தான்.''

மகளின் திருத்தமான வார்த்தைகள் ஒரு வினாடி அவருக்குக் கோபத்தை வரவழைத்திருந்தன.

''ஏம்மா இப்படி சின்னக் குழந்தை மாதிரி பேசிட்டிருக்க?''

கணவன் கேட்ட அதே கேள்வி.

''பேசு ஸ்வேதா.''

''அதான் சொல்றேனே டாடி, பேச இனிமேல் ஒண்ணுமே இல்ல எல்லாமே முடிஞ்சது.''

''அப்படின்னு நீ சொல்லிட்டா ஆச்சா?''



தந்தையின் கேள்வியில் இப்பொழுது புன்னகையுடன் அவரைப் பார்த்தவள் ''என்னத் தான கேட்டீங்க?'' என்றாள்.

''அது சரிதான் உன்னையும் நம்பி இந்தக் கேள்வியக் கேட்டது தப்புதான்.''

அட,

திடீரென்று இதென்ன இப்படியொரு ஞானோதயம்.

''என்ன மன்னிச்சுடுமா. உன்னக் கேட்டது தப்புதான் தெரியாமக் கேட்டுட்டேன்.''

''வேண்டாம் டாடி, சிரமப்படாதீங்க.''

''அட, அத நீ சொல்றியா?''

தந்தையின் அந்தக் கேள்வியில் தொனித்த ஏளனம் ஸ்வேதாவை மிகுந்த வேதனைக்குள்ளாக்கி விட்டிருந்தது.

தன்னால் அவர் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருப்பது போல,

தான் ஏதோ வேண்டுமென்றே அவருடைய நிம்மதியை கெடுத்துக் கொண்டிருப்பதைப் போல,

ஏன் இன்னும் எதையெல்லாமோ எண்ண வைத்து விட்டிருந்தன.

இதுவே இயல்பான பேச்சில் தந்தை இந்த வார்த்தையைச் சொல்லியிருந்தால் அதில் ஸ்வேதாவிற்குத் தவறாக எதுவும் பட்டிருக்காதோ என்னவோ,

ஆனால் ஏற்கனவே பிரச்சனைகளுக்கிடையில் செய்வதறியாது தத்தளித்துக் கொண்டிருந்தவளுக்குத் தந்தை அப்படிச் சொல்லியிருந்தது மிகுந்த ஆதங்கத்தை வரவழைத்திருந்தது.

ஆனாலும் அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ள வில்லை.

பாவம் அவருடைய ஆதங்கம் அவருக்கு என்று நினைத்துக் கொண்டாள்.

''என்னால் யாரும் சிரமப்பட்றத நானே விரும்ப மாட்டேன். டாடி. நீங்க என்ன அப்படி வளர்க்கவும் இல்ல.''

''அத நீ சொல்லணுமா கண்ணம்மா, உன்னோட மென்மையான குணம் யாருக்கு வரும்? என்னோட கவலையே வேறமா. நான்... நான் ஏதாவது உன் கல்யாண விஷயத்துல உன் விருப்பத்துக்கு மாறா செஞ்சுட்டேனோங்கறது தான்...''

ஆமாம் அப்படித்தானென்று சொல்லிவிட மனம் துடித்தாலும், தந்தை துடித்துப் போவாரே என்று பேசாமல் இருந்தாள் ஸ்வேதா.

பிரச்சனையை வேறு மாதிரி சொல்லலாமென்ற முடிவுக்கு வந்தவளுக்கு, ஏன் தொடக்கத்தில் காரணமே இல்லாமல் மறுத்திருந்தாலும் போகப்போக நாமும் திருமணத்தை வெகு ஆவலுடன் தானே எதிர்பார்த்தோமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதனால் தந்தையும் ஒன்றும் அவசரப்பட்டு விடவில்லை.

இதில் யார் மீது தவறென்று பார்த்துக் கொண்டிருக்க ஒன்றுமில்லை.

அனைத்தும் முடிந்து போய்விட்டது அவ்வளவுதான்.

அதை மட்டும் தந்தைக்கு எப்படியோ புரிய வைத்து விட்டால் போதும்.

''உங்க மேல எந்தத் தப்பும் இல்லை டாடி. அதோட எல்லா அப்பா மாதிரியும் தான் நீங்களும் இயல்பா, யதார்த்தமா என் கல்யாண விஷயத்துல நடந்துக்கிட்டிங்க. எல்லாத்த விடவும் முக்கியமா என் முழு சம்மதத்தோட தான், என் விருப்பத்தோடவும் தான் என் கல்யாணம் நடந்தது. அதனால தயவு செஞ்சு இனியொரு தடவ அந்த மாதிரி நினைச்சு நீங்க வருத்தப்பட ஒண்ணுமே இல்லை.''



ஏனோ மகளின் விளக்கம் பாலகிருஷ்ணனுக்கு எந்த விதமான சந்தோஷத்தையும் கொடுத்திருக்கவில்லை, அதே போல நிம்மதியையும்,

அனைத்துமே முடிந்து போய் விட்டது என்று சொல்லி விட்ட பிறகு இனி அதற்கு வழியும் இல்லையே,

தொடர்ந்து ஸ்வேதாவே பேசினாள்.

''என்ன மன்னிச்சுடுங்கப்பா, இனிமேல் உங்க மகளா இந்த வீட்ல எப்பவுமே வாழற பாக்கியத்த மட்டும் கொடுங்க.''

''இப்படிக் கேக்கறதுக்கு பதிலா நீ என்னக் கொன்னு போட்டுடலாம்மா...''

''டாடி.''

''பின்ன என்னமா, எந்தக் குடும்பத்துல பிரச்சனைகள் இல்லாமிருக்கு. நீ சொல்றதப் பாத்தா உலகத்துல தொண்ணூறு சதவிகிதம் உன்ன மாதிரி நீ நினைக்கற மாதிரி தான் இருக்கணும்.''

இப்படிச் சொல்பவரிடம் இனி என்ன சொல்வது,

''இருக்கலாம் டாடி. ஆனா... ஆனா அதத் தாங்கிக்கற சக்தி எனக்கு தான் இல்லை...''

''நீ என்ன வேணும்னாலும் சொல்லு. ஆனா மாப்ள மேல எந்தத் தப்பும் இருக்காது.''

''அப்ப... அப்ப எம்மேல தான் தப்பிருக்குன்னு சொல்றீங்களா?''

''என்ன நடந்ததுன்னு முழுசாத் தெரியாம அதையும் சொல்றதுக்கில்ல, ஆனா மாப்ள மேல தப்பிருக்க மட்டும் வாய்ப்பே இல்ல...''

என்ன ஒரு நம்பிக்கை.

அந்த நேரத்திலும் சிரிப்பு வந்து விட்டிருந்தது ஸ்வேதாவிற்கு.

ஆனால் என்ன, விரக்தி கலந்த சிரிப்பு.

''தேவையில்லாம மனசப் போட்டுக் குழப்பிக்காத மாப்ள வெளியூர் போயிருக்கார், வரட்டும், அவர்கிட்ட நான் பேசறேன். அப்புறம் எல்லாமே சரியா...''

''என்னன்னு பேசப் போறீங்க?''

''என்ன பிரச்சனைங்கறதப் பத்தி தான் போனதப் பத்தி கூட வேண்டாம். இனிமேல் நல்ல விதமா...''

''நடந்ததையெல்லாம் மறந்துட்டு எம் மகளுக்கு வாழ்க்க குடுங்கன்னு கெஞ்சப் போறீங்களா?''

''ஏம்மா இப்படியெல்லாம் பேசற?''

''சொல்லுங்க டாடி.''

''அப்படிக் கூட செய்வேனா கண்ணம்மா, வேற மாதிரி...''

''ஓ, அதையே வேற மாதிரி கேக்கப் போறீங்க அப்படித்தான...''

''புரிஞ்சுட்டுப் பேசு ஸ்வேதா...''

''அப்படி மட்டும் நடந்ததுன்னா அப்புறம் நீங்க என்ன உயிரோட பாக்க முடியாது...''

மகளின் வார்த்தைகளில் அதிர்ச்சியின் எல்லைக்கே சென்று விட்டிருந்தார் பாலகிருஷ்ணன்.

அவரையறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருக்க, ''இப்படியொரு வார்த்தைய சொல்லிட்டேயேம்மா?'' என்று தடுமாறியபடி கேட்டார்...

அவ்வளவுதான்.

''ஐயோ இல்ல டாடி, நான் அப்படிச் சொன்னது தப்பு தான்'' என்று வந்து தந்தையின் காலடியில் அமர்ந்து ''என்ன மன்னிச்சுடுங்க டாடி'' என்று அதையே திரும்பத் திரும்பச் சொன்னாள் ஸ்வேதா.



''ஆனாலும் எப்படி உன்னால...''

தந்தையின் வேதனை புரிய அவளாலும் தாங்கிக் கொள்ள முடியாது போலிருந்தது.

அவருடைய மடியிலேயே முகம் புதைத்துக் கதறி விட்டிருந்தாள்.

சில வினாடிகளிலேயே சமாளித்துக் கொண்டு விட்டிருந்த பாலகிருஷ்ணன், வேதனையில் அழும் மகளின் தலையை மெல்ல வருடிக் கொடுத்தார்.

மகள் எதனால் அப்படிச் சொல்லியிருப்பாளென்பதை இப்பொழுது அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

நான் உன்னை நம்ப மாட்டேன் மாப்பிள்ளையைத் தான் நம்புவேனென்று சொல்லாமல் சொல்வதைப் போலல்லவா தான் சொன்னதும் இருந்திருக்கிறது.

ஏற்கனவே வேதனையில் இருக்கும் மகளுக்குத் தான் அவ்வாறு சொன்னது இன்னும் அதிக வேதனையைக் கொடுத்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே.

சரிதான், முழுத் தவறும் தன் மீதுதான் அப்படியிருக்கும்போது ஆதங்கத்தை மட்டும் அவள் மீது காட்டுவது என்ன நியாயம்?

ஏனோ நிறுத்த முடியாது போல அழுது கொண்டே இருந்த மகளை சமாதானப்படுத்தும் வகை தெரியாது அமர்ந்திருந்தார் பாலகிருஷ்ணன்.

சில நிமிடங்களில் தானாகவே தெளிந்து விட்டிருந்த ஸ்வேதா, கண்களைத் துடைத்துக் கொண்டு தந்தையை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஸாரி டாடி.''

''எதுக்கு?''

''எல்லாத்துக்கும் தான்...''

''புரியல...''

தந்தையின் கண்களில் தெரிந்த ஒளி அவர் என்ன எதிர்பார்த்து அப்படிக் கேட்கிறார் என்பதைத் தெளிவாக்கி விட்டிருந்தது.

''இல்ல டாடி, என் மேரேஜ் லைஃப் முடிஞ்சது. அதப் பத்திப் பேச இனி ஒண்ணுமே இல்ல. உங்க மகளாவாவது இந்த வீட்ல ஒரு மூலைல இருக்கறதுக்கு மட்டும் அனுமதி கொடுங்க.''

மகளின் வார்த்தைகள் மீண்டும் ஆதங்கத்தை வரவழைத்திருந்தாலும், அதை அப்பொழுது அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

இப்படி ஒரேயடியாக நிற்பவளிடம் தானும் சரிக்கு சரி நிற்பது சரியல்ல.

மெல்ல மெல்ல யோசித்துக் காயை நகர்த்தலாம்.

நிச்சயம் வெற்றி கிடைக்காமல் போகாதென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

''அப்புறம்...''

''என்னமா?''

............

''என்ன பேசு...''

''உங்ககிட்ட எப்படிச் சொல்றதுன்னு கூடத் தெரியல...'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து சோபாவில் அமர்ந்திருந்தவள், ''நான் இவ்வளவு கேட்டுக்கிட்டதுக்கப்புறமும் எனக்குத் தெரியாம நீங்க அவர்கிட்டப் பேசினாலும் அதுக்கு எதிர்மறைப் பலன் தான் கிடைக்குமே தவிர நீங்க எதிர்பார்க்கறது மட்டும் நடக்காது, என் உயிர் இருக்கற வரைக்கும்...''

''போதும் ஸ்வேதா.''

''இதக்கூட ஏன் இவ்வளவு அழுத்தமா சொல்றேன்னா, ஐயோ இப்படியாயிடுச்சேன்னு நீங்க பின்னாடி வருத்தப் படக் கூடாதுங்கறதுக்காகத் தான்.''



''காரணமே இல்லாம இப்படியெல்லாம் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கும் இல்லேங்கறத முதல்ல நீங்க புரிஞ்சுக்கணும். அதனால தான் திரும்பத் திரும்பச் சொல்றேன். என் கஷ்டத்தப் புரிஞ்சுக்க முடியலேன்னாலும் பரவாயில்ல. உயிர் வாழவாவது விடுவீங்கன்ற நம்பிக்கயோட கேக்கறேன். தயவு செஞ்சு உதவுங்க'' என்று கண்ணீருடன் கெஞ்சுவதைப் போலத் தந்தையைப் பார்த்துக் கேட்டாள்.

''போதும் ஸ்வேதா, திரும்பத் திரும்ப ஏன் முட்டாள்தனமாகவே பேசிட்டிருக்க. ஏதோ எம் மனசுக்குப் பட்டத யதார்த்தமா சொன்னேன்தான்னாலும் அதெல்லாம் எதுக்காக நீ நல்லா சந்தோஷமா இருக்கணுங்கறதுக்காகத் தான், ஆனா எப்ப நீ அதுவே கூடாதுன்னு இவ்வளவு அழுத்தமா சொல்றியோ அதுக்கு மேல உனக்குப் பிடிக்காதத, நீ விரும்பாதத செய்ய மாட்டேன் கவலப்படாத. உனக்கப்புறம் தான் எனக்கும் யாரா இருந்தாலும் அதினால மனசப் போட்டுத் தேவையில்லாம குழப்பிக்காம நிம்மதியா இரு.''

''அந்தப் பேரக் குழந்தைய ஆசையாத் தூக்கிக் கொஞ்சற பாக்கியத்தையாவது எனக்குக் கொடுப்பேன்னு நினைக்கறேன்'' என்று விட்டு எழுந்திருந்தவர் மீண்டும் மகளைத் திரும்பிப் பார்த்தார்.

''என்னப்பா சொல்லுங்க?''

''நானா நிச்சயம் பேச மாட்டேன், ஆனா மாப்பிள்ளை அவரா வரும்போது என்னால திருப்பிக்க முடியாது அதையும் நீ புரிஞ்சுக்கணும்.''

சில வினாடிகளின் யோசனைக்குப் பிறகு ''சரிதான்'' என்று பட்டும் படாமல் சொல்லியிருந்தாள் ஸ்வேதா.

மகளின் அறையை விட்டு வெளியே வந்த பால கிருஷ்ணனுக்கு மேலே என்ன செய்வது ஏது செய்வ தென்று ஒன்றும் புரிந்திருக்கவில்லை.

செய்வதறியாது திகைத்தார்.

இப்படி மகள் ஒரேயடியாக பிடிவாதத்துடன் நின்று பார்த்தவரில்லை என்பதாலேயே அவள் சொன்னது அவரை யோசிக்க வைத்திருந்தது.

எவ்வளவு அந்யோன்யமாக இருந்தார்கள்.

எப்படி அந்த உறவு திடீரென்று இப்படிக் கசந்து போயிற்று.

ஆனாலும்...

இவையனைத்தும் மகள் சொல்வது தானே.

மாப்பிள்ளையிடம் பேசினால் நிச்சயம் இதற்கொரு தீர்வு கிடைக்காமல் போகாது.

ஏன் முதலில் பிரச்சனை என்றே ஒன்றுமில்லையே மாமா இனி மற்றது பற்றி ஏன் பேச வேண்டுமென்று அவர் சிரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனோ அப்பொழுதே மாப்பிள்ளையை அழைத்துப் பேசியாக வேண்டும் போலத் தீவிரமாகத் தோன்றிய எண்ணத்தில் திகைத்துப் போனார்.

ஆனாலும் மகளின் வார்த்தைகள் அவரை அப்படிச் செய்ய விடாமல் கட்டிப் போட்டிருந்தன.

அப்படியானால் இந்த விஷயத்தில் தான் செய்வதற்கு ஒன்றுமே இல்லையா.

அப்படிச் சொல்லி விட முடியாது. உடனே செய்ய ஒன்றுமில்லையென்று வேண்டுமானால் சொல்லலாம்.

ஒருவேளை மாப்பிள்ளையே பிரச்சனையெல்லாம் ஒன்றுமில்லையென்று இறங்கி வந்த பிறகும் கூட மகள் பிடிவாதத்துடன் நடந்து கொண்டால்,



ஏனோ அப்படித்தான் நடக்குமென்று மனம் ஆருடம் சொன்னது.

மகளின் நல்வாழ்வுக்காக எதை இழக்கவும் அவர் தயாராக இருக்கும்பொழுது எனக்கு வாழ்க்கையே வேண்டாமென்று அந்த மகளே இப்படி ஒரேயடியாக நின்றால்.

அதுவும் கண்களை மூடிக் கொண்டு தன் முடிவு தான் இறுதியானதென்று அடித்துச் சொன்னால்,

ஒரேயடியாகக் குழம்பிப் போனார் பாலகிருஷ்ணன்.

அதிலும் ஸ்வேதா போல வளர்க்கப்பட்ட ஒரு பெண் அப்படிச் சொல்கிறாளென்றால், நிச்சயம் பிரச்சனையென்று ஏதாவது இருக்கத் தான் வேண்டும்.

மேலே யோசிக்க யோசிக்க மனம் தெளிவடைவதற்கு பதிலாக இருக்கிற நிம்மதியும் கெட்டுப் போனது தான் மீதியாயிற்று.

செய்வதறியாது திகைத்து நின்றார்.

நீதான் இந்த இக்கட்டிலிருந்து மீள ஒரு நல்ல வழி காட்ட வேண்டும் முருகா என்று மனதார வேண்டிக் கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழி புலப்பட்டிருக்கவில்லை.

## 60

சில முக்கிய வேலைகளுக்காக வெளியூர் சென்றிருந்த ஜெயவர்த்தனுக்கு அவன் எதிர்பார்த்ததை விடவும் விரைவாக வேலைகளனைத்தும் முடிந்து விட்டிருந்தன.

திரும்ப பத்து நாட்களுக்கும் மேல் தான் ஆகுமென்று நினைத்துக் கொண்டு வந்தவன், நான்கு நாட்களிலேயே மீண்டும் ஊர் திரும்பியிருந்தான்.

முதல் நாள் சுமிதாவிடம் பேசியபோது கூட நான் வர அதிகபட்சம் ஒரு வாரமாகுமென்று அதுவரை செய்தாக வேண்டிய முக்கியமான வேலைகளைப் பற்றி எடுத்துச் சொல்லியிருந்தான்.

அப்படிச் சொல்லிவிட்டு இப்பொழுது போய் நின்றால் எப்படியிருக்குமென்று நினைக்கத் தோன்றியது.

அதிலும் இந்த முறை ஃப்ளைட்டில் சென்று வந்து விட்டதால் பயணமும் சுலபமாக அமைந்து விட்டிருந்தது.

நான் வந்து விட்டேன் ஆடர்ஸ் ஃபைல்களைத் தயாராக எடுத்து வை வந்து பார்க்கிறேனென்று சொல்வதற்காக செல்போனை எடுத்திருந்தவன், பிறகு வேண்டாமென்று விட்டு விட்டிருந்தான்.

கடந்த ஒரு வாரமாக மனம் சற்றும் நிம்மதியில்லாமல் தவித்தது.

கடந்த பல வாரங்களாகவே எதுவும் சரியில்லைதானென்றாலும், மனைவி ஊருக்குக் கிளம்பிச் சென்று விட்டதிலிருந்து அவனால் ஒன்றும் முடிந்திருக்கவில்லை.

வாய் விட்டே புலம்பாத குறைதான்.

யாரோ கை கால்களைக் கட்டிப் போட்டு விட்டாற் போலத் துடித்தும் போனான்.

என்ன வெளியே காட்டிக் கொள்ளாமல் மனதிற்குள் வைத்துக் கொண்டு புழுங்கினான்.

அதனாலோ என்னவோ கடந்த பத்து நாட்களாகவே இரவுத் தூக்கமும் இல்லாது போயிருந்தது.

அவ்வப்பொழுது போட்ட குட்டித் தூக்கம் மட்டும் தான்.

இப்பொழுது பத்து நாட்களாகுமென்று கணித்துச் சென்ற வேலை நான்கு நாட்களிலேயே முடிந்தது கூடத்



தூங்காமல் கொள்ளாமல் மனதையும் அலைபாய விடக் கூடாதென்று வேலையே கதியென்று பார்த்ததின் பலன் தான்.

நேராக வீட்டிற்கே காரை விட்டிருந்தவனுக்கு, மனைவி வீட்டில் இருக்க மாட்டாளென்று எண்ணமே மிகுந்த வேதனையைக் கொடுத்து விட்டிருந்தது.

முடிந்தால் மனைவியிடம் பேச வேண்டும்.

முடிந்தால் என்ன, அதற்கான முயற்சியை எடுத்துத் தான் ஆக வேண்டுமென்று நினைத்தவனுக்கு அன்று மாலையே தான் மனைவியைப் பார்க்க ஊருக்குச் சென்று வந்தாலென்னவென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

சரிதான் எதுவானாலும் வீடு போய் குளித்து பிரஷ் செய்து ஒரு குட்டித் தூக்கம் போட்டு விட்டுப் பிறகு பார்த்துக் கொள்ளலாமென்று வீட்டிற்கு முன்னால் காரை நிறுத்தியிருந்தான்.

மனைவி இல்லாத வீடு சிறையாகத் தோன்றியது.

சற்றும் நகர மாட்டேனென்று மறுத்த கால்களால் காரை ஒரு ஓரமாகப் போட்டு விட்டு படியேறினான்.

தந்தை மட்டும் முன் அறையில் இருக்க, சில வார்த்தைகள் பேசிவிட்டுத் தன்னுடைய அறைக்கு வந்திருந்தான்.

பழைய நினைவுகள் முட்டி மோத மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

எதுவும் தோன்றாது அப்படியே அமர்ந்து விட்டிருந்தான்.

ஆனால் அதெல்லாம் சிறிது நேரம் தான். சென்று பிரஷ் செய்து குளித்து விட்டு வந்தவன் பிறகு ஒரு குட்டித் தூக்கமும் போட்டு விட்டு எழுந்திருந்தான்.

அதற்கு மேல் படுத்திருக்க முடியவில்லை.

எழுந்து வெளியே வந்திருந்தான்.

''வாப்பா, எப்ப வந்த?''

''ரெண்டு மணி நேரமாச்சுமா, எல்லாரும் எப்படியிருக்கீங்க?''

''எங்களுக்கென்ன இருக்கோம்...''

தாயின் சலிப்பு புரிந்தது. கூடவே அதற்கான காரணமும்.

ஆனால் அதற்குள் இயல்பு நிலைக்கு வந்து விட்டிருந்த காஞ்சனா ''சாப்பிடலாம் வாப்பா'' என்று அழைத்தார்.

''எல்லாரும் சாப்...''

''வேற யாரு, நானும் உங்கப்பாவும் மட்டும்தான் இருக்கோம். அவரு லேட்டாகும், அதுக்கப்புறம் தான் நானும். சரி நீ வா கண்ணா...''

தாய் பரிமாற, எங்கிருந்து தான் அவ்வளவு பசி வந்ததோ பல நாட்களுக்குப் பிறகு வயிறார சாப்பிட்டான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு எப்பொழுதும் போல ருசித்து உண்ட மகனைப் பார்த்த காஞ்சனாவிற்கும் மனம் இளகி விட்டிருந்தது.

பாவம் தொழில், தொழிலென்று எவ்வளவு சிரமப் படுகிறானென்று நினைக்கத் தோன்றியது.

ஆனாலும் அந்தக் கோபம்,

அதை மட்டும் கொஞ்சம் குறைத்துக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அப்புறம் கண்...''

''சொல்லுங்கள்.''

''ஸ்வேதாவப் பாக்கலாம் போலவே இருக்குப்பா. சின்னக் குழந்த மாதிரி ரொம்ப வெகுளி பாவம். தனியா



அவ அங்க கஷ்டப்பட்டுடிருக்கும்போது நீ இங்க அல்லாடி...''

''இன்னைக்கு ஊருக்குப் போலாம்னு இருக்கேம்மா, போய் அழைச்சுட்டு வந்துட்றேன்.''

''நிஜமா தான் சொல்றியாப்பா!''

''ஏம்மா அதுலென்ன உங்களுக்கு இவ்வளவு ஆச்சரியம்?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா...'' என்று லேசாகக் கலங்கி விட்டிருந்த கண்களைத் துடைத்துக் கொண்டார் காஞ்சனா.

''கேக்கவே ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா. எனக்கு அவ வேற லாவண்யா வேற கிடையாது. ஏன் எல்லாத்த விடவும் ஸ்வேதா கொஞ்சம் மேலன்னு கூடச் சொல்லலாம், மனுஷங்க மேல அவ்வளவு பணிவு, ஆக, அன்...''

''புரியுதுமா, உங்க மருமக நாளைக்கு இங்க இருப்பா போதுமா?'' என்று புன்னகை செய்த மகனைப் பெருமை பொங்கப் பார்த்தார் காஞ்சனா.

சரிதான், எப்படியோ அனைத்தும் சுமுகமாகி விட்டால் அதுவே போதும்.

ஏதோ கெட்ட நேரம், அதுதான் இப்படிப் படுத்தி விட்டிருக்கிறது...

''என்னமா?''

''திடீர்னு எப்படி இப்படி...''

''புத்தி வந்ததுன்னு கேக்கறீங்களா?''

''அச்சச்சோ, நானொன்னும்... அப்படி.''

தாயின் தயக்கத்தில் இப்பொழுது நன்றாகவே சிரித்து விட்டிருந்தான் ஜெயவர்த்தன்.

''எப்படியோ இப்பவாவது வந்ததேன்னு சந்தோஷப் படுங்கம்மா'' என்று சிரிப்பினூடே சொன்னான்.

வெகு நாட்களுக்குப் பிறகு மகனின் இயல்பான பேச்சு காஞ்சனாவை மனம் நிம்மதியடையச் செய்திருந்தது.

இதேபோல அந்தப் பெண்ணிடமும் பேசினால் அதுவே போதுமென்று நினைத்துக் கொண்டார்.

''என்னமா யோசன?''

''சரிதான் என்னாலயே ஸ்வேதாவப் பாக்காம நிம்மதியா இருக்க முடியல. அப்படியிருக்கும் போது நீ மாறினதுல என்ன அதிசயமிருக்க முடியும்?'' என்றார்.

சரிதான்.

மனைவியைப் பிரிந்திருந்தது போதும்,

என்னதான் அவள் செய்ததும் தவறே என்றாலும் கூட, அதையே நினைத்துக் கொண்டு அவளைப் பிரிந்திருந்து ஒவ்வொரு நாளையும் ஒரு யுகம் போலக் கழிக்க வேண்டுமென்ற கட்டாயமென்ன.

எத்தனை, எத்தனையோ வேலைகளினூடே தனக்கே இப்படியிருக்கிறதென்றால், மனைவிக்குப் பாவம் எப்படியிருக்கும்.

ஏன் மனைவி சுமிதாவை அழைத்து அப்படிச் சொன்னதும் கூட தன் மேலிருக்கும் காதலால் மட்டுமே அல்லவா.

போதும்,

அதை மனதில் வைத்துக் கொண்டு அவளை வதைத்தது போதும்.

ஏனோ மனைவியை அப்பொழுதே பார்த்தாக வேண்டும் போல வெகு தீவிரமாகத் தோன்றிய எண்ணத்தில் திகைத்துப் போனான்.

அதுவும் தாய் தன்னைப் பற்றி என்ன நினைப்பாரென்று தோன்றி விட்டிருக்க உடனே நடப்பிற்கு வந்திருந்தான்.



''அப்புறம் கண்ணா.''

''என்னமா சொல்லுங்க.''

''நெல்லு வித்த பணம் வந்ததுப்பா, அதுல உன் அண்ணனுங்க ரெண்டு பேரும் அவங்க பங்க எடுத்துட்டாங்க. உன்னோடது உள்ள இருக்கு. உங்கப்பா சொல்லிடச் சொன்னார்...''

''ஏம்மா இப்படிப் பிரிச்சுப் பேசறீங்க. அதுல லாவண்யாவுக்கு நகைகளை எடுத்திருங்க.''

''அவ்வளவுக்குமா? அதுவும் அது உன் பணம். உனக்கு தொழிலுக்கு ஏதாவது தேவையிரு...''

''உங்களுக்கு ஏதாவது தேவைன்னா சொல்லுங்க நான் தர்றேன். அது எவ்வளவா இருந்தாலும் பரவாயில்ல. நான் சொல்ற மாதிரி செஞ்சுடுங்க.''

''கிட்டத்தட்டப் பத்து லட்சம் இருக்கும்பா.''

''இருக்கட்டும்மா, இந்தக் காலத்துல நக விக்கற விலைக்கு அதுவே பத்தாது...''

''ஆனாலும்...''

''அட என்னம்மா, எப்ப தோட்டத்திலிருந்து இல்ல அப்பாகிட்டிருந்து நான் பணம் வாங்கியிருக்கேன் இவ்வளவு யோசிக்கறீங்க?''

''ஐயோ, நான் அந்த அர்த்தத்துல சொல்லலப்பா. அப்ப உனக்குக் கல்யாணமாகல. குடும்பமும் இல்ல. இப்ப அந்தப் பணத்துல நீ ஸ்வேதாவுக்கு ஏதாவது செய்...''

என் சொந்த உழைப்புலயே என் மனைவிக்குத் தேவையானத என்னால செய்ய முடியும் என்று நினைத்துக் கொண்ட ஜெயவர்த்தனால் அதை அப்படியே அதுவும் தாயிடம் சொல்ல முடிந்திருக்கவில்லை.

அதிலும் வெள்ளை மனதுடன் சொல்பவரிடம் போய் எப்படி...

''என்னப்பா?''

''சரிதாம்மா, எப்படியும் ஸ்வேதாவும், லாவண்யாவும் தான போய் எடுப்பாங்க. அவங்க பாத்துக்கட்டும் விட்டுடுங்க'' என்று முடித்து விட்டிருந்தான்.

சரிதான், நாமும் உடன் சென்று சரி பாதியாக இருவருக்கும் எடுத்து விடலாமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார் காஞ்சனா.

''சரிமா நான் கிளம்பறேன்.''

''சரிப்பா, ஸ்வேதாவ அழைச்சுட்டு வர சாயங்காலம் அப்படியே போயிடுவியா?''

''அது வேலயப் பொறுத்து தான். எப்படியும் சொன்னதை செய்வேன். கவலைப்படாதீங்க'' என்று வந்து காரை எடுத்திருந்தான் ஜெயவர்த்தன்.

இத்தனை நாட்களும் பட்ட துன்பங்கள் போதும்.

தான் செய்த தவறுகளைத் தானே மனைவியிடம் பேசி அனைத்தையும் நேராக்கி விடலாமென்ற நம்பிக்கையுடன் காரைச் செலுத்தினான்.

அதிலும் வெகுளித்தனமாக அவள் செய்ததற்குப் போய்த் தான் அப்படியெல்லாம் நடந்து கொண்டது மிகப் பெரிய தவறல்லவா.

என்னதான் மனைவியிடம் சென்று பேசி விட வேண்டுமென்பதில் மிகவும் உறுதியாகவே இருந்தான் என்றாலும், அது அவ்வளவு சுலபமானதாக இருக்குமென்று தோன்றவில்லை.

என் அந்த நாள் தனக்கு மிகப் பெரிய கறுப்பு நாளாக அமையப் போகிறது என்பதையும் பாவம் அவன் அப்பொழுது அறிந்திருக்கவில்லை.

அடுத்த அரை மணி நேரத்தில் கம்பெனியை வந்தடைந்திருந்த ஜெயவர்த்தன், முதலில் கம்பெனிக்குள் ஒரு



ரவுண்ட் போய்விட்டு அதற்குப் பிறகு தனது இருக்கைக்குச் சென்று விடலாமென்று நடந்தான்.

## 61

அதே நேரம் தனது இடத்தில் அமர்ந்து மும்முரமாக வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள் சுமிதா.

அன்று குரியரில் வந்திருக்கும் கவர்களை எடுத்துப் பிரித்தவள், தான் பார்த்தாலே போதும் என்றவற்றை மட்டும் பைலில் போட்டவள், சிலவற்றை ஜெயவர்த்தன் டேபிளில் அவனுடைய பார்வைக்காக வைத்தாள்.

அப்படியே மிகவும் முக்கியமென்று வந்திருந்த கவர்கள் சிலவற்றைப் பிரிக்காமலும்,

அதற்கே பத்து நிமிடங்களுக்கும் மேல் ஆகியிருக்க, இன்னும் ஏன் இப்படிக் காகிதங்களில் அனுப்பி உயிரை வாங்குகிறார்கள். உலகம் எவ்வளவு சுருங்கி விட்டது. இ-மெயிலாக அனுப்பி விட்டுப் போக வேண்டியது தானே. நாமும் ஃபார்வட் செய்துவிட்டுப் போய் விடலாமென்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்டாள்.

கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

அழைத்துப் பேசவேண்டுமென்று குறித்து வைத்திருந்த சில நிறுவனங்களுக்கு ஆடர்கள் சம்பந்தமாகப் பேச வேண்டியிருந்த சில முக்கியமான விஷயங்களைப் போன் மூலமாகப் பேசி உறுதி செய்தாள்.

இடையிடையே தனக்கு, அதாவது கம்பெனி சம்பந்தமாக வந்த அழைப்புகளையும் அட்டெண்ட் செய்து பேசினாள்.

இவற்றிற்கிடையில் இன்டர்காம் வேறு.

நின்று சில வினாடிகள் சுதாரித்துக் கொள்ளக் கூட
வழியில்லாத அளவிற்கு வேலைகளே சரியாக இருந்தன.
செய்யப்படாமல் ஆனால் அன்றே செய்தாக வேண்
டிய வேலைகளென்றும் இன்னும் நிறையக் கிடந்தன.
இப்பொழுது தான் புதிதாகத் தொடங்கப்பட்ட கம்பெனி
யென்று சொன்னால் முதலில் யாராவது நம்புவார்களா.
புதிய, புதிய ஆடர்கள்.

அதிலும் சவாலான மிகப்பெரிய ஆடர்கள் வேறு.

ஆனாலும் அவற்றையெல்லாம் திட்டமிட்டு வெகு
சுலபமாக முடித்துக் கொடுப்பதுமில்லாமல் மேலும்
மேலும் புதிய ஆடர்கள் வேறு அதுவும் நாளுக்கு நாள்
அதிகரித்துக் கொண்டே போவதை சுமிதா அவள் தான்
மலைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாளே தவிர, எந்தக்
குறையும் இல்லாமல் ஏன் ஒரு சிறிய தடங்கல் கூட
இல்லாமல் வெற்றிகரமாகத் தான் அனைத்தும் நடந்தேறிக்
கொண்டிருந்தன.

அதற்குக் காரணமும் ஜெயவர்த்தனன்றி யாராக
இருக்க முடியும்.

இதே வேகத்தில் சென்றானானால் இன்னும் சில வரு
டங்களிலேயே தானெல்லாம் நெருங்கக் கூட முடியாத
உயரத்திற்குப் போய் விடுவானென்று தோன்றியதில்.
மிகவும் பொறாமையாகக் கூட உணர்ந்தாள் சுமிதா.

படிக்கும் காலம் தொட்டே இவனால் மட்டும் எப்படி
ஒவ்வொரு விஷயத்திலும் வெற்றியெனும் கனியை
வெகு இயல்பாகப் பறிக்க முடிகிறதென்றும்,

என்னதான் திட்டமிட்ட உழைப்பும், முயற்சியும்
இருந்தாலும் கூட அது இருப்பவர்கள் அனைவருமே
இவனைப் போல முன்னேறி விடுகிறார்களா என்ன,
என்றும்,



எது எப்படியோ இந்த முறை அவன் வெளியூரிலிருந்து
வந்ததும் தனக்கு அசிஸ்டண்டாக இரண்டு பேரை
வேலைக்கு நியமிக்கச் சொல்லிவிட வேண்டுமென்று
நினைத்ததோடல்லாமல், குறித்தும் வைத்துக் கொண்டாள்.

ஆபீஸ் பாய் டீ ஃப்ளாஸ்க்கை கொண்டு வந்து
வைத்து விட்டுப் போக, சரிதான் இனி டீ இண்டர்வெல்
பத்து நிமிடங்களை எடுத்துக் கொண்டு தான் அடுத்த
வேலையென்று அமர்ந்து விட்டிருந்தாள்.

தனக்கு அஸிஸ்டண்டாக இருவரை எடுத்துக் கொண்ட
தற்குப் பிறகு தான் வேலை செய்வதை முற்றிலுமாகத்
தவிர்த்து விட வேண்டும்.

இருந்திருந்து இவனுக்காக ஏன் உயிரைக் கொடுத்து
உழைக்க வேண்டும், எப்படியிருந்தாலும் இந்த ஜெயவர்த்தன்
தன்னை அவனிடம் வேலை செய்யும் ஊழியர்களில்
ஒருத்தியாகத் தான் பார்க்கப் போகிறான்

அந்த அளவிற்கு நாமும் நடந்து கொண்டால் போது
மென்று நினைத்துக் கொண்டே கையிலிருந்த டீயைக்
குடிக்கத் தொடங்கினாள்.

அந்த நேரத்தில் தொலைபேசியில் வந்த அழைப்பு
களை அவள் அட்டெண்ட் செய்திருக்கவில்லை.

சில நிமிடங்களில் டீயைக் குடித்து முடித்தவள்,
இன்னும் ஐந்து நிமிடங்கள் போகட்டுமென்று பேசாமல்
அமர்ந்து விட்டிருந்தாள்.

அதற்குப் பிறகும் வேலையில் கவனத்தைத் திருப்ப
மனம் வந்திருக்கவில்லை.

சரியாக அந்த நேரம் பார்த்து வெளியூர் அழைப்பு
ஒன்று வர. சரிதான் போனால் போகட்டுமென்று ரிசீவரை
எடுத்துக் காதில் வைத்திருந்தாள்.

அப்படி வைத்தவளுக்கு எல்லையற்ற ஆனந்தம்.

''அக்கா, சொல்லுங்க எப்படியிருக்கீங்க?'' என்று மிகுந்த சந்தோஷத்துடன் கேட்டாள்.

அழைத்தது வேறு யாருமல்ல, பத்மினிதான்.

''உங்க போனைத் தான்கா ரொம்ப நாளா எதிர்பாத்துட்டிருக்கேன், நானா நாலஞ்சு தடவ கூப்புட்டும் உங்கள லைன்ல பிடிக்க முடியல. எல்லாரும் எப்படியிருக்கீங்க?'' என்பதில் தொடங்கி அவள் மிகுந்த ஆர்வத்துடன் பேச வேண்டுமென்று நினைத்திருந்தவற்றையெல்லாம், முக்கியமாக சொல்ல நினைத்திருந்தவையனைத்தையும் வெகு சுவாரஸ்யத்துடன் சொல்லத் தொடங்கி விட்டிருந்தாள்.

அதைச் சொல்லச் சொல்லி, எதிர்புறத்தில் இருந்தவளும் அவள் சொல்வதை வெகு சுவாரஸ்யத்துடன் கேட்கத் தொடங்கி விட்டிருக்க, சுற்றியிருந்த அனைத்தையுமே மறந்து அவள் பாட்டுக்குத் தொலைபேசியில் மெய்மறந்து போயிருந்தாள்.

அப்படித் தன்னை மறந்து பேசத் தொடங்கியிருந்தவள் எம்.டி. ஜெயவர்த்தன் உள்ளே வந்ததைக் கூட கவனித்திருக்கவில்லை.

ஆம், அவனும் தொடக்கத்திலேயே அதாவது ஸ்வேதாவிடம் அவள் ஆடிய நாடகத்தைப் பற்றி சொல்லத் தொடங்கிய போதே வந்து விட்டிருந்தான்.

ஏன் அதிலிருந்து நடந்ததனைத்தையுமே.

சுமிதா வெகு மும்முரமாகப் பேசிக் கொண்டிருந்த போது உள்ளே வந்திருந்த ஜெயவர்த்தன் பாவம் அவளுடைய சொந்தத்தில் யாரோ அழைத்திருக்கிறார்கள் போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டே தன்னுடைய அறையை நோக்கியும் செல்லத் தொடங்கி விட்டிருந்தான்.



ஆனால் அதற்குள் ஸ்வேதா என்ற அந்த வார்த்தை அவனை நிறுத்தியிருந்தது.

அதே இடத்தில் நின்று விட்டிருந்தான்.

அதற்கு மேல் அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு பெரிய இடியாக அவனுடைய தலையில் வீழ்ந்து அவனைத் தடுமாறச் செய்திருந்தன என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

அவனை யாராவது அந்த அளவிற்கு நிலை குலையச் செய்து விட முடியுமென்று முன்பே யாராவது சொல்லியிருந்தாலும் கூட அதை அவன் நம்பியிருக்க மாட்டான்.

ஏன் யாருமே.

அவள் அதாவது சுமிதா எதிர்புறத்திலிருந்த பத்மினியிடம் சொன்னதும் இதுதான்.

கல்லூரிக் காலத்தில் அவள் ஜெயவர்த்தனைக் காதலித்தது.

ஆனால் அதை அவன் வெகு இயல்பாக அதே சமயம் உறுதியாக மறுத்து விட்டிருந்தது.

அது அவளுடைய மனதில் மறையாத வடுவை ஏற்படுத்தி விட்டிருந்தது.

அதற்குப் பிறகு விதி வசத்தில் வேறு வாழ்க்கை அமைந்திருந்தாலும் அவளுடைய துரதிர்ஷ்டம் அது நிலைக்காமல் போனது.

பிறகு ஜெயவர்த்தனின் உதவியை நாடியது.

அவனை அவளுடைய மனைவி ஸ்வேதாவுடன் சந்திக்க நேர்ந்தது.

இப்படி அதுவரை வெகு இயல்பாக அனைத்தும் நடந்திருந்தாலும், அந்த ஸ்வேதாவைக் கண்டதற்குப் பிறகு வாழ்க்கையில் அவளுக்கு நேர்ந்த இழப்பு படுபயங்கரமாகத் தெரியத் தொடங்கியது.

அதனால் அவள் நிம்மதியில்லாமல் தவித்தது.

கடைசியில் பழி வாங்க வேண்டுமென்று முடிவுக்கு வந்தது.

அதற்காக அவளொரு நாடகத்தை ஜோடித்து அரங்கேற்றியது.

அதற்குப் பிறகு அவள் சொன்னவற்றை தான் அவனால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

இப்படிக் கூட நடந்து கொள்ள முடியுமா? அதுவும் இல்லாமல் எப்படி இப்படியெல்லாம் நாடகமாட முடிந்ததென்று நம்ப முடியாமல் திகைத்து நின்றான்.

அதுவும் துளிகூட குற்ற உணர்ச்சியே இல்லாமல் இவ்வளவு பெரிய நம்பிக்கை துரோகத்தை,

எப்படியாவது கணவன் மனைவியைப் பிரித்துப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் நன்கு திட்டமிடப்பட்ட நாடகத்தை அவள் அரங்கேற்றியதைப் பற்றிச் சொல்லச் சொல்ல, அப்படியே சென்று பெண்ணென்றும் பாராமல், அவளை ஒரு கை பார்த்து விட வேண்டுமென்னும் அளவிற்குக் கோபம் வந்திருந்தது ஜெயவர்த்தனுக்கு.

தொடர்ந்து அவள் சொன்னதும் இதுதான்.

அதாவது தான் அவளிடம் அதாவது சுமிதாவிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றேனென்று வெகு உருக்கத்துடனான ஏற்ற இறக்கங்களுடன் ஸ்வேதாவிடம் சொன்னதில் தொடங்கிக் கடைசியாகத் தான் வெளியூர் சென்று வந்த அன்று ஸ்வேதா அவளுக்கு போன் செய்து மிரட்டினாளென்று தன்னிடம் சொன்னது வரை ஒன்று விடாமல் அனைத்தையுமே சொல்லியிருந்தாள்.

சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் வெகு சுவாரஸ்யத்துடன் அவள் அரங்கேற்றிய



நாடகத்தை சொல்லச் சொல்ல, அதைக் கேட்ட ஜெயவர்த்தனுக்குக் கோபத்தில் கண்கள் சிவந்து விட்டிருந்தன.

அதே கோபத்துடன் அவளை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்திருந்தவனை, மேலும் குதூகலத்துடன் அவள் அப்பொழுது சொன்ன வார்த்தைகள் நிறுத்தியிருந்தன.

''அதுவும் பாருங்கக்கா, இந்த ஸ்வேதாதான் நான் சொல்றத உடனே நம்பித் தன் புருஷன ஒரு வழி செய்வான்னு நான் நினைச்சேன்.''

''ஆனா என்ன ஆச்சரியம் ஒரு முறை, ரெண்டு முறையல்ல தொடர்ந்து எத்தனையோ முறை போன் பண்ணி அவ புருஷனப் பத்தித் தப்புத் தப்பா சொன்னதையெல்லாம் கூட அவ நம்பல.''

''ஏன் என் புருஷனப் பத்தி எனக்குத் தெரியும். நீ ஒரு முறையல்ல இன்னும் ஓராயிரம் முறை சொன்னாலும் அதையெல்லாம் நான் துளிகூட நம்ப மாட்டேன்னு சண்டைக்கு வந்துட்டான்னாப் பாருங்க.''

''அது மட்டுமில்லக்கா, அவ அப்ப மிரட்டின மிரட்டல்ல நான் கொஞ்சம் பயந்து கூடப் போயிட்டேன்.''

''ஏன் இத்தன கஷ்டப்பட்டும் பலனே இல்லாமப் போயிடுச்சேன்னு மனசு கூட ஒடிஞ்சு போயிட்டேன்.''

''ஆனாலும் அந்த ஸ்வேதாவ நான் அந்த அளவுக்கு எதிர்பார்க்கல.''

''ரொம்ப பெரிய பணக்காரிங்கறதால இந்த ஜெயவர்த்தனத் தூக்கியெறிஞ்சுட்டுப் போயிடுவான்னு நினைச்சேன்.''

''ஆனா அவ தன் புருஷன் மேல வெச்சிருக்கற நம்பிக்கையப் பாக்கும்போது எப்படிச் சொல்றதுன்னே தெரியல. நிச்சயம் பாராட்டியே தான் ஆகணும்.''

''ஆனா இதெல்லாம் அந்த ஸ்வேதா ஸைட்ல தான்.''

''அவளே சொன்ன மாதிரி இன்னும் ஓராயிரம் தடவ அவகிட்ட அவ புருஷனப் பத்தித் தப்புத் தப்பாச் சொன்னாலும் அவ அதக் காதுல கூட வாங்கிக்க மாட்டாங்கறதக் கடைசியா தான் புரிஞ்சுக்கிட்டேன்.''

''அப்பதான் இதே நாடகத்த மாத்திப் போட்டுப் பாத்தா என்னன்னு தோணுச்சு.''

''அதையும் செஞ்சேன்.''

''ஸ்வேதா எனக்கு போன் பண்ணினா. அப்படிச் சொன்னா இப்படிச் சொன்னான்னு ஒரு அழுகையோட சொன்னேன் பாருங்க. அத அந்த ஜெயவர்த்தன் நம்பிக்கிட்ட மாதிரி தான் தெரிஞ்சது.''

''இனி போய்ப் பாவம் பொண்டாட்டிய எப்படியெல்லாம் அதட்டி உருட்டினானோ.''

''இல்ல அவனும் அப்படியே அதாவது ஸ்வேதா மாதிரியே கண்டுக்காம விட்டுட்டானோ தெரியல.''

''இந்த நேரம் பாத்து நீங்க இங்க இல்லாமப் போனது தான்கா எனக்குப் பெரிய வருத்தமே.''

''சரிதான் நீங்க கூப்புட்டும் ரொம்ப நேரமாச்சு, அதோட வேற என்ன முக்கியமான போனெல்லாம் வந்ததே தெரியல. மறுடியும் நான் கூப்புட்றேன்கா வெக்கறேன்'' என்று ரிஸீவரை அதனிடத்தில் வைத்திருந்தாள் சுமிதா.

''சபாஷ்.''

திடீரென்று தனக்குப் பின்னாலிருந்து வந்த அந்தக் குரலில் துள்ளி விழுந்து திரும்பினாள் சுமிதா.

அப்படித் திரும்பியிருந்தவள், அங்கிருந்த ஜெயவர்த்தனை நம்ப முடியாத அதிர்ச்சியுடன் பார்த்ததோடு, அரண்டும் போயிருந்தாள்.



ஏன் அப்படியே நடுங்கவே தொடங்கி விட்டிருந்தாளென்று கூடச் சொல்லலாம்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

பிறகு முடிந்த அளவு அதிர்ச்சியையும் பயத்தையும் தனக்குள் மறைத்துக் கொண்டு நிமிர்ந்து நின்றாள்.

ஆனாலும் சிவந்த கண்களுடன் அளவு கடந்த கோபத்துடன் நின்றிருந்த ஜெயவர்த்தனை தொடர்ந்து நேருக்கு நேராகப் பார்க்க முடிந்திருக்கவில்லை.

''இவ்வளவு கீழ்த்தரமானவளா நீ? அது மட்டுமா நம்பிக்கை துரோகியும் கூட. உன்னையெல்லாம்...''

''போயிடு, என் கண்ணுக்குப் படாத தூரத்துக்குப் போயிடு. இதுவே நான் உன்னப் பாக்கற கடைசி தடவையா இருக்கணும். இனிமேல் என் முகத்துல கூட விழிக்காத போயிடு... போ...''

கோபத்துடனான ஜெயவர்த்தனின் வார்த்தைகளில் அரண்டு மிரண்டு போயிருந்தவளுக்கு, தொடர்ந்து அங்கே நின்று கொண்டிருக்க தைரியமிருக்கவில்லை.

அந்த வினாடியே கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டிருந்தாள்.

ஆனாலும் அந்த சுமிதா வாயிலில் நின்று பயத்துடன் திரும்பிப் பார்க்க, ''உன் மிச்சம் மீதியெல்லாம் கூரியர்ல உன் அட்ரஸ்க்கு சில நாள்ல வந்து சேரும். போ போயிடு'' என்று அருவெறுப்புடன் வாயிலை நோக்கிக் கை காட்டியிருந்தான்.

இன்னது தானென்று மிகச் சரியாக விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித மனநிலையில் இருந்தவனுக்கு, தலை மிகுந்த பாரத்துடன் கனக்கத் தொடங்கி விட்டிருந்தது.

அப்படியொரு இக்கட்டான சூழ்நிலையை அவன் வாழ்க்கையில் இதுநாள் வரை சந்தித்ததே இல்லையென்று கூடச் சொல்லலாம்.

நேராகத் தனது அறைக்குச் சென்றிருந்தவன் கண்களை மூடி அப்படியே தனது இருக்கையிலேயே சாய்ந்து அமர்ந்து விட்டிருந்தான்.

எண்ண ஓட்டங்கள் அப்படியே ஸ்தம்பித்துப் போயிருக்க, எவ்வளவு நேரம் அப்படி அமர்ந்திருந்தானென்று அவனுக்கே தெரிந்திருக்கவில்லை.

ஆனாலும் வெகு நேரம் கடந்து விட்டிருந்தது மட்டும் தெரிந்தது.

வெளியே வரவேற்பறையில் தொலைபேசிகள் அதன் பாட்டுக்கு ஒலிப்பதும், நிற்பதுமாக இருப்பதும் கேட்டன.

ஏற்கனவே இருக்கும் மனநிலைக்கு அது இன்னும் மன இறுக்கத்தை அதிகப்படுத்தியிருக்க, தலை விண்விண்ணென்று தெறிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

திடீரென்று ஏதோ தோன்றியவனாக தனது செல்போனை எடுத்து யாருக்கோ அழைத்தான்.

"ம், நீ ஒரு வேலை செய்யணும். உன்னோட வேலைகளை உனக்கு அடுத்ததா இருக்கற பர்ஸன் கிட்ட ஹேண்ட் ஓவர் பண்ணிட்டு இன்னும் ஒன் அவர்ல நீ இங்க புது ஆபீஸ்க்கு வந்தாகணும், இங்க ரிஷப்ஷனிஸ்ட் திடீர்னு அவங்க வேலைய ரிசைன் பண்ணிட்டாங்க" என்று பழைய கம்பெனிக்கு அழைத்து அங்கிருக்கும் அதாவது அவனுடைய பழைய பி.ஏ.வை இங்கு வரச் சொல்லி விட்டு போனை வைத்திருந்தான்.

எப்படியும் இன்னும் சில வாரங்களில் அங்கிருக்கும் அனைத்துமே இங்கு புதுக் கம்பெனிக்கு மாறவிருந்ததால் ரிஸப்ஷனிஸ்ட் பிரச்சனை எளிதாகத் தீர்ந்து போயிற்று.

தொடர்ந்து வேறு யாரையோ தனது டேபிளில் இருக்கும் இன்டர்காமில் அழைத்தவன், நான்



ஜெயவர்த்தன். ஒரு ஒன் அவர் இங்க ரிஸப்ஷன்ல வந்து இருந்து பாத்துக்கோங்க என்று விட்டு ரிஸீவரை அதனிடத்தில் வைத்திருந்தான்.

ஒரு எம்.டி.யாக அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மிக எளிதாகத் தீர்வு காண முடிந்தவனால், ஏனோ அவனது விஷயத்தில் அப்படி முடிந்திருக்கவில்லை.

மிகவும் முயன்றே மேலும் சில மணி நேரங்கள் அங்கு இருந்தவன், அதற்குப் பிறகு கிளம்பி விட்டிருந்தான்.

காரை எடுத்துக் கொண்டு இலக்கில்லாமல் எங்கெங்கோ சுற்றியவன் கடைசியில் வீடு வந்து சேர்ந்தபோது மணி மாலை ஆறு ஆகியிருந்தது.

வீட்டிற்குள் வந்த மகனை என்ன இவன் மனைவியை அழைத்து வர ஊருக்குப் போவதாகச் சொன்னானே என்று ஆச்சரியத்துடன் பார்த்தார் காஞ்சனா.

இவனைப் பொறுத்தவரை ஒன்றைச் சொல்லி விட்டால் செய்து விடுவானே.

"வாப்பா" என்று அழைத்தவர் அதற்குப் பிறகு தான் மகனின் முகத்தை கவனித்தார்.

அப்படி கவனித்தவர், உண்மையிலேயே பயந்து விட்டிருந்தார்.

ஏன் இப்படிப் பார்க்கவே ஒரு மாதிரி எதையோ இழந்து விட்டாற் போல முகம் இப்படி இருக்கிறது.

என்ன பிரச்சனையென்றாலும் அதைத் துளிகூட வெளியில் காட்டிக் கொள்ள மாட்டானே, இப்பொழுது என்னவாயிற்று இவனுக்கு.

"டிபன டேபிள் மேலயே வெச்சுடுங்க. நான் நைட் வந்து சாப்புட்டுக்கறேன்."

"அது சரி, ஏன் என்னாச்சு பாக்கவே ஒரு மா..."

"கொஞ்சம் உடம்பு சரியில்லமா, நல்ல தலைவலியும் கூட."

"அடடா, டாக்டர் கிட்டப் போய்ட்டு வந்தியாப்பா?"

"இல்லமா, சரியான தூக்கமில்லாதது தான் காரணம் போய்த் தூங்கினா ஓரளவு சரியாயிடும்."

"சரிதான், கஷாயம் ஏதா..."

"இல்லமா ஒண்ணும் வேண்டாம்."

"சரிதான் கண்ணா, போய் ரெஸ்ட் எடு போ. பாவம் வெளியூர் வெளியூர்னு கொஞ்ச நாளாவே நீயும் ரொம்பத் தான் சிரமப்பட்ற. படுத்துக்கோ போ."

சில வினாடிகளில் தன்னுடைய அறைக்கு வந்திருந்த ஜெயவர்த்தன் தாயிடம் சொல்லி விட்டு வந்தது போல படுத்து விட்டிருந்தான்.

கொஞ்சம் தூங்க முடிந்தால் இந்த மன இறுக்கம் சற்றேனும் குறையுமோ என்று தோன்றி விட்டிருக்க, அப்படியே கண்களை மூடிக் கொண்டான்.

## 62

அன்றும் எப்பொழுதும் போல எழுந்து விட்டிருந்தாலும் டிபன் சாப்பிடும் நேரத்திற்குத் தான் கீழே இறங்கி வந்தாள் ஸ்வேதா.

வந்தவள் பேப்பர் படித்துக் கொண்டிருந்த தந்தையின் அருகில் சென்று "சாப்பிட வர்றீங்களாப்பா?" என்று கேட்டாள்.

"இரு நித்யனும் வந்துடட்டும்."

"யாரு..."

"ம், உங்கிட்ட சொல்ல மறந்துட்டேனில்ல. அமெரிக்கால இருந்து நித்யன் வந்திருக்கான்."



"எப்ப?!"

"இப்பக் கொஞ்சம் முன்னாடி தான். அழைச்சுட்டு வர டிரைவர அனுப்பியிருக்கேன் என்னமா?"

"நீங்க போயிருக்கலாமே, சொல்லியிருந்தா நான் போயிருப்பேன் டிரைவர எதுக்கு..."

"அதனால என்னமா? அந்த மாதிரி ஃபார்மாலிட்டிஸ் எல்லாம் அவனும் பாக்க மாட்டானே."

"இருந்தாலும்..." என்று ஏதோ சொல்ல வந்தவள் பிறகு பேசாமல் இருந்து விட்டிருந்தாள்.

"இனி திரும்பவும் இப்பத்துக்குத் திரும்பற ஐடியா இல்ல போலிருக்கு. இங்க நம்ம வீட்ல தான் தங்குவான்..."

"அப்படியா! ரொம்ப சந்தோஷம். என்ன விஷயமா வர்றான்..."

"இங்க ஒரு இண்டஸ்ட்ரி ஸ்டார்ட் பண்றதுக்காக வர்றான், மேக்ஸிமம் அதுக்காக அலையணும் வெளியவே தங்கிக்கறேன் எந்த நேரத்துக்கு வர, போக முடியும்னே தெரியாதுன்னு சொல்லிட்டிருந்தான்..."

"அதனாலென்ன..."

"அதான், அதுக்காகவெல்லாம் ஒண்ணும் பாக்க வேண்டிய அவசியமில்லை. இங்கயே நம்ம வீட்லயே இருன்னு சொல்லியிருக்கேன். அப்படி இல்லேன்னாலும் கெஸ்ட் ஹவுஸ் இருக்கு..."

"அச்சச்சோ, அவன் இங்க நம்ம வீட்லயே இருக்கட்டும் டாடி. என்ன நீங்களே இப்படிச் சொல்றீங்க?"

"என்ன பண்றதுமா, அவன் சொன்னத உங்கிட்ட சொல்றேன். எல்லாத்துக்கும் மேல இந்தக் காலத்துல யங் ஜெனரேஷன் மனசெல்லாம் யாருக்குப் புரியுது சொல்லு..."

தந்தையின் அந்த வார்த்தைகளில் அவரைப் பார்த்தாள் ஸ்வேதா.

தன்னை நினைத்துத் தான் அப்படிச் சொல்கிறாரோ என்ற எண்ணம் அவளுக்கு.

தந்தையின் பார்வை அதை உறுதியும் செய்தது.

நித்யன் பாலகிருஷ்ணனின் அண்ணன் மகன், அவன் பிறந்தது வளர்ந்தது என அனைத்துமே அமெரிக்காவில் தான்.

ஏதோ தவிர்க்க முடியாத காரணத்தினால் ஸ்வேதா வின் திருமணத்திற்குக் கூட அவன் வந்திருக்கவில்லை.

ஏன் ஸ்வேதாவிற்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து இப்பொழுது அவன் இந்தியா வருவது மூன்றாவது முறை.

ஆனால் ஸ்வேதா அப்படியல்ல,

திருமணத்திற்கு முன்பு வரை ஒவ்வொரு வருடமும் அவள் அங்கு அமெரிக்காவில் இருக்கும்.

பெரியப்பா வீட்டிற்கு சென்று தங்கி சொந்தம் கொண்டாடி விட்டு வருவது வழக்கம்,

நித்யனுடன் பிறந்தவர்கள் ஒரு அக்கா ஒரு தங்கை என இன்னும் இரண்டு பேர்,

"வாவ், ஸ்வேதா!"

"நித்யன் வா வா! எப்படியிருக்க, என்ன திடீர் சர்ப்ரைஸ்?"

"அதெல்லாம் இருக்கட்டும் நீ எப்படியிருக்க? பெரிய மனுஷியாயிட்ட..." என்று புன்னகையுடன் வீட்டிற்குள் வந்த நித்யனை பாலகிருஷ்ணன் தானும் சந்தோஷமாக வரவேற்றார்.

"வரலாம் சித்தப்பா, ஸ்வேதா இங்க இருக்கான்னு நீங்க சொல்லவே இல்லையே. நானும் கூட அவ அவங்க வீட்ல இருப்பான்னு நினைச்சுட்டிருக்கேன்..."

"ஹலோ, இது தான் என் வீடு."



"சரிதான் இது உன் வீடு தான், ஆனா நான் சொல்றது உன் புகுந்த வீட்டப் பத்தி..."

"அதெல்லாம் நீ சொல்ல வேண்டாம், பெரிய மனுஷ னுக்கு இப்பதான் நாங்கெல்லாம் கண்ல தெரிஞ்சோமாக் கும்? என்னவோ பெரிய இவன் மாதிரி வெளிய தங்க றேன்னு சொன்னியாமே. கொழுப்பா?"

"அடடடட, அதே வாய். ஒவ்வொன்னா கேளு அப்ப தான பதில் சொல்ல முடியும்?"

"உன்ன யாரு கேள்வி கேட்டா, திட்டிட்டிருக்கேன்."

"ஆனாலும் நீ கொஞ்சம் கூட மாறவே இல்ல ஸ்வேதா."

"அப்புறம், தினம் தினம் மாறிட்டா இருப்பாங்க?"

"உக்காரு நித்யன்."

"இல்ல சித்தப்பா, நல்ல பசி சீக்கிரம் போய் கொஞ்சம் ரிஃப்ரஷ் பண்ணிட்டு வந்துடறேன்."

"சரிதான், போய்ட்டு வாப்பா."

"பாத்துடா, கொஞ்சம் குனிஞ்சே போ கூரை தலைல முட்டிடப் போகுது..."

"அத நீ சொல்றியாக்கும் ஒட்டகச் சிவிங்கி இரு உன்ன வந்து பேசிக்கறேன் எவ்வளவு கலாய்க்க வேண்டிய திருக்கு" என்று திரும்பிப் பார்த்து சிரித்துக் கொண்டே போன அண்ணனைத் தானும் புன்னகையுடன் பார்த்தாள் ஸ்வேதா.

"முன்னைக்கு இப்பத் திரும்பவும் ஹைட் ஆயிட் டான் போலிருக்கு டாடி."

"இல்லமா அப்படியே தான் இருக்கான், என்ன திரும்பவும் கொஞ்சம் வெயிட்டக் குறைச்சிருக்கான். அதனால அப்படித் தெரியும்."

"இருக்கலாம்."

"உன்ன விட அஞ்சு வயசு பெரியவன், மரியாதை குடுத்துப் பேசுமா."

"அது சரி, சின்ன வயசுல இருந்து இப்படியே கூப்பிட்டாச்சு. அப்புறம் யாரோ போல இருக்கும்."

சிறிது நேரத்தில் நித்யனும் வந்திருக்க, மூவரும் சாப்பிட வந்தார்கள்.

நித்யனுக்கும், ஸ்வேதாவிற்கும் பேச எத்தனையோ விஷயங்கள் இருந்தன.

இடையிடையே சிறியவர்களுடன் ஓரிரு வார்த்தைகள் பேசியதோடு சரி, தன் பாட்டுக்கு சாப்பிடுவதில் கவனமாக இருந்த பாலகிருஷ்ணனுக்கு, மனதிற்குள் வேறு எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

ஒரு வழியாக டிபன் முடிந்திருக்க, மூவரும் ஹாலுக்கு வந்திருந்தனர்.

"அப்புறம் உன்னவர் எப்படியிருக்கார் ஸ்வேதா. அவரைப் பத்தி இன்னும் நீ ஒன்னுமே சொல்லல."

நித்யன் கேட்க "நல்லார்க்கார்" என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லியிருந்தாள் ஸ்வேதா.

அதில் எரிச்சலும் கோபமும் கூட தொனித்ததோ என்ற சந்தேகம் நித்யனுக்கு. அவன் சித்தப்பா பாலகிருஷ்ணனைப் பார்க்க, அவரும் அப்பொழுது தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

ஏதோ பிரச்சனை என்பது புரிந்தது.

"சரிமா நான் ஆபீஸ் கிளம்பறேன். மதியம் வந்துடுவேன் நித்யன் அது வரைக்கும் நீயும் போய் நல்லாத் தூங்கி ரெஸ்ட் எடு திரும்பவும் லஞ்சுக்கு அப்புறம் ரெண்டு பேரும் ஆபீஸ் போலாம்."

"சரி சித்தப்பா."



மீண்டும் ஒரு முறையும் இருவரிடமும் சொல்லிவிட்டு பாலகிருஷ்ணன் கிளம்பியிருக்க, "அப்புறம் லஞ்சுக்கு என்ன செய்யச் சொல்றது?" என்று நித்யனிடம் கேட்டாள் ஸ்வேதா.

"சந்தேகமே இல்லாம என்வி தான். இங்க சிக்கன், மட்டன், ஃபிஷ் எல்லாம் டேஸ்ட் பண்ணி எவ்ளோ நாளாச்சு."

"சரிதான் செய்யச் சொல்லிடறேன்."

"ஏதோ ஒன்ன மட்டும் ரெண்டு மூணு விதத்துல செய்யச் சொல்லு. இல்லன்னா அப்புறம் கஷ்டம்."

"சரிதான்டா, போய் தூங்கி எழுந்து வா. போ."

"உங்கிட்ட என்னவோ வித்யாசம் ஆனா அது என்னன்னு தான் எனக்குப் புரியவே மாட்டேங்குது..."

"சரிதான், போய் ரெஸ்ட் எடு..."

"சொல்லாத, போகப் போக நானே தெரிஞ்சுக்கறேன்."

"சரிதான் போடா."

"என்ன மரியாதை. உன் வீட்டுக்காரரையும் இப்படிதான் கூப்புடுவியா?"

"பேசாம போயிடு."

"ஆனா ஒன்னு மட்டும் நல்லாத் தெரியுது."

"என்னது?"

"முன்னைக்கு இப்ப பாக்க ரொம்ப அழகாயிட்ட. அதுலயும் உன்னவரப் பத்திப் பேசும் போது உன்னையே அறியாம நீ வெட்கப்படறதப் பாத்..."

நித்யனின் வார்த்தைகளில் அங்கு டீபாயின் மேலிருந்த ஒரு பெரிய ஆங்கில இதழை எடுத்து அவன் மீது வீசியெறிந்திருந்தாள் ஸ்வேதா.

"ஐயோ இனி இது வேறயா, ரொம்பவும் பாவம் தான் உன்னவர்" என்று கவலையுடன் சொல்லிக் கொண்டே

போன நித்யனின் பாவனையில் அவளையறியாமல் சிரித்துக் கூட விட்டிருந்தாள்.

ஆனாலும் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

அடுத்த வினாடியே தனது தவறை உணர்ந்து திருத்திக் கொண்டும் விட்டிருந்தாள்.

''ஸ்வேதாம்மா.''

''ம், என்ன அமிர்தாம்மா?''

''காபி கேட்டிங்கமா...''

''குடுங்க, என்ன சொல்லுங்க?''

''உங்க அண்ணன்...''

''யாரு, நித்யன சொல்றீங்களா?''

''ஆமாம்மா, பாக்க ரொம்ப உயரமா ஏன் கிள்ளினா இரத்தம் வந்துடுமோன்னு பயப்படற அளவுக்கு கலரா பிரமாதமா இருக்காருங்கமா.''

''சரிதான் அப்படியே அப்பா, பெரியப்பா மாதிரியே. நீங்க இப்ப தான அவன ஃபர்ஸ்ட் டைம் பாக்கறீங்க?''

''ஆமாங்கம்மா, அப்படியே உங்க ஜாடையும் இருக்கு.''

''சரிதான்,'' என்றவள், மதிய உணவிற்கு செய்ய வேண்டியவற்றைப் பற்றிச் சொன்னாள்.

''என்ன சொல்லுங்க?''

''போன வாரமெல்லாம் இருந்ததுக்கு இப்பதாம்மா உங்க முகத்துல சிரிப்பு வந்திருக்கு.''

''சரிதான் அமிர்தாம்மா, நித்யன் கேட்டதையெல்லாம் செய்யறதுக்கே உங்களுக்கு நேரம் பத்தாது போய் அந்த வேலையத் தொடங்குங்களேன்'' என்று ஸ்வேதா சொல்ல,

''சரிங்கம்மா நீங்க சொன்ன நேரத்துக்குள்ள ரெடி பண்ணிடறேம்மா'' என்று சென்றாள் அமிர்தம்.

# 63

மதிய உணவு முடிந்து சில மணி நேரங்கள் ஓய்வுக்குப்பிறகு கிளம்பிய சித்தப்பா பாலகிருஷ்ணனுடன் தானும் கிளம்பியிருந்தான் நித்யன்.

தனது இருக்கைக்கு வந்த சில நிமிடங்களிலேயே கம்பெனிக்குள் ரவுண்ட்ஸ் செல்வதற்காக எழுந்தார் பாலகிருஷ்ணன்.

''நீயும் வர்றியா நித்யன்?''

''இல்ல சித்தப்பா நீங்க போய்ட்டு வாங்க. எனக்கு முக்கியமான வேலைகள் சிலது இருக்கு.''

''சரிதான், ஏதாவது ஹெல்ப் வேணும்னாலும் கேளுப்பா...''

''பின்ன, ஒன்னு ரெண்டல்ல எத்தனையோ இருக்கு. உங்கள தான் நம்பியிருக்கேன். ஆனா...''

''ம், என்னப்பா?''

''ஒன்னுமில்ல சித்தப்பா.''

''அட, எதுவானாலும் கேளு.''

''இல்ல ஃபர்ஸ்ட் ஸ்டெப்ல இருந்து அதாவது தோதான இடம் பாத்து கன்ஸ்ட்ரக்ஷன் வேலையை ஸ்டார்ட் பண்றதுல இருந்து ஆயிரக்கணக்கான வேலைகளிருக்கு. நினைச்சாலே மலைப்பா இருக்கு சித்தப்பா.''

''சரிதான், அதுக்கு ஆளுங்க இருக்காங்க. பணம் மட்டும் இருந்தா உக்காந்த இடத்துல இருந்து என்ன சாதிக்க முடியாது? பண உதவியே எதாவது தேவைப் பட்டாலும் கூட சொல்லுப்பா. ஏன் சிரிக்கற?''

''இல்ல அந்த ஒரு உதவி மட்டும் தான் எனக்கு தேவைப்படாது'' என்றவன் மத்தபடி எல்லா உதவிகளும் வேண்டியதிருக்கும் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

ஏனோ அந்த நேரத்தில் தனது மருமகன் ஜெயவர்த்தனின் நினைவு தான் வந்தது பாலகிருஷ்ணனுக்கு.

வெளியூரிலிருந்து திரும்ப இன்னும் எத்தனை நாட்களாகுமோ என்றிருந்தது.

''சரிதான் சித்தப்பா நீங்க ரவுண்ட்ஸ முடிச்சுட்டு வாங்க.''

''எல்லாத்தையும் சேத்துப் பாத்தா மலைப்பா தான் இருக்கும். முதல் கட்டமா செய்ய வேண்டிய வேலைகள மட்டும் நீ ஒரு லிஸ்ட் எடுத்து வை பாக்கலாம்.''

''சரிதான் சித்தப்பா.''

பாலகிருஷ்ணன் கிளம்பியிருக்க, தனது வேலையில் முனைந்திருந்தான் நித்யன்.

சில நிமிடங்கள் சென்றிருக்க, ''எக்ஸ்கியூஸ் மீ'' என்ற கம்பீரமான குரலில் நிமிர்ந்து பார்த்தான் நித்யன்.

இளைஞன் ஒருவன் நின்றிருக்க, அவனை முன்பே எங்கோ பார்த்தது போலிருந்தது.

''வாங்க'' என்று வரவேற்றான்.

''ஸார் ரவுண்ட்ஸ் போயிருக்காரா?''

வந்தவன் சித்தப்பாவைத் தான் கேட்கிறான் என்பது புரிய, ''ஆமாம் வாங்க உக்காருங்க'' என்றான்.

''நீங்க? உங்கள நான் இதுக்கு முன்னாடி பாத்ததில்லையே.''

வந்தவன் கேட்க, அதாவது ஜெயவர்த்தன் கேட்க சரிதான் சித்தப்பாவுக்கு வேண்டியவனாக இருக்கும். பார்க்க வேறு மிகவும் மரியாதையாகத் தெரிகிறான்



என்று நித்யன் அவனையறியாமலேயே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''எம்பேரு நித்யன். பாலகிருஷ்ணன் சாரோட அண்ணன் பையன்.''

''ஓ, அதான அந்த ரிஸம்பிள்ஸ் நிறைய இருக்கேன்னு பாத்தேன். நீங்க வெளிநாட்ல...''

''ஆமாம், அமெரிக்கால இருந்து இன்னைக்கு தான் வந்தேன்.''

''அங்க எல்லாரும் நல்லார்க்காங்களா?''

''ஆமாம், நல்லார்க்காங்க.''

''ஸார் இப்பதான் ரவுண்ட்ஸ் கிளம்பினாரா?''

''ஆமாம், பத்து நிமிஷமாச்சு. எப்படியும் இன்னும் ஒரு அரை மணி நேரத்துல வந்துடுவார்.''

நித்யன் சொன்னது அதனால் போய்விட்டுப் பிறகு வருகிறாயா என்பதைப் போலிருக்க, ஜெயவர்த்தனுக்கும் சரிதான் அரைமணி நேரத்தை வெட்டியாகக் கழிப்பதா என்றிருந்தது.

ஆனால் நித்யனுக்கோ அதென்ன இவன் தன்னைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பது. நாம் கைகட்டி பதில் சொல்வது என்றிருந்தது.

பதிலுக்கு நீங்கள் யாரென்று வந்தவனைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் அவனுக்குத் தோன்றியிருக்கவில்லை.

ஆனாலும் அவனையறியாமலேயே ஜெயவர்த்தனின் கேள்விகளுக்கு பதில் சொன்ன வண்ணம் இருந்தான்.

தான் மட்டும் இந்த மாதிரியெல்லாம் நினைத்துக் கொண்டிருக்க, தனக்கு எதிரே அமர்ந்திருப்பவனுக்கு அப்படியெல்லாம் எதுவுமே தோன்றவில்லை போலல்லவா தெரிகிறது.

அது மட்டுமா,

அவனுடைய கேள்விகளுக்குத் தான் சர்வ நிச்சயமாக பதில் சொல்வோம் என்பதைப் போலல்லவா கேள்விக்கு மேல் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருக்கிறான் என்றும்.

இவனிடம் கேட்டால் தனது சந்தேகங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்குமா.

நம்பிக்கையே இல்லாமல் தான் கேட்டான் நித்யன். ஆனால் புதையலே பதிலாகக் கிடைத்திருந்தது.

அவன் கேட்டிருந்த அனைத்துக் கேள்விகளுக்குமே. பல நாட்கள் தேடியலைந்து சேகரிக்க வேண்டியவற்றையெல்லாம் பத்திருபது நிமிடங்களில் சொல்லி விட்டிருந்தவனை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

ஏனோ எதிரிலிருப்பவனைப் பிடித்துப் போய் விட்டிருந்தது நித்யனுக்கு.

தன் மனதிற்குப் பட்டதை வெளிப்படையாகவே சொன்னான்.

''இதுல என்ன இருக்கு. எனக்கு ரொம்ப நல்லாத் தெரிஞ்ச விஷயங்களையே கேட்டதால சொன்னேன்.''

அவனுடைய தன்னடக்கமும் பிடித்திருந்தது.

மேலும் சிறிது நேரமும் கூட தன்னையே மறந்து சுவாரஸ்யமாகப் பேசத் தொடங்கி விட்டிருந்தான்.

கேட்ட கேள்விகளுக்கு மட்டும் எளிமையாக பதில் சொன்ன விதம் அவன் மீது மிகுந்த மரியாதையையும் வரவழைத்திருந்தது.

ஏனோ எதிரிலிருப்பவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் வந்திருக்க, ''நீங்க யாரு, உங்களப் பத்தி ஒன்னும் சொல்லவே இல்லையே?'' என்று கேட்டான்.



நித்யன் கேட்கவும், பாலகிருஷ்ணன் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

அங்கு ஜெயவர்த்தனைக் கண்டவருக்கு மிகுந்த சந்தோஷமாகி விட்டிருந்தது.

''வாங்க மாப்ள'' என்று மனம் நெகிழ வரவேற்றார்.

''எப்படியிருக்கீங்க மாமா? அப்புறம் ஸ்வேதா...''

''எல்லாரும் ரொம்ப நல்லார்க்கோம் மாப்ள. அப்புறம் அங்க வீட்ல அம்மா அப்பா எல்லாரும் நலமா?''

''நல்லார்க்காங்க.''

''நீங்க எப்ப வெளியூர்ல இருந்து வந்தீங்க?''

''ரெண்டு நாளாச்சு.''

''அப்படியா'' என்றவர் நித்யனைத் தனது மாப்பிள்ளைக்கு அறிமுகப்படுத்தினார். அதே போல ஜெயவர்த்தனை அவனுக்கும்.

தனது மாப்பிள்ளையை அறிமுகப்படுத்தும் பொழுது சித்தப்பாவின் முகத்தில் தெரிந்த பெருமை நித்யனின் கவனத்தில் விழத் தவறவில்லை.

மேலும் ஜெயவர்த்தனைப் பற்றி சித்தப்பா பாலகிருஷ்ணன் சொல்லச் சொல்ல மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனான்.

அதே போல இதிலென்ன இருக்கிறது என்பதைப் போல ஜெயவர்த்தன் பேச்சை மாற்றிய விதம், அவனிடம் இன்னும் விஷயம் நிறைய இருப்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டியது.

''ஸ்வேதா நல்லார்க்காளா?''

ஜெயவர்த்தன் கேட்க, மகள் முட்டாள்தனமாக உளறியவை தான் அப்பொழுது நினைவிற்கு வந்தன பாலகிருஷ்ணனுக்கு.

''அவளுக்கென்ன மாப்ள நல்லார்க்கா, ஆனா...''

''என்ன மாமா சொல்லுங்க?''

ஏனோ தான் அங்கு அதிகப்படியாகத் தோன்ற, ''இதோ இப்ப வந்துர்றேன்...'' என்று எழப் போனான் நித்யன்.

ஆனால் அதற்கு விடாமல் மற்ற இருவருமே அதுவும் ஒரே சமயத்தில் தாங்கள் ஒன்னும் இரகசியம் பேசப் போவதில்லை இருங்கள் என்று விட்டிருக்க, அப்படியே அமர்ந்து விட்டிருந்தான்.

ஏனோ அதற்குப் பிறகு நித்யன் அங்கு தன்னை அதிகப் படியாக உணரவில்லை.

''என்ன மாமா சொல்லுங்க?''

''ஸ்வேதா.... ஏதேதோ முட்டாள்தனமா உளறிட்டிருக்கா மாப்ள.''

..........

''அவ்வளவுதான் எல்லாமே முடிஞ்சு போச்சு அது இதுன்னு சொல்லிட்டிருக்கா, அதுவுமில்லாம...''

இன்னும் மகள் சொன்ன அனைத்தையுமே சொல்லி விட்டிருந்தார் பாலகிருஷ்ணன்.

உள்ளதை உள்ளபடி தனது மருமகனிடம் சொல்லி விட்டால் மந்திரம் போட்டாற் போல உடனே அனைத்தும் சரியாகி விடுமென்ற அதீத நம்பிக்கை அவருக்கு.

அதனாலேயே மகள் சொன்ன எதையும் மறைக்காமல் அப்படியே சொல்லியிருந்தார்.

மிகுந்த ஆதங்கத்துடனும் தான்.

அப்படிச் சொல்லிவிட்டு மருமகனின் பதிலுக்காக அவனுடைய முகத்தையே பார்த்தார்.

அந்தப் பார்வையில் தெரிந்த அந்த லேசான பயமும் பதட்டமும் தன் மீதே எரிச்சலை வரவழைத்திருந்தன ஜெயவர்த்தனுக்கு.

அனைத்துப் பிரச்சனைகளும் தனது முட்டாள்தனத்தினால் வந்த விளைவு அல்லவா என்ற ஆதங்கம் அவனுக்கு.

ஆனால் பாலகிருஷ்ணனையோ அவளது மௌனம் மிகுந்த பயத்தில் ஆழ்த்தி விட்டிருந்தது.

''ஸ்வேதா அப்படியெல்லாம் பேசினது தப்பு தான் மாப்ள, அதுக்காக நான் மன்னிப்புக்...''

''ஐயய்யோ என்ன மாமா பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க. நியாயமாப் பாத்தா நீங்களும் ஸ்வேதாவும் தான் என்ன மன்னிக்கணும்.''

''நீங்களும் ஏன் மாப்...''

''ஆமாம் மாமா, சுருக்கமா சொன்னா கருத்து வேறுபாடு தான். ஆனா அதுக்காக நான் ஸ்வேதாவ ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன்.''

''அவளோட கோபம் நியாயமானது. ஏன் ரொம்பக் குறைவும் கூட...''

ஜெயவர்த்தனின் உண்மையான வருத்தம் பாலகிருஷ்ணனுக்கும் மகளின் மீது கோபத்தை வரவழைத்து விட்டிருந்தது.

ஒரு பெண் இப்படியிருந்தால் எப்படி, அப்படியே மாப்பிள்ளையே சொல்வதைப் போல தவறு அவர் மீதே இருந்தாலும் கூட விட்டுக் கொடுத்துப் போகத் தெரிய வேண்டாமா என்றிருந்தது.

அந்த வீட்டுப் பெரியவர்களும் தான் என்ன இவளை மருமகளைப் போலவா நடத்துகிறார்கள். அவர்களுக்காக வாவது இவள் சற்றுப் பொறுத்துப் போக வேண்டாமா.

அதுவும் மாப்பிள்ளையே நடந்ததை உணர்ந்து வருந்தும் போது...

''இதையெல்லாம் நான் சொன்னது கூட ஸ்வேதா மேல எந்தத் தப்பும் இல்லேங்கறதத் தெளிவு படுத்தத் தான்.''

"தயவு செஞ்சு இந்த விஷயத்துல நீங்க அவள ஒண்ணும் சொல்லிடாதீங்க. அது ஸ்வேதாவுக்கு எம்மேல இருக்கற கோபத்த இன்னும் அதிகமாக்குமே தவிர குறைக்காது."

"அதுக்காக ஒன்னுமே பேசாம விட்டுட முடியுங்களா..."

"நான் பேசறேன். இத நான் பாத்துக்கறேன்."

"ஆனாலும் ஸ்வேதாவோட பிடிவாதத்தப் பத்தி உங்களுக்குத் தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லைன்னு நினைக்கறேன்."

"சரிதான். ஆனாலும் காரணமே இல்லாம யாரும் அப்படிப் பிடிவாதம் பிடிக்க மாட்டாங்க. முக்கியமா ஸ்வேதா."

இதென்ன, மாப்பிள்ளையே இவ்வளவு இடம் கொடுத்தால் பிறகு மகள் இன்னும் மேலே போக மாட்டாளா.

பாலகிருஷ்ணன் அப்படி நினைத்துக் கொண்டிருக்க, ஜெயவர்த்தனோ வேறு மாதிரி எண்ணிக் கொண்டிருந்தான்.

மனைவியே சொன்னதைப் போலத் தான் செய்தது கொலைக் குற்றத்திற்கு சமமானதல்லவா.

அதற்கு மன்னித்து விடு என்று ஒற்றை வார்த்தை கேட்டு விட்டால் முடிந்ததா.

முடியாது.

ஏன் நியாயமும் கிடையாது.

மனைவியாகப் பார்த்து மிகுந்த பெருந்தன்மையுடன் நடந்து கொண்டாலன்றி, வேறு வழியே இல்லை.

மனதின் வேதனை வெளியே தெரிந்து விடாதவாறு எதிரிலிருப்பவர்களைப் பார்த்துப் புன்னகைத்தான் ஜெயவர்த்தன்.

"கவலைப்படாதீங்க மாமா. சீக்கிரமே எல்லாம் நல்லபடியா முடியுங்கற நம்பிக்கை எனக்கிருக்கு."

"முடியணும் மாப்ள..."

மேலும் சிறிது நேரமும் கூட இருந்து சில பொதுவான விஷயங்களைப் பேசிவிட்டு அதற்குப் பிறகே கிளம்பினான் ஜெயவர்த்தன்.



# 64

"கிரேட் சித்தப்பா."

ஜெயவர்த்தன் கிளம்பியிருக்க, பாலகிருஷ்ணனைப் பார்த்துச் சொன்னான் நித்யன்.

"என்ன க்ரேட்?"

"உங்க மாப்பிள்ளை தான். ஸ்வேதா ரொம்பவும் குடுத்து வெச்சவ தான் சந்தேகமே இல்ல."

"அப்படியா."

"பின்ன . அனாவசிய அலட்டல் தேவையில்லாத பந்தா இப்படி எதுவுமே இல்லாம... அதுக்கு மேல தன்னடக்கம் வேற..."

"சரிதான், ஆனா ஸ்வேதா அதப் புரிஞ்சுக்கலையே."

"புரிஞ்சுக்காம என்ன, அவங்களுக்குள்ள ஏதோ மிஸ் அண்டர்ஸ்டேண்டிங் அவ்வளவுதான். உங்க மாப்பிள்ளைக்கு நல்லாக் கோபம் வருங்கறது பாத்தாலே தெரியுது. ஏதாவது வார்த்தை தடிச்சிருக்கலாம். வேற எந்தப் பிரச்சனையும் இருக்காது."

"எல்லாம் சரிதான். ஆனா மாப்பிள்ளையே இப்படி சொல்லிட்டுப் போறார். போதாக்குறைக்கு அவ என்னடான்னா எல்லாமே முடிஞ்சதுங்கறா."

"நீங்க கவலையே படாதீங்க சித்தப்பா. நான் பார்த்துக்கறேன்."

"என்னவோ போப்பா. நான் ஒன்னு சொல்லி அத இதுநாள் வரைக்கும் ஸ்வேதா மறுத்ததில்ல. அப்படிப்பட்ட பொண்ணு இந்த விஷயத்துல நான் சொல்றதக் காது கூடக் கேக்க மாட்டேங்கறா."

''சரிதான் அட்வைஸ் பண்ணியிருப்பீங்க. சும்மாவே ஸ்வேதாவுக்கு அதெல்லாம் பிடிக்காது. எல்லாத்துக்கும் மேல அவ சைட்ல தப்பே இல்லேங்கற போது...''

''பின்ன, என்னதாம்பா செய்யறது?''

''இந்த மாதிரி நேரத்துல அட்வைஸ் பண்ணக் கூடாது.''

''பின்ன?''

''ஆப்போஸிட்டா செய்யணும்.''

''என்னப்பா சொல்ற?''

''விடுங்க சித்தப்பா, இத நான் பாத்துக்கறேன்.''

''மாப்பிள்ளையே நான் பாத்துக்கறேங்கறார். அப்படியாவது விட்டுடலாம்பா. புதுசா எதையாவது முயற்சி பண்ணி நீ இன்னும் சிக்கலாக்கிடாத.''

''அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம்.''

''எல்லாம் சரிதான், ஆனா இன்னைக்கு மாப்ள ஆஃபீஸுக்கு வந்துட்டுப் போனத அவகிட்ட சொல்லாத.''

''அது மட்டுமில்ல, உங்க மாப்பிள்ளையப் பத்தியே எதுவும் தெரியாத மாதிரி காட்டிக்கறேன்.''

''சரிதான்.''

''கொஞ்சம் அதிகமாப் போய்ட்டாக் கூடக் கண்டுக்காத மாதிரி விட்ருங்க சித்தப்பா, எப்படியோ பிரச்சனைய சுமுகமா முடிச்சுக் குடுக்க வேண்டியது என்னோட வேல.''

''சந்தோஷம்பா, அதுக்காகப் பாவம் நீ சிரமப்படாத. வந்த வேலைகளையும் பாரு.''

''பின்ன? இந்தப் பிரச்சனை இன்னும் ஒன்னு ரெண்டு நாள்ல முடிஞ்சுடப் போகுது. அதுக்கப்புறம் என் ப்ராஜக்ட்டப் பாக்கறதத் தவிர வேறென்ன வேல. அதோட...''

''என்ன நித்யன் சொல்லு?''

''ஜெயவர்த்தன் அவரும் உதவி செய்யறேன்னு சொல்லியிருக்கார். அவர் கூட [illegible]



வந்த வேல கூடிய சீக்கிரம் வெற்றிகரமா நிறைவேறுங்கற நம்பிக்கை எனக்கிப்ப நிறைய வந்துடுச்சு.''

''அது சரி.''

''ஏன் சித்தப்பா சிரிக்கறீங்க?''

''நீ செய்யப் போற உதவிக்கு ஃபீஸா?''

''அட, சரிதான். ஒரு விதத்துல அப்படிக் கூட எடுத்துக்கலாம்.''

''நீ பிழைச்சுக்குவடா'' என்று பாலகிருஷ்ணன் புன்னகையுடன் சொல்ல, ''உங்க ஆசிர்வாதமே போதும் சித்தப்பா'' என்று தானும் சிரித்தான் நித்யன்.

என்னதான் வெளியில் சிரித்துக் கொண்டாலும், நித்யன் சொல்வது போல ஓரிரு நாட்களில் அனைத்தும் சரியாகி விடுமென்பதில் அவருக்கு நம்பிக்கையிருக்கவில்லை.

''என்ன ஸ்வேதாம்மா என்ன பண்ணிட்டிருக்க?''

''வாங்க டாடி, வா நித்யன். அப்புறம் கம்பெனில போய் என்ன பண்ணின?''

''என்ன செஞ்சேன், ஒரே போர்.''

''ஏன்டா வந்த ஒரு நாள்லயே இப்படி சலிச்சுக்கற?'' என்று ஸ்வேதா நித்யனைப் பார்த்துக் கேட்க, ''பின்ன எத்தனையோ சந்தேகங்கள் யாரைக் கேக்கறது, என்ன பண்றதுன்னு ஒன்னும் புரியல'' என்றான்.

''ஏன் டாடியக் கேக்க வேண்டியது தானே?''

''அது சரி, சித்தப்பாவுக்கு வேற வேலையில்ல.''

''என்ன இப்படி பேசற?''

''சரி அதையெல்லாம் விடு. உனக்குத் தெரிஞ்சு அதாவது பிஸினஸ் வெற்றிகரமாப் பண்ணிட்டிருக்கறவங்க யாராவது இருக்காங்களா ஸ்வேதா?''

''எனக்கு தெரிஞ்சு அப்படி யாருமில்ல.''

''ஏன் உங்க வீட்டுக்காரர் கூட, பிஸினஸ் மாதிரி தான ஏதோ செஞ்சுட்டிருக்கார்...''

''தெரியல.''

''தெரியலையா?''

''ஆமாம், வேற ஏதாவது இருந்தாப் பேசு. இல்லன்னா வந்து டிபன் சாப்பிட்டுப் போய்ப் படுத்துத் தூங்கு.''

''சரிதான், சாப்பாட்டுக்கு வழியில்லாம தான இங்க வந்திருக்கேன் செய்ய வேண்டியது தான்'' என்று பேச ஒன்றுமில்லாதது போல சலிப்புடன் சோபாவில் அமர்ந் தான் நித்யன்.

''ஸாரி நித்யன்.''

''உன் ஸாரிய வெச்சுக்கிட்டு, நானென்ன பண்றது?''

''ஒன்னு சொல்லட்டுமா?''

''என்ன?''

''நானும் வீட்ல வெட்டியா தான் போரடிச்சுட்டிருக்கேன். நாளையிலிருந்து நானும் உனக்கு கம்பெனி குடுக்கறேன். ரெண்டு பேரும் சேர்ந்து நீ வந்த வேலையப் பாக்கலாம்.''

''சரிதான்.''

''ஸ்வேதா.''

''டாடி''

''சாப்பிடலாமா?''

''ம், எல்லாம் ரெடியா இருக்கு.''

''சரி வா நித்யன்.''

தந்தையும், நித்யனும் வந்து டிபன் சாப்பிட அமர, அவர்களுக்குப் பரிமாறி விட்டுத் தானும் உடன் அமர்ந்து கொண்டாள் ஸ்வேதா.

''சித்தப்பா.''

''சொல்லுப்பா.''



''ஸ்வேதா வீட்டுக்காரர அதாவது உங்க மாப்ளைய எனக்கு இன்ட்ரட்யூஸ் பண்ணி வெக்கறீங்களா? ஸ்வே தாவும் முடியாதுங்கற மாதிரி சொல்றா நீங்களாவது...''

''வேண்டாம்பா.''

''ஏன், நானென்ன தப்பாக் கேட்டுட்டேன்...''

''பேசாம சாப்புடுப்பா.''

''அது சரி, எதுக்குத்தான் இங்க வந்தமோன்னு இருக்கு...''

''போதுன்டா, ஒன்ன வேண்டாம்னு சொன்னா புரிஞ் சுட்டு விட்டுடேன். சும்மா வளவளன்னு பேசிக்கிட்டு.''

ஏற்கனவே பேசி வைத்துக் கொண்டபடி தான் மற்ற இருவரும் செய்தார்கள் என்றாலும், அது தெரிந்திருக்காத ஸ்வேதாவிற்கோ ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

பாவம் நித்யன்.

அப்படியென்ன தவறாகக் கேட்டு விட்டான் என்று நினைக்கத் தோன்றியது.

ஒன்றும் புரியாத ஊரில் ஏதாவது உதவி கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பைத் தவிர தனது கணவனைப் பற்றிய அவனுடைய கேள்வியில் வேறு எந்த உள்ளர்த்தமும் இல்லையே.

''இன்னைக்கு தானப்பா வந்திருக்க, ஒரு ரெண்டு நாள் உன்னால முடிஞ்ச டெடெய்ல்ஸ்க் கலெக்ட் பண்ணு, அதுக் குள்ள நானும் நீ கேட்டத செய்ய முயற்சி பண்றேன்.''

''தேங்க்ஸ் சித்தப்பா, அப்படியே செய்யறேன்.''

புன்னகையுடன் நித்யன் தந்தையைப் பார்த்து சொல்ல அதற்குப் பிறகு தான் ஸ்வேதா சற்று பரவாயில் லாமல் உணர்ந்தாள் எனலாம்.

அதற்கு பிறகு பேச்சு சுவாரஸ்யமாகத் தொடர்ந்தது. ஆனால் மதியம் போலல்லாமல் இப்பொழுது பால கிருஷ்ணனும் சிறியவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

# 65

உணவு முடிந்த பிறகும் கூடக் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தவர் பிறகு தூங்கச் செல்கிறேனென்று சென்று விட்டிருக்க, கேள்வியுடன் ஸ்வேதாவைப் பார்த்தான் நித்யன்.

''என்ன நித்யன்?''

''இல்ல எப்படி ஸ்டார்ட் பண்றதுன்னு தான் தெரியல.''

''அட, புதிரெல்லாம் போடற! இந்த மாதிரி தயக்கமெல்லாம் உனக்கு ஒத்தே வரல நேரடியா விஷயத்துக்கு வா.''

''வேண்டாம் விட்ரு.''

''பரவாயில்ல கேளு.''

''உனக்கும், உன் வீட்டுக்காரருக்கும் ஏதாவது பிரச்சனையா?''

''ஏன் கேக்கற?''

''நீ கூடப் பரவாயில்ல ஸ்வேதா, சும்மா பேச்சுவாக்குல கம்பெனில வெச்சு நான் ஏதோ கேட்கப் போக சித்தப்பா டென்ஷனாயிட்டார்.''

.............

''ஏன் சித்தப்பாவுக்கும் உன் வீட்டுக்காரருக்கும் ஏதாவது பிரச்....''

''சேச்சே, அப்படியெல்லாம் எதுவுமில்ல.''

''அப்பாடா, இப்ப தான் நிம்மதி.''

''ஏன்?''

''பின்ன, முதல்ல ஒரு ஒன் மந்த் இருக்கும் போன்ல இயல்பா பேசினப்ப ஸ்வேதா மாப்ளை இருக்கார் கவலைப்படாம வான்னு சொன்னார். அந்த நம்பிக்கைல தான்...''

''சரிதான் டாடி சொன்ன மாதிரி இப்ப தான வந்திருக்க, வேற ஏதாவது பேசேன் நித்யன். உன் வேலைகளைக் குறைஞ்சது ஒரு ரெண்டு நாளைக்காவது தள்ளி வெச்சுட்டுக் கொஞ்சம் ஃப்ரீயா இரு.''

''எப்படியோ எனக்கு உதவி செய்யக் கூடாதுங்கறதுல மட்டும் அப்பாவும் மகளும் உறுதியா இருக்கீங்க.''

நித்யன் சொன்ன பாவனையில் இப்பொழுது நன்றாகவே சிரித்து விட்டிருந்தாள் ஸ்வேதா.

''சிரிக்காத, அந்த சிரிப்பு உனக்குப் பொருந்தவே இல்ல.''

''ஏன்டா இப்படிச் சொல்ற?''

''பின்ன, இருக்கறத சொன்னேன்.''

''உனக்கு இந்தத் தடவை என்னாச்சு. சும்மா விதண்டாவாதமே பேசிட்டிருக்க?''

''ம், உங்களுக்கு நான் ஒன்னும் எந்த விதத்துலயும் மோசமாயிடல.''

''ஏன் அப்படி நாங்க என்ன...''

''நீ முதல்ல ஃப்ரான்கா பேச முடியும்னாப் பேசு இல்லன்னா விட்ரு.''

''போதும் நித்யன் அறுக்காம விஷயத்துக்கு வா.''

''என்னத்த சொல்றது சித்தப்பா உனக்குப் பெரிய அநியாயம் பண்ணிட்டார்.''

''ஏன் இப்படி சொல்ற?''

''பின்ன நம்ம அந்தஸ்த்துல உனக்கொரு மாப்ளையப் பாத்திருந்தா இந்த மாதிரி பிரச்சனை வந்திருக்குமா. உன்

வீட்டுக்காரர் உனக்கு எந்த விதத்துலயுமே பொருத்தமானவர் கிடையாது போலிருக்கு. ஏன் சொல்றேன்னா உன்ன மாதிரி பிரமாதமான பொண்ணு கூடவே அவரால அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போக முடியலன்னா அதுக்கு மேல சொல்ல இனி என்ன இருக்கு.''

''சரிதான், உன் பணத்துக்காக அவர் உன்னைக் கல்யாணம் பண்ணிட்டிருப்பாரா இருக்கும். அதுக்கு மேல மத்ததப் பத்தி அவருக்கும் தான் என்ன?''

ஐயோ இல்லை. அப்படியெல்லாம் இல்லவே இல்லை என்று வாய் வரை வந்திருந்த வார்த்தைகள் அதற்கு மேல் வெளியே வரத் தயங்கின.

''ஆனாலும் அவர் நினைச்சத அடையறதுக்கு வழியில்லாம நீ இப்படி வந்துட்டியே, அவருக்கு ஏமாற்றமா இருக்காது?''

''ஓ. அது தெரிஞ்சு தான் நீ அவரத் தூக்கியெறிஞ்சுட்டு வந்துட்டியோ?''

''ஆனாலும் நீ இருக்கறதுக்கு எப்படி ஸ்வேதா அவர மாதிரியொருத்தரக் கல்யாணம் பண்ணிக்கிட்ட?''

ஏனோ பொறுமை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தது ஸ்வேதாவிற்கு.

பல்லை இறுகக் கடித்துத் தனது கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

''சரி அந்தஸ்த்துல தான் சரியில்ல விட்ரு, தோற்றத்துலயாவது உனக்குப் பொருத்தமா இருப்பாரா? அதெப்படி இருக்க முடியும் நீ ஏஞ்சல் மாதிரியிருக்க, அந்....''

''போதும் நித்யன். இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசாத.''



''ஓ ஸாரி ஸ்வேதா, அவரப் பேசறது உன்னையும் பேசற மாதிரியில்லையா? ஸாரி.. ஸாரி...''

''மத்தது எப்படியோ உன் பணத்த அடையறதுல மட்டும் ஸ்ட்ரிக்டா இருப்பார்னு தான் தோணுது. ஆனாலும் உன் சொத்து மதிப்ப ஒரு தடவ கூடவா அவர் கேட்டதில்ல...''

''அவரப் பத்தி என்ன தெரியுன்டா உனக்கு. விட்டாப் பேசிட்டே போவியோ? தயவுசெஞ்சு இதுக்கு மேல பேசாத அப்புறம் அண்ணான்னு கூடப் பாக்க மாட்டேன்...''

விட்டால் அடித்து விடுவாள் போல உள்ளம் நடுங்க நின்ற தங்கையை வந்த சிரிப்பைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தான் நித்யன்.

''பின்ன அப்பாவும், மகளும் அவரப் பத்தின பேச்சையே தவிர்த்தா, அப்புறம் நானும் என்னதான் நினைக்கறது சொல்லு?''

''அதுக்காக வாய்க்கு வந்த மாதிரியெல்லாம் பேசுவியா?''

''அப்ப, அப்படி இல்லேங்கறியா?''

''சை போடா நீ எங்கூட இனிமேல் பேசவே பேசாத. நீ கூட இந்த மாதிரி...''

''ஏய், என்னாச்சு?''

''என் ஜெய் பத்தி என்ன தெரியும் உனக்கு...?''

அதற்கு மேல் பேச முடியாமல் கண்கள் கலங்கி விட்டிருக்க, எங்கே நித்யனுக்கு முன்பாகவே அழுது விடுவோமோ என்று எழுந்து தன்னுடைய அறைக்கு வந்து விட்டிருந்தாள் ஸ்வேதா.

தன்னுடைய அறைக்குள் சென்று கதவைத் தாளிடப் [illegible]வள், அங்கு டேபிள் மேல் கிடந்த இல்லை

யில்லை வைக்கப்பட்டிருந்த அந்தக் கவரை அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

ஏனென்றால் அது அவளுடைய கணவன் ஜெயவர்த்தனிடமிருந்து அவளுக்கு வந்திருந்தது.

வினாடிக்குள் மனம் எதையெதையோ எண்ணி கலங்கி விட்டிருக்க, உள்ளம் நடுங்க அந்தக் கவரைக் கையிலெடுத்திருந்தாள்.

கதவைத் தாளிட்டு விட்டு உள்ளே வந்தவள், இப்பொழுது நடுங்கத் தொடங்கியிருந்த கைகளால் அதைப் பிரிக்கத் தொடங்கினாள்.

அப்படிப் பிரித்திருந்தவள் ஒரே மூச்சில் படித்தும் முடித்திருந்தாள்.

கண்களிலிருந்து அதன் பாட்டுக்குக் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்க, உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டபடி மீண்டும் படித்தாள்.

ஏன் கடிதத்தைக் கீழே வைக்க முடியாமல் மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டே இருந்தாள்.

ஏனோ அப்பொழுதே கணவனைப் பார்த்தாக வேண்டும் போல வெகு தீவிரமாகத் தோன்றிக் கொண்டே இருந்த எண்ணத்தில் செய்வதறியாது திகைத்துப் போனாள்.

அந்தக் கடிதத்தில் ஜெயவர்த்தன் தனது மனைவிக்கு எழுதியிருந்ததும் இதைத்தான்.

'மிருகத்தனமாக நடந்து கொண்டு விட்டேன். என்னை மன்னித்து விடு என்று கேட்கக் கூடத் தகுதியில்லாதவனாகி விட்டேன். அதற்கு மேல் கேட்டாலும் நீயே சொன்னதைப் போலக் கொலை செய்து விட்டு வருந்துகிறேனென்று தளுக்காகச் சொல்வதைப் போலத்தான்.



பிறகு எதற்காக இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறேனென்று பார்க்கிறாயா?

கடைசிக்கு மீண்டும் மனிதனாக மாறவாவது முயற்சி செய்யலாமென்று தான், அது உனக்குத் தெரிந்தால் நூறில் ஒரு பங்காகவாவது உன் மனம் நிம்மதியடையுமோ என்ற ஆசையால் தான்.

ஆனாலும் எனக்கொரு பேராசை, நான் செய்த பெரும் பிழைகளை மன்னித்து மீண்டும் என்னை ஏற்றுக் கொள்வாயா கண்மணி? மிகப்பெரிய, செய்யக் கூடாத பிழையைச் செய்து விட்டு ஒவ்வொரு வினாடியும் நிம்மதியின்றி தவிக்கிறேன். இப்படியே போனால் பைத்தியம் பிடித்து விடுமோ என்று கூடப் பயமாக இருக்கிறது.

அப்படிப் பைத்தியம் பிடித்து நடு ரோட்டில் அலைய நேர்ந்தாலும் கூட நான் உனக்குச் செய்த கொடுமைக்கு அதெல்லாம் ஒன்றுமே இல்லை தான்.

ஆனால் அதற்கு முன் நீ எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் அதை மனதார ஏற்றுக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

நீ உடனில்லாத வாழ்க்கை இவ்வளவு தண்டனைக்குரியதாக இருக்குமென்று நான் நினைக்கவே இல்லை. சிறு நிழல் கூட தகிக்கும் பாலையில் சற்று ஒதுங்க இன்றி வெந்து கொண்டிருக்கிறேன். நீ வந்து விட்டால் அடுத்த வினாடியே அந்தப் பாலை பல மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலையாகி விடும். பேராசை தான் என்றாலும் உன்னைப் பிரிந்து இருக்க முடியாத காரணத்தால் கேட்கிறேன். என்னை மன்னித்து ஏற்றுக் கொண்டு மீண்டும் வசந்தத்தை வர வைப்பாயா கண்மணி?'

அந்தக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது இது தான்.

பல நாட்களுக்குப் பிறகு கணவனே நேரில் வந்து விட்டாற் போல அந்தக் கடிதத்தை மார்போடு அணைத்துக் கொண்டபடி நிம்மதியாகத் தூங்கி விட்டிருந்தாள் ஸ்வேதா.

## 66

''அமிர்தாம்மா.''

''வாங்க ஸ்வேதாம்மா.''

''காபி கிடைக்குமா?''

''இதோ ஒரே நிமிஷம் இருங்கமா...''

''மத்தவங்களுக்கெல்லாம் குடுத்துட்டிங்களா?''

''அதெல்லாம் குடுத்துட்டேன்'' என்றவள் தனக்கு முன்னாக நீட்டிய காபியை வாங்கிக் கொண்ட ஸ்வேதா, காலை டிபனுக்கு செய்ய வேண்டியவற்றை சொல்லி விட்டு வெளியே வந்திருந்தாள்.

எங்கே யாரையும் காணவில்லையென்று நினைத்துக் கொண்டே வந்தவள், அப்பொழுது தான் வெளியே வராந்தாவில் அமர்ந்திருந்த நித்யனைக் கண்டு தானும் வெளியே வந்தாள்.

''குட்மானிங் நித்யன்.''

..........

''ஏய் என்ன இதெல்லாம்?''



''என்னடா பேசு, என்ன உன் திங்க்ஸையெல்லாம் எடுத்துட்டு கிளம்பப் போற மாதிரி இங்க வந்து உக்காந்துட்டிருக்க?''

''ஆமாம் கிளம்பத்தான் போறேன்.''

''எங்க?''

''எங்காவது வெளிய தங்கிக்கலாம்னு இருக்கேன்.''

''திமிரா?''

''ஸாரி ஸ்வேதா.''

''எதுக்கு?''

''நைட் ஏதேதோ சொல்லிட்டேன்...''

அப்போதைய ஸ்வேதாவின் மனநிலையை தெரிந்து கொள்வதற்காகத் தான் அவன் அப்படிச் சொன்னதும், சொல்லி விட்டு ஸ்வேதாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

அவளறியாமல் தான்.

''அப்படியெல்லாம் பேசினது தப்பு தான்... பரவாயில்ல விடு. நீ ஏதோ ஆதங்கத்துல மனசுல ஒன்னும் வெச்சுக்காம வெளிப்படையா பேசிட்ட...''

''ஓ, அப்ப உன் வீட்டுக்காரரப் பத்தி நான் சொன்னதெல்லாம் உண்மைதானா?''

நித்யன் கேட்டது தான் தாமதம், கையிலிருந்த காபி கப்பை டேபிளின் மீது வைத்துவிட்டு ''டேய் உன்ன...'' என்று அவனை அடிக்கப் போனாள் ஸ்வேதா.

ஆனால் அவனோ ஸ்வேதாவின் கைகளுக்கு சிக்காமல் எழுந்து ஓட, ''இரு எங்க போனாலும் இன்னைக்கு நான் உன்ன விடப் போறதில்ல'' என்று துரத்தவே தொடங்கி விட்டிருந்தாள்.

அப்படி ஓடியவள் அங்கு கீழே கிடந்த செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சும் அந்தப் பெரிய குழாயை கவனிக்காமல் கால் இடறி விட, அப்படியே கீழே சாய்ந்தாள்.

ஆனால் அதற்கு விடாமல் அப்பொழுது அங்கே வந்த இரண்டு கைகள் அவளைத் தாங்கிப் பிடித்திருக்க, கடவுளே இப்படியாகி விட்டதே என்ற மிரட்சியுடன் நிமிர்ந்து பார்த்தாள் ஸ்வேதா.

இவையனைத்தும் சில வினாடிகளுக்குள் நடந்து முடிந்திருந்தன.

ஆனால் அப்படி நிமிர்ந்து பார்த்தவளோ இப்பொழுது அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தாள்.

ஏனென்றால் அவளை அப்படித் தாங்கிப் பிடித்திருந்தது அவளுடைய கணவன் ஜெயவர்த்தன்.

இருவருடைய கண்களும் சில வினாடிகள் மீள முடியாமல் இணைந்திருக்க, முதலில் நடப்பிற்கு வந்திருந்தவன் ஜெயவர்த்தனே.

''என்ன ஓட்டம் இந்த மாதிரி நேரத்துல கீழ விழுந்திருந்தா?'' என்று கடிந்து கொண்டவன், மனைவி அவளாகவே நின்று கொண்டு விட்டிருந்ததும் கைகளை எடுத்துக் கொண்டான்.

ஆனால் ஸ்வேதாவிற்குத் தான் யாரையும் நிமிர்ந்து கூடப் பார்க்க முடியாது போயிற்று.

அடுத்த வினாடி வீட்டிற்குள் ஓடி வந்திருந்தாள்.

அப்படி வந்திருந்தவள் அதற்குப் பிறகு தான் அங்கிருந்த தனது அத்தையை கவனித்தாள்.

''அத்தை!''

''வாடாம்மா, எப்படியிருக்க?''

''நீங்க எப்ப வந்தீங்க அத்தை?''



''ம், உன் வீட்டுக்காரர் உன்னத் தாங்கிப் பிடிச்சாரே அப்ப உன் பின்னாடியே தான் இருந்தேன்.''

''ஓ, ஸாரி அத்தை.''

''எதுக்கு அப்படி ஓடி வந்த? கீழ கீது விழுந்திருந்தா?''

சரியாக அந்த நேரம் பார்த்து ஆண்கள் மூவரும் அதாவது ஜெயவர்த்தன் பாலகிருஷ்ணன், நித்யன் என அனைவரும் வீட்டிற்குள் வர, ''ஏன் எல்லாரும் இப்படி உருகி வழியறீங்க அப்படிதான் கீழ விழுந்துட்டுப் போகட்டுமே அதனாலென்ன?'' என்று புன்னகையுடன் கேட்டான் நித்யன்.

''என்ன இப்படிச் சொல்ற, உனக்குத் தெரியாதா?'' என்று பாலகிருஷ்ணன் விஷயத்தைச் சொல்ல, ''அடடா இது எனக்குத் தெரியாமப் போயிடுச்சே'' என்று சந்தோஷத்துடன் கணவன் மனைவி இருவரையும் பார்த்தான் அவன்.

அடுத்த வினாடி இருவரையும் வாழ்த்தவும் செய்திருந்தான்.

''ஆமா எதுக்கு அப்படி உன்னத் துரத்திட்டு வந்தா?''

பாலகிருஷ்ணன் கேட்க, இரவு அவர் தூங்கச் சென்றதற்குப் பிறகு அவர்கள் இருவரும் பேசிக் கொண்டதை மேலோட்டமாகத் தான் சொன்னான் நித்யன்.

ஆனால் சொல்ல வேண்டியதை நன்கு அழுத்திச் சொன்னான்.

அதாவது ஜெயவர்த்தனின் மனம் புண்படாத மாதிரி, என்னதான் தான் விளையாட்டிற்காக ஸ்வேதாவின் மனதை அறிவதற்காகவே அப்படியெல்லாம் சொல்லியிருந்தாலும் அதற்காக ஜெயவர்த்தனிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டான்.

ஆனால் அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில் அப்பொழுது அவர்கள் இருக்கவில்லை.

அவர்களென்றால் அவனைத் தவிர அங்கிருந்தவர்கள் அனைவருமே.

தன்னை விட்டுக் கொடுக்காமல் தனது மனைவி பேசியதாக நித்யன் சொன்னது ஜெயவர்த்தனை உள்ளம் நெகிழச் செய்திருந்தது.

ஸ்வேதாவோ என்ன பேசுவதென்று தெரியாமல், யாரையும் நிமிர்ந்து பார்க்கவும் முடியாமல் தனது அத்தையின் அருகில் பேசாமல் நின்றிருந்தாள்.

பாலகிருஷ்ணன் ஏதோ கேட்டிருக்க, அதற்கு பதில் சொன்ன வண்ணம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார் காஞ்சனா.

''ஏதோ கெட்ட நேரம் ஏதேதோ நடந்துடுச்சு'' என்று பாலகிருஷ்ணன் சொல்ல, ''என்னப்பா இப்பவாது எம் மருமகள வா கிளம்பலாம்னு கூப்புட மாட்டியா?'' என்று மகனைப் பார்த்துக் கேட்டார் காஞ்சனா.

''அந்தத் தகுதி எனக்கு இருக்கான்னு...''

கணவன் சொல்ல வருவது புரிய, ''தயவு செஞ்சு அப்படியெல்லாம் சொல்லாதீங்க ஜெய். தப்பு எம்மேலயும் இருக்கு'' என்று அழுகையில் குரல் கம்ம அவசரமாகச் சொன்னாள் ஸ்வேதா.

''இல்லமா...'' என்ற ஜெயவர்த்தனை இடைமறித்திருந்த நித்யன் ''நீங்க ரெண்டு பேரும் மாத்தி மாத்தி மன்னிப்புக் கேட்டுக்கோங்க அதுக்குள்ள எங்களுக்கொரு முக்கியமான வேலையிருக்கு போய்ட்டு வந்துட்றோம்'' என்றான்.



அப்படிச் சொன்னவனை அனைவரும் பார்க்க, ''என்ன சித்தப்பா பாக்குறீங்க என் ப்ராஜக்ட் கன்ஸ்ட்ரக்ஷனுக்கு லேண்ட் இருக்குன்னு புரோக்கர் நாலு தடவ கூப்டாச்சு, வந்தீங்கன்னா பாத்து கன்ஃபார்ம் பண்ணிட்டு வந்துடலாம்'' என்றான்.

''அட நீ வேறடா'' என்று அடித்துக் கொண்டே பாலகிருஷ்ணன் எழ, ''சொன்னத அதுவும் ஒரே நாள்ல சாதிச்சுட்டேன் புரோக்கர் சார்ஜ் உங்களோடது தான் சொல்லிட்டேன்'' என்றான்.

அதே நேரம் மாடியிலிருக்கும் தங்களுடைய அறைக்கு வந்திருந்த மனைவியைத் தானும் பின் தொடர்ந்து வந்திருந்தான் ஜெயவர்த்தன்.

அப்படி வந்தவன், உள்ளம் படபடக்க நின்றிருந்த மனைவியின் அருகில் வந்தான்.

''ஸ்வேதா.''

எங்கே அவளுடைய பெயருக்கே வலித்து விடுமோ எனும் வண்ணம் மென்மையாக அழைத்தான்.

கணவனின் அழைப்பில் அவனை நிமிர்ந்து பார்த்த ஸ்வேதா ''என்ன மன்னிப்பீங்களா ஜெய்?'' என்று கேட்டாள்.

''என்ன நீ, நான் கேட்க வேண்டியதப் போய்...''

அதற்குள் வேகமாகக் கணவனின் உதடுகளில் தனது கையை வைத்துத் தடுத்திருந்த ஸ்வேதா ''தயவு செஞ்சு நீங்க எதுவும் சொல்லாதீங்க ஜெய். காரணமெல்லாம் கேட்டுதான் பிரச்சனைய சரி பண்ணிக்க முடியும்னா அது வது மன்னிக்க முடியும்னா அது உண்மையான காதல் கிடையாது. ஆனா நான் உங்கள உண்மையா நேசிக்க

றேன், அத்தை, அப்பா எல்லாரும் சொல்ற மாதிரி ஏதோ கெட்ட நேரம் படுத்திடுச்சு. அதப் பத்தியெல்லாம் இனி மேல் நாம் பேச வேண்டாம். அத முடிஞ்சு போன கதையா மறந்துடலாம் ப்ளீஸ்...'' என்றாள்.

ஆனாலும்...

ஏதோ சொல்ல வந்த கணவனை வேண்டாமே என் பதைப் போலப் பார்த்தாள்.

''அப்ப நான் இப்ப என்னதான் செய்யுறது?''

புன்னகையுடன் கேட்ட கணவனை ''என்னக் கேட்டா?'' என்று வெட்கத்துடன் பார்த்தாள் ஸ்வேதா.

அவ்வளவுதான்.

மனைவியின் அந்தப் பார்வையில் முற்றிலுமாகத் தன் வசமிழந்து போயிருந்த ஜெயவர்த்தன் அப்படியே அவளை அருகில் இழுத்து இறுக அணைத்திருந்தான்.

அந்த அணைப்பு காலம் முழுவதற்கும் இனிமேல் எங்களுக்குள் பிரிவே இல்லையென்பதை சொல்லாமல் சொன்னது.